# கலைஞரின்
# கடிதங்கள்



2

04.12.1974 - முதல்
24.04.1976 - வரை

சீதை பதிப்பகம்

# கலைஞரின் கடிதங்கள்

## தொகுதி - 2

## 04-12-1974 - 24-04-1976

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர்
ஆய்வக நூல்
நிலையம்
சென்னை-18
அண்ணா அறிவாலயம்

தலைவர் கலைஞர்

சீதை பதிப்பகம்,
சென்னை-05. ☎ 97907 06549/97907 06548

நூல் கிடைக்குமிடம் :

**கௌரா புத்தக மையம்**

9, செயின்ட் ஜான் சர்ச்சு வணிக வளாகம், ராக்கின்ஸ் சாலை,
திருச்சி - 620 001.
9952034876 / 9943428994
04312419584.

**GOWRA PUTHAGA MAIYAM**

9, SAINT JOHN CHURCH COMPLEX,
ROCKINS ROAD, TRICHY - 620 001
99520 34876 / 04312419584.
gowraputhagamaiyam@gmail.com

AVAILABLE @ :

**கௌரா ஏஜென்ஸீஸ்**

எண்.1 சாமி தெரு,
(சாய் பாபா கோவில் பின்புறம்)
திருவல்லிக்கேணி, சென்னை - 05.
9790706548 / 9790706549
044 28443791.

**GOWRA AGENCIES**

NO : 1 SAMY STREET,
(SAI BABA TEMPLE BACK SIDE)
TRIPLICANE, CHENNAI - 05.
9790706548 / 044 28443791.
gowra09@gmail.com

# கலைஞரின் கடிதங்கள்


# KALAIGNARIN KADITHANGAL

விலை : ரூ.**300.00** CODE :**2251**


எழுதியவர் : **கலைஞர்**
தொகுப்பாசிரியர்கள் :
கோ.சண்முகநாதன் M.com BGL
முனைவர் கி. இராஜமாணிக்கம் IAS ஓய்வு
(கலைஞரின் செயலாளர்கள்)
பொருள் : கடிதம்
© உரிமை :
பதிப்பாசிரியர் :
எஸ். கௌமாரீஸ்வரி M.A., M.L.I.S.,
பதிப்பு :
முதற் பதிப்பு – 2021
வெளியீடு :
சீதை பதிப்பகம்
6ஏ/4, பார்த்தசாரதி சாமி தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை – 600 005
பக்கம் : 400
ஒளி அச்சு : ஜெய் ஜீனா
அச்சிட்டோர் :
சேகர் ஆப்செட், சென்னை–5.
**ISBN** :

AUTHOR : KALAIGNAR
EDITORS:
K. SHANMUGANATHAN M.COM BGL
DR K. RAJAMANIKAM IAS
SUBJECT : EPISTLE
© RIGHTS :
PUBLISHER :
S.GOWMAREESWARI M.A., M.L.I.S.,
EDITION :
1ST EDITION - 2021
PUBLISHED @ :
SEETHAI PATHIPPAGAM
6A/4, PARTHASARATHI SAMY STREET,
TRIPLICANE,
CHENNAI-600 005.
PAGES : 400
TYPESET BY : JAIJEENA
PRINTED @ :
SEKAR OFFSET, CHENNAI - 5.
ISBN :

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர்
ஆய்வக நூல்
நிலையம்
சென்னை-18
அன்னா அறிவாலயம்



# அம்மாவுக்கு...

கௌரா பதிப்பகக் குழுமம்

**மு.க.ஸ்டாலின்**
தமிழக முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009.

# அணிந்துரை அல்ல இது; மிகவும் பணிந்துரை!

"கலைஞரின் கடிதங்கள்" அனைத்தையும் அச்சியற்றி, வெளியிடுவதென முடிவெடுத்து, அந்த முடிவு கனிந்து, இப்போது கடிதங்கள் அனைத்தும் 54 தொகுதிகளாக வெளிவருகின்றன.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மீது கொண்டிருக்கும் மாறாத பற்றாலும், மதிப்பாலும், மரியாதையினாலும், கழக வரலாற்றில் சிறப்பு வாய்ந்த இந்த அரிய – பெரிய பணிமுழுவதையும் ஆற்றிட முன்வந்திருக்கும் சென்னை – சீதை பதிப்பகத்தார்க்கும், அதன் உரிமையாளர் அருமை நண்பர் திரு. இராஜசேகரன் அவர்களுக்கும், நெஞ்சார்ந்த நன்றியையும், மகிழ்ச்சியையும், பாராட்டுதல்களையும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், இங்கே பதிவு செய்வது என்னுடைய முதல் கடமை ஆகும்.

இந்தத் தொகுதிகள் வெளிவருவதற்குப் பின்னணியில் இருந்து, பல்லாற்றானும் உதவிய, தலைவர் கலைஞர் அவர்களின் செயலாளர்கள் – பாசம் மிகுந்த எனது அண்ணன்மார், திரு. கோ.சண்முகநாதன், முனைவர் கி.இராஜமாணிக்கம் ஆகிய இருவர்க்கும் என்னுடைய நன்றியையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. இராஜசேகரன் அவர்கள் என்னிடம், "கலைஞரின் கடிதங்கள்" தொகுதிகளுக்கு, அணிந்துரை வழங்கிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். தந்தைக்குத் தனயன் "அணி"யாகத் திகழ்ந்திட முடியுமே அன்றி; அணிந்துரை அளித்திடத் துணிவது, அதிகப்படியான செயலாக ஆகிவிடும்.

தலைவர் கலைஞர் அவர்களின் எழுத்துக்கு அணிந்துரை வழங்கிடும் உயரம் எனக்கு நிச்சயமாக இல்லை என்பதை நானறிவேன். அதனாலே அணிந்துரைக்குப் பதிலாக "பணிந்துரை" தருகிறேன் என்று சொன்னேன். அதன்படி, இது அணிந்துரை அல்ல; மிகவும் பணிந்துரை!

எழுதுவதை உயிர்மூச்சாகக் கொண்டு இயங்கிய தலைவர் கலைஞர் அவர்கள், வாழ்ந்த காலம் முழுவதும் எழுதி எழுதி இமயம்போல் குவித்தவர். அவர் எழுத்து வேந்தர்; சொல்லேருழவர்; கருத்துக் கருவூலம்; வண்ணமயமான எண்ணங்களின் வற்றாத ஊற்று!

தலைவர் கலைஞர், கழக உடன் பிறப்புகளுக்குக் கடிதம் எழுதத் தொடங்கி, மொத்தம் 4051 கடிதங்கள் எழுதியிருக்கிறார்.

ஏ அப்பா, கேட்கவே மலைப்பாக இருக்கிறது அல்லவா!

ஒரு நாளைக்கு ஒரு கடிதம் என்று வைத்துக் கொண்டாலும், தொடர்ந்து 11 ஆண்டுகள், 1 மாதம் 6 நாட்கள் கடிதம் எழுதியிருக்கிறார். இப்படி எழுதுவது தனியொரு மனிதருக்குச் சாத்தியப்படுமா என்றால்; சாத்தியப்படாத எதையும், எந்தத் துறையாக இருந்தாலும், அதை எடுத்துச் சாத்தியப்படுத்திச் சாதனை செய்து சரித்திரம் படைத்தவர் கலைஞர்!

முடியுமா, நேரம் கிடைக்குமா, உடல் நலனுக்கு ஒத்துவருமா - என்ற கேள்விகளின் முனைமுறித்துப் போட்டவர் கலைஞர். பெரும்பாலும், காலை எழுந்ததும் கடிதம் எழுதுவது, கலைஞர் தவறாது தொடர்ந்து இறுதிவரை ஆற்றிய கடமையாகவே இருந்தது. இந்த அளவுக்கு, நான்கு ஆயிரத்திற்கும் மேற்பட்ட கடிதங்கள் எழுதி வெளியிட்டிருக்கும், ஒரே அரசியல் தலைவர் அகில உலகத்திலும் அவர் ஒருவரேதான்!

கடிதம் எழுதுவது என்பது, கிரேக்கத்திலிருந்து தொடங்குகிறது. டையோஜெனீஸ் (கி.மு.412 - 323) என்ற கிரேக்க ஞானி, தன்னைக் காண அலெக்சாந்தர் விரும்பியதாக அவருடைய நண்பர் அரிஸ்ட்டிப்பஸ் எழுதிய கடிதத்திற்கு, அனுப்பிய பதில் கடிதம் பிரபலமானது.

கிரேக்க தத்துவ ஞானி சாக்ரட்டீஸின் 9 கடிதங்கள் வரலாற்றில் இடம்பெற்றிருப்பவை. இயேசுநாதரின் சீடர்கள்

எழுதிய கடிதங்கள், விவிலியத்தின் புதிய ஏற்பாட்டில் பொறிக்கப்பட்டுள்ளன. சிசரோ, ரோமாபுரியின் வரலாற்றை 835 கடிதங்களாக எழுதி வைத்திருக்கிறார்.

லியோ டால்ஸ்டாய், ஹோரஸ் வால்போல், மெக்காலே, கோல்ட் ஸ்மித், பைரன், கீட்ஸ், பெர்னாட்ஷா போன்ற அறிஞர்கள் பலரும் எழுதிய கடிதங்கள் கடித இலக்கியத்தில் முக்கியமான பங்கு வகிக்கின்றன.

கலையரசி மாதவி, கோவலனுக்கு இரண்டு கடிதங்கள் அனுப்பியதாகச் சொல்கிறது சிலப்பதிகாரம். விவேகானந்தர், அமெரிக்கா சென்றிருந்தபோது அவருடைய நண்பர்களுக்கு எழுதிய கடிதங்கள், அண்ணல் காந்தி அடிகள் பல்வேறு சூழ்நிலைகளில் எழுதிய எண்ணற்ற கடிதங்கள், பண்டித நேரு அவர்கள் சிறையில் இருந்தவாறே அவருடைய மகள் இந்திரா காந்தி அம்மையாருக்கு எழுதிய கடிதங்கள் (உலக வரலாறு) ஆகியவை கடித இலக்கியமாகப் பார்க்கப்படுகின்றன.

மறைமலை அடிகளாரின் நாவல் “கோகிலாம்பாள் கடிதங்கள்”, இலக்கியச் சுவையும் தரமும் உடையது. கடிதக் இலக்கியத்தை கருத்துச்செறிவுடன் கையாண்டவர் டாக்டர் மு.வரதராசனார் அவர்கள் ஆவார்கள். அவருடைய “அன்னைக்கு’, "தம்பிக்கு”, “நண்பர்க்கு’, "தங்கைக்கு" ஆகியவை

ஒருகட்டத்தில் மொத்தத் தமிழ் மக்களின் கவனத்தையும் கவர்ந்தவை.

அந்த வரிசையில் வைத்துப் போற்றிப் புகழத் தக்கவை, புகழ்ந்து நினைவிலே வைத்து எப்போதும் பாதுகாத்திடத் தக்கவை, பாதுகாத்துப் பாரம்பரியமாகப் படித்துப் பயன்பெறத் தக்கவை, பேரறிஞர் அண்ணா அவர்களின் “தம்பிக்கு” கடிதங்களும்; அண்ணா அவர்களைப் பின்பற்றி, தலைவர் கலைஞர் எழுதிய “உடன்பிறப்புக்கு” கடிதங்களும் ஆகும்.

தந்தை பெரியார் அவர்கள் எதிலும், எப்போதும் அறிவியல்பூர்வமான அணுகுமுறையைப் பின்பற்றியவர் என்றால்; பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், அடிப்படையில் கலை உணர்வு மிக்கவர்கள் என்பதால், அறிவியல் உண்மைகளையே, கவித்துவ நடையில் எடுத்து இயம்பியவர்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், அன்றாட அரசியல் பிரச்சினைகளையும், உலக நிகழ்வுகளையும், கட்சித் தோழர்களுக்கு எடுத்துச் செல்லவும், ஏற்றபடி தொகுத்துச் சொல்லவும், கடித வடிவத்தைக் கைக்கொண்டார்கள்; அந்தக் கடிதங்களை இலக்கியத் தேனில் தோய்த்து, திகட்டாத தெள்ளுதமிழில் வாரி வழங்கினார்கள். அவற்றைப் படித்துப் படித்து, தம்பிமார்களும், உடன்பிறப்புகளும், விவரங்களை அறிந்து, விழிப்புணர்ச்சி வளர்ந்திடப் பெற்றார்கள்.

அண்ணா - கலைஞர் கடிதங்கள், "வீழ்ச்சியுற்ற தமிழினத்தில் எழுச்சி வேண்டும்; விசை ஒடிந்த தேகத்தில் வன்மை வேண்டும்; சூழ்ச்சிதனை வஞ்சகத்தைப் பொறாமைதன்னைத் தொகையாக எதிர் நிறுத்தித் தூள்தூளாக்கும் காழ்ச்சிந்தை மறச்செயல்கள் மிகவும் வேண்டும்; கடல்போலச் செந்தமிழைப் பெருக்க வேண்டும்;" என்ற உயரிய, உன்னத நோக்கில் எழுதப் பட்டவை.

பேரறிஞர் அண்ணா அவர்களின் கடித இலக்கியத்தில், இல்லாததே இல்லை என உறுதியாகச் சொல்லலாம். உலக நாடுகளின் வரலாறு, இந்திய வரலாறு, சங்கத் தமிழ், இலக்கியங்கள், அரசியல் நிகழ்வுகள் என எல்லாவற்றையும்;

தமது தம்பிமார்கள் அறிந்திருக்க வேண்டும்; அறிந்திருப்பவற்றை அய்யம் திரிபறத் தெரிந்திருக்க வேண்டும்; தெரிந்து கொண்டவற்றைத் தெருக்கள்தோறும், திண்ணைகள்தோறும் கொண்டுசென்று விளக்கி உரைத்து, இன - மொழிப் பெருமையை மீட்டெடுக்க வேண்டும்; தமிழர்கள் மானமும் அறிவும் வளர்த்து மாமனிதர்களாக உயர்ந்திட வேண்டும்; என்ற பேரவாவுடன் எழுதப்பட்டவை அந்தக் கடிதங்கள்!

பேரறிஞர் அண்ணா அவர்களைப் போலவே, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும், உடன்பிறப்புகளுக்குக் கடிதம் எழுதும் முன்; அன்று தலையாயதான எந்தப் பிரச்சினையைப் பற்றி எழுத வேண்டும் என்பதைத் தீர்மானித்து, அந்தப் பிரச்சினையின் முழுப் பரிமாணங்களையும் அறிந்து, சிந்தித்து, சொல்ல வேண்டியவற்றை மன ஏட்டில் வரிசைப்படுத்தி; படிப்போர் வியக்கும்படி எழுதி முடிப்பதில், ஈடு இணை இல்லாதவர் என்பதை, ஒவ்வொரு கடிதத்திலும் நிரூபித்துக் காட்டி விடுவார்.

அதுமட்டுமல்ல; ஒரு கடிதத்தை எழுதியதற்குப் பிறகு, அவரே ஒரு முறை அதை நுட்பமாகப் படித்துப் பார்த்து விடுவார்; அத்துடன் விட்டு விடுவாரா? இல்லை; தமது செயலாளரைக் கூப்பிட்டுப் படிக்கச் சொல்வார்; ஏதாவது சந்தேகம் இருக்கிறதா என்று கேட்பார்; சந்தேகம் என்றால், அந்த இடத்தை எளிதில் புரிந்து கொள்ளும்படி மாற்றம் செய்வார்; அத்துடன் முடிந்ததா என்றால், இல்லை; கடிதம் அச்சியற்றப்பட்டு, "ப்ரூஃப்" வந்ததும், மீண்டும் ஒருமுறை அவரே படித்துப் பார்ப்பார் அல்லது தன்னுடைய செயலாளரை படிக்கச் சொல்லி ஊன்றிக் கேட்பார்; பின்னர் அன்றைய "முரசொலி" இதழ் முழுமையாகி வந்ததும், ஒரு முறை படிப்பார்; மாலையில் வெளியூர் - இதழ் கைக்குக் கிடைக்கும்போது, அண்ணன் ஆர்க்காட்டாரோ, அண்ணன் துரைமுருகனோ, முனைவர் பொன்முடியோ, அல்லது நானோ பக்கத்தில் இருந்தால், இதழைக் கொடுத்துப் படிக்கச் சொல்லிச் செவிமடுப்பார்.

மறுநாள், அறிவாலயத்திலோ, அல்லது இல்லத்திலோ, கழகத் தோழர்கள் யாரும் எதிர்ப்பட்டால், "கடிதம் படித்தாயா?" என்றுதான் முதலில் கேட்பார்.

இவை அனைத்தையும் அருகிருந்து நான் பார்த்திருக்கிறேன். ஒவ்வொரு முறையும் அவருடைய முகத்தில் அலுப்போ, சலிப்போ தோன்றாது. படிக்கப் படிக்க உற்சாகம் கொள்வார். கடிதத்தில் எழுதி இருப்பதை அப்படியே நினைவில் செதுக்கி வைத்திருப்பார்; எத்தனை மாதங்கள் ஆனாலும் கடிதத்தில் எழுதிய கருத்தை அப்படியே திருப்பிச் சொல்வார்; நாங்கள் அவருடைய கருத்தை, நினைவாற்றல் பிசகு காரணமாக, மாற்றிச் சொல்ல நேரிடும்போது, திருத்துவார்.

அப்பப்பா; அப்படி ஒரு தலைவரை, இன்னொரு முறை வாழ்நாளில் காண முடியுமோ? "இங்கிவரை யாம் பெறவே என்ன தவம் செய்து விட்டோம்!".

கலைஞர் ஒரு பன்முகங்கொண்ட பேராளுமை. கடித இலக்கியம், அவரது ஒரு முகம், ஒப்பிலாத் திருமுகம்!

1968-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 22-ஆம் நாள் முதல், 1977-ஆம் ஆண்டு பிப்ரவரி 13-ஆம் நாள் வரையில்

கலைஞரின் கடிதங்கள், பத்துத் தொகுதிகளாக 1986-ஆம் ஆண்டில் வெளிவந்தன; அதைத் தொடர்ந்து, 11 மற்றும் 12-ஆவது தொகுதிகள், 1993-ஆம் ஆண்டில் வெளிவந்தன.

22.10.1968-இல் தலைவர் கலைஞர் எழுதிய முதல் கடிதத்திலிருந்து, 15.11.2016 அன்று எழுதிய கடைசிக் கடிதம்வரை அனைத்துக் கடிதங்களையும் வெளியிட முடிவுசெய்து; இப்போது, சீதை பதிப்பகத்தார் வெளியிடுகிறார்கள்.

கலைஞர் கடிதங்கள் ஏற்கனவே 12 தொகுதிகளாக வெளியிடப்பட்டபோது, "என்னுரை" என்ற பகுதியில், தலைவர் கலைஞர் அவர்கள் எழுதி அளித்த முன்னுரை, அப்போதும் இப்போதும் முக்கியத்துவம் வாய்ந்தது மட்டுமல்லாமல்; வெளிவரவுள்ள "கலைஞரின் கடிதங்கள்" ... தொகுதிகள் அனைத்திற்கும் முன்னுரை - அறிமுக உரையாகக் கொள்ள வேண்டும்.

தலைவர் கலைஞரின் அந்த "என்னுரை"யில், "நண்பா" என விளித்துத் தொடங்கியும், "உடன்பிறப்பே" என விளித்துத் தொடங்கியும், இங்ஙனம் "மறவன்" என முடித்தும் "அன்புள்ள மு.க." என முடித்தும், "மறவன் மடல்" வார இதழிலும், "நம் நாடு" வார இதழிலும் மற்றும் பெரும்பாலும், நாள்தோறும் அல்லது வாரத்தில் நாலைந்து முறை "முரசொலி' நாளிதழிலும் நான் எழுதிய கட்டுரைகளின் வடிவமே "கலைஞர் கடிதம்" என்று தலைவர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டது, இப்போது வெளிவரும் "கலைஞரின் கடிதங்கள்" தொகுதிகளுக்கும் மெத்தப் பொருந்தும்.

மேலும் அந்த "என்னுரை"யில்: "என் கடிதங்கள் காலை ஏழு மணிக்குப் பிறப்பெடுக்கும்; ஒவ்வொரு நாளும்! பொதுவாழ்வில் இதுவரை; பாசறை - போர்க்களம் - பதவிப் பொறுப்பு - பணியாற்றும் வாய்ப்பு - இப்படி மாறி மாறி வரினும் சந்தித்த; இன்னமும் சந்தித்துக் கொண்டிருக்கிற சோதனைகள் எண்ணிலடங்கா!"

"குமுறல் - கொந்தளிப்பு - கவலை - கலக்கம் - ஏமாற்றம் - துரோகம் - இப்படி எத்தனையோ ஈட்டிகள் என் இதயத்தில் பாய்ந்து ரணமாக்கியுள்ளன". அந்த ரணம் ஆற்றிடும் மருந்தாகத்தான் எனது எழுத்துகள் எனக்குப் பயன்பட்டிருக்கின்றன!"

"எனது கடிதத் தொகுப்புகளில் பல செய்திகள், நிகழ்ச்சிகள், மதிப்புமிக்க தலைவர்கள், அன்புக்குரிய நண்பர்கள் விமர்சிக்கப்பட்டிருக்கலாம். அது; அந்தக் காலகட்டத்து அரசியல் தட்பவெப்பத்தைக் காட்டுவதாகவே எடுத்துக்கொள்ள வேண்டுமெனப் பணிவன்புடன் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்" என்று தலைவர் கலைஞர் அவர்கள் விளக்கிச் சொன்னதை, இந்தத் தொகுதிகளைப் படிக்கும்போது, கவனமாகக் கருத்தில் இருத்திக் கொள்ள வேண்டுமென்று விரும்பி வேண்டுகிறேன்.

தலைவர் கலைஞர், 22.10.1968 - அன்று, "அன்பு நண்பா !" என விளித்து, "ஜாக்குலின்கள்" என்று தலைப்பிட்டு எழுதிய முதல் கடிதம், அவர் எவ்வளவு

அதிசயிக்கத்தக்க நுட்பமான ஆற்றலாளர் என்பதை எடுத்துக் காட்டும்.

அமெரிக்க ஜனாதிபதி கென்னடியின் மனைவி ஜாக்குலின், தனது கணவர் கல் நெஞ்சன் ஒருவனின் துப்பாக்கிக்கு இரையானதற்குப் பின்னர், அய்ந்தாண்டுகள் பொறுத்திருந்து, தனது 39 வயதில், ஒனாசிஸ் என்ற 68 வயது கோடீஸ்வரனை, மறுமணம் செய்துகொண்டார்; இந்தத் திருமணத்தை அமெரிக்க நாட்டிலேயே பெரும்பாலானோர் விரும்பவில்லை; என்பது செய்தி.

இந்தச் செய்தியை கழகத் தோழர்கள் அறிந்துகொள்ள வேண்டும் என எண்ணிய தலைவர் கலைஞர், அந்தச் செய்தியை; கழகத்திலே இருந்த சிலர் - பாசத்தோடு பழகிய நண்பர்கள், சென்னை மாநகராட்சித் தேர்தலில் சுயேட்சை வேட்பாளர்களாக மாறிய நிகழ்வோடு ஒப்பிட்டு எழுதியிருக்கிறார்.

அங்கே, சொந்த நாட்டிலே பாராட்டப்படாத மறுமணம்; இங்கே பதவி வெறியைத் தணித்துக் கொள்ள, கழகத்தையே எதிர்த்து சுயேட்சைகளாகப் போட்டியிட்ட கழகத் தோழர்கள்.

எந்தச் செய்தியையும் மேலோட்டமாகப் பார்த்து, கடந்து செல்பவரல்ல கலைஞர். அந்தச் செய்தியை, கழகத்தை நிலைநிறுத்தவும், கழகத் தோழர்களுக்கு உணர்ச்சி ஊட்டவும், எப்படிப் பயன்படுத்தலாம் என்று நினைத்துக் காத்திருந்தவர் கலைஞர்.

15.11.2016 - அன்று தலைவர் கலைஞர், “மத்திய அரசின் அறிவிப்பும், சாதாரண மக்களின் அவதியும்” என்ற தலைப்பில் "முரசொலி”க்கு எழுதிய கடைசிக் கடிதம்; பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் பண மதிப்பிழப்பு அறிவிப்பைப் பற்றியது. ’

அந்தக் கடிதத்தில், ஏடுகளில் வெளியான செய்திகளை எடுத்துக்காட்டி, பணமதிப்பிழப்பு நடவடிக்கையினால் நாட்டிலே ஏற்பட்ட விளைவுகளை விளக்கியிருக்கிறார்.

குபேரர்களைப் பற்றியோ, கோடி கோடியாய்ப் பணம் குவித்திருக்கும் செல்வந்தர்களைப் பற்றியோ, மேட்டுக்குடிகளைப் பற்றியோ எப்போதும் கவலைப்படாதவர் கலைஞர்.

நடுத்தர மக்கள், அடித்தள மக்கள், உழைத்து வாழும் பிரிவினர், அன்றாடங்காய்ச்சிகள் - ஆகியோரைப் பற்றியே சதாசர்வ நேரமும் நினைந்து நினைந்து கசிபவர் கலைஞர் என்பதை; பண மதிப்பிழப்பு நடவடிக்கையினால் அவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளை, அந்தக் கடைசிக் கடிதத்தில் பட்டியல் இட்டிருக்கிறார்.

அந்தப் பிரிவினர்தானே கழகத்தின் வேர்கள்! மண்ணுக்குள் மறைந்திருந்து மரத்தைத் தாங்கும் வேர்களைப் போல, கண்ணுக்கெட்டிய தூரம்வரை கழகத்தைக் காத்து நிற்பவர்கள் அவர்கள் அல்லவோ! அதனால்தான் தலைவர் கலைஞர் அவர்களுக்கு, கடைசிவரை, அவர்கள் மீது அவ்வளவு அக்கறை, ஆழ்ந்த பிடிப்பு!

பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும் கடிதத்திற்குத் தலைப்பு சூட்டும்போது; சிற்பி செதுக்கியானதும் சிற்பத்திற்குக் கண் திறப்பு செய்வதைப் போல, ஒளி பொருந்திய - கருத்தாழம் மிகுந்த - நினைவில் நீடித்து நிற்கக்கூடிய, தலைப்புகளைத் தேர்ந்தெடுத்து அலங்கரிப்பார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள்:

"காகிதக் கப்பலில் கவனம் செலுத்தாதே தம்பி"
"மகுடி ஊதும் மகானுபாவர்கள்’’
“கிளிக்குப் பச்சை பூசுவதா?”
"கண்ணீரும் பன்னீரும்”

“படமும் பாடமும்”
“மூலவர் மூவர் முரசொலி”

போன்ற எண்ணற்ற தலைப்புகளை கடிதங்களுக்குச் சூட்டியிருக்கிறார். -

ஒவ்வொரு அங்குலமும் அண்ணாவின் அடியொற்றி வளர்ந்த கலைஞர்

அவர்கள்:

"நோ்மையும் பொறுப்பும், நீர்மேல் எழுத்தல்ல!"
"எருக்கம் பூவில், இனிய மணம் தேடுவதோ?"
"கண்ணுக்கு விருந்தானாய் - மனப் புண்ணுக்கு மருந்தானாய்!"
"அன்று எத்தனை பிரிவு? இன்று எத்துணைப் பரிவு?”
"இடர் எது வரினும், ஏற்பேன்"
"பறித்து வராத பாரிஜாதம்"

போன்ற நினைவில் நங்கூரம் போட்டு நிற்கும் தலைப்புகளையே சூட்டியிருக்கிறார்.

கலைஞரின் கடிதங்கள், காலத்தின் கண்ணாடி! கலைஞரின் கடிதங்கள், கற்கண்டுச் சொற்கோவை! கலைஞரின் கடிதங்கள், கருத்துச் சுரங்கம்! கலைஞரின் கடிதங்கள், வானவில்லைப் போல, வண்ணங்கள் நிறைந்த எண்ணங்களின் பசுஞ்சோலை! கலைஞரின் கடிதங்கள், கடலின் ஆழத்தைக் காட்டும், மலையின் உயரத்தை உரசும்! கலைஞரின் கடிதங்கள், நினைத்தாலே இனிக்கும், நெஞ்சமெல்லாம் மணக்கும்!

கலைஞரின் ஒவ்வொரு கடிதத்தையும் ஊன்றிப் படித்து, ஒப்பிலாப் பயன் பெறுக! “யாம் பெற்ற இன்பம், பெறுக தமிழ் வையகம்!”

அன்புடன்,

(மு.க. ஸ்டாலின்)
14.09.2021

# பதிப்புரை

## அரசியல் இலக்கியமான கலைஞரின் கடிதங்கள்

திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆறாவது முறையாக ஆட்சிக் கட்டிலில் அமர்த்தி, அதனை உங்களுக்குக் காணிக்கையாக்குவேன் என வங்கக் கடலோரம் பேரறிஞர் அண்ணா துயிலுமிடத்தை ஒட்டி, ஓய்வெடுக்கும் முத்தமிழறிஞர் கலைஞரின் நினைவிடத்தில் சூளுரைத்தவர் கழகத் தலைவர் தளபதி அவர்கள். தேர்தல் களத்தில் மகத்தான வெற்றி பெற்று, அந்த வெற்றியைக் கலைஞரின் ஓய்விடத்தில் காணிக்கையாக்கி, தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவர் மாண்புமிகு **முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்** அவர்கள்.

சொன்னதைச் செய்வோம் என்று சூளுரைத்து நிறைவேற்றியவர் முத்தமிழறிஞர் கலைஞர். சொல்லாமலே செய்து முடிப்பவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள். தலைவர் கலைஞரின் விருப்பப்படி, கடற்கரையில் இடம் ஒதுக்கப்படுமா என அவர் மறைந்தபோது தமிழ்நாட்டில் மட்டுமின்றி, உலகெங்கும் வாழும் தமிழர்களிடம் பதற்றம் கலந்த எதிர்பார்ப்பு மிகுந்திருந்தது. அப்போதைய ஆட்சியாளர்கள் காழ்ப்புணர்வுடன் மறுத்த நிலையில், நீதிமன்றத்தை நாடி, விடிய விடிய சட்டப் போராட்டம் நடத்தி, கடற்கரையில் தலைவர் கலைஞருக்கான இடத்தை உறுதி செய்து, உலகத் தமிழர்களின் நெஞ்சில் உயர்ந்து நின்றவர் நம் முதல்வர்.

தந்தைக்குத் தனயனாக, தலைவருக்குத் தொண்டனாக, இயக்கத்தின் தலைமையாக எல்லா நிலையிலும் தலைவர் கலைஞரின் பேராற்றலை மக்கள் நெஞ்சங்களில் நிலைத்திருக்கச் செய்யும் பெரும்பணியை முதல்வர் அவர்கள் மேற்கொண்டு வருகிறார். அத்தகைய பெரும்பணிகளில் ஒன்றைச் சீதை பதிப்பகத்திடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்தார். அதுதான், கலைஞர் கடிதங்கள் எனும் இந்த மாபெரும் தொகுப்பு. **4051 கடிதங்களைக் கொண்ட 54 பாகங்களாக** வெளியாகியுள்ள இந்தத் தொகுப்பிற்கு அணிந்துரையை மாண்புமிகு முதல்வர் அவர்களே வழங்கியிருப்பது, சீதை பதிப்பகத்தின் மீது அவர் வைத்திருக்கும் நம்பிக்கையின் வெளிப்பாடு. அணிந்துரை என்ற சொல்லுக்குப் பதில் பணிந்துரை

என அவர் பயன்படுத்தியிருப்பது தனது தந்தையும் தலைவருமான முத்தமிழறிஞர் கலைஞர் மீது எப்போதும் அவர் வைத்திருக்கும் பெருமதிப்பின் அடையாளம். மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

'கலைஞரின் கவிதை மழை'யை வெளியிடும் முதல் வாய்ப்பைப் பெற்றுத் தந்த எங்கள் வழிகாட்டியான மூத்த பத்திரிகையாளர் **அய்யா சின்னகுத்தூசி**யை நினைவில் கொள்கிறோம். தலைவர் கலைஞர் அவர்களே அப்போது அதனை மெய்ப்புப் பார்த்து, முழு வடிவம் பெறச் செய்தார். ஒன்றிய அமைச்சர்கள், தோழமைக் கட்சித் தலைவர்கள், தமிழின் மிகப் பெரும் கவிஞர்கள், கழக நிர்வாகிகள் முன்னிலையில் அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் கவிதை மழை வெளியீட்டு விழா சிறப்பாக நடைபெற்றது.

அதுபோலவே, முத்தமிழறிஞர் கலைஞரின் சிறுகதை இலக்கியத்தை சிறுகதைப் பூங்கா எனும் தலைப்பில் சீதை பதிப்பகம் வெளியிட்ட போதும், மிகச் சிறப்பான விழா நடத்தப்பட்டு, அருமையான உரையை வழங்கினார் தலைவர் கலைஞர் அவர்கள். கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் அவர் ஆற்றிய உரைகளை 'கல்வி நிலையங்களில் கலைஞர்' எனக் கடலூர் இள. புகழேந்தி அவர்கள் தொகுத்திட, அதனைச் சிறப்பான முறையில் வெளியிட்டது சீதை பதிப்பகம்.

இன்றைய தகவல்-தொழில்நுட்பமும் சமூக வலைத்தளங்களும் இல்லாத காலத்தில், ஒவ்வொரு நாளும் தனது இயக்கத் தொண்டர்களுடன் உரையாடுவதற்கான ஊடகமாக உடன்பிறப்புக் கடிதங்களைத் தலைவர் கலைஞர் மிகச் சிறப்பாகக் கையாண்டார். அந்தக் கடிதங்களை முழுமையான தொகுப்பாகக் கொண்டு வரவேண்டும் என்ற எண்ணம் அவரிடம் இருந்தது. அந்த எண்ணத்தை முதல்வர் அவர்கள் நிறைவேற்றியுள்ளார்.

கடிதங்களின் முழுத் தொகுப்பு உருவாக்கப் பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர் தலைவர் கலைஞரின் நிழலாக, அவரது மனதின் குரலை அறிந்தவராக விளங்கிய உதவியாளர் **அய்யா கோ.சண்முகநாதன்** M.com BGL அவர்கள். கலைஞர் அந்தக் கடிதங்கள் பலவற்றையும் எழுதியபோதே அருகிலிருந்து கவனித்தவர் என்பதாலும், அப்போதே மெய்ப்புப்

பார்த்து அச்சுக்கு அனுப்பியவர் என்பதாலும், ஒவ்வொரு கடிதத்தின் காலகட்டத்தையும் அறிந்து முறையாகத் தொகுத்தளித்தார். தனது இறப்பிற்கு முன்பாக, கடிதத் தொகுப்புப் பணியை முழுமையாக நிறைவேற்றிவிட்டே நம்மிடமிருந்து பிரியாவிடை பெற்றிருக்கிறார் அய்யா சண்முகநாதன். எப்போதும் எங்கள் மீது அளப்பரிய அன்பைப் பொழிந்த அய்யாவை சீதை பதிப்பகம் எந்நாளும் நினைவில் கொண்டிருக்கும்.

மறவன் என்ற பெயரில் முதலில் கடிதங்களை எழுதிய தலைவர் அவர்கள் பின்னர் மு.கருணாநிதி, மு.க. என உடன்பிறப்புகளுக்குக் கடிதங்கள் எழுதியுள்ளார். பின்னர் மீண்டும் மு.கருணாநிதி என்ற பெயரிலேயே கடிதங்களைத் தொடர்ந்து எழுதியுள்ளார். தலைவர் கலைஞர் அவர்களின் கடிதங்களைக் காலவரிசைப்படுத்தி, தொகுப்பில் விடுபட்ட கடிதங்களையும் தேடி இணைப்பதில் முனைவர் **திரு கி. இராஜமாணிக்கம்** ஐ.ஏ.எஸ்.(ஓய்வு) அவர்களின் பணி அளப்பரியது. தலைவர் கலைஞரின் அருகிலிருந்து ஆட்சிப்பணியையும் இயக்கப் பணியையும் கவனித்த அவர், இந்தத் தொகுப்பு மிகச் சிறப்பான முறையில் வெளியாவதற்குத் துணை நின்றவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் படைப்புகளை வெளியிடும் ஒவ்வொரு வாய்ப்பும் சீதை பதிப்பகத்திற்குப் பெருமை தரக்கூடியதாகும்.

சீதை பதிப்பகத்தின் வெளியீடுகளைத் தலைவர் கலைஞர் அவர்களை நேரில் சந்தித்து வழங்கும் போது ஏற்பட்ட மகிழ்ச்சிக்கும் உணர்ச்சிக்கும் அளவில்லை. அதன் தொடர்ச்சியாக, கழகத் தொண்டர்களுக்கும் தமிழ்நாட்டு மக்களுக்கும் அரசியல் இலக்கியமான முரசொலி உடன்பிறப்புக் கடிதங்கள் முழுத் தொகுப்பு எனும் இமாலயப் பணியை நிறைவேற்றியிருப்பதை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்குச் சீதை பதிப்பகத்தின் புகழ்வணக்கமாகக் கருதுகிறோம்.

இந்தப் பணியை எங்களிடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்குகிறோம்.

**பதிப்பகத்தார்**

# உள்ளே...


| தலைப்பு | தேதி | பக்கம் |
|---|---|---|
| 111. கூடல் மாநகரில் கூடுவோம்-வா! | 04-12-1974 | 23 |
| 112. 'குன்றம் உயர்ந்தது!' | 22-12-1974 | 28 |
| 113. விண்ணில் விமானம்! | 29-12-1974 | 31 |
| 114. என் பொங்கல் வாழ்த்து! | 06-01-1975 | 34 |
| 115. இதயச் சுமையும் இனிய வாழ்த்தும்! | 13-01-1975 | 39 |
| 116. களம் சென்றார் காலடிகட்கு! | 26-01-1975 | 42 |
| 117. கண்ணின்மணி உறங்கும் கல்லறை நோக்கி... | 02-02-1975 | 45 |
| 118. சினிமாப் பைத்தியம்; படமல்ல; பாடம்! | 09-02-1975 | 48 |
| 119. அந்தச் சந்திப்பு! | 15-02-1975 | 52 |
| 120. நடந்தாய் வாழி காவேரி! | 22-02-1975 | 57 |
| 121. ஒன்பதாம் ஆண்டு! | 03-03-1975 | 61 |
| 122. தேன் துளிகள்! | 22-03-1975 | 66 |
| 123. எதிர்ப்பு வாழ்க! | 30-03-1975 | 71 |
| 124. இரு தூண்கள் சாய்ந்தன! | 03-04-1975 | 75 |
| 125. கேரளத்தில் ஒரு குரல்! | 09-05-1975 | 78 |
| 126. அற்ப மகிழ்ச்சி... அடையட்டுமே! | 13-05-1975 | 82 |
| 127. பொறுத்திருப்போம்! | 18-05-1975 | 85 |

| | | |
|---|---|---|
| 128. இந்திர விழாவாம்! | 20-05-1975 | 88 |
| 129. “திட்டங்கள், திரைமறைவில்!” | 22-05-1975 | 91 |
| 130. பிறந்தநாள் செய்தி : உன்னோடுதான் இருப்பேன்! | 24-05-1975 | 95 |
| 131. அதற்கென்ன காரணம்? | 31-05-1975 | 102 |
| 132. எண்ணினேன் - இயலவில்லை; எழுதினேன்! | 07-06-1975 | 107 |
| 133. மோசமான முன்மாதிரி! | 15-06-1975 | 111 |
| 134. மறந்தாரா காமராஜர்? | 29-06-1975 | 114 |
| 135. எதை நினைப்பது? | 04-08-1975 | 116 |
| 136. உள்துறை அமைச்சரும் - உள்ளூர்த் தலைவர்களும்! | 05-08-1975 | 119 |
| 137. விநோதமான பிறவிகள்! விளையாடட்டும்! | 06-08-1975 | 124 |
| 138. ஒரு தகுதி போதும் எனக்கு! | 24-08-1975 | 128 |
| 139. எழுச்சிகீதம் இசைத்திடுக! | 02-09-1975 | 131 |
| 140. “பட்டாசு வெடிக்கிறார்!” | 06-09-1975 | 134 |
| 141. நிதி குவித்திடுவீர்! | 29-09-1975 | 136 |
| 142. அறம் தாங்கி நடந்திடுவோம்! | 10-10-1975 | 138 |
| 143. உணர்வுகளை உரைக்கின்றேன்! | 15-10-1975 | 142 |
| 144. “பவளவண்ணன் - ஒரு பாடம்!” | 17-10-1975 | 145 |
| 145. இதற்கோர் சட்டம் தேவை! | 18-10-1975 | 148 |
| 146. மகளிர் மாநாடு காண... | 12-11-1975 | 152 |
| 147. கோவை மாநாடு - 1 “ஆண்டிகள் கூடுவோம்!” | 06-12-1975 | 154 |

| | | |
|---|---|---|
| 148. கோவை மாநாடு - 2<br>திருவோடு வருக! | 08-12-1975 | 158 |
| 149. கோவை மாநாடு - 3<br>சத்திரத்துப் பேர்வழிகள்! | 10-12-1975 | 162 |
| 150. கோவை மாநாடு - 4<br>“காவி”யுகு நீர் உலர...! | 15-12-1975 | 165 |
| 151. கோவை மாநாடு - 5<br>“சிவ சிவா!” என்றிராமல்...! | 17-12-1975 | 173 |
| 152. கோவை மாநாடு - 6<br>பற்றற்ற துறவாயினும்...! | 20-12-1975 | 177 |
| 153. கோவை மாநாடு - 7<br>“வண்ணத்தமிழே! வா! வா! வா!” | 22-12-1975 | 182 |
| 154. கோபக்காரர்களை மறந்திடு!<br>கோவையை நினைத்திடு! | 31-12-1975 | 186 |
| 155. ஒரு தொண்டனின் வேண்டுகோள்! | 06-01-1976 | 190 |
| 156. தங்கம் எது? பித்தளை எது? | 08-01-1976 | 197 |
| 157. பழம் நழுவிப் பாலில்...! | 18-01-1976 | 201 |
| 158. வீரர்கள், பின்தொடரட்டும்! | 29-01-1976 | 204 |
| 159. அண்ணா வழி நிற்போம்<br>அமைதி காத்திடுவோம்! | 01-02-1976 | 207 |
| 160. கழகத் தோழர்கட்கு<br>இந்த வாய்ப்பு நமக்குக்<br>காலம் வழங்கிய அருட்கொடை! | 06-02-1976 | 209 |
| 161. அரசியல் பண்பாடு காப்போம்! | 08-02-1976 | 211 |
| 162. வீரத்திற்கான விளக்கம்! | 09-02-1976 | 214 |
| 163. இதய வாழ்த்து எது? | 11-02-1976 | 216 |
| 164. அமைதிக்கு அழிவில்லை! | 12-02-1976 | 218 |
| 165. பலிக்காத கனவு! | 15-02-1976 | 220 |
| 166. கவிதையில் ஒரு மடல்! | 16-02-1976 | 222 |

| | | |
|---|---|---|
| 167. நேற்றைய மடலுக்கு விளக்கம்! | 17-02-1976 | 223 |
| 168. "இலக்கியச் சந்தைக்கு ஏகுவோம் வாரீர்!" | 20-02-1976 | 225 |
| 169. நான் வருவதன் நோக்கம்! | 22-02-1976 | 228 |
| 170. அண்ணனைக் காணுகிறேன் - அந்தப் பாடல் வரிகளிலே! | 23-02-1976 | 230 |
| 171. அனுபவத்தில் உணர்ந்தது! | 24-02-1976 | 234 |
| 172. மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை! | 24-02-1976 | 236 |
| 173. தாய் உள்ளம் உணர்ந்த தாய்! | 25-02-1976 | 238 |
| 174. "ஒளிபடைத்த கண்ணினாய்; வா! வா!" | 26-02-1976 | 240 |
| 175. நினைவு அலைகள்! நெஞ்சத் துடிப்புக்கள்!! | 16-03-1976 | 244 |
| 176. கலித்தொகை காட்டும் வீரம்! | 17-03-1976 | 248 |
| 177. கழகம் காப்போம்! கடமையைச் செய்வோம்! | 18-03-1976 | 251 |
| 178. "விதியே! விதியே!" என் செய நினைத்தாய்? | 19-03-1976 | 255 |
| 179. கங்கையைப்போல் காவிரிபோல் கழகம் வாழும்! | 20-03-1976 | 258 |
| 180. சோவியத் கவிதையில்- ஒரு சுவையான கவிதை! | 22-03-1976 | 262 |
| 181. "சராசரங்கள் வரும் சுழன்றே சகடு போல்!" | 23-03-1976 | 265 |
| 182. வயதானவர் கூறுவது- வாழ்த்தாகக் கருதுவோம்! | 24-03-1976 | 269 |
| 183. உண்மை - உதய ஞாயிறு போலவே! | 25-03-1976 | 273 |
| 184. அடக்கமே; அண்ணன் கற்றுத்தந்தது! | 26-03-1976 | 280 |

| | | |
|---|---|---|
| 185. நிலைகுலையா நீதி<br>வாய் திறந்து பேசும்! | 27-03-1976 | 285 |
| 186. வியாழக்கிழமையும் -<br>வெள்ளிக்கிழமையும்! | 28-03-1976 | 289 |
| 187. படமெடுக்கிறார்களே,<br>என்னைப் பார்த்து - ஏன்? | 29-03-1976 | 295 |
| 188. பழைய காலத்துப்<br>பாசறையில் நடந்தது...! | 30-03-1976 | 300 |
| 189. ஒற்றர் பணி - ஒப்பற்ற புனிதப் பணி! | 31-03-1976 | 305 |
| 190. அண்ணாமீது ஆணையாக...! | 01-04-1976 | 310 |
| 191. அவர் தாளுக்கு மாலை சூட்டுகிறேன்! | 03-04-1976 | 314 |
| 192. பயணம் தரும் நம்பிக்கை! | 04-04-1976 | 317 |
| 193. கழகம் இருக்கும்!<br>காலம் - கேட்கும் நியாயத்தை!! | 25-04-1976 | 321 |
| 194. கும்பாபிஷேகங்கள்!<br>சில குறிப்புக்கள்!! | 06-04-1976 | 328 |
| 195. நினைக்கிறேன் -<br>நெஞ்சு இனிக்கிறது! | 07-04-1976 | 332 |
| 196. நாட்டுக்கும் நல்லோர்க்கும்<br>அறிவிக்கிறேன்! | 08-04-1976 | 336 |
| 197. வடிவேலருக்கு வந்த வாழ்வு! | 09-04-1976 | 342 |
| 198. மின்னல் கீற்று! மின்மினிப் பூச்சி!! | 10-04-1976 | 348 |
| 199. காரிருளால் சூரியன்தான்<br>மறைவதுண்டோ? | 11-04-1976 | 353 |
| 200. சமுதாய மறுமலர்ச்சிக் காண...! | 12-04-1976 | 357 |
| 201. கோட்டம் திறக்கப்படுகிறது<br>குறளோவியம் தீட்டப்படுகிறது! | 15-04-1976 | 362 |

| | | |
|---|---|---|
| 202. அமைதி காத்துப் பணிபுரிவோம்! அமைப்பு ரீதியாக இயங்குவோம்! | 17-04-1976 | 375 |
| 203. வினாக்கள் குடைகின்றன, விடைதான் கிடைக்கவில்லை! | 18-04-1976 | 380 |
| 204. வாய்ப்பந்தல் நிலைக்காது! | 21-04-1976 | 386 |
| 205. உண்மை உறங்கிவிடுவதில்லை! | 22-04-1976 | 392 |
| 206. கோட்டமும் கூடமும் எதற்காக? | 24-04-1976 | 396 |

# 111. கூடல் மாநகரில் கூடுவோம்-வா!

**உடன்பிறப்பே!**

மதுரை மாநகரில் - திருப்பரங்குன்றத்து அண்ணா சோலை, இராசாங்கம்-சுருளி மணிப் பந்தலில் - பொதுக்குழுவும், கழகத்தின் செயற்குழுவும், வரும் ஆறு-ஏழு-எட்டு ஆகிய நாட்களில் நடைபெற இருப்பதை, இந்திய நாட்டு அரசியல்வாதிகள் மிக உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள்.

"ஏதாவது சந்து பொந்து கிடைக்காதா - அதை வைத்துக் கொண்டு நாலைந்து நாட்கள் பத்திரிகை விற்கலாமே" என்று சில இதழாளர்கள், ஏதேதோ செய்திகளைத் தங்கள் மனம் போன போக்கில் உருவாக்கிக் கொண்டு இருக்கிறார்கள்!

கழகம் துவங்கிய நாளில் இருந்து, நமது செயற்குழுவோ-பொதுக் குழுவோ கூடுவதாக இருந்தாலும், சென்னை மேயர் தேர்தல்கள் நடைபெறுவதாக இருந்தாலும், அதற்குப் பத்து நாட்களுக்கு முன்பே ஏதாவது கதைகளைக் கட்டிவிட்டுத் தங்கள் பத்திரிகை வியாபாரத்தை நடத்திக் கொள்கின்ற பண்பினை இதழாளர்கள் சிலர் பெற்றிருந்ததையும், இப்போதும் பெற்றிருப்பதையும் நீ நன்கு அறிவாய்.

ஆனால் அத்தகைய செய்திகள், பொய்யாய்ப் புளுகாய்-போன இடம் தெரியாமல் மறைந்துவிட்ட தெருப் புழுதியாய் மாறிவிட்ட நிகழ்ச்சிகளையும் நாடு மறந்திடவில்லை!

அவர்களின் பொய்ப் பிரச்சாரம்-இருட்டடிப்பு-ஒன்றைப் பத்தாக்கும் முயற்சி-அனைத்துக்கும் இடையிலேதான் நாம் உறுதியோடு வளர்ந்து வருகிறோம்!

'பத்திரிகைகள் எப்படி யிருக்கின்றன' என்பதற்கு ஒன்றைச் சொல்லுகிறேன், கேள்!

நான் ஆற்காடு நகரத்துக்கு எத்தனையோ முறை சென்றிருக்கிறேன்; பெரிய வரவேற்பு-மாபெரும் பொதுக் கூட்டம்-இப்படியெல்லாம் நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றன- அங்கே!

நூற்றுக்கணக்கில் மாலைகள் - கைத்தறி ஆடைகள் அணிவித்து மகிழ்ந்திருக்கிறார்கள்!

இந்தச் செய்திச் சிறப்புக்கள் எல்லாம் 'தினமணி' ஏட்டில் என்றைக்காவது வந்து நீ படித்ததுண்டா? இல்லை!

ஆனால், இப்போது நான் ஆற்காட்டுக்குச் சென்ற செய்தி, 'தினமணியில்' முக்கியமான இடத்தில் வெளியிடப்பட்டிருக்கிறது-

**"முதல் மந்திரி கருணாநிதி ஆற்காடு கூட்டத்திற்கு மூன்று மணி நேரம் தாமதமாக வந்தார்; அவருக்கு நகரசபைத் தலைவர் மாலைபோடவில்லை!"**

உடன்பிறப்பே! இந்தச் செய்திக்கு எவ்வளவு முக்கியத்துவம் பார்த்தாயா?

நான் வேலூர் மாணவர் கருத்தரங்கை முடித்துவிட்டு ஆற்காடு வரத்தாமதமாகி விட்டது; உண்மைதான்! நான் சரியான நேரத்தில் வந்திருந்தால், ஆற்காடு கூட்டச் செய்தியே 'தினமணி'யில் வந்திருக்காது! தாமதமாகக் கூட்டத்திற்குச் சென்ற 'தவறை' நான் செய்ததால், ஆற்காடு கூட்டத்திற்குத் 'தினமணி'யில் விளம்பரம் கிடைத்தது!

ஆற்காடு நகராட்சித் தலைவர் எனக்கு எத்தனையோ முறை மாலை போட்டிருக்கிறார்! அந்தச் செய்தி தினமணியில் வந்ததில்லை!

இப்போது அவர் எனக்கு மாலை போடவில்லை; அதனால் அவருக்குத் 'தினமணி'யில் விளம்பரம் கிடைக்கிறது!

ஆகவே, பத்திரிகைக்காரர்கள், கழகத்தில் எந்தச் செய்திகளை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது புரிகிறதல்லவா? என் செய்வது?

நம் வீட்டில் இனியவை நடந்தால் எரிச்சல் தாங்காமல் துடிப்பதும், யாருக்காவது தலைவலி-காய்ச்சல் என்றால் தாங்க முடியாத மகிழ்ச்சி கொள்வதும், சில எதிர்வீட்டுக்காரர்களுக்குப் பண்பாடாக ஆகிவிட்டதே; அந்த இயல்பை, அவ்வளவு எளிதாக அவர்களால் மாற்றிக் கொள்ள முடியுமா?

அவர்களின் போக்கை மாற்ற முடியாது என்கின்றபோது, நாம்தான் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்!

ஆயிரங் காலத்துப் பயிராம் இந்தக் கழகத்தைக் காப்பதில், மனக் கசப்புக்களை மறந்து-துரோகச் செயல்களைத் தூள் தூளாக்கத் துள்ளி எழ வேண்டும்!

எத்தனையோ சோதனைகளைத் தாங்கிக் கொண்டது கழகம்! அண்ணா காலத்தில் ஒரு 'துரோகச் சக்தி' முளைத்தது! அது நமது அண்ணனையே இழித்தும் பழித்தும் பேசியது-எழுதியது! 'வளர்த்த கடா மார்பில் பாய்ந்தது' போல், அதன் செயல் அமைந்தது!

இப்போது, அண்ணாவின் பெயரைச் சொல்லிக் கொண்டு-அவர் கொள்கைகளைக் குழி தோண்டிப் புதைத்துவிட மற்றொரு 'துரோகச் சக்தி' புறப்பட்டு, அண்ணா உருவாக்கிய கழகத்திற்கு எதிராக ஆட்டம் போடுகிறது!

'இனம்-இனத்தோடு சேரும்' என்பதைப் போல், முதலில் கிளம்பிய துரோகச்சக்தியும்-இப்போது கிளம்பியுள்ள துரோகச் சக்தியும் இணைந்து கொண்டு நமது கழகத்தை எதிர்க்க முரசு கொட்டுகின்றன!

கழகத்தை எதிர்க்க எப்படிப்பட்டவர்கள் ஒன்று சேர முனை கிறார்கள் என்பதைப் பதினைந்து ஆண்டு கால அரசியல் வரலாற்றை உணர்ந்தவர்கள் புரிந்து கொள்வார்கள். ஓரளவு பாமர மக்களுக்குத்தான் இந்த விவரங்கள் புரியவில்லை! அவர்களுக்கும் உண்மைகளைப் புரியவைக்க வேண்டிய பொறுப்பை நாம் தீவிரமாக ஏற்றுப் பணியாற்ற வேண்டும்!

**அதற்கென நமது பிரச்சார அணிகள் விரிவுபடுத்தப்பட வேண்டுமென்பதை, மதுரை செயற்குழு-பொதுக் குழுவில் விவாதிக்க இருக்கிறோம்.**

கழகத்தின் வார ஏடான 'கழகக் குரலை' நாளேடாக மாற்ற முடியுமா என்பது பற்றியும், நானும்- பொதுச் செயலாளரும் - பொருளாளரும்- தலைமைக் கழகச் செயலாளர்களும் சிந்தித்துக் கொண்டிருக்கிறோம். அதுபற்றியும் செயற்குழு-பொதுக் குழுவில் விவாதிக்க இருக்கிறோம்.

**ஆறு ஏழு ஆண்டுகளாக இல்லாத உணவு நெருக்கடி இப்போது தமிழகத்தில் ஏற்பட்டிருக்கிறது. அதனைச் சமாளிக்கும் வழி வகைகளையும் ஆராய இருக்கிறோம்.**

இடையில் ஏற்பட்ட தொல்லைகளைக் கடந்து, கழகம் புதிய வலிவுடன் நிமிர்ந்து நிற்கிறது! அதனை வெளியில் சொல்லாமல், நம்மை வீழ்த்திட எதிரிகள் 'வியூகம்' அமைக்கிறார்கள்!

உடன்பிறப்பே! நான் உனக்கு
ஒன்று சொல்வேன்-!

**வேறு வேலை எதுவும் பார்க்காமல், கழகப் பணிகளை ஒரு நாளைக்குப் பத்து மணிநேரம் செய்து வா- போதும்.**

**ஓராண்டுக்கு, ஒரே மூச்சில் உழைத்திடு! அந்த உழைப்பில் எங்களையும் பயன்படுத்திக் கொண்டு- வேலை கொடு! நாங்கள் தயாராக இருக்கிறோம்!**

வெயிலிலும்-மழையிலும், காட்டிலும்-மேட்டிலும் அலைந்து அலைந்து சுமார் முப்பது ஆண்டுக் காலத்துக்கு மேலாக உழைத்துப் பழக்கப்பட்ட உடம்புதான்!

தேர்தலுக்கு மட்டும் தலை காட்டுகின்ற அலுங்காத குலுங்காத மேனியல்ல!

ஆகவே, எங்களைத் தாராளமாகப் பயன்படுத்திக் கொள்!

நீ, சென்னைக்கு வருகின்ற வேலையைக் குறைத்துக் கொள்!

பொதுவான பணிகளுக்கு நீ அமைச்சர்களிடம் முறையிடு வதையும், அதற்காக அலைவதையும் நான் மகிழ்ச்சியுடன் பாராட்டுபவன்; தனிப்பட்ட பரிந்துரைகளுக்காக உன்னைச் சிலர் தொல்லைப்படுத்துவதும்-அதனால் நீ எங்களைத் தொல்லைப் படுத்துவதும்-இறுதியில் அது நடக்காமல் போய் 'அலைந்ததுதான் மிச்சம்' என்று ஆவதும், நீ அறிந்த ஒன்றுதான்!

ஆகவே, அந்தப் பரிந்துரைச் சீட்டுக்கள் அறவே நின்றாக வேண்டும்.

மூன்று ஆண்டுகளாக அவைகள் மிகவும் குறைந்துவிட்டன என்றாலும், முழுவதும் குறைந்தாக வேண்டும்!

இந்த உறுதியையும் நீ உள்ளத்திலே பதிய வைத்துக் கொண்டு-சொல்ல வேண்டியவர்களுக்கும் சொல்லி-இந்த

ஓராண்டு ஓய்வின்றிச் சுழன்று பணியாற்றினால், தமிழ் சமுதாயத்துக்கு உழைக்கின்ற பொறுப்பு மிகுந்த வாய்ப்பைத் தமிழ் மக்கள் மீண்டும் நம்மிடமே வழங்குவர்!

இவைகளையெல்லாம் உன்னிடம் விரிவாகப் பேச வேண்டும். மதுரைக்கு வா-பேசுவோம்.

செயற்குழுவில்-பொதுக்குழுவில்-இல்லையேல் பொதுக் கூட்டத்தில்-ஊர்வலத்தில்-உன்னை என் கண் தேடும்!

கூடல் மாநகரில் கூடுவோம்-வா!

தமிழ்க் கொற்றம் தழைக்க வழி தேடுவோம்-வா!

அன்புள்ள,

**மு. க.**

(04-12-1974)

# 112. 'குன்றம் உயர்ந்தது!'

**உடன்பிறப்பே,**

'குன்றம் காண வா' என அழைத்தேன் உன்னை! வந்தாய்!

"கோலமயில் ஆடிக் கொண்டிருக்கும்; குயில் கூட்டம் பாடிக் கொண்டிருக்கும்; துள்ளும் மானும், நெஞ்சை அள்ளும் புள்ளும், கொம்பில் உடைந்து வழியும் தேனும் ரசித்து மகிழ வா!" என்று உன்னை அழைக்கவில்லை!

"கொள்கை முரசொலிக்கக் குன்றத்துக்கு வா; இலட்சிய கீதம் பாடிட என் அழைப்பினை ஏற்றிடு; மான மறவர்ச் சீமையாம் மதுரையம்பதியில் உன் ஆற்றலைக் காட்ட ஆர்த்தெழு" என்றுதான் அழைத்தேன்.

"திருப்பரங்குன்றத்துப் பொதுக்குழுவிலும்-மதுரை ஊர்வலத் திலும்-தமுக்கம் பொதுக்கூட்டத்திலும் உன்னை என் கண் தேடும்" என்று குறிப்பிட்டேன். அவ்வாறே தேடினேன்; என் கண்ணின் மணியே-உன்னைக் கண்டேன். கதிர் கண்ட கமலமானேன்; வெள்ளி நிலாக் கண்ட அல்லியானேன்; வேலும், வாளும் கண்டால் வீரனுக்கு ஒருவிதமான மகிழ்ச்சி ஏற்படுமே-அந்த மகிழ்ச்சிக்கும் உணர்ச்சிக்கும் வடிவமானேன் உன்னைக் கண்டவுடன்!

அண்ணா சாலையில் ஒழுங்கு மீறாமல் நடக்கும் நாம், குன்றத்தில் - அண்ணா சோலையில் கூடினோம்; மதுரை நகரிலும்-மாவட்டத்திலும் பணியாற்றும் அந்தச் செயல் வீரர்களுக்குத்தான் எத்துணை ஆர்வம்! எத்துணைத் திறன்!

ஒரு முறை திருச்சி திராவிடர் கழக மாநாட்டில் பெரியார், 'என் வாலிப ஜீவரத்தினங்களே' என அழைத்தார்-தழுதழுத்த குரலில் பல ஆண்டுகளுக்கு முன்பு!

அப்படி அழைக்கத் தோன்றுகிறது-மதுரையின் கழகச் செம்மல்களை! அவர்தம் உழைப்பின் சின்னமாக விளங்கியது-அந்தப் பொதுக்குழு!

“எங்கே மறைந்து கிடந்தது இந்தப் பேராற்றல்” என நாடு வியக்கும் வண்ணம், எழுச்சி நிறைந்த-எளிமை வாய்ந்த-எழில் குறையாத இலட்சியத் திருவிழாவை நடத்திக் காட்டி விட்டனர்.

ஊர்வலம் - பாண்டிய நாட்டுப் படை மாட்சியை நினை வூட்டியது!

பொதுக்கூட்டம் - பொங்கும் கடலுக்கு உவமையானது!

செயற்குழு, பொதுக் குழுக்கள் கூடிக் கலைய அல்ல; சிந்தனைக்கு விருந்து - விவாத அரங்கம் - விவேகம் பெருக்கிடும் மன்றம் - காலக் கண்ணாடி-நாட்டு நிலை உணர்த்தும் கூடம்-என்ற வகையில் அமைந்தன.

ஒருவர் இருவர்க்கு 6,7,8 ஆகிய மூன்று நாட்களிலும் தொடர்ந்து கலந்து கொள்ள முடியாத அளவுக்கு வேறு வேலைகள் இருந்தன; எனினும், ஓர் இடத்தில் உட்கார முடியாமல் சுறுசுறுப்பாக இயங்கும் பரபரப்பான வாலிபர்கள் கூட, அமைதியாக மூன்று நாட்களும் அமர்ந்திருந்து-பிரச்சினைகளை விவாதித்தனர்.

ஒவ்வொரு தீர்மானத்தின் மீதும், முன் மொழிந்தவர்கள்-வழி மொழிந்தவர்கள் வழங்கிய விளக்கங்கள், நமது அரசியல் தெளிவுக்கும்-கொள்கை உறுதிக்கும்-இலட்சியப் பற்றுக்கும் எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தன!

“உடல் நலிவுற்றிருப்பினும், உள்ளம் திடமாயிருக்கிறது” என்பதை ஒவ்வொரு சொல்லிலும் ஒலித்துக் காட்டி உருக்கமிகு உரையாற்றிய நமது உற்ற துணைவர் என்.வி.என்., கடமை-கட்டுப்பாடுபற்றித் தந்த விளக்கங்களை மறந்திட இயலுமோ?

கழகக் காவலராம் நமது நாவலர், செயற்குழு பரிந்துரைத்த உணவு நிலை குறித்த தீர்மானத்தைப் பொதுக்குழுவின் முன் வைத்து ஆற்றிய பேருரையும், கழகத்தின் கொள்கை விளக்கக் கூட்டங்கள் குறித்து நமது பொருளாளர் பேராசிரியர் நிகழ்த்திய சிறப்புரையும்-செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள் வாரி வழங்கிய வலிமை மிகு கருத்துக்களும் ‘குன்றத்துப் பொதுக்குழுவின் புகழ் மகுடத்து முத்துக்கள்’ எனில் பொருந்தும்!

“சத்தியம் செய்து பத்தியம் ஏற்றிடுக” என நான் விடுத்த வேண்டுகோள்-உன் விஷயத்தில்-விழலுக்கிறைத்த நீராகாது என்றே நம்புகிறேன்.

சென்னை முப்பெரு விழாவில் உன்னைக் கண்டேன்-'உறுதி தளரவில்லை, நீ' என்பதை உணர்ந்தேன்!

குன்றத்திலும், மதுரையிலும் உன்னைக் கண்டேன்-உத்வேகம் உன் தோளைக் குலுக்கும் காட்சிதனைக் கண்டேன்!

**"இப்படை தோற்கின்**
**எப்படை வெல்லும்?"**

என அண்ணன் அடிக்கடி கூறுவாரே-அதனையே ஒருமுறை முழங்குகிறேன்-அந்த அண்ணனை நினைத்துக் கொண்டு!

ஒரு முறை-வேறு ஓர் அரசியல் நிகழ்ச்சிக்காக-அவர் எழுதினார்- 'குன்றம் தாழ்ந்தது' என்று குறிப்பிட்டு!

இன்று, என் விரல் பிடித்து எழுத வைக்கிறார்!- 'குன்றம் உயர்ந்தது' என்று!

அன்புள்ள,

**மு. க.**

22-12-1974

# 113. விண்ணில் விமானம்!

**உடன்பிறப்பே,**

அவன் பெயர் ஜோசப் ஹோமலோவ்; அவன் வயது முப்பது; செக்கோஸ்லேவியா நாட்டுக்காரன்; அவனுக்கு எந்த அரசியல் நோக்கமும் கிடையாது; நூற்றுக்கு மேற்பட்ட உயிர்களை ஒரே நேரத்தில் போக்கடிப்பதில் அவனுக்கு ஒரு வெறித்தனமான ஆசை!

அந்த முயற்சியில், தானும் செத்தாக வேண்டும் என்பது தெரிந்திருந்தும் அதற்கு அவன் தயாராக இருந்தான்!

விண்ணில் அமைதியோடு பயணம் செய்து கொண்டிருந்த அந்த விமானத்தை வீழ்த்தி நொறுக்குவதன் மூலம் அவனது கொடிய இதயத்தின் கோரத் துடிப்புக்கள் அடங்கும்; அவனது மிருக உயிருக்கு ஒரு 'சாந்தி' கிடைக்கும். அதனால்தான், அவன் அந்த விமானத்தில் ஏறிக் கொண்டான்!

இந்தியாவிலிருந்து நியூயார்க்குக்குச் செல்லும் அந்த விமானத்தில் அவனும் ஒரு பயணியாகவே ஏறிக் கொண்டான்.

விமானத்தில் அவன் ஏறுவதற்கு முன்பே, சற்று சந்தேகத் துடன்தான் அதிகாரிகள் அவனைச் சோதனையிட்டிருக்கின்றனர்; ஆனால், அவன் மறைத்து வைத்திருந்த சிறிய கத்தியை அவர்கள் கவனிக்கத் தவறி விட்டனர்!

'சக்கரவர்த்தி ஷாஜஹான்' எனும் சரித்திர நாயகனின் பெயர் தாங்கிய அந்த விமானம் - சரித்திரத் தாழ்வாரமாம் ரோம் நகரின் மீது பறந்த போதுதான் - அந்தச் சதிகாரன், தன் வெறியைத் தணித்துக் கொள்ள விமான ஓட்டிகள் மீது பாய்ந்திருக்கிறான்; அவர்கள் வியப்புற்று, அதிர்ச்சியில் மூழ்கிவிட்டார்கள்-அரை நொடி நேரம்; அதற்குள் அவன் விமானக் கருவிகளை நொறுக்கத் தன்

பலத்தைப் பயன்படுத்தியிருக்கிறான்; அவனும் சேர்ந்துதான்-நூற்று ஐம்பது பயணிகளுடன் மடிந்து நொறுங்கிச் சிதறியிருக்க வேண்டும். அதைப்பற்றி அந்த வெறியன்-சமூகத் துரோகி-குள்ள மனம் படைத்தவன்-கவலைப்படவில்லை!

ஆனால், விமானிகளும்-விமானப் பணியாளர்களும் அதே நொடியில் அவனைத் தடுத்து விட்டனர்; சற்று அயர்ந்திருந்தால், அம்மவோ-நூற்றுக்கு மேற்பட்ட உயிர்கள் ரோமாபுரிக்கு அருகே பலியாக்கப்பட்டிருக்கும்!

விமானிகளும்-பணியாளர்களும் உரிய நேரத்தில் அவன் மீது தாக்குதல் நடத்தி - தந்திரமாக அவனைக் கட்டிப் போடாம லிருந்திருந்தால், இன்றைய தினம் எத்தகைய பயங்கரமான செய்தியை உலகம் கேட்டிருக்கும் என்பதை எண்ணிடவே அச்சமாக இருக்கிறது!

ஆனால், அந்த வெறியனுக்கு அதைப் பற்றியெல்லாம் சிந்திக்க நேரமுமில்லை-நெஞ்சமுமில்லை!

எவ்வளவு நீண்ட பயணம்-எத்தனை பேர் நம்பிக்கையோடு அமைதி தவழப் பயணம் செய்து கொண்டிருக்கிறார்கள்; அவர் களுக்குக் குழந்தை குட்டிகள்-மனைவி மக்கள்-உற்றார் உறவினர்-நண்பர் இப்படி எத்தனை எத்தனை பாசத் தொடர்புகள்!

இதையெல்லாம் நினைக்காமல் அந்தக் கல்மனத்தான் ஈடுபட்ட குறும்புத்தனம் வெற்றி பெற்றிருந்தால், 'ஷாஜஹான் விமானம் நொறுங்கியது; 150 பயணிகள் உயிர் இழந்தனர்' என்பதோடு செய்திகள் முடிந்துவிடும்!

அந்த விபத்தால் நொறுங்குவது விமானம்-அந்த விமானத்தில் இருந்து வீழ்ந்து மடிந்திடும் ஒவ்வொருவருக்கும் குடும்பம் உண்டே! சுற்றம் உண்டே! எத்தனை மனைகளில் புலம்பல் சப்தம்! கண்ணீர் மழை! கதறல் ஒலி! இவைகளை யெல்லாம் எண்ணிப் பார்க்க, அந்த இரும்பு இருதயத்தானுக்கு மூளை ஏது? மூளைக்குப் பதிலாகச் சூளையல்லவா கொதிக்கிறது அவன் தலையில்!

அந்தக் கொதிப்பு அவனுக்கு ஏன் ஏற்பட்டது? அவனுக்கு வாழ்க்கையில் என்ன வெறுப்போ-யார் கண்டது? என்ன குழப்பமோ? அவனுக்கு ஏற்பட்ட குழப்பத்திற்கு, 'அந்த விமானப்

பயணிகள் சாக வேண்டும்' என்று ஏதாவது இருக்கிறதா? 'அந்த அழகிய விமானத்தின் அமைதியான பயணம் முடிய வேண்டும்' என்பது அவன் குழப்பத்திற்குப் பிராயச்சித்தமா?

இப்படியும் சில வெறியர்கள் உலவுகிறார்கள் உலகத்தில். ஆனால் ஒன்று-பெரும்பாலும் பிடிபட்டு விடுகிறார்கள் தக்க சமயத்தில்!

உடன்பிறப்பே! அரசியலிலும் இதுபோன்ற 'ஜோசப் ஹோமலோவ்'களை நாம் காண்கிறோமே, இல்லையா? ஏன், நமது கழகத்துக்குள்ளேயே வந்து நுழைந்து கொண்டு ஆகாயத்தில் பறக்கும் விமானத்தில் ஆர்ப்பாட்டம் செய்த அக்கிரமக்காரனைப் போல் இங்கும் ஆட்டம் போடவில்லையா?

ஷாஜஹான் விமானச் சிப்பந்திகள், அந்தத் துரோகியைத் தந்திரமாக வளைத்துப் போலீசாரிடம் ஒப்படைத்தது போல், நாமும்தான் அத்தகையோரை அடையாளம் புரிந்து கொண்டு செயல்படுகிறோம். என் செய்வது?

விமானப் பயணம் சற்றுத் தாமதமாகலாம் எனினும், வீழ்ச்சியிலிருந்து காப்பாற்றப்பட்டு விட்டதல்லவா?

"சரியாகச் சோதனை போடாததனால்தானே, அவன் சிறிய கத்தியை மறைத்து வைத்திருந்தது தெரியவில்லை?" என்று நீ கேட்பதும் புரிகிறது!

ஆமாம்; பெரிய கூட்டத்தில் அதிகக் கண்காணிப்பாக இருக்க முடியாமல்-சில சமயங்களில் ஆகிவிடுகிறது. என் செய்வது, மன்னித்துக் கொள்!

எப்படியோ உரிய நேரத்தில் கண்டுபிடித்து ஆபத்திலிருந்து மீண்டு விமானம் விண்ணில் பறக்கிறது.

அன்புள்ள,

**மு. க.**

29-12-1974

# 114. என் பொங்கல் வாழ்த்து!

**உடன்பிறப்பே!**

தமிழர் திருநாளாம் பொங்கல் விழா வருகிறது! 'இன்பப் பொங்கல் - இனிய பொங்கல் - எங்கணும் மகிழ்ச்சி - எங்கணும் விழாக் கோலம்' என்றெல்லாம் குதூகலிக்கின்ற அளவுக்கு இந்த ஆண்டு பொங்கல் இல்லை!

பொங்கலில், மஞ்சளும் இஞ்சியும் - வானுயர் கரும்பும் - தேனிகர் பண்டமும் கொண்டு, வீதிக்கு வீதி ஊருக்கு ஊர், தமிழ்க் குலத்தினர் விழா எடுப்பர்-விருந்து வைப்பர்-விழியாரக் கூத்துக்கள் நடத்துவர்-செவியார இசையமுது பொழிவர்!

இந்த ஆண்டு அங்கிங்கெனாதபடி 'எங்குமே பொங்கல் திருநாள், பூரிப்பு மலிந்திட நடந்தது' எனக்கூறிக் களித்திட இயலாதவாறு-தமிழகத்தின் பல பகுதிகள், வறட்சியின் கொடுங்கரத்தால் சுற்றி வளைக்கப்பட்டு விட்டன!

பச்சைப் பட்டாடை புனைந்து-நில மகள் நடம் புரிந்த கழனிகள் பல காய்ந்து கிடப்பதைக் காண்கிறோம்.

'மழை'யெனும் வைரத் தொங்கல் அணிந்து அடிக்கடி காட்சி தரும் வான மங்கை, கைம்மைக் கோலம் பூண்டு-கண்ணீரையும் மிச்சமின்றி உகுத்து விட்ட வறண்ட கண்களுடன் சோர்ந்திருக்கும் நிலை காண்கிறோம்!

வளைந்தோடும் பாம்புக் கூட்டங்கள் போல் நெளிந்தோடும் வாய்க்கால்கள் - சிற்றாறு - பெரு நதி அனைத்துமே நம் கண்களுக்குப் பாம்புகளாய்த் தோன்றுகின்றன.

இந்த நூற்றாண்டில் 'இந்த ஆண்டு போல் மழை பொய்த்த ஆண்டே கிடையாது' என வானிலை விஞ்ஞானிகள் தெரிவித் துள்ளனர்!

இயற்கையை எதிர்த்துப் பெரும் போராட்டம் நடத்தப் புறப்பட்டிருக்கிறோம்! இடையிலே சில விநாடிகள் இளைப்பாற-ஆறுதல் கொள்ள-ஊக்கம் பெற-உற்சாகத்தை வரவழைத்துக் கொள்ள-இந்த அளவுக்கே இந்த ஆண்டு பொங்கல் விழா இருந்திட முடியும்!

அண்ணன் மறைந்து-அதனால் ஏற்பட்ட துயரைத் தணித்துக் கொள்ள முடியாமல் தவித்தபோதுதான், 1969 இல் இயற்கையின் அடுத்த சீற்றம், தமிழகத்தைத் தாக்கியது!

கடுமையான அந்த வறட்சியை எதிர்த்து நமது வலிவு மிகுந்த கரங்களை உயர்த்தினோம்!

எங்கும் வறட்சி நிவாரணப்பணிகள்! கிராமப்புறங்களில் வேலை வாய்ப்புக்கள்!

வெறும் உதவிப்பணிகளாக இல்லாமல், எதிர் காலத்திற்கு உபயோககரமான பணிகளாக, நிறைவேற்றப் பாடுபட்டோம்! பயன் கண்ட மக்கள் பரவசமுற்றனர்! அவர்களைத் தாக்கிய வறட்சியிலிருந்து அவர்களைக் காத்திட இராணுவ நடவடிக்கை போல், வறட்சி நிவாரண நடவடிக்கைகளை மேற்கொண்டோம்! நல்லோர் வாழ்த்தினர்! நல்லதை நினைத்துப் பழக்கமில்லாதோர், நாத்தழும்பேறி நாராசம் பேசினர்!

நமது கவனம் மக்களிடமே இருந்தது! சுடு சொற்கள்-எரிச்சல் கணைகள்-அவதூறு அஸ்திரங்கள்-நம் பணியின் முன்னால், முனை மழுங்கிப் போயின!

வறட்சியைப் புறங் கண்டோம்-வாகை சூடினோம்-இயற்கையின் கோபத்தை எதிர்த்து!

அதே 1969-இப்போது அடிபட்ட பாம்பு போல், சீறிச் சினந்து, தமிழ் மக்களின் வாழ்வை நஞ்சாக்கப் படம் உயர்த்தி நிற்கிறது! 'அந்தப் பாம்பின் தலையில், நமது அழுத்தமான பாதத்தால் மிதிப்போம்' எனச் சூளுரைத்து-காலுயர்த்தி எழுந்து நிற்கிறோம்.

இந்த மாநிலம், இயற்கையின் ஆத்திரத்துக்கு ஆளான போதெல்லாம், நாம் எதிர்க்கட்சியாக இருந்த போதும் சரி-ஆளுங்கட்சியாக வந்தபோதும் சரி-செயலில் இறங்கி ஆவன பல செய்திருக்கிறோம்!

அண்மையில் புயலால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில், தமிழக வரலாற்றிலேயே இல்லாத அளவுக்கு வயல்களில் மேடிட்டுக் கிடந்த மணலை யெல்லாம், அரசின் செலவிலேயே தூர் வாரி-விவசாயப் பெருங்குடி மக்களின் மகிழ்ச்சியைப் பரிசாகப் பெற்றோம்! இப்போதும் இந்த வறட்சியை வெற்றி காண நமது கழக அரசு, வரிந்து கட்டிக் கொண்டு புறப்பட்டு விட்டது!

எதிர்க்கட்சியினர், பேசுவர்-தீர்மானம் போடுவர்!

நிலையை எடுத்துரைக்கச் சட்டமன்றத்திற்கு வருவதற்குக்கூட நேரமில்லாத தலைவர்களும் உண்டு-தமிழகத்தில்!

நாம் அப்படியல்ல! எந்தச் சூழ்நிலையிலும் ஜனநாயகக் கடமையை ஆற்றுவதற்கு நமது அண்ணனிடம் பயிற்சி பெற்றவர்கள்! அதனால்தான், எதிர்த்தரப்பில் இருந்த போதும்-ஆளும் வரிசையில் அமர்ந்துள்ள போதும்-ஆக்கப்பூர்வமான காரியங்களை, அவதிப்படும் மக்களுக்காக நம்மால் செய்ய முடிகிறது!

"வறட்சி தலை நீட்டுகிறது" என்றதுமே, ஐந்து கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து - பணிகளைத் தொடங்கி விட்டோம்! எதிர்க்கட்சியினர் "என்ன கோரிக்கை" வைப்பது என்று திணறித் திண்டாடுகின்ற அளவுக்கு வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில், விவசாயிகளுக்குச் சலுகைகள் - துயர் துடைக்கும் பணிகள் - வரி ரத்து-தள்ளுபடி-ஒத்தி வைப்பு-கடன் நிவாரணம்-இன்னோரன்ன ஏற்பாடுகள்!

ஐம்பது கோடி ரூபாயில் - வறட்சிப்பகையை முறியடிக்க-நிவாரணப் போர்க்கருவிகள் தயாராகின்றன!

இந்த ஏற்பாடுகளைக் கண்டதும் எதிரிகள், "எல்லாம் சரி; இது ஒழுங்காகச் செலவாக வேண்டுமே" என்ற பழைய பல்லவியைப் பாடி அழுகின்றனர்!

அவர்களுக்கு நினைவு-தாங்கள் 'புத்தர்கள்' என்று! தாங்கள் ஏசுநாதர்கள்-முகமது நபிகள் என்று!

பாவம்! அவர்கள் நிலைக் கண்ணாடியில் தங்கள் முகத்தைப் பார்த்துக் கொள்ளட்டும்-நெஞ்சைத் தொட்டுப் பார்த்து, இதயத் துடிப்புக்களின் தீர்ப்பைக் கேட்டுக் கொள்ளட்டும்!

அவர்களைக் கண்டு நகர்வாலா நகைக்கிறான்! இன்னும் யார் யார் சிரிக்கிறார்கள் என்பதைப் பின்னர் எழுதுகிறேன்-எழுதத்தான் போகிறேன்!

நீ இப்போது அவர்களைப் பற்றிக் கவலைப்படாதே!

நீ, பொங்கியெழுந்து - பொதுப்பணியாற்றத்தான் இந்தப் பொங்கல்!

இன்று முதல் உன் கால்கள், வறண்டு கிடக்கின்ற வயல்களின் பக்கம் நடக்க வேண்டும்! அங்கு வாடிக் கிடக்கின்ற விவசாயிகளின் துயர்துடைக்க உன் கரங்கள் துடிக்க வேண்டும்!

குடிக்க நீரின்றி ஒரு குக்கிராமத்தில் மக்கள் வேதனைப் படுகிறார்களா-அங்கே நீ இருக்க வேண்டும்!

கைமாறு கருதாமல் - என் கண்மணியே! உன் கடுமையான உழைப்பால், அந்த ஊருக்குக் குடிநீர் பெற்றுத் தர-தவித்தோர் தாகம் தீர்க்க-நீ முயற்சி எடுத்து வெற்றி பெற வேண்டும்!

மக்களுக்காக அரசு வழங்கும் உதவிகள்-பணம் அனைத்தும், 'சிந்தாமல் சிதறாமல் மக்களுக்குப் போய்ச் சேருகிறதா' என்று கவனிப்பதில், உன் நேரம்-நினைப்பு இருக்க வேண்டும்!

வீண் புரளிகளைப் பற்றிச் சிந்திக்கத் தேவையில்லை! விழலுக்கு நீர் இறைக்கப்பட்டால், அதனை உரியவர்களிடம் எடுத்துக் கூறித் தடுக்கும் முரசமாக நீ மாறிட வேண்டும்!

கண்ணீர் துடைக்க-உன் கைகள் தாவட்டும்!

கஷ்டம் தீர்க்க-உன் கால்கள் பாயட்டும்!

உன் கருணை உள்ளம்-எங்கும் வெள்ளமெனப் பெருகட்டும்!

சிறிய அளவில்-சிக்கனமாகத் தமிழ் உணர்வின் பகைமை கெடாமல் பொங்கல் நாளைக் கொண்டாடிவிட்டு-

**துயர்துடைக்கும் பணிகளுக்குத் துள்ளிக் குதித்து ஓடு!**

காளையை அடக்குவதும், பொங்கல் நாளில் ஒரு வீரமிகு நிகழ்ச்சியன்றோ?

வறட்சி உருவில் வரும் முரட்டுக் காளையின் கொம்பை ஒடித்து-வெற்றி காண-என் உடன் பிறப்பே-புறப்படு!

சீறிவந்த புலியை முறத்தினால் விரட்டிய தமிழ் மரபின் தங்கமே! இயற்கைக் கொடுமைக்கு எதிராக எழுந்திடு இன்றே!

முன்கூட்டி ஏற்றிடு-என் பொங்கல் வாழ்த்தை!

அன்புள்ள,

மு. க.

06-01-1975

# 115. இதயச் சுமையும் இனிய வாழ்த்தும்!

**உடன்பிறப்பே,**

கொளுத்தும் வெயிலில் குழந்தையைத் தூக்கிக் கொண்டு நடக்கிற தாயைப் பார்த்திருக்கிறோம். கொட்டும் மழையிலும், கோரப் புயலிலும் குழந்தையைத் தோளில் போட்டுக் கொண்டு, ஓடுகிற தாயையும் பார்த்திருக்கிறோம். அனல் தகிக்கிறதே என்பதற்காகவோ, அடாத மழை கொட்டுகிறதே என்பதற்காகவோ, தாய் வேதனைப்படத்தான் செய்வாள் எனினும், எத்தகைய வேதனையிலும் தன் அன்புக் குழந்தையை அலட்சியப்படுத்திவிட மாட்டாள்.

காரணம், அந்தக் குழந்தை அவள் சதையின் சதை-இரத்தத்தின் இரத்தம்-மூச்சின் மூச்சு. அவள் உணர்ச்சியின் வடிவம் அது. அவள் பாசத்தின் கருவூலம் அது. அதனால், கால் கொப்பளிக்கும் கோடையாயினும், கண்ணைப் பறிக்கும் மின்னலுடன் காது செவிடுபடப் பொழியும் மழையாயினும், அந்தக் குழந்தையை மார்போடும் தோளோடும் அணைத்துக் கொண்டுதான், நடப்பாள் அல்லது ஓடுவாள்.

ஏன் இதனைச் சொல்கிறேன் என்று உனக்குப் புரிகிற தல்லவா?

தமிழகத்தின் பல பகுதிகளில் இன்று வறட்சிக் கொடுமை. அதனை எதிர்த்துச் சமாளிக்க எத்தனையோ திட்டங்களை வகுத்துக் கொண்டு செயல்படுகிறது கழக அரசு. இந்த வறட்சியின் பிடியிலிருந்து நாட்டைக் காக்க நீயும் உன் கடமையை விரைந்து செய்ய வேண்டுமென்று, சென்ற கடிதத்தில் கேட்டிருந்தேன். உன்னால் இயன்ற பணிகளை நீ, தொடங்கிவிட்டாய். எங்கே துன்ப துயரங்கள் தென்படுகிறதோ, அங்கெல்லாம் தொண்டாற்றுவதற்கு நீ புறப்பட்டு விட்டாய் என்பதையும், மக்களின் முறையீடுகளை அரசுக்குத் தெரிவிப்பதிலும், அதிகாரிகளிடம் எடுத்துச் சொல்லி

ஆவன செய்வதிலும் நீ முன்னணியில் நிற்கிறாய் என்பதையும் கேள்வியுற்று மகிழ்கிறேன்.

சிலர்தான், நான் எழுதிய கடிதக் குறிப்புக்கள் அவர்களுக்காக எழுதப்பட்டதல்ல என்று எண்ணிக்கொண்டு, பரிந்துரைச் சீட்டுகளுடன் சென்னை நோக்கிப் படையெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இப்போது ஒரு தந்திரம் கற்றிருக்கிறார்கள். வந்ததும் ஒரு வணக்கம். பிறகு கட்சியைப் பற்றி ஒரு நிமிடம். கூட்டத்துக்குத் தேதி கேட்டு ஒரு நிமிடம். அதற்கடுத்த நிமிடம், பரிந்துரைச் சீட்டு என்மீது பாயும். நான் அவர்களை வேதனையுடன் பார்க்கிறேன். கோபம் கொப்பளிக்கிறது என் உள்ளத்தில். அடக்கிக் கொள்கிறேன். ஆனாலும் சில நேரங்களில் முடியவில்லை. என்னையும் மீறி ஏதாவது சொல்லிவிட்டுப் பிறகு எனக்கு நானே வருந்துகிறேன். இந்த உணர்ச்சி மாற்றங்கள் உடலுக்கு நல்லதல்ல; ஆயுளைக் குறைக்கும் என்பர் மருத்துவ நிபுணர்கள். பரவாயில்லை; இந்தச் சங்கடத்தை விட அது எவ்வளவோ மேல்!

அந்தச் சீட்டுகள், இத்தனை ஆண்டுக் காலமாக எப்படிப் பயனற்றுப் போயினவோ, அப்படித்தான் இப்போதும் போகுமென்று தெரிந்தும்; ஏன்தான் இப்படி அலைகிறார்களோ; எனக்குத் தெரியவில்லை.

அப்படிப்பட்டவர்களுக்குமிடையில் என் பார்வையிலிருந்து எங்கேயோ நெடுந்தொலைவில்-கட்சிப் பணியாற்றுகிற கண்மணியே,

நீயும் இருக்கிறாய் என்பதை நினைத்துத்தான் நான் ஆறுதல் பெறுகிறேன். உனக்கும் எனக்கும் இடையில் உள்ள தொலைவு அதிகமே தவிர, தொடர்பு நெருக்கமானது. உன் தொண்டுள்ளத்துக்கும், அயராத கட்சிப் பணிக்கும் நான் தலை வணங்குகிறவன். உன் இதயத்தில் பதவி ஆசையின் துடிப்பு இல்லை. கரங்களில் தனிப்பட்டவர்க்கான பரிந்துரைச் சீட்டும் இல்லை. ஆகவே நீ என் வணக்கத்துக்கும், வாழ்த்துதலுக்கும் உரிய உடன் பிறப்பு!

உன்னை, நான் வேண்டிக் கேட்டுக் கொண்டிருக்கிறேன்; வறட்சிப் பணிகளை ஆற்றிடு என்று! பொங்கலைச் சிக்கனமாகக் கொண்டாடு என்று! அதற்காகப் பொங்கலே வேண்டாம் என்று கூறிடவில்லை.

கொளுத்தும் வெயிலிலும், கொடிய மழை புயலிலும் தாய் தன் குழந்தையை அணைத்துக் கொண்டே ஓடுவது போல்,

தமிழகம் வறட்சியால் அல்லல்படும் இந்த ஆண்டில், தாய், தன் குழந்தையிடம் காட்டும் அன்பையும் ஆர்வத்தையும் போல நாமும், தமிழர் தம் உணர்வுத் திருநாளாம் இந்தப் பொங்கல் நாளின்பால் காட்டுவோம்.

கஷ்டம்தான் எனினும், குழந்தைக் கனியைத் தாய் எறிந்திடுதல் இல்லையே!

தமிழகம் வறண்டு இருப்பினும், தமிழர் உணர்வெனும் செல்வத்தை வீசிடுதல் எங்கனம் இயலும்?

இந்தப் பொங்கல் நாளில், என் இதயத்தின் சுமையையும் உன்னிடம் ஓரளவு-ஆம்; கடுகளவு சுட்டிக் காட்டியிருக்கிறேன்!

வலி, குறையும் என்ற நம்பிக்கையுடன்!

இதயச் சுமையினூடே
இனிய பொங்கல்
வாழ்த்துக்களை
உனக்கு வழங்கி
மகிழ்கிறேன்.

அன்புள்ள,

**மு. க.**

13-01-1975

# 116. களம் சென்றார் காலடிகட்கு!

**உடன்பிறப்பே,**

ஜனவரி-25-மொழி புரட்சிநாள்!

மூண்டெழுந்த இந்தி எதிர்ப்புத் தீயை அணைக்க முடியாமல், தமிழகத்தையே அன்றைய ஆளவந்தார் பிணக்காடாக ஆக்கத் துடித்த நாள்!

மாணவர்களை அடக்குவதிலும்-தமிழ் மக்களின் உணர்வு களைப் பொசுக்குவதிலும் - அடக்குமுறையைக் கோர நர்த்தன மாடச் செய்வதிலும்-துப்பாக்கிக் குண்டுகளை மழையாகப் பொழியச்செய்து, குருதி ஆற்றில் தமிழ் வாலிபர்களின் தேக்குமரத் தேகங்களை தெப்பம்போல் மிதக்கச் செய்வதிலும் பக்தவத்சலனார், எதற்கும் அசையாத மலைப்பாறைபோல இருந்தார் என்ற பாராட்டை, மத்திய அரசிடமிருந்து பெற்ற நேரமும் அந்த நேரம்தான்!

**“கொம்புத் தேனாம் தமிழ் மொழி எமக்கிருக்க...**
**கொட்டும் தேளாம் இந்தி மொழிக்கு எதற்காக**
**ஆதிக்கம்?”**

-எனக் கேட்டுத் தங்கள் பொன்னவிர் மேனியைத் தீக்குளத்தில் குளிப்பாட்டி உயிர்நீத்த தியாகச் செம்மல்கள் ‘உலகிற்கு தமிழர்களின் மொழிப்பற்றை முரசொலித்துக் காட்டிய வரலாற்றுப் புகழ்மிக்க நேர’ மன்றோ அந்த நேரம்!

தில்லையில் மாணவச் சீயம் இராசேந்திரன் சுட்டுக் கொல்லப் பட்டதும், மாணவமணி மாயூரம் சாரங்கபாணி தன்னை நெருப்பில் சுட்டுக் கொண்டதும் அந்த மொழிப் புரட்சியின்போதுதானே!

தீக்குளித்து மாண்ட தீரர்களின் கல்லறைகள் இருக்கும் திக்குநோக்கி வணங்குகிறோமே-அந்தத் தியாகிகளைக் களங்கப்படுத்தி அன்றைய ஆளவந்தார் பேசியதை நாடு மறந்திடுமோ?

இந்தி ஆதிக்கம் பரவிட எடுக்கப்பட்ட முயற்சிகளை எதிர்த்து அறிஞர் அண்ணா போர்க்குரல் கொடுத்தார்; ஏன் - தமிழகமே போர்க்கோலம் பூண்டது!

நமது வெறுப்பைக் காட்டி, 'அவரவர்கள் இல்லத்தில் கருப்புக் கொடி பறக்கட்டும்' எனக் கழகம் அறிவித்தது!

"தங்கள் சொந்த வீடுகளில் கருப்புக் கொடி பறக்க விடப்பட்டால் போதுமானது-பொது இடங்களில் தேவையில்லை" என்று அறிஞர் அண்ணா திட்டவட்டமாகத் தெரிவித்தார்!

அண்ணனின் ஆணைக்கேற்ப, உண்மைத் தமிழர்களின் இல்லங்களில் எல்லாம் உயர்ந்தது-கருப்புக்கொடி!

'உடல் மண்ணுக்கு-உயிர் தமிழுக்கு'-என்று உறுதி முழக்கம் செய்த உத்தமத் தமிழர்கள், தங்கள் வீட்டு முகப்புகளில் இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து ஏற்றினர்-கருப்புக் கொடி!

இந்த வெறியின்மீது தங்களுக்குள்ள வெறுப்பைக் காட்டிக்கொள்ள-தங்கள் சொந்த வீடுகளில் கருப்புக் கொடி கட்டிக் கொண்டதை, தமிழ் உணர்வு அற்ற கயவர்கள்-கொடியவர்கள்-இனத்துரோகிகள் எதிர்த்தனர்!

கருப்புக் கொடி பறந்த இல்லங்களில் களம் அமைத்தனர்-அதனை, அந்நாள் காவல் துறையினர் வேடிக்கை பார்த்தனர்!

அண்ணா வீட்டில் ஏற்றியிருந்த கருப்புக் கொடியை-கழகத் தலைவர்களின் இல்லங்கள், கழக அலுவலகங்கள் ஆகியவற்றில் ஏற்றியிருந்த கருப்புக் கொடிகளை-காவல் துறையின் துணையோடு - கயவர்கள் வீழ்த்தினர்!

சில இடங்களில், மோதல்-கலவரம்-அமளி!

கழகக் கண்மணிகள் ஆயிரம் ஆயிரமாகக் கைது செய்யப் பட்டனர்!

அரசியல் சட்டத்துக்குத் தீயிட்டு-தமிழகத்தின் இந்தி எதிர்ப்புக் குரலை எட்டுத்திக்கும் எதிரொலித்த அடலேறுகள், சிறைக்கோட்டத்தில் அடைபட்டுக் கிடந்தனர்!

பாதுகாப்புச் சட்டங்கள்-பாளையங்கோட்டைகள் - கழகத்தின் மீது பயங்கரப் பாய்ச்சல் நடத்தியதும் அப்போதுதான்!

குமுறும் எரிமலையாக-கொழுந்துவிட்டு எரியும் அனற் காடாகத் தமிழகம் காட்சியளித்தது-குளிர் பொழியும் 'கோவா' கடற்கரையாக அல்ல!

*"செந்தமிழ்க்குத் தீமை வந்த பின்னும்-இந்தத் தேகம்*
*இருந்தொரு லாபம் உண்டோ?"*

-என்ற எழுச்சிமிகு கேள்வி எங்கணும் கேட்டது!

**துப்பாக்கி ரவைகளை மலர்களாக ஏற்றுக் கொண்டு, மானங்காக்கும் சீமையினர், மரண மஞ்சத்தில் துயில் கொண்டனர்!**

**தீப்பிழம்புக்கும் - தென்றலுக்கும் வேறுபாடு தெரியாமல் கனலில் களிநடனம் ஆடி-'தமிழ் வாழ்க' என இசை பாடி சாவு மங்கையைத் தழுவினர் மறவர் குலச் சிங்கங்கள்!**

*"மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை-எமை*
*மாட்ட நினைக்கும் சிறைச்சாலை"*

-என்ற புரட்சிக் கீதம், தமிழர்களின் உதட்டில்-உள்ளத்தில் இடம் பிடித்துக் கொண்டது!

ஆகா! அந்தத் தமிழ் உணர்வை-எண்ணிக் கொண்டாலே, இனிக்கிறது நெஞ்சம்!

அந்த களத்தில் உயிர் நீத்தவர்க்கு நமது வீர வணக்கம்!

அடிபட்டோர் - அடக்குமுறைக்கு ஆட்பட்டோர் இன்று எங்கு இருப்பினும், அந்த தியாக சீலர்களின் திருக்கரங்களுக்கு நமது அன்பு முத்தம்!

அன்னை மொழிகாக்க ஆதிக்க இந்தியை எதிர்க்க-அன்று களம் சென்றார் காலடிகட்கு, நமது தலை தாழ்ந்த மரியாதை இந்நாளில் உரியதாகட்டும்!

அன்புள்ள,

**மு. க.**

26-01-1975

# 117. கண்ணின்மணி உறங்கும் கல்லறை நோக்கி...

**உடன்பிறப்பே,**

இன்று நடந்ததுபோல் இருக்கிறது-நமது அண்ணன் மறைந்து ஆறு ஆண்டுகள் ஓடிவிட்டன!

சென்னைக் கடற்கரையில் நீங்காத் துயில் கொள்ளும் அந்த உத்தமர்தான், உறங்கிக்கிடந்த தமிழர்களைத் தட்டி எழுப்பினார்!

மூத்த பிள்ளையானார்-பெரியாருக்கு!

அருமை அண்ணனார்-நமக்கு!

பொதுவாழ்வில், எதிர்ப்புக்கள்-ஏளனங்கள்-ஏசல்கள்-இழிமொழிகள் - பழியுரைகள் - என்பன போன்ற கணைகளால் தாக்கப்படுகிறவர்களுக்கு, அண்ணாவின் பொது வாழ்க்கை ஒரு பாடமாகும்!

அந்தக் கணைகளையெல்லாம் கனிவுடன் சந்தித்து, எதையும் தாங்கும் இதயம் பெற்றுத் திகழ்ந்தாரே-அந்த அண்ணன் வழிதான், அரசியல் நல்வழியாகும்!

எதிர்க்கட்சியின் ஈடு இணையற்ற தலைவராக விளங்கினார்; 'எடுத்தேன் - கவிழ்த்தேன்' என்று அவர் யாரையும் விமர்சித்ததில்லை!

கொடிய வார்த்தைகளைக் காங்கிரசார் அவர்மீது கூடை கூடையாகக் கொட்டிக் கொண்டிருந்தபோதும், அவர் காங்கிரசுத் தலைவர் காமராஜரைப் பார்த்து, 'குணாளா - குலக்கொழுந்தே' என்றுதான் பாராட்டு மொழி குவித்தார்!

பெரியாரின் சுடுசொற்களில் அவர் சுவைகண்டு மகிழ்ந்தாரே தவிர, சூறாவளியாக மாறிவிடவில்லை!

தீக்குண்டத்தில் தள்ளியவர்களுக்கும் தென்றலாக மாறிச் சுகமளிப்பதுதான் நம் அண்ணனின் இயல்பு!

கழகத்திற்குள்ளேயே துரோகம்! 'அண்ணனின் விரல் பிடித்து வளர்ந்தேன்' என்று மேடைக்கு மேடை முழங்கி-இறுதியில் அவரையே எதிர்த்து-மேடைக்கு மேடை, 'திருவாளர் அண்ணாதுரை' என்று அழைக்க முற்பட்டு-கட்சியைக் காட்டிக் கொடுக்கத் துணிந்த எட்டப்பர்கள் அப்போதே புறப்பட்டனர்!

அவர்களின் கட்சிக் கட்டுப்பாடற்ற போக்கை, அண்ணா எவ்வளவோ பொறுத்துக் கொண்டார்; ஏன்-பொறுமையின் எல்லைக் கோட்டிலேயே நின்றார்!

பொறுமைக்கும் அளவு உண்டு அல்லவா? 'கட்சிக்கே ஆபத்துவரக் காத்திருக்கிறது' என உணர்ந்ததும், அண்ணா துரோகிகளைத் தூக்கி எறிந்தார்!

ஓடிப்போனவர்கள் அந்த உத்தமனைத் தாக்கியது, அப்பப்பா - அளவிட முடியுமா?

கேட்போர் காதுகளைப் பொத்திக் கொண்டு கண்ணீர் பொழிகின்ற அளவுக்கு அவர்களின் நாவிலிருந்து புறப்பட்டன-நாராச மொழிகள்!

அண்ணன், அவைகளைத் தனது புன்னகையால் பொசுக்கித் தள்ளினாரே யொழிய, பொங்கும் எரிமலையாக மாறவில்லை!

அமைதி-அடக்கம்-பொறுமை-இவைகள், அவரது இயல்புகள்; ஆனால், தமிழர்தம் மொழிக்கு-உரிமைக்கு இன்னல் வருகிறதென்றால்-அந்த இன்னலைத் துடைக்கும் ஆற்றல் பெற்ற இயக்கத்திற்குச் சோதனை வருகிறதென்றால்-அப்போது நமது அண்ணன், அலைகடலென ஆர்த்தெழுவார்!

கடலை நான் உவமை காட்டுவதற்குக் காரணம், 'ஆர்த்தெழும் போதும், அலைகடல் போன்ற பரந்த உள்ளத்தோடு தான் பிரச்சினைகளை அவர் சந்திப்பார்' என்பதற்காகத்தான்!

அவரால் நன்மை பெற்றவர்கள், அடுத்து நாலாவது நாளே நன்றி மறந்து-அவரை எதிர்த்ததுண்டு!

அவர் அளித்த உணவை அருந்திவிட்டு-அந்தக் கை ஈரம் காய்வதற்குள்ளேயே அவர் கழுத்தை நெரிக்க முயன்றதுண்டு!

அவரால் உயரத்தில் தூக்கி வைக்கப்பட்டவர்கள், அங்கிருந்தவாறே காலால் அவரை உதைத்ததும் உண்டு!

அதையும் தாங்கிக் கொண்ட காரணத்தால்தான், அவர் அறிஞரானார்!

இரண்டாண்டுக் காலம் அரசுத் தலைமை; அதிலும் பல மாதங்கள் நோயுடன் போராட்டம்; அப்போதும் எதிரிகளின் தாக்குதல்; அவர் சிலையைச் சுற்றிக் கறுப்புத் துணி ஊர்வலம்; சட்டமன்றத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானம்; உலகத் தமிழ் மாநாட்டுக் கணக்கு; ஊழல் புகார்; இப்படி, ஆதாரமற்ற-அருவருக்கத்தக்க-ஆபாசமான நடவடிக்கைகள்!

கொடிய நோயின் வேதனையைத் தாங்கிக் கொண்ட அந்தப் பெரிய உள்ளம், இந்த வேதனையையும் தாங்கிக் கொண்டு அவையில் விடை அளித்த காட்சியை யார்தான் மறந்துவிட முடியும்!

அந்த அன்புத் தங்கம், அதோ உறங்கிக் கொண்டிருக்கிறது! நமது நெஞ்சத்து வைரம் நீடுதுயில் கொண்டிருக்கிறது! வா-அங்கு போவோம்!

**"அண்ணனே! நீ சந்தித்த எதிர்ப்புகள் அனைத்தையும் நாங்களும் சந்தித்துக் கொண்டிருக்கிறோம்; அவைகளைச் சமாளித்துச் சரணடையச் செய்ய, உன் பொது வாழ்க்கையையே நாங்கள் பாடமாகப்பெற்று பணியாற்றி வருகிறோம்; மேலும் பணியாற்ற-அதுவும் ஒற்றுமையுடன் பணி ஆற்ற-உடன்பிறப்புகளாகவே பணியாற்ற-இதோ உன் முன்னே சூளுரை மேற்கொள்கிறோம்."**

என்ற உறுதி ஏற்றிட, உடன்பிறப்பே-வா! நமது கண்ணின்மணி உறங்கும் கல்லறை நோக்கி வா!

அன்புள்ள,

**மு. க.**

02-02-1975

# 118. சினிமாப் பைத்தியம்; படமல்ல; பாடம்!

**உடன்பிறப்பே,**

கலை, சமுதாயத்தின் மேம்பாட்டுக்குப் பயன்பட வேண்டும்; கலையின் வாயிலாக மகத்தான சமூகப் புரட்சியை உருவாக்க வேண்டும்.

கலைத்துறையின் பல்வேறு வாயில்களான திரைப்பட மாயினும் - நாடகமாயினும் - இசையாயினும் - அவை மக்கள் வாழ்வுக்கு மாமருந்தாக அமையவேண்டுமே யல்லாது, வசீகரத்தால் வளைத்துப் பின்னர் மக்கள் மன்றத்தையே பண்பற்ற கூட்டமாக ஆக்கிவிடக்கூடாது!

இந்தக் கருத்தின் அடிப்படையிலேதான் நாமும்-நம்மை வளர்த்த நமது அண்ணனும் கலைத்துறையைக் கையாண்டு-தமிழ்ச் சமுதாயத்திற்குத் தொண்டாற்றி இருக்கிறோம்.

இந்தக் கருத்தில் கட்சி மாறுபாடுகளுக்கு இடமில்லாமல்-அறிவும் ஆற்றலும் படைத்த பலர், கலைத்துறையைப் பயன்படுத்திப் பெரும் வெற்றிகளை ஈட்டியிருக்கின்றனர்!

அரசியல் கொள்கைகளில் ஆயிரம் வேறுபாடுகள் இருந்தாலும், சமுதாய விழிப்புக்கும் - எழுச்சிக்கும் தேவையான கலைப் படைப்புக்களை அந்தத் திறமையாளர்கள், தங்கள் எழுத்தின் மூலமும் - தங்கள் நடிப்பின் மூலமும் - தங்கள் இயக்குவிக்கும் ஆற்றலின் மூலமும் நாட்டுக்கு வழங்கியிருக்கிறார்கள்; அவர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள் என்பதில் இரண்டுவிதக் கருத்துக்களுக்கே இடம் இல்லை!

கலையுலகில் இன்று அதிக ஆக்கம் பெற்றுத் திகழ்கின்ற துறை - திரைப்படத் துறை; அந்தத் துறை வளர வேண்டுமென்பதிலும் வலிமை மிக்க அந்தப் பிரச்சாரக் கருவியின் மூலம் நல்ல

கருத்துக்கள் நாட்டு மக்களின் உள்ளத்தில் பதிய வைக்கப்பட வேண்டுமென்பதிலும் நமக்கு வேறுபாடான எண்ணம் கிடையாது!

அவரவர்கள், தங்களின் சிந்தனைகளை - முறைப்படி - இந்தத் துறை மூலம் எடுத்துச் சொல்கின்ற சுதந்திரத்தை யாரும் பறித்திடக்கூடாது என்பதிலும் நமக்கு அழுத்தமான அபிப்பிராயம் உண்டு.

ஆனால், நிழற்படத்தில் வருவதை - நாடகத்தில் காட்டப் படுவதை ரசிக்கின்ற மக்களின் ஒரு பகுதியினர், கருத்துக்களைத் தேர்ந்தெடுத்துத் தெளிவடைவதற்குப் பதிலாகப் பொய்த் தோற்றங்களை உண்மையென்று கருதி வசமிழந்து போகி றார்களே-அதனால் சமூகத்தில் ஏற்படும் கேட்டினைக் களைந்திட வேண்டும்-அதுவும் உடனடியாக!

லாயிட்ஸ் சாலையில் நடைபெற்ற ஒரு நண்பர் வீட்டுத் திருமண விழாவில் அண்ணா அவர்கள் பேசும்போது, ஒன்றைக் குறிப்பிட்டார்:-

> "நடிகர்கள் மத்தாப்புப் போன்றவர்கள்; வண்ண வண்ண வெளிச்சம் தெரியும் - எரியும் போது! எரிந்து முடிந்து விட்டால், மத்தாப்பு, வெறுங் கரிக்கட்டையாகக் கீழே விழும்!"

அண்ணாவின் இந்த வாசகத்தின் உண்மைப் பொருளை உணராத மக்கள் இன்னும் இருக்கத்தான் செய்கிறார்கள்!

- ☐ **படத்தில் பாரி மன்னனாக நடிப்பவன் "வாழ்க்கையிலும் வாரி வழங்குவான்" என்று எதிர்பார்ப்பது...**
- ☐ **ஏசுநாதர் வேடம் போடுகிறவன், "தான் கொண்ட கொள்கைக்காகச் சிலுவையில் உயிர்விடவும் தயாராக இருப்பான்" என்று நம்புவது...**
- ☐ நாடகத்திலோ - திரைப்படத்திலோ மதுவிலக்கு வீரனாக வந்து ஊருக்கு உபதேசிப்பவன், "குடிக்கவே மாட்டான்" என்று கருதுவது...
- ☐ "பிற பெண்களைப் பார்ப்பதே பாபம்" என்று சினிமாவில் பேசுகிறவன், "பெண் பித்தனாக வாழ்க்கையில் இருக்கமாட்டான்" என்று கூறுவது...

☐ **நல்லவனாக வேடம் போட்டவன் எல்லாம், "நல்லவன் தான்" என்று ஏமாறுவது...**

இப்படியல்லவா இன்றையச் சினிமா, சீரழிக்கிறது சமுதாயத்தை!

கதையை ரசிப்பது-
கதாபாத்திரத்தை விமர்சிப்பது-
நடிப்பைப் புகழ்வது-

என்ற நிலைமாறி, படத்தில் நடித்தவர்களை தெய்வங்களாய்-தேவ தூதர்களாய் - புனிதர்களாய் - புண்ணிய மூர்த்திகளாய் கருதிக்கொண்டு - 'வில்லன் பாத்திரம் ஏற்றவர்கள், உண்மையிலேயே வாழ்க்கையிலும் அப்படித்தான் இருப்பார்கள்" என்று எண்ணிக் கொண்டு-"ஏதோ ஒரு புத்தகம் படித்தோம்" என்ற உணர்வோடு இல்லாமல், பண்பையே பாழாக்கிக் கொள்கின்ற கெடுநிலை, இன்று உருவாகியிருக்கிறது!

இந்தத் தீமை குறிப்பாகத் தாய்க்குலத்தில் அதிகமாகத் தொத்திக்கொண்டுவிட்டதைக் காணுகிறோம்.

இந்தத் தீமை களைய, இந்திமொழியில் ஒரு திரைப்படம் வெளிவந்தது.

அதனைத் தமிழாக்கம் செய்து, பீடுநடை எழுத்தாளர் நண்பர் பிரகாசம் அவர்கள், "சினிமாப் பைத்தியம்" என்ற எழுத்தோவியமாகத் தந்தார். அது நண்பர் ஏ.எல்.எஸ்.அவர்களின் அரிய திரைப்படத் தயாரிப்பாக வெளிவந்து வெற்றிகரமாகத் தமிழகத்தில் நடைபெறுகிறது.

கதையும் - தயாரிப்பும் - நடிப்பும் இயக்குநர் சீனிவாசனின் கைவண்ணமும், 'சினிமாப் பைத்தியத்'தின் வாயிலாகத் தமிழகத்தைச் சீர்படுத்த உதவும் என்று துணிந்து கூறலாம்.

படிப்பை மறக்கிறாள் ஒரு பாவை -
நடிப்பில் மயங்குகிறாள் -
பின்னர் நாசமாய்ப்போகிறாள்!
இன்னொருத்தி-அவளைப்போல இளஞ்சிட்டு -
நிழலாக வந்ததை எல்லாம் நிசமென நம்புகிறாள் -
திரைப்படத்தில் வந்தவனையே தன்
காதல் தெய்வமென்கிறாள் - பின்,
திருந்துகிறாள்!

அப்பப்பா! பெண்ணின் புனிதத்திற்கு எப்படிப்பட்ட அறைகூவல் - சினிமாவினால் விடப்படுகிறது!

"முள்ளை முள்ளால் எடுக்க வேண்டும்" என்பது போல், சினிமாவினால் ஏற்படும் சில பயங்கரக் கேடு களைச் சினிமாவின் மூலமாகவே அகற்ற முனைந்துள்ள அறிவுரைப் படம் இது!

உடன் பிறப்பே! நீ படம் பார்க்க வேண்டுமென் பதற்காக இதனை எழுதவில்லை; படத்தைப் பார்த்து - அதில் பெற்ற கருத்தினை மற்றவர்களுக்குச் சொல்லி தேவையற்ற "மாயை"யை அகற்றிடப் பணியாற்ற வேண்டும் என்பதற்காகத்தான்!

இல்லையேல், உழைப்பு - தியாகம் - அறிவு - ஆற்றல் - இவைகள் எல்லாம் உதாசீனப்படுத்தப்பட்டு-

போலிகள், சமுதாயத்தை அழிக்கும் புற்று நோய்க் கோளங்களாக முளைத்துவிடும்!

அன்புள்ள,

**மு. க.**

09-02-1975

# 119. அந்தச் சந்திப்பு!

**உடன்பிறப்பே,**

காஷ்மீரத்துச் சிங்கம் ஷேக் அப்துல்லா என்னைச் சந்தித்ததையும் - இருவரும் நீண்ட நேரம் உரையாடியதையும், நீ, ஏடுகளில் கண்டிருப்பாய்!

“மாநிலங்கள், மத்திய அரசின் ஏவல் பதுமைகளாக இருத்தலாகாது” என்பதில் திடமான கொள்கைகொண்ட ஒருவரைச் சந்திப்பதிலும், கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதிலும் நமது கழகத்தினருக்கு எவ்வளவு மகிழ்ச்சியும் - உற்சாகமும் இருக்குமென்று நாட்டுக்குத் தெரியும்.

அதுவும், கொண்ட கொள்கைக்காக இருபதாண்டுக் காலத்திற்கு மேலாக எத்தனையோ கஷ்ட நஷ்டங்களை ஏற்றுக் கொண்ட தியாகச் செம்மல் அவர்!

நட்பு - உறவு - தயவு - தாட்சண்யம் எதற்கும் தன் நெஞ்சத்தைச் சலனப்படுத்திக் கொள்ளாமல், உரிமைக்குக் குரல் கொடுத்து, இன்று வெற்றி வேங்கையாகத் தலை நிமிர்ந்து நிற்பவர்!

அவரைக் காண்பதும், பேசுவதும், எனக்கு ஒரு புத்துணர்ச்சியை அளித்தது - ‘காஷ்மீரத்தின் முதல்வராகப் போகின்றவரைச் சந்திக்கிறோம்’ என்ற பெருமையல்ல!

“இருக்கின்ற உரிமை போதும் - இந்தப் பதவி நிலைத்தால் சரி” என்று எண்ணிடாமல், இருபதாண்டுகளுக்கு மேலாகப் போர்க்களத்துப் புலியாகவே உலவிக்கொண்டிருந்த ஒரு வீர மனிதனைச் சந்திக்கிறோம்” என்ற பெருமைதான்!

அவர் சென்னையில் வந்து இறங்கியவுடனே,

**‘மாநில சுயாட்சி கேட்டால் கொடுக்க வேண்டியதுதான்’**

என்று செய்தியாளர் கூட்டத்தில் முழங்கியது.

**“வாராத மழை வந்ததுபோல்”**

இருந்தது.

**“மாநில சுயாட்சி கேட்பது பிரிவினையாகாது;**
**இந்தியாவின் ஒற்றுமைக்கு மாநில சுயாட்சி தேவை”**

என்பது போன்ற அவரது தெளிவான கருத்துக்களை இங்குள்ள சில ஏடுகள், மெல்லவும் முடியாத - விழுங்கவும் முடியாத நிலையில், எப்படியோ வெளியிட்டுள்ளதையும் நீ பார்த்திருப்பாய்!

வருங்கால இந்தியாவை வலிமைமிக்கதாக ஆக்கத் தேவையான மாநில சுயாட்சிக் கொள்கையை நாம் எடுத்து வைக்கும்போது, அதற்கு ஏற்படும் எதிர்ப்புக்கள் - கேலிகள் - கிண்டல்கள் - விஷமப் பிரச்சாரங்கள்-மாற்றார் தாக்குதல் - பத்திரிகைகள் இருட்டடிப்பு - ஆதிக்கத்தில் இருப்போரின் மிரட்டல்கள் - இத்தனையையும் நான், அப்துல்லாவிடம் எடுத்து விளக்கினேன்.

அவரும், இதுபோன்ற எதிர்ப்புகளைச் சமாளித்துத்தான் இன்று வெளிவந்திருக்கிறார் - என்பது நாடறிந்த உண்மையாயிற்றே!

“கொள்கைகள் வெற்றி பெற, மனஉறுதியும் - தியாக மனப் பான்மையும் தேவை” என்பதைத்தானே, ஷேக்கின் வரலாறு நமக்குக் காட்டுகிறது!

**“பதவியிலிருந்து கீழே இறங்கு; இல்லையேல்**
**பதவியைப் பிடுங்கிக்கொள்வோம்”**

என்றெல்லாம் இங்குள்ள எதிர்க்கட்சியினர் குரல் எழுப்பும் போது - நமக்குப் பதவி இருந்தாலும் இல்லாவிட்டாலும் - “அடைந்து தீரவேண்டிய இலட்சிய வெற்றிக்காக நாம் போர்க்களத்திலேதான் நிற்போம்” என்பதை மறந்து விட்டல்லவா பேசுகிறார்கள்?

இலட்சிய வெற்றிக்குப் பதவி ஒரு கருவியே தவிர, பதவியே இலட்சியமாகிவிட முடியாதே!

நமது இலட்சியத்தின் வெற்றிக்காகப் பதவியையும் நாம் பயன்படுத்தும்போது, ஆதிக்கச் சக்திகள் அதைத் தடுப்பதற்கு அடாத செயல்களில் ஈடுபடுமேயானால், ‘பதவியா - இலட்சியமா?’ என்ற இரண்டு கேள்விகளில் எதற்கு நாம் தலை வணங்கப் போகிறோம்?

பதவிக்கா - அல்ல, அல்ல; அது இன்று போனாலும், நாளை, நமது காலடியில் வந்து விழும்!

கொள்கைகளை விட்டுக் கொடுத்து விட்டுக்கூட அதனைப் பெற்றுவிட முடியும்!

"ஜெயிக்கிற பக்கம் எது?" என்று கணக்குப் போட்டுக் கொண்டிருக்கிற பச்சோந்திகள் - கொள்கையற்ற கோணங்கிகள் - தங்கள் துரோகத்திற்குப் பரிசாகக் கூடப் பதவிகளைப் பெற்றுவிட முடியும்; ஆனால், அந்தப் பதவிப் பெருமை காலத்தால் நிலைப்பதில்லை!

- **இராமாயணத்தில், இலங்கையை இராமன் விபீஷணனுக்கு வழங்கி - அவனை இலங்காதிபதி ஆக்கிய பிறகு-விபீஷணனின் ஆட்சிப் பெருமை கூறும் இலக்கியங்கள் உண்டா?**
- **கட்டபொம்மனைக் காட்டிக் கொடுத்து பட்டம் பதவியில் நிலைத்த எட்டப்பனுக்கு, வரலாறு வழங்கியுள்ள இடம் என்ன?**
- **திப்புசுல்தானின் பிணம், போர்க்களத்தில் எங்கேயோ ஒரு மூலையில் அனாதைப் பிணம் போலத்தான் கண்டெடுக்கப்பட்டது; ஆனால், திப்புவின் உள்ளத்தில் தீக்கொழுந்தாக எரிந்து கொண்டிருந்த அந்தக் கொள்கை, பிணமாகிவிடவில்லையே! அவன் வீர வரலாறு, உயிரோடு தானே நாட்டில் உலவுகிறது!**
- **பாரி மன்னனைக் கொன்ற மூன்று அரசர்களின் பெயர் தெரியாது! பாரியின் பெயர் தமிழோடு இணைந்து விட்டதே!**

உடன்பிறப்பே! வரலாறுகள் உணர்த்தும் பாடம் நமக்கு மிகத் தெளிவாக இருக்கிறது!

பதவிகள், பவிசுகள் வரும் - போகும்!

அமைச்சர்கள், 'முன்னாள் அமைச்சர்'களாகி விடுவார்கள்!

தியாகிகள், 'முன்னாள் தியாகி'கள் ஆவதில்லை!

**பதவி நிலைக்காது - தியாகம் நிலைக்கும்!**

தியாகத்தின் அடிப்படையில் - பதவிகளில் அமர்ந்தவர்கள் நாம்!

இந்தப் பதவியிலிருந்தவாறு நமது கழக இலட்சியத்தை அடைந்திட இயலாதெனில், பதவியைத் தியாகம் செய்யும் மனப்பக்குவம் படைத்தவர்கள் நாம்!

'எப்படியும் பதவியில் ஒட்டிக்கொண்டிருக்க வேண்டும்' என்ற 'அட்டையின் புத்தி' நமக்கு இல்லை!

ஜனநாயக ரீதியில் - நாடாளுமன்ற முறையில் - நமது இலட்சியங்களை வெற்றி பெறச் செய்ய வேண்டுமென்பதே நமது எண்ணம்! அதற்கான முழு முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொள்வோம்!

"அது போதாது; தியாகம் செய்யத் தயாராக வேண்டும்" என்ற நிலை பிறந்தால் தியாகம் செய்து பழக்கப்பட்ட நாம் - அந்தக் கட்டத்தையும் புன்னகையோடு வரவேற்கக் காத்திருக்கிறோம்!

காஷ்மீரத்து வீர மனிதரின் கம்பீரத் தோற்றம், தியாகத்தின் பெருமையைத்தான் எனக்கு உணர்த்தியது!

அவர்-பதவியில் அமரப்போகிறார்; டெல்லி - அவரிடம் தூது மேல் தூது அனுப்பி - பல கட்டங்களில் பேச்சுவார்த்தை நடத்தி- அவர் கேட்ட உரிமைகளில் பலவற்றை வழங்கி - அவருக்குக் காஷ்மீர் மாநிலத்துத் தலைமை மகுடத்தைச் சூட்டுகிறது!

கொடைக்கானலில் அவரைக் கொண்டுவந்து கைதியாக வைத்ததும் டெல்லிதான்! இன்று காஷ்மீரத்துக் கொலு மண்டபத்தில் அவரை உட்காரவைப்பதும் டெல்லிதான்!

கடந்த இருபதாண்டுகளும் - அப்துல்லா நினைத்திருந்தால் - அவரே காஷ்மீர் அதிபராக இருந்திருக்கலாம்!

'கொற்றவன்' என்ற விருது பெரிதா - 'கொள்கை வீரன்' என்ற புகழ் பெரிதா? - அதில் அவர், கொள்கைக்கே முதலிடம் கொடுத்தார்!

**இலட்சியப் பயணத்தில்-கொள்கைப்போரில் - எண்ணியது முழுவதும் உடனே கிடைத்து விடுவ தில்லை!**

**'கிடைத்தது போதும்' என்று - இலட்சியப் போரும் நின்றுவிடுவதில்லை!**

"துணிவுடன் தெளிவுடன் - அவசரப்படாமல் பொறுமை உணர்வுடன் - தியாகங்களுக்குத் தயாராக அயராது உழைத்துக் கொண்டே இருந்தால் படிப்படியாக இலட்சியங்கள் வெற்றி பெறும்" என்பதைத்தான் - ஷேக் அப்துல்லாவின் சந்திப்பு மேலும் உறுதிப்படுத்துகிறது!

அன்புள்ள,

மு. க.

15-02-1975

# 120. நடந்தாய் வாழி காவேரி!

**உடன்பிறப்பே,**

**“மருங்குவண்டு சிறந்து ஆர்ப்ப மணிப்பூ ஆடை**
**– அதுபோர்த்துக் கருங்கயல் கண் விழித்து ஒல்கி**
**நடந்தாய் வாழி காவேரி”**

கொஞ்சு தமிழ்க் குலுங்குகின்ற சிலம்பு இசைக்கின்ற கானல் வரிப்பாடலில், காவிரியின் சிறப்பை இவ்வாறு ஓவியமாகத் தீட்டிக் காட்டுகிறார் – இளங்கோவடிகள்!

பல நூற்றாண்டுக்காலமாகத் தமிழகத்து வளம் பெருக்கி தமிழ் மக்களின் அன்புக்குரிய தாயாகத் திகழும் காவிரியைத் திசை திருப்பி – அந்த அன்னையின் கருணைக்கரம் தமிழ் மக்களை அரவணைக்க இயலாமற் செய்யும் ஒரு கொடுமையான முயற்சியை, கருநாடக அரசினர் தீவிரமாகச் செய்து வருகின்றனர்!

காட்டாறுபோல் கட்டுமீறிப் பாய்ந்துகொண்டிருந்த காவிரிக்குக் கரை எழுப்பியவர்களும், கல்லணை அமைத்துப் பாசனத்திற்கு ஏற்ப ஒழுங்குபடுத்தியவர்களும் சோழ மன்னர்களாவர்.

பூம்புகார்ச் சோழன் கரிகால் வளவனின் புகழ் மகுடத்தில் புதியதோர் கொற்கை முத்தாக ஒளிவிடுவதுதான் கல்லணை கட்டிய வரலாறாகும்!

கருநாடகத்தில் குடகுப் பகுதியில் தோன்றிய காவிரி தமிழகத் தையே தன் புகுந்த வீடாக ஆக்கிக்கொண்டாள்! அதற்கென, அவள் பிறந்த வீடாம் கருநாடகம், பாழ்பட்டுவிட வேண்டுமென்று நாம் கூறவில்லை!

உலகத்துப் பல்வேறு நாடுகளிலும் நதி நீர்ப் பிரச்சினையில், ‘ஏற்கனவே பரம்பரையாக அனுபவித்து வருகின்ற பாசனப் பாத்தியதைகளைப் புறக்கணிக்கக்கூடாது’ என்பதுதான் அடிப்படைக் கொள்கையாக ஏற்கப்பட்டுள்ளது!

அதற்கு மாறான ஒரு நடவடிக்கையில் இன்று கருநாடக அரசு ஈடுபடுவதும், அதனைப் பார்த்துக்கொண்டு மத்திய அரசு மௌனமாக இருப்பதும், வேதனை தரத்தக்க நிலையாகும்!

1971-ஆம் ஆண்டிலேயே தமிழகச் சட்டப் பேரவையில் கீழ்க்கண்ட தீர்மானத்தை நாம் நிறைவேற்றி, மத்திய அரசுக்கு நாம் அனுப்பி வைத்தோம்:

"தமிழ்நாடு - மைசூர் அரசுகளுக்கிடையே 1892 - 1924 ஆம் ஆண்டுகளில் கையெழுத்தான ஒப்பந்தத்தின் விதிகள் அனைத்தையும் மீறி, மைசூரில் ஹேமாவதி, கபினி, ஹேரங்கி, சொர்ணவதி அணைத் திட்டங்களையும், வேறு சில முக்கிய அணைத்திட்டங்களையும், அவைகளுக்கான திட்ட விவரங்களைப் பற்றியும் தமிழ்நாடு அரசுக்கு மைசூர் அரசு முறைப்படி முன்னதாக அறிவித்து, தமிழ்நாடு அரசின் முன் ஒப்புதல் பெறாமலும் - இந்திய அரசின் அனுமதியை முன்கூட்டியே பெற்றுக் கொள்ளாமலும் - இதனால் இந்திய ஒருமைப்பாட்டுக்கு ஊறு நேரிடுவது பற்றிப் பொருட்படுத்தாமலும் - தன் போக்கில் நிறைவேற்றி வருவது குறித்து இப்பேரவை தனது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துக் கொள்கிறது.

"காவேரி ஆற்றின் கீழ்ப்பகுதிகளில் உள்ள உழவர் பெரு மக்களின் பாசன உரிமைகளுக்கு ஏற்பட்டுள்ள பேராபத்தைக் கருதி, 1956-ஆம் ஆண்டு மாநிலங்களுக்கிடையிலான நீர்த் தேக்கங்கள் தகராறுகள் சட்டத்தின் கீழ்முறையாக அமைக்கப்பட்ட நடுவர் மன்றம் ஒன்றிற்குக் காவிரி நீர்த் தகராறைத் தீர்ப்புக்கு விடுமாறு தமிழ்நாடு அரசு 1970 பிப்ரவரித் திங்களிலேயே இந்திய அரசைக் கேட்டுக்கொண்டிருந்தும்கூடத் தமிழ்நாட்டிற்குத் தொன்றுதொட்டு ஏற்பட்டுவந்துள்ள பரம்பரைப் பாசன உரிமைகள் பாதிக்கப்படும் வகையில் இந்திய அரசு தமிழ்நாட்டின் வாழ்வுக்கு மிகவும் இன்றியமையாத இப் பிரச்சினை குறித்து உறுதியான நடவடிக்கை எடுக்காமல் அளவு கடந்து கால தாமதம் செய்துவருவதைக் கண்டு இம்மன்றம் தனது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

"இதில் இந்திய அரசு மேலும் காலம் தாழ்த்தினால், மைசூர் அரசு தனது திட்டங்களை விரைவுபடுத்தி - அவற்றைக் கட்டிமுடிக்கும் விரும்பத்தகாத விபரீத நிலை உருவாவதற்கே அது வழிகோலுமென்றும், அதனால், பன்னெடுங்காலமாகத் தமிழ்நாடு

அனுபவித்து வந்த பாசன உரிமைகள் பறிபோய்விடும் என்றும் இப்பேரவை பெரிதும் அஞ்சுகிறது.

“வேதனைமிக்க இத்தகைய சூழ்நிலையில், இந்திய அரசு 1956-ஆம் ஆண்டு மாநிலங்களுக்கிடையேயான நீர்த் தகராறுகள் சட்டத்தின்கீழ் நடுவர் மன்றம் ஒன்றை அமைத்து - இத்தகராறு களுக்குத் தொடர்புள்ள தரப்பினர் அனைவருடைய நலன்களையும் கருதித் தமிழக அரசு ஏற்கனவே கேட்டுக் கொண்டுள்ளபடி - காவிரி நீர்த் தகராறை இம்மன்றத்தின் தீர்ப்புக்குவிட்டு நியாயம் வழங்குமாறும், நடுவர்மன்றம் இத்தகராறு குறித்து ஆய்ந்து முடிவு செய்து தனது தீர்ப்பை அளிக்கும்வரையில் மைசூர் அரசு தன் போக்கில் திட்டங்களைத் தொடர்ந்து நிறைவேற்றக் கூடாதென அதற்குக் கட்டளையிடுமாறும் இந்திய அரசை இப்பேரவை வலியுறுத்துகிறது.”

இந்தத் தீர்மானத்தின் உணர்வுகளுக்கு உரிய மதிப்பு அளிக்கப் படவில்லை என்பதைத் தமிழ்நாடு எண்ணி வருந்தியது!

உச்ச நீதிமன்றத்துக்கு நமது வழக்கை எடுத்துச் சென்றோம்.

“பேசித் தீர்த்துக்கொள்ளலாம் - வழக்கை ஒத்தி வையுங்கள்” என்று மத்திய அரசு கூறியதற்கும் இணங்கினோம்!

பேசினோம் - பேசினோம் - பலமுறை பேசினோம்; இதனை அரசு மட்டும் அணுகுகின்ற பிரச்சினையாகக் கருதாமல், தமிழ் நாட்டு மக்களின் உரிமைக் குரலாகக் கருத வேண்டுமென்று விளக்கினோம்!

தமிழகத்திலுள்ள அனைத்துக் கட்சியினரும், இந்தப் பிரச்சினையில், ஒரே அணியில் நிற்கிறோம்!

“காவிரியின் பயன் அனைத்தும், எமக்கே வேண்டும்” என்று வல்லடி வழக்காடவில்லை - நாம்! ‘கருநாடகமும் பயன் பெறட்டும்’ என்பதில் கருத்து வேறுபாடும் இல்லை!

ஆனால், ஏற்கனவேயுள்ள தமிழகத்தின் பழைய ஆயக் கட்டுகளைப் பாழ் நிலமாக்கிவிடக்கூடிய நிலையில் எந்த ஒப்பந்தத் திற்கும் நாம் தயாராக இல்லை!

கருநாடகம், புதிதாக ஆயக்கட்டுக்களை உருவாக்குமாம்; சரி - உருவாகட்டும்; அதற்காக நாம், ‘காவிரி நீரில் ஓரளவு குறைத்துக்கொள்ள வேண்டு’மாம்!

அதுவும் சரி - இணங்குகிறோம்; ஆனால், வளமான மழை ஆண்டுகளில் வரும் அதிகத் தண்ணீரை கருநாடகம் தான் அதிக அளவுக்கு எடுத்துக்கொள்ளுமாம்!

மழையற்ற வறண்ட ஆண்டுகளில் நமக்கு இதுவரை 1924 - ஆம் ஆண்டு ஒப்பந்தப்படி - கிடைத்து வருகின்ற தண்ணீரின் அளவையும் குறைப்பதற்கு நாம் ஒத்துக் கொள்ள வேண்டுமாம்!

இந்தத் தற்கொலை முயற்சிக்குத் தமிழ்நாடு முன்வர வேண்டுமாம்!

தமிழ்நாட்டு மக்கள் இதற்கு இணங்கவில்லை. அவர்கள் முதற் கட்டமாக - மத்திய அரசிடம் நியாயம் கேட்கும் அறப் போராட்டத்தை அமைதியாகத் துவக்கியிருக்கிறார்கள்!

ஒரே அணியில் நின்று தமிழகம் முழங்குகிறது! உரிமைக்காக முழங்குகிறது!

*“உழுவர் ஓதை, மதகு ஓதை*
*உடைநீர் ஓதை தண்பகங்கொள்*
*விழுவர் ஓதை சிறந்து ஆர்ப்ப*
*நடந்தாய் வாழி காவேரி!*
*விழுவர் ஓதை சிறந்து ஆர்ப்ப*
*நடந்த எல்லாம் வாய்காவா*
*மழுவர் ஓதை வளவன் - தன்*
*வளனே; வாழி, காவேரி!”*

சிந்தை அணு ஒவ்வொன்றையும் சிலிர்க்கச் செய்யும் சிலப்பதிகாரப் பாடலிசைத்துச் செந்தமிழ்த் திருநாடு முழங்குகிறது!

அன்புள்ள,

**மு. க.**

22-02-1975

# 121. ஒன்பதாம் ஆண்டு!

**உடன்பிறப்பே,**

கழக அரசு, ஒன்பதாம் ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது!

ஆருயிர் அண்ணன் தலைமையில், 1967 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் இந்த அரசு உருவானபோது இதற்கான ஜாதகங்களை அரசியல் ஆருடக்காரர்களும் ஆதிக்கபுரி ஜோசியர்களும் ஆராயத் தொடங்கி, "ஆறுமாத காலத்திற்குள்ளாக அற்ப ஆயுளில் கவிழ்ந்து விடும்" என்றெல்லாம் பிரகடனம் செய்தார்கள். "நாட்கள் எண்ணப்படுகின்றன" என்று சட்ட சபையில் காங்கிரசார் பேசிய போது, "என் அடிகள் அளந்து வைக்கப்படுகின்றன," என அண்ணா விடையளித்தார்.

"அண்ணாத்துரையிடம் போலீசார் இருக்கிறார்கள்; வடக்கே டெல்லியில் இராணுவம் இருக்கிறது; ஆகவே எச்சரிக்கை" என்று திரு. காமராஜர் அவர்களைப் போன்றவர்களே அன்றைக்குக் கழக அரசை மிரட்டினார்கள்!

"தேன் நிலவு முடிந்துவிட்டது" என்று மூதறிஞர் இராஜாஜி அவர்கள் கூறி, மெல்ல மெல்ல சுதந்திரக் கட்சியின் உறவை முறித்துக்கொள்ளத் தொடங்கினார்!

கீழ் வெண்மணிக் கொடுமை-மாணவர் - பஸ் தொழிலாளர் போராட்டம் - மாணவர் நடத்திய இந்தி எதிர்ப்புப் போராட்டம் இவைகளையெல்லாம் திசை திருப்பிப் பிரச்சாரம் செய்து அண்ணாவின் அரசைக் கீழே சாய்த்துவிட முயன்று தோற்றார்கள்!

பின்னர் மிகச்சுலபமான பிரச்சாரக் கருவியான 'ஊழல்' ஊதுகுழலை உதட்டில் பொருத்திக்கொண்டு, ஏடுகளில் மேடைகளில் - ஏன் - சட்டசபையில் கூட முழங்கினார்கள்! ஆதார மற்ற அந்தக் குற்றச்சாட்டுகள் - புகார்கள், அறிஞர் அண்ணாவின் விளக்கங்களுக்கு முன்னே தவிடுபொடியாகித் தகர்ந்தன!

தமிழகத்தில் மட்டுமின்றி, இந்தியாவில் மேற்கு வங்கம், ஒரிசா, பஞ்சாப், கேரளம் போன்ற பல மாநிலங்களில் அமைந்துள்ள எதிர்க்கட்சிகளின் அரசுகள் நிலையானவைகளாக விளங்க வேண்டு மென்பதிலும் அண்ணா காட்டிய அக்கறை கொஞ்சமல்ல!

அந்த மாநில முதலமைச்சர்களைச் சந்திக்கும் போதெல்லாம், அண்ணா அதைத்தான் கூறுவார்-

**“இந்தியாவில் உள்ள எல்லா மாநிலங்களையும், மத்திய அரசையும் ஆட்சி புரிவதற்குக் காங்கிரசுக் கட்சி ஒன்றுதான் ஏக போக உரிமை பெற்றிருக்கிறது என்று கூறப்பட்ட வாதத்தை இந்தப் பொதுத் தேர்தல் உடைத்துக் காட்டியிருக்கிறது; ‘எதிர்க்கட்சிகளும் ஆட்சி நடத்தலாம்’ என மக்கள் தீர்ப்பு வழங்கியிருக் கிறார்கள்; இந்தத் தீர்ப்புக்கு மதிப்பு வழங்கும் வகையில், நாம், நமது மாநிலங்களில் நிலையான ஆட்சியைத் தந்தாக வேண்டும்.”**

அண்ணாவின் இந்தக் கருத்துக்குத் தலையசைத்து ஒப்புதல் தெரிவித்த மாநில முதல்வர்கள், எத்தனையோ காரணங்களால் தங்கள் மாநிலத்தில் நிலையான ஆட்சி தரமுடியவில்லை!

அதற்கு மாறாக, 1967-இல் உருவான நமது கழக ஆட்சி, அண்ணாவின் மறைவுக்குப் பிறகும் 1971 வரையில் நிலை குலை யாமல் நீடித்து அடுத்து நடந்த பொதுத் தேர்தலிலும் மகத்தான வெற்றி பெற்று ‘138’ என்றிருந்த சட்டப் பேரவை உறுப்பினர்களின் எண்ணிக்கையை ‘184’ என்று உயர்த்திக்கொண்டது!

இந்தியாவிலேயே ஓர் எதிர்க்கட்சி ஆட்சி - அதுவும் ஒரு மாநிலக் கட்சியின் ஆட்சி - நிலையாக எட்டு ஆண்டுகளைக் கடந்து நடைபெற்றுக் கொண்டிருப்பதும், இரண்டு பொதுத் தேர்தல்களில் தொடர்ந்து மிகப்பெரும்பான்மை பெற்றிருப்பதும் தமிழகத்திலேதான் என்பதை, அரசியல் தெளிவு படைத்த உள்நாட்டுக்காரர்களும், வெளிநாட்டுக்காரர்களும் உணர்ந்து பாராட்டத்தான் செய்கிறார்கள்!

1971ஆம் ஆண்டில், காமராஜரும் இராஜாஜியும் சேர்ந்து நின்று முழு வலிவோடு நம்மை எதிர்த்தபோது, நமக்குப் பெருந்தோல்வி காத்துக்கொண்டிருப்பதாகத்தான் இங்குள்ள பத்திரிகைக் கோட்டைகள் செய்தி முரசு கொட்டின!

வெளி மாநிலங்களுக்கும் - வெளிநாட்டுக்கும் நமது மாநிலத்தில் பத்திரிகை நிருபர்களாகப் பணிபுரியும் நண்பர்கள், அவர்களுக்குத் தொடர்புடைய வெளிப்புறத்து ஏடுகளுக்குத் தந்த செய்தி விளக்கங்களில், 'கழகம் கடுகினும் சிறிதாக இளைத்து விட்டது' என்றே எழுதி அனுப்பினர்!

ஆயிரக் கணக்கான மைல்களுக்கு அப்பால் ஏடு நடத்துவோர் அதனை மெய்யெனக் கண்டு வெளியிட்டு - பின்னர் ஏமாந்தனர்!

நன்றிப் பெருக்குடனும் - நட்புறவுடனும்-கொள்கைத் தெளிவுடனும் - தோழமைக் கட்சிகளாக விளங்கும் தி. மு. க., முஸ்லிம் லீக், தமிழரசுக் கழகம், பார்வார்டு பிளாக், தோழமை அணிக்கு, மக்கள், தங்கள் ஆதரவை அள்ளி வழங்கினர்!

அண்ணனால் 'இரட்டைக் குழல் துப்பாக்கி' என்று வர்ணிக்கப் பட்ட திராவிடர் கழகத்தின் துணையும் நம் பக்கம் - இன்று போல் அன்றும் இருந்தது! எத்தகைய சாதனைகள் புரிய ஆட்சியில் அமர வேண்டுமென்று அண்ணா அறிவித்தாரோ - அவைகளைத் திறம்படச் செய்து முடித்திருக்கிறோம்!

இயற்கையின் சீற்றம் தமிழகத்தை இரண்டு மூன்றுமுறைகள் அவதிக்கு உள்ளாக்கியபோதும் - உலகெங்கும் எழுந்துள்ள பொருளாதாரப் பிரச்சினை இந்தியாவைப் பெரும் அளவுக்குப் பாதித்து அதற்குத் தீர்வுகாண இந்திய அரசு தீவிர முயற்சிகளை மேற்கொள்ளாமல் - அதன் விளைவுகளுக்கும் தாக்குப் பிடித்துத் தமிழக ஆட்சியை நடத்தி வருகிறோம்!

கழுத்தறுப்போர் - காட்டிக் கொடுப்போர்-நயவஞ்சகர் - இவர்களின் துரோகச் சேட்டைகளால் கழக அரசு கவிழ்ந்து விடுமென்று அதற்கான நாட்களை விரல்விட்டு எண்ணிக் கொண்டிருந்தவர்கள், எல்லாம் அந்த விரலை மூக்கிலே வைத்துக் கொண்டு வியப்புறும் வண்ணம், கழக அரசு தொடர்ந்து நடந்து - எட்டப்பர்களைவென்று - எட்டாம் ஆண்டைக் கடந்திருகிறது!

இந்த எட்டு ஆண்டுகளில்தான், சென்னை ராஜ்யம் 'தமிழ் நாடு' என மணக்கும் பெயர் பெற்றது!

சுயமரியாதைத் திருமணம் - சட்டச் சம்மதம் பெற்றது!

இந்தி மொழி ஆதிக்கம் - அகற்றப்பட்டது!

விதிவிலக்குகள் நீக்கப்பட்டு - நில உச்ச வரம்பு, '15 ஸ்டாண்டர்டு ஏக்கர்' என ஆயிற்று!

பேருந்துகள் - தேசியமயத் திட்டம்!

புகுமுக வகுப்பு வரையில் இலவசக் கல்வி!

தாழ்த்தப்பட்டோருக்கு இலவச வீட்டு வசதி!

குடிசை மாற்று வாரியம்!

குடிநீர் வடிகால் வாரியம்!

அரசு ஊழியர் குடும்பப் பாதுகாப்புத் திட்டம்!

பொது மக்களும் இணைந்திடும் சமூகப் பாதுகாப்புத் திட்டம்!

இலட்சக்கணக்கான ஏழை எளியோருக்கு வீட்டு மனை, விவசாய நிலப் பட்டாக்கள்!

எங்கும் மின்னொளி!

ஏழைக்குக் கண்ணொளி!

தொழுநோய் இரவலர்க்கு மறுவாழ்வு!

ஊனமுற்றோருக்குப் புதுவாழ்வு!

கை ரிக்ஷா ஒழிப்பு - இலவச சைக்கிள் ரிக்ஷா அன்பளிப்பு!

விவசாயத் தொழிலாளருக்குக் குடியிருப்பு மனைச் சட்டம்!

பூம்புகார்!

கட்டபொம்மன் கோட்டை!

வள்ளுவர் கோட்டம்!

என் அன்பு உடன்பிறப்பே! எழுதத்தான் நேரமுமில்லை- இடமும் இல்லை! அவ்வளவு காரியங்கள்!

இனியும், தேவையான திட்டங்களைத் தயக்கமின்றித் தீட்டி நிறைவேற்றத்தான், அண்ணன் நமக்குக் கோடிட்டுக் காட்டிய மாநில சுயாட்சியைப் பெற உரிமைக்குரல் கொடுக்கிறோம்!

ஒன்பதாம் ஆண்டில் அந்த உறுதியுடன் தான் கழக ஆட்சி அடியெடுத்து வைக்கிறது!

"நமது உரிமைக்குரல் வெற்றி பெற எந்த வகைத் தியாகத் துக்கும் தயாராக இருப்போம்" என்ற துணிவுடனும் தெளிவுடனும் - அண்ணன் பாதம் தொட்டு வணங்கி - நம் பயணத்தைத் தொடருவோம்!

அன்புள்ள,

மு. க.

03-03-1975

# 122. தேன் துளிகள்!

**உடன்பிறப்பே,**

எதிலும் குறை காண முடியாதவர்கள் - சொல்லப் போனால், தனியாக நாலு பேரோடு உட்கார்ந்து பேசும்போது நம்மை மனதாரப் பாராட்டுகிறவர்கள், ஏதாவது ஒன்றைச் சொல்லி தங்கள் கட்சிக்கான அரசியல் ஆதாயத்தைத் தேடிக்கொள்ள வேண்டுமென்ற சிறிய-மிகக் குறுகிய வட்டத்துக்குள் நின்றுகொண்டு நமது கழக ஆட்சியைத் தாக்குவதற்குக் கூர்மழுங்கிக் கிடக்கும் ஆயுதங்களைக் கையில் தூக்கிக்கொண்டு சுழற்றிய வண்ணம் இருப்பதை நீயும்-நானும் நன்றாக உணருகிறோம்; நாடும், அதனைப் பெரும் அளவுக்குப் புரிந்துகொண்டுதான் இருக்கிறது!

இந்தியத் திருநாட்டின் பல்வேறு மாநிலங்களில், இந்திரா காங்கிரசின் கொற்றக்குடை நிழல் விழுந்து கொண்டிருக்கும்போது, தமிழ்நாட்டில் மட்டும்-அண்ணாவின் அடிச்சுவட்டில்-இலட்சியப் பயணம் நடத்தும் ஒரு மாநிலக்கட்சியின் ஆட்சி நிலைத்து நீடித்திருப்பது, சாம்ராஜ்யங்கள் பலவற்றின் புதைகுழியாக விளங்கும் டெல்லிப்பட்டினத்துக்குப் பொறுக்கவில்லை; அதனால்தான், அங்குள்ள ஆதிக்க நெஞ்சங்கள் சிலவற்றில் எரிமலைக் குழம்பு வெளிப்படுகிறது!

எந்த மாநிலத்திலிருந்து யார் சென்று டெல்லியிலே 'மந்திரி மகுடம்' சூட்டிக் கொண்டாலும், உடனடியாக அவர்களின் பேச்சும் போக்கும் மாறிவிடும் என்று பலர் சொல்லக் கேட்டிருக்கிறேன்; சில உதாரணங்களையும் அனுபவ ரீதியாகக் கண்டிருக்கிறேன்.

'எல்லோருமே அப்படியல்ல' என்பதற்கும் ஒன்றிரண்டு எடுத்துக்காட்டுக்கள் மத்திய அமைச்சரவையிலே உண்டு என்பதையும் நான் கூறித்தான் ஆகவேண்டும்.

ஆனால், தமிழகத்திலிருந்து நமது பேராதரவைப் பெற்று டெல்லி சென்று - அமைச்சர்களான இருவரைப் பற்றி எண்ணி

வருந்தாமல் இருக்க முடியவில்லை! மறைந்த மோகன்குமார மங்கலத்தைப் பற்றி நான் இப்போது விமர்சிப்பது நாகரிகமுமாகாது-நமது பண்பும் அல்ல!

கிருஷ்ணகிரியில் நின்றவரை இமயகிரியில் ஏற்றிவைத்து விட்டு, "நான் அப்போதே சொன்னேனே-கேட்டீர்களா?" என்று அனந்தநாயகி போன்றவர்கள் இன்று சுட்டிக்காட்டி நம்மைக் கேலி பேசுகின்ற நிலையைத் தாங்கிக்கொள்ளவும் ஆளாகி விட்டோம்!

ஆம்; நமது சுப்பிரமணியம் அவர்கள்-'நமது' என்று உரிமை யோடும், உணர்வோடும்தான் சொல்ல வருகிறது மத்திய அரசில் நிதி அமைச்சர் பொறுப்பை ஏற்றார் என்ற செய்தி கேட்டதும் மகிழ்ந்தோம்-வாழ்த்தினோம்!

தமிழக அரசின் சமூகப் பாதுகாப்புத் திட்டத்தையே அவர்தான் வந்து தொடங்கி வைத்திடவேண்டுமென்று விரும்பினோம்!

"மாநிலத்துக்குப் பல மேம்பாடுகளை உருவாக்குவார்!" என்று எதிர்பார்த்தோம்!

"தொடங்கப்பட்டு-தொடராமல் முடங்கிக்கிடக்கும் சேலம் இரும்புத் தொழிற்சாலை எழுந்து நடமாடும்" என்றும், "நெய் வேலியில் இரண்டாவது சுரங்க வேலைகள் ஆரம்பமாகும்" என்றும் "குமரி மாவட்ட புகை வண்டிப் பாதையின் பணிகள்-விழா அளவோடு நின்று விடாமல் வேகமாக நடைபெறும்" என்றும், "சேது சமுத்திரத் திட்டம்கூட வந்துவிடும்" என்றும் நம்பிக் கிடந்தோம்!

மற்ற மாநிலங்களின் நலன்களைப் புறக்கணித்துவிட்டு, நமக்கே எல்லாம் செய்திட வேண்டுமென்ற தன்னலம் தலை தூக்கியதில்லை நம்மிடையே!

வளர்ச்சித் திட்டங்கள் வரிசையாக நிறைவேற்றத்தான் நேரமும் நினைப்பும் இல்லை - திருவாளர் சுப்பிரமணியத்துக்கு என்றால், வறட்சியால் தமிழகம் வாடும் போதாவது கருணைக் கண்கொண்டு-நன்றி உணர்வோடு-அரசியல் மாறுபாட்டுக்கு அப்பாற்பட்டு-மக்களின் வேதனையைத் தீர்க்கும் மனப்பக்குவத்தை அவர் பெற்று இருக்கக் கூடாதா?

நம்மைக் கடுமையாக எதிர்க்கின்ற காமராஜர்கூட 'வறட்சிப் பிரச்சினையிலே அரசியலைக் கலக்கக்கூடாது' என்று நீண்ட நாட்களாகக் கூறி வருகிறார்!

ஆனால், மிகப் பொறுப்பான நிதித்துறையின் அமைச்சர் பெருமகனார், மாநில அரசுகளை-அடிமைகளைவிடக் கீழான அளவில் மதிப்பிடு செய்துகொண்டு-அதிலும் குறிப்பாகத் தமிழ் மாநில அரசு குறித்துத் தனது மனக்காழ்ப்பை வெளிப்படுத்தி யிருப்பது அவர் 'எல்லாவற்றையும் அரசியலாக்கி அதில் இலாபம் தேடப்பார்க்கிறார்' என்பதையே காட்டுகிறது!

சென்னை தியாகராய நகரில் அவர் ஆற்றிய உரையை அனைத்திந்தியாவிலும் யாரும் 'சரி' என்று ஏற்றுக் கொள்ள வில்லை! அவரது கட்சியினரேகூட, அவருக்கு நேராக ஒப்புக்காகத் தலையசைத்துவிட்டு 'உள்ளுக்குள் நொந்து கொள்கிறார்கள்' என்பதுதான் உண்மை!

வறட்சி நிதிமட்டுமல்ல-எந்த நிதியாயினும், நாம், கணக்குக் காட்ட மறுத்திடவில்லை; அதிலே நமது உரிமைகளைக்கூட வலியுறுத்திட விரும்பவில்லை; ஆனால் எதற்கும் ஒரு வழிமுறை இருக்கிறது; அந்த முறையை அலட்சியப்படுத்திவிட்டு, தமிழகத்துக் கழக அரசின்மீது களங்கம் பூசிடும் தோரணையில் அவர், தமது மேடைப் பேச்சை அமைத்துக் கொண்டதுதான் கண்டிக்கத்தக்க ஒன்றாகிவிட்டது!

'ரொம்பக் கோபித்துக் கொண்டு விட்டாயாமே! வர வேண்டிய வறட்சி நிதி வராவிட்டால் என்ன செய்வது?'

என்று உனக்குக்கூடக் கேட்கத் தோன்றும்; நான் அதற்கான விளக்கங்களைச் சட்டப்பேரவையில் அளித்திருக்கிறேன்; படித்திருப்பாய் என்று நம்புகிறேன்.

1969-லும், 1972-லும் மத்திய அரசு அளித்த வறட்சி-வெள்ள நிவாரண நிதிகளில், முக்கால் பங்குக்கு ஒப்ப, கடனாக நாம் அவர்களுக்குத் திருப்பித் தருகிறோம்; அதிலும், இப்போது தந்துள்ள சுமார் ஆறு கோடியானாலும்-இனிமேல் மத்திய அரசு வறட்சிக்காக ஏதாவது நிதி தருவதாக இருந்தாலும் - அதனை நமது திட்டத்துக்காக மத்திய அரசு கடனாகவும் - மானியமாகவும் வழங்குகிற தொகையில் கழித்துக் கொள்வார்களாம். பிறகு, 1976-77-ஆம் ஆண்டுத் திட்டத்துக்குத் திண்டாட வேண்டியதுதான்!

இந்த நிலையில்தான் அமைச்சர் பெருமகனார், நம்மீது மாசு தூவும் கருத்தைப் பொதுக்கூட்டத்தில் வெளியிட்டிருக்கிறார் எவ்வளவு வேதனையான போக்கு இது!

மத்திய அமைச்சர் அவர்-மாநில அமைச்சர்களுடன் விவாதித்திருக்கலாம்; மாநில அதிகாரிகளுடன் பேசியிருக்கலாம்; பொதுக்கூட்டத்துக்கு முன்பு எங்களோடு பேச அவருக்கு நிறையப் பொழுது இருந்தது!

பொல்லாங்கு கூறவேண்டுமென்று திட்டமிட்டு வந்த வருக்கு, எங்களைச் சந்திக்கவோ அல்லது அழைத்துப் பேசவோ நினைவு எப்படி வரும்?

எப்படியோ-நமது தன்மான உணர்வுக்கு அறைகூவல் விடுத்துவிட்டார்; நாலரைக் கோடித் தமிழர்கள் சார்பில் நானும் அதனை ஏற்றுக் கொண்டுவிட்டேன்!

உடன் பிறப்பே! அண்ணன் தந்த துணிவு-தெளிவு இவைகளுடன், உன் போன்றோர் தொண்டுள்ளத்தை நம்பி, 'வறட்சி நிவாரணநிதி' வேண்டுகோளை விடுத்துள்ளேன்.

வேண்டுகோள் வெளிவந்த உடனேயே, சென்னையைச் சேர்ந்த இராஜலட்சுமி என்ற சகோதரி,

'தமிழனின் தன்மானமே பெரிதென்ற தங்களின் அறிவிப்புக்குத் தலை தாழ்த்தி வணங்குகிறேன்.'

என மடலும் எழுதி, ஐந்து ரூபாய்க்கான காசோலையையும் அனுப்பியுள்ளது கண்டு அகமகிழ்ந்தேன்!

அந்த ஐந்து ரூபாய் எனக்கு ஐந்துகோடி ரூபாய் எனத் தெரிகிறது! அவ்வளவு ஆழமான உணர்வு அதில் அடங்கி யிருக்கிறது!

முதல் நாளே வறட்சி நிவாரண நிதி இருபதாயிரம் ரூபாயைத் தாண்டி விட்டது!

உடன் பிறப்பே! நீயும் உன்னால் இயன்ற தொகையை நேரடியாக அனுப்பு!

அரசின் சார்பில் நிதித் துறையினர் அந்த நிதியை நிர்வகிக் கின்றனர்!

நீயும் அனுப்பு-மற்றவர்களையும் அனுப்பச் சொல்!

யாரும் தனிப்பட்ட முறையிலோ - அமைப்பு வாயிலாகவோ- கழகத் தோழர்கள் வசூல் செய்திட முனைய வேண்டாம்! களங்கம் கற்பித்திடச் சிலர் தயாராக இருப்பார்கள்!

ஐந்து ரூபாய்-பத்து ரூபாய் என்று அனுப்பினால்கூட, அவைகள் கோடிகளாகும்! சிறு துளிதானே பெருவெள்ளம்!

அதிலும், என் உடன்பிறப்பு அனுப்புவது-எனக்குத் தேன் துளியல்லவா?

அன்புள்ள,

**மு. க.**

22-03-1975

# 123. எதிர்ப்பு வாழ்க!

**உடன்பிறப்பே,**

இந்த வாரக் 'கல்கி' ஏடு, தனது தலையங்கத்தை, எனக்கு எழுதுகின்ற ஒரு கடிதமாக அமைத்துக் கொண்டிருக்கிறது!

அத்துடன், நாம் கோருகின்ற மாநில சுயாட்சி குறித்தும் கேலி செய்து-சித்திரம் வரைந்து-என்னையும், சிலம்புச் செல்வரையும் கிண்டல் செய்திருக்கிறது!

திரு. ம. பொ. சி. அவர்களின் மீசையை எடுத்து என் முகத்தில் ஒட்டிப் பார்ப்பதில் 'கல்கி' யாருக்கு ஓர் ஆசை!

"இந்தியா போன்ற ஒரு பெரிய தேச நிர்வாகத்தில், பொறுப்புக் களை மத்தியில் மட்டும் குவிப்பது திறமையின்மையைத்தான் உண்டாக்கும்; அதோடு, மத்திய சர்க்கார், ராஜ்ய சர்க்கார்களை அடக்கியாளும் கொடுமையும் சேருகிறது. இப்படிப்பட்ட ஆட்சிக்கு தேசம் தெரிவிக்கும் எதிர்ப்பின் உருவமே தி. மு. கழகம். அது தேசப் பிரிவினை கோஷ்டி என்று கூறுவது, கற்பனை செய்து காட்டும் பூச்சாண்டியேயாகும்."

-என்ற வாசகங்களைப் பலமுறை தனது தலையங்கங்களாக வழங்கிய 'கல்கி' ஏடு, இன்று மீசையை ஒட்டுகின்ற வேலையில் ஈடுபடுவதன் முரண்பாடுதான் நமக்குப் புரியவில்லை!

ஃஃ ஃஃ ஃஃ

எனக்கென்று 'கல்கி' எழுதியுள்ள கடிதத்தில், வேலூர் மருத்துவமனை நிர்வாகத்துக்காகப் பெரிய அளவுக்கு வக்காலத்து வாங்கியிருக்கிறது!

"தொழிற் சங்கச் சட்டங்களுக்கு உட்பட்டது அல்ல-அந்த மருத்துவ மனை" என்பதை, முதலில் 'கல்கி' யார் புரிந்துகொள்வது நல்லது!

அடுத்தது, பல ஆண்டுகளுக்கு முன்பு ஏழைகளுக்காகவே, தொடங்கப்பட்ட அந்த மருத்துவமனை, இப்போது வசதியுள்ளவர் களுக்காகவே பயன்பட்டு-அதன் காரணமாக ஆண்டுதோறும் சுமார் இரண்டு கோடி ரூபாய் வருமானம் உள்ளதாக மாறியிருக்கிறது என்பதையும் 'கல்கி'யார் உணர்ந்துகொள்ள வேண்டும்!

எனக்கும் - அந்த மருத்துவமனைக்கும் எந்தத் தகராறும் இல்லை; அங்குள்ள பல்வேறு கட்சிகளைச் சார்ந்த தொழிலாளர் அடங்கிய யூனியனுக்கும்-நிர்வாகத்துக்கும் தகராறு; ஐந்து பேர்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையின் அடிப்படையில் வேலை நிறுத்தம்; வேலை நிறுத்தம் செய்தவர்களில் பதினைந்து பேர் வேலைநீக்கம்; இரு சாராரும் என் முன்னிலையில் பேச்சுவார்த்தை நடத்தினர்; முதலில் நடவடிக்கை எடுக்கப்பட்ட ஐந்து பேர் விவகாரத்தில் நான் தலையிட மறுத்துவிட்டேன்; 'வேலை நிறுத்தம் காரணமாக வேலை நீக்கம் செய்யப்பட்ட பதினைந்து தொழிலாளிகளை மட்டும் வேலைக்கு எடுத்துக்கொண்டு-சுமுகமான சூழ்நிலையை உருவாக்கவேண்டும்' என்று நிர்வாகத்தைக் கேட்டுக்கொண்டேன்; நிர்வாகம் மறுத்துவிட்டது. பிறகு, அந்தத் தொழிலாளிகளுக்கு அரசாங்கம் மாற்று வேலை கொடுத்து-அமைதியை ஏற்படுத்தியுள்ளது!

"தவறு செய்தவர்களை மன்னிக்கவேண்டாமா? ஏசு சொன்னாரே" என்று வாசாலகமாகப் பேசுகிறீர்கள்; தவறு செய்தவர்கள் மனம் திருந்தி வருந்தினால்தான், மன்னிக்கச் சொன்னார் ஏசு!"

-என்று 'கல்கி' எனக்கு எழுதிய மடலில் குறிப்பிட்டிருக்கிறது!

பாவம், 'கல்கி' - விவரங்களில் நுழைய விரும்பாமல், என்னை விமர்சிப்பதில் மட்டும் அதிக ஆர்வம் காட்டியுள்ளது!

"பதினைந்து தொழிலாளிகளும் மன்னிப்புக் கடிதம் எழுதிக் கொடுத்ததையும், வேலூர் மருத்துவமனை நிர்வாகம் ஏற்க மறுத்து விட்டது" என்று நான் பலமுறை கூறியிருப்பதைக் 'கல்கி'யார், திரைபோட்டு மறைத்துவிட்ட தந்திரத்தைப் பாராட்டத்தான் வேண்டும்!

★ ★ ★

கடிதத்தில் பல விவகாரங்களைக் 'கல்கி' இழுத்து விட்டிருப்ப தால், நான் அவைகளுக்கு விளக்கம் அளிக்க வேண்டியிருக்கிறது!

“வறட்சி நிவாரணப் பணிக்கான கணக்கே தரமுடியாது” என்று நான் கண்டிப்பாகக் கூறியதுபோல ‘கல்கி’ எழுதியிருப்பது, அதன் வாசகர்களைத் திசை திருப்பப் பயன்படக்கூடும்!

அரசியல் சட்டத்தில் வகுத்துள்ள கணக்கு வழிவகைகளின்படி - அதற்குரிய முறைப்படி - கணக்குத் தரத் தயார்; ஆனால், ‘ஒரு பொறுப்புள்ள மத்திய அமைச்சர் தெருவில் நின்றுகொண்டு, ஒரு மாநில அரசின் கணக்குகளைக் கேட்கக்கூடாது’ என்பதே நமது வாதம்!

இது, ‘கல்கி’க்கும் தெரியும்; ‘கல்கி’யின் ஆசான் மூதறிஞர் இராஜாஜி, மாநில அரசின் உரிமைகளில் மத்திய அரசு தலையிட்டபோது, எப்படி யெல்லாம் சினந்து சீறினார் என்பது இன்றைய ‘கல்கி’ ஆசிரியர் இளம் இராஜேந்திரனுக்குத் தெரியாது என்றாலும், முதியவர் சதாசிவத்துக்கு நன்றாக நினைவிருக்கும்!

“கணக்குகளை ஆய்வதற்கு மத்திய அரசு உரிமை பெற்றிருப்பதை மறுக்கவில்லை” - என்று திரு. கருணாநிதி சட்ட மன்றத்தில் கூறியுள்ளார்; “கொடுக்கப்பட்ட நிதி எவ்வாறு பயன்படுத்தப் பட்டுள்ளது என்பதை ஆராய்ந்த பிறகே இனிமேல் நிதி தரப்படும்” என்று திரு. சுப்பிரமணியம் கூறியதற்கே, கருணாநிதி எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்”

-என்று பம்பாயிலிருந்து வெளிவருகின்ற ‘எக்கனாமிக் டைம்ஸ்’ என்ற ஏடு எழுதுகிறது.

ஆனால், பக்கத்திலே இருக்கின்ற ‘கல்கி’ அதைப் புரிந்து கொள்ள முடியாமல் தவிக்கிறது!

“ஆளுநர் ஷா அவர்கள், வறட்சிப் பணியில் உள்ள சில அதிருப்திகரமான நிலைகளை விவரித்திருக்கிறார்”

-என்று குறிப்பிட்டு, ‘ஊழலை நாம் மறைக்கிறோம்’ என்று ஜாடை காட்டுகிறது - கல்கி!

“காமராஜர் ஆட்சியில் ஊழல்” என்று இராஜாஜி கூறியபோது, “இராஜாஜி ஆட்சியில் ஊழல் இல்லையா?” என்று பதிலுக்குக் கேட்டாரே, காமராஜர் - அதைப் போல நான், ‘போட்டா போட்டி காட்டா குஸ்தி’யில் இறங்க விரும்பவில்லை!

எங்கு தவறு நடந்து-அதனை யார் சுட்டிக்காட்டினாலும், அதனைத் திருத்தி அமைக்கவே இந்த அரசு, முயற்சிகளை எடுத்து வருகிறது!

கவர்னர்தான் சுட்டிக்காட்டவேண்டு மென்றுகூட இல்லை-யாரோ ஒரு கந்தன்-கடம்பன் சுட்டிக் காட்டினாலும், அதனைப் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கக் கழக அரசு தவறியதே இல்லை!

வலுக்கட்டாயமாக வறட்சி நிதி வசூலிக்கிறோமாம்! தவறு-மிகத்தவறு! 30-3-75 'கல்கி' ஏடு மொத்தம் அறுபத்து நாலு பக்கங்களில்-இருபத்து நாலு பக்கங்களில் விளம்பரம் வாங்கப் பட்டிருக்கிறதே - அதற்குக் 'கல்கி' மானேஜர் எடுத்துக்கொண்ட முயற்சி அளவுகூட எடுத்துக் கொள்ளாமல்தான், இதுவரையில் ஏறத்தாழ இருபது இலட்சம் ரூபாய் வறட்சி நிதிக்கு வழங்கப் பட்டிருக்கிறது!

கஷ்டப்படும் மக்களைக் காப்பாற்ற-அப்படியே சற்றுக் கடுமையான முயற்சி எடுத்துக்கொண்டு-வசதியுள்ளவர்களிடம் வறட்சி நிதி வாங்குவதில் தவறுதான் என்ன?

மத்திய அரசு கடனாக எழுபது சதவிகிதமும்-மானியமாக முப்பது சதவிகிதமும் தந்து, வட்டியும் முதலும் சேர்த்துத் திரும்பக் கட்டுவதைவிட இது நல்லதல்லவா?

ஒன்பதாம் வகுப்பு படிக்கும் உசேன் ஷரீப் என்ற மாணவன் பதினொரு ரூபாய் அனுப்பிவிட்டு, இந்த ஆண்டுத் தேர்வில் வெற்றி பெற்றால், தன் அப்பா தரும் பரிசுப் பணத்தையும் வறட்சி நிதிக்கு வழங்குவதாக எழுதியிருக்கிறானே-அவன் கையை எடுத்துக் கண்ணில் ஒற்றிக் கொள்ளத் தோன்றுகிறதே! 'கல்கி'க்கு ஏன்-கண்ணைக் கரிக்கவேண்டும்?

தஞ்சை சுற்றுப் பயணத்தில் வழி நெடுக வாலிபர் - வயோதிகர் - சகோதரிகள் - மூதாட்டிகள்-மாணவர்-தொழிலாளர்-விவசாயிகள்-அனைவரும், பத்து ரூபாய்-ஐந்து ரூபாய் என்று வழங்கிய விவரமும்-அந்தத் தொகை முப்பத்தைந்தாயிரத்தையும் கடந்த விளக்கமும், பத்திரிகைகளில் வந்திருப்பதை நீ பார்த்திருப்பாய்!

'கல்கி'யின் கடிதத்துக்காகப் பரிதாபப்பட்டிருப்பாய்!

பரவாயில்லை! நம்மை எதிர்த்து அவர்கள் வளரப் போவ தில்லை!

நம்மை வளர்க்க இந்த எதிர்ப்புக்கள் பயன்படட்டும்!

அன்புள்ள,

**மு. க.**

30-03-1975

# 124. இரு தூண்கள் சாய்ந்தன!

**உடன்பிறப்பே,**

மகிழ்ச்சியைத் தொடர்ச்சியாக சில மணி நேரங்கள் அனுபவிப்பது என்பது நம் வாழ்க்கையில் இல்லாமலே போய் விட்டது. தஞ்சை மாவட்ட சுற்றுப் பயணத்தை மிக்க உற்சாகத்துடன் நடத்தி முடித்துவிட்டுச் சென்னைக்குத் திரும்பினேன். வீட்டுக்குள் நுழைவதற்குள்ளாகவே நமது நண்பர் முனுசாமி மறைந்து விட்டார் என்ற செய்தி நெஞ்சைப் பிளந்தது. அடுத்து இருநாட்களுக்குள் வட ஆற்காடு மாவட்டத்தில் எழுச்சிமிகு சுற்றுப் பயணத்தை முடித்துவிட்டு, அதுபற்றி நண்பர்களுடன் பேசி மகிழ்வதற்குள்ளாகவே இதயத்தில் இன்னொரு வேல் பாய்கிறது. துன்பங்கள் துணையோடுதான் வருமாம். அதே போல் மற்றொரு கணையும் உள்ளத்தைத் துளைத்துவிட்டது இன்று! கழகத்தின் சென்னை மாவட்டத் தூண்களிலே ஒருவரான நண்பர் கண்ணபிரானையும் இயற்கை கொள்ளைகொண்டு விட்டது. நாலைந்து நாட்களுக்குள் நம்மைத் தாக்கியுள்ள இந்தப் பேரிடிகளைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

முனுசாமி, சென்னை நகரில் கழகம் வளர ஆரம்ப காலத்தில் ஏற்றுக்கொண்ட இன்னல்கள் கொஞ்சமல்ல. அவரது அனுபவம், ஆற்றல், நிர்வாகத் திறமை அனைவராலும் பாராட்டப் பட்டதாகும். நீண்ட பல ஆண்டுகள் மாநகராட்சி உறுப்பினராகவும், பின்னர் மேயராகவும் பொறுப்பேற்றுத் தன் உழைப்பின் வாயிலாக அரும்பெருங் காரியங்கள் பலவற்றைச் செய்தார். அண்ணாவின் அன்புக்குப் பாத்திரமானவர். நமக்கெல்லாம் பழகுதற்கினிய பக்குவம் படைத்தவர்.

மாநகராட்சி மன்றத்தில் தவறுகள் கண்டுபிடிக்கப்பட்டு, அதனையே நமது அரசு, கலைத்தபோதும், முனுசாமி அவர்களின்

மீதே சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டபோதும், அதுபற்றிய வழக்கில் அவரை நீதிமன்றத்தில் நிறுத்தியபோதும்

> **“கழக அரசு சட்டப்படி தன் கடமையைச் செய்கிறது. இந்த விவகாரத்தில் என் நிலையை விளக்க நான் தயாராக இருக்கிறேன். அதற்காகக் கழக அரசின்மீது குறைகூற மாட்டேன். அதுவே நான் கடைப்பிடிக்கும் கட்டுப்பாட்டு உணர்வு”**

என்று அவர் நண்பர்களிடத்திலே சொல்லிக் கொண்டிருந்தாரே தவிர, கழக அரசின் மீது கோபப்பார்வையை வீசிடவில்லை. அத்தகைய உளப்பாங்கு பெற்றவர், எல்லோருக்கும் உதவிடும் நெஞ்சு படைத்தவர் நண்பர் முனுசாமி.

கண்ணபிரான், நமது வேழவேந்தனின் மாமனார். ஆனால் இந்த உறவுக்கு முன்பே கண்ணபிரான், கழகப் பணிகளுக்காகப் பம்பரமெனச் சுழலும் தொண்டர்! சென்னை மாவட்டத்தின் செயலாளராக இருந்து அவர் ஆற்றிய பணியை மறக்க முடியுமா? வேழவேந்தனின் துணைவி-அப்போது இளஞ்சிறுமி! கழக மேடைகளில் அந்தச் சிறுமியின் கொள்கைப் பாட்டுக்கள்! நடனங்கள்! அதனை ரசித்து மகிழும் நமது அண்ணா! அந்த அண்ணனின் மகிழ்ச்சியைக் கண்டு மகிழும் கண்ணபிரான். அந்தோ! அந்த நினைவுகள் நெஞ்சை நெருப்பாக்குகின்றனவே!

> மேயர் பதவி வேண்டுமென்று கேட்டார். அப்போது தர இயலவில்லை. வேறொருவருக்குத் தருவதற்கு கழக ஆட்சி மன்றக் குழுவும் மாநகராட்சி உறுப்பினர்களும் முடிவெடுத்தனர். அந்த முடிவை முகமலர்ச்சியுடன் ஏற்றுக் கொண்ட பண்பாளர் கண்ணபிரான்.

அவரது மருமகன் நண்பர் வேழவேந்தன் அமைச்சரான போதும் கண்ணபிரான் துள்ளிக் குதிக்கவில்லை. அவர் அமைச்சர் பதவியில் இல்லாததற்காகவும் துயரப்படவில்லை.

கழகம்! கழகம்!! அது ஒன்றே அவரது உயிர் மூச்சோடு சேர்ந்து ஒலித்துக் கொண்டிருந்தது.

இரண்டு வைரம் பாய்ந்த தூண்கள் சாய்ந்து விட்டன.

கழகம், தங்களுக்குப் பதவி வழங்கினாலும் வழங்காவிட்டாலும், கவலைப்படாமல்-தாங்கள் வளர்த்த கழகம் தங்கள் மீது நடவடிக்கை எடுத்தாலும் அதற்குத் தலைவணங்கிக் கட்டுப்பட்டு-நம்முடன் காழ்ப்பு, கசப்பு இன்றிப் பழகிய இரண்டு செயல்வீரர்களை இழந்துவிட்டோம்.

கண்கள் குளமாகின்றன. ஒருவருக்கொருவர் ஆறுதல் கூறிக்கொள்வது தவிர வேறு வழி என்ன இருக்கிறது?

அன்புள்ள,

**மு. க.**

03-04-1975

# 125. கேரளத்தில் ஒரு குரல்!

**உடன்பிறப்பே!**

தமிழ்நாட்டில் உள்ள வலது கம்யூனிஸ்டுகள், ஜனநாயகம் பற்றி முழங்காத நாளே கிடையாது!

சட்டமன்றமானாலும்-மக்கள்மன்றமானாலும் ஜனநாயகத்தின் அருமை பெருமைகளை அவர்கள் மணிக்கணக்கில் விவரிப்பதும், அவர் தம் ஏடுகளில் எழுதுவதும், "அடடா - ஜனநாயகத்தின் ஏக வாரிசுதாரர்களே இவர்கள்தான்" என்று எண்ணிடத் தோன்றும்!

புதுவையில் நண்பர் பரூக் தலைமையில் தி. மு. க. அரசு நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஓரளவு பெரும்பான்மையுடன் நடைபெற்றுக்கொண்டிருந்த அந்த அரசைக் கவிழ்க்க முயற்சிகள் நடைபெற்றன; தேர்தலுக்குச் சில நாட்களுக்கு முன்பு கழகத்தைச் சேர்ந்த இரு அமைச்சர்கள் விலகி-நடிகரின் கட்சிக்குச் சென்றுவிட்டனர்!

சட்டசபையின் இறுதிக் கூட்டமெல்லாம் முடிவுற்று-அடுத்து, சட்டசபை கூட்டத் தேவையில்லாத சூழ்நிலையில் தேர்தலைச் சந்திக்கும் கட்டத்தில்தான் அந்த இரு அமைச்சர்களும் வேறு கட்சிக்குத் தாவினர்! ஆளுங்கட்சியின் பலம் 'இரண்டு பேர் குறைவு' என்ற அளவில் குன்றியது!

உடனே முதல்வர் பரூக்கும்-மற்ற நண்பர்களும் கழகத் தலைமையுடன் தொடர்பு கொண்டனர். "எப்படியாவது வேறு இரண்டு உறுப்பினர்களை, எந்த வகையிலாவது-எந்த முறையிலாவது இழுத்துப் பிடித்து, மந்திரி சபையைத் தேர்தல் வரையில் நீடித்துக்கொள்ள வழிகாணுங்கள்" என்று தலைமைக் கழகம் அறிவுரை கூறவில்லை?

சட்டசபையைக் கூட்டிப் பலப்பரிட்சை பார்க்காமலே கூட-விரைவில் வரவிருக்கும் தேர்தலிலே ஈடுபடலாமெனினும் கூட, "ஜனநாயகத்தை மதித்து உடனடியாக இராஜினாமா

செய்துவிடுவதே நலம்” என்று நண்பர் பரூக் அவர்கட்கும்-கழக உறுப்பினர்கட்கும் தலைமைக் கழகம் அறிவுரை கூறியது!

அதனை முகமலர்ச்சியுடன் ஏற்றுக்கொண்டு, அடுத்த சில மணி நேரத்திற்குள்ளாகப் பரூக் மந்திரிசபை பதவி விலகியது!

அந்த இடை நேரத்தில், புதுவையில் உள்ள நடிகர் கட்சியினர்-வலது கம்யூனிஸ்டுகள், அங்குள்ள கவர்னரைச் சந்தித்து, “பரூக் மந்திரிசபை உடனடியாகப் பதவி விலகுவதுதான் ஜனநாயகமாகும்” என்று அறிவித்தனர்-அறிக்கைவிட்டனர்!

தமிழ்நாட்டிலுள்ள இந்தியக் கம்யூனிஸ்டுத் தலைவர்களும் “புதுவை தி. மு. க. அரசின் பலம்-இரண்டுபேர் விலகியதால் குறைந்துவிட்டது; உடனே சட்டசபையைக் கலைக்க வேண்டும்” என்று போர் முரசு கொட்டினர்!

அதற்குள்ளாகவே புதுவையில் கழக அரசு பதவி விலகி ஜனநாயக உறவுக்கு எடுத்துக்காட்டாக எழுந்து நின்றது!

ஒருநாள் இடைவெளியில், வலது கம்யூனிஸ்டு நண்பர்களும்-நடிகர் கட்சித் தோழர்களும் அவ்வளவு வேகமாகக் கூப்பாடு போட்டார்களே-அவர்கள் எல்லாம், கேரள மாநிலத்து நிலவரம் பற்றி வாயைத் திறக்கவில்லை-பார்த்தாயா?

கேரளத்தில் ஆளுகின்ற கூட்டணிக்கட்சி, பெரும்பான்மை இழந்துவிட்டது; மொத்த உறுப்பினர்கள் 131 பேர்; நேற்றுவரையில் ‘ஆளுங் கூட்டணியின் பலம் 64’ என்ற எண்ணிக்கைதான்!

இப்படிப் பல நாட்களாக ‘கோமா’ நிலைமையில் கேரள ஜனநாயகம் மரணப்படுக்கையில் கிடக்கிறது!

நேற்று திடீரென்று வருவாய்த்துறை அமைச்சர் பேபி ஜான் - உள்துறை அமைச்சர் கருணாகரன்-தொழிலாளர் அமைச்சர் புருஷோத்தமன் ஆகிய மூன்று அமைச்சர்களும், தங்கள் சீரிய தலைமையின்கீழ் மூன்று எம்.எல்.ஏ.க்களைக் கொண்டுவந்து சபாநாயகரிடம் நிறுத்தி, அந்த மூன்று எம்.எல்.ஏ.க்களும் ஆளும் கட்சியை ஆதரிப்பதாகக் கூறினர்.

அந்த மூன்று உறுப்பினர்களில் ஒருவர் சுயேச்சை! இருவர்-கேரளக் காங்கிரசை சேர்ந்தவர்கள்! நல்ல அதிர்ஷ்டசாலிகள்! கெட்டிக்காரர்கள்! வாழ்க-கேரள ஜனநாயகம்!

64 என்ற நிலைமாறி-67 பேர் என்ற அளவுக்குக் கேரளக் கம்யூனிஸ்டு முதல்வர் பலத்தைப் பெருக்கிக் கொண்டிருக்கிறார்!

இடையில் எத்தனையோ நாட்கள் உருண்டோடி விட்டன-யாரும் வாய்திறக்கவில்லை-ஜனநாயகம் பற்றி! புதுவையில்தான் ஜனநாயகம் சாகும் - கேரளத்தில் சாகுமா, என்ன?

அத்துடன் முடிந்ததா? உடன் பிறப்பே! 'தினை விதைத்தவன் தினைதானே அறுக்கவேண்டும்' என்பது பழமொழி; 'முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்' என்பதுதானே முதுமொழி!

இதோ, ஒரு கேரளத்துச் செய்தி-படித்துப் பார்;-

"கேரள சபாநாயகர், சட்டசபையைக் கால வரம் பின்றி ஒத்திவைத்தார்; அவர், தன்னுடைய பதவியை இராஜினாமா செய்வதாகவும் அறிவித்தார்."

"கேரளத்தை ஆளுகின்ற ஐக்கிய முன்னணியின் இணக்கக் குழு முதலமைச்சர் அச்சுத மேனன் வீட்டில் கூடியது; சபாநாயகர், எதிர்க்கட்சியினருடன் சேர்ந்து சதி செய்து அரசைக் காலை வாரிவிட்டதாக அந்த இணக்கக் குழு குற்றஞ்சாட்டியது."

"சபாநாயகர், எதிர்க்கட்சியின் ஒலிபெருக்கியாக இருந்து-சபாநாயகர் பதவியைத் துஷ்பிரயோகம் செய்தார் என்றும் ஆளும் கட்சியின் இணக்கக் குழு அறிவித்துள்ளது."

உடன் பிறப்பே! இது கேரளத்துச் செய்தி! தமிழ்நாட்டில் இதே காரியத்தைச் செய்வதற்கு எதிர்க்கட்சிகளான வலது கம்யூனிஸ்டுகளும்-நடிகர் கட்சியினரும், இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பு திட்டங்கள் தீட்டினார்களே-உனக்கு நினைவிருக்கிறதல்லவா? மறந்து போய்விடுமா என்ன?

இன்று அந்த வலது கம்யூனிஸ்டுகள்தான், உத்தமர்களைப் போலப் பேசுகிறார்கள்-கேரளத்தில்!

**"எதிர்க் கட்சிகளும்-சபாநாயகரும் சதி செய் தார்களாம்!"**

எங்கே?-கேரளாவில்! யார் சொல்கிறார்கள்?-அச்சுதமேனன் அவர்களின் தலைமையில் உள்ள ஆளுங் கட்சியின் இணைப்புக் குழுவினர்!

புரிகிறதா-உனக்கு இந்த அரசியல்? உனக்குப் புரியாமலா இருக்கும்? தெளிவு படைத்தவர்களின் கூடாரம்தானே தி. மு. கழகம்?

நீ தெளிவு பெற்றிருந்தால் மட்டும் போதாது-மற்றவர்களுக்கும் இவைகளைத் தெளிவுபடுத்த-தொடரட்டும் உன் பணி!

அன்புள்ள,

மு. க.

09-05-1975

# 126. அற்ப மகிழ்ச்சி... அடையட்டுமே!

**உடன்பிறப்பே,**

பூம்புகாரில் "முழு நிலாவிழா" ஒரே ஒருநாள் நடைபெற்றது. காலையில் பட்டிமன்றம், மாலையில் கவியரங்கம், கலைநிகழ்ச்சி- அத்துடன் விழா முடிந்தது. அன்றிரவே மாயூரம் வந்து ரயிலேறி சென்னை வந்து சேர்ந்து விட்டோம். பட்டிமன்றத்தில் சிலப்பதிகாரம் பற்றிய ஆராய்ச்சி நாவலர் தலைமை வகித்தார். சிலம்புச்செல்வரும், தவத் திரு அடிகளாரும், காரைக்குடி கணேசனாரும் அணித் தலைவர்களாக நின்று பட்டிமண்டபத்தில் வாதாடினார்கள்.

மாலைக் கவியரங்கமும், அதனைத் தொடர்ந்து நடைபெற்ற பேராசிரியர் உரையும் கலை நிகழ்ச்சியும் கூட இளங்கோவின் காப்பியச்சுவை பற்றியதாகவே அமைந்தன. கடல் கொண்ட காவிரிப்பூம்பட்டினத்தின் சிறப்பை விளக்கிட அங்கு கலைக்கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. புலவர் பெருமான் இளங்கோவின் புகழ் பாடப்பட்டது. கரிகாலன் ஆட்சியும், கண்ணகியின் மாட்சியும், பாண்டியனின் பண்பாடும், சேரனின் வீரமும் விளக்கப்பட்டன. கடலோரக் குடிசைகளில் வாழ்ந்த மீனவ மக்களுக்கு வசதியான கல் வீடுகள் அமைத்துத் தரப்பட்டுள்ளன. இந்த விழாவைப் பொறுத்துக்கொள்ள முடியவில்லை சில வட்டாரங்களுக்கு! எரிச்சலைக் கொட்டுகிறார்கள். ஏளனம் செய்கிறார்கள். ஏகடியம் செய்து கட்டுரை தீட்டுகிறார்கள். அய்யோ! தமிழர்களின் மாண்பினைக் கூறும் விழா எடுத்து தமிழ் உணர்ச்சியைத் தட்டி எழுப்புகிறார்களே என்று அவர்தம் இதயம் குமுறுகிறது. அடித்தட்டில் உழலும் மீனவர்களுக்கு எதற்காக வலிவான வீடுகள்? என்று, அடிவயிற்றில் குத்திக் கொள்கிறார்கள். வறட்சிக் காலமாம்-தண்ணீர்த் தட்டுப்பாடாம்-அதனால் பூம்புகார் விழா கூடாதாம்! வறட்சிக் காலத்தில் கபாலீஸ்வரர் கோயில் திருவிழா நடைபெறலாமாம். திருவாரூரில் தேர்த்திருவிழா

நடைபெறலாமாம். சங்கராச்சாரியார் மகாத்மியங்கள் நடைபெறலாமாம். மதுரையில் அழகர் ஆற்றில் இறங்கும் உற்சவம் நடக்கலாமாம். வறட்சியால் வாடும் மக்களோடு சேர்ந்து, அவர்களது துன்பத்தில் பங்கு கொண்டு, அவசரகாலப் பணிகளை ஆற்றிக்கொண்டிருக்கிற அரசு, ஒருநாள் ஒரு தமிழ்க்காப்பிய விழாவைக் கொண்டாடியது குற்றமாம். 1952ஆம் ஆண்டு, தண்ணீர்த் தட்டுப்பாடு காரணமாக சென்னையை விட்டு மக்கள் வெளியூர்களுக்கு ஓடியபோது ஆட்சி புரிந்தவர் யார்?

இவைகள் எல்லாம் மக்களுக்கு மறந்து போயிருக்கும் என்று அந்தக் கூட்டம் கருதுகிறது போலும்!

கிருஷ்ணா நதியிலிருந்து தண்ணீர் கொண்டு வராமல் வீராணம் திட்டம் எதற்காக என்று வித்தகர் காமராஜர் கேட்டு விட்டாராம்.

**"ஆகா! அதை கவனிக்காமல் முழு நிலா விழாவா!"**

எனப் புலம்புகிறார்கள்.

நல்லவேளை அதற்குள்ளாக ஆந்திர முதல்வர் சென்னைக்கு வந்து, கிருஷ்ணா தண்ணீர் தருவதில் உள்ள சிக்கலை விளக்கி விட்டுப் போயிருக்கிறார். யார் என்ன விளக்கினால் என்ன? ஒரு பொய்யை ஒன்பது முறை சொன்னால் அது உண்மையாகிவிடும் என்று நம்புகிற உத்தமர்களின் கூட்டமாயிற்றே அது!

அதே ஏட்டில் காமராஜர் சுற்றுப் பயணம் பற்றி ஒரு வர்ணனை-அழகான படங்களுடன்!

காமராஜர் மேடையில் உட்கார்ந்திருக்கிறார். ஒலி பெருக்கியில் பேசுகிறார். ஒளி விளக்குகள் எதிரே காணப்படுகின்றன. எல்லாம் மின்சாரத்தால் இயங்குபவைதான்! அதுவும் காமராஜர் கூட்டங்களுக்காகத் தனி விண்ணப்பங்கள் போடப்பட்டு சிறப்பாக வழங்கப்பட்ட மின்சாரம்! வறட்சியால் ஏற்பட்ட மின்சாரப் பற்றாக்குறை குறித்து அரசாங்கத்தை ஒரு சாடு சாடுகிறார் காமராஜர்! அதற்கு அந்த ஏட்டில் பெரியதோர் விளம்பரம். காமராஜர் ஆட்சிக் காலத்தில், காங்கிரசார் ஆட்சிக் காலத்தில் மின்சார வெட்டே வந்ததில்லையா? இப்போதும் இந்தியாவில் சில மாநிலங்களில் மின் வெட்டு இல்லையா?

**கரிகாலனுக்கு விழா**

**இளங்கோவுக்குச் சிறப்பு**
**கட்டபொம்மனுக்கு கோட்டை**
**வள்ளுவருக்குக் கோட்டம்**
**காரைக்குடியில் தமிழ்த்தாய் விழா**

இவைகளையெல்லாம் அவர்களால் பொறுத்துக்கொள்ள முடியாது. தமிழினத்தின் சிறப்பை மங்காமல் மறையாமல் காப்பாற்றுகிற எதனையும் அவர்களால் சகித்துக்கொள்ள முடியாது. அந்தப் பொறாமைக் கனலைத்தான் எழுத்துக்களாக வடித்தெடுத்து ஏடாக வெளியிட்டிருக்கிறார்கள்.

உடன்பிறப்பே, அந்த ஏட்டின் கடைசிப் பக்கத்தில் ஒரு கவிதை வெளியாகியுள்ளது. அதில் சில வரிகள்...

**“வறுமையில்லாமல் நீந்தி வளமான ‘கோப்பை’**
**ஏந்தி பெறுவது ஆத்ம சாந்தி”**

ஜீவாத்மாவின் ஆசையைக் கவிஞர் அப்படி எடுத்துக் காட்டுகிறார். ஆனால், அந்தப் பத்திரிகையாளருக்கோ, கண்ணகிக் காப்பியத்தை சிறப்பிக்கும் விழாவை நாம் எடுப்பதைத் தாக்கு வதிலும், தமிழுணர்வு கொண்டு பணி புரியும் அரசு வீழ வேண்டு மென்பதிலும்தான் “ஆத்ம சாந்தி!”

பாவம்; அந்தப் பத்திரிகையாளர் “ஆத்மா” அப்படி ஒன்றிருந்தால் அது சாந்தி அடையப் போவதில்லை. பரிதாபம்! தங்கள் உடம்பில் உள்ள சிரங்கைச் சொறிந்து கொள்கிறார்கள். சொறியும் போது சற்று நிம்மதி-சொறிந்து முடிந்த பிறகல்லவா, எரிச்சல் கிளம்பப் போகிறது! அதுவரையில் அவர்கள் அந்த அற்ப மகிழ்ச்சியை அடைந்து கொள்ளட்டுமே!

அன்புள்ள,

**மு. க.**

13-05-1975

# 127. பொறுத்திருப்போம்!

**உடன்பிறப்பே!**

கோவை-சேலம்-நெல்லை-திருச்சி மாவட்டங்களில் செயல்வீரர்கள் கூட்டங்களிலும், பொதுக் கூட்டங்களிலும் உன் ஆற்றலைக் கண்டு நானும்-பொதுச் செயலாளர் நாவலரும்-பொருளாளர் பேராசிரியரும் வியந்து பாராட்டி, மகிழ்ந்து வாழ்த்தியதை மறந்திருக்க மாட்டாய்!

எழுச்சித் திருக்கோலம் கொண்டிருந்த உன்னை நினைத்திடும்போது, துன்பங்கள் எல்லாம் தொலைவில் ஓடுகின்றன!

எதிர்ப்புக் கணைகள் முனை முறிந்து நொறுங்கிச் சிதறும் வண்ணம், மாவட்ட அளவில் நீ ஆங்காங்கு திட்டம் வகுத்து-ஒன்றியங்களின் அளவில் உறுதுணையாக நின்று, கிளை அமைப்புக்களின் அளவில் செயல்படும் திறனை-உன் உழைக்கும் பண்பை-எப்படித்தான் போற்றுவது என எனக்குப் புரியவில்லை!

உனக்கிருக்கும் தொல்லைகள் ஒன்றா, இரண்டா? ஓராயிரம் அல்லல்களுக்கிடையே நீ அலைந்து திரிந்து-அண்ணன் உருவாக்கிய கழகத்தைக் காத்திடும் தொண்டினை ஆற்றிக்கொண்டிருக்கிறாய்!

அதை எண்ணும்போது, எனக்கு இருக்கும் ஓயாப் பணிகளைக் கூட அயராது நிறைவேற்றுகின்ற தெம்பினைப் பெறுகிறேன்!

என் களைப்புப் போக்கும் மாமருந்தாக உன் உழைப்பின் வெற்றிகள் அமைந்து வருகின்றன!

ஆக்கப் பணிகள் குறித்து நீ, செயல் வீரர்கள் கூட்டத்தில் வழங்கிய கருத்துக்களை எண்ணி நாங்கள் மூவரும் மகிழ்வதா? இலட்சக்கணக்கில் கூடியிருந்த மக்களிடையே எழுந்து நின்று, நீ எங்களை நோக்கி, 'இலட்சிய வெற்றி பெற்றே தீருவோம்'

என்று சிங்கக் குரல் எழுப்பினாயே-அதனை நினைத்து நாங்கள் மகிழ்வதா?

"கட்சிக்காக நாம் என்ன செய்தோம்" என்று கேட்டு-அதற்கு விடைகண்டு-மேலும் கட்சி வளர உழைப்பவரே கட்சியின் கண்மணிகளாக முடியும்!

"கட்சி நமக்கு என்ன செய்தது?" என்று கேட்டுச் சோர்வு மேலிட உட்கார்ந்திருப்பவர்கள், கட்சியின் உயிர் நாடிகளாக என்றைக்கும் இருக்க முடியாது!

உழைப்பதற்கு நமக்கு அதிகார பூர்வமாகக் கிடைக்கின்ற வாய்ப்புகளை நாம் கௌரவப் பதவிகளாகக் கருதாமல், 'தமிழ் மக்களுக்குப் பணியாற்ற நம்மீது சுமத்தப்பட்டுள்ள பொறுப்புக்கள்' என்றே எண்ணிச் செயல்பட்டு வருகிறோம்!

இந்த எண்ணங்களில் எப்போதாவது 'சுருதி' பேதம் ஏற்பட்டால் அதனைச் சுட்டிக்காட்ட மக்கள் மன்றம் தயாராக இருக்கிறது; ஏன்-முதலில் நமது மனச்சாட்சிக்கே நாம் பதில் சொல்லியாகவேண்டும்!

இதுபோன்ற சிந்தனைகளையெல்லாம் வடித்தெடுத்துக் கழகப் பணிகளை வகைப்படுத்துவதற்குச் செயல் வீரர்களின் கூட்டங்களில் நீ கூறிய சீரிய யோசனைகள் ஆயிரங் காலத்துப் பயிராம் தி. மு. கழகத்திற்கு உரம் ஏற்றும் யோசனைகளாகும்!

★ ★ ★

கோவை குலுங்கிட-சேலம் சிலிர்த்திட-நெல்லை நெகிழ்ந்திட-திருச்சி அதிர்ந்திட கழகப் பேரணிகளை நடத்திக் காட்டிய என் அன்பு உடன்பிறப்பே! உன்னைச் சிலபோ், அண்மைக் காலமாகக் குறைத்து மதிப்பிட்டு, எழுதியும் பேசியும், தமக்குள் களிபேருவகையுடன் உரையாடல் நிகழ்த்தியும் வருகின்றனர்! அதனை, நீயும் அறிவாய்-நானும் அறிவேன்!

நீ, நீறுபூத்த நெருப்பு என்பதை, நான்கு மாவட்டங்களில் நடத்திக் காட்டிய உணர்ச்சிமிகு நிகழ்ச்சிகளைக் கண்டபிறகு புரிந்துகொண்ட அவர்தம் நெஞ்சங்கள், குமுறி அழும் என்பதில் ஐயமில்லை!

"ஆம் - அப்படித்தான்" என்பதைப் போல, அவர்தம் மேடைகளில் நாராச நடைப் பேச்சுக்கள்-வன்முறையைத்

தூண்டும் வார்த்தைகள் - ஆத்திரமூட்டும் சொற்கள்-அமைதியைக் குலைக்கும் போக்குகள்-எல்லை கடந்து காணப்படுகின்றன! அவர்தம் ஏடுகளும் அவ்வாறே!

"மலையே தலையை மோதவரினும், நிலைகுலையாத நெஞ்சுறுதி பெற்றவர்கள் கழகத்தினர்" என்பதை உலகுக்கு உணர்த்த-அண்ணாவின் அறவழியில்-அன்பு வழியில் எதையும் தாங்கும் இதயம் பெற்றவர் நாம் என்பதை எடுத்துக்காட்ட-கழகத்தின் வளர்ச்சிக்குத் தேவையான ஆக்கப் பணிகளில் கவனத்தைச் செலுத்திடு!

நாளை, வட ஆற்காட்டிலும், செங்கற்பட்டிலும் நாங்கள் உன்னைச் சந்திக்க இருக்கிறோம்; ஏதோ நடக்குமென்று 'பரபரப்பு'க் காட்டப்படுகிறது!

ஏதேதோ நடந்தபோதெல்லாம், நாம் அழிந்துவிடவில்லை! நமது தமிழ் உணர்ச்சி குன்றிவிடவில்லை! உரிமைக் குரல் ஓய்ந்துவிடவில்லை!

எது நடந்திட்டாலும், எத்தகைய எதிர்ப்பு நம்மை மோதிட்டாலும்-அண்ணனை நெஞ்சில் பதியவைத்துக் கொண்டிருக்கும் நாம், அமைதி வழி நிற்போம்!

அதைத்தான், ஆர்த்தெழுந்த கடல் அலைபோல் சென்னையில் நீ ஒலி முழக்கம் செய்தபோதும், நேற்று நான் சொன்னேன்!

"பொறுமைக்கும் எல்லையுண்டே" எனக் கேட்பாய்!

பொறுத்திரு! அந்த எல்லைவரையில் பொறுத்திரு!

"பொறுத்தார் பூமி ஆள்வார்" என்ற முதுமொழியை மறந்து விடாதே!

அன்புள்ள,

**மு. க.**

18-05-1975

# 128. இந்திர விழாவாம்!

உடன்பிறப்பே,

**“இந்திரன், அகல்யா என்னும் ரிஷிபத்தினியைக் கற்பழித்தவன் அதனால்தான் இந்திரன்மீது கருணா நிதிக்கு ஒரு ஆசை. ஆகவேதான் அவர் பூம்புகாரில் இந்திர விழா நடத்துகிறார்.”**

இப்படி ஒரு தரக்குறைவான கருத்தை யாரோ நரகல் நடையழகர்கள், நடுங்கா நாக்கழகர்கள் நடுவீதியிலே நின்று பேசியிருக்கக்கூடும் என்று தானே நீ எண்ணுகிறாய்!

இந்த அரிய ஆராய்ச்சி முடிவை வெளியிட்டவர் அப்படிப் பட்ட அற்ப சொற்பமானவர் அல்ல. தமிழ்நாட்டில் எல்லா அமைச்சரவைகளிலும் இடம் பெற்றிருந்தவர். இரண்டு மூன்று ஆண்டுக் காலம் முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருந்தவர். தமிழ்நாட்டில் உள்ள மூத்த தலைவர்களின் வரிசையிலே வைத்து மதிக்கத்தக்கவர். இந்திய நாட்டு விடுதலைப் போராட்டத்திலே ஈடுபட்டு தியாகம் செய்தவர். சேக்கிழார் பரம்பரையிலே வந்தவர் என்று பெருமைப்பட்டுக் கொள்ளக்கூடியவர். வயது முதிர்ந்தவர். நேரில் கண்டால் வாஞ்சையுடன் பழகக் கூடியவர்.

அவர் வாயிலேதான் இத்தகைய வார்த்தைகள் நர்த்தனமாடி யிருக்கின்றன.

அவர் எவ்வளவோ அரசியல் விமர்சனங்களைச் செய்கிறார். ஆத்திரத்தோடு பேசுகிறார். கடுமையான கண்டனங்களைப் பொழிகிறார். அந்த வாதங்கள் சரியோ, தவறோ அதைப்பற்றி நாம் கவலைப்படாமல் நம்மாலான விளக்கங்களைத் தருகிறோம். ஆனால் நாம் நடத்திய ஒரு இலக்கிய விழாவைப் பற்றி இவ்வளவு இழிந்த சொற்களை வீசுவதற்கு அவருக்கு எப்படித்தான் இதயம் இடம் கொடுத்ததோ தெரியவில்லை.

இந்திர விழாவில் குறிப்பிடுகிற இந்திரன், புராணத்திலே வருகிற அகல்யாவைக் கற்பழித்தவன் அல்ல என்றும் மிகப்பழம் பெருங்காலத்துச் சோழமன்னன் ஒருவனின் பெயர் இந்திரன் என்றும் அந்தப் பழங்காலத்துச் சோழ வேந்தன் பெயரால்தான் பூம்புகார்த் திருநகரில் சிலப்பதிகார காலத்துக்கு முன்னரே இந்திர விழா கொண்டாடப்பட்டதென்றும் தமிழ்ப் புலவர்கள் சிலர் தங்கள் ஆராய்ச்சி முடிவுகளை வெளியிட்டிருக்கிறார்கள். அதைப்பற்றி எல்லாம் அக்கறை கொண்டு சிந்திப்பதற்கு அருமைப் பெரியவர் பக்தவத்சலம் அவர்களுக்கு நேரமிருக்க நியாயமில்லை.

சரி; அவர் குறிப்பிட்டது போல அகல்யாவைக் கற்பழித்த இந்திரனாகவே இருக்கட்டும்; இப்போதாவது புராண ஆபாசத்தைப் பக்தவத்சலம் போன்றவர்கள் ஒத்துக்கொண்டதற்கு நாம் நன்றி தெரிவிக்கத்தான் வேண்டும்.

ஆனால் ஒன்று! நாம் பூம்புகாரில் நடத்தியது இந்திர விழா அல்ல!

“சித்திரை முழுநிலா விழா” என்று தான் அந்த விழாவுக்குப் பெயர் சூட்டியிருந்தோம்.

அதைக்கூட பக்தவத்சலனார் கேலி புரியக்கூடும். நிலா என்றால் சந்திரன் தானே! சந்திரன் என்ன; இந்திரனை விட மட்டம் தானே! இந்திரனாவது ரிஷிபத்தினி அகல்யாவைக் கற்பழித்தான். சந்திரனோ, குருபத்தினியையே கூடியவனாயிற்றே! என்று இன்னொரு நாள் பேசக்கூடுமல்லவா?

உடன்பிறப்பே, பக்தவத்சலனார் பேசிய பிறகு நானும் யோசித்து யோசித்துப் பார்க்கிறேன்; கற்பழிக்காத இந்து மதக் கடவுளோ, அல்லது பெரியவர் பக்தவத்சலத்தைப் போன்ற ஒழுக்கமும், நேர்மையும் உள்ள கடவுளோ யாராவது இருக்கிறார் களா என்று கண்டுபிடித்து அந்தக் கடவுள் பெயரால் விழா நடத்தலாமா என்று யோசித்து யோசித்துப் பார்க்கிறேன். எந்தக் கடவுளும் எனக்குக் கிடைக்கவில்லை.

பரமசிவனுக்காக விழா எடுக்கலாமா என்றால்; உடனே பக்தவத்சலம் சீறுவார்- “பரமசிவன் தாருகாவனத்து முனிவர்களின் மனைவிகளையெல்லாம் கெடுத்தவராயிற்றே!” என்று!

தொலையட்டும். நானிலத்தைப் படைத்ததாகச் சொல்லப் படும் நான்முகன் பிரம்மாவுக்கு விழா எடுக்கலாமா என்றால்; அப்போதும் பக்தவத்சலனார் குறுக்கிட்டுக் கோபிப்பார். "பிரம்மா, தன்னுடைய மகள் திலோத்தமையையே கற்பழிக்க முனைந்தவரல்லவா?" என்று!

விநாயகருக்கு விழா எடுக்கலாம் என்றால், அவர் தாயைப் போல் பெண் கேட்டவர் என்று பெரியவர் பக்தவத்சலம் கிண்டல் செய்வார்.

போகட்டும், பக்தவத்சலத்துக்கே விழா எடுக்கலாம் என்றால், பக்தவத்சலன் பக்கத்து வீட்டுக்காரன் மனைவி ராதையிடமே உடல் தொடர்பும், உள்ளத் தொடர்பும் கொண்டவன்! கிருஷ்ணனைத் தான் குறிப்பிடுகின்றேன்! அந்தப் பரந்தாமனுக்கு பக்தவத்சலம் என்று ஒரு திருநாமமும் உண்டே!

"வறட்சி நேரத்திலே பூம்புகார் விழாவா?"

-என்று ஒரே வரியில் பக்தவத்சலம் கேட்டிருப்பாரேயானால், அது அரசியல் அடிப்படையில் கேட்கப்பட்ட கேள்வி என்று விட்டுவிடலாம்.

இந்திரனை விட வேகமாக இவர், அகல்யாவை இழுத்து ஆபாசமான வியாக்கியானம் செய்திருப்பது தான் வேதனை தரத்தக்கதாக இருக்கிறது.

ஏறத்தாழ இருபத்தி ஐயாயிரம் ரூபாய் செலவில் தான் பூம்புகார் விழா நடைபெற்றிருக்கிறது இந்த ஆண்டு!

இந்தச் செலவு, பிரதமரின் "ஹெலிகாப்டர் விமானம்" இறங்குவதற்குச் செப்பனிடப்படுகிற மைதானச் செலவில் மூன்றில் ஒரு பங்குதான் என்பதை முதியவர் பக்தவத்சலம் உணர வேண்டும். அரவிந்தர் ஆசிரமத்தில் அண்மையில் பிரதமர் கலந்துகொண்டு நடைபெற்ற விழாவைவிடத் தமிழினத்தின் இலக்கியப் பெருமை சொல்லும் பூம்புகார் விழா, எந்த வகையிலும் குறைந்ததல்ல! தமிழுணர்ச்சி உள்ளவர்கள் இதனை அறிவார்கள்.

அன்புள்ள,

**மு. க.**

20-05-1975

# 129. "திட்டங்கள், திரைமறைவில்!"

உடன்பிறப்பே,

மான் குட்டிகளையெல்லாம் கூட்டி வைத்துக் கொண்டு ஓநாய் ஒன்று அகிம்சையைப் பற்றி உபதேசம் செய்யப்போகிறதாம்!

பசுவின் கன்றுகளை அடித்து விழுங்கிய ரத்தம் சொட்டும் நாக்கோடு வேங்கையொன்று வேதாந்தம் பேசப்போகிறதாம்!

கழுகு, கருணை மழை பொழிகிறதாம்!
வல்லூறு வாஞ்சைகீதம் பாடுகிறதாம்!

இந்த அதிசயங்கள் எல்லாம் எந்தக் காட்டில் நடைபெறப் போகின்றன என்றுதானே கேட்கிறாய்!

காட்டில் அல்ல; நாட்டில்தான்! இந்த வேடிக்கை நிகழ்கிறது!

நடிகர் கட்சித் தலைவர் பெங்களூரிலிருந்து அறிக்கை விடுத்திருக்கிறார். அவர் விடுத்த அறிக்கை, அவரது கட்சிப் பத்திரிகையில் முதல் பக்கத்தில் வெளிவந்துள்ளது.

**அவர் பெங்களூரில் "அவுட்டோர்" காட்சிகளில் இரவு பகல் ஓய்வின்றி நடித்து வருகிறார் என்ற செய்தி, அதே பத்திரிகையின் கடைசிப் பக்கத்தில் படங்களுடன் வெளியிடப்பட்டிருக்கிறது. என்ன இருந்தாலும் அந்தப் "பத்திரிகைத் தம்பி" தான், ஏற்றுக்கொண்ட புதிய தலைவரை இப்படிக் கேலி செய்திருக்கக்கூடாது!**

நடிகர் கட்சித் தலைவரின் பெங்களூர் அறிக்கையில், செங்கற்பட்டில் வன்முறை, உயிருக்கு ஆபத்து, ரத்தம், சதை, என்றெல்லாம் பயங்கரமான வாசகங்கள்! ஒரே பரபரப்பு! பதைப்பு!

ஆனால், செங்கற்பட்டு நிகழ்ச்சி முடிந்து நான்கு நாட்கள் ஓடிவிட்டன. தன் கட்சித் தளபதிகள் தாக்கப்பட்டதாகக் கண்ணீர் அறிக்கைவிடும் "தலைவர்" எங்கேயிருக்கிறார்-என்ன செய்கிறார்? - தெரியுமா?

அவரது கட்சி இதழே செய்தி கூறுகிறது பார்!

**"பெங்களூரில் யானைகளுடன் மோதும் பயங்கர சண்டைக் காட்சி. இரவு பகலாக மக்கள் திலகம் நடிக்கிறார். இந்த அற்புதக் காட்சியை மூன்று கேமராக்கள் ஏக காலத்தில் பலகோணங்களில் படமாக்கின"**

முதல் பக்கத்தில், "தலைவரி"ன் அறிக்கை! கடைசிப் பக்கத்தில் "தலைவரி"ன் அக்கறை!

அது போகட்டும்; அறிக்கையில் என்ன சொல்கிறார் கவனித்தாயா?

வரிக்கு வரி அன்புப் பிரவாகம்! அறநெறிப் பொழிவு! அமைதியின் தாலாட்டு! அண்ணா! அண்ணா! என்று வாக்கியத்துக்கு வாக்கியம் எடுத்துக்காட்டுக்கள்!

அய்யோ! இந்தக் கனிவும் தெளிவும், 11ஆம் நாள் கண்ணப்பர் திடலில் பேசியபோது காணாமற் போன காரணம் என்ன?

வன்முறைக்கு சிறிதும் தன் கட்சியில் இடமில்லை என்று அறிக்கையில் கைவண்ணம் காட்டுகிற நடிகர் கட்சியின் தலைவர், ஒன்பது நாட்களுக்கு முன்பு கண்ணப்பர் திடலில் கைமுஷ்டியை உயர்த்திக் காட்டி, தோளைக் குலுக்கி, தொடையைத் தட்டி, துள்ளிக் குதித்து, கொலை வெறிப் பேச்சைக் கொட்டியதை நாடு மறந்துவிட்டது என்ற நினைப்பா? அல்லது அந்தப் பேச்சைக் கேட்டவர்கள் எல்லாம் செத்து விட்டார்களா?

அந்தக் கூட்டத்தில் எடுத்த "டேப்ரிக்கார்டரை" அவரே போட்டுப் பார்த்துக் கொள்ளலாமே!

மனச்சாட்சி இருந்தால் பதில் சொல்லுமே; அது அரசியலில் ஒரு மனிதன் பேசுகிற பேச்சல்ல என்று!

என்ன பேசினார், கண்ணப்பர் திடலில்?

"மேடையில் "மே" என்ற எழுத்துக்குப் பதில், "பா" என்பதைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். அவர்களைப் பாடையில் சுமத்தி மயானத்திற்குத் தூக்கிச் செல்ல வேண்டிய நேரம் வந்துவிட்டது. இதைச் சொன்னால் கருணாநிதிக்குக் கோபம் வருகிறது. அவர் வீட்டுக்கு முன்னால், ஆயிரக் கணக்கில் அண்ணா தி. மு. க. தொண்டர்களும் நானும் தோழமைக் கட்சிகளும் மற்றவர்களும் ஊர்வலமாகச்சென்று கோபாலபுரத்தில் நுழைய ஆரம்பித்தால்?"

-இப்படி ஒரு அறைகூவலை கண்ணப்பர் திடலில் விடுத்தவர், இன்று பெங்களூரிலிருந்து காலையில் ஒரு அறிக்கை, மாலையில் ஒரு அறிக்கை விடுத்திடும் காரணம் என்ன?

"கருணாநிதி அவர்களே! லட்சோப லட்சம் தொண்டர்கள், தியாகிகள், ரத்தத்தின் ரத்தம் ஒன்று கூடி வந்தோமானால் போலீஸ் அங்கே இருக்கவே இடமிருக்காது."

-இதுவும் அந்த வீராதி வீரர் கண்ணப்பர் திடலில் பேசிய ஆவேசப் பேச்சுத்தான்!

**இப்போது அவர் வெளியிடும் அறிக்கையிலே பசுவின் கதறல்! ஆனால் அன்று மேடையிலே பைசாசத்தின் குரல்!**

ஒன்பது நாட்களுக்குள் ஏன் இந்த மாற்றம்! மாற்றமா? தமிழர்கள் ஒன்று கூடிவிட்டார்களே என்ற ஏமாற்றமா?

தேர்தலில் நிற்கலாமா வேண்டாமா என்று அண்ணா திருச்சி மாநாட்டில் வாக்கெடுப்பு நடத்தினாராம்-அதுபோல கருணாநிதியை எதிர்த்து கறுப்புக் கொடி போராட்டமா? அல்லது நாடு தழுவிய போராட்டமா? என்று பெரிய மாநாடு ஒன்று கூட்டி, அதிலே வாக்கெடுப்பு நடத்தி அபிப்ராயம் கேட்கப் போகிறாராம்! புதிய அறிக்கையில் நடிகர்கட்சியின் தலைவர் அப்படித்தான் முத்தாய்ப்பு வைத்திருக்கிறார்.

அந்தோ! பரிதாபம்!! இந்த ஜனநாயகத் தெளிவு, கண்ணப்பர் திடலில் பேசுவதற்கு முன்பே ஏற்பட்டிருக்கலாமே!

கண்ணப்பர் திடலில் என்ன அறிவிப்பு செய்தார்?

"கருணாநிதி அவர்களே! உங்களுக்குத் துணி விருந்தால் தமிழகம் முழுதும் செல்ல வேண்டும். நீங்கள் எங்குச் சென்றாலும் எங்கள் தொண்டர்கள் தொடர்ந்து கறுப்புக் கொடிகாட்ட முடிவு செய்திருக்கிறார்கள். நான் அதை ஏற்றுக் கொண்டிருக்கிறேன். இன்று முதல் என் வேலை தொடங்குகிறது."

உடன்பிறப்பே, மேடையில் இப்படிப் புயலாகச் சீறியவர்தான் இன்று தென்றலாக வீசுகிறார்.

புரிகிறதா உனக்கு? பசுத்தோல் போர்த்த புலி நடமாடுகிறது என்பது புரிகிறதா?

**அன்று கறுப்புக்கொடி அறிவிப்பைச் செய்யும் போது, நடிகருக்கு இந்த மாநாடு நினைவுக்கு வர வில்லையா? தன்னால் நியமனம் செய்யப்பட்ட பொதுக்குழு உறுப்பினர்களை அப்போது மறந்து விட்டாரா? திடீரென்று கேட்டால் அவருக்கே நினைவுக்கு வராத பதினெட்டு செயலாளர்கள் அவரது கட்சியில் இருக்கிறார்களே, அவர்களது ஞாபகம் கூடவா குறைந்தபட்சம் வராமல் போய்விட்டது!**

இப்போது நாடு "தழுவிய" போராட்டம் நடத்தப் போகிறாராமே! வன்முறையைத் தூண்டிவிடும் பேச்சைப் பேசிவிட்டு, பாசமுள்ள தமிழர்களை, பழகிய தமிழர்களை, ஒருவருக்கொருவர் மோதிக்கொள்ளச் சொல்லி விட்டு, இவர் பெங்களூரில் போய் யானையுடன் மோதுகிற காட்சியில் நடித்துக் கொண்டிருப்பாராமே!

அவரது கட்சிப் பத்திரிகையே அல்லவா, அந்தச் செய்தியையும் வெளியிட்டுத் தன் மனக்கசப்பை, மறைமுகமாகக் காட்டிக் கொள்கிறது.

அன்பு உடன்பிறப்பே, அறிக்கைகள், ஊரை ஏமாற்ற!

**திட்டங்களோ, திரைமறைவில்! அதுதான் இன்றைய நடிகர் கட்சி அரசியல்!**

அன்புள்ள,

**மு. க.**

22-05-1975

# 130. பிறந்தநாள் செய்தி : உன்னோடுதான் இருப்பேன்!

**உடன்பிறப்பே,**

வருகிற ஜூன் மூன்றாம் நாள் 52-ஆவது வயது தொடங்குகிறது எனக்கு!

இந்த ஐம்பத்திரண்டு ஆண்டுகளில் முப்பத்தேழு ஆண்டுகள் என்னைப் பொது வாழ்க்கையில் ஒப்படைத்துக் கொண்டு உன்னோடு அணிவகுத்துப் பணியாற்றியிருக்கிறேன்.

இன்னும் எத்தனை ஆண்டுகள் அந்த வாய்ப்பு எனக்கு நீடிக்குமோ தெரியாது!

இயற்கையோ அல்லது இன்று வளர்ந்துவரும் அரசியல் சூழ்நிலைகளோ அப்படிப்பட்ட ஒரு நிரந்தர ஓய்வை எனக்கு அளிக்கக்கூடும்; அதற்கான காலத்தை நாம் கணிக்கவும் முடியாது; அதைப்பற்றிக் கவலைப்படவும் கூடாது!

இருக்கின்ற இடைக்காலத்தில், எதிர்காலச் சமுதாயம் ஏற்றமுள்ளதாக விளங்கிட இன்னும் எப்படித் தொண்டு புரியலாம்-நம்மை வளர்த்த தமிழ் மொழியை, ஆதிக்க-அதிகார-சூழ்ச்சி மொழிகள் வளைத்து வீழ்த்திவிடாமல் பாதுகாக்க எப்படி அரண்களை அமைக்கலாம்-மாநிலங்களின் உரிமைக் குரல் வெற்றி பெற்று-சுயாட்சி முழுமையானதாக மலர்ந்து-தமிழ்த் தேசிய இனத்தின் வளம் பெருக எவ்வாறெல்லாம் திட்டங்கள் தீட்டிச் செயல்படலாம்-தந்தை பெரியாரின் தன்மான இயக்கக் கொள்கைகள் மேலும் வேரூன்றிப் பரவிடவும், பேரறிஞர் அண்ணாவின் இலட்சிய முழக்கங்கள் வெற்றி முரசங்களாக மாறிடவும் எத்தகைய உழைப்பைத் தொடர்ந்து வழங்கிடலாம் என்பன போன்ற சிந்தனைகள்தான் இருந்திடல் வேண்டும்.

அந்தச் சிந்தனைகளோடுதான், என்னுடைய ஐம்பத் திரண்டாவது பிறந்த நாளை நெருங்குகிறேன்.

1938-ஆம் ஆண்டில் என்னுடைய பதினான்காவது வயதில் திருவாரூர் உயர்நிலைப் பள்ளியில் பயின்றபோதே, இந்தியை எதிர்த்து, புலி-வில்-கயல் பொறித்த தூய தமிழ்க் கொடியைத் தூக்கிப் பிடித்த கைதான் இந்தக் கை!

அதற்கும் 14 ஆண்டுகட்கு முன்புதான், திருக்குவளையில் ஒரு சாதாரணக் குடும்பத்தில் முத்துவேலருக்கும்-அஞ்சுகம் அம்மைக்கும் மூன்றாவது பிள்ளையாக நான் பிறந்தேன்!

ஐம்பத்தோர் ஆண்டுகட்கு முன்பு எங்கேயோ ஒரு சிற்றூரில் பிறந்த என்னையும்-என் அன்பு உடன் பிறப்பாம் உன்னையும் இணைத்துவைத்த அந்தப் பெரும் சக்தி எது?

பெரியாரின் கொள்கையும், பேரறிஞர் அண்ணாவின் அரவணைப்பும் அல்லவா?

"அதற்குள் அரசியலில் ஈடுபடாதே; இன்னும் நன்றாகப் படி" என்று தேன் தமிழில் அறிவுரை கூறி-திருவாரூரில் என்னைத் தட்டிக் கொடுத்த அண்ணாவை எண்ணிக் கொள்கிறேன்-கண்கள் குளமாகின்றன!

1945-ஆம் ஆண்டில் புதுவை மாநாட்டில் எதிரிகளால் தாக்குண்டு வீதியில் கிடந்த எனக்கு பெரியார் தன் கைகளாலேயே மருந்து தடவி முதல் சிகிச்சை அளித்து-பிறகு ஈரோடு 'குடியரசு' அலுவலகத்துக்கு அழைத்துச் சென்று பிள்ளைபோல் வளர்த்தாரே-அதை நினைத்துக் கொள்கிறேன்-நெஞ்சு கனத்துப் போகிறது!

உடன்பிறப்பே! உன்னோடு இணைந்து நின்று நடத்திய அறப் போராட்டங்கள்-அனுபவித்த சிறைவாசங்கள்-ஏற்றுக்கொண்ட அடக்குமுறைகள்-அடடா! இப்போது நினைத்தாலும் ஆனந்தக் கண்ணீர் துளிர்க்கிறது!

இடையில் நம் தோளில் சுமத்தப்பட்டுள்ள ஆட்சிப் பொறுப்பை-மக்கள் பார்த்து இறக்கிவைக்கச் சொன்னாலும், அல்லது, 'தொடர்ந்து தூக்கிச்செல்க' என்று ஆணை பிறப்பித்தாலும், அந்த இரு நிலைகளில் எந்த நிலையாயினும் நமது இலட்சியத்தையும் கொள்கைக்-கோட்பாடுகளையும் எள்ளளவும் விட்டுக் கொடுக்காமலேதான் நமது பயணம் நடைபெறும்!

ஏழை எளியோர் - அடித்தளத்து மக்கள் - ஆதரவற்றோர் - அவர்களுக்கு உழைப்பதையே பேரின்பமாகக் கருதி நமது இயக்கம் நடைபோட்டு வருகிறது!

இந்த இயக்கத்தின் ஆட்சிக்காலத்தைத் தமிழக வரலாறு மறைத்துவிட முடியாது!

தமிழர்களின் மரபு - இலக்கியம் - வரலாறு கலை - இவற்றை உலகம் உணரச் செய்திடும் பணிகளை நாம் படிப்படியாக நிறைவேற்றி வருகிறோம்!

நாட்டுடமை - நிலச் சீர்திருத்தம் போன்ற சமதர்மத் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறோம்!

கண்ணொளி வழங்கல்-கை ரிக்ஷா அகற்றுதல் - தொழுநோய் இரவலர்க்கு மறுவாழ்வு அளித்தல்-ஊனமுற்றோர்க்கு நல்வாழ்வு சமைத்தல்-திக்கற்ற இளஞ்சிறார்-ஆதரவற்ற கைம்பெண்கள் துயர்துடைக்கச் சமுதாய மறுமலர்ச்சித் திட்டம்-

மகுடம் புனைந்ததும் மக்களைவிட்டு மிகத் தொலைவில் விலகிவிடும் தீயபோக்கு சிறிதுமின்றி-மக்களோடு கலந்து பழகி-அவர்தம் கஷ்ட நஷ்டங்களில் பங்கேற்று - நமது மாநில அரசு பெற்றுள்ள அதிகாரங்களை வைத்து உச்சகட்டமாக எவ்வளவு உதவிகளைச் செய்து வரமுடியுமோ அவ்வளவு உதவிகளையும் அவர்களுக்குச் செய்து வருகிறோம்!

அதிகார அந்தஸ்துகளை உடும்புப் பிடியாகப் பிடித்துக் கொள்வதற்காக நமது உரிமைக்குரலை ஒடுக்கிக் கொண்டதில்லை!

எதிர்க்கட்சியாகச் செயல்பட்டபோது நம் உள்ளத்தில் கொழுந்துவிட்டுக் கொண்டிருந்த இலட்சியக் கனல், ஆளுங் கட்சியானதும் அணைந்து போய் விடவில்லை!

அந்தக் கொள்கைப் பிடிப்பின் காரணமாகத்தான், எத்தனையோ கொடிய சோதனைகளைச் சந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்!

ஆயினும், அதே கொள்கை உரத்தால் அவைகளைச் சமாளித்து முன்னேறிக் கொண்டிருக்கிறோம்!

நம்மைப் போல், எதிர்க்கட்சிகாரர்களின் இழிமொழி அர்ச்சனைகளைத் தாங்கிக் கொண்டவர்கள் யாரும் இருக்க முடியாது!

உடன்பிறப்பே! நான் சில நேரங்களில் மாற்றுக் கட்சி நண்பர்களால் தாக்கப்படும்போது நீ கொந்தளிப்பாய் - குமுறுவாய் முப்பத்தேழு ஆண்டுகாலப் பொது வாழ்க்கையில் பெரியாருடனும் - அண்ணாவுடனும் பழகி, எதிர்க்கட்சி நண்பர்களின் ஏச்சுக்களையும் பேச்சுக்களையும் இந்த இதயம் தாங்கிக்கொள்ளப் பயிற்சி பெற்றுவிட்டது!

ஆனால் நம்முடன் இணைந்து வளர்ந்த சில உடன்பிறப்புக்கள், தாங்கள் சேர்ந்த இடத்தைத் திருப்திப்படுத்துவதற்காக என்னைக் காரசாரமாகவும் - கடுமையாகவும் - இழிவாகவும் எழுதிப் பேசும்போது, பழகிய மனம் கொஞ்சம் பரிதவிக்கத்தான் செய்கிறது! 'பரவாயில்லை; இதையும்தான் தாங்கிக் கொள்ள வேண்டும்' என்று அதே மனம் எனக்கு ஆறுதலும் கூறுகிறது!

பிறந்த நாள் பற்றி எழுத வந்து, எங்கெங்கோ போய் விட்டேன் அல்லவா?

என் ஒவ்வொரு பிறந்த நாளும் சமுதாய நலத்திட்டங்களை உள்ளடக்கி அமைவதுபோல் - இந்த ஆண்டு பிறந்தநாளும், திக்கற்ற சிறார் - ஆதரவற்ற கைம்பெண்கள் நல்வாழ்வுத் திட்டமாக அமைந்துள்ளதை நீ அறிவாய்!

இந்தத் திட்டங்களுக்கு நான் உன்னிடத்தில் நிதிகேட்பதாக இல்லை; காரணம், நீயும், மற்ற பொதுமக்களும் - நிறுவனங்களும் வறட்சி நிதியாக இப்போதுதான் மூன்று கோடி ரூபாய்க்கு மேல் வழங்கி அந்தத்தொகை - பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்காகச் செலவழிக்கப்பட்டு வருகிறது!

நான், 'மே 15ஆம் நாளுடன் போதும்' என்று சொல்லியும்கூட, வறட்சி நிவாரண நிதியை சிலர் அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள்!

ஆகவேதான், இந்த ஆண்டு என் பிறந்த நாளில் தொடங்குகின்ற சமூக நலத் திட்டங்களை நிறைவேற்ற, 'தமிழக அரசுப் பரிசுச் சீட்டுத் திட்டத்தைப் பயன்படுத்துவது' என்று முடிவெடுக்கப்பட்டது.

செப்டம்பர் 15ஆம் நாளுக்குப் பிறகு, பரிசுச் சீட்டு விற்பனை தமிழ்நாட்டில் கிடையாது; அதற்குள் வறட்சி நிதிக்காக ஒரு பரிசுச் சீட்டும், திக்கற்ற சிறுவர்கள்-விதவைகளுக்கான திட்டத்துக்காக ஒரு பரிசுச் சீட்டும் பயன்படுத்தப்படும்.

திக்கற்ற சிறுவர் விடுதிகளுக்கான செலவில் ஒரு பகுதியை அறநிலையத்துறை ஏற்கிறது; மிஞ்சிய செலவுகளையும் - விதவைகள் நல்வாழ்வுத் திட்டச் செலவுகளையும் அரசு ஏற்கிறது!

எனினும், அதிகாரிகளும் - நிறுவனங்களும் - கட்சிச் சார்பற்றவர்களும் இந்தப் புதிய சமூகத் திட்டத்திற்காக வலுவில் நிதி வழங்க விரும்பினால், அதனை அரசாங்கத்தின் நிதித் துறைக்குத் தனியாக அனுப்பிவைக்கலாம்; நீயும் விரும்பினால் வழங்கலாம்; அந்தத் தொகை, அதற்குரிய தலைப்பில் நிதித்துறையில் தனிக்கணக்காக வைக்கப்படும். அப்படி நிதி வழங்குவதை, இந்த ஆண்டு என் பிறந்த நாளுடன் இணைத்திட வேண்டாம்!

இந்த ஆண்டு என் பிறந்த நாள் வேண்டுகோள்-என் கழக உடன்பிறப்புக்கு என்ன தெரியுமா? சொல்கிறேன் கேள்-

**ஈராயிரம் ஆண்டு தமிழன்னை தவமிருந்து பெற்ற தலைமகன் பேரறிஞர் அண்ணா உருவாக்கிய கழகத்தின் ஆட்சியைக் கட்டிக் காக்கவும்-கழகத்தால் உருவாக்கப்பட்டுள்ள தமிழின எழுச்சியை வகைப் படுத்தவும்-அடுத்து வருகின்ற ஒரு சோதனையை நாம் சந்தித்தாக வேண்டும்!**

**அடுத்த தலைமுறையைப் பற்றிக் கவலைப்படுகின்ற நமக்கு, தேர்தல் வெற்றிகளும் இலட்சிய வெற்றிக்குத் தேவையான படைக்கலன்களாக விளங்கும் என்பதை மறந்துவிடக் கூடாது!**

**ஆகவே, என் ஆருயிர் உடன்பிறப்பே! ஒவ்வொரு சிற்றூர்-பேரூர்-நகரம்-அனைத்திலும், கழகத்தின் கட்டுக்கோப்பான அமைப்புகளைப் பலப்படுத்த உறுதி எடுத்துக்கொள்!**

**உழவர் அணி-தொழிலாளர் அணி-மாணவர் அணி-மகளிர் அணி-பிரச்சார அணி-அனைத்தும் தங்கள் பணிகளை விரிவுபடுத்த வேண்டும்!**

என் பிறந்த நாளன்று நீ-சென்னைக்கு ஓடிவரவேண்டும் என்னைக் காண-என்பது தேவையில்லை!

நானேதான் உன்னைக் காண அடிக்கடி வந்து கொண் டிருக்கிறேனே! ஆகவே, நீ வரத் தேவையில்லை!

என்னைக் காணச் சென்னைக்கு வரும் செலவை மிச்சப்படுத்தி - உன் கிளைக் கழகப் பெயர்ப் பலகையைப் புதுப்பித்து, வண்ணம் தீட்டு! ஒரு கழகக் கொடியை நாட்டு!

இல்லை; வந்துதான் தீரவேண்டுமென்றால், வெறுங்கை யோடு வராதே - 'மாலைகளோடு வா' என்று அழைப்பதாகக் கருதமாட்டாய் - மாலைக்குப் பதில் கழகத்திற்கான தேர்தல் நிதியுடன் வா!

கழகக் கண்மணியே! நீ தரும் தேர்தல் நிதி பத்து ரூபாய் என்றால், அது, எனக்குப் பத்து மாலைகளுக்குச் சமம்!

நீ தேர்தல் நிதி வழங்குவதற்காக, என்னருகே பெரிய உண்டியலே இருக்கும்.

மாவட்டங்களின் அளவில் செங்கற்பட்டு மாவட்டச் செயலாளர் பத்தாயிரம் ரூபாய் வழங்கி, கழகத்தேர்தல் நிதி வசூலைத் தொடங்கி வைத்திருக்கிறார்!

மற்ற கட்சிக்காரர்கள் எல்லாம், தேர்தல் நிதி திரட்டும் பணியைப் பெரும்பாலும் முடித்துவிட்டார்கள்; நாம் இப்போதுதான் ஆரம்பிக்கிறோம்.

எனவே, இந்த ஆண்டு பிறந்த நாளுக்குப் பிறகு நான் கலந்து கொள்ளும் கழக நிகழ்ச்சிகள் - பொதுச்செயலாளர் நாவலர், பொருளாளர் பேராசிரியர் ஆகியோர் கலந்து கொள்ளும் கழக நிகழ்ச்சிகள், தேர்தல் நிதி வழங்கும் நிகழ்ச்சிகளாகவே அமைந்திடல் வேண்டும்.

ஜூன் மூன்றாம் நாள் - என் இனிய உடன்பிறப்பே! நீ என் அருகில் இருந்தாலும் - தொலைவில் உன் ஊரில் இருந்தாலும், தமிழகத்தில் இருந்தாலும், கடல் கடந்த நாடுகளில் இருந்தாலும் உன் கரங்களில் நான் பதிக்கும் அன்பு முத்தங்கள் ஏற்றுக்கொள்!

உயிர் ஓய்வுகொள்ளும் வரையில் உன்னோடுதான் இருப்பேன்.

தி.மு.க. அறக்கட்டளை
பொதுச்செயலாளர் அலுவலகம்
அண்ணா அறிவாலயம்

உன்னோடு சேர்ந்துதான் ஊருக்கு உழைப்பேன்!

இமைகள், நீங்காத் துயில் கொள்ளும் வரையில், இலட்சியப் பாதையில் என் கால்கள் நடந்து கொண்டுதான் இருக்கும்!

அன்புள்ள,

மு. க.

24-05-1975

H2209

L 894.8116
கருணா.2

# 131. அதற்கென்ன காரணம்?

**உடன்பிறப்பே,**

மன்னையில் ஓர் அர்ச்சகர்; நல்லவர்-முதியவர்; அவரைக் கொலை செய்துவிட்டு, கொடியவர்கள் இருவர் ஆலயத்து நகைகளையும் கொள்ளையடித்துச் சென்று விட்டார்கள்; உடனடியாக ஒருவன் தப்பி ஓடிவிட்டான். இன்னொருவன், அந்த ஊரிலேயே-அன்றைக்கே பிடிபட்டான்; ஆலயத்துக் காவலர் அவனைத் துரத்திப் பிடித்தார்!

இன்னொருவனோ, ஏராளமான நகைகளோடு தலைமறை வாகிவிட்டான்; காவல் துறையினர் கடும் முயற்சி மேற்கொண்டு அவனையும் கைதுசெய்து-அவன் ஒளித்து வைத்திருந்த நகைகளையும் மீட்டுவிட்டனர்!

கொலை செய்யப்பட்ட அர்ச்சகர் குடும்பத்துக்குப் பத்தாயிரம் ரூபாய் அறநிலையத் துறையின் சார்பாக வழங்கப்படுகிறது; கொடியவர்களைப் பிடித்தவர்களுக்குப் பரிசுத் தொகை அளிக்கப்படுகிறது!

வீட்டுத் தலைவரை இழந்துவிட்ட அர்ச்சகர் குடும்பத்துக்கு ஆறுதல் கூறிட நமது அமைச்சர் மன்னை நாராயணசாமி அவர்களே நேரில் சென்றார்!

அந்தக் குடும்பத்தின் கண்ணீரை அவ்வளவு எளிதாகத் துடைத்துவிட இயலாது எனினும், நாம், நமது கடமைகள் அனைத்தையும் மனிதாபிமான அடிப்படையில் செய்துள்ளோம்!

உழைக்காமல் திடீர்ப் பணக்காரனாக வேண்டுமென்று துடிப்பவன் மேற்கொள்கின்ற கொடிய வழிகளில் கொள்ளை யடிப்பதும்-கொலை செய்வதும் இடம் பெறுகின்றன: அந்தக் குற்றவாளிகள், ஒன்றிரண்டு நிகழ்ச்சிகளில் தப்பிவிடுகிறார்கள்;

என்றாலும் - பெரும்பாலும், காவல் துறையினரின் தீவிர முயற்சிகளால் பிடிபட்டு விடுகிறார்கள்!

மன்னைக் கோயிலில் நுழைந்த அந்த வெறியர்களும் அகப்பட்டுக் கொண்டு விட்டார்கள்; 'காவல் துறை, தன் கடமையை மிகத் திறமையாகச் செய்துள்ளது' என நாடே பாராட்டுகிறது!

இதிலும் தி. மு. கழக ஆட்சியைக் குறை சொல்ல வேண்டு மென்று - வழக்கமான எரிச்சல் கடைகள் - தங்கள் வியாபாரத்தைத் தொடங்கிவிட்டன!

**"கழக ஆட்சியில் இப்படிப்பட்ட காரியங்களுக்குத் துணிச்சல் ஏற்பட்டுவிட்டது!"**

**"அரசு எவ்வழியோ குடிகளும் அவ்வழியே என்பதுபோல் கழக ஆட்சி நடப்பதால், கோயிலில் புகுந்து கொலை செய்கிறார்கள் - கொள்ளையடிக் கிறார்கள்!"**

**"காங்கிரஸ் ஆட்சியில் இப்படி ஒரு சம்பவம், எங்கேயாவது நடைபெறுமா? நடைபெற்றிருக்கிறதா?"**

**"நாத்திகம் பெருத்து விட்டது; நாசவேலைகள் நடக்கின்றன!"**

இதுபோலப் பேசியும் - எழுதியும் தங்கள் ஆத்திரத்தை தி. மு. க. ஆட்சியின்மீது கொட்டித் தீர்த்துக் கொண்டிருக்கிறார்கள்!

மன்னை ஆலயத்தில் நடந்த சம்பவத்தை, யாரும் விளையாட்டுக்குக்கூட ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்!

'கடவுளே இல்லை' என்று கூறுகின்ற நாத்திக வாதத்திலே கூட, இந்த நாச வேலைகளுக்கு வக்காலத்து வாங்கும் கொள்கை கிடையாது.

அதையெல்லாம் மறந்துவிட்டு, 'எது கிடைத்தாலும் அதை எடுத்துக் கழகத்தைத் தாக்கவேண்டும்' எனக் கெடு நினைப்பாளர்கள் திட்டமிட்டுச் செயல்படுகிறார்கள்! கொலையும் கொள்ளையும், அரண்மனைகளிலும் நடைபெறுகின்றன - ஆலயங்களிலும் நடைபெறுகின்றன...!

வட மாநிலங்களில் சில பகுதிகளில், இன்னமும் தொடர்ந்து வழிப்பறிக் கொள்ளைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன!

ஆண்டவனுக்கு நடக்கும் திருவிழாக்களிலேயே, கழுத்துமணி அறுக்கும் பக்தனும் வரத்தான் செய்கிறான்.

ஆண்டவனின் உண்டியலைப் பங்கு போடும் பெருச்சாளி களும் இருந்திருக்கிறார்கள்!

அம்மன் கழுத்தில் கிடந்த நகைகளைத் திருடிய அர்ச்சகர்களும் இருந்திருக்கிறார்கள்!

இவைகள் எல்லாம், சமுதாயத்தில் நீண்டகாலமாக இருந்துவரும் தீமைகள்!

தீமைகளை அறவே ஒழிக்க முடியாத காரணத்தினால் தான், அவைகளைக் கட்டுப்படுத்த - கண்டிக்க - சட்டங்கள் இருக்கின்றன!

அதனைச் செயல்படுத்த இந்த அரசு, தயக்கம் காட்டியதும் இல்லை!

ஆயினும், 'மன்னை ஆலயத்துச் சம்பவத்துக்குத் தி. மு. க. ஆட்சிதான் காரணம்' என்பது, எவ்வளவு எரிச்சலின் விளைவு என்று புரிகிறதல்லவா?

போலீசு அதிகாரிகளே உடந்தையாக இருந்து-திருவையாறு கோயிலில் பெரிய கொள்ளை ஒன்றை நடத்தி, பின்னர் பிடிபட்டார்களே - அது யாருடைய ஆட்சிக் காலத்தில்?

அய்யாவின் மாணவர்கள் ஆண்ட போதா? அல்லது அண்ணாவின் தம்பிகள் ஆண்ட போதா?

இல்லை! காங்கிரசுக் கனவான்கள் ஆட்சி நடத்தினார்களே-அப்போது அதாவது, 1950-51-ஆவது ஆண்டில்!

"அரசு எவ்வழியோ குடிகள் அவ்வழி" என்று இன்று சிலர் நம்மைக் குறைகூறுகிறார்களே-திருவையாற்றுக் கோயில் கொள்ளை அப்போதிருந்த அரசு வழியில் நடைபெற்றதுதானா?

சிவபுரம் நடராசப் பெருமானையே அமெரிக்காவுக்குக் கடத்தியவர்கள் யார்? எந்தக் குடும்பத்தினர்? எந்த ஆட்சியில்?

குடும்பமும், காங்கிரசு-ஆட்சியும் காங்கிரசு அல்லவா?

அப்போது எங்கே போயின-இந்த எரிச்சல் எழுத்தாணிகள்?

மன்னார்குடி சம்பவத்தைக் கழகக் கொள்கைகளோடு இணைத்து, நமது ஆட்சிக்கு மாசுகள் கற்பிக்க மலைமலையாக எழுதிக் குவிக்கிறார்களே-அவர்களுக்கு இதோ ஒரு செய்தி!

நீ படித்துப் பார்!

நாட்டுக்கும் சொல்லு!

**"இந்த ஆண்டு மே திங்கள் மூன்றாம் வாரத்தில் ஜெய்ப்பூர் நகருக்கு அருகில் உள்ள கால்டா ஆலயத்தில் இருந்த 250 ஆண்டுக் காலத் தொன்மை வாய்ந்ததும், பல உலோகங்களால் செய்யப்பட்டது மான சூரிய பகவான் விக்கிரகம் ஒன்று திருடிச் செல்லப்பட்டுவிட்டது."**

**"ஆலயத்தின் அர்ச்சகர் ஒருவரின் கழுத்து நெரிக் கப்பட்டு-கொலை செய்யப்பட்டு-சடலத்தையும் குளத்தில் போட்டுவிட்டுத் திருடர்கள் ஓடி விட்டார்கள்!"**

**"இரவு பூஜைக்கு மற்றோர் அர்ச்சகர் வந்த போதுதான், விக்கிரகம் காணாமற்போன விபரமே தெரிந்தது!"**

இப்படிச் செய்தி, தமிழ்-ஆங்கில நாளேடுகள் அனைத்திலும், மே 29-ஆம் தேதியன்று வெளியாகியிருக்கிறது!

அந்த ஜெய்ப்பூர், செங்கற்பட்டு மாவட்டத்திலே இருந்தால், இந்நேரம் இங்குள்ள எரிச்சல் எழுத்தாணிகள் அணிவகுத் திருக்கும்-நம்மையும், நமது கொள்கைகளையும் தாக்க!

அந்தக் கால்டா ஆலயம் மட்டும் நமது கடலூருக்குப் பக்கத்திலே இருந்திருக்குமானால், கருணாநிதியை எதிர்க்கக் கச்சைக் கட்டிக்கொண்டு, ஏடுகள் புறப்பட்டிருக்குமே!

அந்த ஜெய்ப்பூர் கால்டா ஆலயத்து சூரியபகவான் எழுந்தருளியிருந்த இடம்-இராஜஸ்தான்!

அர்ச்சகர் கொலை செய்யப்பட்டுக் குளத்திலே வீசப்பட்ட மாநிலம்-இராஜஸ்தான்!

மன்னார்குடியில்-அர்ச்சகரைக் கொன்றுவிட்டு ஆபரணங் களைத் திருடினார்கள்!

ஜெய்ப்பூரில்-அர்ச்சகரைக் குளத்தில் போட்டு அமுக்கிவிட்டு, ஆண்டவனையே தூக்கிக் கொண்டு போய் விட்டார்கள்!

இராஜஸ்தானத்தில் நடைபெறுவது கழக ஆட்சியல்ல-காங்கிரசு ஆட்சி!

**ஜெய்ப்பூரும் நடக்கக்கூடாது-**
**மன்னார்குடியும் நடக்கக்கூடாது-**

இதுவே நமது கருத்து, ஆனால் இங்குள்ள எதிர் தரப்பினர், 'மன்னார்குடிக்குக் காரணம், கழக ஆட்சி' என்கிறார்களே-ஜெய்ப்பூருக்குக் காரணம் எதுவென்று எழுதப் போகிறார்கள்?

அன்புள்ள,

**மு. க.**

31-05-1975

# 132. எண்ணினேன் - இயலவில்லை; எழுதினேன்!

**உடன்பிறப்பே,**

என் சிந்தை - அணு ஒவ்வொன்றும் சிலிர்க்க இதய வாழ்த்துக் களைப் பொழிந்து - கழகத் தேர்தல் நிதிக்காக இரண்டரை இலட்சத் துக்கு மேற்பட்ட வெண் பொற்காசுகளையும் வாரி வழங்கி - பிறந்த நாளில் உன் திருமுகத்தையும் காட்டி ஊருக்குத் திரும்பி விட்டாய்!

நலம் விசாரிக்க நேரமில்லை: 'உட்கார்' என்று உபசரிக்க இடமில்லை; வரிசை வரிசையாக நீ வீதியிலே அணிவகுத்து நின்று - மெல்ல மெல்ல நகர்ந்து என்னருகே வந்து வாழ்த்துக் கூறியிருக்கிறாய் என்பதைக்கூட, மறுநாள் நாளேடுகளில் வந்த புகைப்படங்களில் கண்டுதான் புரிந்து கொள்ள முடிந்தது!

உன் தோளில் தொத்தி வந்த கிள்ளைமொழிப் பிள்ளைச் செல்வங்கள், பிஞ்சுக் கரங்கள் குவித்து வணக்கம் தெரிவித்தபோது, நெஞ்சம் எப்படி இன்பப் பேரருவியாக மாறிற்று தெரியுமா?

உன் கரமும்-என் கரமும் ஒன்றையொன்று பின்னிக் கொண்டது, மின்வெட்டு நேரம்தான் இருக்கும்? அந்த உணர்ச்சிப் பெருக்கை வெளியிட வார்த்தைகளைத் தேடுகிறேன்-கிடைக்கவில்லை!

அந்த நொடிப்பொழுதிலும் நம் இதயங்கள் வாய் திறந்து எவ்வளவு செய்திகளைப் பேசிக் கொண்டன-என்பது, உடன் பிறப்பே-உனக்கும் எனக்கும்தானே! தெரியும்?

தாயும் தந்தையும் படமாக விளங்கிட-பெரியாரும் அண்ணாவும் சிலையாக வீற்றிருக்கும் அந்தச் சிறிய கூடத்துக் குள்ளே நீ குவித்த மாலைகள் ஒவ்வொன்றிலும் நிறைந்திருந்த மலர்களின் இதழ்கள் ஒவ்வொன்றும், என்னைப் பெற்றோர்க்கும்-வளர்த்து ஆளாக்கியோருக்குமல்லவா சொந்தம் என எண்ணிக் கொண்டு இன்பப் பெருமூச்சு விட்டேன்!

அறிவுக்கோ - ஆற்றலுக்கோ - பதவிக்கோ - எதற்குமல்ல; 'நான் உன் ரத்தம்' என்ற ஒரேஒரு தகுதிக்குத்தான் அணி அணியாக வந்து என்னைப் பாராட்டினாய் என்பதை மறவேன்!

குலப் பெருமை-குடும்பப் பெருமை-என்ற பெரும் பின்னணிகளைக் கொண்டவனல்ல நான்; மிகச் சாமானியன்; 'உன்னோடு இருக்கிறேன்-அல்லது நீ என்னோடு இருக்கிறாய்' என்ற கௌரவத்தைத் தவிர, வேறு கௌரவம் எதுவுமில்லை!

ஆனால், எல்லாவற்றையும்விட இதனையே மகத்தான கௌரவமாகக் கருதிக் கொண்டிருப்பவன்!

என்னால் உயர்ந்தவர்கள்-என் தோள்களை ஏணிப் படிக ளாக்கிக்கொண்டு ஏறியவர்கள் ஈட்டி முனைகளால் குத்திக் குத்தி என் இதயத்திலிருந்து கசிகின்ற இரத்தத் துளிகளைத் துடைத்துவிட்டு மருந்து போடுகிறாய், நீ!

இப்போது நினைத்துக் கொள்கிறேன்-அவர்களுக்காகச் செலவிட்ட நேரத்தை உனக்காகச் செலவிட்டிருந்தால், இன்னும் எத்துணை அன்பினை உன்னிடமிருந்து பெற்றிருக்க முடியும் நான்!

அதனால் என்ன-இப்போது நீ அள்ளிக் கொட்டுகின்ற அன்புக்கு அளவேது? எல்லையற்ற அன்புக் கடலாகவன்றோ காட்சி தருகிறாய்?

பிள்ளைப் பருவத்தில் உன்னோடு சேர்ந்து 'கொடி பிடித்தேன்; கோஷம் போட்டேன்; கூட்டம் நடத்தினேன்; மேடை போட்டேன்; விளம்பரங்களை ஒட்டினேன்; தோரணங்களைக் கட்டினேன்; தொண்டனாக இருந்தேன்' இன்று நீ என்னை, 'தலைவன்' என்கிறாய்.

இல்லை, இல்லை; நான் தலைவன் இல்லை; நாம் வளர்த்த இயக்கத்தை நடத்திச் செல்லும் நிர்வாகப் பொறுப்புக்கு நீ வைத்துள்ள அடையாளக் குறிகள்தான், தலைவர்-பொதுச் செயலாளர்-பொருளாளர் என்பதெல்லாம்!

பெரியாருக்கு மாணவர்களாய் விளங்கிய பருவத்திலிருந்தே பழகுகிறவர்கள்தான்-பாசம் கொண்டு திகழ்ந்தவர்கள்தான்-இன்றைக்கு இந்தப் பேரியக்கத்தை நடத்திச் செல்லும் பொறுப்பை ஏற்றிருக்கிறோம்!

பேரறிஞர் அண்ணாவின் தம்பிகளாய்-அவரைவிட்டு அகலாது - அவர் இட்ட பணிகளை நிறைவேற்றியும், அவரோடு அமர்ந்து இயக்க வளர்ச்சியைச் சிந்தித்தும் இரண்டறக் கலந்து இருந்தவர்கள்தான் இன்றையக் கழகத்தின் பொறுப்பாளர்களாகிய நாங்கள்!

வேண்டுகோள்தான் விடுக்கிறோம், நாங்கள்; அதனை நீ கட்டளையாக ஏற்றுக் கொள்கிறாய்!

ஏன்? என்ன காரணம்? எங்கள் வேண்டுகோள் எங்களுக்காக அல்ல; தமிழ்ச் சமுதாயத்தின் பெருமையைக் காப்பாற்ற!

தாழ்த்தப்பட்டும், பிற்படுத்தப் பட்டுமிருக்கின்ற அடித்தளத்து மக்கள் - நடுத்தர வர்க்கத்தினர் - புறக்கணிக்கப்பட்டோர் - ஆகியோரது வாழ்வில் விளக்கேற்றி வைக்க!

இந்த உண்மையை நீ உணர்ந்து கொண்டிருப்பதாலேயே, அன்பு வேண்டுகோளை ஆணையாக எடுத்துக் கொண்டு செயல்படுகிறாய்;

என் பிறந்த நாளுக்கு மறுநாள், மாவட்டச் செயலாளர்களின் கலந்துரையாடல் கூட்டம். தலைமைக் கழகத்தில் நடந்தது.

மாவட்ட மாநாடுகளை, நெல்லையில் நடத்த கதிரவனும் - சேலத்தில் நடத்த ஆறுமுகமும் நாட்களைக் குறித்துக் கொண்டனர்.

அண்மையில்தான் சிங்கக் குட்டி போன்ற செல்வ மகனை கார் விபத்தில் பலி கொடுத்த புதுவை மாநில அமைப்பாளர் சண்முகமும் வந்திருந்தார்; புதுவை மாநாட்டுக்கும் தேதி கேட்டுப் பெற்றுக்கொண்டார்.

ஜூலை, ஆகஸ்டு மாதங்களுக்குள் மாவட்ட மாநாடுகள் எஞ்சியவை நடத்தப் பெற்று - அதன் பிறகு செப்டம்பரில் கழகப் பொது மாநாடு நடைபெற்றாக வேண்டும்.

எல்லாம், உன் உழைக்கும் தோள்களை நம்பி எடுக்கப்பட்ட முடிவுகள்தான்!

இதற்கிடையே, அண்ணன் காட்டிய வழியில் - ஜூன் 15-ஆம் நாள், தமிழ்நாட்டின் தேவைகளை வலியுறுத்தி விரைவுபடுத்த மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லும் எழுச்சி நாளை, நாடெங்கும் கொண்டாடவேண்டும்.

சேலம் தொழிற்சாலை -
குமரி இரயில் பாதை -
நெய்வேலி இரண்டாம் சுரங்கம் -
கல்பாக்கம் -
சேதுசமுத்திரம் -
காவிரிப் பிரச்சினை -
சென்னைக்குக் கிருஷ்ணாநீர் -

இவை அனைத்தும், எண்ணெய் தடவிய கண்ணாடியில் நகரும் ஆமை போல் இருக்கின்றன!

வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள அரிசிப் பற்றாக்குறையை ஈடுகட்ட - வெளிநாட்டு அரிசி வரவழைத்துத்தர மத்திய அரசு தீவிர முயற்சி எடுத்திட வேண்டும்.

இவைகளையும், இவைபோன்ற எண்ணற்ற நமது தேவைகளையும் மத்திய அரசு அலட்சியப்படுத்துவதைச் சுட்டிக் காட்டத்தான் எழுச்சி நாள்! ஜூன் 15-இல்!

மக்களுக்கு விளக்கம் கிடைக்க -

மத்திய அரசு விழிப்புடன் நம் பிரச்சினைகளைக் கவனிக்க -

இந்த எழுச்சி நாளில் நாமும், தோழமைக் கட்சியினரும் பங்கு கொள்கிறோம்.

அன்பு உடன்பிறப்பே!
ஆற்றலின் உறைவிடமே!
உழைப்பின் உருவமே!
உன் கரங்களில் எழுச்சிக் கொடி உயரட்டும்!
உன் விழிகளில் எழுச்சி பொங்கட்டும்!
உன் மொழி, தமிழகத்தின் எழுச்சிக் குரலாக அமையட்டும்!

என் பிறந்த நாளுக்கு வந்த உன்னிடம் இவ்வளவும் பேச வேண்டுமென எண்ணினேன் - இயலவில்லை; ஆகவே எழுதினேன்.

அன்புள்ள,

**மு. க.**

07-06-1975

# 133. மோசமான முன்மாதிரி!

**உடன்பிறப்பே,**

எளிய - இனிய இயல்பு படைத்த திரு. தார் அவர்கள் திடீரென மறைந்தது, வேதனையான செய்தி!

பெரும் எதிர்பார்ப்புடனும் - மிகுந்த பரபரப்புடனும் மத்திய அமைச்சரவையில் பொறுப்பேற்றுக் கொண்ட அவரை, திடீரெனப் பதவி விலக்கி - சோவியத் தூதராக ஆக்கினார்கள்; நீண்ட நாட்கள் அந்தப் பொறுப்பை வகிக்க முடியாமல், பழகுதற்கினிய அந்தத் திறமையாளர் மறைந்துவிட்டார்!

அதற்கு அனுதாபங்களைத் தெரிவித்துக் கொண்டிருக்கும் போதே, பிரதமர் இந்திராகாந்தியின் தேர்தல் செல்லாது என்ற தீர்ப்பை அலகாபாத் உயர் நீதிமன்றம் வழங்கிய தகவலை வானொலி அறிவித்தது!

அப்போது நான், தஞ்சை மாவட்டம் முத்துப் பேட்டையில் இருந்தேன்; பத்திரிகையாளர்கள் சூழ்ந்து கொண்டனர்; 'கழகத்தின் மற்ற தலைவர்களைக் கலந்து கொண்ட பிறகே கருத்து அறிவிக்க முடியும்' என்று கூறிவிட்டுச் சென்னை வந்தேன்.

நாவலர்-பேராசிரியர்-மற்றும் கழக முன்னணியினர் இடம் கலந்துரையாடிய பிறகு, கழகத்தின் கருத்து அறிவிக்கப் பட்டுள்ளதை, நீ ஏடுகளில்-கண்டிருப்பாய்!

"உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு - அதனையேற்றுப் பதவி விலகுவது முறையா அல்லது பதவியில் தொடர்ந்து இருப்பது முறையா?" என்ற கேள்விகள் நாட்டில் எழுந்துள்ளன!

அதற்குள்ளாக, ஆளுங் காங்கிரசுக் கட்சியினர் - அவர் தம் ஆதரவாளர்கள் நீதிமன்றத்தையே கண்டிக்கிற வகையில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவதும், நீதிபதிகளின்

கொடும்பாவிகளைக் கொளுத்துவதும், 'நாட்டுக்கு எப்படிப்பட்ட வழிகாட்டும் தன்மை' என்று நமக்குப் புரியவில்லை!

உயர் நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் 'அப்பீல்' செய்துகொள்ளப் போவதாக அறிவித்துவிட்டு, 'இந்திராவின் சேவை - நாட்டுக்குத் தேவை' என்று ஊரெல்லாம் சுவரொட்டிகளை ஒட்டுவது, எந்தவகை அரசியல் என்பதை அவர்கள்தான் விளக்கவேண்டும்.

"இந்த முறைகள் சரியானவைதான்" என்று வாதிட்டால், நமது கழக நண்பர் மலைச்சாமியின் தேர்தல் செல்லாது என்று நீதிமன்றம் அறிவித்தபோது, "மலைச்சாமியின் சேவை - மதுரை மாவட்டத்துக்குத் தேவை" என்று சுவரொட்டிகளை ஒட்டியிருக்கலாமே!

இன்று அலகாபாத் உயர் நீதிமன்றத் தீர்ப்பை வரிக்கு வரி சில ஏடுகள் விமர்சித்துத் தலையங்கங்கள் தீட்டுகின்றன:

'தவறு' என்று கூறவில்லை; அந்தத் தலையங்கங்களைப் படித்து, நாமும் சட்ட நுணுக்கங்களைப் புரிந்துகொள்கிறோம்!

பாவம் - பரிதாபத்திற்குரிய மலைச்சாமி! அவர் தேர்தல் செல்லாது என்று நீதிமன்றம் தீர்ப்பு எழுதியபோது, அதுபற்றிய விளக்கமான தலையங்கங்களை எழுத ஏடுகள் தயாராக இல்லை!

பிரதமர் இந்திரா காந்தியும் - சாதாரண ஒரு பிரஜை மலைச்சாமியும் ஒன்றாக முடியுமா?

முடியாதுதான்!

ஆனால், 'சட்டத்தின் சந்நிதானத்தில் அனைவரும் சமம்' என்று கூறுகிறார்களே - அதனை அந்தப் 'பத்திரிகா தர்ம' வாதிகள் அறியமாட்டார்களா?

ஒரு கோர்ட்டு தீர்ப்புக்குப் பிறகு - அந்தத் தீர்ப்பால் பாதிக்கப்பட்டோர் சார்பில் கோர்ட்டுகளை விமர்சிக்கலாமென்றால், வலம்புரி ஜான் தேர்தல் வழக்கின் தீர்ப்புக்குப் பிறகும், மலைச்சாமியின் தேர்தல் வழக்குத் தீர்ப்புக்குப் பிறகும், இன்றைய ஆளும் காங்கிரசும் - அதன் தோழமை கட்சிகளும் கடைப்பிடிக்கும் முறையை நாமும் கடைப்பிடித்திருக்கலாமே என்று தோன்றுகிறதல்லவா?

பரவாயில்லை; பாரதத்தை ஆளும் கட்சியினர் இப்படி ஒரு முன்மாதிரியைப் படைத்திருக்கிறார்கள்; ஆனால் இதுவே, கோர்ட் தீர்ப்பால் பாதிக்கப்படுகின்ற அனைவருக்கும் பாடமாகிவிடக் கூடாது என்பதே - நமது கவலை!

அன்புள்ள,

மு. க.

15-06-1975

# 134. மறந்தாரா காமராஜர்?

**உடன்பிறப்பே,**

அவசரமாக சில வரிகளில் உனக்கு இந்தக் கடிதம் எழுதுகிறேன். ஏனெனில் இது அவசர காலம் அல்லவா?

திரு. காமராஜர் பேசியிருக்கிறார், நீண்ட நாட்களுக்குப் பிறகு அகில இந்திய அரசியல் நிலைமையைப் பற்றி!

இதைச் சொன்னால் கூட அவருக்குக் கோபம் வந்து, நான் கோபித்துக்கொள்வதாகக் கூறுவார்.

பரவாயில்லை; பெரியவர் அவர்-ஏதாவது சொல்லட்டும்!

**"இந்திரா காங்கிரசும் தி. மு. க-வும் கூட்டு சேர்ந்த போது இந்திரா காங்கிரசால் ஜனநாயகத்துக்கு ஆபத்து என்று நான் சொன்னேன். அதைக் கேலி செய்தார்கள். இப்போது நான் சொன்னது சரியாகி விட்டது"** என்று காமராஜர் பேசியிருக்கிறார்.

அவர் 1971-ஆம் ஆண்டு சொன்னதை நாம் கேட்கவில்லை. குற்றம்தான். ஒத்துக்கொள்கிறேன். ஆனால் 1971-இல் நமக்கு அறிவுரை கூறிய காமராஜர், அண்மையில் நடைபெற்ற புதுவை மாநிலத் தேர்தலில் அதே இந்திரா காங்கிரசோடு கூட்டு சேர்ந்தாரே; அதை மறந்து விட்டாரா - என்பதுதான் எனக்குள்ள சந்தேகம்!

கன்னியாகுமரி ரயில்பாதை அடிக்கல் நாட்டு விழாவில் காமராஜரிடம், முகம் கொடுத்துக் கூடப் பேசாமல் போய்விட்ட இந்திராகாந்தி அம்மையாருடன் பாண்டிச்சேரியில் கூட்டுசேர்ந்து, "ஹெலிகாப்டர்" விமானத்தில் இருவரும் ஒன்றாக புதுவைத் தேர்தல் பிரச்சாரத்துக்குச் சென்றபோது மற்றவர்களுக்கு சொன்ன "ஜனநாயக ஆபத்து" மறந்து போய் விட்டதா? - கேட்கத் தோன்றுகிறது கேட்கிறேன். அவ்வளவுதான்.

நடந்தவைகள் நடந்தவைகளாக இருக்கட்டும்!

இனி நடப்பவைகள் நல்லவைகளாக இருக்க, காமராஜர் அவர்கள் தன் உள்ளத்தை உறுதிப்படுத்திக் கொள்வாராக!

உடன் பிறப்பே! உன் முன்னால் தெரியும் இருளை விலக்க கழகச் செயற் குழுவின் தீர்மானம், இலட்சிய விளக்காக உன் கைகளில் இருக்கட்டும்.

அன்புள்ள,

**மு. க.**

29-06-1975

# 135. எதை நினைப்பது?

**உடன்பிறப்பே,**

உனக்குக் கடிதம் எழுதவே சிலநாட்களாக என்னால் முடிய வில்லை. எத்தனையோ கவலைகளுக்கிடையே இதோ - இதயத்தை உலுக்கும் மற்றொரு கவலையும் என்னைப் பற்றிக்கொண்டு விட்டது. வாய்விட்டு அலறி அழுதால் நெஞ்சின் சுமை குறையும் என்பார்கள். உள்ளத்தில் உள்ளதையெல்லாம் எழுத்துக்களாகக் கொட்டி என் சுமையைக் குறைத்துக் கொள்ள எண்ணினாலும், அந்தச் சுமையை உன் நெஞ்சில் ஏன் தூக்கிவைக்கவேண்டும் என்ற சங்கடமான கேள்வியும் எழத்தான் செய்கிறது.

- இதோ காலமெல்லாம் "கட்சி கட்சி" என்று அலைந்து கொண்டிருந்த உழைப்பின் உருவம் எரிந்து, தணலாகி, சாம்பலாகி, மண்ணோடு கலந்துவிட்டது. எந்தக் காரியமானாலும் என். வி. என். எங்கே? கூப்பிடு! என்று பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும், ஏன், நாமும் தேடிக் கொண்டிருந்த அந்த தீபம் அணைந்துபோய் விட்டது.

ஏறத்தாழ நாற்பது நாட்களுக்கு மேல் நோயுடன் கடுமையான போராட்டம். அந்தப் போர்க்களத்திலும் கூட, அவரது உதடுகள் எதை உச்சரித்தன? அவரது உள்ளம் எதைப்பற்றிப் பேசியது?

பார்க்க வருகிறவர்கள் அவரைப் பார்த்துக் கண்ணீர் கொட்டு வார்கள். அவரோ, அவர்களைப் பார்த்து கழகத்தைப் பார்த்துக் கொள்ளுங்கள் என்று தழு தழுத்த தொனியில் கேட்டுக் கொள்வார்.

ஒரு நாள், அவருக்கே தன் முடிவு தெரிந்துவிட்ட ஒரு தெளிவான நிலை.

தன் மகன்கள் சோமுவையும், செல்வத்தையும் என் கையோடு இணைத்துவைத்து, அவர்களுக்கு ஆணையிடுகிறார். என்ன ஆணை தெரியுமா?

**“நீங்கள் கட்சிக்கும், கலைஞருக்கும் என்றைக்குமே துரோகம் செய்யக்கூடாது. துரோகம் நினைக்கவே கூடாது”**

மருத்துவமனையில் அந்த அறையிலிருந்த அனைவரும் ஓலமிட்டு அழுது விட்டோம்.

பிறகு, என்னைப் பார்த்துச் சொல்கிறார்:

“நான் ஏதாவது என்னையறியாமல் எப்போதாவது தவறு செய்திருந்தால் என்னை மன்னித்துவிடுங்கள்.”

அறுபத்து மூன்று வயதுக்காரர் - அனுபவச் சுரங்கம் - தியாகச் சுடர் - அவர், அவரைவிட பதினோரு வயது இளையவனான என்னைப் பார்த்துச் சொன்ன வாசகம் அது.

எதை நினைத்து மனத்தைத் தேற்றிக் கொள்வது என்றே புரியவில்லையே!

கடற்கரையில் உரையாடும்போது - அவரை எங்கள் நகைச்சுவைக்கு நடுநாயகமாக ஆக்கி மகிழ்வோமே; அதை நினைப்பதா? -

குன்றத்தூர் துப்பாக்கிப் பிரயோகத்தில் குண்டு மழைக் கிடையே தடையைமீறிக் கூட்டம் பேசினாரே; அதையா?

மாநாடுகளில், குறித்த நேரத்தில் சென்றமர்ந்து இறுதிவரை இடைவிடாது அமர்ந்து காரியங்களை கவனிப்பாரே; அதையா?

பொதுக்குழு, செயற்குழு கூட்டங்களில் சொந்தக் கட்சி நண்பர்களே கூடச் சுடு சொல் வீசும்போது - அதனைத் தாங்கிக் கொண்டு நிதானமாக விளக்கங்கள் அளிப்பாரே; அதையா?

இலட்சியத்தை அடைய எந்த இழப்புக்கும் தயாராக இருக்க வேண்டுமென்று, அண்மையில்கூட அவரது பிறந்த நாள் விழா கூட்டத்தில் முழங்கினாரே; அதையா?

“இதுதான் நான் கலந்து கொள்ளும் கடைசிப் பொதுக்குழுவாக இருக்கு” மென்று திருப்பரங்குன்றம் பொதுக்குழுவில் ஆர்த்தெழுந்து பேசினாரே, அதையா? உடன்பிறப்பே, ஜூன் மூன்றாம் நாள் என் பிறந்தநாளுக்கு வீட்டுக்குவந்து, அந்த இயலாத உடம்போடு எனக்கு மாலை அணிவித்தார்.

**அது ஜூன் மூன்று!**
**இதோ ஆகஸ்டு மூன்றில்**
**நான் அவருக்கு-**
**இல்லை! இல்லை! அவரது உடலுக்கு மாலை அணி**
**வித்திருக்கிறேனே! அய்யகோ!**

எத்தனையோ கவலைகள் உண்டு அவருக்கு - என்னைப் போல அவைகளை யெல்லாம் மனதில் அழுத்தி வைத்துக் கொண்டேயிருந்ததால்தான், அந்தக் கொடிய நோயே அவரைத் தாக்கித் தகர்த்தது.

அவரது கவலைகளில் எல்லாம் பெருங் கவலை - கழகத்தை வலுப்படுத்தி, இலட்சிய வெற்றியடைய வேண்டும் என்பதுதான்!

அவரது அந்தக் கவலையை நாம் மதித்து, அவர் கொண்டிருந்த கவலைதீர தொடர்ந்து உழைத்திட ஒற்றுமையாக சபதம் ஏற்றுக் கொள்வதுதான் அந்தத் தலைவருக்கு நாம் காட்டும் நன்றிக் கடனாகும்.

அன்புள்ள,

**மு. க.**

04-08-1975

# 136. உள்துறை அமைச்சரும் - உள்ளூர்த் தலைவர்களும்!

**உடன்பிறப்பே,**

இந்திய உள்துறை அமைச்சர் பிரமானர்தரெட்டியார் அவர்கள் ஐதராபாத்திலிருந்து டில்லி செல்லும் வழியில் சென்னையில் ஒரு கூட்டம் பேசுவதற்காக ஒருநாள் காலை வந்து மறுநாள் காலை டில்லி செல்லத் திட்டமிட்டிருந்தார். அமைச்சர் என். வி. என். அவர்கள் மறைந்து விட்ட காரணத்தால் கூட்டத்தை ஒத்திவைத்து விட்டு, நேரில் வந்து அமைச்சர் வீட்டில் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்திவிட்டு மறுநாள் காலை டில்லி திரும்பிவிட்டார். சில நாட்களாக மிகுந்த பசியோடு இருக்கும் பத்திரிகையாளர் களுக்கு ஒரே உற்சாகம். செய்திகளைத் திரித்துப் போட்டு, தி. மு. க. அரசின்மீது வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொள்ளும் சில வாடிக்கை ஏடுகளுக்கு ஒரே கொண்டாட்டம். திரு. ரெட்டியார், தி. மு. க. அரசை ஒரு சாடு சாடுவார். கண்டனம் தெரிவித்துக் கடுமையாக ஏதாவது சொல்வார். அதை வைத்துக்கொண்டு "ஆபத்து! ஆபத்து! தி. மு. க. அரசுக்கு ஆபத்து!" என்று எட்டு பத்தி தலைப்புச் செய்தி போட்டு விளையாடலாம் என்று சிலருக்கு நினைப்பு! எப்போது இந்த அரசு கவிழும், நாம் ஏறி உட்காரலாம் என்று பெங்களூரில் இருந்தவாறு செய்திக்காகக் காத்திருக்கும் நமது நடிக நண்பருக்கும் அவரது படைத் தலைவர்களுக்கும் ஒரு ஆவல்! ஒரு ஏக்கம்! ஒரு துடிதுடிப்பு!

பாவம்; அவர்களுடைய ஆசையைத் தீர்ப்பது போல் ரெட்டியார் எந்தப் பதிலும் சொல்லவில்லை. அரசியல் நாகரீகம் தெரிந்த வராதலால் அதற்கேற்ப நிருபர்களுக்கு விடையளித்திருக்கிறார். தமிழக அரசு செய்தித்துறையின் சார்பாக வெளியிடப்பட்ட சாதனைகள் பற்றிய விளம்பரத்தைத் திரு. ரெட்டியார் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்து அவரிடமிருந்து ஒரு பதிலையும் பெற்றிருக்கிறார்கள் நிருபர்கள்.

அண்மையில் பிரதமர் அறிவித்துள்ள இருபது அம்ச பொருளாதாரத் திட்டங்களில் பலவற்றைத் தமிழக அரசு ஏற்கனவே தொடங்கி நிறைவேற்றி வருகிறது என்பதை விளக்குவதுதான் அந்த விளம்பரம். இப்படிப்பட்ட விளம்பரங்கள் தேவைதானா? என்று கேட்பவர்கள் உண்டு தமிழ்நாட்டில்!

அவர்களுக்கு வேறு மாநிலங்களின் உதாரணங்களைச் சொன்னால் புரியாது என்பதற்காக, நெருங்கிய நண்பர்களை அவர்கள் பெற்றிருக்கிற கர்னாடக மாநில உதாரணத்தையே சொல்ல விரும்புகிறேன்!

1975 ஏப்ரல் 24-ஆம் தேதியன்று பல்வேறு மாநில ஆங்கில ஏடுகளில்

"Karnataka -
Three eventful years"

அதாவது:

"கர்னாடகத்தில் சாதனை நிறைந்த மூன்று ஆண்டுகள்"

என்ற பெருந் தலைப்பில் தேவராஜ் அர்ஸ் அவர்களின் படத்துடன், கவர்ச்சிகரமான முழுப்பக்க விளம்பரமொன்று வெளியிடப்பட்டிருந்தது. அதைத்தான் நமது செய்தித்துறையினர் பின்பற்றி அதைப்போன்ற ஒரு விளம்பரத்தை பல்வேறு மாநில ஏடுகளில் வெளியிட்டிருக்கிறார்கள். மூன்றாண்டுக் கால சாதனையை முதலமைச்சரின் படத்துடன் கர்னாடகம் வெளியிட்டுக் களிக்கும்போது, தமிழகத்துக்கு மட்டும் அந்த உரிமை கிடையாதா? எதிர்க்கட்சிகளுக்கு எவ்வளவு "பெரிய இதயம்" பார்த்தாயா?

"பிரதமர் என்ன அதிசயமாக அறிவிப்பது? நாங்கள் இவைகளை முன்பே செயல்படுத்தத் தொடங்கிவிட்டோம்" என்ற ஆணவத்தோடு செய்யப்பட்ட விளம்பரமல்ல தமிழக அரசின் விளம்பரம்! பொருளாதாரத் திட்டங்களை பிரதமர் அறிவித்தபோதே; நான் அவைகளை வரவேற்கிறேன் என்று பாராட்டிவிட்டு, தமிழகத்தில் எவை எவை இதுவரை, துவங்கப் பெற்றுள்ளன - இன்னும் மிச்சமுள்ளவைகளையும் துவங்கிடத் தயங்கமாட்டோம்-என்ற விபரத்தைத்தான் வெளியிட்டேன்.

இது கேட்டு மகிழ்ச்சி அடையவேண்டுமே தவிர, எரிச்சல் அடையவேண்டிய அவசியமே இல்லை.

பிரதமர்கூட ஒருவேளை மகிழ்ச்சி அடைந்திருப்பார்.

ஆனால், தமிழ்நாட்டில் உள்ள புதிய காங்கிரஸ் கட்சிக்காரர் களால்தான் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. "ஆகா! ஊகூ! அதெப்படிக் கருணாநிதி சொல்லலாம்" என்று முழங்குகிறார்கள். காரணம், எதையாவது சொல்லி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசைக் கவிழ்த்துவிட்டால், இங்குள்ள சிலருக்கு பதவி மகுடம் கிடைத்துவிடும் என்ற ஆசை!

"மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசைக் குறுக்கு வழியில் கவிழ்க்க முனையக்கூடாது" என்பது பிரதமர் அண்மையில் பல நேரங்களில் சுட்டிக்காட்டி வருகிற அறிவுரை என்பதை இங்குள்ள எதிர்க்கட்சியினர் ஏனோ மறந்து விட்டார்கள்; புரியவில்லை!

**"எல்லா திட்டங்களையும் நிறைவேற்றி முடித்து விட்டோம் என்று சொல்வதை நல்ல உணர்வில் எடுத்துக் கொள்ள முடியாது"**

என்று ரெட்டியார் கூறியதாகத் தமிழ் நாட்டின் பிரபல ஆங்கில தினசரியான 'இந்து'வில் செய்தி வெளியாகியிருக்கிறது.

"But to say that we have already completed the programme will not be in the right spirit"

என்பதாக ரெட்டியார் கூறியுள்ளார்.

நமது அரசின் விளம்பரத்தின் முகப்பிலே

"Tamil Nadu has carried out numerous far-reaching, progressive economic measures"

என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

"எண்ணற்ற முன்னேற்றத் திட்டங்களை நிறைவேற்றி முடித்துள்ளது" என்று குறிப்பிடப்பட்டிருந்தாலும் விளம்பரத்தின் இறுதிப் பகுதியில்

"Tamil Nadu marches ahead to implement the rest of the economic programme of the Prime Minister"

என்று குறிப்பிட்டிருப்பதின்மூலம் மேலும் பல திட்டங்களை நிறைவேற்ற வேண்டியிருக்கிறது என்று சுட்டிக்காட்டியுள்ளதையும் இணைத்துப் பார்த்தால் எல்லா திட்டங்களுமே

"completed"

அதாவது முழுமையாக நிறைவேற்றி முடித்தாகி விட்டது என்ற கருத்தை தமிழக அரசு வெளியிட்டதாக எடுத்துக்கொள்ள முடியாது.

கேள்வி கேட்ட நிருபர்கள், "எல்லா திட்டங்களையும் தமிழக அரசு நிறைவேற்றி முடித்துவிட்டதாகச் சொல்கிறார்களே!" என்று கேட்டிருக்கிறார்கள் போலும். அப்படி அவர்கள் கேட்டிருந்தால் அதற்கு ரெட்டியார் சொன்ன பதில் பொருத்தம்தான்.

என்ன செய்வது பாவம்; எப்படியாவது மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் மோதுதல் வராதா? இடையிலே இருக்கிற சில ஓநாய்கள் இரத்தம் குடிக்கலாமே - என்று எதிர்பார்க்கின்றன, நாக்கை நீட்டிக் கொண்டு!

இன்று நேற்றல்ல; நாம் ஏற்கனவே திட்டவட்டமாக அறிவித்து விட்டிருக்கிறோம்; கட்சிகள் என்ற அளவில் சில கருத்து வேறுபாடுகள், ஒன்றிரண்டு கொள்கை வேறுபாடுகள் - தமிழகத்தை ஆளுகிற கட்சிக்கும், மத்தியில் ஆளுகிற கட்சிக்கும் நிச்சயமாக உண்டு!

ஆனால், சட்டம் ஒழுங்கு அமைதி காப்பது - நிர்வாகச் சிக்கல் எழாமல் பார்த்துக்கொள்வது போன்றவைகளில்-மோதுதலுக்கு இடமே இல்லை.

இப்போது அறிவிக்கப்பட்டுள்ள நெருக்கடி நிலைப் பிரகடனம் - இந்திய அரசியல் சூழ்நிலை-இவைகளில் தி. மு. கழகத்தின் நிலை என்ன என்பதை நாம் தெளிவாக எடுத்துரைத்திருக்கிறோம். "உறவுக்குக் கை கொடுப்போம் - உரிமைக்குக் குரல் கொடுப்போம்" என்பதே நாம் வகுத்துக் கொண்டுள்ள மத்திய மாநில உறவு முறையாகும். இதனை முறித்து, அவசர அவசரமாக இந்த அரசைக் கவிழ்க்க இங்குள்ளவர்கள் பரபரப்புக் காட்டுகிறார்கள்.

உடன்பிறப்பே! பதவியைப் பறிகொடுப்பதா - என்பதற்காக அல்ல; அதனையே சதமென நம்பியிருப்பவர்களும் நாமல்ல!

ஆனால் நம்மைக் கீழே தள்ளப் பதைக்கிறார்களோ! இங்குள்ள சிலர் - அவர்களை நினைத்தால்தான் பரிதாபமாக இருக்கிறது!

கேளேன்; ஒரு செய்தியை! உத்தமத் தலைவர் என். வி. என். மறைந்துவிட்டார், ஊரே அழுகிறது. பல்லாயிரவர் வந்து அஞ்சலி செலுத்திக் கண்ணீர் வடிக்கின்றனர். அவரது சடலம் வீட்டில் இருக்கிறது. அந்தத் துக்க தினத்தில் கூட, ஒரு கம்யூனிஸ்டு தலைவர் தி. மு. க. அரசு மீது குறைகூறும் மகஜரைத் தூக்கிக்கொண்டு பிரமானர்த ரெட்டியாரிடம் ஓடியிருக்கிறார்; ராஜ்பவனத்துக்கு!

நம் கழகக் காவலர் போய்விட்டாரே என நாம் அழுது கொண்டிருக்கிறோம். நம்மைக் கட்டி அழுவதுபோல் நடித்துவிட்டு, கம்யூனிஸ்டு தலைவர் கழக அரசைக் கவிழ்க்க கச்சை கட்டிக்கொண்டு மனு தயாரித்து மத்திய அமைச்சரிடம் கொடுத்திருக்கிறார். அந்தக் கம்யூனிஸ்டு தலைவருக்கும் இழவு வீட்டில் ஒப்பாரி வைப்பதற்கென்றே வருகின்ற சில வயதான பெண்டிர்களுக்கும் எனக்கு வித்தியாசமே தெரியவில்லை. அந்த "ஒப்பாரி" தலைவரைப் பார்த்து உள்துறை அமைச்சர் மனதுக்குள்ளாகவாவது கேலியாகச் சிரித்துக்கொண்டுதான் மனுவை வாங்கியிருப்பார். பிற பின்னர் எழுதுகிறேன்.

அன்புள்ள,

**மு. க.**

05-08-1975

# 137. விநோதமான பிறவிகள்! விளையாடட்டும்!

**உடன்பிறப்பே,**

நேற்று உனக்கு எழுதியதைத் தொடர்ந்து சில விபரங்களை இன்று எழுதுகிறேன். சென்னை ராஜ்பவனத்தில் 3-8-75 அன்று அதாவது நமது என். வி. என் மறைந்த அன்று தங்கியிருந்த உள்துறை அமைச்சரிடம் கம்யூனிஸ்டு தலைவர்கள் தமிழக அரசைக் குறை கூறிச் சில புகார்களைக் கொண்ட மனுவைக் கொடுத்தார்கள் அல்லவா; அந்த மகஜரில் உள்ளவைகளை 4-8-75 மாலை வெளியான ஒரு தினசரி, முழுமையாக வெளியிட்டிருக்கிறது. அப்படி வெளியிடப்பட்டது பற்றி மத்திய அரசின் தணிக்கை அதிகாரி, என்ன கருதுகிறாரோ - அது நமக்குத் தெரியாது. பிரமானர்த ரெட்டி அவர்களிடம் கம்யூனிஸ்டு தலைவர் கொடுத்த புகாரில் முக்கிய இடத்தைப் பெறுவது:

> **"தமிழ்நாட்டில் எதிர்க்கட்சிக்காரர்கள் மீது "மிசா" சட்டம் தவறான முறையில் பயன்படுத்தப்பட்டு வருகிறது."**

என்பதாகும்.

"மிசா" சட்டத்தை அரசியல் காரணங்களுக்காகப் பயன் படுத்தக் கூடாது என்பதற்காக, தி. மு. க. வாதாடி வந்திருக்கிறது.

அதே நேரத்தில் சமூக விரோதிகள், பதுக்கல்காரர்கள், கடத்தல் பேர்வழிகள், கள்ளச் சாராயம் காய்ச்சுவோர், கலப்படம் செய்வோர் - அந்நியச் செலாவணி மோசடிக்காரர் - இப்படிப்பட்டவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை மிகக் கடுமையாகத் தண்டிக்க வேண்டுமென்பதில் தி. மு. க. அரசு தீவிரமான கொள்கையைக் கொண்டிருக்கிறது.

> **"எதிர்க்கட்சிக்காரர்கள்மீது "மிசா" சட்டத்தைப் பழிவாங்கும் முறையில் பயன்படுத்தக்கூடாது"**

என்ற கருத்தைக் கம்யூனிஸ்டு வலதுசாரிகள் இப்போதாவது - அதாவது; தி. மு. க. ஆட்சியைக் குறை கூறுவதற்காவது ஏற்றுக் கொண்டிருக்கிறார்களே; அதற்காக அவர்களைப் பாராட்டத்தான் வேண்டும்.

ஆனால், பிரமானர்த ரெட்டியாரிடம் மகஜர் கொடுத்த வலது கம்யூனிஸ்டு தலைவர், எதிர்க்கட்சி என்பதற்குக் கொடுத்துள்ள விளக்கம் என்ன?

சொல்லவே எனக்குச் சங்கடமாக இருக்கிறது.

கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்கள்தான் தமிழ்நாட்டில் எதிர்க் கட்சியினர் என்று எண்ணும்படியான நிலையில் ஒரு அபாண்டமான கற்பனை மாளிகையை அவர் எழுப்பியிருக்கிறார். தமிழ்நாட்டில் உள்ள எதிர்க்கட்சியினர் அனைவரையும் அவ்வளவு தரக்குறைவாக மதிப்பிடுகிற எண்ணம், நமக்கு என்றுமே ஏற்பட்டதில்லை. ஆளுங் கட்சியானாலும் எதிர்க்கட்சிகளானாலும் எல்லாமே மனிதர்கள் கூடித்தான் நடத்தப்படுகின்றன. எல்லா மனிதர்களுமே நல்லவர்களாக இருந்திட முடியாது. குறைபாடுடையவர்கள், குற்றம் செய்யும் இயல்பு படைத்தவர்கள் எல்லாக் கட்சியிலுமே சிலர் இருக்கத்தான் செய்வார்கள். அந்தச் சிலர் சமூக விரோதச் செயல்களில் ஈடுபடவும் கூடும். அவைகளைக் கட்டுப்படுத்த சட்டங்கள் பயன்படும்போது, வேண்டுமென்றே கழக அரசின் மீது களங்கம் சுமத்தி, சமூக விரோதச் செயல்களுக்கு மறைமுகமாகவோ, தெரிந்தோ, தெரியாமலோ ஆதரவளிப்பது வேதனைக்குரிய ஒன்றாகும்.

**தமிழக அரசு, மத்திய அரசின் தாக்கீதுக்கேற்ப இதுவரையில் 123 கள்ளக் கடத்தல்காரர்களைக் கைது செய்திருக்கிறது.**

அந்த 123 பேரில், யாராவது சிலர், ஏதாவது சில அரசியல் கட்சிகளுடன் தொடர்பு வைத்திருக்கக் கூடும்; அதற்காகச் சட்டம் தயக்கம் காட்டவில்லை. தமிழக அரசும் தன் கடமையைப் பாரபட்சமின்றிச் செய்துள்ளது.

**தமிழக அரசைப் பொறுத்த வரையில் தானே முன்வந்து சமூக விரோதச் செயல்களைத் தடுக்க, "மிசா" சட்டத்தைப் பயன்படுத்திப் பலரைக் கைது செய்துமிருக்கிறது.**

☐ கள்ளச்சாராய வியாபாரிகள், உற்பத்தியாளர்கள் இது வரையில் 169 பேர் கைதாகியுள்ளனர்.

☐ உணவு பதுக்கியவர்கள் 17 பேர் சிறையில் இருக்கிறார்கள்.

☐ தானியங்களில் கல்லைக் கலந்து விற்பனை செய்த எட்டு பேர் சிக்கிக்கொண்டு சிறைப்பட்டுள்ளனர்.

☐ நச்சுப்பருப்பு விற்பனையாளர்கள் ஆறுபேர் காராக் கிரகத்தில் உள்ளனர்.

☐ திருட்டுச் சொத்துக்களை வாங்கி விற்கும் வியாபாரிகள் பதினாறுபேர் கைதாகியுள்ளனர்.

**இந்த நடவடிக்கைகள் எல்லாம் தமிழ்நாட்டில் உள்ள எதிர்க்கட்சிகள்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்று கம்யூனிஸ்டுகள் புகார் செய்வது வேடிக்கையாக இருக்கிறதல்லவா? விபரீதமாகவும் தோன்றுகிற தல்லவா?**

கள்ளச்சாராயம் காய்ச்சி, விற்பனை செய்தவர்கள், அதற்கு மறைமுகமாக உதவியவர்கள் - என்று கைது செய்யப்பட்டோர் பட்டியலில் ஆளுங் கட்சியான தி. மு. கழகத்தைச் சேர்ந்தவர்களும் சிலர் இருக்கிறார்கள். பஞ்சாயத்து யூனியன் தலைவர் ஒருவர்-தி.மு.கழகத்தைச் சேர்ந்தவர்-இந்த விவகாரத்தில் கைதாகியுள்ளார்.

திரு.பிரமானர்தரெட்டியாரிடத்தில் கம்யூனிஸ்டு தலைவர் கொடுத்த மகஜரில் "மிசா" குற்றப் பட்டியலில் இடம் பெற்றுள்ள இரண்டு மூன்று பேருக்காக கடுமையாக வாதாடியுள்ளார். அவர்கள் கம்யூனிஸ்டு ஆதரவாளர்கள் அல்லது, புதுக் காங்கிரஸ் ஆதரவாளர்கள் என்று குறிப்பிட்டிருக்கிறாராம்.

உடன்பிறப்பே! இதில் உண்மை என்ன தெரியுமா? கம்யூனிஸ்டு தலைவர் இன்று யாருக்காக கஷ்டப்பட்டு வாதாடுகிறாரோ! அந்த "விஷச் சாராய அரிஷ்ட வியாபாரி" - சில நாட்களுக்கு முன்பு ஒன்றிரண்டு தி. மு.க. ஒன்றியச் செயலாளர்களை அணுகி, தன்னை ஒரு தி.மு.க. அனுதாபி என்றும் தன்னைக் கள்ளச்சாராயக் குற்றம்சாட்டி "மிசா" பட்டியலில் சேர்த்திருப்பதை விலக்கவேண்டுமென்றும் தூதுக்களை அனுப்பி முயற்சித்துப் பார்த்து அந்தத் தூதுக்கள் தோல்வியடைந்த

பிறகு, இப்போது தன்னை ஒரு கம்யூனிஸ்டு அனுதாபி என்று கூறிக்கொண்டு, அதற்குத் "தோதானவர்"களை பிடித்துக் கொண்டு கள்ளச்சாராய விஷயத்தைப் பெரிய அரசியல் விவகாரமாக ஆக்க முனைந்திருக்கிறாராம்.

அரசியல் எப்படிப் போகிறது பார்த்தாயா?

எது எதற்குத்தான் மனுக் கொடுப்பது - மகஜர் வழங்குவது - தூதுபோவது - என்றில்லாமல், நமது கழகத்தின்மீதும், கழக அரசின் மீதும் உள்ள காழ்ப்பைக் கொட்டிக்கொள்கிறார்கள்.

கொள்கைக்காகப் பாடுபடவேண்டியதை மறந்துவிட்டு ஒரு சமதர்ம முற்போக்குக் கட்சியின் ஆட்சிக்குக் குழிதோண்ட குறுக்குவழிகளையும், கோணல் மார்க்கங்களையும் தேடிச் செல்லும் தமிழ்நாட்டு வலது கம்யூனிஸ்டுகளைப் பார்த்துக் காரல்மார்க்சும், லெனினும் கைகொட்டிச் சிரிக்கிறார்கள். கம்யூனிஸ்டுகள் நடத்தும் இந்த மகஜர் யாத்திரைகள் தமிழ்நாட்டோடு முடிந்து விட்டதா?

இல்லை! இல்லை!

டெல்லியிலேயும் இவர்கள் தலைமையில் நடிகர் கட்சியினரும் வேறு சில தமிழ்நாட்டு "நன்றிகெட்டது"களும் முக்கியமான இடங்களுக்கு இரண்டொரு நாட்களாக நடையாய் நடக்கிறார்களாம்!

எதற்குத் தெரியுமா: அந்தத் தூது?
எதைத் தடுப்பதற்கு?
எதைக் கெடுப்பதற்குத் தெரியுமா?

அதைக் கேட்டு, மார்க்ஸ் - லெனின் மட்டுமல்ல; ஸ்டாலின் கூட சிரிக்கிறான்.

பரவாயில்லை; விநோதமான பிறவிகள்! விளையாடட்டும்! நாமும் வேடிக்கை பார்ப்போம்!

அன்புள்ள,

**மு. க.**

06-08-1975

# 138. ஒரு தகுதி போதும் எனக்கு!

**உடன்பிறப்பே,**

நெல்லை மாநாட்டில் "எமர்ஜென்சி"யைத் திரும்பப் பெறுவது குறித்து, நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் மற்றக் கட்சித் தலைவர்களையும், முதலமைச்சர்களையும், இந்தியப் பிரதமரையும் சந்திப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்ற கருத்தும், அதற்கான பணியாற்றுமாறு எனக்குக் கட்டளையும் பொதிந்திருப்பதைக் கண்டு யாருக்குமில்லாத கோபம் பெரியவர் பக்தவத்சலம் அவர்களுக்கு ஏன் பொங்கி வழிகிறது என்றுதான் எனக்குத் தெரியவில்லை.

**"இந்தக் காரியத்தில் ஈடுபடக் கருணாநிதிக்கு என்ன தகுதி இருக்கிறது? இவர் யார்? இவருக்கென்ன தகுதி இருக்கிறது?"**

என்றெல்லாம் ஆவேசமான கேள்விகளை அள்ளி இறைத் திருக்கிறார் பக்தவத்சலனார்.

அவரது கூற்றுப்படி "தகுதி" என்பதற்கு என்ன இலக்கணம்?

மேட்டுக்குடியில் பிறந்திருக்க வேண்டும் என்கிறாரா? அப்படியானால் அந்தத் தகுதி எனக்கில்லைதான்!

**ஏற்கனவே முன்னேறியிருக்கிற சமூகங்களின் காலைப் பிடித்துப் பின்னுக்கு இழுப்பவனுமல்ல நான்– அதே சமயம், பின் தங்கிக் கிடக்கிற சமூகங்களைக் கைதூக்கி விடத் தயங்குபவனுமல்ல!**

இதனால் பாதிக்கப்படுபவர்களின் வெறுப்புக்குப் பயப்படுவது மில்லை; பயனடைகிற, பின் தங்கிய தாழ்த்தப்பட்ட மக்களின் நன்றிக்காகவும் ஏங்கிக் கிடப்பதில்லை. என் கடமையை அண்ணா வகுத்த வழியில் செய்து கொண்டிருக்கிறேன். மிகச் சாதாரண ஒரு

குடும்பத்தில் தோன்றிய சாமான்யன் என்பதற்காக எனக்குத் தகுதி இல்லை என்கிறார் போலும்!

அல்லது கல்லூரி காணாதவன் என்று தகுதியற்ற நிலை மைக்கு என்னைத் தள்ளுகிறார் போலும்!

ஆம், என்றால் என்னைப் போலவே கல்லூரி காணாத பெருந் தலைவர் காமராஜரின் தலைமையில் அமைச்சர் பதவியை வகித்தாரே; அதனை மறந்துவிட்டாரா?

ஒருவேளை; "பதவி" இருந்தால் எல்லாம் மறந்துவிடும் போலும்!

அதனால்தான் இப்போது காமராஜரையும் தாக்குகிறார்.

அனைத்துத் தகுதியும் படைத்தவன் என்று எப்போதுமே நான் நினைத்தது கூட இல்லை.

சட்டப் பேரவையில் ஒருமுறை எதிர்க்கட்சி வரிசையில் இருந்த என் அருமை நண்பர் ஒருவர், **"கருணாநிதியின் சர்க்கார் மூன்றாந்தர சர்க்கார்!"** என்று ஆத்திரத்தோடு அர்ச்சனை செய்தார்.

அப்போதும் நான் அமைதியாக எழுந்து என்ன பதில் சொன்னேன்?

**"இது மூன்றாந்தர சர்க்கார் என்றார். தவறு! திருத்திக் கொள்ளவேண்டும். இது மூன்றாந்தர சர்க்கார் கூட இல்லை; நாலாந்தர சர்க்கார். நாலாந்தர மக்களுக்காக நடத்தப்படுகிற சர்க்கார்!"**

-என்றுதானே விடையளித்தேன்; விளக்கம் தந்தேன்!

நெல்லையில், தீர்மானத்தையொட்டிப் பேசும்போது கூட நமது பேராசிரியர் அவர்கள், **"இந்த முயற்சியில் ஈடுபடச் சொல்வதின் மூலம், கருணாநிதிக்கு நாங்கள் ஒன்றும் வைரமுடி சூட்டுவதாக யாரும் கருதவேண்டாம்"** என்று தானே மனந்திறந்து குறிப்பிட்டார்!

நான் இறுதியாகப் பேசியபோதுகூட,

**"சிறு துரும்பும் பல்குத்த உதவும்! அதைப்போல இந்தச் சிறு துரும்பைப் பயன்படுத்திக் கொள்க!"**

-என்றுதானே கேட்டுக் கொண்டேன்.

இராம காதை, பெரியவர் பக்தவத்சலத்துக்கு நினைவூட்ட வேண்டிய இதிகாசமல்லவே!

இலங்கைக்குப் பாலம் அமைத்தபோது அணில்கூட சிறு சிறு கற்களைக் கொண்டுவந்து குவித்து, இராமனின் பாராட்டைப் பெற்றதாக பக்தவத்சலனார் அவர்களே பல இடங்களில் உவமை கூறியிருக்கக் கூடுமே!

தகுதி பற்றிப் பேசுகிறார்! தகதக வெனக் குதிக்கிறார். தணலை அள்ளிக் கொட்டுகிறார்.

"அய்யா! மிக மேலான இடத்தில் பிறந்து, மேலான படிப்புப் படித்து, மேலான பதவிகளை வகித்தவரே!

என் தகுதி உமது அளவுகோலின்படி எல்லாவகையிலும் கீழானதுதான்! ஆனால், **"நடப்பவைகள் நல்லவைகளாக நடக்கட்டும்"** என்று எண்ணுவதில் என் தகுதியும், எங்கள் கழகத்தின் தகுதியும்-மாற்றாராலும் பாராட்டப்படுகிறது."

என்பதைத்தான் பெரியவருக்கு நான் பதிலாக அளிக்க வேண்டியதிருக்கிறது. உன்னை உடன்பிறப்பாகப் பெற்றிருக்கின்ற ஒரு தகுதி போதும் எனக்கு!

அன்புள்ள,

**மு. க.**

24-08-1975

# 139. எழுச்சிகீதம் இசைத்திடுக!

**உடன்பிறப்பே!**

அண்ணன் பிறந்தநாள் வருகிறது. மக்களாட்சித் தத்துவத்தின் மகுடமென விளங்கிய மாமேதையாம் அவரை எண்ணி, அவர் வழி நடந்திட சூளுரைத்துக் கொண்டு செயல்படும் நமக்கு அந்தநாள் தேனிடையூறிய பலாச்சுளையென சுவை மொண்டு தரும் நாள்! சுந்தரத் திருநாள்! தமிழ்ச் சுகமளிக்கும் தென்றலாக-தன்மான ஒளிவழங்கும் செங்கதிராக - அரசியல் பண்பாடு போதிக்கும் குளிர் தருவாக-அவர் திகழ்ந்தார். அவர் வாழ்ந்த நாட்களில் நாம் வாழ்ந்தோம். அவருடன் இணைந்து பணியாற்றினோம். அவர் இட்ட கட்டளைகளை நிறைவேற்றினோம். அவருடன் உரையாடினோம். உணவருந்தினோம். சேர்ந்து உறங்கினோம். சிறையிலும் இருந்தோம். அடடா! அந்த மறக்க முடியாத நாட்களை வரிசைப்படுத்திப் பார்த்தால், கண்கள் குளமாகின்றன!

அவர், 'தம்பீ' என அழைத்தபோது அந்தச் சொல்லில்தான் எத்துணை எழில்! எத்துணை பாசம்! எத்துணை உறவு!

ஆலின் விதைபோல அவர் இருந்தன்றோ, இத்துணை பெரிய இயக்கத்தை வளர்த்திருக்கிறார். அவர் சந்தித்த எதிர்ப்புகள்-இழிவான விமர்சனங்கள்-கூடவே இருந்து குழிபறிக்க முயன்ற துரோகிகளின் குழப்பங்கள்-அம்மவோ! அவைகளை எண்ணவும் போமோ?

அந்த உத்தமர் உருவாக்கிய இயக்கத்தை, நமது ஓயா உழைப்பை நல்கியன்றோ இன்று காத்தும், வளர்த்தும் வருகிறோம்.

செப்டம்பர் 15-ஆம் நாள் முதல் அவர் பிறந்த நாள் விழாவைக் கொண்டாடப் போகின்றோம். அண்ணா பெயரை ஆயிரம் முறை சொல்வதாலேயே விழாவின் நோக்கம் நிறைவு பெற்றுவிடுகிறதா என்பதையும் சிந்தித்துப் பார்த்து, அந்த நாளில் பங்கேற்பதே சிறப்புக்குரியதென்பேன்.

"அண்ணா வாழ்க!" - முகில் திரளையும் கிழித்துக் கொண்டு, அந்த முழக்கம் வானையெட்டுகிறது. கேட்டுக் காதுகுளிர்கிறது. "கதிரைத் தொடுகிறேன் பார்" என்பது போல் கழகத்தின் இருவண்ணக்கொடி உயர்கிறது. கண் மலருகிறது. களிப்பிலாடும் கானமயிலாகிறேன். ஆனாலும் என் கழக உடன்பிறப்பே, விழாவின் பயனை வெறும் கோலாகலத்துடன் முடிந்து விடுவதால் இலட்சியம் வெற்றி பெறாது என்பதை நீயும் நானும் உணர்ந்துதானே இருக்கிறோம். நாட்டின் நிலை-நமது கழகத்தின் நிலை-பல்வேறு அரசியல் சூழ்நிலை-அனைத்தும் நாமறிந்ததுதானே! இவைகள் எதைப்பற்றியும் கவலைப்படாமலேயே சிலர் இருக்கின்றனர், கழகத்திலே! இது, ஒவ்வொரு கட்சிக்கும் உரிய ஒன்றுதான்! "வீட்டுக்கு வீடு வாசற்படி இருக்கத்தான் செய்யும்" என்பது கிராமத்துப் பழமொழிதான் எனினும், வாசற்படி யோரத்தில் வாழைப்பழத்தோல் மறைந்து கிடந்தால், வருவோர்-வழுக்கியல்லவோ கீழே வீழ்வர்! நாம் சுவைத்த வாழைப்பழத்தின் தோலாயிற்றே என்பதற்காக வாயிற்படியில் போட்டுவைக்க முடியாதல்லவா?

எதிர்ப்புக்களைத் தாங்கிக் கொள்ளும் இந்தக் கழகம், எதிரிகளால் ஏற்படும் இழிவுகளைக்கூட அலட்சியப்படுத்திவிடும் இந்தக் கழகம். ஆனால்... அந்த இழிவு... வேறெங்குமிருந்து வராமல் நம்மிலே சிலராலேயே விலைகொடுத்து வாங்கப்படுவதாக இருந்தால் ... அதனைத் தாங்கிக் கொள்வது இயலாது! கூடாது!

"நானும் இந்த வயலிலேதான் வளர்ந்தேன்; பயிரின் பக்கத்திலே துணையாக இருந்துதான் வளர்ந்தேன்; அதனால் என்னை யாரும் அகற்றாதீர்கள்" என்று, கழனியிலே வளர்ந்து விட்ட "களை", வாதிடுமேயானால், அறிவுள்ள உழவன், அந்தப் பேச்சில் மயங்கி விளைச்சலை வீணாக்கிக் கொள்ள மாட்டான்.

**அண்ணாவின் பிறந்த நாள் என்பது ஒரு தனிப் பட்ட மனிதரின் பிறந்த நாள் அல்ல! இந்த மாபெரும் இயக்கத்தின் திருநாள்! தமிழ்ச் சமுதாயத்தின் ஒப்பற்ற விழா நாள்!**

அந்த நாள் பற்றி எண்ணிடும் போழ்து, கழகம் பற்றி எண்ணிடாது இருந்திடல் என்னால் இயலுமோ?

மகிழ்ச்சி பொங்குகிறது நெஞ்சில். அதே சமயம் சோக மின்வெட்டுக்களும் இந்த நெஞ்சைக் கிழித்துச் செல்கின்றன.

**“நானிருக்கிறேன்! அஞ்சாதே! அயராதே! அண்ணா நமக்கு துணை நிற்கிறார்!”**

என்று என் தங்க உடன்பிறப்பே! நீ தொண்டர்களின் பாசறை யிலிருந்து முழங்குகிறாய். அது எனக்கு மாமருந்தாகிறது. புதிய தெம்பு பிறக்கிறது.

**நெல்லை கண்டேன். உன் உழைப்பின் நேர்த்தி கண்டேன்.**

**சேலம் கண்டேன். உன் செயலின் எழிற்கோலம் கண்டேன்.**

**தேனி கண்டேன். எனக்கு உற்சாகமூட்டும் “தேன் – நீ!” என உணர்ந்தேன்.**

நீ நடத்தப் போகும் அண்ணன் விழா காண இருக்கிறேன். என் உள்ளத்தை இந்த மடலில் ஓரளவு உனக்குப் புரிய வைத் திருக்கிறேன்.

**கடமை**
**கண்ணியம்**
**கட்டுப்பாடு**

இந்தச் சொற்களுக்குரிய பொருளை உணர்ந்து அதற்கேற்ப நடப்பதும், நடக்காதவர்களைத் திருத்துவதும், திருந்தாதவர்களை திரும்பிப்பாராமல் இருப்பதும்தான் நம் கழகத்தை மேலும் வலிவுடன் வளர்த்திடத் துணை புரியும் என்பது என் அழுத்தமான நம்பிக்கை! இந்திய நாட்டின் தென்கோடியில் விடிவெள்ளியாகத் திகழும் தி. மு. கழகத்தின் கொள்கை முரசம், திக்கெட்டும் கேட்டிட; என் அன்பு உடன்பிறப்பே, இந்த ஆண்டு நமது அண்ணன் விழா பயன்படுமாக! நான் எழுதியுள்ள வரிகளை எண்ணத்திற்கொண்டு எழுச்சி கீதம் இசைத்திடுக!

அன்புள்ள,

**மு. க.**

02-09-1975

# 140. "பட்டாசு வெடிக்கிறார்!"

**உடன்பிறப்பே!**

பெரியவர் பக்தவத்சலம் அவர்கள் தன்னுடைய வயதையும், தளர்ச்சியையும் இயலாமையையும் கூடப் பொருட்படுத்தாமல், ராமநாதபுரமென்றும், ராமேஸ்வரமென்றும், சேலம் என்றும், செங்கற்பட்டு என்றும் ஓயாது சுற்றுப்பயணங்களிலே ஈடுபட்டு நம் கழகத்தையும் குறிப்பாக என்னையும், நிறுவனக் காங்கிரசையும் குறிப்பாக அதன் தலைவர் காமராஜரையும் சாடுவது கண்டு எனக்குக் கோபம் வருவதற்குப் பதிலாக அவரது சுற்றுப்பயணம் எனக்கு வியப்பைத்தான் ஏற்படுத்துகிறது. அவரைப் பாராட்டவும் நான் கடமைப்பட்டிருக்கிறேன். தன் மனதுக்குச் சரியென்றுபட்டதை தயவு தாட்சண்யமின்றி யார் கேட்டாலும் கேட்காவிட்டாலும் அழுத்தம் திருத்தமாகச் சொல்லி வருகிறார் அல்லவா? மேடைக்கு வருவதற்கே சிரமம். பயணம் செய்வதற்கு இடம் தராத உடல்நிலை. பக்கத்தில் ஓரிருவர் துணையில்லாமல் நடமாட முடியாத கஷ்டம். இவ்வளவு இன்னலுக்கிடையே தமிழகத்தின் பட்டி தொட்டியெல்லாம் பயங்கரப் பிரச்சாரத்தில் ஈடுபடும் அவரது வைராக்கியத்தைப் போற்றிப் புகழத்தான் வேண்டும். அதே சமயத்தில், அவரது வேகமான சொற்பொழிவுகளில் உருண்டோடும் கருத்துக்களை அவரது கட்சிப் பத்திரிகையே வெளியிட்டிருப்பதையும் பற்றி சில விளக்கங்களை நான் அளிக்க வேண்டித்தானிருக்கிறது.

**"அவசர நிலையை ஸ்தாபனக் காங்கிரஸ் எதிர்க்கிறது. அந்தக்கட்சிக்கு "காங்கிரஸ்" என்று பெயர் சொல்லக்கூட லாயக்கு இல்லை."**

இது பக்தவத்சலனார் பேச்சு – செப்டம்பர் 5-மித்திரன் இதழில் வெளிவந்துள்ளது.

முதியவர் எவ்வளவு முறுக்கோடு முழங்கியிருக்கிறார் பார்த்தாயா?

**"காமராஜரின் மௌனமே வரலாறு என்று அவரது சீடர்கள் துதி பாடுகிறார்கள். காமராஜரும்**

**ஜெயப்பிரகாசருந்தான் இந்தியாவிலேயே சிந்தனை யாளர்கள் என்று அவர்களின் சீடர்கள் வர்ணிக் கிறார்கள். கேவலமாக இருக்கிறது.”**

இதுவும் அவர் பேச்சுத்தான்! அதே ஏட்டில் வந்ததுதான்!

**“துர் அதிர்ஷ்டவசமாக உருப்படியான எதிர்க் கட்சிகள் நாட்டில் இல்லை. சுதந்திரம் வேண்டாம் என்ற ஜஸ்டிஸ் கட்சியின் வாரிசு தி. மு. க. நாட்டுப் பற்று, மக்கள் சேவை எதுவுமில்லாத கட்சிகள் எதிர்க் கட்சியாக உள்ளன. சுதந்திரத்தை எதிர்த்தவர்கள், இன்று காங்கிரஸ் தலைமையை எதிர்க்கிறார்கள்.”**

இதுவும் அவரது இடி முழக்கம்தான்! அதே இதழில் வெளியான பேச்சுத்தான்!

அவசர நிலையைப் பழைய காங்கிரஸ் எதிர்க்கிறது என்று கூறிய பக்தவத்சலனார், சுதந்திரத்தை எதிர்த்தவர்கள்தான் இன்று காங்கிரஸ் தலைமையை எதிர்க்கிறார்கள் என்று முடிவுகட்டிப் பேசியிருக்கிறாரே; அவரது கூற்றின்படி தி.மு.க. சுதந்திரத்தை எதிர்த்த கட்சியாகவே இருக்கட்டும்; வாதத்திற்கு ஏற்றுக் கொள்வோம் - பழைய காங்கிரஸ் தலைவரான காமராஜரும், மற்ற வர்களும்கூட சுதந்திரத்தை அன்றைக்கு எதிர்த்தவர்கள்தானா?

உருப்படியான எதிர்க்கட்சிகள் நாட்டில் இல்லை என்கிறார். நாடு என்பதில் நமது மாநிலமும் சேர்ந்துதானே இருக்கிறது! இந்த மாநிலத்தில் உள்ள எதிர்க்கட்சிகளையெல்லாம் “உருப்படியானவை அல்ல” என்றுதானே அவர் கூறுகிறார்.

சந்தர்ப்பத்தை எப்படிப் பயன்படுத்திக்கொள்கிறார் பார்த்தாயா?

உடன் பிறப்பே, அவர் பேச்சுக்குப் பொருளை அவர்தான் விளக்கவேண்டும், அல்லது அவருடன் தோழமை கொண்டுள்ள மற்ற எதிர்க்கட்சிகளின் தலைவர்கள்தான் விளக்கவேண்டும்.

நிதானமாக வருகிறார். நிதானமாக நடக்கிறார். நிதானமாக மேடை ஏறுகிறார். ஆனால் “பட பட” வென்று பட்டாசு போல வெடித்து விடுகிறாரே; பேச்சிலும் சற்று நிதானம் காட்டலாமே! பெரியவர் அவர்; பேசட்டும் - கேட்டு ரசிப்போம்!

அன்புள்ள,

**மு. க.**

06-09-1975

# 141. நிதி குவித்திடுவீர்!

உடன்பிறப்பே,

அண்ணாவின் குடும்பத்திற்கோர் நிதி திரட்டி வழங்கிட வேண்டுமென்று விடுத்த வேண்டுகோளுக்கிணங்க கோவை மாவட்டத்தில் ஈரோடு வட்டாரத்தில் நான் மேற்கொண்ட சுற்றுப் பயணத்தின்போதும், மறுநாள் வடாற்காடு மாவட்டத்தில் திருப்பத்தூர்-திருவண்ணாமலை பகுதிகளில் நான் கலந்து கொண்ட நிகழ்ச்சிகளிலும் முப்பத்தைந்தாயிரம் ரூபாய் வரையில் கழகச் செயல்வீரர்கள் நிதியினை அள்ளித் தந்தார்கள். அதற்கு அந்த மாவட்டச் செயலாளர்கள் எடுத்துக் கொண்ட முயற்சியினையும், ஒன்றியச் செயலாளர்கள் காட்டிய ஆர்வத்தையும் நான் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். நாளை திருச்சி மாவட்ட நிகழ்ச்சிகளில் நானும் நாவலரும் கலந்து கொள்கிறபோது தக்கதோர் தொகை வழங்குவதாக அந்த மாவட்டத்தின் செயலாளர் உறுதி கூறியுள்ளார். அக்டோபர் ஆறாம் நாள் திண்டுக்கல் பொதுக்கூட்டத்தில் மதுரை மாவட்டம் தனது காணிக்கையை அளிக்க இருக்கிறது.

இதற்கிடையே, நிகழ்ச்சிகளின் பொழுது தான் நேரில் வழங்க வேண்டுமென்றில்லாமல் கழகப் பொருளாளர் பேராசிரியர் பெயருக்கு 'அண்ணா குடும்ப நிதி' என்ற தலைப்பிட்டுக் கழகக் கண்மணிகள் அனுப்பிக் கொண்டே யிருக்கலாம்.

எல்லா மாவட்டச் செயலாளர்களும், ஒன்றியச் செயலாளர் களும், கிளை அமைப்புக்களும், இந்தத் தூய பணியில் உடனடியாக ஈடுபட்டுத் தங்கள் கடமையினை நிறைவேற்றிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அண்ணா குடும்பத்திற்கு எதற்காக நிதி என்பது பற்றியோ, அண்ணாவின் அருமைபெருமைகளை விளக்கி-அதற்காகத்தான் அந்தக் குடும்பத்திற்கு நிதி தரவேண்டு மென்று கோருவது பற்றியோ-விரிவாக எழுதித்தான் நீ புரிந்து கொள்ளவேண்டுமென்ற நிலையில் இல்லை. அதை நன்கு

அறிவேன். எனினும் சுடர்விளக்கிற்கும் தூண்டுகோல் தேவை என்பது போல்-

அயராது பணியாற்றிடும் உனக்கும் நினைவுபடுத்துதல் எனது கடமையன்றோ!

தேவையையும், அவசியத்தையும் உணர்த்த அல்ல இந்தக் கடிதம்! நினைவுபடுத்த மட்டுமே இந்தக் கடிதம்!

**அமைச்சர்கள், நாடாளுமன்ற, மாநிலங்கள் அவை உறுப்பினர்கள், சட்டப்பேரவை, மேலவை உறுப்பினர்கள், தங்கள் ஒரு மாத ஊதியத்தை உடன் அனுப்பி வைத்திடல் வேண்டும்.**

மாவட்டக் கழகங்கள் உடனடியாகக் கூடி, இதற்கான முயற்சிகளை முறையாக மேற்கொள்ள வேண்டும். நாளைக்குப் பார்த்துக் கொள்ளலாம் என்றில்லாமல்-இன்றே - இப்போதே முயற்சி தொடங்கப்படுதல் வேண்டும்.

**எத்தனையோ குடும்பங்களில் அண்ணா ஏற்றி வைத்த விளக்கு, ஒளிவிட்டுக் கொண்டிருக்கிறது. எத்தனையோ குடும்பங்கள் அவரால் வாழ்ந்து கொண்டிருக்கின்றன.**

**அவர், தன் குடும்பத்தை மறந்து-தமிழ்க் குடும்பங்களுக்காக அல்லும் பகலும் தொண்டாற்றினார். நாம் அவர் குடும்பத்தை மறந்ததில்லை. இனியும் மறக்க மாட்டோம் என்பதற்கு அடையாளம்தான் இந்தச் சிறு முயற்சி!**

**இது உதவியல்ல!**
**நம் கடமை!**
**வழங்கப்போவது நிதியல்ல!**
**நன்றிக் காணிக்கை!**

உடன்பிறப்பே, உனக்கு நான் எழுதியுள்ள இந்த மடலை, கழகத்தவர் அனைவரும் தனித்தனியே தங்களுக்கு எழுதியதாக எடுத்துக் கொண்டு, நிதியினைக் குவிப்பர் என்று நம்புகிறேன்.

அன்புள்ள,

**மு. க.**

29-09-1975

# 142. அறம் தாங்கி நடந்திடுவோம்!

உடன்பிறப்பே,

உழைப்பின் உருவம் காமராஜர் மறைந்துவிட்டார். அவரது பிரிவால் ஏற்பட்ட அதிர்ச்சியிலிருந்து நாம் மீளவில்லை. அவரை இழந்து தவிக்கும் தமிழ் மக்களின் கண்ணீர்த்துளிகள் இன்னும் காய்ந்திடவில்லை. அவருக்கும் தி. மு. கழகத்திற்கும் இடையே எத்தனையோ மோதல்கள் கடந்த காலத்தில் நடைபெற்றிருந்தாலும், எத்தனையோ கருத்து வேறுபாடுகள், கொள்கை வேறுபாடுகள் இருந்திட்டாலும், தமிழகத்துப் பெருந் தலைவர்களில் ஒருவர் என்ற முறையிலும், தன்மானத் தமிழர் என்ற வகையிலும் அவரது பெருமையும் புகழும் என்றும் நிலைத்திருக்கும் வண்ணம் தமிழர்களால் நடத்தப்படும் இந்த அரசு தனது கடமைகள் சிலவற்றை நிறைவேற்ற முன்வந்திருக்கிறது.

ஒரு தமிழருக்குக் காட்டப்படும் மரியாதையைச் சில தமிழர்களால் சகித்துக் கொள்ள முடியவில்லை என்பதை எண்ணும்போதுதான் வேதனை தாங்கிடவில்லை எனக்கு!

**"காமராஜ் பெயரால் அரசியல் லாபம் தேட முனைகிறது தி மு க!"** - என்ற தலைப்பிட்டு அரசியலையே தனக்கு லாபமாக நடத்திக்கொண்டிருக்கிற ஒரு கட்சியின் தலைவர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

அது, எல்லா ஏடுகளிலும் மிகப்பிரகாசமாக பிரசுரிக்கப் பட்டிருக்கிறது. அந்த நண்பரின் கருத்துக்குப் பதில் தருவதற்குத் தடையேதும் இருக்கமுடியாதல்லவா?

ஆகவே, இந்த மடலின் வாயிலாக சில விளக்கங்கள் வழங்கிட விரும்புகிறேன்.

அறிக்கை விடுத்துள்ள அன்பர் இருக்கிறாரே; அவர் எரிச்சலின் வடிவம் என்பதை நாடு நன்கு அறியும்.

தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் சார்பில் காமராஜருக்கு நடத்திய இரங்கல் கூட்டத்திற்கு அவரும் வந்திருந்தார். அந்தக் கூட்டத்தில் பேசிய சிலர், காமராஜர் இறுதிக் கடன்களில் தமிழக அரசு செய்த காரியங்களுக்கு நன்றி தெரிவித்தனர்.

நன்றி தெரிவிக்கலாமா? அது அந்த நண்பருக்குப் பிடிக்குமா? நன்றிக்கும் அவருக்கும் ஏதாவது தொடர்பு உண்டா? அவர் வாழ் நாளில் நன்றிகாட்டியதாக ஒரு நிகழ்ச்சியும் இருந்ததில்லையே!

அதனால்தான் அந்த இரங்கல் கூட்டத்தை ஒரு சாடு, சாடுகிறார். என் செய்வது; இல்லாவிட்டால் அவரது புதிய முதலாளியின் கோபத்துக்கு ஆளாகவேண்டுமே!

**"தேனாம்பேட்டை காங்கிரஸ் திடலில் ஸ்தாபன காங்கிரசால் கூட்டப்பட்ட இரங்கல் கூட்டத்தில் காமராஜருக்கு அஞ்சலி செலுத்துவதைக் காட்டிலும் தி. மு. க.வைப் பாராட்டுவது மேலோங்கியிருந்தது.**

- இது, அந்த வயிற்றெரிச்சல்காரரின் ஆத்திரமான அறிக்கையில் ஒரு பகுதி. இந்த அறிக்கையைக் கொட்டை எழுத்துக்களில் மித்தரன் ஏடு வெளியிட்டு மகிழ்ந்திருக்கிறது.

ஆனால் அதே இரங்கல் கூட்டத்தில் பேசிய பெரியவர் பக்தவத்சலம் என்ன கூறினார்?

**"கட்சிப் பாகுபாடின்றி லட்சக்கணக்கான தொண்டர்கள் அஞ்சலி செலுத்தினார்கள் என்றால் அவர்கள் தங்கள் கட்சிகளை மறந்து விட்டார்கள் என்று அர்த்தமல்ல. நம்முடைய முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களே காமராஜருக்கு நினைவுச் சின்னம் ஏற்படுத்த, உடனடியாக ஏற்பாடு செய்தார்கள் இன்று இந்தக் கூட்டத்திலும் கலந்து கொள்ள வந்திருக்கிறார்"**

என்ன இருந்தாலும் பெரியவர்கள் பெரியவர்கள்தான்! ஆயிரம் அபிப்பிராய பேதங்கள் பக்தவத்சலனார் அவர்கட்கும் நமக்கும் இருந்தாலும், அவர் அரசியல் பண்பாடு மிக்கவர். பெருந்தன்மை படைத்தவர். அதற்கேற்பக் கருத்துக்களைத் தெரிவிப்பவர். அவரைப் போன்ற நல்ல உள்ளம் படைத்த சிலர், காமராஜரின் இரங்கல் கூட்டத்தில் தமிழக அரசுக்கு நன்றி தெரிவித்தனர்.

அதனை ஒரு எரிச்சல்காரர் கண்டிக்கிறார். அதையும் மித்திரன் அலங்காரமாக வெளியிடுகிறது. பெரியவர் பக்தவத்சலம் அவர்களுக்கு நெருங்கிய தொடர்புடைய ஏடு அது!

அரசியல் லாபம் பெற காமராஜரைப் போற்றுகிறோமாம்! அவருக்கு நினைவுச் சின்னம் அமைக்கிறோமாம்!

பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும் நம்மை ஆளாக்கி வளர்த்தவர்கள். அவர்கட்கு நமது மரியாதையை எல்லாவகையிலும்

செலுத்தினோம்; செலுத்திக் கொண்டு வருகிறோம். மூதறிஞர் ராஜாஜியின் பிறந்த இல்லத்தை நினைவுச் சின்னமாக்கியதும்; ராஜாஜி நினைவாலயம் அமைத்ததும், கட்சி மாறுபாடுகளுக்கும் அப்பாற்பட்டு செய்த பணிகளே தவிர, அரசியல் நோக்கத்துடன் என்று யாராவது கூறமுடியுமா?

எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்பு செய்திருக்க வேண்டிய செயலான எட்டயபுரம் பாரதி இல்லத்தை இந்த அரசு, நினைவுச் சின்னமாக்கியதே; அது அரசியல் காரணமென்று "அறிக்கை அன்பர்" கூறுகிறாரா? சிதம்பரனார், சிறையில் இழுத்த செக்கைக் கண்டுபிடித்துச் சென்னையில் காட்சிப் பொருளாக்கியிருப்பது அரசியலுக்காக என்று அந்த நண்பர் வாதிடுகிறாரா? தில்லையாடியில் வள்ளியம்மை நகர் இந்த ஆட்சிக் காலத்தில்தானே உருவாக்கப்பட்டது! அதுவும் அரசியல்தானா? அறிஞர் அண்ணா உலகத் தமிழ் மாநாடு கூட்டியதும் அப்போது, தேசத்தலைவர்கள், தமிழ்ச்சான்றோர்கள் சிலைகளைத் திறந்ததும் அரசியல் காரணந்தானா? சென்னையில் தி. மு. க. மாநகராட்சி நிர்வாகம், பல ஆண்டுகளுக்கு முன்பு "முதல்வர் காமராஜர்" சிலையைத் திறந்து வைத்ததே - அதுவும் அரசியல்தான் என்று வர்ணிக்கிறாரா; வக்கிர அறிக்கையாளர்?

முதல்வர் பொறுப்பை ஏற்ற காமராஜர் அதனை நிலைக்க வைக்க குடியாத்தம் இடைத் தேர்தலில் போட்டியிட்டபோது அவரை எதிர்த்த கட்சி, கம்யூனிஸ்டு கட்சி! ஆதரித்து காமராஜர் வெற்றிக்கு உழைத்த கட்சி தி. மு. க!

- அப்போது, அரசியல் பின்னுக்குப் போயிற்று - தமிழ் இன உணர்வு முன்னுக்கு நின்றது!

கல்வித்திட்ட எதிர்ப்புக் காலத்திலும், தட்சிணப் பிரதேச எதிர்ப்புக் காலத்திலும், காமராஜர் கரத்தைப் பலப்படுத்தியவர்கள் பெரியாரும் அண்ணாவும்! அது காமராஜர் என்ற தனிமனிதருக்காக அல்ல! தமிழகத்தின் எதிர்காலத்திற்காக!

இந்த உண்மைகளையெல்லாம் கொள்கைக் குழப்பவாதி களால் புரிந்துகொள்ள முடியாது. அது அவர்கள் குற்றமல்ல; இப்போது அப்படிப்பட்ட தலைமை அவர்களுக்குத் தமிழ்நாட்டில் கிடைத்திருக்கிறது.

"நினைவுச் சின்னம்" எழுப்புவதைக்கூட "ஜாடை மாடை"யாகத் தாக்குகிறார்கள். "**மறைந்தவர்களின் கொள்கையைக் கடைப்பிடித்தால் மட்டும் போதும். அதுவே நினைவுச் சின்னம்!**"

- என்று கதைக்கிறார்கள். மறைந்த தலைவர்களின் இலட்சியங்களைப் பின்பற்ற வேண்டும் என்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்கமுடியாது! அதற்காக நினைவுச் சின்னமே கூடாதா? வேண்டாமா? ரஷ்யாவில் லெனின் கொள்கைகள் இருக்கும்போது, லெனின் உடலைப் பதப்படுத்தி மாஸ்கோ செஞ்சதுக்கத்தில் எதற்காக நினைவுச் சின்னம்; தேவையில்லையே! மார்க்சுக்கு, லெனினுக்கு எதற்காகச் சிலைகள்? தேவையில்லையே! காந்தியடிகளுக்கு, நேரு பெருமானுக்கு நினைவுச் சின்னங்கள் இல்லையா? ஒருவேளை, தி. மு. கழக அரசு அப்படிப்பட்ட நினைவுச் சின்னங்களை அமைக்கக் கூடாது என்று வாதிடுகிறார்களோ?

உடன்பிறப்பே, உடம்பும் உள்ளமும் கொதிக்கிறது அவர் களுக்கு! அரசியல் லாபம் தேடப் பார்க்கிறோமாம்! காமராஜரின் பெயரைவைத்து அரசியல் லாபம் தேட முனைகிறோமாம்! அறிக்கைவிட்ட நண்பருக்கு வேறு பல குடைச்சல்கள்! எங்கே, தமிழ்நாட்டில் இரண்டு காங்கிரசும் சேர்ந்துவிடுமோ; அப்படிச் சேர்ந்துவிட்டால் ஆளுங் காங்கிரஸ், தன்னையும் தன்னுடைய புதிய தமிழ்நாட்டுத் தலைவரையும் தோட்டத்தில் உட்கார்ந்து ஒருவரையொருவர் கட்டிக்கொண்டு அழச் செய்துவிடுமோ; என்ற அச்சம் பிடித்தாட்டுகிறது. அத்துடன் நம்மீது ஏற்பட்டுள்ள பொறாமையும் இணைந்து கொண்டது. அதனால் ஆவேசம் வந்து ஆடுகிறார் அன்பர்!

ஆடட்டும்; ஆடி ஓயட்டும்! நாம், நமது கடமையைச் செய்கிறோம். கட்சி மாறுபாடுகளை மறந்து பெரியவர்களை மதிக்கிறோம். இடையிலே இப்படிச் சில பிறவிகள் சீறுகின்றன. சீறத்தான் செய்யும்.

இவைகளை விரிவாக விளக்கிட அறந்தாங்கியில் உன்னைச் சந்திக்கிறேன்.

அறம் தாங்கிப் பேசுவோம் நாம்!
அறம் தாங்கி நடப்போம் நாம்!
அண்ணன் வழி நம் வழி!
சுடுகாட்டு நெருப்பில் குளிர்காயும் குள்ளநரிகளின் வழியல்ல!

அன்புள்ள,

**மு. க.**

10-10-1975

# 143. உணர்வுகளை உரைக்கின்றேன்!

**உடன்பிறப்பே,**

மிகச் சிறிய ஊராயிற்றே என்றார்கள். போக்குவரத்து வசதிகளும் குறைவு என்று பயந்தார்கள். வருகின்றவர்கள் தங்குவதற்கும் இடமில்லையே என்று கவலைப்பட்டார்கள். அருகாமையில் கூட எந்த நகரமும் கிடையாதே என்று பெருமூச்சு விட்டார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் ஒரு மாவட்ட மாநாட்டை நடத்துவது என்பது சுலபமான காரியமா என்று யாருக்கும் கேட்டிடத்தான் தோன்றும். ஆனால் அச்சத்தையும் ஐயத்தையும் மீறி அனைவரும் வியப்புறத்தக்க வண்ணம் அழகு சிந்தும் மாநாட்டை, ஆர்வம் துள்ளும் மாநாட்டை, அண்ணா ஏற்றி வைத்த விளக்காம் தி. மு. கழகத்தைக் காத்திடும் தீரர்கள் அணிவகுத்த மாநாட்டை அறந்தாங்கியில் நடத்திக் காட்டிவிட்டனர் அயராத செயல்வீரர்களாம் புதிய புதுக்கோட்டை மாவட்டத்துக் கழக கண்மணிகள்!

ஒற்றுமை உணர்வும், ஒருவருக்கொருவர் பொதுக் காரியத்துக்காக விட்டுக் கொடுத்துப் பணியாற்றும் பாங்கும், புதுக்கோட்டை மாவட்ட மாநாட்டின் வெற்றிக்குரிய காரணங்களில் ஒன்றாகும். சிற்றூர் பேரூர்களில் இருந்து உழவர் பெருங்குடிமக்கள் மாநாட்டுக்கு வந்த காட்சியும், அலை அலையாகக் கழகக் கொடிகள், தோரணங்கள், பதாகைகள் கொண்டு அணி அணியாய்க் கழகத் தோழர்கள் வந்து கூடிய மாட்சியும் - புதுக்கோட்டையில் இருந்து அறந்தாங்கி செல்லும் இருபது கல் தொலைவிலும் இருமருங்கிலும் ஆயிரமாயிரம்பேர் நின்று வாழ்த்திய எழுச்சியும், எத்துணை உற்சாகத்தையும், ஊக்கத்தையும் உருவாக்கின என்று எழுதிடச் சொற்களே கிடையாது என்பேன். பெரியார், அண்ணா போன்ற பெருந் தலைமைகளே இழந்துவிட்ட நமது இயக்கத்துக்கு இன்று கிடைத்திருக்கும் தலைமை அந்தத் தலைமைகளோடு ஒப்பிடக்கூடிய அளவுக்குப் பெருமை வாய்ந்ததல்ல. நானறிவேன்

நன்றாக! ஆமாம் நானே அறிவேன் நன்றாக! என் செய்வது? ஓட்டைச் சட்டியானாலும் கொழுக் கட்டையை எப்படியாவது வேக வைத்தாக வேண்டுமே!

கிணற்றில் விழுந்தவன், கைக்குக் கிடைத்த ஒரு கொடியைப் பற்றிக்கொண்டாவது மேலே ஏறிடத்தானே முயன்றிடுவான்! அதுபோலப் பெருந் தலைமைகளை இழந்து சோகத்தில் ஆழ்ந்து விட்ட இந்தத் தமிழ் இனம், எப்படியோ தன்னைப் பாதுகாத்துக் கொள்ள, தன் மரபு, மானம், மொழி, கலை, பண்பாடு, வரலாறு, இலக்கியம் அனைத்தையும் மங்காமல் காப்பாற்ற இந்தக் கழகத்தை நம்பியிருக்கிறது. கழகத்துக்குக் கிடைத்துள்ள தலைமை ஓட்டைச் சட்டியாகக்கூட இருக்கலாம். "அதுதானே கிடைத்திருக்கிறது கொழுக்கட்டையை வேகவைக்க" என்று மனத்தெம்புடன் காரியமாற்றும் கழகச் செம்மல்களின் செயல் வடிவங்களைத்தானே நெல்லையாக, சேலமாக, தேனியாக, அறந்தாங்கியாகக் கண்டு வருகிறோம். மாநாடு நடத்திப் பெரும் நிதியைக் கழகத்திற்கு மிச்சப்படுத்தியது மட்டுமல்லாமல், இந்தக் கழகத்தையும் நம்மையும் உருவாக்கிய அண்ணனின் குடும்பத்தை மறந்துவிடாமல் புதுக்கோட்டை மாவட்டச் சார்பில் செயலாளர் நண்பர் பெரியண்ணன் அண்ணா குடும்ப நிதிக்குப் பதினைந்தாயிரம் ரூபாய் கொண்ட பணமுடிப்பையும் வழங்கினார். இதுவரை அண்ணா குடும்பநிதி ஒரு லட்சத்தை எட்டியிருக்கிறது. மற்ற மாவட்டங்களில் முயற்சி நடை பெறுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மாவட்டங்களையோ, ஒன்றியங்களையோ, கிளைகளையோ, அல்லது அன்பு உடன் பிறப்பே! உன்னையோ, நான், அண்ணா குடும்பநிதி பற்றி அடிக்கடி கேட்டுக் கொண்டிருக்கப்போவதில்லை. அது நினைவூட்டத் தேவையில்லாத ஒரு கடமை! மீண்டும் சொல்கிறேன்; அது அண்ணன் குடும்பத்திற்கு வழங்கப்படும் உதவியல்ல நாம் செலுத்தவேண்டிய நன்றிக் காணிக்கை. அவ்வளவு தான் நான் கூறுவேன். இதில், நீயோ மற்றவர்களோ-அலட்சியம் காட்டினாலும் அல்லது மெத்தனமாக இருந்தாலும் என் வருத்தத்தை வெளியில் காட்டிக்கொள்ள மாட்டேன். நெஞ்சில் வைத்துக் குமுறிக்கொண்டு இருப்பேன்.

இவ்வளவு எழுதியது போதும் உனக்கு! குவித்திடுவாய் நிதியை என்பதும் எனக்குத் தெரியும்.

அறந்தாங்கிக்கு அருகில் உள்ள ஆவுடையார் கோயிலில் நானும், நாவலரும், பேராசிரியரும் சென்று சிற்பக் கலையின் சிறப்புகள் கண்டோம். தந்தை பெரியார் கூட ஒருமுறை அங்குள்ள ஆலயத்துச் சிற்பங்களின் அழகு கண்டு பாராட்டினாராம். இன்று பல கட்டங்களாக வளர்ந்துள்ள அந்த ஆலயம் பல ஆண்டுகளுக்கு முன்பு மாணிக்கவாசகரால் ஒரு சிறு மண்டபமாகத்தான் கட்டப்பட்டதாம். பல்வேறு கட்டங்களில், பல்வேறு காலங்களில் தொடர்ந்து பல வள்ளல்கள் அந்தச் சிறிய மண்டபத்தைச் சுற்றி சிற்ப மண்டபங்களை அமைத்து விரிவாக்கியுள்ளனர். அதனைக் காணும்போது எண்ணிக்கொண்டேன்; இவ்வாறுதானே ஐம்பது அறுபது ஆண்டுகட்கு முன்பு சிறுமண்டபமாக எழுந்த இந்தத் தமிழ் உணர்வு - இனஉணர்வு இயக்கம் - இன்று மாபெரும் மணிமாடக் கூடமாகத் திகழ்கிறது என்று!

மாணிக்கவாசகர் பற்றிய கதையில்தான் சொல்வார்கள்; நரிகள் பரிகளாயின என்று! அதுபோலத்தானே இன்று சிலர் அரசியல்வாதி களாக ஆகியிருக்கின்றனர்.

கதை முடிவில் பரிகள், மீண்டும் நரிகளாயின என்று தானே படிக்கிறோம்!

பரிகளாகத் தோற்றமளிப்பவைகளை, நரிகள்தான் என்று நாட்டுமக்கள் உணருங்காலம் வெகு தொலைவில் இல்லை என்ற ஆறுதலோடு - அறந்தாங்கியிலிருந்து திரும்பினேன்.

எனக்கேற்பட்ட உணர்வுகளையெல்லாம் சொல்ல வேண்டு மென்று விரும்பினேன். அதுதான் இந்தக் கடிதம்.

அன்புள்ள,

மு. க.

15-10-1975

# 144. “பவளவண்ணன் - ஒரு பாடம்!”

**உடன்பிறப்பே,**

இன்பமும் துன்பமும் மாறி மாறி வருவதுதான் வாழ்க்கை என்று தத்துவம்கூற யார் தயவும் தேவையில்லை. அது நமக்கே நன்றாகத் தெரிந்த ஒன்றுதான். அதிலும் என்னைப் பொறுத்தவரையில் எந்த மகிழ்ச்சிகரமான நிகழ்ச்சியையும் எண்ணிப் பார்த்து இன்பமடையும் நிலைமை ஓரிருமணி நேரத்திற்கு மேல் நீடித்தது கிடையாது. என்னுடன் நெருங்கிப் பழகுகிற நண்பர்கள், கழக முன்னணியினர் இதனை நன்கு அறிவார்கள்.

அறந்தாங்கி மாநாட்டுச் சிறப்பு குறித்து வெற்றிக் களிப்புடன் சென்னைக்குத் திரும்பிக் கொண்டிருந்தேன். தாம்பரத்தில் நாளிதழை வாங்கிப் பார்த்தபோது, அறந்தாங்கி பற்றிய இனிய நினைவுகள் எல்லாம் எங்கேயோ பறந்தோடிவிட்டன. என் உயிரனை உடன்பிறப்புக்களில் ஒன்றான பவளவண்ணன் மருத்துவமனையில் ஆபத்தான கட்டத்தில் இருப்பதாக அந்த இதழிலே வந்த செய்தி, என் நெஞ்சிலே செந்தீயாகத் தாக்கிச் சுட்டது. சிரித்த முகமும் சிரம் தாழ்த்தி என் எதிரில் நிற்கும் பணிவும், கழகக் காரியங்கள் ஆற்றுவதில் எறும்பின் சுறுசுறுப்பும், என்னிடத்திலும், கழகத்திடத்திலும் இதயத்தைப் பறிகொடுத்த பாசமும் கொண்ட அவரைப் பார்க்கும்போதெல்லாம், **“உடம்பைக் கவனமாகப் பார்த்துக்கொள்! நீயாகக் கெடுத்துக் கொள்ளாதே!”** என்று எத்தனையோ முறை சொல்லியிருக்கிறேன், என் செய்வது; காலில் விழுவதுபோலக் கெஞ்சிக் கேட்டும், மன்றாடியும்கூட என் வேண்டுகோளைக் கேட்காமல் புறக்கணித்துவிட்டுப் பிடிவாதமாக உடலைக் கெடுத்துக்கொள்ளும் என் உயிர் நண்பர்களின் பட்டியலில்தான் பவளவண்ணனும் இடம் பெற்றுவிட்டார்.

**உடன்பிறப்பே! நீயும் நானும் எத்தனை நாளைக்கு உயிர்வாழப் போகிறோமோ; அது வேறு விஷயம்!**

**அதற்காகத் தெரிந்தும் நச்சுப் பாம்பை எடுத்து நாக்கிலே விட்டுக் கொள்ளக் கூடாதல்லவா?**

சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன்பு எனக்குச் சிலை வைக்க வேண்டுமென்று உறுதியாக நின்றவர் பவளவண்ணன்தான்!

என் வேண்டுகோளைக் கேட்டுச் சிலைவைக்கும் முயற்சியைக் கைவிட்ட அந்தக்காளைப் பருவத்தினன், தன் உயிருக்கு உலைவைக்கும் எனத் தெரிந்தும், நானும் பலமுறை வேண்டியும், அதைமட்டும் கேட்க இயலாமல், குழந்தைகளையும் குடும்பத்தினரையும் மட்டுமல்ல; நம்மையும் விட்டுப் போய்விட்ட அவலத்தை எப்படித்தான் தாங்கிக் கொள்வது?

ரயிலில் இருந்து இறங்கியதும், அவசர அவசரமாக மருத்துவமனைக்கு ஓடுகிறேன்-என் ஆருயிர் உடன்பிறப்புக்களில் ஒன்றை எப்படியும் பிழைக்கவைத்துவிட வேண்டுமென்று! ஆனால் என் வேகத்தை வெற்றிகண்டுவிட்டது சாவு! நான் போய்ச் சேருவதற்குள் அந்தச் சிங்கம் போய் விட்டான்!

அவனுக்காக நான் அழுவதா?

இன்னும் சிலபேர் அவனைப்போலத் தங்களைப் பாழாக்கிக் கொண்டிருக்கிறார்களே; அவர்களை நினைத்து அழுவதா?

அவர்களுக்குப் பவளவண்ணனாவது பாடமாக இருக்கட்டும். தன் சாவின் மூலம், அந்தத் தங்கத் தம்பி, வேறு சில உடன்பிறப்புக்களின் சாவைத் தடுத்தான் என்றாவது, நிலை உருவாகட்டும். அந்தப் புதுநிலை கண்டாவது நான் ஆறுதல் பெறுகிறேன். நமது அண்ணன் நமது கையில் கொடுத்த கொடியும், நம் நெஞ்சில் பதிய வைத்த இலட்சியமும், தமிழர்க்கென உருவாக்கிக் கொடுத்த அரசும், புவியெங்கும் புகழ் பரப்பிட - அணுவளவு களங்கமும் அண்ணா உருவாக்கிய கழகத்திற்கு ஏற்படாமல் காத்திட-என் அன்பு உடன்பிறப்பே! நீ உறுதி கொண்டு நடந்திடுக! தாழ்ந்துவிட்டது என்று தருக்கர்களால் கூறப்பட்ட கழகம், இன்று தலைநிமிர்ந்து "ராஜநடை" போடுவதை நாடு காண்கிறது.

மாற்றாரும் நமது மாண்பு உணர்ந்து மகிழ்ந்து பாராட்டுகின்றனர்.

**பிரிந்து சென்ற நமது உண்மையான உடன் பிறப்புக்கள், சிலர் தாங்கள் சென்ற இடத்தின்**

**தகுதியைப் புரிந்து கொண்டு, இன்று தெளிந்து நம்மிடையே திரும்பிக் கொண்டிருக்கிறார்கள்.**

கழகமொன்றே இருள்போக்கும் கதிரவன் என இந்திய அரசியல் அரங்கம் இன்று விமர்சித்துக்கொண்டிருக்கிறது.

இந்த நேரத்தில் கழகத்திற்கு நமது உழைப்பு கடுமையாகத் தேவைப்படுகிறது. நேர்மையான உழைப்பு-நாணயமான செயல்-வலிவான உடல் - திடமான உள்ளம்-இத்தனையும் தேவை. இதனைக் கெடுத்திடக் கூடிய தீங்கு, கடுகத்தனையும் தலை காட்டாமல் பாடுபடுவோம். இந்தச் சூளுரையைப் பவளவண்ணன் கல்லறைக்கு முன்னால் எடுத்துக்கொள்வோம்! சொல்லித் தீரவேண்டியதை ஒளிவுமறைவின்றிக் கட்சியின் நன்மைக்காகச் சொல்லிவிட்டேன். அதற்காக என்னை மன்னித்துக் கொள்.

அன்புள்ள,

**மு. க.**

17-10-1975

# 145. இதற்கோர் சட்டம் தேவை!

**உடன்பிறப்பே,**

“ஒன்றே குலம் ஒருவனே தேவன்” என்ற திருமூலர் வாசகத்தை நமது அண்ணா அவர்கள் அடிக்கடி நினைவூட்டி வந்ததை நாம் மறந்துவிடவில்லையெனினும், தெய்வீகம், புராணம், மாய மாந்திரீகம் என்பவைகளின் பெயரால், மக்களை ஏமாற்றும் அநாகரீகமோசடிகள், இந்த இருபதாம் நூற்றாண்டிலும் பல்கிப் பெருகி வருவதை பகுத்தறிவுப் பிரச்சாரத்தால் மட்டுமன்றி அரசின் சட்டங்களாலும் கட்டுப்படுத்திட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

எத்தனையோ போலிச் சாமியார்களைப் போலீசார் பிடித்துக் கைது செய்திருக்கிறார்கள். அவைகள் குறிப்பிட்டதொரு குற்றத் திற்காக எடுக்கப்படுகிற நடவடிக்கைகளாக இருக்கின்றனவே தவிர, அந்தப் போலிகள் தோன்றுவதற்கு ஆதாரமாக இருக்கிற அடிப்படையை அகற்றுகின்ற அளவில் அமைந்திடவில்லை. ஒருசிலர், உண்மையிலேயே தாங்கள் கொண்டுள்ள ஆத்தீகக் கருத்துக்கு, அல்லது மதக்கொள்கைக்குத் தூய்மையாகப் பாடுபட எண்ணி, அதற்கேற்பத் தங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொண்டு, ஆலயங்கள் அல்லது ஆண்டவனின் பெயரால் மக்களுக்குப் பணியாற்றி வருகிறார்கள் என்பதை நான் மறந்துவிட வில்லை. அவர்களை மதிக்கவும் மறுக்கவில்லை.

வேறு சில வேடதாரிகள், அதிசயங்கள் செய்து காட்டுகிறோம் என்று கூறி அதற்கென இடைத்தரகர்களையும் ஏற்பாடு செய்துகொண்டு அவர்கள் வாயிலாக விளம்பரங்களைச் செய்து, தாங்கள்தான் ஆண்டவனின் அவதாரங்கள் என்று பொய்யுரைத்து நாட்டைக் காட்டுமிராண்டிக் காலத்திற்கு வேகமாக விரட்டிக் கொண்டிருக்கிறார்கள். அத்தகைய எத்தர்களுக்கு நமது நாட்டுப் பத்திரிகைகளும் ஒத்துழைப்புத் தருகின்றன. எப்படியோ

அன்றைக்குத் தங்கள் ஏடு, கூடுதலாக ஆயிரம் பிரதிகள் விற்றால் போதும் என்ற கணக்கை மட்டுமே அவர்கள் பார்க்கிறார்கள்.

"சின்னக்குழந்தை யொன்று தன்னுடைய
முன்ஜென்மத்தை அறிவிக்கிறது-"

இப்படி ஒரு செய்தி.

"சிலுவையுடன் பிறந்த குழந்தை; ஏசுவின் மறு அவதாரம்!"

இப்படி ஒரு பரபரப்பு.

"சாமியார், வெறுங் கையை மூடினார். பிறகு திறந்த போது தங்க நாணயமாக இருந்தது அந்தக் கையில்!"

இப்படி ஒரு உரையாடல்!

"விபூதி கொடுக்கிறார். அது வைரக்கற்களாக மாறிவிடுகிறது"

இதுபோன்ற ஆரவாரப் பேச்சுக்கள்.

நாளைக்கு நடக்கப்போவதை இன்றைக்கே சொல்லுகிறார். நேற்று நடந்ததையும் அப்படியே வரிபிசகாமல் கூறுகிறார். இதுபோன்ற பிரச்சாரங்கள்!

இவைகள் எல்லாம் நடக்கக்கூடியவைகளா? என்று சிந்திக்கும் ஆற்றலை இழந்துவிட்டவர்களிடம் இந்த வேடதாரிகளுக்கு நல்லவேட்டை!

அந்த மாயாவிகளின் முன்னால் அமர்ந்து, நாம் எது கேட்டாலும் உடனே அவர்கள் தங்கள் தெய்வீக சக்தியின் மூலம் வரவழைத்துக் கொடுக்கிறார்களாம். அப்படிப்பட்ட சக்தி அவர்களிடம் இருப்பது மெய்யானால், போர்க்காலத்தில் எதிரியின் ரகசியத் திட்டங் களையெல்லாம் மாயமாகக் கொண்டுவந்துவிடலாமே! போர்க் கருவிகளையெல்லாம் ஒரு இடத்தில் அமர்ந்தவாறே அந்த மாயாவியின் தெய்வீகத் திறமையால் அபகரித்துக் கொள்ளலாமே!

'மாஜிக்' நிபுணர்கள் செய்துகாட்டுகிற தந்திரங்களை, இந்த மாயாவிகள் மந்திரங்கள் என்ற பெயரால் செய்து காட்டி ஊரை ஏமாற்றுகிறார்கள் என்பதுதான் உண்மை! அதற்கு அவர்களுக்குக் காவியும், கமண்டலமும் கடவுளின் பெயரும்

தேவைப்படுகிறது. சுமார் இருபது ஆண்டுக் காலத்துக்குள் பார்த்தால் எத்தனையோ அதிசயச் சாமியார்களின் பெயர் பரபரப்பாக விளம்பரமாகும். பிறகு இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிடும். இதை உணர்ந்தும் மக்கள் திருந்தாமல் இருக்கிறார்களே என்பதுதான் வேடிக்கையாகவுமிருக்கிறது; வேதனையாகவுமிருக்கிறது. பெரியாரும் அண்ணாவும் சிங்கார வேலர் கைவல்யம் போன்றவர்களும் நடத்திய பகுத்தறிவுப் பிரச்சாரம் முழுதும் பயன்படாமலே போய்விடவில்லை. அவை பயன்பட்டிருப்பதால்தான்; மூடக்கொள்கைகளுக்கு இடையிலேயும், முகிலைக் கிழித்து வெளிக்கிளம்பும் முழுமதிபோல அறிவுலக விஞ்ஞானப் புதுமைகள் பலவற்றை நாடு பாராட்டத் தொடங்கியிருக்கிறது. அந்தப் புதுமைகளை விளைவிக்க இளைஞர் சமுதாயம் துடிப்புக் காட்டுகிறது.

சற்றுப் பொதுவாகச் சொல்லவேண்டுமானால், இன்று உள்ள மதத் தலைவர்கள் சிலரேகூட இந்த மாயாவிகளின் ஏமாற்று வேலைகளை விரும்பவில்லை. அத்தகையோர் இந்த எத்தர்களைக் கண்டிக்க வெளிப்படையாக முன்வந்தாக வேண்டும்.

இதுபோன்ற போலி வித்தைகளுக்கு அறைகூவல்விடும் வகையில், இலங்கை பகுத்தறிவுத் தலைவர் டாக்டர் கோவூர் சென்னையில் கூறியுள்ள கருத்துக்கள் வரவேற்கத்தக்கவை.

முனிரெட்டிபாளையம் என்ற ஊரில் மூன்று வயதுக் குழந்தை அதிசயங்கள் புரிவதாகவும் அதனைப்பரிசோதிக்க, தன் பிரதிநிதியை அனுப்பியிருப்பதாகவும் டாக்டர் கோவூர் கூறியிருக்கிறார்.

முன்பு ஒருமுறை இப்படித்தான்.

"ஜலபாபா" என்று ஒரு சாமியார்! அவர், பூமிக்கடியில் தண்ணீர் எங்கேயெல்லாம் கிடைக்குமென்று தெய்வீக சக்தியால் அறிந்து சொல்கிறார் என்று இந்திய அரசாங்கமே நம்பியது. பிறகு, அவரையே ஆளைக் காணோம்!

எனவே, உடன்பிறப்பே! இந்த மாயக்காரர்களின் ஜாலவேடிக் கைகளில் மக்கள் ஏமாறாமல் பார்த்துக் கொள்ளவேண்டும்? அதற்கேற்ற தெளிவான-கனிவான-பணிவான-ஆனால் துணிவான பிரச்சாரத்தையும் நீ, மக்களிடையே செய்தாகவேண்டும்.

சட்டத்தின் வாயிலாகவும் இந்தச் சூதுமதியினரின் கொட்டத்தை அடக்கவேண்டும்.

துறவிகள் எனக் கூறிக்கொள்கிறார்கள். பாவம்; பற்றற்ற வர்களாம் அவர்கள்! பன்னீர்க்குளியல்-பழரசபானம்-கன்னியர் சூழ் கட்டில் அறை-இவைகள் இல்லாவிட்டால் அந்தத் துறவிகளுக்குத் தூக்கமே பிடிக்காதாம்!

மாளிகைகள் - மஞ்சங்கள் - பூங்காக்கள் - அங்கே மக்களை ஏமாற்றுவதற்கென்றே உலவிடும் மகோன்மத்தர்கள்!

அவர்களுக்கென்று விளம்பரங்கள் - இன்ன ஊரில் இத்தனை நாள் முகாம் செய்கிறார்-உங்கள் பலன்களை அறிய வாரீர்! வாரீர்!! என்ற அழைப்புக்கள்!

**அதிசய வேலைகள்! ஆரூடக் கணிப்புக்கள்! ஜோசிய மோசடிகள்! இவைகள் நம்பத்தகாதவை என்று கட்சிக்கும் அப்பாற்பட்ட மேதைகள் அனைவரும் திடமாகக் கூறியாயிற்று!**

ஆகவே, இந்தக் கொடுமையை ஒழிக்க-இந்திய நாட்டு அளவில் உடனடியாகச் சட்டம் தேவை! கள்ளக் கடத்தல்போல, அந்நியச் செலாவணி மோசடிபோல, இதுவும் "மிசா" அல்லது "போசா" போன்ற சட்டத்தால் தடுக்கப்பட்டாக வேண்டும். இல்லை யேல், இந்த நோய், சமுதாயத்தை-நாட்டை-மிக வேகமாகப் பின்னுக்குத் தள்ளி மக்களைக் கோழைகளாக்கி வீழ்த்திவிடும். உடன் பிறப்பே! பெரிய அளவில் இல்லாவிட்டாலும்; ஊருக்கு ஊர், ஒன்றிரண்டு எத்தர்கள் இப்படி உலவுகிறார்கள். அவர்களிடமும் எச்சரிக்கையாக இருக்குமாறு மக்களிடம் கூறுவதும் நமது கழகப் பணிகளில் ஒன்றுதான்.

அன்புள்ள,

மு. க.

18-10-1975

# 146. மகளிர் மாநாடு கான...

**உடன்பிறப்பே,**

மாசறு பொன்னென-வலம்புரி முத்தெனப் புகழப் பெற்ற கண்ணகி, கையிற் தனிச் சிலம்பும் காவியுகு நீரும், ஆவி குடிபோன வடிவும் கொண்டு-தென்றல்; புயலாக மாறியது போல் சீறியெழுந்து நடந்தாளே; அந்த மதுரையில்-பாண்டிய மன்னன் செத்ததற்குச் செத்தாளே தென்னாட்டு அன்னம்; கோப்பெருந்தேவி-அவள் கொலு வீற்றிருந்த அந்தக் கூடல் மாநகரில்-மண்டிலங்கள் ஏற்றிப் போற்றிட மணிமகுடம் தரித்துச் செங்கோலோச்சினாளே; அந்த மங்கம்மாளின் திருநகரில்-கழக மகளிர் அணி வகுக்கின்றனர். அண்ணியார் தலைமையேற்கின்றார். அலமேலு அம்மையார் பாவையர் படை திரட்டுகின்றார்.

**கழகத்தின் ஆற்றல்மிகு மகளிர் அணி வீராங்கனையர் அனைவரும் பங்கேற்றிடும் எழுச்சிமிகு மாநாடாக, மதுரை மாநாடு அமைய இருக்கிறது. மலர் இதயம் கொண்டோர் எனினும், மாற்றாருக்கு இந்த மண்ணின் பெருமையை ஒரு சிறிதும் விட்டுக் கொடுக்காத மனவலிவு கொண்டோர், தமிழ்த் தாய்க் குலத்தினர் என்பதை எடுத்துக்காட்டும் பாசறையாகத் திகழ்ந்திடும் மதுரை மாநாடு!**

மாயப் பொய் பல கூட்டி, மாதர் குலத்தைத் தமிழ் இன உணர்வுக்கு எதிராகத் தூண்டிவிட நினைக்கின்ற 'போலி'கட்கு அறிவு புகட்ட அந்த மாநாட்டில் ஒளி விளக்கு ஏந்திப் புறப்படுவர்-புறநானூற்றுத் தாய்மார்களைப்போல!

ஒரு நாட்டின் மறுமலர்ச்சிக்கும்-சமுதாயத்தின் விழிப்புக்கும் பெண்ணினமே முழு முதற்காரணமாக அமையவேண்டும்-அவர்கள் தயாரிக்கும் போர்வாட்கள்தான் மொழிகாக்கும் காளையர்! பூவையரே நெஞ்சில் கனல் மூளப் போர்முனையில் எதிரிகளைச் சந்தித்த வரலாறுகள் எல்லாம் நிறைய உண்டு.

இடைக்காலத்தில், தேரும் திருவிழாவும், பயனற்ற பொழுது போக்கும், பண்பாடற்ற படக்காட்சிகளும் - தாய்க்குலத்தின் தகைமையைப் பாழ்படுத்த முனைந்தாலும் நாடும், மொழியும் காத்திட நாங்கள் தயார் என்று கரம் உயர்த்திடும் மகளிர் ஆர்வத்தை என்னால் காண முடிகிறது.

**அந்தப் பாசமுள்ள உடன்பிறப்புக்களின் பாடி வீடு மதுரை மூதூரில் அமைகிறது எனக் கேள்வி யுற்றதுமே எனக்கோர் பூரிப்பு!**

குடும்பத்துப் பெரியோர் அனைவரும் களம்பட்ட பிறகும், தன் ஏழு வயதுக்குலவிளக்கைப் போருக்கு அனுப்பிய தாய்க்குலத்தின் கூட்டமல்லவா அது?

"நெஞ்சில் வேல் தாங்காது, முதுகில் குத்துண்டு மாண்டான் மகன்" எனக் கேள்வியுற்றுத் துடித்துப்போன வீரத் தாயின் வழிவழி வந்தவர்கள் அல்லவா, மதுரையில் கூடுகிறார்கள்!

"எங்கெங்குக் காணினும் சக்தியடா ஏழுகடல் அவள் வண்ணமடா!" என்று புரட்சிக்கவி அன்று-முதன் முதல் பாடிய கவிதைக்குப் பொருளாக மதுரை மகளிர் மாநாடு விளங்கிடும் என்பதில் எனக்கு ஐயமில்லை.

**அண்ணா உருவாக்கிய கழகத்தைக் காத்திட, அறிவியல் கருத்துக்களை நாடெங்கும் பரப்பிட, கண்ணகி மரபில் வந்த தமிழச்சி, இதோ-எழுந்து விட்டாள் படை நடத்த; என்ற வீரமுரசமாக விளங்கப் போகிறது மதுரை மாநாடு.**

மழலைகளை அழைத்தவாறும், அரும்புகளை இடுப்பில் அணைத்தவாறும், ஆடவர்கூட்டத்திற்கோர் அறைகூவலாக அவர்கள் எடுத்திடும் அந்த எழுச்சித் திருவிழா; வரும்-15-16 சனி, ஞாயிறு கிழமைகளில் மதுரையில்!

தமிழர் மானமும்-மரபும்-இலக்கியமும்-இணையற்ற வரலாறும்-காத்திட; இருவண்ணக் கொடியேந்தி-இலட்சிய முழக்கமிடும் இந்த மாநாடு காண-என் அன்பு உடன்பிறப்பே! புறப்படு உடனே!

அன்புள்ள,

**மு. க.**

12-11-1975

# 147. கோவை மாநாடு - 1
# "ஆண்டிகள் கூடுவோம்!"

**உடன்பிறப்பே,**

நீலத்திரைக் கடலோரத்தில் நித்தம் தவம்புரியும் குமரி எல்லையில் நீ தீட்டிய எழிலோவியத்தை-எழுச்சி ஓவியத்தைக் கண்டு மகிழ்ந்து உன் ஆற்றல் மிகு கரங்களைப் பிடித்துக் கண்ணில் ஒத்திக்கொண்டு விடைபெற்றுப் புறப்பட்டேனல்லவா; அதற்குப் பிறகு நெல்லை மாவட்டத்திலும், மேற்கு ராமநாதபுரம் மாவட்டத்திலும் மூன்று நாள் சுற்றுப்பயணத்தில் ஒவ்வொரு ஊரிலும் ஒரு நாகர்கோயில் மாநாட்டைத்தான் காண நேர்ந்தது.

மலைத் தொடர்போல எதிர்ப்புகள்-அலைஅலையாய்ச் சோதனைகள்-இத்தனைக்கும் ஈடுகொடுத்து நமது கழகம் வலிமையை வளர்பிறையாக்கிக்கொண்டு திகழ்கிறது என்பதற்கான எடுத்துக்காட்டுக்களே, நமது மாநாடுகள், செயல்வீரர் கூட்டங்கள், சுற்றுப்பயண நிகழ்ச்சிகள்.

- ☐ இழிமொழி கூறி அழிக்கும் படலம்.
- ☐ களங்கம் சுமத்திக் கவிழ்க்கும் படலம்.
- ☐ பழிகூறி மிரட்டும் படலம்.
- ☐ காட்டிக்கொடுத்து வீழ்த்தும் படலம்.

இத்தனையும் நமது வளர்ச்சிக்கு எதிராகக் கொடிதூக்கி ஆர்த்து எழுந்தன. இன்னமும் ஓய்ந்துவிடவில்லை. இனியும் ஓயும் என்று எதிர்பார்ப்பதற்கு இல்லை. மேலும் கடுமையாகக்கூட அந்தப் படலங்களை உருவாக்க முனைவர். அவைகளையும் தாங்கிடும் பக்குவமுள்ள நெஞ்சுடன்தான் நாம் நிமிர்ந்து நடைபோட்டுக் கொண்டிருக்கிறோம்.

ஆதிக்கபுரியினர் சீற்றம்.

ஊரையடித்து உலையில் போடுவோர் உறுமல்.

சாமான்யர்களுக்கு, சாதாரணமானதுகளுக்கு அரசியல் மதிப்பா? என்று ஆர்ப்பரிப்பவர்களின் அட்டகாசம். பொறாமைக்காரர்களின் பொல்லாங்குப் போக்கு.

இன்று நேற்றல்ல; இந்த இயக்கத்திற்கான 'விதை' ஊன்றப்பட்ட காலத்திலிருந்தே நாம் சந்தித்துத் தீர வேண்டியவைகளாகி விட்டவை இவை.

வாழ்த்துக்கள் குவிகிற நேரத்தில், வசை புராணங்களை எண்ணிப் பார்த்து அடக்கம் கடைப்பிடிப்பதும்; வசைமாரி பொழியும்போது வாழ்த்துக்களை நினைத்துக்கொண்டு பொறுமை காட்டுவதும் நமது இயல்பாகக் கொள்ளப்பட்டுவிட்ட காரணத்தால்-மெல்ல மெல்ல; ஆனால் உறுதியாக-படிப்படியாக; ஆனால் பலமாக-நமது கொள்கைகளும் இலட்சியமும் வேரூன்றி யிருக்கின்றன. வேறு கட்சியினர், நம்மோடு மோதுவது மட்டுமல்ல-தங்களுக்குள்ளேயே மோதிக்கொண்டு அதிலும் நம் தலையை போட்டு உருட்டுகிறார்கள். நம் வளர்ச்சி எவ்வளவு மிரட்சியைத் தந்திருந்தால் நம்மால் மதிக்கப்பட்ட சில பெரியவர்கள்கூட வீணான அவதூறுகளை நம்மீது வீசுவார்கள் என்பதை நீ, சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

திரு. செல்லபாண்டியன் அவர்கள் முன்னாள் சபாநாயகர். பழகுதற்கு இனியவர். அவர் திருச்சி பொதுக் கூட்டத்தில் பேசியதாக 'இந்து' இதழில் ஒரு செய்தி படித்தேன்.

**"திரு. பி. ராமச்சந்திரனுக்கும் கருணாநிதிக்கும் ரகசியத் தொடர்பு இருந்ததால்தான், காமராஜரின் சடலத்தைத் தூக்கி ராமச்சந்திரன் கருணாநிதியிடம் கொடுத்து விட்டார்."**

இதனைப் படித்ததும் திடுக்கிட்டேன். செல்லபாண்டியன் நல்ல வழக்கறிஞர். சபாநாயகர் பதவிக்கு வந்தபோதுகூட, தன் வக்கீல் தொழில் கெட்டுவிடும் என்று என்னிடமே கூறி வருத்தப் பட்டிருக்கிறார். அவ்வளவு திறமையுள்ள வழக்கறிஞர், தான் கொண்டுள்ள கருத்துக்கு வலிவேற்றும் வாதத்துக்கு இப்படி ஒரு தவறான நிலையை மேற்கொண்டது ஏன் என்றே எனக்குப் புரியவில்லை.

திரு. செல்லபாண்டியனுக்கு விளக்கம் அளிக்கும் விதத்தில் இதோ திரு. ராஜாராம் நாயுடு பேசுவதைப் பார். நாயுடு அவர்கள் பொதுக்கூட்டத்திலே பேசியது அல்ல. சட்டமன்ற மேலவையில் பேசியது. முரசொலியில் வெளிவந்தது அல்ல. சென்ற அக்டோபர் இருபத்தி நான்காம் நாள் 24-10-75 நவசக்தி இதழில் வெளிவந்தது. காமராஜர் பற்றிய இரங்கல் தீர்மானத்தின்போது, திரு. நாயுடு அவர்கள் தெரிவித்த கருத்துக்கள் வருமாறு:-

"பெரியவருடைய மரணச் செய்தியைக் கேட்டு முதலமைச்சர், அவரது இல்லத்திற்கு ஓடிவந்தார். எங்களைக் கட்டிக்கொண்டு அழுது கண்ணீர்விட்டது மட்டுமல்ல, உடனே பெருந்தலைவரின் உடலை ராஜாஜி ஹாலுக்கு எடுத்துச் செல்ல ஏற்பாடு செய்தார். அமைச்சர் ராஜாராம் உடனே பிரதமருக்கு செய்தியைத் தெரி வித்தார். பெரியவருடைய உடலை தேனாம்பேட்டை காங்கிரஸ் மைதானத்தில் தகனம் செய்து நினைவுச் சின்னம் அமைக்க நாங்கள் முடிவு செய்திருந்தோம்.

காமராஜரின் உடல் ராஜாஜி மண்டபத்திற்கு வந்ததும் மந்திரிகள் அனைவரும் மந்திரிசபையே கூடியது போல் வந்து விட்டார்கள். அவர்கள் பேசி முடிவு செய்து காமராஜரின் உடலை காந்திஜி மண்டபத்திற்கு அருகில் வைத்து நினைவுச் சின்னம் அமைக்க வேண்டுமென்று கூறினார்கள்.

அன்று இரவே முதலமைச்சரும், அமைச்சர் ப. உ. சண்முகமும் எங்களை அழைத்துக்கொண்டு கிண்டிக்குச் சென்று, கார் விளக்கு களைப் போட்டு இடத்தைத் தேர்ந்தெடுத்து இரவோடு இரவாக புல்டோசர்களை வைத்து மரங்களை எல்லாம் அகற்றி, இடத்தைச் செப்பனிட்டார்கள். அவர்கள் காட்டிய பரிவையும், பெரியவர்மீது வைத்திருந்த மரியாதையையும் எங்களால் மறக்க முடியாது."

24-10-75 நவசக்தி

நவசக்தியில் வந்ததை மட்டுமே சுட்டிக் காட்டியுள்ளேன். தேனாம்பேட்டை காங்கிரஸ் மைதானத்தில் நடைபெற்ற இரங்கல் கூட்டத்திலும், மேலவைப் பேச்சிலும், "மூத்த உடன்பிறப்புக்குச் செய்வதுபோலக் கருணாநிதி, காமராஜருடைய காரியங்களைக் கவனித்தார்" என்ற கருத்தையும் நாயுடு அவர்கள் உணர்ச்சி பொங்க வெளியிட்டதையும் யாரும் மறந்திருக்க முடியாது. ஆனால் நீண்டநாள் அக்ஞாத வாசத்திற்குப் பிறகு, செல்லபாண்டியனார்,

திடீரெனத் தி.மு.கழகத்தின் மீது பாய்ச்சல் நடத்துவது புதிய விளம்பரத்தின் அடிப்படையில் இருக்குமேயானால் அதற்கும் நாம்தானே பயன்படுகிறோம் என்று ஒருவகையில் ஆறுதல் பெறலாம். ஆனால் முழுக்க முழுக்க திரு. ராஜாராம் நாயுடு அவர்களையும், திரு. ராமச்சந்திரன் அவர்களையும் கலந்துகொண்டு செய்த காரியத்தை வேண்டுமென்றே திசை திருப்பிப் பேசுவது முறையல்ல. அழகுமல்ல. அரசியல் பண்பும் ஆகாது.

பெரியவர் காமராஜரின் உடல் தேனாம்பேட்டை மைதானத்தில் தகனம் செய்யப்பட்டிருந்தால், இப்போது நடைபெறுகிற பூசலில் அவரது நினைவிடத்தில் மலர்வளையம் வைப்பதில் கூட தகராறு ஏற்பட்டிருக்கக்கூடும். நல்லவேளை; பொதுவான ஒரு இடத்தில் அந்தப் பெரியவரின் 'நினைவு இடம்' அமைகிறது என எண்ணி அனைவரும் ஆறுதல் பெற வேண்டும்.

உடன்பிறப்பே, யார்யார் பிரச்சினையில் எல்லாம் நாம் இழுக்கப் படுகிறோம் பார்த்தாயா?

ஆடத்தெரியாதவன் முற்றும் கோணல் என்ற கதையாக அல்லவா இருக்கிறது இது! ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோயில் ஆண்டி என்பார்களே; அது போல ஆண்டியென்ற அந்தஸ்துதானே நமக்கு அவர்கள் கொடுத்து வருகிறார்கள். பாவம்; ஆண்டியென்பது பெரிய அந்தஸ்து என்பதை அவர்களைப் போன்றவர்கள் உணரமாட்டார்கள். ஆண்டிகள் எல்லாம் கூடித்தான் பெரிய மடத்தைக் கட்டி முடித்திருக்கிறோம். ஆண்டிகள்தான் பெரியார் ஆண்டி தலைமையில் வளர்ந்து, அண்ணா ஆண்டி வழியில் தொடர்ந்து, எட்டாண்டு காலமாக ஏற்றமிகு ஆட்சியும் நடத்தி வருகிறோம். நாட்டின் எதிர்கால நல்வாழ்விற்காக இந்த ஆண்டிகள்தான் லட்சோப லட்சமெனக் கோவையில் கூடப்போகிறோம். அங்கு தலைமை வகிக்கப்போகும் இந்த ஆண்டியின் கடிதம் தொடர்ந்து உனக்கு வந்துகொண்டேயிருக்கும். கோவையில் சந்திப்போம். தயாராகிக்கொள்.

அன்புள்ள,

**மு. க.**

06-12-1975

# 148. கோவை மாநாடு - 2
# திருவோடு வருக!

உடன்பிறப்பே,

கோவைக்குச் சென்று வந்தவர்கள் கூறுகிறார்கள்; இப்போதே கழகப்பொது மாநாடு தொடங்கிவிட்டது போன்ற எழுச்சி, எங்கணும் இருப்பதாகவும், நமது செயல்வீரக் கண்மணிகள் எறும்புகளை வென்றிடும் சுறுசுறுப்புக் காட்டிப் பணிபுரிவதாகவும், நகரம் இடம் காணுமா என்னும் மலைப்புத் தோன்றியுள்ளதாகவும்!

கோவையில் மட்டுமா மாநாட்டுப் பணிகள்? எல்லா மாவட்டங் களிலும் கழக அமைப்புக்களின் நிர்வாகிகளும், தூயநற்றொண் டர்களும் இந்தப் பணிக்கெனவே தங்களை ஒப்படைத்துக் கொண்டு பம்பரமெனச் சுழலுகிறார்கள்.

மாவட்டந்தோறும் கழகத் தேர்தல் நிதி திரட்டி, அதனை மாநாட்டில் வழங்கிடவேண்டுமென விடுத்த வேண்டுகோளுக் கிணங்க மாவட்டச் செயலாளர்கள் ஒருவரோடு ஒருவர் போட்டி போட்டுக் கொண்டு நிதி திரட்டும் களத்தில் இறங்கிவிட்டனர். எனக்கு எவ்வளவு "ஆணவம்" பார்த்தாயா? மாநாட்டுக்குத் தலைமை வகிக்கும் பொறுப்பு எனக்கு. என்னை வழிமொழிந்து பேசிடப் போகும் மாவட்டச் செயலாளர்கள் ஒவ்வொருவரும் ஒரு இலட்ச ரூபாய் முன்கூட்டியே தேர்தல் நிதி அளித்திடவேண்டும் என்று நிபந்தனை விதித்திருக்கிறேன். கட்சியின் நலனுக்காக நான் கழகத் தளபதிகளிடம் கொண்டாடுகிற உரிமை இது வெனப் புரிந்து கொண்டிருக்கிற காரணத்தால்தான் அவர்கள் என் நிபந்தனையை ஆணவத்தின் எதிரொலி என்று கருதாமல் அன்புவேண்டுகோள் என எடுத்துக் கொண்டு அயராது ஆர்வம் குன்றாத நிதி திரட்டும் வேலையை நிறைவேற்றத் தொடங்கியுள்ளனர்.

உடன்பிறப்பே,

மாநாடு-நமது அன்புத்தலைவர் அஞ்சாநெஞ்சன்-உழைப்பின் உருவம்-கொள்கைக் குன்றம்-என்.வி.என். அவர்கள் பெயரால் அமைந்த பந்தலிலே!

அரங்கின் பெயரோ; அடலேறு உடுமலை நாராயணன் எனும் இலட்சிய மனிதனை நினைவுபடுத்திக் கொண்டிருக்கும்.

பெரியார், அண்ணா, பாரதிதாசன் மற்றும் நம் கருத்துக்கினிய தலைவர்களின் படங்களைச் செவிக்கும் சிந்தைக்கு மினிய செந்தமிழ் பொழியும் சீர்மலி உள்ளத்தினர் திறந்திட வருகின்றனர்.

இந்தப் பேரியக்கம் வளர வேருக்கு நீராகத் தங்கள் குருதியினைப் பாய்ச்சிய கழகத்தின் தியாகச் செம்மல்களின் திருவுருவைத் தித்திக்கும் சொல் எடுத்து முழக்குகின்ற திறமைமிக்க நமது பேராசிரியர் திறந்துவைக்க இருக்கிறார்.

அவர் பேச்சு, பகைவரின் தாள் நோக்குகின்ற துரோகத்தைத் தூளாக்கும் வாள் வீச்சு என்பதை நீ அறிவாய்.

நடமாடும் பல்கலைக் கழகமென நமது ஆருயிர் அண்ணனால் அழைக்கப்பெற்ற நாவலர் மாநாட்டைத் திறந்துவைக்கிறார். வேங்கை நிகர்த்த உரு-வேலின் பாய்ச்சல் கண்டு இமை கொட்டாத எஃகு நெஞ்சம்-அடக்கத்தின் கருவூலம் - சிந்துபாடும் அருவியெனச் சிந்தனைக்கு வேலைதரும் செந்தமிழ்ப் பேருரையொன்றைக் கேட்க இருக்கிறோம்.

உன்தோள் வலிவை நம்பி, அயராது அல்லும் பகலும் உழைக்கும் உன் உறுதி குலையாத இதயத்தை நம்பி, உன் உடலில் திகழும் விழுப்புண்களின் வீரவரலாற்றுக் கதைகளைப் படித்தவாறு, ஓடியாடிக் காரியமாற்றும் உன் காலடிகளை இதழ்ப் பூக்களால் அர்ச்சித்துக் கொண்டிருக்கிற எனக்கு; ஆம் இந்த எளியவனுக்கு-முதன் முதலாகக் கழகத்தின் மாநிலப் பொது மாநாட்டுக்குத் தலைமையேற்கும் வாய்ப்புக் கிடைத்திருக்கிறது.

இயக்கப் பேச்சாளர்களுக்கு மேடைபோட்டுக் கொடுத்தவன்-கூட்ட விளம்பரச் சுவரொட்டிகளைத் திருவாரூர் தெருச் சுவர்களிலே ஒட்டியவன்-இன்றும் அந்தத் தொண்டர்க்குத் தொண்டனாக இருக்க விரும்புகிறவன், கோவை மாநாட்டிலே, அதுவும் மாநில மாநாட்டிலே தலைமை ஏற்கப் போகிறேன் என்பதை எண்ணும்போது, என் அன்பு உடன்பிறப்பே! எத்தனை எத்தனை நினைவுகள் நெஞ்சத்து அலைகளாக விம்மி எழுகின்றன தெரியுமா? அண்ணனுக்குப் பிறகு என் இனிய உடன்பிறப்புக்களாம் நாவலர், பேராசிரியர், மற்றுமுள்ள முன்னணித் தலைவர்களின் குன்றா வலிவுடன் இந்தக் கழகத்தை எவ்வளவோ

சோதனைகளுக்கிடையே வளர்த்து வருகிறோம். அண்ணா, ஒருமுறை சென்னை நுங்கம்பாக்கம் வீட்டுக் கூடத்தில் அமர்ந்து என்னுடன் இருந்த என் அன்புக்கினிய நண்பர் ஒருவருக்குக் கண் கலங்க அறிவுரை கூறிக் கொண்டிருந்தார். அப்போது சொன்னார் அண்ணா; **"என்னையும் கருணாநிதியையும் தாக்குவதற்கு, எதிரிகள் எங்கள் குலத்தையும் குடும்பத்தினரையும்கூடக் குறைத்துப் பேசுகிறார்கள் பார்த்தாயா? அதையெல்லாம் நாங்கள் எப்படித் தாங்கிக் கொள்கிறோம்? நீயெல்லாம் இருக்கிறாய் என்ற தெம்பினால் தானே!"**

இந்த வாசகத்தை முடிப்பதற்குமுன், அண்ணனின் கண்களும் நீர்வீழ்ச்சிகளாயின. எங்களிருவரின் கண்களும் உடைப்பெடுத்த பேராறுகளாயின.

உடன்பிறப்பே, இதனை ஏன் நினைவுபடுத்துகிறேன் என்றால்-மற்ற கட்சித் தலைவர்கள் தாங்கிக் கொள்வது போன்ற எதிர்ப்பல்ல; நமது கட்சியின் மீது திருப்பப்படுகிற எதிர்ப்புக்கள் என்பதற்காகத்தான்!

"பண்பு" எனும் ஒரு பொருளில்லா அரசியல்வாதிகளிடமிருந்து - நாகரீகத் தாக்குதல்களையோ; நடந்தவைகளை நினைத்துப் பார்க்கவும் மறுக்கிற "நன்றி" பயிலா நண்பர்களிடமிருந்து தரமான விமர்சனங்களையோ; எதிர்பார்க்க முடியாது என்பதால்தான் "எதையும் தாங்கும் இதயம் வேண்டும்" என்று அண்ணா அடிக்கடி கூறினார்.

அந்த இதயத்தை எப்படிப் பெற முடிகிறது? பெற்றாலும் அதனை எப்படி நிலைகுலையாமல் காப்பாற்ற முடிகிறது? சேற்றினை வாரி நம்மீது ஒருவன் வீசும்போது "அய்யோ அவன் கைகள் அழுக்காகிவிட்டனவே" என்று கவலைப்படுகிற ஏசு; புத்தர்களைப் போல நாம் ஆகிவிட முடியாவிட்டாலும், பதிலுக்கு நாமும் சேற்றைவாரி வீசுவோம் என்ற இழிநிலையை என்றும் நாம் பெற்றோமில்லை. சொல்ல நாக்கூசும் சொற்களால் நம்மை அடித்து அடித்து எதிரிகள்தான் தங்கள் வாய்வலிக்கு வைத்தியம் செய்து கொண்டிருக்கிறார்கள். நமக்கு எத்தனை சோதனைகள் வந்தாலும், அண்ணா காலத்திலும் சரி; இப்போது அவர் வழியில் நடைபோடும் நம் காலத்திலும் சரி; நாம் நிதானம் தவறும் செயலில் ஈடுபட்டதில்லை. நிதானம் இழந்து ஆத்திரத்துக்கு ஆளானால்,

சேற்றில் சிக்கிக் கொண்ட யானையை ஒரு நரிகூட அடித்துவிடும் என்றாரே; வள்ளுவர்-அதுபோல "நரி"கள் தாக்கும் "கரி"யாகி விட்டிருக்கும் நமது கழகம்.

ஆமாம் என் உடன்பிறப்பே, சில நேரங்களில் வேங்கை வரிப்புலிகளைக்கூடத் தன் துதிக்கையால் சுழற்றி வளைத்துக் காலால் மிதித்துக் கசக்கிப் போடும் ஆற்றல் வாய்ந்த காட்டு யானை, திடீரெனச் சகதியில் கால் வைத்துச் சிக்கிக் கொள்ளுமாம். அப்போது நரிகள் கூடிக்கொண்டு அந்த யானையை வட்டமிட்டு வதைக்குமாம். யானையின் நிழல் கண்டாலே தொலைதூரம் ஓடுகிற நரிகளுக்கு-யானையின் ஒலி கேட்டாலே ஓடி ஒளியும் அந்தச் சிறு பிராணிகளுக்கு - அவ்வளவு துணிச்சல் வந்து விடுகிறது; காரணம் யானை, சேற்றில் அல்லவா கால் வைத்துவிட்டது.

வள்ளுவனின் இந்தக் குறள் கூறும் உண்மையை உணர்ந்து தான் பகைவர்கள் எவ்வளவுதான் சேற்றை எடுத்து வீசினாலும், பதிலுக்கு வீசிடக் கழகம் சேற்றில் இறங்குவதில்லை.

இந்தக் கழகம் கட்டிக் காக்கும் கொள்கைகள் வெற்றி பெற-இலட்சியக் கொடி விண்முட்டப் பறந்து தமிழ்ச் சமுதாயத்தின் எழுச்சியினை உணர்த்த-கோவையில் கூடுகிறோம் நாம். "ஆண்டிகள் கூடிடுவோம்! வா!" என முந்தைய கடிதத்தில் அழைத்தேன் உன்னை! அதனையே இப்போதும் திரும்பச் சொல்லி அழைக்கிறேன். வரும்போது நீ மட்டும் வராதே! திருவோடு வா! ஆணுக்குப் பெண்-திரு! பெண்ணுக்கு ஆண்-திரு! அதாவது குடும்பத்தோடு வா! என்று அழைக்கிறேன். மணமாகவில்லையே என்றால்; தாய், தந்தை, அக்காள், தங்கை, அண்ணன், தம்பி, இப்படிக் குடும்பம் குடும்பமாக நமது இயக்கக் குடும்ப விழாவுக்கு வருவதும் திருவோடு வருவதாகத் தானே அமையும்!

அன்புள்ள,

மு. க.

08-12-1975

# 149. கோவை மாநாடு - 3
# சத்திரத்துப் பேர்வழிகள்!

**உடன்பிறப்பே,**

இன்று என் அரசுப் பணியையொட்டி ஒரு ஆணை பிறப்பிக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இடம் பெறும் சமூகத்தினரைக் குறிப்பிடும்போதும், தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் இடம் பெறும் சமூகத்தினரைக் குறிப்பிடும் போதும், ஒரு சில சமூகத்தினர் பற்றிய பெயர்களின் இறுதி எழுத்து "ர்" என்று இருப்பதற்குப் பதிலாக "ன்" என்று நீண்டகாலமாகக் குறிக்கப்பட்டு வருகிறது. இனி, அரசு தயாரிக்கும் பட்டியலில் அந்தச் சமூகங் களின் மதிப்பைக் குறைக்கும் வகையில் "ன்" என்று இருக்கிற இறுதி எழுத்துக்களையெல்லாம் நீக்கி விட்டு, அந்த இடத்தில் "ர்" என்னும் எழுத்தையே பயன்படுத்த வேண்டுமென்பதுதான் இன்று பிறப்பித்துள்ள ஆணையாகும்.

அடா! அடா! ஒரு எழுத்தை மாற்றுவது அவ்வளவு பெரிய சாதனையா என்று கேட்பவர்களும், கேலி புரிகிறவர்களும் இருக்கத்தான் செய்வார்கள். நானறிவேன் அவர்களை! அவர்கள் இந்த அரசு செய்துள்ள பெரிய சாதனைகளையே ஏற்றுக் கொள் ளாதவர்கள்-ஆகவே இதனை எள்ளி நகையாடுவதில் வியப்பிருக்க முடியாது. இந்த எழுத்து மாற்றத்தின் பின்னால் ஒருசிறிய வரலாறே அடங்கியிருக்கிறது என்பதை எண்ணிடும்போது என் இதயம் உணர்ச்சிமயமாகிறது.

உடன்பிறப்பே! இந்தச் சிறு சாதனைக்கான ஆணை பிறப்பிக்கும்போது, எனக்கு 1957-ஆம் ஆண்டு ஜூலை 11-ஆம் நாள் நினைவுக்கு வரத் தவறவில்லை. அந்த நினைவை என்னருகே இருந்த அமைச்சர்கள் மாதவன், கண்ணப்பன் இருவரிடமும் விளக்கிக் கூறி, என் விளக்கமும் நினைவாற்றலும்

சரிதானா என்பதைத் தெளிவாகத் தெரிந்து கொள்ள 1957-ஆம் ஆண்டு சட்டப்பேரவை நடவடிக்கை குறிப்புகள் அச்சியற்றப்பட்ட புத்தகங்களைக் கொண்டுவரச் சொல்லிப் புரட்டிப் பார்த்தேன். அந்த நடவடிக்கைக் குறிப்பை அப்படியே வரி தவறாமல், எழுத்துக் குறையாமல் இதோ உன் முன்னால் வைக்கிறேன்.

1957 ஜூலை 11-ஆம் நாள்-சட்டப்பேரவையில் கேள்வி நேரம். குளித்தலைத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மு. கருணாநிதி, சட்டமன்றத்தில் வைக்கப்பட்டுள்ள பிற்படுத்தப் பட்டோர் பட்டியல் பற்றிய விளக்கக் கேள்வி ஒன்றைக் கேட்கிறார்.

[பக்கம்: 231]

**ஸ்ரீ. எம். கருணாநிதி:-**

**தரப்பட்டுள்ள பட்டியலில் 'சாணான்' என்றும் 'வண்ணான்' என்றும் குறிப்பிட்டிருக்கிறது. அதில் 'ன்' என்ற எழுத்தை மாற்றி 'ர்' என்ற எழுத்தைப் போட்டு பட்டியல் தயாரிக்க அரசாங்கம் முன்வருமா?**

**கனம். ஸ்ரீ. கக்கன்:-**

**சபாநாயகர் அவர்களே! கனம் அங்கத்தினர் அவர்கள் சொன்னது மாதிரி மாற்றம் செய்ய வேண்டியதுதான் என்றிருந்த போதிலும் மத்திய சர்க்காரில் இம்மாதிரிதான் பெயர்கள் உபயோகப் படுத்தப்பட்டு வருகிறது.**

**கனம். ஸ்ரீ. சி. சுப்ரமணியம்:-**

**"ன்" என்ற எழுத்தைப் போட்டிருப்பதால் மரியாதை குறைந்துவிடாது. சிலர் "டிரைவர்" என்பதை, "டிரைவன்" என்று மரியாதைக் குறைவாகச் சொல்லுவதாக நினைத்துச் சொல்வதுண்டு. இது அப்படியல்ல. அவர்களின் ஜாதிப் பெயரின்படி போடப்பட்டிருக்கிறது. இதனால் மரியாதைக் குறைவு ஒன்றுமில்லை.**

**ஸ்ரீ. எம். கருணாநிதி:-**

**இந்தப் பட்டியலில் மருத்துவர்-இசைவேளாளர்-என்றெல்லாம் மதிப்புக் கொடுத்து உபயோகிக்கப் பட்டிருக்கிறதே!**

**கனம். ஸ்ரீ. சி. சுப்ரமணியம்:-**

**அதில் மதிப்பு ஒன்றும் இல்லை.**

**கனம். ஸ்ரீ. கக்கன்:-**

**'ன்' என்று போடுவதால் ஒரு இழிவும் வந்து விடாது.**

இந்தக் கேள்வியும் பதிலும் 1957-ஆம் ஆண்டு சட்டப் பேரவையில் ஒலித்தவை. பெரியவர் கக்கன் அவர்களுக்கோ அன்றைய மாநில நிதி அமைச்சர் மதிப்புக்குரிய சுப்ரமணியம் அவர்களுக்கோ, மற்ற வகுப்பினரை இழிவுபடுத்த வேண்டுமென்ற நோக்கம் இருந்ததாகச் சொல்லமுடியாது. அதிகாரிகள் தயாரித்த பட்டியலில் கவனக் குறைவால் அந்தத் தவறு நேர்ந்திருக்கலாம். திரு. கக்கன் கூறியது போல அதற்கு மத்திய அரசும் பொறுப்பல்ல. ஆனாலும் என்னுடைய கோரிக்கை, அன்று அலட்சியப்படுத்தப் பட்டுவிட்டது. எதிர்க்கட்சியிலிருந்து கிளம்புகிற முறையீடு என்ற ஒரே காரணத்தால், என் கேள்வியும் உணர்வும் கேலிக்குரியதாக ஆக்கப்பட்டன.

இன்று நான் அரசின் சார்பில் பிறப்பித்துள்ள ஆணை, சாதாரணமானதுதான்! ஆனால், அது ஒரு சாதாரணமானவனால் சாதாரண மக்களின் சுயமரியாதையைக் காப்பாற்றுவதற்காகப் பிறப்பிக்கப்பட்டது என எண்ணும்போது நெஞ்சம் பெருமிதத்தால் விம்மத்தான் செய்கிறது.

நமது சாதனைகளில் சிறியவையும் பெரியவையும் உண்டு. ஆனால்; இவைகளுக்காக எதிர்க்கட்சியில் இருந்து வாதாடும்போது, சத்திரத்துப் பேர்வழிகளைப்போல அல்லவா கருதப்பட்டோம்!

இந்தச் சத்திரத்துப் பேர்வழிகளாலும் சரித்திரம் படைக்க முடியும் என்பதை இன்று நிரூபித்து வருகிறோமா; இல்லையா? அந்தச் சரித்திரம் படைத்த கதையைத் திரும்பிப் பார்க்க, மேலும் முன்னேற, தன்மான முரசு கொட்ட, தலைநிமிர்ந்து நடைபோட, என் தங்கம் நிகர் உடன் பிறப்பே; கோவைக்கு வா! கொள்கை வைரமே! குடும்பத்தோடு புறப்படு!

அன்புள்ள,

**மு. க.**

10-12-1975

# 150. கோவை மாநாடு - 4
# "காவி"யுகு நீர் உலர...!

**உடன்பிறப்பே,**

புதிய தமிழ்ப்புலவர் ஒருவர் புறப்பட்டிருக்கிறார். அவரிடம் தமிழ்த்தென்றல் திரு. வி. க. பாடம் கேட்க வேண்டுமென்கிறார்கள். பல்லாவரத்துப் பழம்பெரும் அறிஞர் மறைமலை அடிகளார் கைகட்டி நிற்கவேண்டுமென்று கூறுகிறார்கள். பசுமலை பாரதியும், பாவேந்தர் பாரதிதாசனும், விடுதலைக்கவி வீரமிகு சுப்பிரமணிய பாரதியாரும் அவர் வீட்டுப் படிக்கட்டில் நின்று தமிழ் கற்றுக்கொள்ளத் தவம் செய்யவேண்டுமென்று பேசுகிறார்கள். அப்படிப்பட்ட செந்தமிழ்ச் செல்வமாம் அவர். நல்ல வேளையாக நான் குறிப்பிட்ட தமிழ் அறிஞர்கள் எல்லாம் இப்போது உயிரோடு இல்லை. இந்தப் புதிய புலவர், அண்மைக்காலமாக தமிழாராய்ச்சியில் மிக விரிவாக ஈடுபடுகிறார். தமிழின் வரலாறு-தமிழர் வரலாறு பற்றியெல்லாம் புதிய புதிய ஆராய்ச்சிக் கருத்துக்களை வெளியிடுகிறார்.

அவர் தலைமையை ஏற்றுக்கொண்டிருக்கிறவர்களில் ஒருசிலர் நல்ல தமிழ் படித்த இளைஞர்கள் என்பதையும், கவிதை நடை, உரைநடை, கற்றுத்திறன் பெற்றவர்கள் என்பதையும் நானறிவேன். அவர்களால், அந்தப் புலவரின் தமிழை, எப்படித்தான் தாங்கிக்கொள்ள முடிகிறதோ; எனக்குத் தெரியவில்லை. "எதையும் தாங்கும் இதயம் வேண்டும்" என்ற அண்ணாவின் அறிவுரையை இந்த ஒரு காரியத்திலாவது அவர்கள் கடைப்பிடிக்கிறார்கள்போலும் என எண்ணித்தான் ஆறுதல் பெற்றுக் கொள்கிறேன்.

**"காபிடலிசம், சோஷலிசம், கம்யூனிசம் மூன்றையும் இணைத்துக் குழப்பம் செய்து விளங்காத ஒரு தத்துவமாக இருக்கின்ற பாசிசத்தைப் போய்**

**‘அண்ணாயிசம்’ என்கிறாரே ஒருவர்; அடப் பாவி! இது நியாயமா?”**

என்று நான் ஒரு மாநாட்டில் பேசும்போது குறிப்பிட்டேன்.

நான் எடுத்துவைத்த கேள்வியின் அடிப்படைக் கருத்துக்குப் பதில் சொல்ல முடியாத காரணத்தால், அதை மேலும் குழப்பிவிட்டு; “அடப்பாவி!” என்று நான் வியப்புக்குறி காட்டியதை மட்டும் தூக்கிவைத்துக் கொண்டு “பாவி” என்றால் “சாது” என்று ஒரு அர்த்தம் இருக்கிறது என வழக்கில் இல்லாது போய்விட்ட ஒரு பொருளைக் கூறிக்கொண்டு; “பார்! பார்! என் புலமையை!” என்று மார்தட்டிக்கொள்கிறார். இனிமேல் அவரை “பாவி” என்று பட்டம் சூட்டி அழைக்கலாம் போலும்! அவர் கட்சியை ‘‘பாவிகளின் கட்சி” என்று சொல்லலாம் போலும்! அவரைப் “பாவிகளின் தலைவர்” என்று குறிப்பிடலாம்போலும்! ஏனெனில் வழக்கில் இல்லாத ஒரு அர்த்தத்தைக் கூறி அகராதியைத் தேடிப்பிடித்து “பாவி” என்றால் “சாது” எனப் பொருள் கொள்க, என அவரே கூறிவிட்டார் அல்லவா?

சொற்கள், பயன்படுத்தப்படும் நிலைக்கு ஏற்பப் பொருள் வழங்கத்தக்கவை என்பதை அவர் தலைமையின்கீழ் இருக்கின்ற ஒருசில தமிழ் படித்த பிள்ளைகள் அறிவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

“ஆ” என்றால் “பசு” என்றும் ஒரு பொருள் உண்டு, அதற்காக “அடிபட்ட ஒருவன் ஆ! என அலறினான்” என்று கூறும்போது; “அப்படியா?-அடிபட்டவன் ‘பசு’ என்று சொல்லியா அலறினான்?” என்று யாராவது கேட்பார்களா?

ஒருவேளை இந்தப் புதிய புரட்சிப் புலவர் கேட்டாலும் கேட்பார்.

கும்பமேளாத் திருவிழாவில் சாதுக்கள் கூடினார்கள் என்று தான் சொல்வார்களே தவிர, பாவிகள் கூடி ஊர்வலம் சென்றார்கள் என்று யாரும் கூறமாட்டார்கள்.

உத்தமர் காந்தியைக் கொன்ற கோட்சேவைப் பார்த்து உலகம்-“அடப்பாவி!” என்று குமுறியது. உடனே கோட்சே தன்னைச் “சாது” என்று தரணி கூறியதாக மகிழ்ச்சியுற்றதாக யாரும் கேள்விப் படவில்லையே!

பாசிசத்தை அண்ணாயிசம் என்று வர்ணிக்கிற கொள்கைக் குழப்பத்தைச் சுட்டிக்காட்டினால்; அதிலிருந்து நழுவிக்கொள்ள மேலும் ஒரு குழப்பம்! குழப்பத்திற்கு மேல் குழப்பம்! "அடப்பாவி!" என்று கூறும்போதே கொடுமை புரிந்த குற்றம்தான் எடுத்துக்காட்டப்படுகிறது. "இல்லை! இல்லை! அட சாது!" என்றுதான் அதனை எடுத்துக்கொள்ள வேண்டுமென வாதிடுவோரின் புலமைக்கு முன்னால் சங்ககாலத்துப் புலவர்களின் ஆற்றல்தான் நிற்க முடியுமா என்ன?

இந்தப் புரட்சிப் புலமை, கிறித்துவக் கல்லூரி மாணவர்கள் வரையிலே சென்று அந்தப் படித்த இளைஞர்களையும் திகைப்பில் ஆழ்த்தியிருக்கிறது. கிறித்துவக் கல்லூரி மாணவர்கள் தமிழ் உணர்வு மிக்கவர்கள். தமிழறிஞர்களை அறிந்தவர்கள். அவர்களிடத்திலே சென்று இந்தப் புதிய புலவர் முழங்கியிருக்கிறார்.

**"பெரியாரைப் பற்றி ஒரு பிரச்சினையை எழுப்பினேன். எட்டாம் வகுப்புப் பாட நூலில் அய்யா அவர்களின் வாழ்க்கை வரலாறு அச்சுக் கோக்கப்பட்டு இறுதி நேரத்தில் நீக்கப்பட்டு விட்டது என்று ஆதாரத்தோடு கூறினேன்; ஆனால் அது பாடத் திட்டத்தில் இல்லை என்று சொல்கிறார்கள். இப்படி ஒரு நிலை ஏற்படுமானால் தமிழுக்கு எதிர்காலத்தில் மறுமலர்ச்சியே இருக்காது!"**

புரட்சிப் புலவர், கிறித்துவக் கல்லூரியில் சிந்திய பொன் மொழி இது!

ஒவ்வொரு ஆண்டும், Syllabus பாடத்திட்டத்தில் உள்ளவை மட்டுமே அந்தந்த வகுப்புப் புத்தகத்தில் சேர்க்கப்படும். "சிலபசில்" இல்லாததை அச்சுக்கோத்ததற்காகச் சேர்த்துவிட இயலாது என பாடநூல் குழுவினர் விளக்கம் கொடுத்தபின்னரும் புதிய புலவர் தான் சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்கிறார்.

**"எனக்கென்று ஒரு வசந்தகாலம் இருந்தது. நீண்ட நாள்களுக்குப் பிறகு-ஆண்டு பலவற்றிற்குப் பிறகு - அந்த வசந்த காலத்தை நினைவிலே கொண்டு, இன்றைய கவலைமிக்க நாள்களிலே எழுவியலாத புன்னகையைத் தருவித்துக் கொள்கிறேன். பெரியாருக்கு அந்த வசந்த காலம் தெரியும்; இன்று**

**பொறுப்பேற்றுக் கொண்டிருப்பதால் எழுந்துள்ள கவலையும் நன்கு புரியும்.”**

இந்த அழகு தமிழ்ச் சொல்லோவியம் அறிஞர் அண்ணா தீட்டியது. 1976-ஆம் ஆண்டு பத்தாம் வகுப்புப் பாடப்புத்தகத்தில் ஏறத்தாழ பத்து பக்கங்களுக்கு மேல் இடம் பெறக்கூடிய பெரிய கட்டுரையின் தொடக்கத்தைத்தான் நான் இங்கே தொட்டுக் காட்டியுள்ளேன். அச்சியற்றப்பட்ட அந்த முழுப் புத்தக வடிவையும் நான், பத்திரிகை நிருபர்களுக்கு நேரிலேயே கொடுத்துப் படித்துப் பார்க்கச் சொன்னேன்.

பெரியாரின் கொள்கைகளையும் அவரது எழுச்சிமிக்க தியாக வரலாற்றையும் நாட்டில் பரப்புவதற்கு எனக்குக் கற்றுக் கொடுக்கிறார் திடீர்த் தமிழ்ப் புலவர்!

பெரியார் நினைவுச் சின்னம்-பெரியார் பாலம்-பெரியார் சிலைகள்-ஈரோட்டில் பெரியார் பிறந்த வீடு தேசீயச் சின்னம்-பெரியார் மருத்துவமனை-தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம்-பெரியார் கப்பல்-மதுரை மாநகராட்சியில் பெரியார் கூடம்-பத்தாம் வகுப்புப் புத்தகத்தில் பெரியார் பாடம் - இப்படி எண்ணற்ற நினைவுச் சின்னங்கள் மட்டுமல்ல; பெரியாரை அரசு மரியாதையுடன் அடக்கம் செய்வதற்கு இந்த அரசாங்கம் எவ்வளவு எதிர்ப்பைத் தாங்கிக் கொண்டது என்பதையும் என்னுடைய பழைய நண்பரைப் போன்றவர்கள் அறியாதவர்கள் அல்ல!

எழிலார் சோலை நடுவே, அமைதி கொஞ்சும் கல்லறையில் கடற்கரையில் நமது அண்ணன் துயில்கொள்ளும் இடம்போல வேறொரு இடத்தை நான் சென்று வந்த வெளிநாடுகளிலேகூட கண்டதில்லை. அண்ணா சதுக்கம் - அண்ணாசாலை - அண்ணாநகர் - அண்ணா அறிவாலயம் - மதுரை மாநகராட்சி அண்ணாமாளிகை - அண்ணா மேம்பாலம் - அண்ணாசிலைகள் - பாடப்புத்தகங்களில் அண்ணா கட்டுரை - அண்ணா கல்லூரிகள் - அண்ணா பிறந்தநாள் காவல் துறை பதக்கங்கள் - விருதுகள் - அண்ணா கப்பல் - அண்ணா போக்கு வரத்துக் கழகம் - அண்ணா சர்க்கரை ஆலை இன்னும் கணக்கிலடங்கா நினைவுச் சின்னங்கள், நமது அண்ணனின் பெயரால்!

காந்தியடிகள், மூதறிஞர் ராஜாஜி, கண்ணியமிக்க காயிதே மில்லத், தியாகச்சுடர் காமராஜர், பாரதியார், பாரதிதாசன், பசும்பொன்தேவர், சிதம்பரனார், தில்லையாடி வள்ளியம்மை, ஆகிய செம்மல்களுக்கெல்லாம் இந்த அரசு ஆற்றிட வேண்டிய கடமையைக் கட்சிகளுக்கு அப்பாற்பட்டு ஆற்றி வருவதை நடுநிலையோடு சிந்திப்போர் ஏற்றுக்கொண்டு போற்றிடத் தவறவில்லை. சிதம்பரனார் இழுத்த செக்கினைத் தேடிக் கண்டுபிடித்து சென்னையில் காட்சிப் பொருளாக்கியிருப்பது இந்த அரசுதானே!

தமிழகத்தின் தொன்மை வரலாறு மங்காது காக்கப்பட வேண்டுமென்று கூறிய அண்ணாவின் மொழிக்கேற்ப இந்த அரசு அமைத்ததுதானே பூம்புகார் - புதிய நகரம்!

கட்டபொம்மன் கோட்டை! சென்னையில் மிகப்பெரும் அளவில் அமைகிற வள்ளுவர் கோட்டம்!

இத்தனையும் மறந்துவிட்டு, பூனை - தன் கண்ணை மூடிக் கொண்டு பூலோகமே இருண்டுவிட்டது என்று சொல்வதை போல, புதிய புலவர் பெருமான் கதை கட்டுவது பொருந்துமா என்பதை, எனது அருமைக் கிறித்துவக் கல்லூரி மாணவர்கள் சிந்தித்துப் பார்த்து உண்மையைப் புரிந்து கொண்டுதானிருப்பார்கள்.

அந்தக் கல்லூரியில் நமது புலவர், மற்றொரு புதிய கருத்தையும் வெளியிட்டிருக்கிறார்:

**“தமிழகத்தில் இருக்கும் அரசு, இதுவரையில் செய்யாவிட்டாலும் இனிமேலாவது-நேரம் இருந்தால் மார்க்கம் இருந்தால், உண்மையிலேயே அக்கறை இருந்தால் தமிழ்நாட்டைப் பற்றிய வரலாற்றை நல்ல பேராசிரியர்களைக்கொண்டு, ஆராய்ச்சியாளர்களைக் கொண்டு எழுதச் செய்து தமிழகத்தின் எங்காவது ஒரு இடத்தில் மண்ணுக்குள் புதைத்து வைக்க வேண்டும்”**

இதுவும் அவரது பேச்சுத்தான். மண்ணுக்குள் புதைப்பதென்பது “காலப் பெட்டகம்” போல் புதைப்பது என்பதைக் குறிப்பிடுகிறார்.

ஆனால், தமிழக அரசு தமிழ்நாட்டு வரலாற்றை ஆராய்ச்சி யாளர்களைக்கொண்டு எழுதவேண்டுமென்று ஒரு புதிய கருத்தைச் சொல்லியிருக்கிறாரே; அப்போது அவர் பக்கத்திலே

யிருந்த தமிழ்படித்த அருமைத்தம்பி, நிலைமையை அவருக்கு விளக்கத் தவறிவிட்டாரே என்பதுதான் எனக்குள்ள கவலை.

கிறித்துவக் கல்லூரியில் டாக்டர் மு. வரதராசனார் பற்றியும் ஒரு நண்பர் விரிவுரையாற்றியிருக்கிறார் அதே நாளில்!

அந்த மு. வரதராசனார் அவர்களின் தலைமையில்தான் 1970-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 18-ஆம் நாள் தமிழ் நாட்டு வரலாற்றுக்குழு ஒன்றினை இந்த அரசு அமைத்தது. அந்தக் குழுவின் தலைவர்,

-டாக்டர் மு. வரதராசனார்-உறுப்பினர்கள் மயிலை சீனி வேங்கடசாமி - இரா. நாகசாமி - அ. இராகவன் - அப்பாத்துரையார் - சி. ஈ. இராமச்சந்திரன் - க. த. திருநாவுக்கரசு - கே. ஆர். அனுமந்தன் - ஆகியோராவர். அந்தக்குழு ஆராய்ந்து எழுதும் "தமிழ்நாட்டு வரலாறு" ஆறு தொகுப்புக்களாக வெளிவரும்.

- ❖ தொல் பழங் காலம்
- ❖ சங்க காலம்
- ❖ பல்லவர் காலம்
- ❖ சோழர் காலம்
- ❖ பிற் காலம்
- ❖ இக் காலம்

என்பவைகளாகும் அவை! இந்த ஆறுகாலப் பகுப்புக்களையும் டாக்டர் மு.வ. தலைமையில் இருந்த குழுதான் வகுத்துள்ளது.

திரு. மு.வ. மறைவதற்கு முன்பே முதல் தொகுப்பான "தமிழ்நாட்டு வரலாறு - தொல் பழங்காலம்" என்னும் நூல் முற்றுப்பெற்று கடந்த நவம்பர் திங்கள் 21-ஆம் நாள் சென்னை ராஜாஜி மண்டபத்தில் நாவலர் தலைமையில் என் கையால் வெளியிடப்பெற்ற விழா மிகச் சிறப்புற நடைபெற்று முடிந்தது. அப்போது நமது புதிய புலவர் ஊரில் இல்லாமற்போயிருக்கலாம். இருந்திருந்தாலும் இந்தச் சிறிய விஷயங்கள் அவரது மேலான கவனத்திற்குக் கொண்டு செல்லப்படாமல் இருந்திருக்கலாம். அந்த முதல் தொகுப்புக்கு டாக்டர் மு.வ. எழுதிய முன்னுரையில்;

**“வரலாற்று அறிஞர்களால் தமிழ்நாட்டு வரலாறு புறக்கணிக்கப்படலாயிற்று. மொழிப்பற்றின் காரணமாகவும், நாட்டுப் பற்றின் காரணமாகவும் தமிழரிடையே தோன்றிய விழிப்புணர்ச்சி, இந்தப் புறக்கணிப்பைத் தெளிவாக உணர்த்தியது. தமிழக அரசின் நன்முயற்சியால் அமைந்த தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றம், 1970-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 18ஆம் நாள் கூடியபோது தமிழ் நாட்டின் வரலாறு விளக்கமான முழு நூலாக உருப்பெறாத குறை, நன்கு உணரப்பட்டது. மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் தலைமையில் அன்று கூடிய அந்த மன்றம் அத்தகைய வரலாறு எழுதுவதற்கென ஒரு குழுவை அமைத்தது ..... ..... ஆறு தொகுதிகளுள் முதல் தொகுதியாகிய இந்நூல் அளவில் சிறியதாக இருப்பதற்குக் காரணம் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் பற்றியதாக, சான்றுகள் குறைந்ததாக இருத்தலேயாகும். ஆயினும் இனிவரும் தொகுதிகளுக்கு இது இன்றியமையாததாக உள்ளது.”**

என்று குறிப்பிட்டிருக்கிறார். ஏறத்தாழ நானூறு பக்கங்கள் கொண்ட தமிழ்நாட்டு வரலாறு முதல் தொகுதி முற்றுப்பெற்ற பின்னர் மு. வ. அவர்கள் நம்மை விட்டுப் பிரிந்தார். வரலாற்றுக் குழுவின் தலைமைப் பொறுப்பை ஒளவை. துரைசாமிப்பிள்ளை அவர்கள் ஏற்றுக்கொண்டு அடுத்த தொகுப்புக்கள் தயாராகிக் கொண்டிருக்கின்றன. இந்த விபரங்கள் எதையுமே கேட்டுக்கூடத் தெரிந்து கொள்ள முயற்சிக்காமல் புதிய புலவர் மாணவர்கள் மத்தியில் மடைதிறந்த வெள்ளமெனத் தமிழ் - தமிழர் - தமிழர் வரலாறுபற்றிய சொற்பொழிவொன்றை ஆற்றியிருக்கிறார்.

தேவநேயப் பாவாணரைக் கொண்டு ‘அகரமுதலி’ எனும் அறியதோர் தமிழ்க் கருவூலத்தை இந்த அரசுதான் தயாரித்து வருகிறது என்பதைக்கூட என் நண்பர் அறிந்து கொள்வதற்கு நேரமிருந்திருக்க முடியாது.

சரியோ - தவறோ - உண்மையோ - பொய்யோ - ஆதாரமிருக் கிறதோ - இல்லையோ - எதையாவது சொல்லி நமது ஆட்சியை,

நமது கழகத்தைக் களங்கப்படுத்த முனைகிறார்கள். அவர்களைப் போன்றவர்களின் முயற்சியின் முனையை முறித்தெறிவதற் காகத்தானே கோவையில் நமது முரசு முழங்க இருக்கிறது.

ஏளனம் - ஏகடியம் - ஏச்சுப்பேச்சு - களங்கம் சுமத்துதல் - கண்டனம் பொழிதல் - காட்டிக்கொடுத்தல் இவைகளைக் கண்டும் கேட்டும் கண்களைக் குளமாக்கிக் கொண்டு உலவுகின்ற என் கழகக் கண்மணியே! அன்பு பிறப்பே! அந்தக் "காவி" யுகுநீர் காய்ந்திட - கண்கள் கனல் கக்கிட - கழக முன்னணியினர் தரும் கொள்கைப் படைக்கலன்கள் ஏந்திட கோவைக்கு வந்திடுக! குளிர்மலராம் குழந்தையைத் தூக்கியவாறு கோமளத் தாமரையாம் துணைப்பேடு அருகில் நடந்துவர-குன்றனைய நெடுந்தோள் கொண்டவனே! நீ வரும் காட்சியினை நானும், நாவலரும், பேராசிரியரும் பாசமுடன் பார்த்து மகிழ்ந்திடுவோம். அத்தானும் அத்தையும், மாமனும் உடன்வர அன்னமென்ன நடைபயின்று வருகின்ற என் அன்புத் தங்கையே! நீங்கள் எல்லாம் குழுமிடும் கோவையில் கன்னித்தமிழ் ஒலிக்குமன்றோ? கண்ணகித்தமிழ் முழங்குமன்றோ? காவியுகு நீர் உலருமன்றோ? கண்களில் புத்தொளி தோன்றுமன்றோ? வாரீர்! வாரீர்!! உங்களில் ஒருவன் அழைக்கின்றேன்; என் உயிரனையீர் வாரீர்!

அன்புள்ள,

**மு. க.**

15-12-1975

# 151. கோவை மாநாடு - 5

## "சிவ சிவா!" என்றிராமல்...!

**உடன்பிறப்பே,**

கோவை, மாநில மாநாட்டைப்பற்றி நான் உனக்கு எழுதுகிற கடிதங்கள் போதாதென்று பெரியவர் அன்புக்குரிய பக்தவத்சலம் அவர்களும் மாநாட்டு விளம்பரத் துறையைக் கையில் எடுத்துக் கொண்டு எழுதத் தொடங்கியிருக்கிறார். கோவை மாநாட்டுச் செலவுக்கு வரவேற்புக் குழுவினர் நாற்பது லட்சரூபாய் செலவு செய்யத் திட்டமிட்டிருக்கிறார்கள் என்பது பெரியவரின் குற்றச்சாட்டு. கழகத் தலைவனாகிய எனக்கோ, பொதுச் செயலாளருக்கோ, பொருளாளருக்கோ கூடத் தெரியாத மாபெரும் தகவல் ஒன்றை நாட்டுக்கு அறிவித்துள்ள அவருக்கு நாம் நன்றி செலுத்தத்தான் வேண்டும்.

பத்து ரூபாய் செலவில் நாம் செய்கிற காரியங்கள் நாற்பது ரூபாய் மதிப்பீட்டைக் காட்டுவதாக அமைகிறதென்றால், அது நமது செயல்திறனுக்குச் சான்றாக விளங்குகிறது. சிலபோ், நாற்பது ரூபாய் செலவிட்டதாகக் கூறி, நாலுரூபாய்ச் செலவுக்கான சிறப்புகூட இல்லாமல் ஆக்கி விடுவார்கள்.

கட்சி மாநாடுகள், கட்சி ஊர்வலங்கள், கட்சித் தலைவர் பிறந்த நாள் விழாக்களில் அரசாங்க வண்டிகளையோ, பொருள்களையோ பயன்படுத்துவது தவறில்லை என்று சட்டப் பேரவையில் எனக்கே பதில்கூறிய முன்னாள் முதலமைச்சர்தான் பெரியவர் பக்தவத்சலம். அதையெல்லாம் இப்போது மறந்துவிட்டு, கோவை மாநாட்டுக்கு அதிகாரிகளையும், அரசாங்க சாதனங்களையும் பயன்படுத்துகிறோம் என்று இல்லாத ஒன்றைக் கற்பனை செய்து களங்கம் சுமத்த முனைகிறார்.

மேற்கு வங்கத்தில் பிதான் நகரில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டுக்கு செலவிடப்பட்ட தொகையில் நாற்பதில் ஒரு பங்குகூட செலவாகாத கோவை மாநாடுபற்றி பக்தவத்சலனார் சீறிப் பாய்வதுதான் எனக்கு வேடிக்கையாகத் தோன்றுகிறது.

நெருக்கடி நிலையையொட்டி ஊர்வலங்கள் நவம்பர் மாதம் வரையில் அனுமதிக்கப்படாமல் இருந்தது உண்மை. அந்தக் கால கெடு முடிந்த பிறகு, அரசின் அனுமதி பெற்று ஊர்வலங்கள் நடத்தலாம் என்பது புதிய ஆணை. அதன்படி அண்மையில் வலது கம்யூனிஸ்டுக் கட்சியினர் பொன்விழா ஊர்வலத்திற்குச் சென்னையில் அனுமதி கேட்டபோது வழங்கப்பட்டுள்ளது. ஊர்வலமும் நடந்தது.

ஊர்வலங்களின் நோக்கங்களை உணர்ந்து, அதற்கேற்ப அனுமதி வழங்குவதுதான் அரசின் கருத்து. பெரியவர் குறிப்பிடுகிற ராஜபாளையம் ஊர்வலத்தின்போது, எந்தக் கட்சியின் ஊர்வலமும் அனுமதிக்கப்படவில்லை என்பதை மறந்துவிடக்கூடாது. அதையொட்டித்தான் நெல்லை, சேலம், அறந்தாங்கி, கன்னியாகுமரி, மாநாடுகளில் கழகத்தினர் ஊர்வலம் நடத்திட அனுமதிக்கப்பட வில்லை என்பதை பக்தவத்சலனார் மறந்திருக்க நியாயமில்லை.

> "இந்த மாநாட்டையொட்டி, காந்தி - இர்வின் பெயர் வைத்த ஸ்டேடியம் அழிக்கப்பட்டு விட்டது"

-என்று பெரியவர் ஒரு மாபெரும் பழியைச் சுமத்தியிருக்கிறார்.

உடன்பிறப்பே, கோவை சிதம்பரம் பூங்காவில் காந்தி-இர்வின் ஒப்பந்தம் நினைவாக ஒரு மேடையுண்டு. உண்மை. அந்த மேடை மிகப் பழமையாகவும், வசதியற்றதாகவும் இருப்பதால் அதை இடித்துவிட்டு நவீன வசதியுடன் புதியமேடை கட்டுவதென்று 30-6-75 இல் கோவை நகராட்சி மன்றம் ஒரு தீர்மானம் நிறைவேற்றி ஏகமனதாக அனைவரும் ஒத்துக் கொண்டிருக்கிறார்கள் என்றும், புதிதாக அமைக்கப்படும் ஸ்டேடிய மேடைக்கும் காந்தி - இர்வின் ஒப்பந்த நினைவாகவே பெயர் தொடர்ந்து இருக்குமென்றும், 31-10-75 இல் சட்டப் பேரவையில் நமது உள்ளாட்சித்துறை அமைச்சர் நண்பர் இராமச்சந்திரன் அவர்கள், ஒரு கேள்விக்கு விடையளிக்கும்போது விளக்கமளித்துள்ளார். இதற்குப் பிறகும் நமது அன்புக்குரிய பெரியவர், பழி சுமத்துகிறார்.

பெரியவருக்கு ஒன்றை நினைவூட்ட விரும்புகிறேன். அந்தக் கோவை சிதம்பரம் பூங்காவில் காந்தி - இர்வின் ஒப்பந்த நினைவாக ஒரு பெரிய அடையாளச் சிலை இருந்தது. உயரமான அளவில் பாரதமாதா - இரு மருங்கிலும் காந்தியும் இர்வினும் - இருப்பதுபோன்ற மிகப்பெரிய சிலை அது!

1952-ஆம் ஆண்டு வரையில் அந்தச் சிலை இருந்தது. ஆனால் 1952-இல் அந்தச் சிலை உடைக்கப்பட்டு விட்டதாம். ஏன் தெரியுமா? 1952-இல் காங்கிரஸ் ஆட்சியில் ஒரு பொதுக்கூட்ட மேடை கட்ட இடையூறாக இருக்கிறதென்று அந்த வரலாற்றுச் சின்னத்தை அகற்றிவிட்டார்கள். அல்லது உடைத்துவிட்டார்கள். இதைப் பெரியவர் மறந்துவிட்டார்.

மறைந்த வரலாறுகளைப் புதுப்பித்து, பழைய சரித்திர நாயகர்களுக்கு மதிப்பளிக்கும் நமது கழகம், காந்தி - இர்வின் நினைவு மேடையை மறைத்து அழித்து விடாது என்பதை பெரியவர் உணருவார் எனினும், ஏதோ ஒன்றைச் சொல்லி நம் மீது புழுதியை வாரித் தூற்றுகிறார்; அவ்வளவுதான்!

பக்தவத்சலனார், தனது கட்டுரையின் இறுதியில் குறிப்பிட் டிருப்பதுதான் எனக்கு வியப்பாக இருக்கிறது.

**“கலைஞர் தலைமையில் உள்ள மாநில சுயாட்சியில் நீதி எல்லாம் காற்றிலே பறக்க விடப் பட்டிருக்கிறது!”**

சிரிக்கிறாயா, உடன்பிறப்பே - நன்றாகச் சிரி! நீதியை நான் காற்றிலே பறக்கவிடுகிறேனாம்; பக்தவத்சலம் எழுதுகிறார்! சிரிக்காமல் என்ன செய்வது?

**“இதுதான் கலைஞரின் வடிகட்டிய சர்வாதிகாரப் போக்கு!”**

- இதுவும் பெரியவர் பொன்மொழிதான்! இப்போது இவரைப்போன்ற சில பெரியவர்கள் என்னைப் பார்த்து சர்வாதிகாரி என்கிறார்கள்! இதற்கும் நாம் சிரித்துத்தான் தீர வேண்டும்.

**“இந்த தி. மு. க.வின் போக்கு அவர்கள் ஆட்சியில் கடைசிக் கட்டமாகத்தான் எனக்குத் தோன்றுகிறது”**

- இதையும் பக்தவத்சலம்தான் எழுதியுள்ளார் - எந்த பக்தவத்சலம்? இரண்டாண்டு காலம் முதலமைச்சர் பொறுப்பை ஏற்று, இருபதாண்டு கால காங்கிரஸ் ஆட்சிக்குத் தமிழ்நாட்டில் கடைசிக் கட்டத்தை உருவாக்கினாரே; அந்தப் புண்யாத்மாதான் நமக்கு இப்படி 'சாபம்' கொடுக்கிறார்.

உடன்பிறப்பே, உன் போன்றவர்களின் உழைப்பால், உறுதுணையால், தமிழ் மக்களின் பேராதரவுடன் கழக ஆட்சியும் ஒன்பதாவது ஆண்டாக நடைபெறுகிறது. இந்த எளியவனும் ஏழாண்டுகாலம் முதலமைச்சர் பொறுப்பை வகித்துவிட்டேன், நானோ, நாவலரோ, பேராசிரியரோ, மற்றவர்களோ இந்தப் பதவிகளுக்காகப் பெரியார் அணியில், பேரறிஞர் அண்ணா பாசறையில் சேர்ந்து பணியாற்றிட வரவில்லை. எதையும் தாங்கும் இதயத்துடன்தான் கட்சியையும் ஆட்சியையும் நடத்தி வருகிறோம். அதன் முழுவடிவமான வலிவைத்தான் கோவையிலே காணப் போகிறோம்.

"சிவ; சிவா!" என்று ஜபித்துக் கொண்டிருக்க வேண்டிய வயதில், நம்மைப் பெரியவர் பக்தவத்சலம் சீறிவிழுந்து சபித்துக் கொண்டிருக்கிறார்.

சாபங்களைச் சவாலாக ஏற்றுக்கொண்டு, நமது கொள்கை முழங்கச் சங்கமம் ஆவோம் கோவை நகரில்!

அன்புள்ள,

**மு. க.**

17-12-1975

# 152. கோவை மாநாடு - 6
# பற்றற்ற துறவாயினும்...!

**உடன்பிறப்பே,**

- ☐ ஆண்டிகள் கூடிடுவோம் -
- ☐ திருவோடு வருக -
- ☐ சத்திரத்துப் பேர்வழிகள் -
- ☐ காவியுகுநீர் உலர.....
- ☐ 'சிவசிவா' என்றிராமல் -

இப்படித் தலைப்பிட்டு ஐந்து கடிதங்களை எழுதி, உன்னைக் கோவை மாநாட்டுக்கு அழைத்திருக்கிறேன். ஆண்டி, திருவோடு, சத்திரம், காவி, சிவசிவா-என்றெல்லாம் துறவுக்குரிய சொற்களை நான் மறைமுகமாகப் பயன்படுத்தியிருப்பதை நீ உணர்ந்து கொள்ளாமல் இருக்கமாட்டாய்! உன் திறனை நான் நன்கு அறிவேன் அல்லவா? துறவுக்கு இலக்கணம் உண்டு. துறவிகளுக்கும் சில தூய்மையான இலட்சியங்கள் உண்டு. பற்றற்று வாழ்கின்ற துறவிகட்கும் மொழிப்பற்று, இலக்கியப்பற்று, இறைப்பற்று, இனப்பற்று உண்டென்பதை உணர்கிறோம்.

ஒன்றில் பற்றுக் கொண்டு வாழ்பவர்கள், தங்கள் மொழிக்கோ, நாட்டுக்கோ தன்மான உணர்வுக்கோ கேடு வருகிற நேரத்தில் அவைகளைக் காத்திட, தங்களை ஏற்கனவே பற்றிக்கொண்டுள்ள அனைத்தையும் துறந்து எழுந்திடும் துணிவு மனப்பான்மையை எப்போதும் கொண்டிருக்க வேண்டும். "பற்று" என்பதற்குப் பக்கத்திலேயே "துறவு" என்பதும் வாழ்ந்து கொண்டிருக்கிறது. தூய நற்பணி ஒன்றினைத் தொடங்கிட, "பற்று" குறுக்கே நிற்குமானால் அதனை இடறிவிட்டு நடந்திட "துறவு" எனும் மனத்தெம்பு இருந்திடல் வேண்டும். இந்தியநாட்டு விடுதலைக் கொடியைப் பறக்க விடுவதற்காகக் காந்தியடிகள், தன் துணைவியார் மீது

கொண்ட பற்றையும், பிள்ளைகள் மீது கொண்ட பற்றையும் ஒதுக்கிவைத்து விட்டுத்தானே பலமுறை சிறைக் கோட்டத்தில் வாடிவதங்கினார். வனப்புமிகு வாலிபக்காலத்தின் பெரும் பகுதியை சிறைச்சாலையில் கழித்தாரே பண்டித நேரு; அவர் கொண்டிருந்த பற்றுக்களைத் துறந்துவிட்டுத்தானே! சிறைச்சாலையில் செக்கிழுத்து வதைபட்டாரே; சிதம்பரனார் - வைக்கத்தில் போராடி அடக்குமுறைக்கு ஆளாகி பலதடவை சிறைபுகுந்தாரே; பெரியார்-தமிழ் மொழி காக்கவும் தமிழர் நலன்களைக் காக்கவும்-கொடுஞ் சிறைவாசங்களை ஏற்றுக் கொண்டாரே; அண்ணா-அவர்கள் எல்லாம், சுகத்தைத் துறந்திடும் மனஉறுதியையும் பெற்றிருந்ததால்தானே இந்தச் சமுதாயத்தை அழிவில் இருந்து காப்பாற்ற முடிந்தது. உயிர்மீது கொள்ள வேண்டிய பற்றையே துறந்து தியாகச்சுடர்களாக ஆகிவிட்ட தீரர்களின் எண்ணிக்கை கொஞ்சமா? அந்த தியாக நெஞ்சங்களை, துறவு கொள்ளவும் துணிந்திடும் உள்ளங்களை - பற்று பாசங்களை உதறிவிட்டுத் தாங்கள் கொண்ட கொள்கைக்குத் தங்களை ஒப்படைத்துக் கொண்ட இதயங்களை-எண்ணிட வேண்டுமென்பதற்காகவும், எந்தவொரு சோதனைக்கும் பின்னடையாத மன வலிமை பெற்றிட வேண்டுமென்பதற்காகவும்தான் தேவைப்படின் 'துறவு'க்கும் துணிகிற உடன் பிறப்பாம் உனக்கு, துறவுக்குத் தொடர்புடைய சில சொற்களைத் தேர்ந்தெடுத்துக் கடிதங்கள் தீட்டினேன்.

நம்முடைய காலத்தைச் சிலபேர் கணித்துக் கொண்டிருக் கிறார்கள். "இன்னும் எத்தனை நாள்?" என்று அவர்கள் செய்கிற ஆர்ப்பரிப்பு எதிர்க்கட்சி ஏடுகளில் நாள்தோறும் வெளிவந்து கொண்டிருக்கிறது. அவர்கள் நம்மைப்பற்றி எந்தக் கணக்கைக் கூட்டிக் கழித்துக் கொண்டிருக்கிறார்கள் தெரியுமா? கழகம் ஆட்சிப் பீடத்தில் எத்தனைநாள் இருக்கும் என்ற கணக்கைத்தான்!

அதைத்தான் பக்தவத்சலம், தன்னுடைய கட்டுரையில் தி. மு. கழகத்தின் கடைசிக்காலம் என்ற கருத்துப்பட தீட்டியிருந்தார். தமிழ், தமிழர் என்று சொல்லிப் பாசீசத்தை வளர்க்கிற கழகம் ஆட்சி நீடிக்காது-நீடிக்கவிடமாட்டோம் என்று கல்யாணசுந்தரனார் கர்ச்சித்திருப்பதையும் ஏடுகளில் கண்டேன். என்னுடைய பழைய நண்பரும் அவரது "சாது" தளபதிகளும் 'ஓரிருமாதம்தான் இந்த ஆட்சி' என்று முழங்குவதை ஏடுகள் சில

கொட்டை எழுத்துக்களில் வெளியிட்டுக் கொண்டிருக்கின்றன. கவி நண்பர் ஒருவர் மாதத்தையும் தேதியையும் குறிப்பிட்டுக் காங்கிரஸ் இதழ் ஒன்றில் கடிதமே எழுதி வெளியிட்டுள்ளார்.

எதிர் வரிசையினரின் குறிக்கோள் எல்லாம் நமது கழகத்தைக் கோட்டை சிம்மாசனத்திலிருந்து இறக்க வேண்டும் என்பதே யாகும்.

உடன்பிறப்பே, கழகத்தைக் கோட்டைச் சிம்மாசனத்திலிருந்து ஒருவேளை இறக்கி விடலாம்; ஆனால் நமது கழகம் கொலு வீற்றிருக்கும் மக்களின் இதயச் சிம்மாசனத்தை அவர்கள் அறிய மாட்டார்கள். 1966ஆம் ஆண்டு, கழகம், கோட்டையில் எதிர்க்கட்சி வரிசையில்தான் இருந்தது. 1949 முதல் 1967 வரையில் தி. மு. கழகத்தின் கையில் ஆட்சிச் செங்கோல் வழங்கப்படவில்லை எனினும், மக்கள் மன்றத்தில் இந்தக் கழகம் கோலோச்சி வந்ததென்பதை மறுத்திட முடியுமா?

கடைசிக்காலமென்கிறார் பக்தவத்சலனார் நமக்கு! அந்தப் பெரியவரின் ஆசை புரிகிறது. ஆனால் தமிழ்மொழி உள்ளவரையில், கடைசித் தமிழ் மகன் சாகாமல் இருக்கும் வரையில், இந்தக் கழகம் இருக்கும்.

தமிழ், தமிழர் என்றால் வலது கம்யூனிஸ்டு தலைவருக்குக் கோபம் கொப்பளிக்கிறது. நம்மைப் பாசிஸ்டுகள் என்றும், நாட்டைக் கெடுப்பவர்கள் என்றும், தேசவிரோத சக்திகள் என்றும் அவர் குழுவினர் பட்டம் சூட்டுகிறார்கள். வலது கம்யூனிஸ்டுகளின் உண்மை உருவத்தை; உரியவர்கள் மெல்ல மெல்ல உணர்ந்து கொண்டுதான் வருகிறார்கள். தி. மு. க. ஆட்சியைத் தாக்கிப் பேசுவதற்கு கூட்டப்பட்ட பாசிச எதிர்ப்பு மாநாட்டையும் அனுமதித்து உரிமை வழங்கிய நாம் பாசிஸ்டுகளாம்; கல்யாணசுந்தரம் குழுவினர் சுத்த சுயப் பிரகாசமான ஜனநாயகவாதிகளாம்!

தமிழ் தமிழர் என்று பேசுவதோ, திராவிடக் கலாச்சார மேம்பாட்டுக்கும் உறவுக்கும் முனைந்து பணியாற்றுவதோ; இந்திய ஒருமைப்பாட்டுக்கு எந்த வகையிலும் ஊறு விளைவிக்காத நல்லெண்ணமுடன் நடைபெறும் செயல்கள் என்பதை நமது மாபெரும் தலைவர் மா மேதை அறிஞர் அண்ணா அவர்களே பலமுறை விளக்கியிருக்கிறார்கள். மேலும் கல்யாணசுந்தரம்

அவர்களுக்கு விளக்கம் தேவைப்பட்டால் 1966-இல் நடைபெற்ற விருகம்பாக்கம் மாநாட்டில் அண்ணா ஆற்றிய உரையை அவர் ஒரு முறை படித்துப் பார்ப்பது நல்லது.

எதையாவது சொல்லி - எதையாவது செய்து - கோள்மூட்டி - கோணல் வழி கண்டுபிடித்து - எங்ஙனமாயினும் நமது ஆட்சியை மாற்றிவிடத் தமிழ்நாட்டில் சிலபேர் துடியாய் துடிக்கிறார்கள். அது நடக்கக்கூடிய காரியமல்ல என்பதால்தான், மக்களின் தீர்ப்பைப் பெற நாம் தேர்தலுக்குத் தயாராக இருப்பதாகத் தெளிவாகவே அறிவித்து விட்டோம். அதனை யொட்டித்தான் தேர்தல் நிதியை நீ வாரி வாரி வழங்கிக் கொண்டிருக்கிறாய். கோவையில் நீ குவிக்க இருக்கிற நிதியும், நீ கூடப்போகிற காட்சியும் என் அகக்கண்ணில் தெரிகிறது. கோவை மாவட்டம் முழுவதுமே மாநாடு நடைபெறுவது போன்ற தோற்றமாம் - சென்று வந்தவர்கள் சொல்லிச் சொல்லி மகிழ்கிறார்கள். எறும்பென உழைக்கிறார்களாம் என் இதயம்வாழ் உடன்பிறப்புக்கள். நாவலர் சென்று நடைபெறும் பணிகளைக்கண்டு உழைக்கும் உடன்பிறப்புக்களுக்கு உற்சாகமூட்டித் திரும்பியுள்ளார்.

பொருளாளர் பேராசிரியர், கோவையில் ஊர்வலப் பாதை முதல், நுழைவுக் கட்டணச் சீட்டு விற்கப்படும் பந்தல் முகப்பு வரையில் பார்த்துத் திருத்தங்கள் சொல்லி சீர்படுத்தி விட்டு வந்துள்ளார். நாவலர், பேராசிரியர் இருவர் முகத்தைக் காணும் பொழுதே மாநாட்டின் எழுச்சி தெரிகிறது. அவ்வளவு மகிழ்ச்சியுடன் இருக்கிறார்கள்.

இவைகளையெல்லாம் கேள்விப்படும்பொழுது எதிர் வரிசை யினருக்கு எரிச்சலாகத்தான் இருக்கும். அதற்காக எழுச்சியை முடக்கிட முனைவரேல், கடல் அலையை அடக்க முயன்ற கான்யூட் மன்னன் நிலைதான் ஏற்படும் எரிச்சல்காரர்களுக்கு!

உடன்பிறப்பே, இந்தக் கடிதம் கிடைக்கும்போது கோவை பயணத்துக்கான ஏற்பாடுகளைச் செய்துகொண்டு இருப்பாய் என்பது எனக்குத் தெரியும். இடையில் இன்னும் நாலைந்து நாட்கள் தானே; நான்கு நாட்கள் தங்குவதற்கான ஏற்பாடுகளுடன் வரவேண்டுமல்லவா? அதுவும் நீ மட்டும் வரப்போவதில்லையே! குடும்பத்தோடல்லவா வரப்போகிறாய்?

பேருந்துகளில் வருவதாயின் வழியில் ஆங்காங்கு இளைப்பாறி, பேருந்து ஓட்டுபவருக்கு ஓய்வு தந்து, மிகவேகமாக வண்டியை ஓட்டவேண்டுமென்ற அவசரமின்றி வந்து சேர்ந்திடுக கோவைக்கு? வரும் வழியிலோ திரும்பிச் செல்லும் வழியிலோ, ஒரு துளி அசம்பாவிதமும் ஏற்படா வண்ணம் எச்சரிக்கையுடனும், நிதானமுடனும் உன் பயணம் அமைந்திட வேண்டுமெனப் பாசம் நிறை நெஞ்சமுள்ள உன் உடன்பிறப்பாம் நான் கேட்டுக்கொள்கிறேன். நாடு, மொழி, மக்கள் நலம் காக்க அவைகள்பால் பற்றுக்கொண்டு அதற்கென வேறு பற்றற்ற துறவாயினும் மேற்கொள்ளத் தயங்கோம் என சூளுரைக்க என் அன்புமிகு உடன்பிறப்பே! அழைக்கிறேன் வா; கோவைக்கு!

அன்புள்ள,

**மு. க.**

20-12-1975

# 153. கோவை மாநாடு - 7

# “வண்ணத்தமிழே! வா! வா! வா!”

**உடன்பிறப்பே,**

இன்னும் இடையிலே இரண்டே நாட்கள்தான்; உன் எழிலார் திருமுகம் கண்டிட-எழுச்சிப் பண் கேட்டிட - ஓடோடி வரப்போகிறேன் கோவைக்கு;

“கூதிர் விழா-நல்ல குளிர் காலப்பொன் விழா-கொட்டடா! கொட்டடா! முரசம்” என்று புரட்சிக் கவிஞர் பாடியதற்கேற்ப கோவையின் குளிர்ந்த காற்று, தன் பனிப்பூ விரல்களால் மென்மை யாக உடலினைத் தழுவிடும் திங்களில் மாநில மாநாடு கூடுகிறது.

ஒளிமிகுந்த கருத்துக்களால் ஏற்படும் உள்ளக் கதகதப்பு, அந்தக் குளிரைக் குறைத்து-கொள்கை முழக்கத்துக்கான விறுவிறுப்பை வழங்கும் என்ற ஆர்வத்தோடு, நீயும் கோவைப் பயணத்தைத் தொடங்கிவிட்டாய்; நானும் இதோ புறப்பட்டு விட்டேன்.

*“ஒளிபடைத்த கண்ணினாய் வா! வா!*
*உறுதிகொண்ட நெஞ்சினாய் வா! வா!”*

என்று மாநாட்டின் வரவேற்புக்குழுத் தலைவர் அருமை நண்பர் சாமிநாதன் அவர்கள் அழைக்கிற குரல் நமது செவிகளில் இன்ப நாதம் எழுப்புகிறது. உடல் பளு-வேலைப் பளு-இரண்டையும் தன் உழைக்கும் திறனால் வென்று காட்டுகிற அந்த மாவீரர் தீட்டும் எழிலோவியமாகக் கோவை மாநாடு விளங்க இருக்கிறது.

தன் உயரத்துக்கு மேலே கட்சியைக் கோவைச் சீமையிலே வளர்ப்பதற்குத் தொடக்க முதல் பாடுபட்ட தீரர்-தொல்லைகளை ஏற்று தியாகமணி விளக்காகத் திகழும் ராசமாணிக்கமும், அவருடன் இணைந்துநின்று மாநாட்டுச் செயல்களில் சுழலும் பம்பரங்களாக

ஈடுபட்டுள்ள வைரநெஞ்சக் கொள்கை வேங்கை ராமநாதன் - தடை இடறிக் கழகம் காக்கத் தோள்கொடுக்கும் தண்டபாணி- இலட்சியத்தில் இடையறாப் பற்றுக் கொண்டு உழைக்கின்ற இராசா-ஆகியோரும் கோவையின் குன்றேறி நின்று இதுவரை நடந்த மாநாடுகளுக்கெல்லாம் அறை கூவல் விடுக்கின்றனர்.

நிதிக்குழுவின் தலைவர், தேவசகாயம் நிதானம் வாய்ந்தவர் எனினும், செயலாளர் விசயராகவனுடன் இணைந்து மாநாட்டில் நிறைவான தொகையை மிச்சப்படுத்தித் தருவார் என்பதை நீயும் நானும் நிச்சயமாக நம்பி எதிர்பார்க்கலாம். தி. மு. கழகத்தின் கட்டுப்பாடு போற்றும் தேவசகாயமும், கடமையில் தவறா விசயராகவனும் கழகத்தினர் அனைவரும் களிப்படையும் வண்ணம் மாநாட்டு நிதியை வழங்கத்தான் போகின்றனர்.

துவக்க முதலே, துடிப்புடன் தொண்டாற்றக் கற்றுள்ள தூய நற்றொண்டராம் தோழர் துரைசாமியும், மகளிர்குல ஆற்றலுக்கு அடையாளச் சின்னமாம் சரசுவதி பால்ராஜும் தொண்டர் படையினை அணிவகுத்து நிறுத்தப் போகும் பாங்கும், அந்தத் தொண்டர்களாம் நமது கழகத்தின் ரத்தநாளங்கள் ஆற்ற இருக்கிற அரும்பணியும் நீயும் நானும் கண்டு போற்றத்தக்க வண்ணம் அமையப்போகிறது.

துணைச் செயலாளர்கள் துள்ளிவரும் வேல்கள் எனத் தொண்டாற்றும் முருகேசன், சென்னியப்பன், மாணிக்கவாசகம், அரங்கநாதன், தூங்காமல் உழைக்கின்ற தூயமணி தலைவராகவும், அவருக்குத் துணையாக அத்தாணி பாபுவும் மோகனும் அமைந்து பணியாற்றும் விளம்பரக் குழுவின் செயல் திறனை எடுத்தெழுத வார்த்தைகள்தான் உண்டோ? அலுவலகத் தமர்ந்து அயராது பணிபுரியும் கிருட்டிணமூர்த்தி, சானகிராம், சண்முகசுந்தரம், முகமது அலி, ஆகியோர் மாநாட்டின் பெருமிதமான அமைப்புக்கே காரணமாக விளங்குகிறார்கள். உடன்பிறப்பே, பொறுப்புக்களில் ஈடுபடுத்தப்பட்டுள்ளவர்களின் பட்டியலை மட்டுந்தான் நான் தந்துள்ளேன். மாசற்ற கொற்கை முத்துக்களைக் கொட்டி இதில் எது நல்ல முத்து எனக் கேட்டால் எப்படிப் பொறுக்கி எடுக்க முடியும். ரோஜா, முல்லை, மல்லிகை, சண்பகம், பூத்துக் குலுங்கும் தோட்டத்திற்கு அந்த எல்லா மலர்களினாலுந்தானே அழகு!

அதைப்போலவேதான் வரவேற்புக்குழுத் தலைவர் சாமிநாதன்-அவர்கள் முதல் பொறுப்பாளர் பட்டியலிலே இடம் பெற்றுள்ள கழகக் கண்மணிகள் அனைவருமே கோவை மாநாட்டின் வரலாற்றுச் சிறப்புக்கு அல்லும் பகலும் கருமமே கண்ணாகி உழைக்கின்றனர். பொறுப்புக்கள் பட்டியலில் இடம் பெறாத கழகச் செயல்வீரர்கள்; வெட்டி வா என்றுரைத்தால் கட்டிவரும் அன்புக் கண்மணிகள் - அனைவருமே மார்தட்டி அழைக்கின்றனர்; வாரீர்! எங்கள் மாநாடு பாரீர்! என்று -

சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன்பு-கோவைச்சிங்கா நல்லூரிலே நான்-திரு. G. D. நாயுடு விடுதியிலே நாவலர் - இருவரும் இயக்கக் கூட்டங்கள், திருமண நிகழ்ச்சிகளுக்காக-ஏழு மைல், எட்டுமைல் என்று நடந்தே சென்று கொள்கைப் பிரச்சாரம் செய்த அந்த இனிய நாட்கள் நினைவுக்கு வருகின்றன.

அந்தக் கோவையில், நமது கழகத்தின் ஒப்பற்ற மாநில மாநாட்டை நாவலர் திறந்திடவும்-நான் தலைமை வகித்திடவும்-நடத்திக் காட்டுகிற நமது உடன்பிறப்புக்களை நான் எங்ஙனம் நன்றிகூறி வாழ்த்துவது என்றே புரியவில்லையே!

உடன்பிறப்பே, கோவைக்கு வரும் நீ, அதுவும் குடும்பத்தோடு வரும் நீ, குழந்தை குட்டிகளோடு வரும் நீ, எச்சரிக்கையுடன் வருக. குளிர் பற்றிக் குறிப்பிட்டுள்ளேன். எதற்கும் ஒரு போர்வை உன் பையிலோ, பெட்டியிலோ இருப்பது நல்லது. பேருந்துகளானாலும் அல்லது வேறு வாகனங்களானாலும், வேகம் அதிகமின்றி சிறு தொல்லையும் உனக்கோ அல்லது மற்றவருக்கோ ஏற்படாமல் நிதானமாகப் பயணம் செய்திட வேண்டுமென்பதை மீண்டும் நினைவூட்டுகிறேன். வசதி வாய்ப்புக்கள் அனைத்தும் செய்திருப்பதாக வரவேற்புக் குழுத் தலைவரும் செயலாளர்களும் கூறுகிறார்கள் எனினும், இலட்சக்கணக்கில் கூடும் பொழுது, சில குறைபாடுகள் இருக்கத்தான் செய்யும். அவைகளைப் பொருட்படுத்தாத பொறுமையை அணிகலனாகக் கொண்டு மாநாட்டைச் சிறப்பித்திட வேண்டுகிறேன். அண்ணன் இருந்து அந்த மாநில மாநாடுகளுக்கெல்லாம் உன்னை அழைத்தார். இன்று அண்ணியார் வழி மொழிந்திட நான் தலைமையேற்க இருக்கிறேன்; இந்த உடன்பிறப்பு; என் உயிரே! உன்னை அழைக்கிறேன்!

என் கண்ணின் கருமணியே! உன்னை அழைக்கிறேன்! என் இதயமே! வா! என் விழியே! வா! கோவைத் திருநகரில் உன்னை எங்கிருந்தாலும் நான் தொலைவிலிருந்தாவது பார்த்துக் களித்திடுவேன். நீ இல்லாமல் இருந்தால் அந்த இடமும் எனக்குத் தெரியும் என்பதை நீ அறிவாய்!

வா! வா! வா! வண்ணத் தமிழே! வா! வா! வா!

அன்புள்ள,

**மு. க.**

22-12-1975

# 154. கோபக்காரர்களை மறந்திடு!
# கோவையை நினைத்திடு!

**உடன்பிறப்பே,**

அழைத்தேன் உன்னை-வருக! என்று! அலை அலையாக வந்தாய், அணி அணியாக வந்தாய். ஆர்ப்பரிக்கும் கடலெனப்பவனி நடத்திக் காட்டினாய். அமைந்த பந்தல் போதாமல் இருபத்து ஏழாந்தேதி இரவெல்லாம் கண்விழித்து ஏற்கனவே இருந்த சுற்றடைப்பை இயன்றவரையில் விரிவுபடுத்தினார்கள். அப்போதும் இடமில்லை. நெருக்கியடித்துக் கொண்டு அடுக்கிவைத்த புத்தகங்களைப்போல் ஆறுலட்சத்தை எட்டிப் பிடிக்கிற அளவுக்கு பந்தலுக்குள்ளும், சுற்றடைப்பு வரையிலும் என் உடன் பிறப்புக்கள் உட்கார்ந்திருந்த காட்சியும், பந்தலுக்கு வெளியே ஏறத்தாழ ஐந்து லட்சம்பேர்-ஒருபுறம் சிதம்பரம் பூங்காவிலிருந்து அண்ணா சிலைவரையிலும், இன்னொரு புறம் மேம்பாலம் வரையிலும் நின்றவாறும் அமர்ந்தவாறும் மாநாட்டுத் தீர்மான விளக்கவுரைகளையும், சொற்பொழிவுகளையும் கேட்டிருந்த மாட்சியும்; அம்மவோ! குமரி முனையின் சிறு குன்றின் மீது நின்று முக்கடலையும் ஏககாலத்தில் பார்த்து களிப்பது போலல்லவோ இருந்தது.

- தமிழ், தேன் மழையாகப் பொழிந்தது.
- அரசியல் விளக்கங்கள் ஒவ்வொரு உரை நூலாக உருவெடுத்தன.!
- மொழியைப் பாதுகாக்க முரசங்கள் அதிர்ந்தன.
- ஜனநாயக கீதம், தாளம்-பிறழாமல் இசைக்கப் பெற்றது.
- எதிர்க்கட்சிகளைப் பற்றிய விமர்சனங்களில் எந்த இடத்திலும் 'அபசுரம்' தென்படவில்லை.

- நமது கொள்கைகளை எடுத்து வைத்த நேர்த்தியும், அந்தக் கொள்கைகளின் அறுபதாண்டு கால வரலாற்றுக் கீர்த்தியும் தமிழ்ப் பெருமக்களுக்கு விருந்தாகவும், தன்மான உணர்வைப் பெருக்கும் சக்திமிகு மருந்தாகவும் அமைந்தது.
- கொள்கைப் பிரச்சார இசை நிகழ்ச்சிகளோ; பலாவின் சுளைகள்!
- நாடகங்களோ - மாங்கனிகளின் சுவைச்சாறு!
- கலை நிகழ்ச்சிகளோ - கற்கண்டுக் கட்டிகள்!

எழுச்சி, உணர்ச்சி, மகிழ்ச்சி, பெருமிதம், பீடுநடை, இவைகளுக்கிடையே இழையோடிய கட்டுப்பாட்டுத் தன்மை!

கோவை குவித்திட்ட இந்த மகத்தான வெற்றியை யாராலும் மறைக்க முடியவில்லை. இது போன்ற நம்மீது அன்பு? கொண்ட ஏடுகளே கூட மாநாட்டுப் பந்தலில் ஐந்து லட்சம் மக்கள் கூடியிருந்தனர் என்ற அளவுக்காவது செய்திகளை வெளியிடக்கூடிய பெருந்தன்மையைப் பெற்றிருக்கின்றன என்றால் நம் மாநாட்டு வெற்றிக்கு வேறென்ன அளவு கோல் வேண்டும்? நமது எழுச்சி மிக்க மாநாட்டுச் செய்திகள் வெளிவருகின்ற நேரத்தில் திசை திருப்பும் செய்திகளைப் பிரசவிக்கவேண்டுமென்று மிகவும் கஷ்டப்பட்டு தமிழ்நாட்டிலே சிலர் "காந்தாரி"யைப் போல் குழவிக்கல்லால் அடிவயிற்றில் குத்திக்கொண்ட நிகழ்ச்சிகளையும் நீ, பார்த்திருப்பாய். நல்ல படம் ஒன்று வரப்போகிறது. அதில் சிறந்த நடிகர் ஒருவர் மிக அருமையாக நடித்திருக்கிறார் என்று கேள்விப்பட்டவுடனே; அதற்குப் போட்டியாகத் தான் நடித்த படத்தை அதே நாளில் வெளியிடவேண்டுமென்று ஏற்பாடுகளைச் செய்கிற குணம்; சினிமாத்துறையிலே ஓரிருவருக்கு உண்டு- அதையேதான் அவர்களால் அரசியலிலும் கடைப்பிடிக்க முடியும். பாவம்; ஏற்கனவே அழுகிப்போன பழத்தை-பளபளப்பான தாளைச் சுற்றிக் கடையில் வைப்பதுபோல-வைத்துக் காட்டினார்கள். மண்டியிட்ட படலம், மதுரையில் முடிந்து-சரணாகதிப் படலம் சென்னையில் நடந்து-நம்மீது ஆபாச அர்ச்சனை செய்யும் படலம் மயிலையில் ஆரம்பமாகியிருக்கிறது. அந்தக் கூட்டத்தில் என் குலத்தைப்பற்றி, குடும்பத்தைப்பற்றி, என்னைப்பற்றி ஏதேதோ; "நரகல் நடையில்" பேசியதாக நண்பர்கள் சிலர் என்னிடம் கூறிக்

குமுறினார்கள். உடன்பிறப்பே! நான்; கொதித்துக் குமுறிய நமது நண்பர்களிடம் என்ன சொன்னேன் தெரியுமா?

மலரைத் தூவுகிறார்கள் என்றால் அவர்கள் கையில் முதலில் மலர் இருக்கிறது; அதனைத் தூவுகிறார்கள் என்று பொருள்.

நரகலை; அதாவது மலத்தைவாரி இறைக்கிறார்கள் என்றால்- அதுதான் அவர்கள் கையிலோ; அல்லது பேசுகின்றவர்கள் வாயிலோ இருப்பதாகப் பொருள். அதனை இறைக்கிறார்கள் என்று பொருள்; அதற்காக நாம் ஏன் ஆத்திரப்படவேண்டும் என்று நான் பதில் கூறியும் கூட, நண்பர்கள் கண்கலங்கியவாறுதான் என்னிடம் விடைபெற்றுச் சென்றார்கள். உடன் பிறப்பே! அதே மயிலாப்பூரில்தான்; அறிஞர் அண்ணா ஒருமுறை பேசும்போது குறிப்பிட்டார்; **"என்னை இழிவாக ஏசிப் பேசித்தான் இவ்வளவு பெரிய இடத்தில் உட்காரவைத்திருக்கிறீர்கள். இன்னும் ஏசுகிறீர்களே; இன்னும் எந்தப் பெரிய இடத்தில் உட்கார வைக்கப் போகிறீர்கள்?"** என்று! அண்ணா அன்று கேட்டதைத்தான் நாம் நினைவிலே வைத்துக் கொள்ள வேண்டும்.

உனக்கு நினைவில்லையா உடன்பிறப்பே! 1972-ஆம் ஆண்டு சென்னைக் கடற்கரைக்கூட்டத்தில் என்னையும் நாவலரையும், பேராசிரியரையும் மற்ற தலைவர்களையும் மேடையில் உட்காரவைத்துக் கொண்டு அப்போது நம்மிடமிருந்து பிரித்துவிட்ட என் பழைய நண்பரைப்பற்றி "நரகல் நடையில்" இதே நண்பர் பேசியதும், நாம் அதே மேடையில் உடனடியாக அந்த இழிவான-தரக்குறைவான பேச்சுக்காக மன்னிப்புக் கேட்டுக்கொண்டதும் உனக்கு நினைவில்லையா?

பேசட்டும்! நன்றாகப் பேசட்டும்! நாக்கு எவ்வளவு தொலைவு நீளுகிறதோ; அவ்வளவு நீளம், நீட்டிப் பேசட்டும். என் அன்பு உடன் பிறப்பே! நீ பொறுமையாக இரு! நீ பேச முடியாத கோழை அல்ல; எழுத முடியாத பேடி அல்ல; உன் வீரத்தை, தீரத்தை, ஆற்றலை, நான் அறிவேன். நீ காண்டீபத்தை வளைத்தால் கனல் பறக்கும் கணைகளைப் பொழிவாய். உன் எழுத்து ஈட்டியின் முன்னே எதிர்ப்புக்கள் பாளம் பாளமாகப் பிளந்து சிதறும். உன் பேச்சாற்றல், போர்வாள் என்பதும் எனக்குத் தெரியும். நாடறிந்த உண்மைதான் அது. அந்த அறிவை, ஒளியை, வல்லமையை, வண்ணமொழியை நம் கொள்கை விளக்கத்திற்குப் பயன்படுத்து.

நம்மீது மாற்றார் கொட்டும் குப்பைக் கூளங்கள் நமது கழகப் பயிர்வளர்வதற்கேற்ற "எரு" வாகட்டும்.

கோவையின் வெற்றி, சிலரது குடல்களில் நெருப்பை அள்ளித்தான் கொட்டியிருக்கும். அதனால்தான் இந்தக் கூச்சல், அது எரிச்சலின் விளைவு.

பதவிக்குப் படியேறித் தவங்கிடந்தவர்கள்; "பார்க்கிறேன் ஒரு கை!" என்பார்கள். நாம் பதட்டமடையக் கூடாது. பக்குவமாக அணுகவேண்டிய காரியங்கள் பல இருக்கின்றன. நாம் பதவியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் அண்ணா பயிற்றுவித்த பண்பின் அடிப்படையில் நடைபயிலக்கூடியவர்கள்.

வீரம் வேண்டாம் என்று கூறமாட்டேன். அது நமது இலட்சியத்தைக் காக்கப் பயன்படட்டும். வெத்துவேட்டுக் கார்களைத் தாக்கி, வீரத்தை-விழலுக்கிறைத்த நீராக்கி விடக் கூடாதல்லவா?

கோணல் சேட்டைக்காரர்கள், "குய்யோ முறையோ" என்று கத்தும்போது கோவை மாநாட்டை நினைத்துக்கொள். அழைத்தேன்; என் ஆருயிரே! வந்தாய்! ஆணை கேட்டாய்; "ஆணையிடமாட்டேன்; அனைவரும் சேர்ந்து எடுத்த முடிவை அறிவிக்கிறேன்" என்று சொன்னேன். அறிவித்து மிருக்கிறேன். செயல்படத் தொடங்கு! கோவை மாநாட்டை வெற்றிகரமாக்கிய கொள்கை மறவர்கள் அனைவர்க்கும் வாழ்த்துக்களை வழங்கு! நம்மீது சீறிவிழும் கோபக்காரர்களை மறந்திடு! கோவையை நினைத்திடு!

அன்புள்ள,

மு. க.

31-12-1975

# 155. ஒரு தொண்டனின் வேண்டுகோள்!

**உடன்பிறப்பே,**

கோவை மாநாட்டு முடிவுகளைச் செயல்படுத்திக் கொண்டிருப்பாய் என்ற நம்பிக்கையோடு இந்தக் கடிதம் எழுதுறேன். மாநாடு முடிந்ததும், அதன் சிறப்புக்களை உண்மையாகவே மனப்பூர்வமாக உணர்ந்திருக்கிற சிலரும்கூட, அரசியல் காழ்ப்பின் காரணமாக வழக்கம்போல் நம்மீது பாய்ந்திருக்கிறார்கள். அவர்களது ஆத்திரத்தை மேடையில் கொட்டித் தீர்க்கிறார்கள். எழுத்தில் காட்டுகிறார்கள். கேலிச் சித்திரம் போட்டுத் தங்கள் சினத்தை வெளிப்படுத்துகிறார்கள். அறிஞர் அண்ணா அவர்கள் அடிக்கடி சொல்வதை இப்போது நான் மீண்டும் உனக்கு நினைவூட்ட விரும்புகிறேன். "சிரங்கு பிடித்தவனுக்கு அரிப்பு எடுக்கும். அவன் கை சும்மா இருக்காது. சொறியத் தொடங்குவான். அதற்குப் பிறகு அந்த இடமெல்லாம் எரிச்சலும் சேர்ந்து எடுக்கும். அந்த நிலையில் தான் சிலபேர் நம்மீது காய்ந்து விழுகிறார்கள்."

மாநில மாநாட்டில் மிகத் தெளிவாக நிலைமைகளை எடுத்துக்காட்டி நாடாளுமன்றத்திற்கும், சட்டப் பேரவைக்கும் ஒரே சமயத்தில் 1971- இல் நடந்ததுபோலத் தேர்தல் நடைபெற வேண்டு மென்றும், சுதந்திரம் அடைந்த பிறகு இதுவரையில் தமிழ்நாட்டில் குடியரசுத் தலைவர் ஆட்சி ஏற்பட்டதில்லையென்றும், மக்களாட்சியின் மாண்பு கருதி குடியரசுத் தலைவர் ஆட்சியை நுழைக்க வேண்டாமென்றும் மத்தியில் உள்ளவர்களைக் கேட்டுக்கொண்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மத்தியில் உள்ளவர்கள் அந்தத் தீர்மானம் பற்றி எந்தவிதமான ஏடாகூடமான பதிலையும் சொல்லவில்லை. அவர்கள் எந்த இறுதியான முடிவையும்

இன்னும் அறிவிக்கவில்லை. அதற்குள் தமிழ்நாட்டிலுள்ள "ஜனநாயகவாதிகள்" ? குதிக்க ஆரம்பித்துவிட்டார்கள் அல்ல; அல்ல! கொதிக்க ஆரம்பித்து விட்டார்கள்.

**"நாடாளுமன்றத்தை நீடிக்கலாம் - தமிழக சட்டப் பேரவையை நீடிக்கக்கூடாது! வேறு எந்த மாநிலத்திலே வேண்டுமானாலும் சட்டப் பேரவையை நீடிக்கலாம். தமிழ்நாட்டில் மட்டும் கூடவே கூடாது."**

இப்படிச் சில தமிழ்நாட்டு அரசியல் விதூஷகர்கள் இப்போது முழங்குகிறார்கள். நமது கழகத்தின் முறையீடு; இப்போதே பொதுத் தேர்தல் வரவேண்டுமென்பதுதான்! தேர்தலைப் புறக்கணிக்க வேண்டுமென்பது நமது நோக்கமல்ல. இதைப் புரிந்துகொண்டும், புரியாதவர்களைப் போலப் பேசுகிறார்கள்; எழுதுகிறார்கள் என்றால்-எப்படியோ கழக ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட வேண்டுமென்பதே அவர்களின் நோக்கம் - குறிக்கோள்!

மூன்றாண்டுகட்கு முன்பு இன்னும் மூன்றே நாள் என்று ஆரூடம் கணித்தார்கள். பிறகு மூன்று வாரத்தில் முடிந்துவிடும் என்று "குட்டிச் சாத்தான்" குரலிலும், பிறகு மூன்றே மாதங்கள்தான் என்று 'குடிலர்கள்' பாணியிலும் கோஷமிட்டார்கள்.

கழக ஆட்சி, ஒன்பது ஆண்டுகள் நிலைத்து நீடித்துக் கொண்டிருக்கிறது. இந்த எளியவனும் ஏழாண்டுக் காலமாக முதலமைச்சர் பொறுப்பில், தமிழ்நாட்டு மக்களின் நல்வாழ்த்துக்களோடு இருந்து வருகிறேன். பதவிப் பொறுப்புக்களை, மக்களுக்குப் பணிபுரியும் வாய்ப்பாகத்தான் கருதவேண்டும் என்ற இலக்கணத்திற்கேற்பக் கழக ஆட்சி நடைபெற்று வருகிறது. 1967-இல் ஆட்சி அமையும்போது, தமிழ் மரபும், வரலாறும், இலக்கியமும், காப்பாற்றப்பட நாங்கள் ஆட்சி பீடம் ஏறுகிறோம் என்றும் சமதர்ம சமுதாயத்தை உருவாக்குவதே எங்கள் நோக்கம் என்றும் அண்ணா அவர்கள் கூறியதையொட்டி நமது பணிகள், தமிழகத்தில் தொடர்ந்து நடந்து வருகின்றன.

பெரியதோர் அந்தஸ்து கிடைத்துவிட்டதென்றோ, புதிய பவிசு வந்துவிட்டதென்றோ; அய்யோ; இந்தக் கிரீடம் போய்விட்டால் நமது கழகத்தின் கீர்த்தியே போய் விடுமென்றோ - நாம் யாரும் அழுது புலம்பிக் கொண்டிருக்கவில்லை.

அண்ணா அவர்கள், கடைசியாகக் 'காஞ்சி' இதழில் தம்பிக்கு எழுதிய கடிதத்தில், "முதலமைச்சர் பதவி யென்பது சூழ்நிலையின் கைதி" என்ற கருத்தை மிக்க மனவேதனையுடன் வெளியிட்டதை யார் மறந்திருந்தாலும் அந்தப் பொறுப்பிலே இப்போது இருக்கிற நான் மறந்துவிடவில்லை. அனுபவ ரீதியாக ஆறு ஏழு ஆண்டுகட்கு மேலாக அண்ணா குறிப்பிட்ட அந்த உண்மையை உணர்ந்தும் வருகிறேன்.

உடன் பிறப்பே,

இந்த ஒன்பதாண்டுகாலக் கழக ஆட்சியில், மாநில அரசின் சக்திக்கு அதிகமாகவே, மக்களுக்கான முற்போக்குத் திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறோம். புரட்சிகரமான சட்டங்களை உருவாக்கி, நடைமுறைப்படுத்தியிருக்கிறோம். சமூக நலப்பணிகள், தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர்க்கான மேம்பாட்டுச் செயல்கள்; சாதனை வடிவங்களில் ஏராளம்! ஏராளம்! ஒன்றா - இரண்டா; சாதனைகள் - இந்த ஒரே கடிதத்தில் எழுதி முடித்துவிட!

பிரதமரின் இருபது அம்சத் திட்டங்கள் தமிழகத்தில் எவ்வாறு, எந்தக் காலத்திலிருந்து, எந்த வேகத்தில் நிறைவேறத் தொடங்கியுள்ளன என்ற விரிவான பட்டியலையே சட்டப்பேரவையில் நான் இரண்டு மணி நேரம் ஆற்றிய உரையில் வரிசைப்படுத்தி வழங்கியிருக்கிறேன்.

கழகம் வலியுறுத்தி வருகிற கொள்கை கோட்பாடுகள் மத்திய அரசுக்கு மாறுபட்டதாக இருப்பினும், மத்திய அரசின் தாக்கீதுகளை நிறைவேற்றுகிற நிர்வாகப் பொறுப்பில், மத்திய - மாநில உறவு கெடக்கூடிய எந்த நிகழ்ச்சியும் ஏற்பட்டது கிடையாது.

சட்டம், ஒழுங்கு, அமைதிக்கு ஊறு நேராவண்ணம் பாதுகாக்கும் மாநிலமாகவே தமிழகம் இருந்து வருகிறது.

காந்தியடிகளின் கொள்கைகளைச் செயல்படுத்துவதிலும், மாற்றுக் கட்சியினராயினும், மதிப்பு மிக்க மக்கள் தலைவர்களைப் போற்றி மரியாதை செலுத்துவதிலும் தமிழகம் முன்னணியில்தான் நிற்கிறது.

பாகிஸ்தானை எதிர்த்து இந்தியா, போர்க்கோலம் பூண வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டபோது ஆறு கோடி ரூபாய் யுத்த நிதி

வசூலித்து பிரதமரை அழைத்து அவர் கையில் வழங்கிய மாநிலமும் தமிழ்நாடுதான்.

இவ்வளவுக்கும் பிறகு, இங்குள்ள சிலரால் நாம் 'தேசவிரோத சக்திகள்' என்று அழைக்கப்படுகிறோம். "அந்நிய நாட்டுத் தொடர்பு கொண்டவர்கள்" என்று அவதூறு செய்யப்படுகிறோம்.

ஏன்? எதற்காக? தமிழ்நாட்டில் உள்ள சில அரசியல்வாதிகள் எதையாவது ஒரு பழியை நம்மீது சுமத்தி, நமது ஆட்சிக்கு முடிவு கட்டப் பார்க்கிறார்கள்.

ஆட்சியிருந்தால்தான் - அல்லது "ஆட்சி வரும்; வரும்!" என்று ஆசை காட்டினால்தான் கட்சியிருக்கும் என்ற நிலையிலே உள்ள சில கட்சிகள் தமிழ்நாட்டில் இருக்கின்றன. ஆனால் நமது கழகத்தின் நிலை அதுவல்ல. தியாகராயர் காலத்திலே உருவாக்கப்பட்ட உணர்வு இது! இந்த உணர்வுதான் நமது கழகத்தின் மூல பலம். அப்போதும் நீதிக்கட்சியின் கையிலே ஆட்சி வந்தது; பிறகு மாறியது. ஆனால், நம் இயக்கத்தின் இழையோடும் உணர்வைச் சிறிதும் சிந்தாமல் சிதறாமல் பெரியார் அவர்களும், அவரது பெரும்படைத் தளபதியாக விளங்கிய பேரறிஞர் அண்ணா அவர்களும், அவர்கள் வழிநின்று நாமும் காப்பாற்றியிருப்பதால்தான், தமிழ்நாட்டில் தமிழன் இன்று தலை நிமிர்ந்து பீடுநடை போடுகிறான்.

ஆகவே, அவசரக்காரர்கள்-ஆத்திரக்காரர்கள் விரும்புவது போல் கழகம், ஆட்சியில் பொறுப்பேற்றுப் பணிபுரிய முடியாவிட்டாலும் கழகத்தின் பணிகள் முடிந்துவிட்டதாகப் பொருள் அல்ல! இன்னும் சொல்லப்போனால் தன்மீது ஏற்றிவைக்கப் பட்டிருந்த சுமை, இறக்கப்பட்டு, மேலும் வேகமாகவும் விறுவிறுப்பாகவும் இலட்சியப் பயணத்தில் ஈடுபட முடியும்.

கர்மவீரர் காமராஜர் முதலமைச்சராக இருந்தார். பதவியை விட்டு விலகினார். விருதுநகர் தொகுதி தேர்தலில் தோற்றுக்கூடப் போனார். அதற்காக அவர் தன் இலட்சியங்களை விட்டு விட்டு ஒதுங்கியா ஓடிவிட்டார்? அவருடைய செல்வாக்கோ, பெருமையோ குறைந்தா விட்டது? இல்லையே!

பெரியவர் பக்தவத்சலம் முதலமைச்சராக இரண்டு மூன்று ஆண்டுக்காலம் இருந்தவர்தானே-அமைச்சர் பதவியில் பல

ஆண்டுக்காலம் இருந்தவர்தானே-இன்று பதவியில்லை என்பதால் அவர் என்ன சீந்துவார் அற்றா போய்விட்டார்!

தனிப்பட்டவர்களின் செல்வாக்கே, பதவியிழப்பின் காரணமாகக் குறைவதில்லையென்றால்; ஏறத்தாழ அறுபதாண்டுக் கால உணர்வுகளை அடிப்படையாகக் கொண்ட மக்கள் இயக்கமாம் தி. மு. கழகத்தின் பெருமையும், அது தமிழகத்திற்கு எவ்வளவு தேவை என்பதும் குறைந்துவிடக் கூடியவைகளா என்பதை அரசியல் அறிவுபடைத்தோர் உணர்ந்திடத் தவறமாட்டார்கள்.

உடன்பிறப்பே, உனக்கு நான் எழுதியுள்ள இந்தக் கடிதத்தைப் பற்றி மாற்றார் எப்படியெல்லாம் விமர்சிப்பார்கள் என்று எனக்கு நன்றாகத் தெரியும்.

- ☐ "கருணாநிதி, முடிவைத் தெரிந்து கொண்டார். கதை அளக்கிறார்"
- ☐ "தர்பாரில் இருந்து இறங்கத் தயாராகிறார்."
- ☐ "கழக ஆட்சியின் காலம் முடிகிறது. கருணா நிதியே அறிவிக்கிறார்."

இப்படியெல்லாம் பேசுவார்கள்; எழுதுவார்கள். ஆனால் ஒன்று உடன் பிறப்பே! நாம், நமது லட்சியங்களை நிறைவேற்றத்தான் வாழ்கிறோமே யல்லாமல்; வெறும் பதவிகளுக்காக அல்ல!

என்னைப் பொறுத்தவரையில், பதவிமுடிவு மட்டுமல்ல; வாழ்வின் முடிவே ஏற்படப் போகிறது என்று தெரிந்தாலும் அப்போதும் என் நினைவு உள்ளவரையில், பெரியாரையும் அண்ணாவையும் அவர்கள் தந்த இலட்சியங்களையும் கொள்கைகளையுந்தான் கூறிக்கொண்டிருப்பேன். மரணப் படுக்கையில் என் நாக்கு அசையும் சக்தியை இழந்து விடுமானால், என் நெஞ்சத் துடிப்புக்கள், கழகத்தின் பெருமைக்குரிய கொள்கைகளையே ஒலித்துக் கொண்டிருக்கும்.

"அம்மா! அப்பா!" என்று சொல்லி உயிர் பிரியப் போவதில்லை. "அண்ணா! அண்ணா!" என்று சொல்லித்தான் இந்த உயிர்த் துடிப்புக்கள் இறுதியாக அடங்கும்.

அந்த மன உறுதியோடுதான் நானும், கழகத்தின் முன்னணித் தலைவர்களும், ஏன்; எங்களைவிட மிக்க உறுதியுடன்; உடன்பிறப்பே! நீயும் சேர்ந்து இந்தக் கழகத்தை நடத்துகிறோம்.

இடையில் வந்துபோகும் பதவிகளுக்காக, இலட்சியத்தைக் கைவிடுபவன் சமுதாயத்தில் புரையோடிவிட்ட புண்ணாகத்தான் கருதப்படுவான்.

இங்கிலாந்தின் முன்னாள் பிரதமர் கிளாஸ்டன் என்பவரின் மகளுக்கு, லார்டு ஆக்டன் எழுதிய கடிதமொன்றில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார்.

**"கட்சிக் கொள்கைகளின் ஒருங்கிணைப்பு என்று நான் கருதுவது, ஒரே கொள்கையைக் கடைப்பிடிக்கும் பலர் ஒன்று சேர்ந்திருப்பதால் அல்ல. ஒருவருக்கொருவர் செய்து கொள்ளும் உதவிகள், கடமைகள் பற்றி – இவைகளால்தான்! கட்சியின் நியாயமான கொள்கைகளில் இருந்து திசைமாறி கட்சியின் அமைப்பு முறைகள் எனக் கருதும் ஏற்பாடுகளைக் கடைப்பிடிக்கும் காலம் உள்ளது. ஒவ்வொரு தலை சிறந்த தலைவனும் தன் நண்பர்களையாவது, நட்பையாவது, உயர்ந்த கொள்கைகளுக்காகத் தியாகம் செய்ய வேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறது"**

கழகத்தின் தலைமைப் பொறுப்பில் இருக்கிற எனக்கும், நாவலருக்கும், பேராசிரியருக்கும் இதுபோன்ற கேள்விகட்கு விடை காணவேண்டிய சூழ்நிலைகள் ஏற்படத்தான் செய்கின்றன. மூவரும் கூடிப் பேசுகிறோம்; ஜனநாயக ரீதியில் மற்றவர்களையும் கலந்து விவாதிக்கிறோம். கொள்கைதான் பெரிது என்ற முடிவுக்குத்தான் வருகிறோம். அதற்காக நண்பர்களையோ, அல்லது நட்பையோ நாங்கள் முதல்வரிசையில் வைத்துப் பார்க்காமல் கொள்கையைக் காப்பாற்ற, கொள்கைக்காக தியாக வரலாறு படைத்துள்ள கழகத்தைக் காப்பாற்ற அந்த நண்பர்களை இழந்திடவும் தயாராகிறோம்-ஆட்சியில் ஒரு கட்சி இருக்கும் போது இந்தச் சந்தர்ப்பங்கள் அடிக்கடி ஏற்படுவது வாடிக்கைதான்!

அந்தச் சங்கடத்திலிருந்தும் கட்சியை விடுவிக்க, தமிழ் நாட்டில் உள்ள மாற்றுக் கட்சியினர் "பகீரதப் பிரயத்தனங்களில்" ஈடுபடுகின்றனர்.

அப்படியும் நடக்கலாம்; அல்லது தமிழ்மக்கள் விரும்புவது போலவும் நடக்கலாம். எந்த முடிவையும் எதிர்பார்த்து நான் உனக்கு இந்த மடலை எழுதவில்லை. எந்த முடிவானாலும், அண்ணா

சொன்ன; "**எதையும் தாங்கும் இதயம் வேண்டும்**" என்பதை நினைவுபடுத்தத்தான் இதை எழுதுகிறேன். கடற்கரையில் அண்ணன் துயில் கொள்ளும் இடத்தில் பொறிக்கப்பட்டுள்ள "எதையும் தாங்கும் இதயம்" என்ற அந்த மணிவாசகங்களை; என் உடன்பிறப்பே! நீ மறந்துவிடாதே நினைவில் ஆழமாகப் பதிய வைத்துக் கொள்! ஒன்று சொல்வேன்;

**அமைப்பு ரீதியான கழகம்;**
**ஆடை அணிந்துள்ள உடலைப்போல!**
**அதில் ஆவி நிகர்த்தது கொள்கை!**
**பதவி என்பது அணிகலன்!**
**அணிகலன் இன்றி வாழ முடியும்.**
**கொள்கையில்லையேல் ஆவி இல்லை;**
**ஆடையில்லையேல் மானம் போகும்!**

இதனை உணர்ந்து தொண்டாற்றுமாறு, என் உடன்பிறப்பே! உன்னைப் போன்ற ஒரு தொண்டன் வேண்டுகிறேன்.

அனபுள்ள,

**மு. க.**

06-01-1976

# 156. தங்கம் எது? பித்தளை எது?

**உடன்பிறப்பே,**

"**உங்கள் நாட்கள் எண்ணப்படுகின்றன**" என்று சட்டப் பேரவையிலே காங்கிரஸ் கட்சியின் 'கொறடா'வாக இருந்த அருமை நண்பர் விநாயகம் அவர்கள் முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களைப் பார்த்துச் சொன்னபோது, உடனே அண்ணா அளித்த பதில் என்ன தெரியுமா? "**என் அடிகள் அளந்து வைக்கப்படுகின்றன**" என்பதுதான். இந்த வாக்கியங்களைப் பரிமாறிக் கொண்டவர்கள் இப்போது இல்லை. ஆனால் அந்த வாக்கியங்கள் நம் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. மறைந்தும் மறையாத மாமேதையாம் அறிஞர் அண்ணா அவர்கள், நண்பர் விநாயகம், நமது தி. மு. கழகத்தில் சேர்ந்த போது நம்மிடையே இல்லை. இதை எதற்காகச் சொல்ல வருகிறேன் என்றால்; கழக ஆட்சி, நாட் கணக்கில் முடிந்துவிடும் என்று சீற்றத்தோடு கூறிய நண்பர் விநாயகமே, அதே தி. மு. கழகத்தின் உறுப்பினராகத் தன்னை ஆக்கிக் கொண்டு, கொள்கை முழக்கமிடத் தொடங்கினார்.

இப்போது, சில பத்திரிகைகளை எந்தப் பக்கம் புரட்டினாலும், தி.மு.க. ஆட்சி இன்னும் ஐம்பதுநாள்-நாற்பது நாள்-முப்பது நாள்-என்று யாராவது ஒரு எதிர்க்கட்சித் தோழர் அல்லது தலைவர் பேசியதாகக் கொட்டை எழுத்துச் செய்திகளைத்தான் காணமுடிகிறது.

ஆட்சிக்கு யார் வேண்டுமானாலும் நாள் குறிக்கலாம், ஏன்; என்னருமைத் தோழர்கள் என் ஆயுளுக்கு வேண்டுமானாலும் நாள் குறிக்கலாம்-ஆனால் கட்சிக்கு நாள் குறிக்க, இதுவரை யாரும் பிறக்கவுமில்லை; இனிப் பிறக்கப்போவதுமில்லை.

கருணாநிதி, இருபது அம்ச திட்டத்தை நிறைவேற்ற
வில்லை-கருணாநிதி; காங்கிரஸ் கட்சி, தமிழ்நாட்டில்

இணைவதை விரும்பவில்லை-கருணாநிதிதான், பா. ராமச்சந்திரன் அணியினரைப் பின்னால் இருந்து ஆட்டிவைக்கிறான்-கருணாநிதியின் ஆட்சி இனி ஒரு மணிநேரம்கூட நீடிப்பது கூடாது-இணைப்புக் காங்கிரசார் கூட்டத்தை நடத்தவிடாமல் கருணாநிதி, சூழ்ச்சி செய்கிறான்.

உடன்பிறப்பே, எனக்கு இப்படி நடக்கின்றது அர்ச்சனை - அபிஷேகம் எல்லாம்! "நன்றியுள்ள அந்த மனிதர்கள் வாழ்க! வாழ்க!!" என்று வாழ்த்துகிறேன். தங்கள் இயலாமையை வெளியில் சொல்ல வெட்கப்பட்டு; தங்கள் வீரத்தை வெளிப்படுத்திக்கொள்ள, என்னைப் போட்டு மிதிக்கிறார்கள் அல்லவா; அவர்களை அவர்களது மனச்சாட்சியும், அவர்கள் உண்மையிலேயே வணங்குவதாகச் சொல்லிக் கொள்கிற அர்த்தமுள்ள இந்து மதத்தின் "கடவுள்"களும் மறைமுகமாகவாவது கண்டித்துத் திருத்தட்டும் தண்டிக்கவேண்டும் அந்த மனச்சாட்சி என்று சொல்ல மாட்டேன்; நீண்டகாலமாகக் கொண்டுள்ள நேசத்தின் காரணமாக! குடும்ப பாசத்தின் காரணமாக!

உடன்பிறப்பே! நான் எழுதும் கடிதங்களில் கோடிட்டுக் காட்டப்படும் பொறுமை-அமைதி-இவைகளை யெல்லாம் இனிமேல் ஏற்றுக்கொள்ள முடியாது என்று நீ எழுதும் கடிதங்கள் நாள்தோறும் என் எதிரில் குவிந்த வண்ணமிருக்கின்றன. என் செய்வது; என்னைப் பற்றிச் சில "பெரிய மனிதர்கள்" தரக்குறைவாகப் பேசுவதை; நீ, உன்னைப் பற்றிப் பேசுவதாகவே எடுத்துக் கொள்கிறாய். காரணம்; நீ-என்னோடு கலந்து விட்டிருக்கிறாய். என் உணர்வுகளோடு ஒன்றிப் போயிருக்கிறாய், என்னோடு சேர்ந்து வளர்ந்திருக்கிறாய். என் மீது தூசி பட்டாலும், பெரிய தூண் பட்டது போலத் துடிக்கின்ற என் தாயின் நெஞ்சத்தை நீயும் பெற்றிருக்கிறாய் - அதனால் குமுறுகிறாய்! கொந்தளிக்கும் கடலாகிறாய்! கோடையிடியெனப் பதில் முரசு கொட்டுவேன்; என்று கர்ச்சிக்கிறாய்! உன் அன்புக்குத் தலைதாழ்த்துகிறேன். உன் வீரத்துக்கு வாழ்த்துக்களைப் பொழிகிறேன். சந்தர்ப்ப வாதமில்லாத - சபலம் தலைகாட்டாத - சலனத்துக்கு ஆட்படாத - உன் கள்ளங் கபடமற்ற கட்சி வெறிக்கு, கோடானுகோடி வணக்கம் செலுத்துகிறேன்.

சாக்கடையோரத்திலே நடக்கும்போது, அந்தத் துர்நாற்றத்தைச் சமாளிக்க, உன் கைக்குட்டையில் சாக்கடைத் தண்ணீரை ஊற்றி நனைத்து அதனை மூக்கிலே முகர்ந்துகொண்டா போவாய்? மாட்டாய்! மலர் ஒன்றை - அல்லது மணங் கமழ்ப் பொருள் ஒன்றை - எதுவுமில்லையேல் கையொன்றை மூக்கருகில் வைத்துக் கொண்டுதானே அந்தச் சாக்கடை நாற்றத்தைச் சமாளிக்கிறாய்! அதுபோலத்தான்; நம்மை-தாக்கப் புறப்பட்டிருக்கும் "சந்துமுனைச் சிந்துபாடி"களை நாம் சமாளிக்க வேண்டுமேயல்லாமல் நாமும் போட்டிக்கு "லாவணி" பாடத் தொடங்கிவிட்டால், அரசியலுக்குரிய இலக்கணமே அழிந்துவிடும்.

யார் தாக்குகிறார்கள் நம்மை? நம்மால் பல்வேறு பயன்களைப் பெற்றவர்கள்தான் தாக்குகிறார்கள். நாட்டுக்குத் தெரியாதா அது? ஊர் அறியா ரகசியமா அது? வேங்கைகள் வேதாந்தம் பேசுகின்றன காட்டில்; என்றால் அது ஒரு அதிசயம்! ஆனால் நாட்டில் சில அரசியல்வாதிகள் "நாணயம்" பற்றிப் பேசப் புறப்பட்டிருக்கிறார்கள்; இது ஒன்றும் அதிசயமல்ல!

எட்டேகால் லட்சணங்களும், எமனேறும் பரிகளும், முட்டக் கூரையில்லா வீடுகளும் - எல்லோரா, அஜந்தா, மாமல்லபுரங்களைப் பார்த்துக் கேலி பேசுவதுபோல், இன்றைக்கு நமது கழகத்தையும் நமது அரசையும் சிலர் பழிக்கத் தொடங்கியிருக்கிறார்கள். பழிக்கட்டும் - நன்றாகப் பழிக்கட்டும் - அந்தப் பாஞ்சாலிகள் கண்ணகியைப் பார்த்துப் பழித்துக்கொண்டே இருக்கட்டும்.

நமது மேடைகள், கருத்துக்கள் தெளிந்த நீரோடைகளாகவே இருக்கட்டும். ஏடுகள் - எண்ணப் பூஞ்சோலைகளாகவே திகழட்டும். கனல் இருக்கலாம் கருத்துக்களைச் சொல்லும்போது - அதற்காகக் கண்ணியக் குறைவு ஒரு சிறிதும் இருந்திடக்கூடாது. அனல் பறக்கலாம் எழுத்தாணியைக் கையிலே எடுக்கும்போது; அதற்காக ஆபாசத்தின் வாயிற்படி அருகே கூடப் போகக்கூடாது!

இதைத்தான் என் உடன்பிறப்பே! உனக்கு நான் மீண்டும் மீண்டும் நினைவூட்டுகிறேன்.

நாட்கள் எண்ணப்படட்டும், பரவாயில்லை. அப்படி எண்ணப் பட்டு முடிந்துபோன பிறகு ஆட்கள் நம்மோடு எத்தனைபேர் இருக்கிறார்கள் என்பதுதான் முக்கியம்! அதற்காகவாவது அப்படி

ஒரு 'சோதனை' வந்தால் அதனை நான் பெரிய பரிட்சையாகவே கருதுவேன். அந்தப் பரிட்சையில் தேறுகிறவர்கள்தான் பத்தரை மாற்றுத் தங்கங்கள்! மற்றவை, பதவி, பெருமை, சலுகை, சந்தர்ப்பம் இவைகளுக்காக இருந்த பித்தளைகள்!

இந்த இரண்டில்; நீ பத்திரைமாற்றுத் தங்கம் என்பதால்தான், நான் எதையும் தாங்கத் தயாராக இருக்கிறேன்.

அன்புள்ள,

**மு. க.**

08-01-1976

# 157. பழம் நழுவிப் பாலில்...!

**உடன்பிறப்பே,**

"நீடிக்காதே! நீடிக்காதே!"

"அய்யோ! நீடிக்காதே!"

இப்படி வயிற்றில் அடித்துக்கொண்டு கத்துகிறார்கள்; வாய்வலிக்க அலறுகிறார்கள். கண்கள் பிதுங்குகின்றன அவர்களுக்கு! கைகள் கூட வலியெடுத்துப்போய்விட்டன, அடித்துக்கொண்டு!

"இது தொழிலாளர் விரோத அரசாம்!"

இப்படி ஒரு கும்பல் குய்யோ முறையோ என்று கூப்பாடு போடுகிறது. கோவையிலே வேலையின்றிப் பாதிக்கப்பட்ட தொழிலாளர்கட்கு முதலமைச்சர் நிதியிலிருந்து மொத்தம் ஆறு லட்சம் ரூபாய் வரையிலே வழங்கிய கழக அரசைப் பார்த்து, இப்படிக் குற்றம் சாட்டுகிறார்கள். போனசுக்காக வாதாடி வெற்றிபெற்ற நமது என்.வி.என். தொழிலாளர் அமைச்சராகப் பணியாற்றியதை மறந்துவிட்டுப் பேசுகிறார்கள்; இந்தப் போனஸ் போராட்ட வீரர்கள்!

இரவு பகல் எந்த நேரமும் தொழிலாளர் பிரச்சினைகளைப் பேசித் தீர்ப்பதிலே அக்கறை காட்டுகிற நண்பர் ராஜாராம் அவர்களைத் தொழிலாளர் அமைச்சராகப் பெற்றிருக்கிற இந்த அரசைப் பார்த்துத்தான் இப்படி ஒரு அபாண்டத்தை வீசுகிறார்கள்.

இந்த அரசு இருபது அம்சத் திட்டங்களை நிறைவேற்றுவதில் அக்கறை காட்டவில்லையாம். சட்டப் பேரவையில் நேருக்கு நேராகத் தந்த விபரங்களுக்குப் பிறகும், தாங்கள் சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்லி, அதனை மெய்யாக்கி விடலாமென்று கனவு காண்கிறார்கள்.

நீடிக்க விடமாட்டார்களாம்! பாவம்; பழுத்த ஜனநாயக வாதிகள், மனுவும் கையுமாக மாளிகைகளின் மதிலோரங்களில் காத்துக் கிடக்கிறார்கள்.

1967-இல் ஆட்சிப் பொறுப்பை ஏற்றோம். நான்கு ஆண்டு காலம் அரசோச்சினோம். 1971இல் நாடாளுமன்றத்திற்குத் தேர்தல் நடைபெற்ற போது, நாமும் சட்டப் பேரவைத் தேர்தலை நடத்து வதற்கு முன்வந்தோம். அந்த வெற்றிக்குப் பிறகு, ஐந்தாண்டுக் காலம் ஆட்சி நடத்தியிருக்கிறோம். பதவிக்காலம் முடிவதற்கு இன்னும் ஓரிரு மாதங்களே உள்ளன. இதற்குள்ளாக இந்த ஐந்து ஆண்டுகளில் "கழக அரசு, இதோ கவிழப்போகிறது; அதோ கவிழப்போகிறது - காலையில் கவிழும், மாலையில் கவிழும்" என்றெல்லாம் ஆசை அலைமோத பேய்க் குரல் எழுப்பியவர்கள், தங்கள் எண்ணம் நிறைவேறாத எரிச்சலில், "இப்போது இன்னும் சில நாட்கள் தானே!" என்று ஒருவரைப் பார்த்து ஒருவர் இளித்தும், சிரித்தும், கெக்கலிப்புக் கொட்டியும் தங்கள் மனஅரிப்பைத் தீர்த்துக் கொள்கின்றனர்.

தேர்தல் வேண்டுமென்று கேட்கிறது தி.மு.க.! "நீடிக்கக் கூடாது" என்று ஓலமிடுகிறவர்கள், தேர்தல் வேண்டுமென்று கூறுகிறார்களா; அதுதான் இல்லை. ஜனாதிபதி ஆட்சி வேண்டுமென்று முறையிடுகிறார்கள்.

சட்டசபையில், தி. மு. க.வை விட்டுப் பதினெட்டு உறுப்பி னர்கள் போய்விட்டார்களாம் - வலது கம்யூனிஸ்டுகள் நாலைந்து பேர் தி. மு. க. உறவை அறுத்துக்கொண்டார்களாம். அதனால் தி. மு. க. பலமிழந்துவிட்டதாம். 166 உறுப்பினர்களைக் கொண்டுள்ள தி. மு. க., சட்டசபையில் பலமிழந்த கட்சியாம். கேரளத்தில் உள்ள கூட்டணி அரசு, மிகப்பெரும்பான்மை பலம் வாய்ந்த கட்சியாம்! இந்த வாதத்தைக் கேட்டு சிரிப்பு வருகிறதல்லவா? பாவம்! பரிதாபத்துக்குரியவர்கள்.

முதல் கட்டத்தில் முழுமையாக நான்கு ஆண்டு - அடுத்து முழுமையாக ஐந்து ஆண்டுகள் முடிந்துதான் அடுத்த தேர்தல் எப்போது என்று கேட்கிறோம்.

இடையில் இவர்கள் நுழைந்துகொண்டு "நீடிக்காதே! நீடிக்காதே!" என்பதாலோ; அல்லது அதிலே அவர்கள் வெற்றி

கண்டு விடுவதாலோ, கழகத்திற்கு அவர்கள் வெற்றி கண்டு விடுவதாலோ, கழகத்திற்கு என்ன கலக்கம் வந்துவிடப்போகிறது! இவர்கள் வெற்றி பெற்றால், பழம் நழுவிப் பாலிலே விழுந்தது போலத்தான் நமக்கு! இதை மட்டும் அந்த ஆத்திரக்காரர்கள் உணர்ந்து கொள்வது நல்லது.

அன்புள்ள,

மு. க.

18-01-1976

# 158. வீரர்கள், பின்தொடரட்டும்!

**உடன்பிறப்பே!**

"கோழைகள் விலகட்டும். வீரர்கள் என் பின்தொடரட்டும்" என்னும் உணர்ச்சி மிகு வாசகத்தை அண்ணாவின் சந்திரமோகன் நாடகக் காவியத்திலே கேட்டிருப்பாயே, நினைவிருக்கிறதா? அதனை நெஞ்சில் பதியவைத்துக் கொண்டு இலட்சியப் பயணத்தை மேற்கொண்டிருப்பவர்கள்தான் நாம். நம் பின்னால் நடந்துவருகிறவர்களில் பலவகையினர் உண்டு. காடுமேடுகளைத் தாண்டிடவும் அஞ்சாது நம்மோடு அணிவகுத்து வருவர். காட்டாறுகளைக் கடந்திடவும் துணிந்து நம்மோடு தொடர்வர்.

வழியில் சற்றுக் களைப்பாற ஒரு மரநிழல் கிடைக்கக்கூடும்.

அந்த நிழலையே நிரந்தரம் என நினையாமல் நம் பயணத்தை மேலும் தொடரும்போது, நிழல் சுகத்தை விட்டுப் பிரியமுடியாதவர்கள், "நீங்கள் செல்லுங்கள் நாங்கள் இங்கேயே இருக்கிறோம்" என்று நம்மை வழியனுப்பி வைப்பார்கள்.

அவர்கள் ஒருவகையினர்.

இடையில் ஏற்பட்ட இன்ப சுகத்திற்காக இலட்சியப் பயணத்தைத் துண்டித்துக் கொள்பவர்கள். அவர்கள், தாங்கள் எடுத்த முடிவுக்குக் காரணமும் தேடுவார்கள். தங்கள் இயலாமையை மறைக்க நமது இலட்சியத்தின் மீதே பழியையும் போடுவார்கள்.

இன்னும் ஒரு வகையினர் நம் தோள்மீதே ஏறிக்கொண்டு வந்து, நாம் கடந்துவந்த கடினமான பாதைகளையெல்லாம் அவர்களும் கடந்து வந்ததாகக் கூறிக் கொண்டு வழியில் அவர்களுக்குத் தேவையான இடத்தில் இறங்கிக்கொண்டு, இதுவரையில் அவர்களைச் சுமந்து வந்த நமது தோளையும் இழித்துப் பேசுவார்கள்.

"தோளா அது? அந்தத் தோள் எலும்பு குத்தி என் தொடையெல்லாம் வலிக்கிறது"

என்று தன்னைத் தூக்கிச் சுமந்த தோளைப்பற்றி ஒரு புகார்த் தொகையறாவே பாடி முடிப்பார்கள்.

"இலட்சியத்தை அடைய இன்னும் எவ்வளவு தொலைவு செல்லவேண்டும்? இப்போது நாம் ஏறியிருக்கிறோமே; படகு!- இதுவே நம் இலட்சியமல்லவா?" என்று படகுச் சவாரியிலேயே திருப்தி அடைகிறவர்களும் உண்டு.

"பைத்தியக்காரா! படகுப் பயணம் நமது இலட்சியமல்ல! பயங்கரமான ஆற்றைக் கடக்க இந்தப் பயணத்தை மேற்கொண்டிருக்கிறோம். படகு, கரையை அடைந்ததும், அதன் பிறகு அதோ தெரிகிறதே; அந்த உயர்ந்த மலை முகடு-அதன் மீது ஏறி அடுத்த பக்கத்தில் இறங்க வேண்டும். அந்தப் பக்கத்தில் அடர்ந்தகாடு உண்டு, அங்கே கொடிய விலங்குகள் நம்மைச் சூழவும் கூடும். அவைகளைச் சமாளித்துச் சென்றால், பாழடைந்த இருட்குகையொன்று பாம்புபோல வளைந்து நெளிந்து கிடக்கும். அந்தக் குகையையும் கடந்து சென்ற பிறகே நமது இலட்சியத்தின் முகடு தென்படும். அதன் பிறகே நம் பயணம் முடிவடையும். அதற்கிடையே இந்தப் படகுப் பயணத்தையே நமது குறிக்கோள் என்று கருதிவிடாதே!"

என்று சொல்லத்தான் வேண்டியிருக்கிறது.

"ஏ, அப்பா! அப்படியா? இன்னும் இவ்வளவு சிரமங்கள் இருக்கின்றனவா? எனக்கு வேண்டாம் வீண் தொல்லை!"

என்று படகிலிருந்து ஆற்றில் குதித்து விடுகிறவர்களும் இருக்கிறார்கள்.

நீந்திச்சென்று வேறு கரை சேரலாம் என்று குதித்தவர்கள் கை, கால் அசந்து மூச்சற்று மிதந்து கொண்டிருப்பதையும் பார்க்கிறோம். குதித்த வேகத்தில் சேற்றில் அழுந்திப் போனவர்களுக்காகப் பரிதாபப்பட்டு விட்டு, நம் பயணத்தைத் தொடர்ந்து கொண்டுமிருக்கிறோம். நாம் ஏறியுள்ள படகு, எதிர்க் கரையை அடையும். அதன் பிறகு நாம் கடக்கவேண்டிய பாதைதான், இதுவரையில் கடந்து வந்த பாதைகளை விடக் கடினமானது.

அதைக்கண்டு மலைத்திடுபவன் வீரனாகான். எந்த ஒரு இலட்சியத்தையும் அடைய புறப்பட்ட இடத்தில் எத்தனைபேர் இருந்தார்களோ: அத்தனைபேரும் இலட்சியப் பயணம் முழுவதும் இருந்தார்கள் என்று வரலாறு கிடையாது.

இயேசுவின் சீடர்களிலேயே எண்ணிக்கை குறைந்து விடவில்லையா? அவர் கையை முத்தமிடுவதுபோல் நடித்து அவரையே ஒரு சீடன் காட்டிக்கொடுத்துவிட வில்லையா?

அவர் சிலுவையில் அறையப்பட்டபோது சிரித்து மகிழ்ந்த சிலரும் இருக்கத்தானே செய்தார்கள்.

அவருக்கே அந்த நிலை என்றால்; நாம் எம்மாத்திரம்!

அன்னமிட்ட கையை அறுத்தெறிகிறவர்கள்-மாலை போட்ட கரத்தை ஒடித்தெறிகிறவர்கள்-தூக்கிச்சுமந்த தோளை சம்மட்டியால் நொறுக்குகிறவர்கள்-வாழ்வளித்தவர்களை வசைபாடுகிறவர்கள்-அப்படிப்பட்டவர்களை யெல்லாம் உலகத்தில் "நீதி" என்று ஒன்றிருந்தால் அது கேட்கட்டும்.

**உடன்பிறப்பே,**

**நீ, வா! நம் பயணத்தைத் தொடருவோம். "கோழைகள் விலகட்டும்! வீரர்கள் என் பின் தொடரட்டும்!!" என்று முழங்கியவாறு சென்றிடுவோம் இலட்சியபுரியை நோக்கி!**

அன்புள்ள

**மு. க.**

29-01-1976

குறிப்பு:- ஆட்சி கலைக்கப்படுவதற்கு இரண்டு நாள் முன்பு எழுதப்பட்டது.

# 159. அண்ணா வழி நிற்போம் அமைதி காத்திடுவோம்!

**உடன்பிறப்பே,**

பிப்ரவரி மூன்றாம் நாள். நமது அண்ணன் நீங்காத் துயில் கொண்ட நாள். நமது கண்ணீரில் நனைந்த மலர்களால் தொகுத்த வளையங்களை அவர் படுத்திருக்கும் கல்லறை மீது வைத்து வணங்குகிறோம். எந்தப் பதவியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும், எந்தப் பெருமை நமக்கு இருந்தாலும் இல்லாவிட்டாலும் அண்ணாவுக்குத் தம்பிகள், அவருக்கு உடன் பிறப்புக்கள் என்ற சிறப்பும் பெருமையும் நமக்குப் போதுமானதாகும். எதையும் தாங்கும் இதயம் வேண்டும் என்று அண்ணன் சொன்னதை மறவாமல் நடைபோடுவோம்.

எத்தகைய சோதனையிலும், எந்தச் சூழ்நிலையிலும் பொறுமையை இழக்காமல், அமைதி அமைதி அமைதி என்றே நம் பணிகள் தொடர்ந்திட வேண்டும்.

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு அண்ணா நமக்குத் தந்த அமுதமொழி. அதற்குச் சிறிது மாசும் ஏற்படாத வண்ணம் தொடர்ந்து தூய பணி ஆற்றிடுவோம் என்று இந்த நாளில் உறுதி பூணுவோம்!

அலைகள், இரைச்சலிடுகின்றன. ஆனாலும் அதோ அண்ணனின் கல்லறையில் அமைதிதான் தவழ்கிறது ஆம்! அமைதியின் வடிவமன்றோ நம் அண்ணன்; அவர்தம் வழி வந்தவர்களன்றோ நாம்!

அவர் வழி நிற்போம்! அமைதி காப்போம்! சோதனைகளை வேதனைகளைத் தாங்கிக்கொள்ளும் இதயம் நமக்கு உண்டு என்பதை உலகிற்கு அறிவிப்போம்.

அன்புள்ள,

**மு. க.**

01-02-1976

குறிப்பு:- ஆட்சி கலைக்கப்பட்ட மறுநாள் காலையில் எழுதப்பட்டது

31-1-76 முதல் குடியரசுத் தலைவர் ஆட்சி அமல்.

# 160. கழகத் தோழர்கட்கு

## இந்த வாய்ப்பு நமக்குக் காலம் வழங்கிய அருட்கொடை!

**உடன்பிறப்பே,**

"தங்கம் எது? பித்தளை எது? என்பதை உணரும் காலம் விரைவிலே வரும்" என்று சில நாட்களுக்கு முன்பு உனக்கு எழுதிய கடிதத்திலே நான் குறிப்பிட்டிருந்தேன். வேதனைகளைச் சந்திக்க எதையும் தாங்கும் இதயம் கொண்ட வீரர்கள் என் பின் தொடரட்டும் என்று திட்டவட்டமாக அழைத்திருந்தேன். நான் கோடிட்டுக் காட்டிய குறிப்புக்களைச் சீர்தூக்கிப் பார்க்கும் வாய்ப்பு எனக்கும் கழகத்திற்கும் கிடைத்திருக்கிறது. எந்த நிலையிலும் அமைதியை இழந்துவிடாமல் உறுதியான நெஞ்சத்துடன் நமது கழகப் பணிகளை நாம் தொடர்ந்து ஆற்றிக்கொண்டிருப்பதுதான் அண்ணா நமக்குத் தந்துள்ள அறிவுரை. சில பிரச்சனைகளில் நமக்கென்று சில கருத்துக்கள் இருக்கலாம். அந்தக் கருத்துக்களையோ, கொள்கைகளையோ நாம் வலியுறுத்துகிற நேரத்தில் சட்டம், ஒழுங்கு அமைதிக்கு விரோதமான முறைகளில் அந்தக் கருத்துக்களோ, கொள்கைகளோ நிறைவேற்றப்பட வேண்டுமென்று எள் முனையளவுகூட நாம் எண்ணியது கிடையாது, எதிர்காலத்தில் எண்ணிடவும் போவதில்லை. அப்படி எண்ணிடவும் கூடாது.

இன்று கழகம் ஆட்சிப் பொறுப்பில் இல்லை. ஒன்பது ஆண்டுக் காலம் ஆட்சிப் பொறுப்பில் இருந்த கழகம், தமிழ் மக்களுக்குத் தன்னாலியன்ற தொண்டினைச் செய்து இருக்கிறது.

**துன்பம் வருகிறபோது தான் தோழர்களை உணர்ந்து கொள்ள முடியும் என்ற முதுமொழியைப் பரிசோதித்துப் பார்க்கும் வாய்ப்பல்லவா நமக்குக் கிடைத்திருக்கிறது.**

இந்த வாய்ப்பு, "காலம்" நமக்கு வழங்கியுள்ள அருட்கொடை என எண்ணிக் கொள்வோம். நிகழ்காலத்தைப் புரிந்துகொண்டு, எதிர்காலத்திற்கான பாடத்தைப் பெற இப்படிப்பட்ட ஒரு நல்ல நேரம் வந்தது காண, நாம் மகிழ்ச்சி அடைய வேண்டுமே யல்லாமல் மனச் சோர்வு கொள்ளக்கூடாது;

ஏற்கனவே, நம் மீது கூறப்பட்டுள்ள புகார்ப் பட்டியலின் மீது மத்திய அரசு விசாரணைக் கமிஷனை அமைத்திருக்கிறது. மீண்டும் விளக்கங்களை அளித்திட ஒரு வாய்ப்பு கிடைக்கும் என்ற முறையில் நான் அதனை வரவேற்றிருக்கிறேனேயல்லாமல் யார் மீதும் எனக்கு மனச்சங்கடமில்லை.

அன்புள்ள,

**மு. க.**

06-02-1976

# 161. அரசியல் பண்பாடு காப்போம்!

**உடன்பிறப்பே,**

தமிழகத்தில் பொதுக் கூட்டங்களுக்குத் தடையுத்தரவு விதிக்கப்பட்டிருக்கிற செய்தி உனக்குத் தெரியாததல்ல.

குறிப்பிட்ட நாளைக்குப் பிறகு தடையுத்தரவு நீங்கி கூட்டங்களுக்கு அனுமதி வழங்கப்படுமேயானால், நீ ஏற்பாடு செய்யும் கழகக் கூட்டங்கள் மிகுந்த கண்ணியத்தோடும் அரசியல் நாகரீகத்தோடும் அமைந்திட வேண்டுமென்பதை நான் உனக்குச் சொல்லத் தேவையில்லை.

ஆட்சிப் பொறுப்பில் ஒன்பதாண்டுக்காலம் இருந்தோம். இப்போது இல்லை என்கிற கவலைக்கோ, கோபத்திற்கோ ஒரு சிறிதும் இடமற்ற வகையில் பொதுக் கூட்டச் சொற்பொழிவுகள் இருந்திட வேண்டும். தடை யுத்தரவு நீக்கப் பெற்று கூட்டங்களுக்கு அனுமதி வழங்கப்படுகிற வரையில் நீ காத்திருக்கத்தான் வேண்டும்.

இன்றைய அரசினர், ஒருவேளை கூட்டங்களுக்கான தடையை மேலும் சில காலம் நீடிக்கவேண்டுமென்று கருதுவார்களேயானால் சட்டம் ஒழுங்கு அமைதியில் நாட்டம் கொண்ட நாம், அதனை ஏற்றுக் கொள்வதுதான் முறை.

நமது மாநிலத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி ஏற்பட்ட உடனே, நான் உன்னையும் தமிழக மக்களையும் பார்த்து, கடமை கண்ணியம் கட்டுப்பாட்டு உணர்வுடன் அமைதியைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். இன்று திகழ்கின்ற அமைதிக்குக் காரணமாக கட்சி சார்பற்ற முறையில் எல்லாத் தமிழர்களும் விளங்குவது போற்றுதற்குரிய ஒன்றாகும்.

அமைதியான உள்ளத்திலேதான் தும்பை மலர் போன்ற தூய்மை குடியிருக்க முடியும்.

அமைதியான உள்ளம்தான் சலனமற்றதாகவும் வாய்மையுடையதாகவும் இருந்திட முடியும்.

ஆர்ப்பாட்டங்கள், வாய் வீச்சுக்கள், வசைமாரிகள், வன்முறைப் பேச்சுக்கள், வீரர்களுக்கு இலக்கணம் வகுக்கக் கூடியவைகள் அல்ல. அவையெல்லாம் 'முண்டா' தட்டும் குண்டர்களுக்கு உரிய அழகுகளாகும்.

அமைதியிலே தான் உறுதி இருக்கும். அன்பு பிறக்கும். இதைத்தான் நாம் தொடர்ந்து கடைப்பிடித்திட வேண்டும்.

பேசும்போதும் எழுதும்போதும் தனிப்பட்டவர்களைத் தாக்குவது, தரக்குறைவாகப் பழிப்பது - என்ற முறை கடுகளவு தென்பட்டாலும் அது நமது கழகத்தின் பெருமைக்கு உகந்ததல்ல.

மிகவேகமாகப் பேசுகிற சிலபேர் அதே வேகத்தில் வெளியே போய் விடுவார்கள் என்ற வரலாற்றை நமது கழகம் 1960 ஆம் ஆண்டு அண்ணா காலத்திலிருந்தே சந்தித்து வந்திருக்கிறது.

சில பேர் கெடிகாரத்தின் 'பெண்டுலம்' போல; போனால் அந்தப் பக்கம், இல்லாவிட்டால் இந்தப் பக்கம் என்று ஆடிக் கொண் டிருப்பார்கள். நடுவில் ஒரு நிலையில் நிற்க அவர்களால் முடியாது. காரணம்; அவர்கள் அவர்களைப் பற்றியே சிந்திக்கிறார்கள். நாட்டைப் பற்றி, மக்களைப் பற்றி, கழகத்தைப் பற்றிச் சிந்திக்க அவர்களுக்கு நேரம் இருப்பதில்லை. அப்படிப்பட்டவர்கள் நமது கட்டுப்பாட்டுக்குக்கூட அடங்கமாட்டார்கள். அவர்கள் விஷயத்தில் நீயும் சரி; நீ பொறுப்பேற்றிருக்கிற அல்லது அங்கம் வகிக்கிற கழக அமைப்பும் சரி; மிகுந்த எச்சரிக்கையுடனும் கவனத்துடனும் இருந்திடல் வேண்டும்.

இதையெல்லாம் நான் இவ்வளவு வலியுறுத்திக் கூறுவதற்குக் காரணம்; நம்மை, யார் எவ்வளவு இழித்துரைத்தாலும் அதற்குப் பதில் சொல்கிறேன் என்று தரக்குறைவான அரசியலில் இறங்கிவிடக்கூடாது என்பதற்காகத்தான்.

மற்றுமொன்றை மறந்துவிடக் கூடாது. பொதுத் தேர்தல் ஓராண்டுக் காலத்திற்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. நெருக்கடி நிலைமையை ரத்து செய்வதற்கான சூழ்நிலை இன்னும் ஏற்படவில்லை என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. எந்த அமைதியும் ஒழுங்கும் ஏற்பட வேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறதோ,

அதற்குக் குந்தகம் விளைவிக்கிற அளவுக்கு எழுத்தோ - பேச்சோ - செயலோ - எந்தத் தரப்பிலிருந்தும் இருந்திடக்கூடாது என்பதை நான் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கட்சிகளுக்கிடையே கருத்து மாறுபாடுகள் இருக்கலாம். கொள்கை, திட்டங்கள் வேறுபாடுடையவைகளாக இருக்கலாம். ஆனால் அவைகளைச் சட்டத்திற்கு விரோதமாக எடுத்துச் சொல்வது, அல்லது செயல்படுத்துவது என்பது அமைதியைக் குலைத்துவிடக் கூடும்.

எனவேதான் என்னரும் உடன்பிறப்பே! கூட்டம் நடத்துவதற்கான காலம் கனிந்து அனுமதிகள் வழங்கப்பட்டாலும் அந்தக் கூட்டங்களில் அண்ணா காட்டிய அரசியல் பண்பாட்டு வழியைச் சிறிதும் மறவாமல் தமிழகத்தில் அமைதி தொடர்ந்திட - தமிழர்களின் அரசியல் நாகரீகம் அனைத்துலகும் பாராட்டும் வண்ணம் சிறந்திட - உன் பேச்சும் செயலும் இருந்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அன்புள்ள,

மு. க.

08-02-1976

# 162. வீரத்திற்கான விளக்கம்!

உடன்பிறப்பே,

சில ஆண்டுகளுக்கு முன்பு நம்முடைய மறைந்த மாவீரர் மாங்குடி மதியழகன் அவர்கள் முகவை மாவட்டத்தில் முதுகுளத்தூர் பகுதியில் நடத்திய ஒரு கூட்டத்தில் நான் பேசும்போது ஒன்றைக் குறிப்பிட்டேன். வீரம் என்பதற்கு முன்பெல்லாம் ஒருவருக்கொருவர் வாள் கொண்டோ அல்லது தோள் கொண்டோ போரிட்டு வெற்றி பெறுவது அல்லது மரணம் எய்துவது என்று தான் பொருள். ஆனால் இன்றைக்கு வீரத்திற்கு இலக்கணமே மாறிவிட்டது. ஒரு குழந்தை கிணற்றிலோ அல்லது குளத்திலோ தவறி விழுந்துவிட்டதைப் பார்க்கிற ஒருவன், தன் உயிரைத் துச்சமாக மதித்து ஓடிச் சென்று தானும் நீரில் குதித்து அந்தக் குழந்தையைக் காப்பாற்றுவதுதான் வீரம் என்று ஏற்றுக் கொள்ளப்படுகிற காலத்தில் நாம் வாழ்கிறோம்.

ஆகவே வன்முறைகளைக் களைந்துவிட்டு நன்முறைகளைக் கடைப்பிடிக்க நம்மை நாமே அர்ப்பணித்துக் கொள்ளவேண்டும், என்று அன்றைக்கு நான் பேசியதை இன்றைக்கு மீண்டும் நினைவூட்ட விரும்புகிறேன்.

வன்முறை என்பது இருபுறமும் கூர்மையுள்ள ஒரு கத்தி-அது தாக்கியவனையே திரும்பத் தாக்கும் என்று அறிஞர் அண்ணா அவர்கள் அடிக்கடி நமக்கு எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

அந்தப் பொன்மொழி என் இதயத்தில் ஆழமாகப் பதிந்திருக்கிற காரணத்தால்தான் அமைதி! அமைதி!! தமிழகத்தில் நிலவுகிற அமைதி-தொடர்ந்து நீடிக்க வேண்டும்; அதற்கு அனைவரும் ஒத்துழைக்கவேண்டும் என்று திரும்பத் திரும்ப வேண்டுகோள் விடுத்தவண்ணமிருக்கிறேன்.

உன்னைப் போன்ற உடன்பிறப்புக்கள் என்னைச் சந்திக்கும் போது கண் கலங்கியவாறு மாலை நேரத்து ஏடுகள் சிலவற்றில் எழுதப்படுகிற அவதூறுகளை எடுத்துக்கூறி, இதற்கெல்லாம்

வழியே கிடையாதா என்று கேட்கிறார்கள். அவர்களுக்கும் நான் இதைத்தான் சொல்கிறேன்; அமைதியாக இருங்கள் என்று!

நம்மைப்பற்றி நரகல் நடையில் பேசுகிறவர்களும் எழுதுகிறவர்களும் இன்று நேற்றா அந்த வேலையைத் தொடங்கியிருக்கிறார்கள்! எத்தனையோ ஆண்டுகாலமாக இந்த அநாகரீக அர்ச்சனை, காலையிலும் மாலையிலும் கண்ட கண்ட இடங்களிலும் ஒரு சிலரால் நடத்தப்பட்டுத்தான் வருகிறது.

நேற்றுகூட ஒருவர் ஒரு ரசிகர் மன்றத்தின் சார்பாக அறிக்கை விட்டிருக்கிறார். அண்ணா சாலையில் இருக்கிற என் சிலையைச் சுற்றிக் குற்றவாளிக் கூண்டு ஒன்றை அமைக்க வேண்டும் என்பது அந்த உத்தமபுத்திரரின் ஆலோசனையாகும். அப்படிச் செய்தால் அதைக்கூட நான் வரவேற்கிறவன்தான்.

உடன்பிறப்பே! இந்த ஆலோசனையைச் சொல்லியிருக்கிற அருமை நண்பர் சின்னஅண்ணாமலை பற்றிய வரலாறு நாடறிந்த ஒன்றாகும்.

கவிஞர் நாமக்கல் ராமலிங்கனாருக்கு நிதி திரட்டுவதாகச் சொல்லி அவருக்கு நாமம் போட்ட நல்லவர்தான் இன்றைக்குக் களங்கமற்ற காந்தீயவாதிபோல நடிக்கத் தொடங்கியிருக்கிறார்.

உலகில் இன்றைக்கு உண்மையான காந்தீயவாதிகள் யார் என்ற கணக்கு, சில பேருக்காவது தெரிந்துதான் இருக்கிறது. சிலை உடைக்கப் புறப்பட்டிருப்பவர்கள் விடுகின்ற அறிக்கைகளைப் பார்த்து நீயும் மற்றவர்களும் மனம் குமுறலாம். எனக்கு அதனால் எந்தவிதக் கிலேசமும் இல்லை. என்னைப்போலவே நீயும் கவலைப் படாமல் இருக்க வேண்டுமென்பதே என் பிரார்த்தனையாகும்.

சிலை உடைப்பதில் வீரம் எதுவுமில்லை. அதைப் பார்த்து உன்னைப் போன்றவர்கள் தாங்கிக்கொண்டிருப்பதற்குப் பெயர் தான் உண்மையான வீரம்.

உடன்பிறப்பே! வீரத்திற்கான விளக்கத்தைக் கடிதத்தின் தொடக்கத்திலேயே குறிப்பிட்டிருக்கிறேன். அதனை மறந்து விடாமல் அமைதியாகச் செயலாற்றிட வேண்டுகிறேன் உன்னை!

அன்புள்ள,

**மு. க.**

09-02-1976

## 163. இதய வாழ்த்து எது?

**உடன்பிறப்பே,**

இன்றைய கடிதத்தில் சில விஷயங்களைக் குறிப்பிட விரும்புகிறேன். அவைகள் எனக்கும் உனக்கும் மன ஆறுதலை வழங்குமென்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

பதவியிலிருக்கும் போது என்னைப் பார்ப்பதற்கு அடிக்கடி வருவார் ஒரு பழைய நண்பர். பரிந்துரைக் கடிதங்கள் சுமைசுமை யாக இருக்கும். என் உடன்பிறப்பான நீ கூடக் கீழே காத்திருப்பாய்; ஆனால் அந்தக் கவிதா நண்பருக்கு முன்னறிவிப்போ, அல்லது நிகழ்ச்சி நிரலோ இல்லாமலே பேட்டிக்கு வாய்ப்புக் கிடைக்கும்.

வருவார். நிறையச் சிபாரிசுக் கடிதங்களைத் தருவார்.

அவைகளில் முறையானவை ஒன்றிரண்டுதான் இருக்கும். அவைகளைக் கவனிக்குமாறும், நியாயமிருந்தால் செய்யுமாறும் செயலாளர்களுக்குத் தெரிவிப்பேன்.

நான் ஆட்சிப் பொறுப்பில் இருந்த காலத்தில் அவர் என்னைப் பற்றி எழுதிய கட்டுரைகள், தீட்டிய கவிதைகள்-ஆற்றிய உரைகள்; அம்மவோ! எண்ணிலடங்கா!

நானே தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு மேடையிலே உட்கார்ந்திருக்கிற அளவுக்கு அவ்வளவு பாராட்டு மொழிகள்.

அவர் வீட்டு நிகழ்ச்சியானாலும், ஓட்டல் திறப்பு விழாவா னாலும்-என் கைராசிக்காகவே என்னை அழைத்ததாகக் கூறுவார்.

எதிரில் இருக்கும் மக்களும் மகிழ்ச்சி ஆரவாரம் செய்வர்.

ஆனால் நான் அப்போதும் எண்ணிக் கொள்வேன்-"இவர் அண்ணாவைப் புகழாத வார்த்தைகளா? பிறகு அதே அண்ணா சிலையைச் சுற்றி கறுப்பு முக்காட்டு ஊர்வலம் நடத்தாத காட்சியா? பிறகு அதே அண்ணாவைப் பற்றிப் பாராட்டிக் கூறாத சொற்களா?

இன்று நம்மை பாராட்டுகிறார்-நம்மிடம் காரியம் முடிந்ததும் நரகல் நடையழகராக மாறத்தான் போகிறார்”-என்று! நான் அன்று எண்ணியது தவறாகவில்லை.

பதவிக்காலம் முடிவதற்கு மூன்று நான்கு மாதங்களுக்கு முன்பே, வாழ்த்தும் நாக்கினைக் கழற்றி வைத்துவிட்டு வசைபாடும் நாக்கினை எடுத்து வைத்துக் கொண்டார். அவரது அர்ச்சனை தொடர்கிறது.

நேற்றைய தினம் ஒன்றை எழுதியிருக்கிறார்:

“நண்பர் என்ற முறையில் கருணாநிதியிடம் எனக்கு அன்பு உண்டு. அவர் பிறந்த நாளில் எல்லாம் நான் வாழ்த்துக் கூறியிருக்கிறேன். அடுத்து வரும் பிறந்த நாளிலும் வாழ்த்துக் கூறுவேன்.”

-இது அவரது வாசகம்.

வேண்டாம் அந்த வாழ்த்து வேண்டாம் எனக்கு!

இவரைப் போன்ற நண்பர்களின் வாழ்த்து எனக்கு வேண்டாம் அய்யா; வேண்டவே வேண்டாம்!

என்னை வாழ்த்தப் பரனூரிலும் மேலும் பத்து இடங்களிலும் தொழுநோய்ப் பிச்சைக்காரர்கள் விடுதிகள் இருக்கின்றன. அங்கே யிருக்கின்ற என் தெய்வங்கள் என்னை வாழ்த்துவார்கள்.

அவர்களைப் போலவே நல்ல மனத்துடன் வாழ்த்தக்கூடிய மனிதர்கள் தமிழ் நாட்டில் பலர் இருக்கிறார்கள். அந்த வாழ்த்துக்களே எனக்கு இன்பம் வழங்கும்.

அன்புள்ள,

மு. க.

11-02-1976

## 164. அமைதிக்கு அழிவில்லை!

**உடன்பிறப்பே,**

கழகத்தினரை "ஆடுகள்" என்றும் அறிஞர் அண்ணா அவர்களை "மேய்ப்பன்" என்றும் "ஏய்ப்பவன்" என்றும் சிலர் கடுமையாக விமர்சித்து எழுதியபோது அதனைக் குறிப்பிட்டு எழுதிய அண்ணா அவர்கள், பின்வரும் வாசகங்களைத் தீட்டினார்கள்.

"என் கடமை, விளக்கம் அளிப்பது. அடக்க முடியாத வெறுப்புக் கொண்டவர்களை அடியோடு மாற்றுவதல்ல, அது இயலாத ஒன்று.

என் வேலை என்னிடம் நீங்காத பற்றுக் கொண்ட உற்ற நண்பர்களுக்கு என் கருத்தை விளக்குவது.

நண்பர்களுக்கு இந்த விளக்கம்! வெறும் நாப்பறையாளர்கள் கிளப்பிடும் ஓசைக்கு இது, பதில் அல்ல!"

அண்ணாவின் இந்த மொழிகள் என் காதுகளில் ஒலிப்பது மட்டுமல்ல, கண் எதிரே ஓவியமாகவும் காட்சி தருகின்றன.

நாவலர் குறிப்பிட்டது போலத் தாமரைக் குளத்தில் மீன் கொத்திக் கொண்டிருந்த பறவைகளைப் போன்ற சிலர் பறந்து போகக்கூடும். கழகத்தின் நாடி நரம்புகளான உயிர்த் தொண்டர்கள்; கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுணர்வுடன் அமைதியான முறையில் கழகத்தை நடத்திச் சென்றிடும் பக்குவத்தைப் பெற்றுத் திகழ்வது காண, நான் பூரிப்படைகிறேன்.

தமிழகத்திலேயிருந்து சில நண்பர்கள் 1972-ஆம் ஆண்டு மத்திய அரசிடம் கொண்டு போய்க் கொடுத்த புகார்களின் அடிப்படையில் உண்மையை அறிய மத்திய அரசு ஒரு விசாரணைக் கமிஷனை அமைத்திருக்கிறது. அதில் விளக்கம்

தருவதற்கு முறையாக வாய்ப்புக் கிடைக்கும் என்பதால் நான் அதனை வரவேற்றிருக்கிறேன். விசாரணைக் கமிஷன் அமைந்த பிறகு-நான் அங்கே சொல்லாமல்-புகார்களுக்கான பதில்களை இப்போது சொல்வது முறையல்ல!

கவலை கொள்ளாமல் அமைதியாக இரு!

அமைதிக்கு என்றுமே அழிவில்லை.

அன்புள்ள,

மு. க.

12-02-1976

# 165. பலிக்காத கனவு!

**உடன்பிறப்பே,**

“கருணாநிதி, இப்போது அனுபவிப்பதற்குப் பெயர்தான் நரகம்” என்று நண்பர் எம். ஜி. ராமச்சந்திரன் அவர்கள் திருச்சியில் ஒரு திருமண விழாவில் “மங்கல வாழ்த்து” கூறியிருக்கிறார்.

நான் அனுபவித்துக் கொண்டிருந்த நரக வேதனை 1972-ஆம் ஆண்டு அக்டோபர் திங்களுடன் பெரும்பாலும் விலகிவிட்டது. அதற்குப் பிறகு மிச்சமிருந்த வேதனையும் கொஞ்சம் கொஞ்சமாக மறைந்துவிட்டது. இன்னும் ஏதாவது ஒட்டிக்கொண்டிருந்தால் அந்த நரக வேதனையும் தானாகவே என்னைவிட்டு நீங்கிவிடும் என்ற மகிழ்ச்சியில் தான் நான் இப்போது இருக்கிறேன். திருச்சியில் மங்கல வாழ்த்துப் பாடிய என் பழைய நண்பருக்கு எவ்வளவு பரந்த உள்ளம் பார்த்தாயா?

*　　*　　*

“திருச்சியில் அவர் நிருபர்கள் கூட்டத்தில் பேசும்போது; ‘தி. மு. க. தலைவர்கள் எல்லாம் அவர் கட்சியில் சேருவதற்கு முன் வந்தால், முதலில் அவர்கள் மீது விசாரணை நடத்திவிட்டுத்தான் பிறகு சேர்த்துக்கொள்ள முடியும்” என்று குறிப்பிட்டிருக்கிறார். இதை 1972-ஆம் ஆண்டு முதல் சொல்லிக்கொண்டே வருகிறார். எப்போது அந்த விசாரணை நடக்கப்போகிறது என்றுதான் தெரியவில்லை. முதலில் அவரே தன்னை விசாரணைக்கு உட்படுத்திக் கொண்டு, அந்த அக்கினிப் பரிட்சையிலிருந்து வெளிவந்தால் நாடும் ஏடும் அவரைப் போற்றிப் புகழும். ஏனெனில் எதிர்கால முதலமைச்சராக விரும்பும் என் பழைய நண்பர் எம். ஜி. ஆர்., ஊருக்கெல்லாம் சொல்வதைத் தன் சொந்த விஷயத்தில் நடத்திக் காட்டினால் அது மற்றவர்களுக்கும் வழிகாட்டக்கூடியதாக இருக்குமல்லவா?

*　　*　　*

தி. மு. க. பொதுக்குழு கூடி ஒரு தீர்மானம் போட்டு எம். ஜி. ஆரின் கட்சியில் சேர முன்வந்தால், உடனே அவர் கட்சியின் பொதுக்குழு கூடி அதனை ஏற்றுக்கொள்ளுமாம் இதுவும் அவர் திருச்சியில் கூறியதுதான்.

உடன்பிறப்பே, நண்பர் எம். ஜி. ஆர். அவர்கள் ஒரு படத்தைப் பனிரெண்டாயிரம் அடிகள் எடுத்து விட்டுப் போட்டுப் பார்த்து படம் திருப்தியாக இல்லாவிட்டால், உடனே இரண்டு கனவுக் காட்சிகளை இணைத்துப் படத்தை எப்படியாவது வெற்றிகரமாக்குவதில் சாமர்த்தியசாலி. கழகத்தின் பொதுக்குழுவில் அவர் நினைப்பது போல ஒரு தீர்மானம் போடப்படுவதாகக் கனவு காண்கிறார். அவர் கனவுகள் வெற்றி பெறுவது பட உலகில்! அதில் எனக்கு நம்பிக்கையுண்டு! ஆனால் அண்ணா உருவாக்கிய இந்த அரசியல் இயக்கத்தில், தந்தை பெரியார் உருவாக்கிய இந்தத் தன்மான இயக்கத்தில் என் பழைய நண்பரின் கனவுக் காட்சிகள் எடுபடாது! நிச்சயம் எடுபடாது! எடுபிடிகள் சில கிடைக்கலாம். ஏற்கனவே கிடைத்திருக்கின்றன. அத்துடன் அவர் திருப்தியடைய வேண்டுமே யல்லாமல், தலைதாழாத் தன்மானச் சிங்கங்களிடம் அவர் 'கைவரிசை' காட்டிப் பயனில்லை.

"அண்ணா! அண்ணா!" என்றே ஒலித்துக்கொண்டு பிரியும் இந்த உயிர்கள்! யாருக்கும் மண்டியிட்டு வாழாத மரபு இந்த மரபு!

உடன்பிறப்பே! அந்த உறுதியுடன் பணியாற்றுவோம் தொடர்ந்து!

அன்புள்ள,

**மு. க.**

15-02-1976

# 166. கவிதையில் ஒரு மடல்!

உடன்பிறப்பே! ஒன்று சொல்வேன் நினைவில் வைக்க!
கடன்பட்டோம் எந்நாளும் நாடு காக்க–இதில்
முரண்பட்டோர்க்கில்லை இக் கழகத்தில் வேலை.
இடம் பிடித்து வாழ்ந்தவர்கள் எங்கோ செல்வர்
தடம் புரளாச் சோதரர்கள் ஒன்றாய் நிற்பர்

□ □ □

இந்திய மண்ணுக்கோர் தீமை
எங்கிருந்து வந்தாலும், உடன்
விந்திய இமயம் போல்
வீரத்தோள் உயர்த்தி வெல்வோம்.
தீங்கொன்று நாட்டுக் கெனிலோ
தி. மு. க. துள்ளி எழும் – தன்
தீர்மானம், கோரிக்கை அக்கணமே தள்ளிவைத்து
மண்மானம் காப்பதற்கு மார்தட்ட மறக்க மாட்டோம்.

□ □ □

நம் கழக வரலாற்றுச் சான்று இது;
நான் ஏதோ புதிதாக இன்றைக்குச் சொல்லவில்லை–
நம் கடமை என்றென்றும் நாட்டுத் தொண்டு–
நலமாக மக்கள் வாழ அமைதி காப்போம்
நன்னெறிகள் நிலைப்பதற்கு வழி வகுப்போம்.

அன்புள்ள

**மு. க.**

16-02-1976

# 167. நேற்றைய மடலுக்கு விளக்கம்!

**உடன்பிறப்பே,**

ஒவ்வொரு கட்சிக்கும் கொள்கை குறிக்கோள் என்பவை அந்தக் கட்சியின் கொள்கை விளக்க, சட்டதிட்ட ஏடுகளில் தீட்டப் பெற்று அந்தக் கட்சி அமைப்புக்களின் அலுவலகங்களிலும், உறுப்பினர்கள், நிர்வாகிகளிடமும் அவை அளிக்கப்பட்டிருக்கும்.

காங்கிரஸ், கம்யூனிஸ்டு போன்ற இயக்கங்களில் இருப்பது போலவே நமது கழகத்திற்கும் சட்டதிட்டங்கள் உண்டு. கொள்கை கோட்பாடுகள் உண்டு.

இந்தியாவில் உள்ள கட்சிகளில் சில தங்களுக்கென மையக் கொள்கைகளைக் கொண்டவைகளாக இருந்தாலும், காலச் சுழலுக்கு ஏற்ப, அவைகளில் மாற்றங்களையும் திருத்தங்களையும் ஏற்றுக் கொண்டிருக்கின்றன.

பல ஆண்டுகாலமாக நமது திராவிடர் இயக்கம் மூல முழக்கமாகக் கொண்டிருந்த தனிப்பெருங் கொள்கையை பேரறிஞர் அண்ணா அவர்கள் 1963-ஆம் ஆண்டு பொதுக் குழுவைக் கூட்டி விவாதித்து, கழகத்தின் சட்ட திட்டப் புத்தகத்தில் இரண்டாவது விதியைத் திருத்தி-மனப்பூர்வமாகக் கழக சார்பில் அறிவித்தார்கள்; அந்தக் கொள்கையைக் கைவிட்டுவிட்டதாக!

உடன் பிறப்பே! ஊரில் சில பேர் இருக்கிறார்கள் - அவர் களுக்கு; கொள்கைக்கும் கோரிக்கைக்கும் உள்ள வித்தியாசம் தெரிவதில்லை. குறிக்கோளுக்கும் தீர்மானத்திற்கும் உள்ள வேறுபாடு புரிவதில்லை.

நான் நேற்று எழுதிய மடலில்; நாட்டுக்குத் தீங்கொன்று வருமேயானால்; நமது தீர்மானம் கோரிக்கைகளைக்கூட ஒத்திவைத்துவிட்டு ஒரே அணியில் நிற்போம் என்ற கருத்தைக் குறிப்பிட்டிருந்தேன்.

நாட்டின் பாதுகாப்புக்கு ஊனம் ஏற்படும் என்று கண்டாலோ; அல்லது மக்களுக்குத் தீங்கு விளையும் என்று கண்டாலோ; அந்தக் கொள்கையின் மீது நாம் பிடிவாதமாக இருக்கமாட்டோம் என்பதற்குச் சான்றுதான் 1963-ஆம் ஆண்டில் நாம் எடுத்த முடிவாகும்.

கொள்கை குறிக்கோளுக்கும், தீர்மானம் கோரிக்கை என்ப தற்கும் உள்ள வேறுபாடு என்ன? அதனை விளக்க விரும்புகிறேன்;

ஒரு தொழிற்சங்கம் இருப்பதாக வைத்துக் கொள்வோம். அந்தத் தொழிற்சங்கத்தின் கொள்கை குறிக்கோள்; வர்க்க பேத மற்ற சமுதாயம் அமைத்தல், பொதுவுடமை உருவாக உழைத்தல் என்பவைகளாக இருக்கும்.

அந்தத் தொழிற்சங்கம், தொழிலாளிகளுக்கு ஊதிய உயர்வு கேட்டு ஆலை அதிபரிடம் ஒரு முறையீட்டை வைத்தால் அதற்குப் பெயர் கோரிக்கை.

அந்தத் தொழிற்சங்கம், தன் பிரதிநிதிகளைக்கொண்டு ஒரு கூட்டத்தையோ, மாநாட்டையோ நடத்தி, "தொழிலாளர்களுக்கு ஆலை அதிபர் உடனடியாக வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் "காலனி" ஒன்றை அமைத்துத் தருமாறு இச்சங்கம் வலியுறுத்துகிறது" என்று நிறைவேற்றுவதற்குப் பெயர் தீர்மானம்.

கோரிக்கையையும் கொள்கையையும் - தீர்மானத்தையும் குறிக்கோளையும் போட்டுக் குழப்பிக்கொள்ளக் கூடாது.

நிலைமைக்கேற்ப - தேவைக்கேற்ப கோரிக்கைகள் தீர்மானங் களாகவும் வடிவம் எடுக்கலாம். அதைப் போலவே நிலைமைக்கேற்ப அவைகளைத் தள்ளிவைக்கவும், மாற்றி அமைக்கவும் கூடும்.

உடன்பிறப்பே! நமது மண்ணின் சுதந்திரத்தைக் காப்பதில் நாம் நமக்கிடையே உள்ள கருத்து வேறுபாடுகளையும் மறந்து ஒத்துழைப்போம் என்று உறுதிபூணுவதும், அப்படி ஒத்துழைத் தமைக்கு வரலாறு உண்டு என்று எடுத்துக் காட்டுவதும்தான் நேற்று நான் எழுதிய கடிதத்தின் நோக்கமாகும்.

அன்புள்ள,

**மு. க.**

17-02-1976

# 168. "இலக்கியச் சந்தைக்கு ஏதுவோம் வாரீர்!"

**உடன்பிறப்பே,**

இரண்டு நாட்களுக்கு முன்பு வீட்டிலிருந்து வெளியே புறப்பட்டுக் கொண்டிருந்தேன். மாங்கனி சுருங்கியது போன்ற மேனிபடைத்த முதியவர் ஒருவர், நடுங்கும் கரங்களோடு என்னைக் கட்டி அணைத்துக்கொண்டு வாழ்த்து மாரி பொழிந்தார். அவர் கண்கள் நீர் முத்துமாலைகளை அணிந்து கொண்டிருந்தன. அவர் யார் என்று சொன்னால் உன்னால் புரிந்துகொள்ள முடியாது. பேரளம் மகாதேவ முதலியார் என்பது அவர் பெயர். முதலியார் பட்டத்தை அவர் தன் பெயருடன் இணைத்துக் கொள்வது கிடையாது. ஆரம்பகாலச் சுயமரியாதைக்காரர்-நான் பள்ளி மாணவனாக இருந்தபோது என்னை அழைத்துப் பேரளத்தில் கூட்டங்கள் நடத்தியிருக்கிறார்.

தஞ்சைத் தரணியில் எழில் மிகுந்த ஊர்களில் ஒன்று தான் பேரளம். சுயமரியாதைப் பிரச்சாரத்தை வெற்றிகரமாக நடத்திய அந்தப் பெரியவர், தந்தை பெரியாரின் அன்புக்கும், அறிஞர் அண்ணாவின் மரியாதைக்கும் உரியவராவார்.

அவருடைய தழுதழுத்த குரல், என் நெஞ்சுக்கு இதமாக இருந்தது. பலஹீனமடைந்துவிட்ட அந்த உடலின் அரவணைப்பில் எனக்குச் சிறிது நேரம் ஏற்பட்ட அந்தச் சுகம், புதிய தெம்பினை ஊட்டியது.

இப்படிப்பட்ட முதிர்ச்சியடைந்த உறுதியான வயோதிக வைர நெஞ்சர்களும் இருக்கிறார்களே என எண்ணி ஆறுதல் கொண்டேன். பிறகு, அவரை நானே என் காரில் அழைத்துக் கொண்டுபோய் அவர் வீட்டில் விட்டுச்சென்றேன்.

அந்தத் தள்ளாத நிலையில் அவரே அவ்வளவு தொலைவு நடந்தே என் வீட்டுக்கு வந்திருக்கிறார். அவர் என்னைப் பரிவோடு

வாழ்த்தியபோது பாசஉணர்வு பீறிட ஒன்றைச் சொன்னார்; "நாலடியார் கூறுவதுபோல யானையின் நட்பு கூடாது. நாயின் நட்புதான் சிறந்தது" என்று!

அவர் கூறிய வாசகத்தை நினைவில் அசை போட்டுக் கொண்டே இருந்த நான், அதற்குரிய நாலடியார் பாடலைத் தேடினேன். கிடைத்தது. அதுமட்டுமல்ல; வேறு சில பாடல்களும் கிடைத்தன.

*"யானை அனையவர் நண்பொரீஇ நாயனையார்*
*கேண்மை கெழீஇக் கொளல்வேண்டும்-யானை*
*அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும், எறிந்தவேல்*
*மெய்யதா வால்குழைக்கும் நாய்."*

யானை, பலகாலம் பழகினாலும்கூட என்றைக்காவது ஒரு நாள் பழகியதை மறந்து-தன்னைப் பாதுகாத்து உணவு கொடுத்து வளர்த்த பாகனையே கொன்று விடும். நாய் அப்படியல்ல, தன்னை வளர்த்தவன் தன்மீது வேலை எறிந்து குத்திவிட்டாலும், அந்த வேல் அதன் உடலில் தைத்திருக்கும்போதே அவனுக்கு நேராக அன்பின் அறிகுறியாக வாலை வளைத்து ஆட்டிக்கொண்டிருக்கும், என்பது அந்தப் பாடலுக்குப் பொருள்.

அடடா! பெரியவர் நீண்ட காலத்துக்குப் பிறகு என்னை சந்தித்தாலும் கூட எவ்வளவு பெரிய உருக்கமிகு உண்மையை எனக்கு உணர்த்தி விட்டுச் சென்றுள்ளார் என்பதை எண்ணிடும்போது பெருமூச்சு வெளிப்படுகிறது.

நட்பின் இலக்கணம் பற்றிப் பழந்தமிழ்ப் புலவர் பெருமக்கள் எத்துணைக் கருத்துக்களை வாரி வழங்கியிருக்கின்றனர். நட்பின் சிறப்புக்கு ஒரு தனி நாகரீகமே வகுத்துக் காட்டுகிறது நாலடியார். ஒருவரை நண்பராக ஆக்கிக்கொண்ட பிறகு, அவர் நட்புக்கு ஏற்றவரல்ல எனத் தெரிந்து விட்டால் எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்பதையும், பின்வரும் நாலடியார் பாடல் விளக்குகிறது.

*"தமரென்று தாம்கொள்ளப் பட்டவர் தம்மைத்*
*தமரன்மை தாமறிந்தார் ஆயின் அவரைத்*
*தமரினும் நன்கு மதித்துத் தமரன்மை*
*தம்முள் அடக்கிக் கொளல்"*

நண்பராக ஒருவர் ஆனபிறகு, அவர் நட்புக்கு ஏற்ற பண்புடையவர் அல்லர் என்று விளங்குகிறது. அதற்காக அவரை உடன் விலக்கிவிடாமல் அவரைத் தமது உண்மையான நண்பரைவிட மேலாக மதித்து, அவர் நட்புக்குத் தகுதியுடையவரல்ல என்பதைப் பிறர் அறியாமல் மறைத்து தனக்குத்தானே உண்மையை அடக்கிக் கொள்வர்; என்பது இந்தப் பாடலின் விளக்கவுரையாகும்.

உடன்பிறப்பே, இலக்கியம் எவ்வளவு பொருள் பொதிந்த புதையலாக இருக்கிறது பார்த்தாயா?

"இலக்கியச் சந்தைக்கு ஏகுவோம் வாரீர்!" என்று இசைச்சித்தர் ஒரு இனிய பாடலை இசைத்துக் கேட்டிருக்கிறாய் அல்லவா? அது எவ்வளவு இன்பமானது!

அன்புள்ள,

**மு. க.**

20-02-1976

## 169. நான் வருவதன் நோக்கம்!

**உடன்பிறப்பே,**

உன்னைக் காண்பதற்கும் குடும்பத்தினரை சந்திப்பதற்கும் நாளை புறப்படுவதாக இருந்தேன், இயலவில்லை. வரும் 24-ஆம் நாள் செவ்வாய்க்கிழமை அல்லது 25-ஆம் நாள் புதன்கிழமை புறப்படுவதாக இருக்கிறேன்.

மாலை, ஒலி பெருக்கி மேடை, வரவேற்பு வளைவு-இவை போன்ற எதுவும் இருக்கக்கூடாது.

ஒலி முழக்கமோ, ஆரவாரமோ - அறவே இருந்திடலாகாது.

நான் வரப்போகிறேன் என்பதற்கான துண்டு அறிக்கை விளம்பரங்களோ, சுவர் எழுத்து விளம்பரங்களோ, தட்டிகள் கட்டிடும் விளம்பரங்களோ - நிச்சயம் கூடாது! அவைகளையும் தவிர்க்கவேண்டும்.

நான், உன் ஊருக்கு வரும்போது பயணிகள் விடுதி கிடைத்தால் அங்கு தங்குவேன். அவைகள் கிடைப்பது கஷ்டமாக இருந்தால் ஏதாவது ஓட்டல் அறைகள். அதுவுமற்ற இடங்களில் இருக்கவே இருக்கிறது எப்போதும்போல் உன் இல்லம். உள்ளத்திலேயே இடம் கொடுத்திருக்கிற நீ, சற்று நேரம் தங்கிச் செல்வதற்கு இல்லத்திலா இடம் தராமல் போய்விடுவாய்!

சில இடங்களில் உன் அரிய முயற்சியினால், அயரா உழைப்பினால் கழகத்திற்கென கட்டி வைத்திருக்கிற அலுவலகக் கட்டிடங்களை இந்தச் சமயத்தில் நான் பயன்படுத்திக்கொள்ளும் போது, எனக்கு எவ்வளவு மகிழ்ச்சி ஏற்படும் தெரியுமா?

உன்னிடம் பேசவும், கழகத்துப் பணிகளை நீ எவ்வாறு அமைதியுடன் ஆற்றிட வேண்டும் என்று எடுத்துக் கூறிடவும்தான்

உன்னைக் காண வருகிறேனேயல்லாமல் கூட்டம் பேசுவதற்கு அல்லவே அல்ல!

உன் திருமுகம் காணத்தான் வருகிறேனே யல்லாமல் திரளான மக்கள் சூழ் கூட்டங்களில் கலந்துகொள்வதற்கு அல்ல!

இதனை உணர்ந்து, நான் கேட்டுக்கொண்டுள்ளவாறு நடந்துகொள்வாய் என நம்புகிறேன்.

அன்புள்ள,

**மு. க.**

22-02-1976

# 170. அண்ணனைக் காணுகிறேன் - அந்தப் பாடல் வரிகளிலே!

**உடன்பிறப்பே,**

கணியன் பூங்குன்றனார் சங்ககாலத் தமிழ்ப் புலவர். இன்றைய இராமநாதபுரம் கோட்டத்து எல்லைக்குள் இருந்த பூங்குன்றம் என்னும் ஊரில் பிறந்தவர். அவர் எழுதிப் புறநானூறு பாடல்களில் இடம் பெற்றுள்ள "யாதும் ஊரே; யாவரும் கேளிர்" என்ற புகழ்மிக்க பாடலை, சில மாதங்களுக்கு முன்பு, அவர் வாழ்ந்த ஊரில் கல்லிலே செதுக்கி என்றும் அழியாதவாறு நிலைநிறுத்திய நிகழ்ச்சியை, நீ மறந்திருக்க மாட்டாய். தமிழ்ப்பெரும் புலவர்களும், சான்றோர்களும் அந்த விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர். கணியன்பூங்குன்றனார் எழுதிய பாடல்களிலேயே மிகச் சிறந்தது இதுவெனலாம். எவ்வளவு பரந்த உள்ளம்! எத்துணை விரிவான எண்ணம்!

*"யாதும் ஊரே! யாவரும் கேளிர்!"*

எவ்வூராயினும் அஃது எமது ஊரேயாகும்! யாராயினும் அவர் எம் உறவினரே! மக்கள் இனம் முழுமைக்குமே சொந்தம் கொண்டாடுகிறார்.

உலகப் பரப்பு முழுமையும் மனிதனுக்கே உரியது என எண்ணிடும்போது வேற்றுமைகளுக்கு இடமில்லை அல்லவா? எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன்பு ஒரு தமிழ்ப் புலவனின் இதயம் ஒலித்த "உலகம் ஒன்று! அனைவரும் உறவினர்!" என்ற கொள்கை முழக்கமல்லவோ அது?

குடும்பங்களுக்கு வீடுகள்.

வீடுகளுக்கு ஊர்கள்.

ஊர்களுக்கு நாடுகள்.

நாடுகளுக்கு உலகம்.

என்றிருந்தாலும்-என்றிருப்பதைத் தவிர்க்க முடியாவிட்டாலும், குடும்பத்துக் கண்களால் உலகத்தைப் பார்க்காமல் உலகக் கண்ணோட்டத்தில் அனைத்தையும் பார்க்க வேண்டுமென்பதுதானே பூங்குன்றனாரின் பொன் மொழி.

பல குடும்பத்தினர் சேர்ந்து ஊரார்.

பல ஊரார் சேர்ந்து ஒரு நாட்டார்.

பல நாட்டார் சேர்ந்து உலகத்தார்.

என்றுள்ளதையும் தவிர்க்க முடியாதெனினும், ஊராருக்குள்ளே உலகத்தார் இருக்கிறார்கள் என்று வாதிடாமல், உலகத்தாருக்குள்ளேதான் ஊரார் இருக்கிறார்கள் என்ற உள்ளத் தெளிவைப் பெற்றிடவேண்டும். அதை விளக்கும் பாடலே;

*“யாதும் ஊரே, யாவரும் கேளிர்”*

என்பதாகும்.

அதே பாடலின் அடுத்த வரிகள் என்ன சொல்லுகின்றன?

*“தீதும் நன்றும் பிறர்தர வாரா;*
*நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன”*

தீமையாயினும் நன்மையாயினும் துன்பமாயினும் அதனைத் தணித்தலாயினும் பிறர் அளித்து வருவதல்ல, நம்மாலேயே விளைவதாகும்; என்று பொருள்!

“நமக்கு யாரும் கேடு செய்திட முடியாது. நமக்கு நாமே கேட்டினைத் தேடிக்கொண்டால் தவிர, பிறர் எவரும் நமக்குக் கேடு விளைவித்திடமாட்டார்கள்” என்று நமது அண்ணன் பலமுறை கூறியிருப்பதை இந்தப் புறநானூறு பாடலுடன் இணைத்துப் பார்க்கிறேன்.

பூங்குன்றனாரின் தமிழையல்லவா அண்ணா அன்றைக்கே பொழிந்திருக்கிறார்!

புலவர் பெருமான், ‘வாழ்வு-சாவு’ என்பதற்கு வடித்துத் தரும் கவிதை வரியைப் படித்துப்பார்.

*“சாதலும் புதுவது அன்றே; வாழ்தல்*
*இனிது என மகிழ்ந்தன்றும் இலமே; முனிவின்*
*இன்னாது என்றலும் இலமே”*

சாவது என்பது இவ்வுலகில் புதிய செய்தியன்று. வாழ்வதுதான் இனிமையானது என மகிழ்ச்சியில் திளைத்துக் கிடப்பதும், வாழ்வை வெறுத்து அதனைத் துன்பம் நிறைந்தது என்று ஒதுக்குதலும் நன்றல்ல என்பது இதற்குப் பொருளாகும்.

வாழ்வை வெறுப்பதும் கூடாது. அதே நேரத்தில் சாவு என்னும் ஒரு நிகழ்ச்சி நம் வாழ்வில் நுழையும்போது அதனை ஏதோ புதுமையானதாகக் கருதி அஞ்சி நடுங்கவும் கூடாது.

“இருப்பது ஒரு உயிர்தான்! அது போகப் போவதும் ஒரு தடவைதான்!”

இந்த வீர மொழிகளை, நமது அண்ணன் எத்தனை முறை அழுத்தம் திருத்தமாகக் கூறியிருக்கிறார்.

உடல் நலிவோடு வாடிக்கொண்டிருந்தபோது, மருத்துவர் தடுத்தும் கேளாமல் தமிழ்நாடு பெயர்சூட்டு விழாவுக்கு அவர் வந்தபோது அதைத்தானே சொன்னார்.

“இருப்பது ஒரு உயிர்தான்! அது போகப் போவதும் ஒரு தடவைதான்! அது நல்ல காரியத்திற்காகப் போகட்டும்!”

-இந்த மணிவாசகத்தைத்தானே அன்றைக்கு அந்த விழா மண்டபத்தில் நம் இதயத்தில் ஆழப் பதியவைத்தார்.

இலக்கியங்களில் ஊறித் திளைத்த காரணத்தினால்தான், நமது அண்ணனின் சொற்பொழிவாயினும், எழுத்தாயினும், உரையாடலாயினும் - அங்கெல்லாம் விரிந்து பரந்த கருத்துக்கள் கோலோச்சியதை நம்மால் உணர முடிந்தது. அந்த அமைதி உள்ளத்தில் யாராலும் அசைக்க முடியாத உறுதி இருந்ததை அறிய முடிந்தது.

வேடனிடமிருந்து தப்பித்தோம் பிழைத்தோம் என்று ஓடிவிடும் மானைப்போல ஓடிவிடலாமா என்று ஒருவன் எண்ணுகிறானாம். ஆனால் பலரோடு கூடி வாழும் வாழ்க்கை அவன் காலைத் தளையிட்டுத் தடுத்துவிடுகிறதாம். ஆம்; அவன் - அவனுக்காக வாழவில்லை. அவனுடன் கூடியிருப்போர்க்காக வாழ்கிறான்!

# 171. அனுபவத்தில் உணர்ந்தது!

**உடன்பிறப்பே,**

தி. மு. கழகம் என்பது ஒன்பதாண்டு ஆட்சிக் காலத்தை மட்டும் தனது வரலாற்றுக் காலமாகக் கொண்டதல்ல. ஆட்சிப் பொறுப்பில் நாம் இருந்த காலம் நமது இலட்சியப் பயணத்தில் இளைப்பாறுவதற்கு நிழல்தரும் மரம் கிடைத்தது போல. நம்மோடு நீண்ட பயணம் நடத்தியவர்கள் அந்த நிழலில் சற்று அமர்ந்து மீண்டும் பயணத்தை நம்மோடு தொடர்ந்து நடத்துகிறார்கள். நிழலுக்கருகாமையில் நாம் வந்தபோது மட்டும் நம்மோடு இணைந்து நிழலை அனுபவித்தவர்கள் அந்த நிழலை விட்டு வருவதற்கு மனமில்லாமல் நம்மையும் நிந்திப்பதின் மூலம் தாங்கள் நெடும் பயணத்திற்குத் தயங்காதவர்களைப் போலக் காட்டிக்கொள்கிறார்கள்.

உண்மையிலேயே ஏற்கனவே நீண்டதூரம் நடந்து வந்து கஷ்ட நஷ்டங்களை ஏற்றுக்கொண்டவர்கள், நிழலில் அமர்ந்ததும் இன்னும் நடக்கவேண்டிய தூரத்தை நினைத்துப்பார்த்து பெருமூச்சு விட்டவாறு, "ஏ அப்பா! நம்மால் இனி நடக்க முடியாது!" என்று தங்கள் களைப்பைக் காட்டிக் கொள்கிறார்கள். இத்தகையவர்கள் மீது எனக்கு அனுதாபம்தான் பிறக்கிறது. சீற்றம் எழவில்லை.

'அதிர்ஷ்டம்' என்பதிலே எனக்கு நம்பிக்கையில்லை. ஆனால் அந்த சொல் எப்படியோ; கஷ்டப்படாமல் பயன் பெறுகிறவர்களுக்கு ஏற்ற சொல்லாக - அதாவது; 'அதிர்ஷ்டக்காரன்' என்ற அடைமொழியாக விளங்குகிறது.

அப்படிப்பட்ட அதிர்ஷ்டக்காரர்கள், ஒவ்வொரு கட்சியிலும் சிலபேர் தோன்றத்தான் செய்வார்கள், தொல்லைகள் வரும்போது தோன்றிய வேகத்திலேயே மறைந்துவிடுவார்கள்.

ஆட்சிப் பொறுப்பில் இருந்த ஒன்பதாண்டுகள் மட்டுமல்ல; நமக்கு ஏறத்தாழ ஐம்பது ஆண்டுக்கு மேற்பட்ட சரித்திரம் உண்டு.

அந்த உணர்வினை உயிராகக் கருதியவர்கள் - ஏராளம்! ஏராளம்! அவர்களின் காலடிகளுக்கெல்லாம் என்றென்றும் வணக்கம் செலுத்த நாம் கடமைப் பட்டிருக்கிறோம்.

மரணத்தோடு போராடிக் கொண்டிருக்கும் போது மாண்புமிகு ஏ. கோவிந்தசாமி அவர்கள் என் கையைப் பிடித்துக் கொண்டு ஒன்று சொன்னார். அதை நான் அடிக்கடி நினைத்துப் பார்த்து நெஞ்சம் நெகிழ்வதுண்டு.

"விவேகிகளான தளபதிகள் ஒரு கட்சிக்கு ஆயிரம் பேர் இருப்பதைவிட, விசுவாசமுள்ள தளபதிகள் ஐம்பது பேர் இருந்தால் போதும்"

- என்பதுதான் அவர் சொன்ன வாசகம். அது எவ்வளவு உண்மையாக இருக்கிறது!

அன்புள்ள,

மு. க.

24-02-1976

# 172. மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை!

**உடன்பிறப்பே,**

மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை!

புரட்சிக் கவிஞரின் புதுமை விளக்கம்; அதோ, அந்தப் பூஞ்சோலையில் மாங்குயில்!

முற்புதர்கள் - வறண்ட தடாகம் - கோடையின் கொடுமை; இதிலே வாடிடுபவன் அதைப் பூஞ்சோலையாகத்தான் கருதுகிறான்.

கீதம் எழுப்பிய அந்தக் குயில்கள் வெளியே இருப்பதும் ஒன்றுதான், பூஞ்சோலை நடுவே வாழ்வதும் ஒன்றுதான் என நினைத்திடுவதில் நிலைமை புரிகிறது. அதன் தாகம் தெரிகிறது.

ஊரின் நடுவே குயில் கீதம் பாடும்போது அதனை ரசிக்கத் தெரியாத ஞான சூன்யங்கள் கல்கொண்டு தாக்கின.

சூ...சூ...என விரட்டின, அதோ அந்தக் குயில் பூஞ்சோலைக்குள் புகுந்துவிட்டது.

குயிலின் கீதம் ஓய்ந்துவிட்டது ஊரில்...

அமைதி.....

இதோ, அதற்குப் பூஞ்சோலை கிட்டிவிட்டது. அதன் கீதம் கேட்கிறது!

அந்த கீதம் சோலையின் சுவர்களாம் மரங்களில் மோதி அதன் காதுக்கு மட்டுமே கேட்கிறது.

சோலை வாழ்வு முடிந்து நாளை அந்தக்குயில் வெளியே பறந்துவரத்தான் போகிறது!

அன்றைய தினம் அது எழுப்பிட இருக்கும் கீதத்தையாவது இந்த மக்கள் ரசித்திடும் பக்குவத்தைக் காலம் தந்திடட்டும். இனிய கீதம் எங்கெங்கும் ஒலிக்கட்டும்!

புரட்சிக் கவிஞர் மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை என்று வருணித்ததின் பொருள் இதுதானோ?

அன்புள்ள,

**மு. க.**

24-02-1976

சிறையில் 'மிசா' கைதிகளாக கழகத்தினர் அடை பட்டிருந்ததை, தணிக்கையின் காரணமாக இவ்வாறு சூசகமாக எழுதினார்.

# 173. தாய் உள்ளம் உணர்ந்த தாய்!

**உடன்பிறப்பே,**

அகம், புறம் என இலக்கியச் செல்வங்களை வழங்கி, பழங்காலத் தமிழர் வாழ்வின் மாண்புகளை உணர்த்தினர் புலவர் பெருமக்கள், ஆண்மக்கள் வீரவாழ்வினை மட்டுமன்றி, பெண்டிரின் வீரத்தையும் மகுடம் புனைந்து காட்டுகின்ற மாணிக்கப் பரல்களாக சங்ககால இலக்கியங்கள் திகழுகின்றன.

இல்லத்தை விட்டு நற்காரியம் ஒன்றிற்காகப் புறப்படும் போது, பல்லி கத்தினாலும் பயம்! பூனை குறுக்கிட்டாலும் அச்சம்! இப்படி நம்பிக்கைகளால் நடுநடுங்கும் பெண்குலத்தினிடையே, இன்றைக்கும் வீரமகளிர், விழித்தெழுந்து வருகின்ற காட்சியினைக் காணுகின்றோம்.

மலை எலி எனப் புகழப்பட்ட மாவீரன் சிவாஜியை மண்டிலங்கள் பல புகழும் வண்ணம் வீரப்பாலூட்டி வளர்த்த அன்னை ஜீஜீபாயை வரலாறு மறக்கவில்லை அல்லவா?

பகத் சிங்கைப் பெற்ற வயிறு எவ்வளவு பெருமைக்குரியது! மறுக்க முடியுமா? அல்லது மறக்கத்தான் முடியுமா?

செக்கிழுத்து சித்ரவதைகளை ஏற்ற சிதம்பரனாரைப் பத்து மாதம் சுமந்த மாதாவின் மணி வயிற்றுக்கு ஈடு இணைதான் உண்டோ?

கிழக்கிந்தியக் கம்பெனியாரை விரட்டியடிக்கப் போரிட்ட தியாகச் சீலர்கள் முதற்கொண்டு, கீழப்பழுவூர் சின்னச்சாமி வரையில் - அந்த வீரமக்களை ஈன்ற தாய்க்குலம் என்றென்றும் போற்றிப் பூஜிக்கத் தகுந்த ஒன்று என்பதை கல்லின்மேல் எழுத்தாக வல்லவோ செதுக்கிடல் வேண்டும்.

வீரமகனைப் பெறுதல் - அவன் வீரங்காட்டும் களம் கண்டு மகிழ்தல் - அவன் முதுகில் புண்பட்டு மடிந்தால்: அவன் மடிந்ததற்காக அழாமல் முதுகில் புண்பட்டு மடிந்தானே என்பதற்காக வெட்கப்பட்டு விழிநீர் பெருக்குதல்; இவையனைத்தும் புறநானூற்றுத் தாய்மார்களின் மறக்குடிப் பெருமைகளாகும்.

உடன்பிறப்பே; இதோ ஒரு தாய் பேசுகிறாள்; பார்! அவள் வீட்டின் முகப்பில் உள்ள சிறு தூணில் சாய்ந்து கொண்டு "அம்மா! அம்மா" என்று ஒருத்தி அழைக்கிறாள். "யாரது?" என்றவாறு அவள் வாயிற்புறம் வருகிறாள்.

"உன் மகன் எங்கே தாயே?" என்று வந்தவள் கேட்கிறாள்.

"என் மகனா? அவனையா கேட்கிறாய்? அவன் ஆற்றோரத்தில் ஆடிப்பாடி மகிழ்கிறான் என்று கருதினாயா? அல்லது, சுகவாசம் புரிய மலைத்தோட்டம் சென்றானோ என்று எண்ணுகிறாயா? அல்லது பகைவருக்குப் பயந்து ஓடி ஒளிந்து உயிரைக் காப்பாற்றிக் கொண்டான் என்று நினைக்கிறாயா?"

என்றெல்லாம் அந்தத் தாய், கேள்விகளை அடுக்கவில்லை!

வேறென்ன பதில் சொல்கிறாள்?

வீரத்தாயின் பதிலைப் பார்!

"என் மகன் எங்கு இருக்கிறானோ எனக்குத் தெரியாது! புலி இருந்து வெளியே போன, மலைக் குகையைப்போல அவனைப் பெற்ற வயிறு, இதோ இருக்கிறது பார்! அவன் களத்தில் வந்து தோன்றுவான்; அவனை அங்கு போய்ப் பார்த்துக்கொள்வாயாக!"

என்று, தாயின் பதில் அமைதியாக ஒலிக்கிறது. ஆம்-காவற் பெண்டு என்னும் பெண் புலவர் பாடிய புறநானூற்றுப் பாடல் இது.

*"சிற்றில் நற்றூண் பற்றி, நின்மகன்*
*யாண்டுள னோ? என வினவுதி; என்மகன்*
*யாண்டுளன் ஆயினும் அறியேன்; ஓரும்*
*புலி சேர்ந்து போகிய கல் அளைபோல,*
*ஈன்ற வயிறோ இதுவே;*
*தோன்றுவன் மாதோ, போர்க்களத்தானே!"*

ஒரு தாயின் உள்ளத்தை ஒரு தாய்தான் உணர்ந்து விளக்கிட முடியும்.

தாய் உள்ளம், பெண்களுக்கு மட்டுமே உரியதல்ல; அது வீரமுள்ள ஆண்களுக்கும் உரியதாகும் என்பது என் வாதம்!

அன்புள்ள,

**மு. க.**

25-02-1976

# 174. "ஒளிபடைத்த கண்ணினாய்; வா! வா!"

**உடன்பிறப்பே!**

பூங்கணுத்திரையார் என்னும் புறநானூற்றுப் புலவர், முதியவள் ஒருத்தியை வர்ணிக்கிற உவமை எழிலை எண்ணி எண்ணி வியந்து போனேன். பஞ்சு போன்ற நரை மூதாட்டி எனக் கூறியிருக்கக்கூடும் என்று தானே நீ நினைப்பாய். அல்ல அல்ல.

புலவருக்கு, நீரில் நீந்தும் மீன் தெரிகிறது. அந்த மீனைக் கொத்தும் கொக்கு தெரிகிறது. அந்தக் கொக்கின் இறகும், அந்த இறகின் வெண்மையும் அப்படியே புலவரின் நெஞ்சில் பதிகிறது. இந்த உவமையை எங்கேயாவது பயன்படுத்த வேண்டுமென்று ஒரு முடிச்சு போட்டு வைத்துக் கொள்கிறார். அதற்கான வாய்ப்பும் அந்தப் பைந்தமிழ்ப் புலவருக்கு விரைவிலே கிடைத்து விடுகிறது.

சிற்றூரின் வீதியொன்றில் சிந்தனை தேக்கியவாறு நடந்திடுங்கால், ஒரு இல்லத்து வாயிலில் நாலைந்து மகளிர் சோகமே உருவாகக் கூடியிருக்கின்றனர். அந்தக் கொடியிடைக் கோமளங்கள், துவண்டு நிற்பதையும், அவர்களுக்கிடையே ஒரு முதியவள் நிமிர்ந்து நிற்பதையும் புலவர் காணுகிறார். புலவரும் பெண்பாலன்றோ!

ஆகவே அருகில் சென்று செய்தி அறியலாம் என்ற துடிப்பு எழுகிறது. அந்த இல்லம் நோக்கி விரைகிறார். அச்சடித்த பதுமைகள் போல் அனைவரும் நிற்கின்றனர். முதுபெருங் கிழவியின் கண்களிலிருந்து நீர் கொட்டுகிறது.

புலவருக்கு, அந்தக் கண்ணீர் எப்படித் தோன்றுகிறது; தெரியுமா?

வெதிர மலையில் உள்ள மூங்கிற் காட்டில் மழை பொழியும் போது, அம் மூங்கில்களிலிருந்து சொட்டுகின்ற துளிகளைவிட, அந்தக் கிழவி சிந்தும் கண்ணீர்த் துளிகள், அதிகமாக இருந்தன

வாம். அந்தக் கண்ணீருக்கிடையே, புலவர் பெருமாட்டி கண்ட காட்சிதான் வியப்புக்குரியது.

அந்தக் கிழவியின் பொக்கைவாய், மகிழ்ச்சியைச் சிந்திக் கொண்டிருந்தது.

அதாவது, சில சமயங்களில் மழைத்தூறல் விழும். வெயிலும் காய்ந்து கொண்டிருக்கும்; வானம் கருமையாக இராது அதைப் போலத்தான் அழுது கொண்டே அந்தக் கிழவி, சிரித்துக் கொண்டுமிருந்தாள்.

அவள் அழுகைக்கு என்ன காரணம்?

அவளுடைய அன்பு மகன் இறந்து விட்டான்.

அதற்காகக் கண்ணீர்க் காவியமாக ஆகிறாள்.

மகிழ்ச்சிக்கு எது காரணம்?

அந்த மகன், களத்திலே இறந்துவிட்டான்.

அதனால் அவள் புறநானூற்று ஓவியமாக ஆகிறாள்.

எப்படிப்பட்ட மகிழ்ச்சியாம் அவளுக்கு?

மகனை, ஈன்றபொழுதினும் பெரிய மகிழ்ச்சியாம்!

களம்பட்ட மைந்தன், எதிரியின் யானையைக்கொன்று வீழ்த்திவிட்டு மாய்ந்தனன்.

“சிறுவன்,

களிறு எறிந்து பட்டனன் என்னும் உவகை ஈன்ற ஞான்றினும் பெரிதே”

மகனைப் பெற்ற நேரத்தைவிட அதிக மகிழ்ச்சியை, மகன் மணவிழாப் பந்தலில் அமர்ந்திருக்கும்போது, தாய் பெற்றிடுவாள். மகன் வழியில் ஒரு பேரன் அல்லது பேர்த்தி கிடைக்கும்போது, தாய் மகிழ்ச்சியில் திளைத்திடுவாள்.

சில தாய்கள் இருக்கிறார்கள்-அறவே இல்லாமல் இல்லை!

மகன், இப்படித்தான் வாழவேண்டும் என்றில்லாமல் எப்படியோ வாழ்ந்தாலே போதும் என்று, அவன் வளங் கண்டு மனங்களிப்பர்.

பகைவனின் காலில், மகன்-தலையை வைத்தாவது தன் உயிரைக் காப்பாற்றிக் கொண்டானே என்று மகிழ்கிற தாய்களும் இருந்திடக்கூடும்.

ஆனால், பூங்கணுத்திரையார் காணுகின்ற தாய், அப்படிப் பட்ட கோழையுள்ளம் படைத்த, தாய் அல்ல! அல்லவே அல்ல!

களத்தினிலே யானை ஒன்றை வீழ்த்தி, பகையைத் திக்கு முக்காடச்செய்து, வேல்தாங்கி வீழ்ந்துவிட்ட வேங்கையை அல்லவா அந்தத் தாய் தன் மகனாகப் பெற்றிருக்கிறாள்.

வேதனையைத் தாங்கிக் கொள்ளக் கூடிய வயது கொண்டவளா?

இல்லையே!

நரை மூதாட்டி!

மீன் தின்னும் கொக்கின் இறகு போன்ற நரை கூந்தல் கொண்ட கிழவி!

அவளுக்குத் தன் மகன் விளைத்த மானப்போர், அவனைப் பெற்ற நேரத்தைவிட அதிக மகிழ்வைத் தருகிறது. கண்ணீரும் பெருகுகிறது, அது ஆனந்தக் கண்ணீர்தான் போலும்!

*“மீன் உண் கொக்கின் தூவி அன்ன*
*வால் நரைக் கூந்தல் முதியோள் சிறுவன்*
*களிறு எறிந்து பட்டனன் என்னும் உவமை*
*ஈன்ற ஞான்றினும் பெரிதே; கண்ணீர்*
*நோன் கழை துயல் வரும் வெதிரத்து*
*வான் பயத்தூங்கிய சிதரினும் பலவே.”*

இதுதான், அந்தப் புறநானூற்று வரிகள்! சங்க காலத் தமிழ் மண்ணில், எத்துணை வீரம் மணம் பரப்பியிருக்கிறது கண்டனையா?

*“வெங்கொடுமைச் சாக்காட்டில்*
*விளையாடும் தோள் எங்கள் வெற்றித் தோள்!”*

என்று பாரதிதாசன் பாடியதையும்;

*"ஒளிபடைத்த கண்ணினாய் வா! வா!"*

என்று பாரதியார் அழைத்ததையும்;

*"கிலிபிடித்த நெஞ்சினாய், போ! போ!"*

என்று அவரே விரட்டியதையும் படிக்கும்போது; பழைய புறநானூறு, நம் மனக்கண் முன்னே மணிச்சுடர்விட்டு எழுவதை உணர முடிகிறதல்லவா?

அன்புள்ள,

**மு. க.**

26-02-1976

# 175. நினைவு அலைகள்!
# நெஞ்சத் துடிப்புக்கள்!!

**உடன்பிறப்பே,**

உன் மணிக்கரங்களைப் பிடித்துக் கொண்டு மன்னிப்புக் கேட்டவாறு இந்தக் கடிதத்தை எழுதத் தொடங்குகிறேன்.

"இத்தனை நாள் எங்களை ஏன் ஏமாற்றினாய்; அவ்வளவு சோம்பேறித்தனமா உனக்கு?" என்று நீ கேட்பது எனக்குப் புரிகிறது. சோம்பேறித்தனமும், சோர்வும், என் உள்ளத்தை ஓரிரு மணித்துளி நேரம், வாடகைக்குக்கூட எடுக்க முடியாது என்பது உனக்கு நன்றாகத் தெரியும்.

"எங்கள் மீது ஏதாவது கோபமா? அதனால் இத்தனை நாளும் கடிதம் எழுதவில்லையா?" இப்படியும் கேட்கத் தோன்றும் உனக்கு! கோபம், என்றைக்காவது உன்மீது ஏற்பட்டதுண்டா எனக்கு? நீ எனக்குத் தம்பி என்ற முறையில் அல்லது தங்கை என்ற முறையில், அண்ணன் என்ற முறையில் அல்லது அக்காள் என்ற முறையில்-ஒருதாய் வயிற்றில் பிறக்காத உடன்பிறப்பாகத் திகழுகிறாய் இத்தனைபேரையும் ஒரு தாய் வயிறு தாங்காது என்ற காரணத்தால்தான் தனித்தனி தாய்களின் வயிற்றில் பிறந்தோம் என்று நமது அண்ணன் கடற்கரையில் முழங்கியது மறந்துபோய்விடுமா?

அப்படியிருக்க எனக்கு ஏன் உன்மீது கோபம் வரப்போகிறது? உன் கோபத்தைத் தாங்கிப் பழக்கப்பட்டவனே தவிர, என் கோபத்தை என்னிடம்தான் காட்டிக் கொள்வேன் என்பது உனக்கும் நன்றாகத் தெரியுமே.

தமிழகத்தின் ஒரு கோடியில் சின்னஞ்சிறிய ஒரு கிராமத்தில் மிகச் சாதாரண ஒரு குடும்பத்தில் ஆண்பிள்ளைக்காகத் தவமிருந்த அஞ்சுகம் முத்துவேலருக்குப் பிள்ளையாகப்

பிறந்த நான்; இன்றைக்கு உனது அன்பையும் பாசத்தையும் துணையாகக்கொண்டு 'உன் முகமும் என் முகமும் ஒருவர் முகம் ஒருவருக்கு ஆறுதல்' என்ற நிலையில் இணைந்துவிட்டோமே; அது எப்படி?

சீமான் வீட்டுப் பிள்ளையாகப் பிறந்து தங்கத் தொட்டிலை உதைத்து விளையாடியவன் என்ற பெருமையா எனக்கு? இல்லையே!

கண்ணுக்கெட்டிய தூரம் வரையில் உள்ள கழனிகள் நமக்குச் சொந்தம்; கூப்பிட்டகுரல் கேட்க ஓடிவரும் பண்ணையாட்களின் கும்பல்-என்ற அந்தஸ்து படைத்த நிலப்பிரபுவின் வீட்டுத் தாழ்வாரத்தில் தாதிகள் புடை சூழ தவழ்ந்தவன் என்ற கௌரவமா? இல்லை, இல்லவே இல்லை!

கல்லூரி கண்டவன்; பட்டங்கள் பெற்றவன்-வித்தகன்-மேதை-என்றெல்லாம் போற்றப்படுகிற சிறுதுளி செல்வாக்காவது எனக்கு உண்டா? கிடையாது!

ஆயினும் நீ என்னை உன் ஆருயிர் உடன்பிறப்பாக ஏற்றுக் கொண்டது எதனாலே!

பெரியாரின் சமுதாய சீர்திருத்தக் கொள்கைகளுக்குப் பிள்ளைகளாய்; பேரறிஞர் அண்ணாவின் அரசியல் கருத்துக்களை ஏற்றுக்கொண்ட உடன்பிறப்புக்களாய் உலவுகிறவர்கள் நாம், அந்தப் பந்தமும், சொந்தமும், பாசமும் பற்றும்தான் நம்மை வெண்ணிலாவும் வானும்போல; வீரனும் கூர்வாளும்போல; மகர யாழும் இசையும்போல பிரிக்கவே முடியாதபடி ஒன்றாக்கிக் கட்டிப் போட்டிருக்கின்றன.

இதிலே எங்கே போய் நான் உன்மீது கோபங்கொள்வது? உடன்பிறப்புக்களுக்குள் கோபமா? "கொண்டு வா! அண்ணன் தலையை" என்று குமணனின் தம்பி அமணன் ஆணையிட்டான். தருவதற்குத் தயாரானான் குமணன் தன் தலையை! ஆனால் அண்ணன் தலைபோல ஒன்றைக்கண்டதும் "அய்யோ!" என அலறித்துடித்த தம்பியைத்தானே அங்கே கண்டோம்.

எனவே உடன்பிறப்புக்களுக்குள் கோபதாபமேது? தலை மையில் உள்ள நாங்கள் எதைச் சொல்லி நீ தட்டி நடந்துவிட்டாய்! "தட்டி நடந்தவர்களே இல்லையா?" என நீ, உன் விழிகளால் கேட்கிறாய்! புரிகிறது!

அதனால்தானே நமது அண்ணா-கடமை, கண்ணியம் என்ற இரண்டு அறிவுரைகளுடன் நிறுத்தாமல் "கட்டுப்பாடு" என்பதையும் அழுத்தம் திருத்தமாக வலியுறுத்திக் கொண்டே இருந்தார்,

நான் எழுதுகிற கடிதம், கடமையாற்றும் உடன் பிறப்புக்குத்தான்.

கண்ணியம் போற்றுகின்ற உடன்பிறப்புக்குத்தான்.

கட்டுப்பாட்டை மீறாது கழகம் காக்கும் கண்மணியாம் என் அன்பு உடன்பிறப்புக்குத்தான்.

கடமைகளில் சிலநேரம் கடின உழைப்புத் தேவைப்படும். கடும் சிரமங்களை ஏற்றுக் கடமையாற்ற வேண்டிவரும்.

இயலாத உடன்பிறப்புக்கள் இயலாமையைத் தெரிவிப்பது தவறேயல்ல.

ஊமையாக ஒரு தம்பியோ, தங்கையோ பிறந்து விட்டால் வீட்டை விட்டா துரத்திவிடுகிறோம்? அதுவும் நம் உடன்பிறப்புத் தானே!

நொண்டிக் குழந்தை என்பதற்காக தெருவிலே எறிந்து விடுவதில்லை, அது வளர்ந்தபிறகு அதன் இயல்புக்கேற்பவே பணியாற்ற முடியும். பணியாற்றும்.

அந்த ஊனமுற்ற குழந்தை எதுவுமே செய்யாமல் இல்லத்தில் உள்ள பொருள்களை எடுத்து வீதியிலே உள்ள பள்ளத்திலே கொட்டிக்கொண்டிருந்தால்; அது தன்னால் முடிந்த கடமையையும் செய்யத் தயாராக இல்லை-அதே நேரத்தில் கட்டுப்பட்டு நடக்கவும் விரும்பவில்லை என்றுதானே பொருள்.

அந்தக் கட்டுப்பாட்டை உடைக்கும் உணர்வு முற்றிப் போய்-வீட்டைக் கொளுத்தக் கொள்ளிக் கட்டையும் கையுமாக நின்றால்; தலையில் ஒரு குட்டு குட்டத்தானே வேண்டும்.

அப்படிப்பட்டவர்களை என்னால் உடன் பிறப்புக்களாக ஏற்றுக்கொள்ளவே முடியவில்லை. நீயும் அதைத்தான் எனக்கு நாள்தோறும் நினைவுபடுத்தி எழுதிக் கொண்டிருக்கிறாய்.

உடன்பிறப்பாகத் தோன்றியவரை எப்படி உடன்பிறப்பாக ஏற்றுக்கொள்ளாமல் மறுக்க முடியும்? என்ற வினாவை சிலர் எழுப்புவர்.

*“வீடணனைத் தம்பியாகப் பெற்ற*
*மாபழிக்கே அஞ்சுகின்றேன்”*

என இராவணன் உரைத்ததாகப் பாரதிதாசன் எழுதிக் காட்டியிருப்பதே அந்த வினாவுக்குப் பொருத்தமான விடையாகும்.

எனவே, எனக்குக் கோபம் வந்தால் என் மீதுதான் வருமே தவிர, அதனை யார்மீதும் கொட்டிட விரும்பமாட்டேன்.

அப்படி நான் எப்போதாவது உன்னைக் கோபித்துக் கொண்டதாக நீ நினைத்திருந்தால் அது உன்னை உற்சாகப்படுத்தி, ஊக்க மூட்டுவதற்காகத்தான் இருந்திருக்கும். அது கூட எனக்காகவா? இல்லை! உனக்குத் தெரியும் நன்றாக! நாட்டுக்காக! மக்களுக்காக! அண்ணன் வழியில் அமைதி காப்பதற்காக!

ஆருயிர் உடன்பிறப்பே, இனி முடிந்த வரையில் தொடர்ந்து எழுதுகிறேன் கடிதங்கள்.

இன்று எழுதியிருப்பது நினைவு அலைகள்! நெஞ்சின் துடிப்புக்கள்! பாச மலர்கள்!

கடிதமல்ல இது-கடிதம், நாளை எழுதுகிறேன்.

அன்புள்ள,

**மு. க.**

16-03-1976

# 176. கலித்தொகை காட்டும் வீரம்!

**உடன்பிறப்பே,**

*"கொல்லேற்றுக் கோடஞ்சு வானை மறுமையும்*
*புல்லாளே ஆயமகள்"*

என்ற கலித்தொகை வரிகளில்தான் எத்துணை வீரம் கொப் பளிக்கிறது!

பழங்காலத் தமிழகத்தில் ஏறு தழுவுதல் எனும் ஒரு வீர விளையாட்டு சிறப்புடையதாக அமைந்திருந்தது.

காளையை எதிர்த்து நின்று, அதன் கொம்புகளைப் பிடித்து நிறுத்தி வெற்றிவாகை சூடுவதை வலிமை படைத்த தோள் கொண்ட வாலிபர்கள் மிகப் பெருமையாகக் கருதினர்.

அந்த மாவீரர்களின் புண்பட்ட மார்பகத்தின் மீது திங்கள் முகம் சாய்த்துக் கனியிதழால் மருந்து தடவி காதலனின் தீரத்திற்கான பரிசுப் பொருளாக ஆகிவிடுகிற தமிழ்க்குலப் பாவையரின் பெரு மிதத்தை இலக்கியங்கள், ஓவியங்களாகத் தீட்டிக் களிக்கின்றன.

காளைமாட்டின் கொம்பினைப் பிடித்து அடக்குகிறவனே தனக்குக் கொழுநனாக வரத் தகுதி படைத்தவன் என அறை கூவல் விடுவர் அரிவையர்.

தான் கணவனாக அடைய வேண்டுமென்று விரும்புகிற ஒருவன், காளையை அடக்குதற்குப் புறப்பட்டு அந்தக் காளையின் கொம்புகளைக் கண்டு அஞ்சி ஓடிவிடுவானேயானால் அவனை, இப்பிறப்பில் மட்டுமல்ல - அடுத்த பிறப்பிலுங் கூடத் தன் கணவனாக ஏற்றுக்கொள்ள மாட்டாள். ஆயர் குலப்பெண்!

இதைத்தான் கலித்தொகை முழங்குகிறது. "ஆகா! ஊஹூ! என்னைப்போல் வீரனுண்டா?" எனக் கூச்சலிட்டு

மீசையை முறுக்கி, தோளைக் குலுக்கி, தொடையைத் தட்டி, கச்சையை இறுக்கிக் கட்டி; "கொண்டுவா! கொஞ்சம் தேறல்! அதனைக் குடித்துவிட்டுப் புறப்படுகிறேன், காளையை அடக்க! தூக்கு பல்லக்கை - அதில் தான் ஏறிக்கொள்கிறேன். போர்த்து பொன்னாடையை இப்போதே எனக்கு! மலர் மாலை போதாது - மரகதமணி அணிவித்திடு!" என்றெல்லாம் ஆர்ப்பாட்டம் செய்து - ஊரதிரக் கத்தி - உயர எழும்பிக் குதித்து - "என் அறிவென்ன? ஆற்றலென்ன? திறன் என்ன? திண்தோள் வலிமை என்ன? ஒரு காளையல்ல; ஓராயிரம் காளைகள் வரினும் அவைகளின் கொம்பொடித்துப் போடுவேன்" என எக்காளமிட்டு, "ஏடி! பெண்பாவாய்! என் வீரத்திலா சந்தேகம்? தீரத்திலா அவநம்பிக்கை? பொங்கி வரும் காளைதனை அடக்குவேன். புலிப்பல் தாலியோடு வருவேன். காத்திருக்கட்டும் உன் கழுத்து. பூத்திருக்கட்டும் உன் உதட்டில் சிரிப்பு. இன்றிரவே நம் கூத்திருக்கட்டும் ஆற்றங்கரை நிலவொளியில்! உன் தந்தையிடம் கூறி வை; அவர் இதுவரையில் எனக்கு வழங்கியுள்ள சொத்து சுகம் போதாது என்று! அவையெல்லாம் உனை மணக்க அச்சாராம்தான். காளையை அடக்கிய பின், நான் உன் கையைப் பிடிக்குமுன், ஆயிரம் கழஞ்சு பொன் என் காலடியில் விழ வேண்டும்"

என உரைத்துப் புறப்பட்டான் விடை பெற்று! ஏறு தழுவுமிடம் வந்து நின்றான். "ஏ அப்பா! இவன் வீரம் மிகப் பெரிது" என்று உருண்டு திரண்டிருந்த அவன் உடற் கட்டைப் பார்த்து மலைத்தனர் ஊர் மக்கள்.

எங்கே அந்தக் காளை என உலுக்கினான் தோளை. வந்தது காளை. புதுவேகம் புயல்வேகம் காட்டிவந்த அந்தக் காளையை ஒருக்கணம் நோக்கினான். அதன் கூரான கொம்புகளைப் பார்த்ததுதான் தாமதம். பாய்ந்தான்! பாய்ந்தான்! பாய்ந்து கொண்டேயிருந்தான்! காளையின் மீதா? அதுதான் இல்லை. வந்த பாதையை நோக்கிப் பாய்ந்தான். மூச்சு வாங்க ஓடினான்.

"வென்றீரா? வென்றீரா?" எனக் கேட்டு ஆயமகள் மாலையுடன் எதிரே ஓடிவந்தாள். வெட்கம் அவன் தலையில் சம்மட்டி அடி கொடுத்தது. வீதியில் உள்ளோர் கூடிவிட்டனர். தொங்கிய தலையுடன் நின்றவன் விழிகளைத் தூக்கி வீதியில் நின்றோரைப் பார்த்தான். எங்கும் சிரிப்பொலி! கேலிச் சிரிப்பொலி!

செய்தி உணர்ந்த சேல்விழியாள் "சே! உன்னை இப்பிறப்பில் மட்டுமல்ல; மறுபிறப்பிலும் மணக்க மாட்டேன்!" என்று கூறிவிட்டு இல்லம் திரும்பினாள்.

"மங்கையே! மன்னித்துக்கொள்! இனியொரு வாய்ப்பு எனக்குக் கொடு!"

என்று வேண்டியிருக்கலாம் அவன். அதற்குப் பதிலாக தன் வெட்கத்தை மறைக்க வீரனைப்போலப் பேசலானான்:

"இந்தக் காளையை அடக்குவதா எனக்குப் பெரிய காரியம்? அதை ஒரு நொடியில் செய்து வாகை சூட முடியும் என்னால்!

எனக்கு இந்தப் பெண்ணே பிடிக்கவில்லை என்கிறபோது; எதற்காக நான் ஏறுதழுவிட வேண்டும்? இந்தப் பெண்ணுக்கு அழகுமில்லை. அறிவுமில்லை. பண்புமில்லை. அதனால் எனக்குத் தேவையுமில்லை."

என்று ஓங்கிக் குரலெழுப்பினான். அவன் எண்ணம், அவனது கூற்றை அனைவரும் ஏற்றுக்கொள்கிறார்கள் என்று!

அவர்கள் ஏளனமாகச் சிரித்ததை; பாவம் - அவன் உணரமாட்டான்.

இப்படிப்பட்ட வீரர்களை சங்க காலத்தில் பெண்கள், எவ்வளவு அலட்சியப்படுத்திப் புறக்கணித்தார்கள் என்பதற்காகத்தான் கலித்தொகைப் பாடலை உனக்கு நினைவூட்டினேன்.

அன்புள்ள,

**மு. க.**

17-03-1976

# 177. கழகம் காப்போம்!
# கடமையைச் செய்வோம்!

**உடன்பிறப்பே,**

நமது அண்ணன் ஒரு கதை சொல்வார். அதை நான் கோவை மாநாட்டிலே கூட குறிப்பிட்டேன்.

எலியொன்று தன் மகளுக்கு மிக உயர்ந்த இடத்தில் சம்பந்தம் செய்யவேண்டுமென்று விரும்பியதாம். மிக உயர்ந்த இடத்து மாப்பிள்ளையாக யார் கிடைப்பார் என்று ஆகாயத்தை அண்ணாந்து நோக்கிச் சிந்தித்தது.

அதன் கண்களில் சூரியன் தெரிந்தான். உடனே சூரியனைப் பார்த்து "கதிரவனே! கதிரவனே! என் மகள் ஒருத்தி இருக்கின்றாள்; உலகத்தில் நீதான் பெரியவன். அவளை நீ எப்படியாவது மணந்துகொள்!" என்று வேண்டியது.

சூரியன் சொன்னான், "என்னைவிடப் பலசாலியாக மேகம் இருக்கிறது. அது சமயத்தில் என்னையே மறைத்து விடுகிறது. ஆகவே; நீ உன் மகளை மேகத்திற்குத் துணைவியாக்கு!" என்று!

எலி, மேகத்திடம் தன் விழைவினை வெளிப்படுத்தியது. மேகம் எலியின் கோரிக்கையை மறுத்துவிட்டது. "என்னை வலிவுடையவன் என்று கருதாதே! என்னை இங்குமங்கும் துரத்தியடிக்கக் கூடிய காற்றுதான் என்னைவிடப் பலசாலி" என மேகம் உரைத்தது.

எலி காற்றை அணுகித் தன் மகளின் கழுத்தில் தாலியைக் கட்டுக என வேண்டியது. பெருமூச்சு விட்டவாறே காற்று தன் பலவீனத்தை விளக்கியது:

"எழில்மிகு எலியே! என்னையா வீரன், தீரன் உலகிலே பெரியவன் என்று எண்ணுகிறாய்? தவறு தவறு! அதோ நிற்கிறது

பார் நெடுஞ்சுவர்! அதனைத் தள்ளுவதற்கு மூன்று நாட்களாக நான் முயன்று பார்த்துத் தோற்றுவிட்டேன். ஆகவே என்னைவிடச் சுவர்தான் பெரியவன். அங்கே சென்று பேசிப்பார்" என்று காற்று தட்டிக் கழித்ததும், எலி, சுவரிடம் ஓடிப்போய் "நீதான் எல்லோரையும்விடப் பெரியவன். என் மகளைத் திருமணம் புரிந்துகொள்" என்று விண்ணப்பம் செய்தது.

சுவர், கலகலவெனற் சிரித்தது, "எலியாரே! என்னைக் கிண்டலா செய்கிறீர்? என்னைவிடப் பெரியவன் யாருமில்லை என்று உனக்கு யார் சொன்னது? உன்னைப்போன்ற ஒரு எலி, என் உடம்பு முழுவதும் துளை போட்டிருப்பதைப் பார்! நான் என்னதான் காற்றைத் தடுக்குமளவுக்குக் கம்பீரமாக வளர்ந்து, உயர்ந்து நின்றாலும் உன் இனத்தைச் சேர்ந்த ஒரு எலிக்கு பதில் சொல்ல முடியவில்லையே! எனவே என்னைவிடப் பலசாலி எலிதான். நீ உன் பெண்ணுக்கு எலி வீட்டிலேயே மாப்பிள்ளை பார்ப்பது நல்லது" என்று விரிவுரையொன்றை நிகழ்த்தியது நெடுஞ்சுவர்.

எலி, சிந்திக்கத் தொடங்கியது. நம்மைவிடப் பெரியது பூனை! அதுவோ நமக்கு பகை! ஆகவே எலிகளுக்குள்ளேயே சம்பந்தம் செய்து கொள்வதே சரியான முடிவு எனத் தனக்குள்ளே கூறிக்கொண்டது. எலிக்கும் எலிக்கும் திருமணம் நடந்தது. இது தான் கதை.

எங்கெங்கே யார் யார் உயர்ந்தோர் - சிறந்தோர் - சீமான்கள் பூமான்கள் இருந்தாலும் எலிக்குக் கிடைத்த சம்பந்தம் எலிதான் என்பதைப்போல் எங்களுக்கு நீங்கள்தான் கிடைத்தீர்கள்; உங்களுக்கு நாங்கள்தான் கிடைத்திருக்கிறோம்.

எலியும் எலியும்தான் சொந்தக்காரர்களாக இருக்க முடியுமே தவிர, எலியும் புலியும் இருக்கமுடியாது. அய்யோ! புலியுடன் சொந்தம் கொண்டாட முடியவில்லையே என்று எலி ஏங்கிப் பயன் இல்லை. ஏங்கிடவும் கூடாது. அது இயலாத ஒன்று.

சில நேரங்களில் எலி போலவே தோற்றமளிக்கும் பெருச்சாளிகள் எலிகளிடம் சொந்தம் கொண்டாடிவரும். நூறு எலிகள் பகிர்ந்து உண்ணவேண்டியதை தான் மட்டும் தின்று கொழுத்துவிட்டு அந்தப் பெருச்சாளி ஓடிவிடும்.

உழைக்கும் வர்க்கம்-உறிஞ்சும் வர்க்கம் இரண்டுக்குமுள்ள பேதத்தை எடுத்துரைத்து உலகிற்குப் புதிய வேதத்தை வகுத்த வன்தான் மார்க்ஸ். அவன் சிந்தனைகளைச் செயல்படுத்தி யவன்தான் லெனின்.

**"உழைத்தவர்கள் எலியாக முயலாக வாழுகின்றார்**
**ஏமாந்த காலத்தில் ஏற்றங் கொண்டோன்**
**புலிவேஷம் போடுகின்றான்"**

என்ற கருத்தைப் புரட்சிக் கவிஞர் அவர்கள், பொது வுடைமைப் பூங்காவில் பறித்த மலர்களால்தானே தொகுத்தளித்தார்.

அப்படி எலியாக முயலாக வாழுவோர்க்கு ஏற்றமளிக்கத் தமிழகத்தில் எழுந்ததுதான் திராவிடர் இயக்கம். அந்த இயக்கத்தின் அறுபதாண்டு கால வளர்ச்சியின் முதிர்ச்சிதான் தி. மு. கழகம்.

அதனால்தான் தி. மு. கழகம், உண்மையான கம்யூனிஸ்டுக் கட்சி என்று அண்ணா அவர்கள் முதல் மாநில மாநாட்டிலே முரசு கொட்டினார்கள்.

அடக்கப்பட்டோர்.

ஆண்டவன் பேரால் முடக்கப்பட்டோர்.

மனிதன் என்றுசொல்லும் உரிமை அழிக்கப்பட்டோர்.

சமுதாயத்துப் புழுக்களாக மிதிக்கப்பட்டோர்.

மான உணர்வு கொள்வது பாபம் என தண்டிக்கப்பட்டோர்.

சாக்கடைப் பன்றியினும் கேவலமாக மதிக்கப்பட்டோர்.

படிப்பா? பள்ளத்தில் கிடப்பவனுக்கா?

கல்வியா? கஞ்சி குடித்துக் கழனியில் உழலவேண்டிய வனுக்கா?

உத்தியோகமா? ஊர்க்கோடியில் குடியிருக்கும் உதவாக் கரைகளுக்கா?

என எள்ளி நகையாடப்பட்டோர்.

தகுதியுண்டா? திறமையுண்டா?

கை கட்டிக்கிடந்ததுகளுக்குக் கல்லூரி வாசனையா?

எனக் காறி உமிழப்பட்டோர்.

இந்த எலிகளுக்காக ஆரம்பிக்கப்பட்டதே தென்னிந்திய நல உரிமைச் சங்கம்; அறுபது ஆண்டுகட்கு முன்பு!

இந்த எலிகள் கூடி உருவாக்கிய உணர்ச்சிதான் வர்க்க பேதமாயினும், வகுப்புவாதமாயினும் அவைகள் மதத்தின் பெயரால் சொல்லப்பட்டாலும், கடவுள் பெயரால் சொல்லப்பட்டாலும் தகர்த்தெறிந்து இன்றைய திராவிட முன்னேற்றக் கழகமெனும் அரசியல் உயிர்த் துடிப்பாக இயங்கிக் கொண்டிருக்கிறது.

இந்தப் பயிரை வளர்க்க வியர்வை கொட்டியவர்கள், கண்ணீர் பொழிந்தவர்கள், செந்நீர் பாய்ச்சியவர்கள் ஆயிரம் ஆயிரம் வீரத் தொண்டர்களாவார்கள்.

அவர்களின் வாரிசுகள்தான் நாம்!

அவர்கள் நெருப்பிலே நின்று இந்தக் கழகத்தைக் காத்தார்கள். தணலிலே வீழ்ந்து இந்தக் கழகத்தைத் தங்கமாக்கினார்கள்.

தரக்குறைவான பேச்சு - தாக்குதல் - தடியடி - அனைத்தையும் தாங்கிக் கொண்டு இந்தக் கழகத்துக்கு ஆணிவேராக அமைந்தார்கள்.

அவர்களில் பலர் இன்று மண்ணுக்குள் உறங்கிக் கொண்டிருக்கிறார்கள். கால் நீட்டிப் படுத்திருக்கும் அந்தக் கர்மவீரர்களின் பாதார விந்தங்களை நோக்கி நன்றியுடன் வணக்கம் தெரிவிப்போம்.

அவர்கள் வளர்த்த பயிரை அழிக்க கழகத்தில் ஒரு துளி உட்பகை எழுந்தாலும் அதனை ஒரு நாளும் அனுமதிக்க மாட்டோம் என உறுதி எடுத்துக் கொள்வோம்.

கடற்கரையில் துயில் கொள்ளும் நம் மூத்த கண்மணியின் கல்லறையில் கை அடித்துச் சத்தியம் செய்வோம்; உட்பகைக்கு இனி ஒரு நொடியும் இங்கு இடம் இல்லை என்று!

கழகம் காப்போம்!

கடமை செய்வோம்!

நிலையான அமைதி நிரந்தரமாகச் செழித்திடும் வகையில் நம் பணிகளை அமைப்போம்!

அன்புள்ள,

**மு. க.**

18-03-1976

# 178. “விதியே! விதியே!” என் செய நினைத்தாய்?

**உடன்பிறப்பே,**

பாரதியார் பாட்டுக்கள் சிலவற்றை நினைவுக்குக் கொண்டு வந்தேன். ‘விதி’ எனப்படும் ஒன்றை அழைத்து அவர் வேதனையுடன் வினவுகிறார். நெஞ்சை உருகச் செய்யும் கவிதை. எட்டயபுரத்துச் சிறு வீட்டில் எழுதியதோ? எழிலார் புதுவையின் கடற்கரையில் அமர்ந்து கர்ச்சனை புரிந்ததோ? எனக்குத் தெரியாது! ஆனால் எழுச்சியும் ஏக்கமும் பின்னிப் பிணைந்த பாடல் அது. எட்டயபுரத்தில் பாரதி பிறந்த வீட்டைத் தமிழக அரசின் சார்பில் தேசீய நினைவுச் சின்னமாக ஆக்குகிற விழாவுக்கு இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பு சென்றிருந்தேன். ஆலயத்துச் சுற்றுச் சுவருக்குப் பக்கத்தில் அழகியதோர் அக்கிரகாரத்தில் அந்தச் சிறு வீடு அமைந்திருக்கிறது. அதனை நமது அரசு விலைக்கு வாங்கி நினைவுச் சின்னமாக ஆக்கியுள்ளது. அதைப் பற்றிய புகார் ஒன்றும் இன்னும் கொடுக்கப்படவில்லையென்று நினைக்கிறேன். இதுவரை கொடுக்காமலிருந்தால் இனிமேல் கொடுப்பார்கள் என்று எதிர்பார்க்கலாம். ஒரு வேளை; யாரும் கொடுக்காவிட்டாலும் கொடுத்ததாகப் போடுவதற்குச் சில ஏடுகள் தயாராக இருக்கின்றன. அது இருக்கட்டும். பாரதியின் கையெழுத்துப் பிரதிகளை அங்கு கண்டேன். மணி மணியான எழுத்துக்கள். அவர் பயன்படுத்திய பொருட்களும் அங்கு சேகரித்து வைக்கப் பெற்றுள்ளது. உள்ளே நுழைந்ததும் கண்ணில் படுவது ஈட்டி போன்ற ஒரு கருவி, பாரதியார் உலவச் செல்லும்போது அதைக் கையில் எடுத்துக் கொண்டுதான் போவாராம். அவர் வெறும் வீராப்புக் கவியல்ல! உணர்ச்சிகளை எழுத்தில் கொட்டுகிறவர் மட்டுமல்ல; உணர்ச்சியுள்ள உள்ளமும் படைத்தவர்.

சில கவிஞர்கள் எழுத்தாளர்கள் இருக்கிறார்கள்; ஏன் பேச்சாளர்கள் கூட இருக்கிறார்கள். வாய் வீரம்தான்! வார்த்தை

வீரம்தான்! வந்தது எதிர்ப்பு என்றால் வளை தேடும் மனிதர் கள்தான்.

அப்படிப் பட்டவரல்ல பாரதி-ஆண்மையாளர்! ஆற்றலாளர்! வீர நெஞ்சுக்குச் சொந்தக்காரர். அந்த நெஞ்சத்திலும் கூட சில நேரங்களில் சோகம் பெருக்கெடுத்திடக் காண்கிறோம். தன் எதிரேயுள்ள நிலைமைகளை எண்ணுகிறார். கொதிப்படைகிறார். "பாரத சமுதாயம் வாழ்கவே!" எனப் பாடிய பாரதி-"மனிதர் உணவை மனிதர் பறிக்கும் வழக்கம் இனியுண்டோ?" மனிதர் "நோக, மனிதர் பார்க்கும் வாழ்க்கை இனியுண்டோ?" என்று கோபங் கொப்பளிக்கக் கேட்ட பாரதி 'தாயின் மணிக்கொடி பாரீர்-அதைத் தாழ்ந்து பணிந்து புகழ்ந்திட வாரீர்" என நாட்டுக்கொடி வாழ்த்துரைத்த பாரதி-உலகெங்கும் பற்பல இடங்களில் பரவிக் கிடக்கும் தமிழ்ச் சமுதாயத்திற்காகவும் பெருமூச்சுக் கவிபாடுகிறார்.

அப்போதுதான் நான் தொடக்கத்தில் குறிப்பிட்டவாறு "விதியே!" என அழைக்கிறார்.

*"விதியே! விதியே! தமிழச் சாதியை*
*என்செய நினைத்தாய் எனக் குரையாயோ*
*சார்வினுக் கெல்லாம் தகத் தக மாறித்*
*தன்மையும் தனது தர்மமும் மாயாது*
*என்றுமோர் நிலையா யிருந்து நின்அருளால்*
*வாழ்ந்திடும் பொருளொடு வகுத்திடுவாயோ?*
*தோற்றமும் புறத்துத் தொழிலுமே காத்து மற்று*
*உள்ளுறு தருமமும் உண்மையும் மாறிச்*
*சிதைவுற் றழியும் பொருள்களில் சேர்ப்பையோ?*
*அழியாக் கடலோ? அணிமலர்த் தடமோ?*
*வானுறு மீனோ? மாளிகை விளக்கோ?*
*கற்பகத் தருவோ? காட்டிடை மரமோ?*
*விதியே! தமிழச் சாதியை எவ்வகை*
*விதித்தாய் என்பதன் மெய்யெனக் குணர்த்துவாய்"*

உடன்பிறப்பே! விதியைப் பார்த்து எத்துணை வேகக்தோடு வினவுகிறார் பார்த்தாயா வேதனையை அடக்கிக் கொண்டு! பெரிய பாடல் அது! தமிழ்ச் சமுதாயம் தனக்குரிய அடிப்படை

உணர்வுகளை இழந்துவிடக்கூடாது என்பதை வலியுறுத்தவும், போலிச் சாத்திரங்களுக்கு அடிமைகளாகி விடக்கூடாது என்பதை வற்புறுத்தவும், எழுதப்பட்ட பாடல் அது!

விதி எனப்படும் ஊழ்வினை பற்றிய கருத்து மாறுபாடுகள் இருப்பினும்; பாரதி பாடுகின்ற முறையில் எவ்வளவு உருக்கம் மேலிடுகிறது.

*"விதியே! விதியே! தமிழச் சாதியை*
*என் செய நினைத்தாய் எனக்குரை யாயோ?"*

அடடா! அப்படியே நெஞ்சில் பதிந்து நிலை பெற்ற கேள்விக் குறியாக நிற்கிறதே-இந்த வரிகள்! எத்தனை ஆண்டுகளுக்கு முன்பு அந்தக் கவிச் சக்கரவர்த்தி கண்ணீர் மல்கிடக் கேட்டிருக்கிறார்.

பாரதி போன்ற கவிஞர்களின் எழுத்துக்கள் சாகா வரம் பெற்றவைதான்; சந்தேகமில்லை. அதற்காக நிலைமைகளும் சாகாவரம் பெற்றவைகளாக இருந்திடலாமோ? பாரதியின் கனவை நிறைவேற்றிட வேண்டாமோ?

*"சேமமுற வேண்டுமெனில்*
*தெருவெல்லாம் தமிழ்முழக்கம் செழிக்கச் செய்வீர்!"*

இந்தக் கனவு நிறைவேற வேண்டுமென்பதற்காகத் தானே விதியை நொந்து கொண்டார் பாரதி!

அதனை நீ உணர்ந்து கொண்டால் போதுமானது.

அன்புள்ள,

**மு. க.**

19-03-1976

# 179. கங்கையைப்போல் காவிரிபோல் கழகம் வாழும்!

**உடன்பிறப்பே,**

உன் கடிதம் கிடைத்தது. எழுத்துக்களைத் தாளிலே கோத்து அனுப்பியிருக்கிறாய் என்று நான் கருதவில்லை. உள்ளத்து உணர்ச்சிகளை நீர்வீழ்ச்சியாகக் கொட்டியிருக்கிறாய். உன் ஒவ்வொரு எழுத்தும் என் சிந்தை, அணு ஒவ்வொன்றையும் சிலிர்த்திடச் செய்கிறது. ஒரே மூச்சில் முழுக் கடிதத்தையும் படிக்க முடியாமல் திணறினேன். காரணம்; உன் வீர வாசகங்கள்; விசுவாசமுள்ள வார்த்தைகள்; இதயத்திலிருந்து எழுந்த சொற்கள்; என்மீது வைத்துள்ள சகோதர பாசம்-இவைகள் உன் கடிதத்தில் ஒன்றையொன்று முந்திக்கொண்டு என் விழியேறி நெஞ்சில் புகுந்திடும்போது உணர்ச்சியின் சுமை தாங்காமல் இமைகளுக்கிடையே நீர்த்திரைகள் தோன்றி விட்டன. ஒவ்வொரு பக்கமாகப் படித்து முடித்தேன். நீ என்னை விட்டுத் தொலைவிலே இருக்கிறாய். எனினும் எனக்காகக் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறாய். உடன்பிறப்பே உன் உள்ளம் தியாகச் சுரங்கம் மட்டுமல்ல; தேன்பாகாய்க் கற்கண்டாய் இனிக்கின்ற அன்பின் பேழையாகவும் இருக்கிறது.

சில ஆண்டுகளுக்கு முன்பு ஜப்பான் நாட்டில் தயாரிக்கப்பட்ட ஒரு திரைப்படம் பார்த்தேன். அதில் இறுதிக் காட்சியாக ஒரு பயங்கர பூகம்பம் காட்டப்படுகிறது.

பூமி அதிர்ச்சியாலும், வெடிப்பாலும் சிதறிக் குலுங்குகிற எழில்மிகு நகரங்கள், திசைகெட்டு ஓடுகிற சிறுவர், பெரியோர், பெண்டிர் ஓலமிடும் கொடுமை கூட்டம் கூட்டமாக மனிதர்கள் பூமி வெடிப்புக்குள்ளே அகப்பட்டு உயிர்விடும் கோரக் காட்சி; அந்த வேதனை நிறைந்த காட்சிகளினூடே நமது இதயத்தை உருக்கும் ஒரு நிகழ்ச்சியுங் காட்டப்பட்டது.

தாய் ஒருத்தி, குழந்தையைத் தூக்கிக் கொண்டு அங்கு மிங்கும் ஓடுகிறாள். அழகே உருவான குழந்தை. இளஞ்சிட்டு. அவளோ எழில்மேவும் நங்கை. பூகம்பம், நல்லவர்கள் கெட்டவர்கள்; அழகானவர்கள் அழகற்றவர்கள் என்று பார்த்தா தன் அழிவு வேலையைச் செய்கிறது! இல்லையே?

ஒரு பெரும் சப்தம்! அந்தத் தாய் தன் குழந்தையை இறுக அணைத்துக்கொண்டு ஓடும் இடத்தில் பூமி பிளக்கிறது. வெடிப்புக்குள்ளே தாயும் குழந்தையும் விழுகிறார்கள். அய்யோ! வெடித்த பூமி மீண்டும் மூடிக் கொள்கிறது. தாயைக் காணவில்லை. அந்தத் தாயின் இரு கைகள் மட்டும் பூமிக்கு மேலே நீட்டப்பட்டிருக்கின்றன. அந்தக் கைகளில் அந்தக் குழந்தை அழுதவாறு இருக்கிறது. தானழியும் போதும் தன் குழந்தையைக் காத்திட எண்ணிய அந்தத் தாயின் அன்பை அந்த ஒரே ஒரு நிகழ்ச்சியின் மூலம் காட்டி விட்டார்கள் படத்தைத் தயாரித்தவர்கள்.

ஆருயிர் உடன்பிறப்பே, உன் கடிதத்தைப் படித்த போது எனக்கு அந்த நிகழ்ச்சிதான் நினைவுக்கு வந்து மனத்தில் நிலைத்துவிட்டது.

எத்தனையோ கடந்த காலச் சம்பவங்களை மறவாமல் குறிப்பிட்டிருக்கிறாய். நான் பேசியவைகளை, எழுதியவைகளை, உரையாடும்போது சுட்டிக் காட்டியவைகளை ஒன்று விடாமல் ஞாபகமூட்டியிருக்கிறாய்.

“தலைவா! நீ அடிக்கடி கூறுவதுபோல் கழகம் ஒரு கட்டு மரம். எனவே கடலில் மூழ்காது.”

“கோழைகள் விலகட்டும். வீரர்கள் பின்தொடரட்டும். ஏசுவின் சில சீடர்கள்! முத்தமிடுவதுபோலக் காட்டிக் கொடுத்த ஜூடாஸ்! எழுதினீர்கள். முன்னறிவிப்புத் தந்தீர்கள். எதற்கும் கலங்காத நெஞ்சு படைத்தவர்களாய் ஒளிபடைத்த கண்களோடு விசுவாசமிக்கத் தொண்டர்களாய் உம்முடன் இருப்போம், மாயவரத்துக் கூட்டத்தில் ஒரு நாள் பேசும்போது சொன்னீர்களே; நான் ஒரு கணக்கை எடுத்துக் கொண்டிருக்கிறேன். நான்

வாழும்போது யார் யார் என்னுடன் இருக்கிறார்கள்; பதவிக்காக யார் யார் பல்லாண்டு பாடுகிறார்கள் என்ற அந்தக் கணக்கை அல்ல; நான் சோதனைக் களத்தில் நிற்கும்போது-யார் யார் உடன் இருக்கிறார்கள் என்ற அந்தக் கணக்கை எடுத்துக் கொண் டிருக்கிறேன்-என்று!"

உடன்பிறப்பே, இவைகளையெல்லாம் நீ எனக்குப் பசுமையாக நினைவூட்டும்போது-என் உள்ளம் மேலும் அமைதி பெறுகிறது. மேலும் உறுதி பெறுகிறது.

யார் யாரோ கழகத்தைவிட்டு ஒதுங்குகிறார்கள். சிலர் விலகுகிறார்கள். சிலர் மாற்றுமுகாம்களுக்குச் செல்கிறார்கள். யார் அவர்கள்? இயலாதவர்கள் அல்லது இந்தக் கட்சியில் நன்றாக அனுபவித்தவர்கள். அவர்களில் சிலரை; வலியத் தேடிச்சென்று கூட பதவிகளை வாரி வழங்கினோம். நீ குறிப்பிட்டிருக்கிறாயே; "என் தலைவன், எதிரில் வரும் "வேலை"த் தடுத்துப் பழகியவன்; ஆனால் பின்புறமிருந்து பாயும் கட்டாரியை அறியாத தலைவன்!" என்று-அது உண்மையாகக்கூட இருக்கலாம்.

அதற்காக நானோ-அல்லது கழகம் காக்கும் தலைமையில் உள்ளவர்களோ வருந்திக் கொண்டிருக்கவில்லை. இவைகள் எல்லாம் நாங்கள் எதிர்பார்த்தவைதான். நேற்றுக்கூட இரண்டு எம். பி. க்கள் போய்விட்டார்கள். யாராயினும் இன்னும் போகிறவர்கள் போகட்டும்; அதற்காக வயிற்றிலும் வாயிலும் அடித்துக் கொண்டு கதறப் போவதில்லை. கடைசி வரையில் இருக்கப்போகிறவர்கள் யார்? இருந்தவர்கள் யார்? அந்தக் கணக்கு ஒரு காலத்தில் தெரியத்தான் போகிறது. கடலில் போய்க் கலக்கும் தண்ணீருடன் கங்கையோ காவிரியோ வற்றிப்போய் விட்டதாக யாராவது சொல்ல முடியுமா? கடலில் சென்று கலப்பது கலக்கட்டும், கழனிகளில் பாய்ந்து பயன்விளைப்பது விளைக்கட்டும். கடலில் ஒரு பகுதி நீர் கலந்து-உபயோக மற்ற உப்பு நீராகிவிடுவதாலேயே நதியே வறண்டுவிடுமா என்ன? அந்த நம்பிக்கையோடு நமது கடமைகள் தொடரட்டும். இன்றைக்குக் கழகத்தைக் குறைகூறுவதின் மூலம், கழகத் தலைமையை வசைபாடுவதன் மூலம், தப்பித்தோம் பிழைத்தோம் என்று ஓடுகிற சிலர்; என்றைக்கோ ஒரு நாள் தங்கள் மனச்சாட்சிக்குப் பதில் சொல்லத்தான் வேண்டியிருக்கும்.

அந்த நாளை எதிர்பார்ப்போம்! அண்ணா வழியில் பணிபுரிவோம்! அமைதி! அமைதி! அமைதி! அதை எந்நாளும் காப்போம்.

அன்புள்ள,

**மு. க.**

20-03-1976

குறிப்பு:- மிசா கைதிகளாகச் சிறையிலிருந்த கழக உடன் பிறப்புக்கள் சிலர், கலைஞருக்கு எழுதிய கடிதங்களுக்கு; தணிக்கை அதிகாரிகளின் கெடுபிடி காரணமாக கலைஞர் முரசொலியில் எழுதிய கடிதம்.

# 180. சோவியத் கவிதையில்-
# ஒரு சுவையான கவிதை!

**உடன்பிறப்பே,**

"சோவியத்தின் ஐம்பது கவிஞர்கள்" என்ற அழகிய கவிதை நூல் ஒன்று நேற்று எனக்குக் கிடைத்தது. ஒருபுறம் ரஷ்ய மொழியிலும், மற்றொரு புறம் ஆங்கில மொழியிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ள கவிதைகள், மேலெழுந்த வாரியாகப் புரட்டிக் கொண்டே வரும்போது, Rasul Gamzatov ரசல் காம்சட்டோவ் என்ற கவிஞரின் பாடலில் என் கவனம் சென்றது. இதோ ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்ட அந்தக் கவிதை!

"Morning and evening, darkness and light-
Fishermen black and fishermen white.
The world's like an ocean; like fishes are we.
Like fishes that swim in the depths of the sea.

The world's like an ocean where fishermen wait,
Preparing their nets, their hooks and their bait.
How soon then, O Time, will you bring me to book
In the nets of the Night or on the Day's bited hook?"

Translated by Louis Zellikoff

இதனைத் தமிழில் மொழி பெயர்க்க எனக்குத் தெரிந்த ஆங்கிலமே போதுமானதாக இருந்தது. அதனால் யார் உதவியும் இல்லாமல் நானே இந்தக் கவிதைக்குத் தமிழாக்கம் ஒன்றினைப் படைத்தேன்.

*"காலையும், மாலையும்-கவின் ஒளி, இருள் போலே*
*கறுப்பு மீனவர்! வெள்ளை மீனவர்!*

*காசினி என்பது கடலாகும் துள்ளும் மீனாய் நாமாகி,*
*கடலின் அடியில் நீந்துகிறோம்.*

*நீலக் கடலாம் உலகினிலே*
*காத்து நிற்கும் மீனவர்கள்,*
*நீட்டிச் சுருக்கும் வலைகளுடன்!*
*இரை போட்டே இழுக்கும் தூண்டிலுடன்!*
*காலம் என்னும் தூதுவனே! எமைக்*
*காரிருள் வலையில் மாட்டுவையோ?*
*கடும் பகல் தூண்டிலை நீட்டுவையோ?''*

எழில்மிகு மொழி பெயர்ப்போ இல்லையோ; கவிஞனின் எண்ணத்தை எதிரொலித்து விட்டதாகவே நம்புகிறேன்.

காலையும் மாலையும் காத்து நிற்கும் மீனவர்களாகவும், அவர் களின் வலையிலோ, தூண்டிலிலோ சிக்கப் போகிற நிலைமையை காலம் எப்போது வழங்கப் போகிறதோ நமக்கு? என்ற சூழ்நிலை யையும் சித்தரித்திருக்கிற கவிஞர், சோவியத் நாட்டைச் சேர்ந்தவர்.

அந்த மண்ணில், காலத்தை வெல்லக்கூடிய காரியங்கள் பலவற்றை நிகழ்த்திக் காட்டியிருக்கிறார்கள். இட்லரின் படை வரிசை மாஸ்கோ வரையில் நுழைந்தபோதும் மனந்தளராமல் பனிக் காலத்தின் வருகைக்காகக் காத்திருந்து பகைவரைக் காலத்தால் வென்ற வரலாற்றுக்குரிய பூமி அது! எனவே அவர்கள், காலத்தையும் வென்றிடுவர்! காலத்தாலும் வென்றிடுவர்!'

என்ன திடீரென்று சோவியத் நாட்டின் மீது புகழாரம் தொடுக்கிறாய்; என நீ கேட்கமாட்டாய்! ஏனெனில் சோவியத் நாட்டுக் கொள்கைகளை முதன் முதலாகத் தமிழகத்தில் பரப்பிய பெருமை, பெருந் தலைப்பாகையுடன் ரஷ்யாவுக்குச் சென்று திரும்பிய பெரியாரையே சேரும். என் மகன் பெயரே ஸ்டாலின் என்பதும், அவனுக்கு இப்போது இருபத்திரண்டு வயது முடிகிறது என்பதும், அவனைச் சென்னையில் உள்ள கிறிஸ்துவப் பள்ளி எதிலும் சேர்க்க முடியாமல் நான் திண்டாடியதும் நீ மறக்க முடியாதவைகள் அல்லவா? ஸ்டாலின் என்ற பெயரை மாற்றினால், சேர்த்துக்கொள்கிறோம்; என்றனர். பெயர் மாற்றப்படவில்லை என்பது நான் சொல்லித் தெரிய வேண்டிய ஒன்றல்ல. "தி. மு. கழகம் தான் உண்மையான கம்யூனிஸ்டுக் கட்சி தமிழகத்தில்!" என்று நமது அண்ணா அவர்கள் 1952 ஆம் ஆண்டிலேயே சென்னை தி. மு. க. மாநிலப் பொது மாநாட்டில் பேசியதை நான் பலமுறை உனக்கு நினைவூட்டியிருக்கிறேன்.

கம்யூனிசக் கொள்கைகளையும், சித்தாந்தங்களையும் இங்குள்ள சில கம்யூனிஸ்டுகள் ஒதுக்கிவைத்து விட்டு; கழகத்தை வீழ்த்தினால் போதுமென்று முனைகிற இந்த நேரத்தில்-நான் கூறுகிற இந்த வரலாற்றுக் குறிப்புக்கள் அவர்கள் செவிகளில் நுழையாது. நானறிவேன் அதனை! ஒரு காலத்தில் கம்யூனிஸ்டுகள் பெரும் அடக்குமுறைக்கு ஆளானபோது அவர்களுக்காக வாதாடிய கட்சியாகத் தமிழகத்தில் தி. மு. க. திகழ்ந்தது. பத்து ஆண்டுகளுக்கு முன்பு சென்னை வாணிமகாலில் எனக்கு நடைபெற்ற ஒரு பாராட்டுக் கூட்டத்தில் தோழர் கே. டி. கே. தங்கமணி; அதனை விரிவாக எடுத்துரைத்து என்னைப் புகழ்ந்ததை காலத்தின் கோலத்தால் அவர் ஒரு வேளை மறந்திருக்கக் கூடும். நான் மறந்திடவில்லை.

கவிதையைப் பற்றி ஒன்றைச் சொல்லவந்து; உடன்பிறப்பே-உன்னை அழைத்துக் கொண்டு எங்கெங்கோ போய்விட்டேன்.

சோவியத் கவிஞர், உலகத்தைக் கடலாக்கி-காலையையும், மாலையையும் மீனவர்களாக்கி-நம்மை யெல்லாம் மீன்களாக்கி-காலம் நம்மை; வலையில் தள்ளுமோ? அல்லது தூண்டிலில் சிக்கவைக்குமோ? என்று உருக்கமாகக் கேட்கிறார்.

நான் காலத்தைக் கேட்கவில்லை! கழகக் கண்மணியே; உன்னைக் கேட்கிறேன். வலையிலும் சிக்காமல், தூண்டிலிலும் அகப்படாமல், நமது இலட்சியங்களையும், அந்த இலட்சியங்களை ஏந்தியிருக்கிற கழகத்தையும் காப்பாற்றுகிற ஆற்றல் உனக்கு உண்டு! இதை நான் சொல்லும் போது வலையில் வீழ்ந்த சில மீன்களைப் பற்றி - தூண்டிலில் மாட்டிய சில மீன்களைப்பற்றி - நீ எண்ணுவது எனக்குப் புரிகிறது. அவைகள் விருந்து மண்டபங்களைச் சிறப்பிக்கப் போகின்றன. நமக்கு வெள்ளித் தட்டுகளில் காரம் மசாலா ஆகியவற்றைத் தடவிக்கொண்டு துண்டங்களாக அமரப் போகின்றன. நமக்கு வெள்ளித் தட்டும் வேண்டாம்! விருந்து மண்டபமும் வேண்டாம்! அலைகடலின் ஆழத்திலேயே நீந்திக் கொண்டிருப்போம்! அதோ! அதோ! தெரிகிறது; நமது அண்ணனின் கல்லறை! அதனை வணங்கியவாறு நீந்திக் கொண்டிருப்போம்!

அன்புள்ள,

மு. க.

22-03-1976

# 181. "சராசரங்கள் வரும் சுழன்றே சகடு போல்!"

**உடன்பிறப்பே,**

அண்ணாவின் பெருந்தன்மை மிகுந்த அரசியல் பண்பாட்டைக் கடைப்பிடித்து வளர்ந்தவர்கள் நாம். 1967ஆம் ஆண்டு அண்ணாவின் தலைமையில் ஆட்சி அமைந்த போது சுதந்திரக்கட்சி உறுப்பினர் ஒருவர்; மிக வேகமாகவும் துடிப்புடனும் சில கேள்விகளைக் கேட்டார். தேர்தல் முடிந்து புதிய ஆட்சி தொடங்குவதற்கு முன்பாக இருந்த இடைக்காலத்தில் "காபந்து சர்க்கார்" ஏராளமான "பைல்"களைக் கொளுத்தியிருக்கிறதே அதற்கு ஏன் உடனடியாக ஒரு விசாரணை நடத்தக் கூடாது? என்பதுதான் சுதந்திரக் கட்சி உறுப்பினரின் கேள்வியாகும். முதலமைச்சர் அண்ணா, என்ன விடை யளித்தார் தெரியுமா?

> "பைல்கள் கொளுத்தப்பட்டது பற்றி இவ்வளவு நேரம் இங்கு கேள்வி பதில்கள் மூலம் விவாதித்திருக்கிறோமே; அதுவே விசாரணை நடத்தியதற்குச் சமம்" என்றுதான் பதில் அளித்தார்.

ஜனநாயகத்தில் ஒரு கட்சியின் ஆட்சி மாறி இன்னொரு கட்சியின் ஆட்சி வருவது இயல்பு. வெற்றி பெற்ற கட்சி, தோல்வியடைந்த கட்சியை இழிவாக நடத்துவதும்-பழிவாங்கும் தன்மையில் திட்டங்களை வகுப்பதும்; ஜனநாயக முறையில் பொறுப்பேற்றுக் கொள்கிற ஆளுங்கட்சியின் இலக்கணமாக இருப்பதில்லை.

இன்றைய தமிழகம் உள்ளிட்ட சென்னை மாகாணத்தை ஒரு காலத்தில் நீதிக்கட்சியினர் பரிபாலனம் செய்தார்கள். அவர்களுடைய ஆட்சி மாறி, காங்கிரஸ் ஆட்சி உருவாயிற்று. நீதிக்கட்சியினர் எழுப்பிய கட்டிடங்கள்; அந்தத் தலைவர்களின் பெயரால் அமைக்கப்பட்ட மண்டபங்கள், மன்றங்கள் எதனையும்

மாற்றி அமைக்கிற கொள்கையை அன்றிருந்த காங்கிரஸ் ஆட்சியாளர்கள் கடைப்பிடித்ததாகத் தெரியவில்லை.

வெள்ளையர் சிலரது சிலைகள், படங்கள், போன்றவை-வெள்ளையர் சிலரது பெயரால் இருந்த சாலைகள் காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலும் சரி; தி. மு. க. ஆட்சிக் காலத்திலும் சரி; மாற்றப்பட்டிருக்கின்றன.

நமது நாட்டினர்-நமது மக்களின் பெருவாரியான வாக்குகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட நம்மவர்-சுதந்திர இந்தியாவுக்குச் சொந்தக்காரர்கள்-தமிழ் மண்ணிலே வாழ்பவர்கள்-அல்லது வாழ்ந்தவர்கள்; அவர்களையும் அந்நிய நாட்டு ஆதிக்க வெறியர்களைப் போலக் கருதும் பழக்கத்தை-பிரகாசம் பந்துலுகாரு காலத்திலேயிருந்து காமராஜர், பக்தவத்சலம் ஆகியோர் காங்கிரசில் முதலமைச்சர்களாக இருந்த காலம் வரையில் யாரும் ஏற்படுத்திக் கொள்ளவில்லை.

அதைப்போலவே, கழக அரசின் ஒன்பதாண்டுகால ஆட்சிக்காலத்தில் காங்கிரஸ் ஆட்சியின்போது உருவான மண்டபங்கள், மன்றங்கள் போன்ற நினைவுப் பெயர்கள் எதனையும் அகற்றிடவோ மாற்றிடவோ முனைந்ததில்லை. ஒரு சிறிய உதாரணம் கூறவேண்டுமானால் திருவள்ளூரில் நகராட்சி மன்ற அலுவலகத்துக்கு காங்கிரஸ் கட்சியின் நகராட்சித் தலைவர் பெயர் சூட்டப்பட்டது. நகராட்சித் தேர்தலில் காங்கிரஸ் தோற்று; கழகத்தினர் வெற்றி பெற்றபோது அந்த அலுவலகத்தின் பெயரை மாற்ற வேண்டுமென்று ஒரு தீர்மானம் நிறைவேற்றி அங்கீகாரத்துக்கு அரசுக்கு அனுப்பினர். கழக அரசு, அந்தத் தீர்மானத்தை ஏற்றுக்கொள்ளாமல்-காங்கிரஸ் கட்சியின் முன்னாள் நகராட்சித் தலைவர் பெயராலேயே அந்த மன்றம் தொடர்ந்து விளங்கட்டும் என்று முடிவு செய்தது.

நகரசபையின் தீர்மானத்தைச் சாதகமாக்கிக் கொண்டு அரசியல் நாகரீகத்தைக் குலைக்கும் செயலைக் கழக அரசு, செய்திட முனையவில்லை.

கழக அரசின் காலத்திலேதான் தில்லையாடியில் வள்ளியம்மை நகர் உருவாக்கப்பட்டது.

கழக அரசின் காலத்திலேதான் சிதம்பரனார் சிறையிலே இழுத்த செக்கு, சென்னைக்குக் கொண்டுவரப்பட்டு காட்சிப்

பொருளாக ஆக்கப்பட்டது! கழக அரசின் காலத்திலேதான் விடுதலைப் போராட்ட தியாகிகள் எட்டாயிரம் பேருக்கு மாதம் எழுபத்தைந்து ரூபாய் வீதம் மானியம் வழங்கப்பட்டது! விடுதலைத் தியாகிகள் சுதந்திரநாள் வெள்ளி விழாவுக்காக தாமிரபத்திரம் பெற டெல்லி சென்றபோது புகைவண்டி நிலையத்துக்குச் சென்று அனைவருக்கும் அமைச்சர்கள் மரியாதை செய்து அனுப்பி வைத்தது கழக அரசின் காலத்திலே தான்!

வாஞ்சிநாதன் குடும்பத்துக்கு, சங்கரலிங்க நாடார் குடும்பத்துக்கு, நெல்லையப்பர் குடும்பத்துக்கு, நாமக்கல் கவிஞர் குடும்பத்துக்கு, டாக்டர் வரதராஜலு நாயுடு குடும்பத்துக்கு, இன்னும் பல பெருந் தியாகிகளின் குடும்பத்துக்கு இயன்ற உதவிகளைச் செய்ததும் கழக அரசின் காலத்திலேதான்!

மூதறிஞர் ராஜாஜிக்கு நினைவாலயம் அமைத்ததும்; அவர் பிறந்த இல்லத்தை தேசீய நினைவுச் சின்னமாக ஆக்க முனைந்ததும்-பாரதி பிறந்த வீட்டை எட்டயபுரத்தில் அரசு நினைவுச் சின்னமாக மாற்றியதும்-பெருந்தலைவர் காமராஜருக்கு நினைவகம் எழுப்பியதும்-அவர் பிறந்த வீட்டை அரசு நினைவுச் சின்னமாக ஆக்கியதும்-கடற்கரைச் சாலை காமராஜர் சாலையாக மாறியதும்-கன்யாகுமரியில் நேசமணிபாலம் அமைத்திட முனைந்ததும்-கழக அரசின் காலத்திலேதான்!

காமராஜர், ராஜாஜி, காயிதேமில்லத், பசும்பொன் தேவர்-இப்படி எந்தக் கட்சியின் தலைவர்களாயினும் அவர்களைப் பெருமைப்படுத்த-அவர்களை மதித்து நடக்க அவர்தம் உழைப்பை, ஆற்றலை, தியாகத்தைப் போற்றிட-கழக அரசு தவறியதில்லை.

இந்த அரசியல் பண்பாடு சிறிதும் வழுவாமல் நடக்க வேண்டுமென்பது அண்ணன் நமக்கு வழங்கிய ஆணை!

எதிர்க்கட்சியினர்-கருத்து மாறுபாடு உடையவர்கள்-கொள்கை வேறுபாடு உடையவர்கள்-இதற்கெல்லாம் அப்பாற்பட்ட அரசியல் நெறிமுறைகளில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டவர்களாகத் திகழவேண்டு மென்பதே; நாம் கட்டிக் காத்துவரும் பண்பாடாகும்.

ஆட்சி மாற்றங்களில்-கொள்கை மாற்றங்கள் இருக்கலாம். திட்டங்களில் மாற்றங்கள் இருக்கலாம். ஆளுங் கட்சியின் இலட்சிய

நோக்குகளுக்கேற்ப நடைமுறை மாற்றங்கள் இருக்கலாம். ஆட்சியில் முதலில் இருந்த கட்சிகளின் சுவடே தெரியாமல் அழித்துவிட வேண்டுமென்று எதிர்க்கட்சிகள் விரும்புவது ஜனநாயக மரபல்ல. பிறகு-ஜனநாயகத்தில் இன்னொரு கட்சி வரக்கூடும்!

நம் நாட்டை நாம் ஆண்டுகொண்டிருக்கிறோம். நாம் தான்-ஜனநாயக அலைகளில் மேலும் கீழுமாக மாறி மாறி வருகிறோம். வரப்போகிறோம். அதுவே ஜனநாயகத் தத்துவம்.

நமக்குள் அந்நியர்கள் யாருமில்லை. இதை உணராமல்; யார் நடந்தாலும் என் அன்பு உடன்பிறப்பே! நீ அதற்காகக் கவலைப்படாதே! வருந்தாதே!

"சராசரங்கள் வரும்; சுழன்றே சகடுபோல்!"

என்ற தியாகராஜ பாகவதரின் பழைய பாட்டு ஒன்றின் கருத்தைப்போல-

ஜனநாயகம்; கட்சிகளை மாறி மாறி ஆட்சிப் பொறுப்பில் அமர்த்தும் என்ற பேருண்மையை மறந்து விடத் தேவையில்லை.

அன்புள்ள,

**மு. க.**

23-03-1976

# 182. வயதானவர் கூறுவது- வாழ்த்தாகக் கருதுவோம்!

**உடன்பிறப்பே,**

பெரியவர் பக்தவத்சலனார் அவர்களிடம் எனக்கு, கட்சிகளுக்கு அப்பாற்பட்ட ஒரு மதிப்பும் மரியாதையும் எப்போதும் உண்டு. நான்கைந்து மாதங்களுக்கு முன்புகூட நான் உனக்கு எழுதிய கடிதமொன்றில் அவரது அயராத உழைப்பைப் பற்றிக் குறிப்பிட்டுப் பாராட்டியதை மறந்திருக்க மாட்டாய். முறுக்கேறிய வாலிபர்கள் கூட பொதுவாழ்வில் சோம்பேறித்தனத்துக்கு அடிமையாகி விடும்போது, முதியவர் பக்தவத்சலம் அவர்கள் எவ்வளவோ சிரமத்திற்கிடையே கூட்டங்களுக்குச் செல்வதும், ஏடுகளில் எழுதுவதும் காணுகிற நேரத்தில் அவரது சுறுசுறுப்பைப் புகழத்தான் வேண்டியிருக்கிறது. அவரைப் போன்ற பெரியவர்கள், நமது கழகத்தைப் பற்றி-கழக ஆட்சியைப் பற்றி சிலவிஷயங்களைப் பொது மக்களின் முன்னால் வைத்திடும்போது அதற்கான விளக்கங்களைத் தரவேண்டிய அவசியத்துக்கு நான் ஆளாகிறேன்.

திருவள்ளூரில் அம்பேத்கர் சிலை திறப்புவிழா நடை பெற்றிருக்கிறது. டாக்டர் அம்பேத்கர், தாழ்த்தப்பட்ட மக்களின் நம்பிக்கை நட்சத்திரம். இந்திய அரசியல் சட்டத்தை உருவாக்கிய மாமேதை. இந்திய நாட்டிலேயே அரசின் சார்பில் அம்பேத்கர் பெயரில் கல்லூரி ஒன்றை உருவாக்கிய பெருமை, தமிழகத்தில் கழக அரசைச் சேரும். அவரது சிலைகளை நானுங்கூட பல இடங்களில் திறந்து வைத்திருக்கிறேன். திருவள்ளூரில் நடைபெற்ற சிலை திறப்பு விழாவில் நமது பெரியவர் பக்தவத்சலம் அவர்கள் கலந்து கொண்டு உரையாற்றியிருக்கிறார்கள். தாழ்த்தப்பட்ட மக்களுக்காக முதன்முதலில் தனியாக ஒரு வாரியம் அமைத்து அதன் சார்பில் சுமார் பதின்மூன்று கோடி ரூபாய்ச் செலவில் ஏறத்தாழ முப்பத்திரெண்டாயிரம் வீடுகளைக்

கட்டித்தந்த கழக அரசுக்கு, அரிஜனங்களின் மீது அக்கறையில்லை என்ற கருத்துப்பட அவர் உரை நிகழ்த்தியிருக்கிறார்.

அதே விழாவில் அவர் மற்றொன்றையும் வேகமாகச் சுட்டிக் காட்டியுள்ளார்.

> "கட்டபொம்மனின், பழைய கோட்டையைப் புதுப்பித்து நினைவுச் சின்னமாக்கினாலாவது ஒரு அர்த்தம் உண்டு. ஆனால் அவனுக்காகப் புதிதாக ஒரு கோட்டை எழுப்பி அதற்கு-நினைவுச்சின்னம் என்று பெயர் கொடுத்தது வேடிக்கையாக இருக்கிறது."

இது அவரது பேச்சு! ஆமாம், ஏடுகளில் வெளிவந்துள்ளது.

பாஞ்சாலங்குறிச்சிக்குச் சென்றவர்களுக்கு உண்மை விளங்கும். வீரபாண்டியக் கட்டபொம்மன் வாழ்ந்த கோட்டையை வெள்ளைக்காரர்கள் இடித்துத் தரைமட்டமாக்கிவிட்டார்கள். அதனை நமது தமிழகஅரசு, அகழ்ந்து பார்க்க ஆணை பிறப்பித்தது.

சுமார் முப்பது ஏக்கரா பரப்பளவு கொண்ட பகுதி; கோட்டைப் பகுதியாக இருந்திருக்கிறது. பூமிக்குக் கீழே கோட்டைச் சுவர்களின் அஸ்திவாரங்கள் அப்படியே இருக்கின்றன. ஆலோசனை மண்டபங்களின் மேடைகள் மண்ணுக்குள்ளேயிருந்து இப்போது வெளித் தோற்றத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. கோட்டைக்குள்ளே வாழ்ந்தபோது கட்டபொம்மனும் அவனைச் சார்ந்தவர்களும் பயன்படுத்திய போர்க் கருவிகள், வணங்கிய சிலைகள், பாத்திரங்கள் சிலவற்றை அகழ்ந்தெடுத்து வைக்கப்பட்டுள்ளன.

பக்தவத்சலம் அவர்கள் கூறுவதுபோல அதே அஸ்தி வாரத்தைப் பயன்படுத்தி பழைய கோட்டையை அப்படியே அதே இடத்தில் எழுப்புவதென்றால் ஐம்பது அல்லது அறுபது லட்ச ரூபாய் தேவைப்படும். அதுமட்டுமல்ல; தொல்பொருள்களைப் பாதுகாத்தல்-தொன்மையைப் புதுப்பித்துக் கெடுக்காமல்; அப்படியே மக்கள் பார்வைக்கு வைத்தல்-என்ற குறிக்கோளும் கெட்டுப் போய்விடும். பாழடைந்த கோட்டைச் சுவர்கள் இருந்தாலாவது அவைகளைப் புதுப்பித்து அப்படியே கட்டியிருக்க முடியும். பூமியின் ஆழத்திலிருக்கிற அடித்தளத்தை அப்படியே

அழியாமல் பாதுகாப்பதின் மூலம் நமது பழம்பெரு வீர வரலாறு ஒன்றின் சுவடுகளைக் காணுகின்ற உணர்வு நமக்கு ஏற்படுகிறது.

அந்தப் பழங்கோட்டையின் அடித்தளத்தை ஒட்டினாற் போலத்தான் புதிய கோட்டை சுமார் ஆறு லட்சரூபாய் செலவில் கட்டப்பட்டு, அதற்குள் கட்டபொம்மன் சிலையும், அவனது படைத்தளபதிகள்-அமைச்சர்கள் திருவுருவங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

கட்டபொம்மனுக்காக நினைவுக்கோட்டை கட்டியது மட்டுந்தான் பெரியவருக்குத் தெரியும் என்று நினைக்கிறேன். இந்தக் கோட்டைக்கு அருகாமையிலேயே கட்டபொம்மனின் வாரிசுதாரர்கள் மிகக் கஷ்ட நிலையிலே இருந்தவர்களுக்கு இருநூறு இலவச வீடுகளும் கட்டித் தரப்பட்டுள்ளன.

ஆம்; கட்டபொம்மனுக்கு ஆறு லட்ச ரூபாயில் ஒரு கோட்டை! அவன் வாரிசுதாரர்களுக்கு அதைவிட அதிகச் செலவில் இருநூறு வீடுகள்! அதுமட்டுமல்ல; அவர்கள் சாகுபடிக்கு நிலங்கள்! பாசன ஏற்பாடுகள்! இத்தனையும் செய்யப்பட்டிருக்கிறது.

1973-ஆம் ஆண்டு என்று நினைவு! பெரியவர் மணலியும், நண்பர் சுப்புவும் பாஞ்சாலங்குறிச்சி விழாவுக்கு என்னை அழைத்தார்கள். அப்போது அவர்கள் வலது கம்யூனிஸ்டு கட்சியின் உறுப்பினர்கள். மணலி, அந்தக் கட்சியின் பெருந்தளபதியுங்கூட!

அவர்கள் அழைப்புக்கிணங்க பாஞ்சைக்குச் சென்றேன். அதன் விளைவுதான் இன்றைக்கு அந்தப் பகுதியில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள்!

பெரியவர் பக்தவத்சலனார் கூறுவதுபோல எதையும் ஆடம்பரத்துக்கோ, விளம்பரத்துக்கோ செய்வதில்லை. காஞ்சி செல்லும் வழியில் "பக்தவத்சலனார் பாலிடெக்னிக்" இருக்கிறதே; அதை யாராவது விளம்பரம் என்று கூறிவிட முடியுமா?

பாஞ்சையில் கோட்டையும் எழுப்பினோம்-இருநூறு பேருக்கு இலவச வீடுகளும் வழங்கினோம்! பூம்புகாரில் கலைக்கூடம், நெடுங்கல் மன்றம், இலஞ்சி மன்றம், போன்றவைகளும் கட்டினோம்.

சுமார் ஆயிரம் மீனவர்களுக்கு நாற்பது லட்சரூபாய் செலவில் வீடு கட்டி இலவசமாக வழங்கியிருக்கிறோம்.

பாஞ்சைக்கும், பூம்புகாருக்கும் பக்தவத்சலனார் அவர்கள் ஒருமுறை சென்று வருவாரேயானால்; நான் அவருக்கு இவ்வளவு விளக்கங்களும் சொல்லத் தேவையிருந்திருக்காது.

எனினும் வயதான பெரியவர் அவர்! அவர் கூறுவது எதுவாயினும் அதனை நாம் வாழ்த்தாக எடுத்துக் கொள்வோம்!

அன்புள்ள,

மு. க.

24-03-1976

# 183. உண்மை - உதய ஞாயிறு போலவே!

உடன்பிறப்பே,

இந்திய கம்யூனிஸ்டு கட்சியினருக்கு, எங்கிருந்தோ திடீரென்று "தேசபக்தி" வானத்தைக் கீறிக்கொண்டு 'பொத்' தென்று கீழே குதித்து வேடிக்கை காட்டிக் கொண்டிருக்கிறது.

உலகப் போரில் நேச நாடுகளும், அச்சு நாடுகளும் இரண்டு அணிகளாகப் பிரிந்து மோதிக் கொண்டபோது ரஷ்யா என்ன செய்கிறது என்று காத்திருந்து அது முடிவு எடுத்த பிறகு முடிவு எடுத்தவர்கள் அவர்கள்!

சீன ஆக்ரமிப்பு இந்தியாவின்மீது நடந்தபோது அதை ஆக்ரமிப்பு என்று கூறுவதற்குக்கூட சட்ட சபையிலேயே தயங்கியவர் தமிழ்நாடு இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் இன்றைய தலைவர். சீன ஆக்ரமிப்பை, "சீனா - இந்தியா தகராறு" என்று வர்ணித்து, சீனாவுடன் இந்தியா பேச்சுவார்த்தை நடத்தவேண்டும் என்றெல்லாம் பேசியவர்தான் இன்றைய இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாட்டுத் தலைவர். இவர்களுக்கு இன்று இந்திய ஐக்கியத்திலும், இந்தியப் பாதுகாப்பிலும் அளவுக்கு மீறிய அக்கறை இருக்கலாம். அதனை அவர்கள் முரசறைந்து மூலைக்கு மூலை அறிவித்துக் கொண்டிருக்கலாம். அதற்கு நாம் குறுக்கே நிற்கப்போவதில்லை.

ஆனால் தாங்கள்தான் புனிதமான தேசபக்த சிகாமணிகளைப் போலவும் தி. மு. கழகம் தேசவிரோத சக்தி போலவும் மக்களை நம்பவைப்பதற்காகப் படாதபாடு பாடுகிறார்கள்.

"தி. மு. க.வின் ஏகாதிபத்தியத் தொடர்புகள், மாநில சுயாட்சிக் கொள்கை, ஆகியவற்றைப் புரிந்து கொண்ட மாத்திரத்தில் அதாவது 1972-தொடக்கத்தில் அதனுடன் இருந்த தொடர்புகளை அறுத்துக் கொண்டோம்"

என்று அவர் ஒரு நீண்ட அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.

1971-ஆம் ஆண்டு தி. மு. கழகத் தேர்தல் அறிக்கையிலேயே மாநில சுயாட்சிக் கோரிக்கை வலியுறுத்தப்பட்டிருந்தது.

இந்திய ஒருமைப்பாடு-அரசுரிமை இவைகளுக்கு உட்பட்டு மாநிலங்கள், தங்கள் சுயாட்சித் தன்மையைப் பெருக்கிக் கொள்ளவும், மத்தியில் கூட்டாட்சி செயல்படவும்-தி. மு. கழகம் பாடுபடும் என்பதைத் தேர்தல் நேரத்தில் தெளிவாக விளக்கி யிருக்கிறோம்.

இன்று மாநில சுயாட்சி என்பது "பிரிவினை வாதம்" என்று கற்பனை செய்து பேசுகிற இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் அருமைத் தோழர் அவர்கள்: 1968-ஆம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற மாநில சுயாட்சி மாநாட்டில் அறிஞர் அண்ணா, காயிதே மில்லத், சிலம்புச் செல்வர் ஆகியோருடன் ஒரே மேடையில் கலந்து கொண்டு மாநில சுயாட்சியை ஆதரித்துக் காரசாரமாகப் பேசியதை அப்போதே எல்லா ஏடுகளும் வெளியிட்டிருக்கின்றன.

இந்தியாவில் தனித்தனி தேசிய இனங்கள் இருக்கின்றன என்று குறிப்பிட்டு, அவைகள் அந்தந்த மாநில அளவில் மாநில சுயாட்சி பெற்றுத் திகழவேண்டுமென்று கம்யூனிஸ்டுகள்; தீர்மானங்கள் நிறைவேற்றியதை மறந்துவிட்டு-இன்று தி. மு. கழகத்தைப் பார்த்து "தனிச் சுதந்திர நாடு" கேட்கிற கட்சி என்று குற்றம் சாட்டுகிறார்களே; இது எவ்வளவு பெரிய அபவாதம் என்பதை; உடன்பிறப்பே! நீ ஊராருக்கு எடுத்துச் சொல்லுக!

சீன ஆக்ரமிப்பின் போதும் சரி; பாகிஸ்தான் ஆக்ரமிப்பின் போதும் சரி; கட்சி வேறுபாடு-கருத்து மாறுபாடு-அனைத்தையும் மறந்துவிட்டு நமது அண்ணா அவர்களின் ஆணைப்படி ஆசிய ஜோதி பண்டித நேருவின் கரத்தையும், பின்னர் திரு. லால்பகதூர் கரத்தையும் வலுப்படுத்துகிற அணியிலே தான் நாம் நின்றோம்.

பிரிவினைக் கொள்கையைத் தி. மு. கழகம் அறவே கைவிட்ட பிறகு; அண்ணா அவர்களின் காலத்தில் நமது கழக சட்ட திட்டத்தில் கீழ்க்கண்டவாறு நமது குறிக்கோளுக்கான விளக்கம் தரப்பட்டிருந்தது.

**விதி. 2. குறிக்கோள்**

"தமிழகம், ஆந்திரம், கேரளம், கருநாடகம் ஆகிய நான்கு மொழிவழி மாநிலங்களும், இந்திய அரசுரிமை-

ஒருமைத் தன்மை-அரசியலமைப்புச் சட்டம் ஆகிய வற்றுக்குள், இயன்ற அளவு கூடுதலாக அதிகாரங்களைப் பெற்று, நெருங்கிய திராவிடக் கூட்டமைப்பாக நிலவப் பாடுபடுவது"

இந்த இரண்டாவது விதியை 1973-ஆம் ஆண்டு புதுக் கோட்டையில் நடத்திய பொதுக்குழுவில் திருத்தி அமைத்தோம்.

அரசியல் ரீதியான கூட்டமைப்பாக இருத்தல் கூடாதென்று கருதி-தமிழகம், ஆந்திரம், கேரளம், கருநாடகம் ஆகிய நான்கு மாநிலங்களின் நெருங்கிய தன்மை "**கலாச்சார அடிப்படையில் மட்டும்**" இருந்திட வேண்டுமென நமது கழக சட்ட திட்டத்தை மாற்றி அமைத்துக் கொண்டோம்.

இதன் வாயிலாக இந்தியாவின் ஒருமைப்பாடு, அரசுரிமை, அரசியல் அமைப்புச் சட்டம் ஆகியவற்றுக்குள்தான் நமது கழகத்தின் கொள்கை, குறிக்கோள், கோரிக்கைகள் இருக்குமென்ற நிலைமைக்கு மேலும் வலுவான விளக்கமளித்து, இந்தியாவில் உள்ள எல்லா மாநிலங்களுமே, சுயாட்சிப் பெருக்கத்திற்கு அதிக அதிகாரங்களைப் பெறவேண்டுமென்பதைத் தெளிவாக்கி யிருக்கிறோம்.

இந்தியாவின் பலம், பல்வேறு தேசிய இனங்களின் கலாச்சாரப் பாதுகாப்பிலும் வளர்ச்சியிலும் அந்த தேசிய இனங்களின் ஒற்றுமையிலும், ஒன்றையொன்று தாழ்த்தாமல் போற்றிடுகின்ற நன்மையிலும் அடங்கியிருக்கிறது என்பதை இந்திய நாட்டு நலனில் ஆர்வம் படைத்த அனைவரும் உணர்ந்தே யிருக்கின்றனர்.

"பரதக்கலை" தமிழகத்தில் சிறப்புடையது என்றால் "கதகளி" கேரளத்தின் பெருமைக்குரிய கலையாகத் திகழ்கிறது. வடக்கே செல்லும்போது "மணிபுரி" என்கிறோம். இந்தக் கலைகள் ஒன்றோடொன்று மோதிக் கொள்வதை நாம் விரும்பவில்லை.

நடை, உடை, உணவு இத்யாதி விஷயங்களிலேகூட கலாச்சார மாறுபாடுகள் இருக்கின்றன. மாநிலத்துக்கு மாநிலம் இருக்கின்றன. அதே நேரத்தில் அந்தக் கலாச்சாரங்களுக்கிடையே நல்லுறவும், நாட்டின் ஒற்றுமையைக் கட்டிக் காத்திடும் ஆழமான உணர்வும் இருந்திட வேண்டுமென்பதில் இரண்டு விதமான கருத்துக்களுக்கே இடமில்லை.

இந்தியாவில் உள்ள ஒவ்வொரு மொழியினருக்கும் தனித்த சிறப்புக்கள், இலக்கியங்கள், வரலாற்று வீர காதைகள் இருக்கத்தான் செய்கின்றன.

பகடு, பஃறி, அம்பி, ஓடம், திமில், தோணி, பட்டிகை, படுவை, தொள்ளம், புணை, மிதவை, தெப்பம் தங்கு, நவ்வு, நாவாய் - முதலியவை தமிழர்கள், பழங்காலத்தில் பயன்படுத்திய மரக்கலங் களின் பெயர்கள் என்று பெருமைப்படும்போது; நம்மைப் போலவே வங்க மொழிக்காரர்கள் அவர்கள் பயன்படுத்திய மரக்கலங்களுக்குப் பெயர் வைத்திருக்க மாட்டார்கள் என்றா கூறமுடியும்?

மராட்டிய மொழியினர், அவர்கள் ஓட்டிய அக்காலத்து மரக்கலங்கள் அந்த மொழிப் பெயர்களைப் பெறாமலா இருந்திருக்க முடியும்?

கோசிகம், பீதகம், பஞ்சு, பச்சிலை, நுண்துகில், சுண்ணம், வடகம், பாடகம், சித்திரக் கம்மி, பேடகம், வேதங்கம், வண்ணகை, கவற்றுமடி, வெண்பொத்தி, செம்பொத்தி, பணிப்பொத்தி-

என்று இவ்வாறெல்லாம் தமிழகத்தின் பட்டாடைகளுக்குப் பெயர் உண்டு எனச் சிலப்பதிகாரம் உணர்த்தும் போது, இந்தியாவின் மற்ற மொழிக்காரர்களும் தாங்கள் தயாரித்த பட்டாடைகளுக்குரிய பெயரைத் தங்கள் மொழியில் சூட்டித்தானே இருப்பார்கள்.

காவேரிப் பூம்பட்டினத்துத் துறைமுகத்தில் ஏற்றுமதி இறக்குமதிக்காக இருந்த பொருள்களைப்பற்றிப் "பட்டினப் பாலை" விவரிக்கும்போது - வாணிபத் துறையிலும் கூட கங்கையும் காவிரியும் கைகோத்து நின்ற காட்சிதான் தெரிகிறது.

*"நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்*
*காலின் வந்த கருங் கறி முடையும்*
*வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்*
*குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்*
*தென்கடல் முத்தும் குணகடற் றுகிரும்*
*கங்கை வாரியும், காவிரிப் பயனும்*
*ஈழத்துணவும், காழகத் தாக்கமும்....."*

இந்தப் பட்டினப்பாலை பாடலைத்தான் மனத்தில் பதிய வைத்துக் கொண்டு, மகாகவி பாரதியார்; இந்தியாவில் உள்ள தனித் தனிச் சிறப்புக்களையெல்லாம் உறவாட வைக்கும் முறையில்;

*“கங்கை நதிப்புறத்துக் கோதுமைப் பண்டம்;*
*காவிரி வெற்றிலைக்கு மாறுகொள்ளுவோம்;*
*சிங்க மராட்டியர் தம் கவிதைகொண்டு*
*சேரத்துத் தந்தங்கள் பரிசளிப்போம்*
*காசி நகர்ப் புலவர் பேசும் உரைதான்*
*காஞ்சியில் கேட்பதற்கோர் கருவிசெய்வோம்*
*ராசபுத் தானத்து வீரர் தமக்கு*
*நல்லியற் கன்னடத்துத் தங்கம் அளிப்போம்”*

என்று கவிதை இயற்றினார். தமது கலாச்சாரம், மரபு, இலக்கியம், வரலாறு, இவைகளைக் கட்டிக் காக்கும் பணியில் ஒவ்வொரு மொழியினரும் போட்டி போடலாம். ஆனால் பொறாமை கூடாது. ஒன்றையொன்று நெருங்கிட வேண்டும். உறவாட வேண்டும்.

இந்த அடிப்படையில்தான், இந்தியாவில் பலமான கூட்டாட்சியும், ஒருமைப்பாடும், இறையாண்மையும் சிறந்து விளங்கவேண்டுமென்றும் மாநிலங்கள், தங்களுக்கு வழங்கப் பட்டுள்ள சுயாட்சித் தன்மையைப் பெருக்கிக் கொள்வதற்குப் பணிபுரிய வேண்டுமென்றும், அதுவும் ஜனநாயக முறையில், வன்செயலுக்குச் சிறிதும் இடந்தராத வகையில், மத்திய மாநில உறவுகளுக்கு ஊனம் சிறிதும் ஏற்படாத அளவில்; உறவுக்குக் கைகொடுக்கும் தூய்மையான உணர்வோடு வைக்கப்படும் கோரிக்கையென்றும் நாம் பலமுறை நமது நிலையை விளக்கி யிருக்கிறோம்.

இந்தியாவின் பாதுகாப்பில் நமது கழகத்திற்கு இருக்கிற அசையாத உறுதியின் காரணமாகத்தான் ‘பங்களாதேஷ்’ போரின்போது தமிழகத்தின் சார்பில் கழக அரசு ஆறு கோடி ரூபாய் யுத்த நிதியைத் திரட்டி பிரதமர் அவர்கள் கரங்களில் சென்னையில் நடைபெற்ற எழுச்சிமிகு நிகழ்ச்சியில் வழங்கிற்று. இந்திய கம்யூனிஸ்டு தலைவர்கள் அதை மறந்திருக்க முடியாது. அதேசமயம் அவர்களின் அரசு நடைபெறும் கேரளத்தில் எவ்வளவு தொகை வசூலித்துப் போர் நிதிக்காக வழங்கினர் என்ற

விபரமிருந்தால் இந்திய கம்யூனிஸ்டு தலைவர் அறிவிப்பார் என்று நம்புகிறேன்.

உடன்பிறப்பே, நமது கழகக் கட்டுப்பாடு-கொள்கை இவைகளுக்கு முரணாக எழுதியவர்கள், பேசியவர்கள், இப்போது இங்கில்லை. எங்கெங்கோ போய்ச் சேர்ந்து விட்டார்கள்.

மதுரை மாநாட்டில் நமது கழகக் கட்டுப்பாட்டுக்கு மாறாக; மத்திய அரசைப் பார்த்து மிகக் கடுமையாக மார் தட்டிக் காட்டி "ராணுவப் பேச்சு" பேசியவர்; இன்று நம் கழகத்தில் இல்லை. இந்தியக் கம்யூனிஸ்டுகளுடன் கைகுலுக்கிக் கொண்டிருக்கிறார்.

புதுவைத் தேர்தலின்போது அவர்கள் பேசிய சட்ட விரோத மான பேச்சுக்கள் அப்போது எல்லா ஏடுகளிலும் வெளிவந்துள்ளன.

மக்கள்; கடந்தகால நிகழ்ச்சிகளை மறந்துவிடக் கூடியவர்கள் என்று எண்ணிக் கொண்டு இந்திய கம்யூனிஸ்டுகள் தி. மு. கழகத்தின்மீது மண்ணைவாரி இறைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

"மாநில சுயாட்சிக் கொள்கையைப் புரிந்து கொண்ட மாத்திரத்தில் தி. மு. கழகத்துடன் இந்திய கம்யூனிஸ்டு; தனது தொடர்பை அறுத்துக் கொண்டதாம்"

இப்படிக் கூறுகிறார்; அந்த நண்பர்!

உடன்பிறப்பே! நான் முன்பே குறிப்பிட்டேன்; 1968 இல், 1971 இல் அவரது நிலை என்ன என்பதை!

இதோ; இன்னொரு ஆதாரம்!...

இந்தியக் கம்யூனிஸ்டு தலைவர்-அவர் பெயரைச் சொல்லுகிறேன்-தோழர் எம். கல்யாணசுந்தரம் அவர்கள் 1971ஆம் ஆண்டு மே திங்கள் 31ஆம் நாள் எனக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். அந்தக் கடிதத்தை அப்படியே பத்திரமாகப் பாதுகாத்து வைத்திருக்கிறேன். இதோ; அது!

> "இன்று காலை திரு. என். வி. என். அவர்களைச் சந்தித்து எனது யோசனைகளைக் கூறியுள்ளேன்.
>
> ராஜமன்னார் குழு அறிக்கையைப் பற்றியும், மத்திய அரசு பல துறைகளில் இந்தியைப் புகுத்த எடுக்கின்ற தகாத முயற்சிகளைப் பற்றியும் முற்போக்குக் கூட்டணியில் பங்கு பெற்ற கட்சிகள் அனைத்தும் கூடிப்பேசி, ஒரு

முகமான முறையில் கோரிக்கைகளை மத்திய அரசிடம் வற்புறுத்த வேண்டியது அவசியம் என்று கருதுகிறேன். பங்களாதேஷ் பிரச்சினையும், பாகிஸ்தான் அச்சுறுத்தலும், நாட்டின் முன்புள்ள பொழுது தீவிரமான கிளர்ச்சிகள், தவிர்க்கப்பட வேண்டுமென்கிற தங்களுடைய கருத்துடன் உடன்பாடு உண்டு. எனினும் இதே காரணத்தை முன்னிட்டு இம்மாதிரி பிரச்சினைகளை இந்த சமயத்தில் தூண்டி விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது மத்திய அரசின் கடமையல்லவா?"

உடன்பிறப்பே! தோழர் கல்யாணசுந்தரம், எனக்கு எழுதிய கடிதம் இது.

நாட்டில் எதிரிகள் கலகம் விளைவிக்க முனையும்போது கிளர்ச்சிகள் கூடாது என்கிறேன் நான்; தி. மு. கழகச் சார்பில்! ஆனால் அவரோ! என்னைவிடத் தீவிரமாகப் பேசுகிறார் அப்போது! மத்திய அரசை வற்புறுத்தத் திட்டம் தயாரிக்க அழைக்கிறார் கழகத்தை!

இந்த மடலின் பிரதிகள் நமது நாவலருக்கும், நமது என். வி. என். னுக்கும் அனுப்பப்பட்டன. அதே நண்பர்தான் இன்றைக்கு தி. மு. கழகத்தைச் சாடுகிறார்! தேச விரோதிகள் என்கிறார்!

"பங்களாதேஷா? பாகிஸ்தானா? பரவாயில்லை; நாம் ஒன்று கூடி மத்திய அரசுக்கு எதிராக அணி திரளுவோம் வாரீர்!" என்று முழங்கிய இந்த "தேசத்திலகம்" நம்மைப் பார்த்து "தேசத் துரோகி" என்கிறது! போர் முனைக்கு ஆயத்தமாகும் இந்திய அரசுக்கு விரோதமாகக் கிளர்ச்சிகள் கூடாதென்ற நம்மைப் பார்த்து இன்றைக்கு இந்தப் "புனிதமான தேச பக்தர்" குறை கூறுகிறார். ராஜமன்னார் அறிக்கையை அன்று வானளாவப் புகழ்ந்தவருக்கு- இன்று அது கசக்கிறதாம்!

பரவாயில்லை; இந்த தேசபக்தரின் சாயம், விரைவில் வெளுக்கத்தான் போகிறது! தி. மு. கழகம், தேசவிரோத இயக்கமல்ல; தேச விரோதிகளுக்கு தி. மு. கழகத்தில் இடமில்லை என்ற உண்மை; உதய ஞாயிறுபோல உலகிற்குத் தெரியத்தான் போகிறது.

அன்புள்ள,

**மு. க.**

25-03-1976

# 184. அடக்கமே; அண்ணன் கற்றுத்தந்தது!

**உடன்பிறப்பே,**

தமிழக வரவு செலவுத் திட்டத்தைப் பற்றிய விவாதம், நாடாளுமன்றத்தில் நடைபெற்று நமது மதிப்புக்குரிய சுப்பிரமணியம் அவர்கள், நிதி அமைச்சர் என்ற முறையில் விடையளித்து விளக்கங்களைக் கூறியுள்ளார்.

தி. மு. க. அரசு, செய்யத் தவறியது-செய்யக்கூடாததைச் செய்தது-என்பது போன்ற பல விஷயங்கள் அவரது பதிலுரையில் முக்கியமான நேரத்தை ஆக்ரமித்துக் கொண்டிருப்பதை, ஏடுகளில் வெளிவந்துள்ள செய்திகளைப் பார்த்தாலே புரிந்து கொள்ளலாம்.

முதல் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களில் தமிழகம் மின்சார உற்பத்தியைப் பொறுத்தவரையில் கூட மிக அதிகமாக உற்பத்தி செய்து உபரியாகக் கூட இருந்தது என்று அவர் குறிப்பிட்டுவிட்டு, தி. மு. க. கழக ஆட்சியில் நாலாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் சரி; பொதுவாக இந்த கடந்துபோன ஒன்பது ஆண்டுகளிலும் சரி; மின்சார உற்பத்தி மிகவும் குறைவாகிவிட்டது என்று வேதனைப் பட்டிருக்கிறார்.

அவருடைய கவலையில் நாமும் பங்கு கொள்ளத்தான் வேண்டும். கல்பாக்கம், விரைவில் முடிவடைந்திருந்தாலும்; நெய்வேலி இரண்டாவது சுரங்கவெட்டு ஏற்கனவே ஆரம்ப மாகியிருந்தாலும்; இந்தக் கவலை ஓரளவு குறைந்திருக்கக்கூடும்.

மத்திய அமைச்சரவையில் இருந்தாலும் தமிழ்நாட்டு நலனில் மிகுந்த அக்கறையுள்ளவர் என்ற முறையில் நெய்வேலி இரண்டாவது சுரங்கத்திற்கான தொடக்கப் பணியினை விரைவு படுத்துவார் என்ற நம்பிக்கை, மாநில மக்களுக்கு நிறைய உண்டு.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் இடையே விடுமுறைக்கு ஆளாகி ஆண்டுத் திட்டங்கள் என்ற அளவிலே தான் நடை

பெற்றது என்பதும், ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டம் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு முதலமைச்சர்கள் மாநாட்டில் விவாதிக்கப் பட்டு; இன்னும் ஆரம்பமாகாமலே இருக்கிறது என்பதும் - இப்போது நடைபெறுகிற திட்டங்கள், ஆண்டுத் திட்டங்களே என்பதும் அனைவரும் அறிந்த ஒன்றாகும்.

மின்சாரத்தைப் பொறுத்தவரையில் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள் முறையாகத் தங்கு தடையின்றி மத்திய அரசினரால் ஊக்குவிக்கப்பட்டு நடைபெற்றபோது, தமிழ்நாட்டில் மின்சார உற்பத்தி பெருகிற்று என்பதை எல்லோரும் ஏற்றுக்கொண்டுதான் தீரவேண்டும். ஆனால் தொடர்ந்து கழக ஆட்சியில் மின்சார உற்பத்தியின் நிலைமை என்ன என்பதை ஆராயாமல் விட்டு விடுவது நல்லதல்ல.

அதனை ஆய்ந்து பார்ப்பதற்காகவே சில விளக்கங்களை உனக்குத் தர விரும்புகிறேன்.

தி. மு. க. வை மாண்புமிகு சி. எஸ். அவர்கள் நாடாளு மன்றத்தில் வேகமாக விமர்சித்தார்கள் என்பது பற்றியெல்லாம் நாம் மனதை அலட்டிக்கொள்ளாமல்; அவரது புள்ளிவிபரம் நிறைந்த பதிலுரை-சில விளக்கங்களை அளிப்பதற்குப் பயன்பட்டது என்ற வகையில் நாம் மகிழ்ச்சி அடையத்தான் வேண்டும்.

1975-76 ஆம் ஆண்டு மின்சார வாரியத்தின் நிதி நிலை அறிக்கையில் கூறப்பட்டுள்ள குறிப்புக்களின்படி-தொடர்ந்து உருவாகிவரும் மின் திட்டங்கள்; எண்ணூரில் 110 மெகாவாட் கொண்ட ஐந்தாவது பிரிவு விரைவில் முடிவடையுமென்றும்-குந்தா நீர் மின்திட்டத்தின் கீழ் 1977-78ஆம் ஆண்டில் 110 மெகாவாட் மொத்தத் திறனுடன் கூடிய இரண்டு பிரிவுகள் செயல்படுமென்றும், பைக்காரா, மோயாறு மின் நிலையங்களில் ஆண்டுக்கு 69 மிலியன் யூனிட்டுகள் கூடுதல் மின்சாரம் கிடைக்கச் செய்யும் பணிகள் விரைவில் முடிவடையும் என்றும், கோதையாறு நீர் மின் திட்டத்தின் கீழ் கூடுதலாக 40 மிலியன் யூனிட்டுகள் கிடைக்கச்செய்யும் பணி முடிவடையும் நிலையில் உள்ளதென்றும் அறிவிக்கப்பட்டதோடு, புதிய திட்டங்களில் தூத்துக்குடி அனல் மின் திட்டத்திற்கான பணிகளில் 1978-79 ஆம் ஆண்டில் 210 மெகாவாட்திறனுடன் கூடிய ஒரு மின் உற்பத்திப் பிரிவு செயல்படத் தொடங்குமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மற்றும் நாலாயிரம் மிலியன் யூனிட்டுகள் உற்பத்தி செய்யக்கூடிய ஒன்பது திட்டங்கள், மத்திய அரசின் ஒப்புதலுக்காகக் காத்திருக்கின்றன என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

1975-ஆம் ஆண்டு ஜூன் திங்களில் மத்திய திட்டக்குழுத் துணைத்தலைவர் திரு. ஹக்சர் அவர்களிடம் தூத்துக்குடி அனல் மின் திட்டத்துக்குப் போதிய நிதி வசதி வேண்டும் என்பதையும், நெய்வேலியில் ஆயிரம் மெகாவாட் அனல்மின் நிலையத்துடன் கூடிய இரண்டாவது சுரங்கம் வெட்டுவதைத் தாமதமின்றித் தொடங்க வேண்டுமென்பதையும், நாங்குனேரி வட்டத்தில் கூடன்குளத்தில் ஆயிரம் மெகாவாட் திறனுடன் இரண்டாவது அணுமின் நிலையம் அமைக்க முன்வர வேண்டுமென்பதையும், மாநில அரசு மத்திய அரசுக்கு அனுப்பியுள்ள எல்லா நீர்மின் திட்டங்களுக்கு அனுமதி வழங்கவேண்டு மென்பதையும் வலியுறுத்தி விவாதித்திருக்கிறது கழகஅரசு!

உடன்பிறப்பே! முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியில் அதாவது 31-3-1956 இல் 1053 மிலியன் யூனிட் உற்பத்தி செய்தும் வாங்கியும் தமிழ் நாட்டில் விநியோகிக்கப்பட்டது.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் இது 2214 மிலியன் யூனிட்டாக உயர்ந்தது.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியில்; அதாவது 31-3-1966 இல் இது 4041 மிலியன் யூனிட்டாகப் பெருகிற்று.

அடுத்து நாலாவது திட்டம்! அதாவது கழக ஆட்சிக் காலம். 31-3-1974 ஆம் ஆண்டுதான் நாலாவது திட்டத்தின் இறுதியாகக் கருதப்பட்டது; அப்போது நிலைமை என்ன?

1966 இல் உற்பத்தியும் வாங்கி விநியோகிப்பதுமாக 4041 மிலியன் யூனிட்டாக இருந்த மின்சாரம், 1974 இல் 7105 மிலியன் யூனிட்டாகப் பெருகி 31-3-1975 இல் 7380 மிலியன் யூனிட்டாக வளர்ந்துள்ளது.

யாருக்கும் பதில் சொல்லவேண்டுமென்ற ஆசையோடு இதனை நான் குறிப்பிடவில்லை. விளக்கத்திற்காகத்தான் இத்தனை அடக்கத்தோடு விபரங்களை வழங்குகிறேன்.

அதைப்போலவே மின்சார விநியோகமும் பெருகியிருக்கிறது என்பதற்கு ஒன்றிரண்டு ஆதாரங்களை மட்டும் அளித்திட

விழைகிறேன். புள்ளி விபரங்கள்! கொஞ்சம் "BORE" அடிக்கும்! பொறுத்துக்கொள்க!

1966 இல் கூடுதல் உயர் அழுத்த-உயர் அழுத்தக் கம்பிகளின் நீளம் 39,806 கிலோ மீட்டர். 1975இல் அதாவது 31-3-75 வரை அந்தக் கம்பிகளின் நீளம், 69,775 கிலோ மீட்டர்! குறைவு அழுத்தக் கம்பிகளின் நீளம், 1966இல்-73, 198 கிலோ மீட்டர், 31-3-75 ஆம் ஆண்டு கணக்கின்படி அந்தக் கம்பிகளின் நீளம்; 2,02,645 கிலோ மீட்டர்,

1966 இல் சராசரி நபர் ஒருவர் பயன்படுத்தும் மின்சாரத்தின் அளவு 92 யூனிட். 1975இல் சராசரி நபர் ஒருவர் பயன்படுத்தும் மின்சாரத்தின் அளவு 125 யூனிட்!

1966இல் மின்சாரம் பயன்படுத்துவோர் எண்ணிக்கை 13.6 லட்சம் பேர்! 1975ல் 28.35 லட்சம் பேர்!

1966ல் மின்வசதி அளிக்கப்பட்ட நகரங்கள், கிராமங்கள், சிற்றூர்கள் ஆகியவற்றின் மொத்த எண்ணிக்கை-22,137.

1975 இல்-இந்த எண்ணிக்கை 61,217.

1966 இல் மின் இணைப்பு தரப்பட்ட விவசாயப் பம்பு செட்டுக்களின் எண்ணிக்கை; 2,56,594.

1975 இல் இந்த பம்ப் செட்டுக்களின் எண்ணிக்கை; 7,06,914.

மூன்றாவது திட்ட இறுதியில் மூலதனச் செலவு 253.28 கோடி ரூபாய்.

நான்காவது திட்டம் முடிந்து 1975 இல் மூலதனச் செலவின் கணக்கு 606.99 கோடி ரூபாய்.

உடன் பிறப்பே, காங்கிரஸ் ஆட்சியில் மாண்புமிகு சுப்பிரமணியம் போன்றவர்கள் நடத்திய அல்லது நடத்தத் தொடங்கிய எந்த நல்ல காரியங்களையும் கழக அரசு மேலும் பன்மடங்கு பெருக்கியும், இனியும் பல திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்று மத்திய அரசை வற்புறுத்தியும் வந்திருக்கிறதேயல்லாமல் சோர்வுற்றுச் சும்மா இருந்து விடவில்லை என்பதற்கே இந்த விபரங்கள் தர விரும்பினேன்.

கழக ஆட்சிக்குப் பிறகும் இப்போதுள்ள குடியரசுத் தலைவர் ஆட்சியிலும், இனி வர இருக்கின்ற ஆட்சிகளிலும், கழகத்தைப்

பொறுத்தவரையில் இந்த மாநிலத்தின் தேவைகளை மத்திய அரசிடம் எடுத்துரைப்பதைத் தனது கடமையாகக் கருதும் என்பதை உறுதியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதிலும் தமிழ்நாட்டின் நலனில் நாட்டமுடைய நமது சி. எஸ். அவர்கள் நிதியமைச்சராக இருக்கும்போது, நமது மாநிலத் தேவைகளைச் சுட்டிக்காட்டிப் பெறுவது நமது மகத்தான கடமையன்றோ?

அவர் இந்தியாவில் உள்ள எல்லா மாநிலங்களின் நலனையும் கவனிக்கப் பொறுப்பேற்றிருப்பவர் - அந்த மாநிலங்களில் ஒன்றான தமிழகத்தின் நலனையும் பொறுப்புடன் கவனித்து ஆவன செய்வார் என்று நம்புகிறேன்.

இது, அடக்கத்துடன் தரப்படும் விளக்கம்! அடக்கமே; நமது அண்ணன் உனக்கும் எனக்கும் கற்றுத் தந்தது!

அன்புள்ள,

மு. க.

26-03-1976

# 185. நிலைகுலையா நீதி
## வாய் திறந்து பேசும்!

**உடன்பிறப்பே!**

கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு அறிஞர் அண்ணா தலைமையில் வீறுநடை போடத் தொடங்கி நான்கைந்து மாத காலம் மாற்றார், சற்று ஓய்வாக இருந்தனர். அதன் பிறகு ஆரம்பித்துவிட்டனர் ஊழல் பாட்டுப் பாடுவதற்கு!

உலகத் தமிழ் மாநாட்டுக் கணக்கு ஊழல்!

கல்லூரிக் கட்டிட நிதி வசூலித்ததிலே ஊழல்!

சிலைகள் வைத்ததிலே ஊழல்! இப்படித் தொடங்கி முழங்கினர் துந்துபியை!

இதனை அடிப்படையாக வைத்து அண்ணா அமைச்சரவை மீது நம்பிக்கையில்லாத் தீர்மானங்களைக் கூடக் கொண்டுவந்தனர்.

“எங்கள் மீது நீங்கள் எப்போது நம்பிக்கை வைத்தீர்கள்? இப்போது மட்டும் நம்பிக்கையில்லை என்று சொல்வதற்கு?” என்று அண்ணா கூடச் சட்டப் பேரவையில் எதிர்க் கட்சியினரைப் பார்த்துக் கேட்டார்.

அடுத்து ஆரம்பித்தனர்; “ஆகா! அருண் ஓட்டல் கருணாநிதிக்குச் சொந்தம்!” என்ற பல்லவியை! அதை ஊர் ஊராக ஒலித்து முடித்துவிட்டு அடுத்த சுற்றுலாவுக்கு “அண்ணா தியேட்டர் கருணாநிதிக்குச் சொந்தம்” என்று புதிய இசைத்தட்டு ஒன்றைத் தயாரித்துக் கொண்டார்கள். அது ஒரு ஆறுமாத காலம் ஓடி முடிந்தது. “கருணாநிதி ஸ்பென்சரை விலைக்கு வாங்கிவிட்டார்” இப்படி ஒரு தெருக்கூத்து, பட்டிதொட்டியெங்கும் விளம்பரப்படுத்தப்பட்டு நடந்தேறியது. அதன் பிறகு “பைலட்” தியேட்டர் கருணாநிதியினுடையதுதான்; இது சில மாதங்கள்!

உடன்பிறப்பே; ஊரிலே யார் தியேட்டர் கட்டினாலும் அது என்னுடையது என்று கூறுவது-யார் ஓட்டல் கட்டினாலும் அது கருணாநிதியின் உறவினருடையது அல்லது கருணாநிதியுடையது எனப் பேசுவது - கேரளத்திலே எஸ்டேட்; கர்நாடகத்திலே தொழிற்சாலை; ஆந்திரத்திலே ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலபுலங்கள்-வாங்கியிருக்கிறான் என்று எழுதுவது!

அதோ தெரிகிறதே; அந்தத் தோட்டம்-தோப்பு-ஏரி, குளம்-எல்லாமே அவனுக்குத்தான் சொந்தம் என்று கதை கட்டுவது; இப்படி என் மீதும் கழகத்தின் மீதும் எரிச்சலைக் கொட்டுவதற்காக 'ஏனோ தானோ' என்று அவதூறுகளை அடுக்குவது; பாமர மக்கள் பலரும் நம்புவர் என்று எதிர்பார்ப்பது; படித்தவர்கள் சிலராவது "இருக்குமோ" என்று யோசிப்பர் என நினைப்பது - இப்படியே ஒரு கூட்டம், தமிழ் நாட்டு அரசியலில் குட்டை குழப்பிக் கொண்டிருக்கிறது.

எந்த ஒரு கட்சியிலும் தவறு செய்பவர்கள் ஒரு சிலர் இருக்கக்கூடும். அந்தந்தக் கட்சியினரும், தங்கள் நெஞ்சில் கைவைத்துப் பார்த்தால் அதற்கான விளக்கம் அவர்களுக்கே கிடைக்கும். தவறு செய்தவர்கள் யாராயிருந்தாலும், நீதியும் நேர்மையும் தவறாத வகையில் தண்டிக்கப்படவேண்டியவர்களே தான் என்பதை நியாய புத்தியுள்ள அனைவரும் ஏற்றுக் கொள்ளத்தான் செய்வர். வேண்டும் என்றே பழிசுமத்தி அரசியல் வஞ்சம் தீர்த்துக்கொள்கிற காரியங்கள் பல, பத்து பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பும், வெள்ளைக்காரர் ஆட்சிக் காலத்திலும் நடைபெற்றிருக்கின்றன.

சதி வழக்குகளில் அரசியல் தலைவர்கள் ஈடுபடுத்தப்பட்டு, வெள்ளையர் காலத்திலே வெங்கொடுமைச் சிறையில் வாடியிருக்கின்றனர். பழியும் களங்கமும் பலர் மீது கூறப்பட்டு பதைபதைக்கக் கடும் துன்பங்களை அனுபவித்திருக்கின்றனர்.

மாண்புமிகு அமைச்சராக இருந்தவரும் - தி. மு. கழகத்தின் பொறுப்பாளராக இருந்தவருமான மறைந்த கோவிந்தசாமி அவர்கள் ஒரு முறை கடலூரில் ஊர்வலம் ஒன்றுக்குத் தலைமை வகித்துச் சென்றபோது கைது செய்யப்பட்டு, அவர் பூக்கடை ஒன்றில் புகுந்து கல்லாப் பெட்டியை உடைத்து இருபத்தைந்து

ரூபாயைத் திருடினார் என்று வழக்கு கூடப் போடப்பட்டது. ஆமாம்; திருட்டு வழக்கு அந்த தியாக சீலர் மீது!

அரசியலுக்கு அல்லது பொது வாழ்வுக்கு வந்துவிட்டவர் களுக்கு இப்படிப்பட்ட சோதனைகளும் வேதனைகளும் புதிதல்ல!

பொது வாழ்வுக்கு வந்தவர்களை அனைவரும் புனிதர்கள் என்று நான் வாதிடவும் இல்லை; அதே நேரத்தில் எல்லோரையும் புரட்டர்கள் என்று ஒப்புக்கொள்ளவும் தயாராக இல்லை. முள் முனை சிறிதும் தவறாத நீதி தேவர்கள்தான் அதனை ஆராய்ந்து உலகிற்கு அறிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே இருந்து ஆர். டி. ஓ. பதவியில் இருக்கிறார் ஒருவர். பிறகு உயர் பதவிகளுக்கு வருகிறார். கழக அரசில் கலெக்டர் ஆகிறார். அவர் மீது புகார்; ஏடுகளிலே வருகிறது. உடனே அவருடைய சரித்திரத்தை எழுதத் தொடங்குகிறார்கள். ஆகா! இவர்; அவர் காலத்தில் கலெக்டரானவர் - அவரிடம் செயலாளராக ஐந்து வருடத்திற்கு முன் இருந்தவர் - எவ்வளவு எரிச்சல் பார்த்தாயா? காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் அவர் இருந்த பதவி இவர்களுக்கு மறந்து போய்விடுகிறது. பாவம்!

இன்று இந்தியா முழுவதும் கட்டாய ஓய்வில் ஆயிரக் கணக்கில் அதிகாரிகள் வீட்டுக்கு அனுப்பப்பட்டிருக்கிறார்களே; அந்த அதிகாரிகளின் மந்தப்போக்கு அல்லது நிர்வாக ஒழுங்கின்மை அல்லது கை சுத்தமற்ற தன்மை - இவைகளுக்கெல்லாம் கூட கழக அரசோ அல்லது கருணாநிதியோதான் காரணமா?

புகார்கள் கூறப்படலாம் - யார் மீதும் கூறப்படலாம் - இது புகார் யுகம் - எதிரி மீது ஒரு விரலை நீட்டும் போது தன்னை நோக்கி நான்கு விரல்கள் நீட்டப்பட்டிருப்பதை உணராதவர்கள் சிலர், தமிழகத்தில் "தாம் தீம்" என ஆட்டம்போடும் காலம் - கூறட்டும் புகாரை! மறுக்க வேண்டியவர்கள் மறுக்கலாம்! நிரூபிக்க வேண்டியவர்கள் நிரூபிக்கலாம்! அது வேறு விஷயம்! இன்றில்லாவிட்டால், நாளை - நாளை தவறினால் மறு நாள் - அல்லது என்றாவது ஒரு நாள் வாய்மை வெல்லத்தான் போகிறது! நிலை குலையாத நீதி வாய் திறந்து பேசத்தான் போகிறது!

உடன் பிறப்பே, இங்குள்ள ஆத்திரக்காரர்கள் என்ன தான் களங்கச் சேற்றை வாரி என் மீதோ; கழகத்தின் மீதோ

இறைத்தாலும் - அதுபற்றிக் கவலைப்படாமல் அமைதி, தொடர்ந்து நிலைத்திட; ஒழுங்கு ஒளி மங்காது விளங்கிட நமது ஒத்துழைப்பை வழங்கிடுவோம். அண்ணன் காட்டிய வழியில் அயராது உழைத்திடுவோம்.

அன்புள்ள,

மு. க.

27-03-1976

# 186. வியாழக்கிழமையும் - வெள்ளிக்கிழமையும்!

**உடன்பிறப்பே,**

பெரியவர் பக்தவத்சலம் அவர்களோடு வாதம் செய்வது அல்லது விவாதிப்பது என்றால் எனக்குச் சுவையானது மட்டுமல்ல; பெருமை மிக்கது என்று கூடக் கருதுகிறேன்.

அரசியல் கட்சித் தலைவர்கள் சில நேரங்களில் கடுமையான கண்டனங்களையோ, சுடு சொற்களையோ பயன்படுத்தக்கூடிய தவிர்க்க முடியாத சூழ்நிலைகளுக்கு ஆளாகிறார்கள் என்றாலும் அதனையும் கடந்த மனிதாபிமான உணர்வுகளும், அரசியல் பண்பாடுகளும் நமது நாட்டில் அறவே பட்டுப்போய் விடவில்லை என்பதை அரசியல் நாகரீகத்தை உணர்ந்தவர்கள் அனைவரும் தெரிந்தே வைத்திருக்கிறார்கள்.

அறிஞர் அண்ணா எதிர்க்கட்சியின் தலைவராக வீற்றிருந்த அந்தக் காலத்திலேயே 'முரசொலி' அண்ணா பிறந்த நாள் மலர்களுக்குப் பெரியவர் பக்தவத்சலம் அவர்கள் "அறிஞர் அண்ணா" என்று குறிப்பிட்டே அருமையான எழுத்தோவியங்களை வழங்கியிருக்கிறார்.

நாவலர் எதிர்க்கட்சித் தலைவராகவும், நான் துணைத் தலைவராகவும் சட்டப்பேரவையில் இருந்தபோது ஒரு நாளாவது முதலமைச்சர் பக்தவத்சலனார் அவர்கள் எங்களைப் பெயர் சொல்லிக் குறிப்பிட்டது கிடையாது. நாவலர், கலைஞர், என்றேதான் குறிப்பிட்டுப் பதில் கூறுவது வழக்கம்.

குறும்பு நிறைந்த வார்த்தைகள், கோபத்தை மூட்டக் கூடிய வார்த்தைகள், இவையெல்லாம் சட்டசபை நடவடிக்கைகளில்

சதிராடுவது வாடிக்கைதான் எனினும் அவைகளுக்கிடையிலேயும் நாகரீகமும் நல்லுறவும் கலந்த அரசியல் பண்பாட்டை நாங்கள் அவருடன் பகிர்ந்து கொள்ள முடிந்தது. எனவேதான் இப்போது அவர் நம்மீது சாட்டுகிற குற்றச்சாட்டுக்களுக்கு விளக்கமளிப்பதில் நம்மால் பெருமைப்பட முடிகிறது என்று குறிப்பிடுகிறேன்.

சில ஏடுகளைப் பார்த்தால், யார் யாரோ நாள்தோறும் அறிக்கைகள்-அவதூறுச் செய்திகள்-இவைகளை வெளியிட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதற்கெல்லாம் பதில் சொல்வது என்பதோ-அவர்களுடன் விவாதிப்பது என்பதோ-வடிகால் வழியே வெளியேறும் அழுக்குத் தண்ணீரில் நீச்சலடிக்க விரும்புவதைப் போலத்தான் ஆகிவிடும். எனவே அவர்களுக்கு விளக்கங்கள் அளிக்கத் தேவையில்லை.

கிராமங்களில் ஒரு பழமொழி உண்டு. "என்றைக்குமே பிச்சை போட முடியாது என்கிற மகராசிதான் இன்றைக்கும் இல்லையென்று கூறினாள்-ஆனால் காலையும் மாலையும் பிச்சை போடுகிற இந்தக் கழுதை, இன்றைக்கு சோறில்லை என்று கூறிவிட்டாளே; ஏன்?"

என்று நாள்தோறும் தவறாமல் பிச்சை போட்டவளைப் பார்த்து நாக்குத் தடிப்போடு ஒரு பரதேசி வசை பாடினானாம்!

அது போலச் சிலர் இருக்கிறார்கள்.

உடன்பிறப்பே! நான் அவர்களுக்கு விளக்கமளிப்பதை இப்போதுள்ள முக்கியமான பணியாகக் கருதாமல்-நமது பெரியவர் பக்தவத்சலம் போன்றவர்களுக்குக் கிடைக்கின்ற தவறான தகவல்களுக்குப் பதில் கூறுவதை என் கடமையாகக் கருதுகிறேன்.

தமிழகத்தில் இருக்கிற அவருக்கே இப்படிப்பட்ட தவறான தகவல்கள் தரப்படுகின்றன என்றால், ஆயிரம் இரண்டாயிரம் மைல்களுக்கப்பால் இருக்கிறவர்களுக்கு இன்னும் எவ்வளவு தவறான தகவல்கள் வழங்கப்படும் என்பதை நான், எண்ணிப் பார்க்காமல் இருக்க முடியவில்லை.

"கலைஞர் சமாதானம்" என்ற தலைப்பில் "மித்திரன்" இதழில் அவர் ஒரு கட்டுரை தீட்டியுள்ளார். கட்டுரையின் தலைப்பே. அவரது பெருந்தன்மைக்குச் சான்றாகத் திகழ்கிறது.

"வள்ளுவர் கோட்டத்துக்கும், கட்டபொம்மன் கோட்டைக்கும் லட்சக்கணக்கில் பணம் செலவு செய்யும் போது ஒரு ஹரிஜன பள்ளிக்கூடத்துக்குச் செலவு செய்யப் பணம் அரசாங்கத்திடம் இல்லையா? என்றுதான் நான் கேட்டேன். அதற்குக் கலைஞர், அவருக்கே உரிய பாணியில் 'சமாதானம்' எழுதியிருக்கிறார்."

இது, பெரியவரின் கட்டுரையில் காணப்படும் முதல் பகுதி. ஹரிஜனப் பள்ளிக்கூடம் ஒன்றின் தேவைகள் நிறைவு செய்யப்படவில்லை யென்றால் அதற்கேற்ற நடவடிக்கைகள் எடுக்கத்தான் வேண்டும். அதற்காக ஹரிஜனங்கள் மீதே கழக அரசுக்கு அக்கறையில்லை என்ற கருத்துப்பட விவாதம் அமைந்திடக் கூடாது. அந்தக் குறையைக் குறிப்பிடும்போது வள்ளுவர் கோட்டத்தையோ, கட்டபொம்மன் கோட்டையையோ ஒப்பிட்டு "அதற்குச் செலவழிக்கப் பணமிருக்கிறதே!" என்று சுட்டிக் காட்டுவது; வள்ளுவர் கோட்டம்-கட்டபொம்மன் கோட்டையெல்லாம் தேவையில்லாத வேலை என்பதுபோல அல்லவா பொருள் ஏற்படுகிறது. அதனால்தான், கட்டபொம்மன் கோட்டையை யொட்டிக் கட்டப்பட்டுள்ள இருநூறு இலவச வீடுகளையும், பூம்புகார் கலைக்கூடத்தை யொட்டி கட்டப்பட்டுள்ளன ஆயிரம் இலவச மீனவர் வீடுகளையும் நான் விவரித்திருந்தேன். இதில் சமாதானமான பதில் எதுவுமில்லை. சாமான்யர்களாகிய நாங்கள் செய்த அந்த சரித்திரப் புகழ்மிக்க சிறிய காரியங்களைப் பெரியவர் சென்று பார்த்து வாழ்த்து வழங்கவேண்டுமென்பதுதான் எங்களுக்கு ஆசை!

அவரது கட்டுரையின் அடுத்த பகுதியைப் பார்ப்போம்.

"வியாழனன்று நான் பக்தவத்சலனார் காரைக்குடியில் இருந்தபோது தி. மு. க. அரசின் மற்றொரு முறைகேட்டைப் பற்றிக் கேள்விப்பட்டேன். தமிழ் நாட்டில் உள்ள அறுநூறு கோயில்களில் இருந்து, ஆலயம் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் வீதம் ஆறுலட்ச ரூபாய் 'முரசொலி' பத்திரிகைக்கு அளிக்கப்பட்டதாம். இதற்குக் கலைஞர், என்ன சமாதானம் கூறமுடியும்?"

இது பெரியவரின் கேள்வி! தமிழ் நாட்டில் மொத்தம் இருபத்தி ஐயாயிரம் கோயில்கள். அறநிலைய நிறுவனங்கள்-இருக்கின்றன. அதில் அறுநூறு ஆலயங்கள் ஆயிரம் ரூபாய் வீதம் முரசொலிக்குப் பணம் தந்திருப்பதாக அவருக்குத் தகவல் கிடைத்துள்ளது.

ஆலயங்கள் அனைத்தும் கழக ஏடுகளுக்கு, குறிப்பாக முரசொலிக்கு ஆயிரம் ரூபாய் செலுத்தி ஆயுள் சந்தாதாரர்களாக ஆகியிருக்கின்றன என்று அண்மையில் கூட சில செய்திகள் "தினமணி" போன்ற இதழ்களில் வெளியாயின அல்லவா- அதைத்தான் நமது பெரியவரும் கேள்விப்பட்டுக் குறிப்பிடுகிறார்.

உடன்பிறப்பே! பெரியவரின் கட்டுரையைப் பார்த்ததும் முரசொலி நிர்வாகியை அழைத்து விவரங்களைக் கேட்டேன். 'முரசொலி'க்கு மொத்தம் தமிழ்நாடு முழுவதும் இருக்கிற ஆயுள் சந்தாதாரர்களின் எண்ணிக்கையே-எண்ணால் 51-எழுத்தாலும் ஐம்பத்தி ஒன்றுதான்! அதில் தனிப்பட்டவர்கள் முப்பத்தி ஆறு ஆயுள் சந்தாதாரர்கள்! ஆலயங்களில் உள்ள நூல் நிலையங்கள் பதினைந்து சந்தாதாரர்கள்! மொத்தமே ஐம்பத்தி ஒன்று ஆயுள் சந்தாதான் என்கிறபோது ஆலயங்களின் வாசக சாலைகள் மட்டும் எப்படி அறுநூறு ஆயுள் சந்தாதாரர்களாக இருந்திட இயலும்? பதினைந்து சந்தாதாரர்களை அறுநூறு ஆயுள் சந்தா என்று மிகைப்படுத்தி அவரிடம் கூறியிருக்கிறார்கள்.

இனி, அவரது கட்டுரையின் மூன்றாவது பகுதிக்கு வருவோம்.

"வெள்ளிக்கிழமை காலையில் என்னை பக்தவத்சலனாரை சந்தித்த, தாராபுரத்தைச் சேர்ந்த சில விவசாயிகள், பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்திலிருந்து புதிய ஆயக்கட்டு நிர்ணயிப்பதில் தங்கள் கிராமங்கள், வேண்டுமென்றே விடப்பட்டிருக்கின்றன என்று முறையிட்டார்கள். அதற்கு அவர்கள் சொல்லுகிற காரணம் இதுதான்: தி. மு. க. பொதுப்பணி அமைச்சர் அந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர் மேற்படி கிராமத்தார் சிலர், போதிய அளவு கோவை மாநாட்டுக்குப் பணம் கொடுக்கவில்லையாம், இன்னும் சில உரிமைகளையும் அளிக்கவில்லையாம். அதனால் கோபப்பட்டுத் தீர்ப்புக் கொடுத்ததாகத் தெரிகிறது."

இது பெரியவர், அவரது கட்டுரையில் வடித்துள்ள இறுதிப் பகுதி.

1 தி. மு. க. பொதுப்பணித்துறை அமைச்சர், அந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்பதே தவறு! பரம்பிக் குளம்-ஆளியாறு புதிய ஆயக்கட்டுகள் வகுக்கப்பட்ட போதும் சரி; ஆட்சி கலைக்கப்படுகிற

காலம் வரையிலும் சரி; பொதுப் பணித்துறை அமைச்சர் வடஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்தவர். திரு. ப. உ. ச. அவர்கள்! அவர் கோவை மாவட்டத் தைச் சேர்ந்தவர் என்று பெரியவர் கூறுவது, தவறான தகவல்.

2 பரம்பிக்குளம் - ஆளியாறு புதிய ஆயக்கட்டு நிர்ணயிக்கும் பணியை, அந்தப் பகுதியிலுள்ள எல்லாக் கட்சிகளின் சட்டமன்ற உறுப்பினர்களைக் கலந்தே செய்யப்பட்டது. கேட்கிற கிராமங்களுக் கெல்லாம் ஆயக்கட்டுகளை விரிவுபடுத்திக் கொண்டே போனால்; பிறகு மொத்தமாக எல்லா ஆயக்கட்டுதாரர்களும் தண்ணீர் பற்றாக்குறைக்கு ஆளாக நேரிடும். இந்தப் பணியை இப்போது பெரியவரே நேரிடையாகக் கவனிக்க முயன்றாலும் சில கிராமங்களுக்கு மனக்குறைதான் ஏற்படும்.

3 "மேற்படி கிராமத்தாரில் சிலர், போதிய அளவு-கோவை மாநாட்டுக்குப் பணம் கொடுக்கவில்லை யாம்" என்கிறார். வாதத்திற்காக இந்தக் கூற்றை உண்மையென ஒப்புக் கொண்டாலும் மேற்படி கிராமத்தாரில் பலர் மாநாட்டுக்குப் பணம் கொடுத் திருக்கும்போது சிலர் கொடுக்காததற்காக எப்படி அந்தக் கிராமத்தைப் புறக்கணிக்க முடியும்? வாதத்திற்காகத்தான் கேட்கிறேன்!

பரம்பிக்குளம்-ஆளியாறு புதிய ஆயக்கட்டுகளை விரிவு படுத்தும் திட்டப்படி முதலில் எண்பதாயிரம் ஏக்கராதான் எடுப்பது என்று கழக அரசு முடிவு கட்டியது. பிறகு பல கோரிக்கைகளை எல்லாக் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் வலியுறுத்தி வழங்கியதின் காரணமாக மிகுந்த சிரமத்துக்கிடையே ஒரு லட்சத்து முப்பதாயிரம் ஏக்கராவுக்கு அந்த ஆயக்கட்டு விரிவு படுத்தப்பட்டது.

இதில் மாநாட்டுப் பிரச்சினைக்கே இடமில்லை-மாநாட்டுக்கு இரண்டு மாதங்களுக்கு முன்பே நான் இந்தப் புதிய ஆயக்கட்டு தொடக்க விழாவுக்குச் செல்வதாக இருந்து பெருமழையின் காரணமாக நிகழ்ச்சி தள்ளி வைக்கப்பட்டது.

இப்போதும், இன்றுள்ள அரசு-ஆயக்கட்டுகளை, கேட்கிற எல்லா கிராமங்களுக்கும் முடிந்தால் விரிவுபடுத்தலாம். அப்படிச் செய்தால் அதில் எனக்கும் உனக்கும் இரட்டிப்பு மகிழ்ச்சிதான்.

எப்படியோ; பெரியவரிடம் வியாழக்கிழமை கூறப்பட்ட தகவலும்; வெள்ளிக்கிழமை கூறப்பட்ட தகவலும் தவறானவை-என்பதை மட்டும் நான் மிகுந்த பணிவன்புடன்; உடன்பிறப்பே! உன் வாயிலாக அவருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புள்ள,

**மு. க.**

28-03-1976

# 187. படமெடுக்கிறார்களே, என்னைப் பார்த்து - ஏன்?

**உடன்பிறப்பே,**

இரண்டு மூன்று நாட்களாக சில ஏடுகளில் சினிமாவை ஒழிப்பதற்குக் கருணாநிதி சதி செய்தார். கேளிக்கை வரியை உயர்த்தினார், யாரோ ஒரு குறிப்பிட்ட பெருமகனாரை வீழ்த்துவதற்காக "ஷோ டாக்ஸ்" என்ற காட்சி வரியை உயர்த்தினார் என்றெல்லாம் சிலர் அறிக்கைகளை விட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

திரைப்பட அரங்குகளில் நடைபெறுகிற வரி ஏய்ப்புக்களைப் பற்றியும், சென்னை போன்ற நகர்ப்புற திரையரங்குகளில் வாராந்திர வாடகை என்ற பெயரால் அதிகத் தொகை வசூலிக்கிறார்கள் என்பது பற்றியும், சட்டப்பேரவையிலேயே நான் எடுத்துரைத்து அதன் காரணமாக கேளிக்கை வரி விகிதத்தில் சில மாற்றங்களைச் செய்து; அதனையொட்டித் திரைப்படத் துறையினர் விடுத்த கோரிக்கையையும் சட்டப்பேரவையிலேயே உறுப்பினர்களாகவும், திரைப்படத் துறையில் தொடர்பு கொண்டவர்களாகவும் இருந்த நண்பர்கள் சபையிலேயே தெரிவித்த சீரிய ஆலோசனைகளையும் ஏற்றுக்கொண்டு ஒரு குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழுவில் திரைப்படத் துறை, திரையரங்குகள், விநியோகஸ்தர்கள் துறை தொடர்புடைய பிரதிநிதிகள் பலரும் அங்கம் வகிக்கிற வாய்ப்பும் அளிக்கப்பட்டு, அந்தக் குழுவினர் இரண்டு மூன்று தடவை கூடிப் பேசியும் இருக்கின்றனர்.

1 வரி ஏய்ப்புக்களில் திரையரங்கினர் ஈடுபடாமல் இருப்பது

2 திரையரங்குகளில் வாராந்திர வாடகை முறை இல்லாமல் வசூலின் அடிப்படையில் விகிதாசார முறையை கடைப்பிடிப்பது.

3 நகர்ப்புற திரையரங்குகள், கிராமப்புற "டூரிங் திரையரங்குகள்" - செலுத்தவேண்டிய கேளிக்கை வரிகளை எந்த வகையில் சீரமைப்பது,

போன்ற விஷயங்களை அந்தக் குழுவினர் ஆராய்ந்து அரசுக்குப் பரிந்துரை செய்வார்களேயானால் அதன் அடிப்படையில் கேளிக்கை வரிக் குறைப்பு சம்பந்தமான சில சலுகைகளை வழங்கலாமென்பது கழக அரசின் முடிவாக இருந்தது.

அந்தக் குழு தனது பரிந்துரை அறிக்கையைத் தருவதற்கு முன்பாகத் தமிழகத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி பிரகடனப் படுத்தப்பட்டுவிட்டது.

அந்தக் குழு, கலைக்கப்படவில்லையென்றுதான் நான் நம்புகிறேன். அந்தக் குழு தனது பரிந்துரைகளை விரைவில் வழங்கிடும் என்றும் எதிர்பார்க்கிறேன். கேளிக்கை வரி அதிகமாக்கிக்கொண்டே போனால் படத் தயாரிப்பு பாதிக்கப்படும் என்பதை நான் மறுக்கவில்லை. படங்கள் பாதிக்கப்படுவதற்குக் கேளிக்கை வரி மட்டும் காரணமல்ல! அதைவிடப் பெரிய காரணங்கள் பல இருக்கின்றன.

படமெடுக்கிற சுருள்களின் விலை இப்போது எவ்வளவு? விலை உயர்ந்ததற்கு என்ன காரணம்? வரி அதிகமானது காரணமில்லையா? அந்த வரி மாநில அரசு விதித்ததா?

படம் எடுத்து முடிந்ததும், ஒவ்வொரு பிரதி எடுப்பதற்கும் மத்திய அரசுக்குக் கட்டணம் கட்ட வேண்டுமென்று பத்தாண்டுக்கு முன்பே யார் ஆணையிட்டது? கருணாநிதியா? இல்லையே? அந்தக் கட்டணங்கள் ஆண்டுக்கு ஆண்டு எவ்வளவு உயரத்தில் வளர்ந்திருக்கிறது என்பது படம் எடுப்பவர்களுக்குத் தெரியாதா?

சென்னையில் உள்ள முக்கியமான தியேட்டர்களில் நடுத்தரமான படங்களைக்கூட வெளியிட முடியாமல் தயாரிப்பாளர்கள் தவிப்பது ஏன்? தியேட்டர்காரர்கள் அதிக வாடகை கேட்கிறார்கள் என்பது காரணமல்லவா?

இதையெல்லாம்விட மிக முக்கியமான காரணம் ஒன்று இருக்கிறதே!

பட விநியோகத்தில் F. H. என்று, அதாவது வரையறுக்கப் பட்ட வாடகை என்று ஒரு முறை உள்ளது. அதன்படி பட விநியோகஸ்தர், தியேட்டர்காரருக்கு படத்தை ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு குறிப்பிட்ட தொகைக்கு திரையிடத் தருவார். ஒரு ஊரில் ஒரு தியேட்டர் இருந்தால் அந்தத் தியேட்டர்காரர் ஆயிரம் ரூபாய் செலுத்தி ஒரு வார காலத்துக்கு அந்தப் படத்தைத் திரையிடும் உரிமையைப் பெறுவார். ஆனால் இந்த முறையின் இடையே கறுப்புப் பணம் விளையாடும்! ஆயிரம் ரூபாய் செலுத்திய தியேட்டர்காரர் ரசீது பெறுவது ரூபாய் ஐநூறுக்காகத்தான் இருக்கும். கணக்கில் வரும் தொகை ஐநூறுதான்! மீதி ஐநூறு படத் தயாரிப்பாளருக்குச் செல்லாது! விநியோகஸ்தரின் கறுப்புப் பணப் பெட்டிக்குள் போய்விடும். விநியோகஸ்தருக்குத் தந்த கறுப்புப் பணத்தைச் சரிக்கட்ட தியேட்டர் உரிமையாளர் டிக்கெட் விற்பனையில் கள்ளத்தனம் செய்கிறார். அதற்காக ஒரு சில அதிகாரிகளையும் கறுப்புப்பண திருவிளையாடல் மூலம் கைக்குள் போட்டுக் கொள்கிறார். வரி ஏய்ப்பு நடைபெறுகிறது.

இது எல்லா தியேட்டர்காரர்களுமோ, அல்லது எல்லா விநியோகஸ்தர்களுமோ, அல்லது எல்லா அதிகாரிகளுமோ-செய்கிறார்கள் என்று நான் கூறமாட்டேன். ஆனால், இது தங்குதடையின்றி பெரிய ஊர்களிலும், நகரங்கள் சிலவற்றிலும்கூட கணிசமான அளவுக்கு நடைபெறுகிறது.

இப்படி தியேட்டர் அளவிலே உற்பத்தியாகிற கறுப்புப் பணம், விநியோகஸ்தர் அளவிலே இரண்டு மூன்று மடங்காகப் பெருகுகிறது.

உதாரணமாக தியேட்டர் அளவில் குறைந்த தொகையாக இரண்டாயிரம் ரூபாய் கறுப்புப் பணம் என்று வைத்துக்கொண்டால், அவைகளும், விநியோகஸ்தர் இவ்வாறு பல தியேட்டர்களில் பெறுகிற கறுப்புப் பணமும் சேர்ந்து ஒரு பகுதியில் மட்டும் இரண்டு லட்ச ரூபாய்க்குக் குறையாத கறுப்புப் பணம் உற்பத்தியாகிறது.

பிறகு, இந்தக் கறுப்புப்பணமெல்லாம் சென்னையை நோக்கிச் சில தயாரிப்பாளர்களிடம் அணிவகுக்கத் தொடங்குகின்றன, படத் தயாரிப்பாளர், என்ன ஆகிறார்? ஒரு லட்சமோ இரண்டு லட்சமோ என்று ஒப்பந்தம் எழுதிக்கொண்டு, திரைமறைவில் மிச்சமுள்ள ஏழெட்டு லட்ச ரூபாய்களைப் பெற்றுக்கொள்கிற நடிகரைத் தன்

படத்தில் நடிக்க வைக்கிறார்.

படம் எடுத்து முடிவதற்குள் அப்படிப்பட்ட ஒரு சில தயாரிப்பாளர்கள் படுகிற பாடு; அப்பப்பா! சொல்லத் தரமன்று!

"உடும்பு வேண்டாம்; கையை விட்டால் போதும்!" என்று பெரிய படத் தயாரிப்பாளர்கள், தங்கள் மிச்சமுள்ள கௌரவத்தைக் காப்பாற்றிக் கொள்ளத் தமிழ்ப்படங்களை எடுப்பதையே நிறுத்திக் கொண்டார்கள் என்பதை யாராவது மறுக்க முடியுமா?

பெரிய நடிகரைப் போட்டதால் படம் நல்ல விலைக்கு விற்பனையாகிறது. ஆனால் படத்தயாரிப்பாளருக்கு என்ன மிச்சம்? எடுத்த படத்தைத் திருப்பித் திருப்பி எடுப்பது! பாதி படத்தில் முக்கிய கதாபாத்திரங்களை மாற்றுவது! அல்லது, கதையையே மாற்றுவது-இப்படிப்பட்ட சோதனைகளுக்கெல்லாம் பாவம்; சில படத் தயாரிப்பாளர்கள் ஆளாக வேண்டி நேரிடுகிறது.

அதனால் படத்தை விற்ற விலையைவிட, தயாரித்த செலவு சில நேரங்களில் அதிகமாகிவிடுகிறது. விளைவு என்னவென்றால்; எங்கேயோ பொதுமக்கள், பொழுது போக்கிற்காகத் தந்த பணம்-அந்த ஊரிலேயே ஒரு பகுதி கறுப்புப் பணமாக மாறி, அரசாங்க வரி இலாகாவையும் ஏமாற்றி, விநியோகஸ்தர்கள் மூலமாக, தயாரிப்பாளர்களிடம் வந்து அவர்கள் வாயிலாகக் குறிப்பிட்ட சில பெரிய நடிகர்களின் கைக்கு மாறிவிடுகிறது.

இந்தக் கறுப்புச் சந்தை ஒழிக்கப்பட்டால் தமிழ்ப் படத் தயாரிப்பாளர்கள் நிம்மதிப் பெருமூச்சு விட முடியுமல்லவா? தயாரிப்பாளர்களில் சிலரும், இந்த அரசாங்க விரோதமான கறுப்புச் சந்தைக்கு விதிவிலக்கு அல்ல என்பதையும் நான் சுட்டிக்காட்டவே கடமைப்பட்டுள்ளேன்.

எனவே திரைப்படத்துறையில் அடிவாரத்திலிருந்து உச்சிவரையில் விரிவடைந்து பரவியுள்ள வரி ஏய்ப்பு, கறுப்புப் பணம், போன்றவைகளைக் களைந்திட, தொடர்புடைய அனைவரும் அரசாங்கத்துடன் ஒத்துழைக்க வேண்டும்.

ஆந்திரத்திலும், கர்நாடகத்திலும் படம் எடுக்க உதவிப் பணம் தருகிறார்கள் என்றால்; அங்கே இதுவரை திரைப்படத்துறை வளர்ச்சி பெறவில்லை. அதனை ஊக்கப்படுத்திடத் தருகிறார்கள்.

தமிழகத்தில், திரைப்படத்துறை வளர்ச்சி பெற்ற ஒன்றாகும்.

நான் குறிப்பிட்டுள்ள சீர்கேடுகள், வரி ஏய்ப்புக்கள் அகற்றப்படுகிற அடிப்படையில் கேளிக்கை வரி சீரமைக்கப்பட்டாலே; இங்கும் அரசினரும், படத்துறையினரும் இழப்புக்கு ஆளாகாத அளவுக்கு முன்னேற்றம் ஏற்படக்கூடும்.

கழக அரசில்தான் "தற்காலிக நிரந்தர சினிமா தியேட்டர்கள்" கட்டுவதற்கான கடன் உதவிகள் தருகிற திட்டம் செயல்படுத்தப் பட்டது என்பதை மறந்துவிடக் கூடாது.

எனவே, கழக அரசு திரைப்படத் தொழிலை அழிக்கக் கங்கணம் கட்டிக்கொள்ளவில்லை. கேளிக்கை வரி முதலியவற்றை சீரமைக்கக் குழு அமைத்திருப்பது ஒன்றே அந்தத் தொழில் அழியக்கூடாது என்பதில் கழக அரசுக்கு இருந்த அக்கறையையும், விட்டுக் கொடுக்கும் போக்கையும் நன்கு உணர்த்தும்.

இதையெல்லாம் மறைத்துவிட்டு; படத்துறையைப் பாழாக்கத் திட்டமிட்டேன் என்று என்னைப் பார்த்துப் படமெடுக்கிறார்களே– நான் அவர்களைப் பற்றி என்ன சொல்ல!

அன்புள்ள,

**மு. க.**

29-03-1976

# 188. பழைய காலத்துப் பாசறையில் நடந்தது...!

**உடன்பிறப்பே,**

ஒரு பழைய காலத்துப் பாசறைக் காட்சி இது!

அமைதியின் கரங்களால் தடவிக் கொடுக்கப்பெற்று இயற்கை தூங்க முயலுகிறது. அதோ-தீப்பந்தங்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாக நின்று கொண்டு ஒளியை இயன்றவரையில் பரப்பிக் கொண்டிருக்கின்றன.

குறைவான அந்த வெளிச்சத்திலும் கடலைப் பொட்டலங் களைப் போன்ற வடிவமைந்த கூடாரங்கள் கண்ணுக்குத் தெரிகின்றன. நான்கைந்து காவல்வீரர்கள் கையில் ஆயுதங்கள் ஏந்தியவாறு எதிரிகளின் ஊடுருவல் ஏதாவது நடைபெற்று விடக்கூடாது என்பதிலே மிக்க கவனமாக அங்குமிங்கும் விழிகளைச் சுழல விட்டவாறு கூடாரங்களைச் சுற்றி நடந்து கொண்டிருக்கின்றனர்.

ஒன்றிரண்டு கூடாரங்களில் முனகல் ஒலிகேட்கிறது. அது, அன்றைக்கு ஏற்பட்ட காயங்களின் விளைவுதான்! வேறு ஒன்று மில்லை.

ஒரு கூடாரத்தில் தளபதி உறக்கம் கொள்ளாமல் உலவிக் கொண்டிருக்கிறான். மறுநாள் நடக்கவேண்டிய காரியங்களுக்கான திட்டங்கள் அவன் மூளையென்னும் உலைக்களத்தில் உருவாகிக் கொண்டிருக்கின்றன. இரவு உணவு படைக்கப்பட்டிருந்த வட்டில் கூட அவனுக்காகக் காத்துக்கொண்டிருக்கிறது. அந்த நினைவேயின்றி-பசியெனும் உணர்வே யற்றுப்போன நிலையில் அவனது சிந்தனைகள் அவனை ஆட்கொண்டிருக்கின்றன.

அதற்கடுத்த கூடாரத்தில் வீரர்கள் இரண்டொருவர் உரை யாடுவது புரிகிறது.

"விழுப்புண் படாத நாள்,

என்று ஒரு வீரன் கம்பீரமாகக் கூறுகிறான்.

"ஆமாம்! இன்றைய பொழுது நம்மை உயிரோடு வைத்திருக்கிறது. நாளைய பொழுது நம்மில் யார் மிஞ்சுகிறோமோ? நீயோ? அல்லது நானோ? எனக்கே அந்தக் 'களச்சாவு' எனும் பரிசு கிடைக்கவேண்டு மென்றும், என் உடல் மீது என் தலைவன் உகுக்கும் கண்ணீர் படவேண்டுமென்றும் யாசிக்கிறேன்."

இந்தக் குரலிலும் அழுத்தம் தொனிக்கிறது. அந்த வீரர்கள் கட்டித் தழுவிக் கொள்கிறார்கள். அவர்கள் விழியில் பெருகிடும் நீர்த்துளிகளில் வீரத்தின் சூடு நிறைந்திருக்கிறது.

"நமது கல்லறைகளின் மீது என்ன எழுதப்படும்?" தழுவியவாறே ஒரு வீரன், வினா எழுப்புகிறான்.

"உலகில் எத்தனையோ கல்லறைகள் இருக்கின்றன. சலவைக் கல்லாலும் தங்கம் வெள்ளி போன்றவைகளாலும் அழகு செய்யப்பட்ட கல்லறைகள் பல இருக்கின்றன. பெரிய பெரிய மனிதர்களை யெல்லாம் புதைத்திருக்கிற கல்லறைகள் இருக்கின்றன. காதலர்களின் கல்லறைகள் இருக்கின்றன. மக்களால் மறந்துபோனவர்களின் கல்லறைகள் பலப்பல இருக்கின்றன. எழில்சேர் கவிதைகள் எழுதப்பட்ட கல்லறைகள் பெயர் தவிர வேறு எதுவும் எழுதப்படாத கல்லறைகள், பெயர்கூட இல்லாத கல்லறைகள்-இப்படி எத்தனையோ இருக்கின்றன. நண்பா! கூட்டமாக அணிவகுத்து நிற்கும் நமது கல்லறைகள் அனைத்துக்கும் சேர்ந்தாற்போல் 'இவர்கள் நாட்டையும் மக்களையும் நேசித்தார்கள்' என்று எழுதப்படும் என்பதுமட்டும் உறுதி!"

என்கிறான், மற்றொரு வீரன்.

அதற்குச் சற்று தொலைவிலே ஒரு கூடாரம், வெளியிலிருந்து படுகிற ஒளியைத் தவிர, உள்ளே எந்த விதமான சிறு வெளிச்சமும் கிடையாது.

இரண்டு தாழம்பாய்களில் இரு வீரர்கள் படுத்திருக்கின்றனர். அவர்கள், தூங்குவதுபோலக் காலை நீட்டிக் கொண்டு தலையை முழங்கையில் சாய்த்துக்கொண்டு படுத்திருந்தாலும் இருவரும்

உண்மையில் தூங்கவில்லை. இமைகளைச் சிறிது சிறிதாகத் திறப்பதும் பிறகு மூடிக் கொள்வதுமாக இருக்கின்றனர்.

ஒருவன் கண்ணைத் திறந்து பார்ப்பதை இன்னொருவன் பார்த்துவிடக் கூடாது என்பதிலும் மிகுந்த முன் எச்சரிக்கையாக இருக்கிறார்கள்.

கொஞ்ச நேரத்துக்குப் பிறகு, அநேகமாக எல்லாக் கூடாரங்களிலுமுள்ள விளக்குகள் அணைக்கப்படுகின்றன. வெளியில் மட்டும் தீப்பந்தங்கள் எரிந்து கொண்டிருக்கின்றன.

தூங்குவதுபோலப் பாசாங்கு செய்யும் வீரர்களிலே ஒருவன் பூனைபோல மெதுவாக எழுந்து கூடாரத்தின் ஓரத்துக்குச் செல்கிறான். அப்போது வெளியில் காவல் புரியும் வீரன் அந்தக் கூடாரத்தைக் கடந்து அடுத்த பக்கம் செல்கிறான். இவன் பெருமூச்சு விட்டுக்கொள்கிறான்.

ஓசைப்படாமல் கூடாரத்துத் துணியை விலக்குகிறான். யாரும் வெளியே இல்லை. அவனுக்குத் துணிவு வந்துவிட்டது. "ஆண்டவா!" என்று மெல்லிய குரலில் கூறிக்கொள்கிறான். இதுதான் சமயம்! ஓடிப்போய் உயிர்பிழைக்க! ஒரு காலை எடுத்து கூடாரத்துக்கு வெளியே வைக்கிறான் அப்போது, கூடாரத்துக் குள்ளிருந்து ஒரு கை அவனைப் பிடித்துக் கொள்கிறது. மெல்லிய சிரிப்பு! ஆம்; மற்றொரு வீரனின் சிரிப்புத்தான்!

"எங்கே ஓடுகிறாய்?". "உயிர்பிழைக்க ஓடுகிறேன்!" வினாவும் விடையும் நடுக்கத்தோடு வெளிப்படுகின்றன.

"ஓ! நீ எனக்கு சரியான 'இணை'தான்! எனக்கும் ஓடிவிட்டால் நல்லது என்றே தோன்றுகிறது!"

"பிறகேன் தயக்கம்? வா, போய்விடுவோம்!"

"ஓடிவிட்டால், ஊரார் கோழை என்பார்களே!"

"ஊரார் என்ன, நம் உயிருக்குப் பொறுப்பாளிகளா!"

"அவர்களுக்கு நேராக நான் பேசிய வீரம் நம் தளபதிகூடப் பேசியது கிடையாதே!"

"அதனால் என்ன; நான்கூடத்தான் பேசினேன். அதெல்லாம் இப்போது யார் நினைவில் வைத்திருக்கப் போகிறார்கள்! வா! வா! ஓடி உயிர் பிழைப்போம்!"

"சொல்வதைக் கேள்! நாம் உயிர் பிழைத்து வாழவும் வேண்டும். அதே நேரம் கோழைகள் என்று பெயர் எடுக்கவும் கூடாது. அப்படியொரு திட்டம் தயாரிக்க வேண்டும்!"

"என்ன திட்டம்? சீக்கிரம் சொல்! முடியாவிட்டால் ஓடிவிடலாம் வா!"

"அவசரப்படாதே! நாம் பாசறையில் இருக்க வேண்டும்-ஆனால் களத்திற்குச் செல்லக்கூடாது!"

"அது எப்படி முடியும்?"

"கேள், காதைத் தீட்டிக்கொண்டு! நாளை காலையில் நமது அணிவகுப்பை நமது தளபதி பார்வையிடுவான்; இல்லையா?"

"ஆமாம்!"

"அந்த அணிவகுப்பில் நாமும் நிற்கத்தானே வேண்டும்!"

"அய்யோ! அதற்குள்தான் ஓடிவிடலாம் என்கிறேன்!"

"கேளப்பா, கவனமாக!"

"சொல்லித் தொலையப்பா சுருக்கமாக!"

"அணிவகுப்பில் நாம் நிற்கும்போதே, தளபதியின் போக்கு சரியில்லை-அவன் வகுத்த திட்டங்கள் சரியில்லை யென்று உரக்கக் கூவுவது....."

"அய்யோ! அது நமது கட்டுப்பாட்டை மீறும் செயலாயிற்றே!"

"உஸ்! சும்மாயிரு!! நாமும் தப்பிக்க வேண்டும், நமக்குக் கோழை என்ற பெயரும் வரக்கூடாது. அதற்கு இதுதான் வழி. கட்டுப்பாட்டை மீறி தளபதியின் மீது களங்கம் சுமத்தினால், அவன் நம்மை நம்பாமல் நம்மை நமது தலைநகருக்கே திருப்பி அனுப்பி விடுவான்!"

"தலைநகர மக்கள், நம்மை வரவேற்க மறுத்தால்..."

"இருக்கவே இருக்கிறது எதிரியின் பாசறை!"

"அருமையான திட்டம்! வா, இன்றிரவு அயர்ந்து தூங்குவோம்!"

சில நொடிகளுக்குப் பிறகு, அந்தக் கூடாரத்தில் எழுந்த குறட்டைச் சத்தம், இயற்கையின் அமைதியான உறக்கத்தைக் கூட குலைத்தது என்று கூறலாம்.

உடன்பிறப்பே,

பழைய காலத்துப் பாசறையொன்றில் நிகழ்ந்த சம்பவத்தைப் பற்றி உனக்கு எழுதினேன். வீரர்களுக்கிடையிலேயும் இத்தகைய விஷவித்துக்கள், அந்தக் காலத்திலேயே இருந்திருக்கின்றன பார்த்தாயா?

அன்புள்ள,

மு. க.

30-03-1976

# 189. ஒற்றர் பணி - ஒப்பற்ற புனிதப் பணி!

**உடன்பிறப்பே,**

வள்ளுவர் வழங்கியுள்ள திருக்குறளில், அரசியல் அதிகாரத்தில் "ஒற்றாடல்" பற்றிய கருத்துக்கள், முடியாட்சியாயினும், குடியாட்சியாயினும் இரண்டுக்கும் பொருந்தக் கூடியவைகளாகும்.

அவர், குறளில் அரசன், மன்னவன், இறைவன் என்று எப்படிக் குறிப்பிட்டிருந்தாலும் அவை 'அரசாங்கம்' என்பதையே உணர்த்துவதாகும்.

*"ஒற்றும் உரைசான்ற நூலும் இவையிரண்டும்*
*தெற்றென்க மன்னவன் கண்"*

நீதி நூல் அரசுக்கு எப்படி ஒரு கண்ணைப் போன்றதோ; அதைப்போலவே ஒற்றர் துறையும் மற்றொரு கண்ணைப் போன்றதாகும் என்று வள்ளுவர் சிறப்பித்துக் கூறுகிறார்.

நீதி நூல் என்று வள்ளுவர் காலத்தில் வழங்கப்பட்டது தான் இன்றைக்கு, மக்களால் மக்களுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் ஆட்சியின் அரசியல் சட்டமாக அதன் அடிப்படையில் உருவாக்கியுள்ள பல்வேறு சட்டப்பிரிவுகளாக விளங்குகின்றன.

சட்டத்தின் ஒரு சாதாரண உட்பிரிவின் - கிளைப் பிரிவின் - துணைப்பிரிவாக இருந்தால்கூட, அதுவும் நீதியென்னும் அடித்தளத்தைத் தகர்க்காமல் அமைந்திட வேண்டும்.

அத்தகைய புனிதம் வாய்ந்த நீதி நூலையும், ஒற்றர் படையையும் முகத்திரண்டு கண்களுக்கு ஒப்பாகச் சொல்லுகிறார் என்றால்; வள்ளுவரின் அரசியல் நுண்ணறிவைப் புகழ்வதற்கு வார்த்தைகளே கிடைக்கவில்லை என்றுதான் கூற வேண்டும்.

நீதி, நிலைமைகளுக்கேற்ப நெகிழ்ந்தும் வளைந்தும் கொடுப்பது கூடாது. ஒற்றர் பணிகளும் அவ்வாறே இருக்க

வேண்டும். அந்தப் பணிக்குத் தேவையான திறமை, தந்திரம், துணிவு இவைகளோடு மனச்சாட்சியும் இணைந்திட வேண்டும்.

மனச்சாட்சி என்பது, நீதி என்னும் நாணயத்தின் மறுபக்க மாகும். இரு விழிகளும் ஒன்றையே நோக்குவதுபோல நீதி நூலின் பிரிவுகளும், ஒற்றர் பணிகளும் மனச்சாட்சியுடன் அமைந்திட வேண்டு மென்பதற்காகத்தான், வள்ளுவர் அழுத்தம் திருத்தமாக "ஒரு அரசின் கண்கள் அவையிரண்டும்!" என விளக்குகிறார்.

ஒற்றருக்குப் பல்வேறு பணிகள் உண்டு. அனைத்தும் அரசையும் நாட்டையும் காப்பதற்காக வகுக்கப்பெற்ற பணிகளின் தொகுப்பேயாகும்.

பகை நாட்டார் எப்படிப்பட்ட சூழ்ச்சிகளைக் கையாண்டு வெற்றி கொள்ளப் பார்க்கிறார்கள் என்பதை அறிவது! பகைநாட்டு ஒற்றர்கள், தன்னுடைய நாட்டில் எங்கெங்கே நுழைந்து கேடு செய்ய முனைகிறார்கள் என்பதைக் கண்டுபிடித்து அந்தக் கேடு, களையப்பட முயற்சிகளை எடுப்பது! பகைநாட்டாரின் தந்திரங் களை, தரைமட்டமாக்குவது! பகைவருக்குத் துணைபுரியும் துரோகிகள் யாராவது தனது நாட்டில் இருக்கிறார்களா எனத் தேடி அலைந்து தெளிந்து அத்தகையோரை நசுக்குவது-அவர்கள் துரோகச் செயல்களைத் தூள் தூளாக நொறுக்குவது! இவை மட்டுமன்றி, உள்நாட்டில் அரசுக்கு விரோதமாக - நாட்டுக்கு விரோதமாக-சட்டங்களுக்கு விரோதமாக-எத்தகைய நடவடிக் கைகளில் யார் ஈடுபட்டாலும் அவைகளை ஆராய்ந்து, தேர்ந்து, உண்மையான குற்றவாளிகளை நீதியின் முன்னால் நிறுத்துவது! அவர்கள் மக்களுக்கும் சமுதாயத்திற்கும் தீமை விளையக்கூடிய சட்ட விரோத காரியங்களைச் செய்யவொட்டாமல் தக்க நேரத்தில் தடுப்பது! என்பவைகளும் ஒற்றர்களின் பணியாகும்.

இந்தப் பணியில் அவர்கள் நீதியின் தராசு முனையை எள் அளவுகூடச் சாயவிடாமல் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான், ஒற்றர் பணியை நீதி நூலின் பெருமையோடு, வள்ளுவர் ஒன்று சேர்த்துக் காட்டுகிறார்.

இருக்கிற குற்றங்களை, மறைந்தும் ஒளிந்தும் கிடக்கிற குற்றங்களை வெளிப்படுத்துவது ஒற்றர்கள் பணியாகும்.

ஏதாவது ஒரு குற்றத்தை உருவாக்கியே தீர வேண்டும் என்பதற்காக, இல்லாத குற்றத்தை எவன் மீதாவது சுமத்தி வஞ்சம் தீர்த்துக்கொள்ளத் தங்களுக்குக் கிடைத்த ஒற்றர் வேலையை யாரோ சிலர் வள்ளுவர் காலத்திலேயே பயன்படுத்தியிருக்கக் கூடும். அதனால்தான் திருவள்ளுவர், ஒற்றர் பணியின் சிறப்பையும், தூய்மையையும் எடுத்துக் காட்டுவதற்காக இதனை நீதி நூலுடன் ஒப்பிட்டார்.

இதிலிருந்து ஒற்றர்கள் எவ்வளவு தூய்மையானவர்களாக இருக்கவேண்டும் என்று புரிகிறதல்லவா?

யார் எந்தத் தகவலைச் சொன்னாலும் அதன் அடிப்படையில் சிந்திப்பதற்கும், சந்தேகப்பட்டவர்களை ஆராய்வதற்கும் உரிமை படைத்தவர்கள் ஒற்றர்கள்!

ஆனால், நாம் சந்தேகப்பட்டுவிட்டோமே; அதனால் அவர்கள் குற்றவாளிகளாகத்தான் ஆக்கப்பட வேண்டும் என்று நீதிக்குப் புறம்பான காரியங்களில் ஈடுபட்டுவிடக் கூடாது என்பதை வலியுறுத்தவே, ஒற்றர் பணி நீதி நூலைப்போன்றது என மிக உருக்கமாக வள்ளுவர், குறள் வாயிலாகப் பேசுகிறார்.

*“வினைசெய்வார், தம்சுற்றம், வேண்டாதார் என்றாங்கு*
*அனைவரையும் ஆராய்வது ஒற்று.”*

சுற்றத்தாராயினும் பகைவராயினும்-அதாவது வேண்டியவர், வேண்டாதவர் என்று இல்லாமல் அனைவரையும் ஆராய்வதுதான் ஒற்றரின் தொழிலாக அமைய வேண்டும் என்று வள்ளுவர் கூறும்போது, அந்தக் குறளைப் படிக்கும் நமக்குச் சிந்தனைகள், எங்கெங்கே பறக்கின்றன பார்த்தாயா?

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தமிழகத்தில் அரசியல் நீதியைப் போதித்த அந்த அறிவரசனுக்கு, ஒரு வள்ளுவர் கோட்டமென்ன-ஓராயிரம் வள்ளுவர் கோட்டங்கள் அமைத்தாலும் போதாதே.

வேண்டியவர் - வேண்டாதவர் - சுற்றத்தார் - பகைவர் - என்றெல்லாம் பார்க்காமல் அனைவரையும் ஆராய்வதுதான் ஒற்றருக்கு அழகு! இதிலிருந்து என்ன விளங்குகிறது?

இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே, ஒற்றர் பணி - நீதி வழுவாமல், அனைவர்க்கும் சமமாக ஏற்றத்தாழ்வற்ற முறையில், கசப்பு காழ்ப்புக்கு உட்படாமல் நடைபெற்றாக வேண்டுமென்று வள்ளுவர் கூறவேண்டிய அவசியம் இருந்திருக்கிறது!

இன்னும் மேலாகத் தன்னுடைய அரசியல் திறமையை பொய்யாமொழிப் புலவர் வள்ளுவர் காட்டுகிறார் பார்!

அரசனைத் திருப்திப்படுத்த அல்லது தனக்கு மேலே உள்ளவர்களுக்குத் தன் திறமையை எடுத்துரைக்க - யாராவது ஒரு ஒற்றன், தவறான செய்தியைக் கூறிவிடக்கூடும். எனவே, அந்த ஒற்றனறியாமல் மற்றொரு ஒற்றன் அதே செய்தி பற்றிய உண்மையை அறிய முயன்றிட வேண்டும். பிறகு அந்த இரண்டு ஒற்றர்களுடைய கூற்றையும் ஒப்பிட்டுப் பார்த்து எது சரி என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும். இவ்வாறு அறிவுறுத்துகிறார் அவர்.

*“ஒற்றொற்றித் தந்த பொருளையும் மற்றுமோர்*
*ஒற்றினால் ஒற்றிக் கொளல்”*

அதற்காகவே இந்தக் குறள் வரிகளைத் தீட்டியிருக்கிறார். அத்துடன் விடுகிறாரா? ஓர் ஒற்றரை மற்றோர் ஒற்றர் அறியாதபடி செய்யவேண்டும். அவ்வாறு நியமிக்கப்பட்ட ஒற்றர்கள் மூவரின் சொல், ஒத்திருந்தால், அதனை உண்மையென்று தெளிய வேண்டும், என்பதற்காகவும் இதோ ஒரு குறளை வழங்குகிறார்.

*“ஒற்றொற் றுணராமை ஆள்க உடன்மூவர்*
*சொல் தொக்க தேறப் படும்.”*

ஒற்றர்களே அறிந்து சொல்கிற தகவல்களாக இருப்பினும், அவைகளை உண்மையென்று எடுத்துக்கொள்வதற்கு எத்தனை படிக்கட்டுகளை அமைத்திருக்கிறார் பார்த்தாயா; வள்ளுவர்!

அந்தத் தகவலின் இறுதி வடிவத்தைக்கூட நீதியின் முன்னால் நிறுத்தி உரைத்துப் பார்க்க வேண்டுமல்லவா? அதனால்தானே நீதி நூலும் ஒற்றத் தொழிலும் இரண்டு கண்கள் என்கிறார்.

இப்படிப்பட்ட ஒப்பற்ற தொழிலுக்கு மாசு வந்திடக் கூடாது, கடுகளவு களங்கமும் சேர்ந்திடக் கூடாது, “அவர் சொன்னார்! இவர் சொன்னார்” என்று எவர் “குரலு”க்கும் செவிசாய்த்தல் கூடாது -

நீதி, தாழக் கூடாது என்ற கவலையோடுதான் இந்தக் குறட்பாக்கள் வெளிப்பட்டிருக்கின்றன.

வாழ்க வள்ளுவரின் பெருமை! எனக் கூறி இன்றைய கடிதத்தை முடிக்கிறேன்.

அன்புள்ள,

மு. க.

31-03-1976

# 190. அண்ணாமீது ஆணையாக...!

**உடன்பிறப்பே,**

ஆட்சி முடிவுற்றவுடன் தி. மு. க. அழிந்துவிடும் என்று கருதினார்கள்.

இயலாதவர்கள் சிலபேர் விலகி ஒதுங்கியது கண்டு, தீர்ந்தது தி. மு. க. என்று உரக்கக் கத்தினார்கள்.

அனுபவித்தவர்கள் சிலர் மண்ணை வாரித் தூற்றிவிட்டு துரோகிகளாக மாறியது கண்டு தி. மு. க. ஆழ்குழிக்குப் போய்விட்டது என்று மகிழ்ச்சிச் சிந்து பாடினார்கள்.

ஓடவும் முடியாமல் இருக்கவும் முடியாமல் சலசலப்புக் காட்டும் சிலரைப் பார்த்து இவர்களால் தி. மு. க. தரை மட்டமாக்கப் பட்டுவிடும் என்று கும்மாளம் போட்டார்கள்.

இத்தனை மகிழ்ச்சி ஆரவாரத்துக்குப் பிறகும், தி. மு. க. அழியவில்லையே என்ற கவலை, அந்த எரிச்சல்காரர்களைப் பிடித்து ஆட்டத் தொடங்கிவிட்டது.

"இல்லை! இல்லை! தி. மு. க. அழிந்துபோய் விட்டது!" என்று அவர்கள் கூறுவார்களேயானால் இன்னும் இத்தனை எதிர்ப்பு-கண்டனம்-கடுமொழி-இழிமொழி - கற்பனையுரைகள்- எனும் விதத்தில் கணைகளைப் பொழிகிறார்களே; ஏன்?

தி. மு. க. என்பது நேற்றுப் பெய்த மழையில் இன்று முளைத்த காளான் அல்ல! இதற்கு அறுபது ஆண்டுகளுக்கு மேலான வரலாறு உண்டு,

அந்த வரலாற்றில் இந்த இயக்கம் எந்த மக்களுக்காகப் பாடுபட்டதோ, அந்த மக்களாலேயே பலமுறை பல்வேறு சோதனைகளுக்கு ஆளாகியிருக்கிறது. எனினும், தெளிவடையாத அந்த மக்களுக்காகவே தொடர்ந்து இந்த இயக்கம் உழைத்து வந்திருக்கிறது.

நாலாந்தர மக்களாக ஆக்கப்பட்டவர்களுக்காக நாலாந்தர வர்க்கத்தின் தலைவர்களால் வழி நடத்தப்பட்டதுதான் இந்தப் பேரியக்கமாகும்.

அறுபது ஆண்டுகால வரலாற்றில் எப்படிப்பட்ட ஆதிக்க சக்திகளை இது சந்தித்து வெற்றிபெற வேண்டியிருந்தது, யாருக்காக? ஒரு சில தலைவர்களுக்காகவா? அவர்தம் நல்வாழ்வுக்காகவா? இல்லை! இல்லை! இல்லவே இல்லை!

பொட்டுப் பூச்சிகளாய், புன்மைத் தேரைகளாய், இழி புழுக்களாய் நடத்தப்பட்ட பெரும்பான்மையான மக்கள், நெஞ்சை உயர்த்தி நடக்க வேண்டும்-அவர்களுக்கு அறிவாரக் கல்வி வேண்டும்-சமூகத்தில் சம அந்தஸ்து வேண்டும்-சிறப்பான சலுகைகள் வேண்டும்-என்பதற்காக வாதாடிப் போராடி, அவர்களை மனிதர்களாக ஆக்கும் காரியத்தை அறுபது ஆண்டுகளாகத் தலைவர்கள், பெரும் எதிர்ப்புக்கிடையே செய்யத் தொடங்கினர்.

அந்த இயக்கத்தின் ஒரு கட்டமே தி. மு. கழகத்தின் தோற்றம்.

அது தொடர்ந்து நடத்திய பணிகளைப் பொறுத்துக் கொள்ளும் மனப் பக்குவம், சமுதாயத்தில் ஆதிக்கம் செலுத்தியவர்களுக்கு ஏற்படவில்லை.

அவர்கள், ஆதிக்கம் செலுத்தப்பட்ட மக்களின் ஒரு பகுதியையும் தங்களுக்குச் சாமரம் வீசுகிறவர்களாக ஆக்கிக் கொண்டார்கள்.

பண்ணையாளைவிட்டே பண்ணையாளைச் சாட்டையால் அடிக்கச் சொல்லி வேடிக்கை பார்க்கும் பழைய காலத்து ஜமீன்தார்களைப்போல, சமுதாய ஆதிக்கக்காரர்கள், சமுதாயத்தின் அடிமட்டப் பகுதியினரை ஒருவருக்கொருவர் மோதவிட்டு வேடிக்கை பார்த்தனர்.

இன்று நேற்றல்ல; தொடர்ந்து இருந்து வருகிற தமிழ் நாட்டின் தலையெழுத்தே அதுதான்!

அந்த நிலைமையையும் மீறி எழுந்து நின்று பீடுநடை போடத் தொடங்கியதுதான் இந்த இயக்கம்.

“என்ன கழகம் அவ்வளவுதானா?
என்ன சார் கதை தீர்ந்ததா?”

என்று கேட்கிறவன்கூட இந்த இயக்கத்தின் உழைப்பால், தொண்டால், உயர்நிலைக்கு உயர்ந்தவனாகத் தானிருப்பான்!

ஏறியவன் ஏணியை உதைக்கும் போதும் "அய்யோ அவன் கால் நோகுமே!" என்று ஏணி கவலைப்பட்டால் எப்படியோ-அப்படித்தான் இந்த இயக்கமும் கவலைப்பட்டிருக்குமே யல்லாது-இனி இந்தக் கொள்கை கூடாது என்று அடித்தளத்து மக்களைவிட்டு ஓடிவிட எத்தனித்தது கிடையாது.

அதனால்தான் உடன்பிறப்பே; சொல்கிறேன்-தமிழகத்தில் அடித்தளத்து மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள், அனைவருக்கும் நிலையான சமுதாய மதிப்பும் பொருளாதார நல்வாழ்வும் கிட்டுகிற வரையில், இந்த இயக்கத்தின் உணர்வுகளை எந்தப் புயலும், பூகம்பமும், எரிமலையும் அழித்துவிட முடியாது என்று!

ஆட்சியில்லை! அதனால் கட்சியும் இல்லையா? தியாகராயர் காலந்தொட்டு-பெரியார், அண்ணா ஆகியோர் அரும்பாடுபட்டு உருவாக்கிய உணர்வுகள் எங்கே ஓடி ஒளிந்துவிடும்!

இன்று கழகத்தையும், கழகத்தினரையும் களங்கம் கற்பித்து அழித்துவிடலாமென்று பார்க்கிறார்கள். காலை மாலை எந் நேரமும் நம்மைப்பற்றியே அவதூறுப் பிரச்சாரம்!

எங்கே எந்தத் தவறு நடந்தாலும் அதிலே நம்மை சம்பந்தப்படுத்தி செய்திகளைத் தருகிறார்கள்.

சோதனைகள் என்ற செய்திகள்! அதைத் தொடர்ந்து உடனே "மஞ்சள் ஏடு"களில் ஆயிரம் ஆயிரம் கற்பனைப் பொய்யுரைகள்!

ஆடிட்டர் வீட்டில் சோதனை! தலைமைக்கழக கணக்கு சோதனை! ஆகா! 45 லட்ச ரூபாய் கருணாநிதியின் "பினாமி" பணம் அகப்பட்டுவிட்டது என்று கூக்குரல்!

கழக நிதி, கழகத் தேர்தல் நிதி ஆகியவற்றின் கணக்கு, வங்கிகளில் திறந்த புத்தகமாக இருக்கிற கணக்குத்தானே! இதில் என்ன பினாமி?

மேகலா பட நிறுவனத்தின் "எங்கள் தங்கம்" படத்துக் கணக்கை மீண்டும் பார்க்கிறார்கள்! கருணாநிதிக்குத் தொடர்பு! வழக்கு! விசாரணை! வருமானவரி இலாகா தகவல்!

இப்படிச் செய்திகள்!

உடன்பிறப்பே! எனக்கு ஒரு சந்தேகம்!

இந்தச் செய்திகள் உண்மையானால் தொடர்புடைய இலாக்காக்களின் அதிகாரிகளே கையெழுத்திட்டு அவைகளை எல்லாப் பத்திரிகைகளுக்கும் தரலாமே! மஞ்சள் ஏடுகளுக்கு மட்டும் இந்த உண்மைக்கு மாறான செய்திகளை வெளியிடும் உரிமை அளித்துள்ளது யார்? அந்த மர்மம்தான் என்ன?

பொய்ச்செய்திகளை வெளியிட்டு என்னையும் கழகத் தலைவர்களையும் கழகத்தையும் இழிவுக்கும் களங்கத்துக்கும் ஆளாக்கலாம் என்று திட்டமிட்டிருக்கிறார்கள், இந்த ஏடு நடத்துவோரும் பிறரும்!

சித்ரவதை, தூக்கு மேடை, கால் வேறு கை வேறாக வெட்டிக் கடலில் எறிவதுபோன்ற எந்தக் கொடுமையையும் - கொண்ட கொள்கைகளுக்காகத் தாங்கத் தயார்!

இது அண்ணாவின் மீது ஆணையாக எடுத்துக் கெண்டுள்ள சூளுரை! என்பதை மட்டும் அவர்களுக்கு நான் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புள்ள,

**மு. க.**

01-04-1976

# 191. அவர் தாளுக்கு மாலை சூட்டுகிறேன்!

**உடன்பிறப்பே,**

இதோ ஒரு விளக்கு அணைந்துவிட்டது. கார்த்திகை தீபம் போல் வரிசை வரிசையாக உள்ள கழக விளக்குகளில் ஒரு விளக்கு அணைந்து போய்விட்டது.

கழகமெனும் தோட்டத்தில் பூத்திருந்த ரோஜாக்களில் ஒரு கருப்பு ரோஜா உதிர்ந்து விட்டது.

இலட்சிய கீதம் பாடிக்கொண்டிருந்த பூஞ்சோலைக் குயில்களில் ஒன்றின் குரல்வளையை சாவு, நசுக்கிப் போட்டு விட்டது.

சாத்தூர் பாலகிருஷ்ணன் - அய்யோ! எவ்வளவு உயரமான உருவம்! எத்துணை கம்பீரத் தோற்றம்! எவ்வளவு இனிய இயல்பு! அடக்கம்! அமைதி! அன்பின் பெருக்கு! எல்லாமே பொதிந்திருந்த அந்த ஆருயிர் உடன்பிறப்பு, இனி திறக்கமாட்டேன் என்று விழிகளை மூடிக்கொண்டதாமே! இனி எழுந்து நடமாட மாட்டேன் என்று தூக்கத்தில் ஆழ்ந்துவிட்டதாமே!

அந்தப் பகுதிக்குச் செல்லும்போதும் பார்ப்பேன்; முகவை மாவட்டம் மட்டுமல்ல, வேறு பக்கத்து மாவட்டங்களிலும் நான் சுற்றுப்பயணம் செய்யும்போது எதிரே வந்து நிற்பார்.

என்னையே கனிவோடு நோக்குகிற ஒரு குளிர்ந்த பார்வை! கழகம், எப்படியெல்லாம் சாத்தூர் பகுதியிலே வளர்க்கப்படுகிறது என்பது பற்றிய விளக்கங்கள். “எங்கள் ஊர்க் கூட்டத்துக்கு எப்போது வருகிறீர்கள்?” என்ற மிருதுவான, வாஞ்சை நிறைந்த ஒரு கேள்வி!

இனி, நான் அந்தப் பகுதிகளுக்குச் செல்லும்போது அந்தப் பாசமிகு உருவத்தைச் சந்திக்க முடியாது.

தொண்டர்களின் வியர்வையே இந்த இயக்கம். அவர்களின் உழைப்பே கழகத்தின் மாண்பு. அவர்களால் வந்த வாழ்வுதான் எல்லாம்,

"எனக்கு அந்தப் பதவி வேண்டும்-இந்தப் பதவி வேண்டும்" என்று என்றைக்குமே கேட்டறியாத தொண்டர்களில் ஒருவர்தான் அவர்.

கழகம் இட்ட கட்டளைகளைச் சிரமேற்கொண்டு அயராது பணி புரிந்தவர்.

விளக்கக் கூட்டங்கள் நடத்துக, என்று தலைமையிலே யிருந்து தாக்கீது வந்தாலும்-கழகத்துக்கு நிதி திரட்டுக, என்று அறிவிப்பு வந்தாலும் "இதோ நாங்கள் தயார், செயலாற்ற!" என்று கூறிடும் கழகக் கண்மணிகளைச் சாத்தூர்ப் பகுதியிலே தலைமை தாங்கி நடத்திய அந்த உழைப்பின் உருவம், இவ்வளவு விரைவில் நம்மை விட்டுப் பிரிக்கப்பட்டுவிடும் என்று யாரும் எதிர்பார்க்கவே இல்லை.

உடன்பிறப்பே, நமது கழகம், சோதனைகளைத் தாங்கி கொள்ளும் காலம் இந்தக் காலம்!

அடுக்கடுக்காக வரும் வேதனைகளைச் சந்தித்துப் பழக்கப் பட்டவர்கள் நாம்!

வெந்த புண்ணிலே வேல் பாய்ந்ததுபோல இந்தச் செய்தி நம்மைக் கலக்கி விட்டது.

தி. மு. கழகம் கொள்கை வீரர்களின் கூடாரம்! இலட்சிய வாதிகளின் பாடி வீடு!

ஒன்பதாண்டு காலம் ஆட்சிப் பொறுப்பிலே இருந்து அந்தச் சுகத்தை மட்டும் அனுபவித்துவிட்டு, பதவி போனதும் புதுச்சுகம் பெறுவதற்கு இடம் தேடி அலைகிறார்களே சிலர் - இவர்கள் எல்லாம் இல்லாத காலத்திலேயே இந்த இயக்கத்தை அங்குலம் அங்குலமாக வளர்க்கத் தங்கள் ரத்தத்தை நீராகப் பாய்ச்சிய தொண்டர்களின் அணி அப்படியேதானிருக்கிறது; கட்டுக்குலையாமல்! கட்டுப்பாடு தளராமல்!

அந்த அணியில் ஒரு மணியாகத் திகழ்ந்தவர்தான் சாத்தூர் பாலகிருஷ்ணன்.

அவரை நேரிலே பார்த்தவர்கள், அவர் காலமாகி விட்டார் என்ற செய்தியை நம்ப முடியாததுதான்!

அவர் இத்தனை நாள் உழைத்த உழைப்புக்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல - பட்ட பாட்டிற்கெல்லாம் கலசம் அமைத்தாற்போல - அவருடைய சாவும் ஒரு சரித்திர ஏடாகிவிட்டது.

உடன்பிறப்பே, நமது கண்ணீரால் அவர் கால்களைக் கழுவுவோம். அவர் எத்தனையோ முறை என் தோளுக்கு மாலை சூட்டியிருக்கிறார். இன்று நான் அந்த தியாகத் திருவுருவத்தின் தாளுக்கு மாலை சூட்டுகிறேன்.

**கண்ணீர்!**

**கண்ணீர்!**

**கண்ணீர்!**

நமது கண்ணீர் சங்கமமாகட்டும். மறைந்தவரின் இலட்சியங்களை நிறைவேற்ற உறுதி எடுத்துக் கொள்வோம்!

அவர் வாழ்க!

அவர் பெயர் நிலைத்திடுக!

அன்புள்ள,

**மு. க.**

03-04-1976

குறிப்பு:- மிசா கைதியாக மதுரை சிறையில் இருந்த சாத்தூர் பாலகிருஷ்ணன் சிறையில் மாண்டபோது - அவர் சிறையில் மாண்டதைக் கூடக் குறிப்பிட முடியாமல் 'எமர்ஜென்சி' தணிக்கை தடுத்தபோது எழுதிய கடிதம்

# 192. பயணம் தரும் நம்பிக்கை!

**உடன்பிறப்பே,**

ஏறத்தாழ இரண்டு மாதங்களுக்குப் பிறகு சென்னையை விட்டு எழுநூறு மைல் காரிலேயே பயணம் செய்யக்கூடிய ஒரு சூழ்நிலை எனக்கு ஏற்பட்டது இரண்டு நாட்களுக்கு முன்பு. முன்னாள் அமைச்சர் நண்பர் கண்ணப்பன் காரை ஓட்டிவந்தார். முன்னாள் அமைச்சர் ஒ. பி. ராமனும், போடி நண்பர் சுருளியும், சென்னை பாலுவும், நடராசனும் இந்தப் பயணத்தில் பங்கு கொண்டனர்.

கண்கலங்கத் தொடங்கிய பயணம் என்பதை நீ அறிவாய். மாலை ஆறுமணி அளவில் சென்னையை விட்டுப் புறப்பட்டு திருச்சி சிந்தாமணியில் உள்ள அண்ணா சிலைக்கு அருகே நாங்கள் செல்லும்போது மணி பனிரெண்டை நெருங்கிக் கொண்டிருந்தது. தோழர் பண்ணை வீட்டுக்கு எதிரில் கொட்டுகிற மழையில் நூற்றுக்கணக்கான கழக உடன்பிறப்புக்கள் புடைசூழ நமது அன்பில் தருமலிங்கம், கையில் ஒரு குடையுடன் நின்று கொண்டிருந்தார் என்னை வரவேற்க!

செய்தி பரவிடாமல் இருந்தபோதிலும் திருச்சியின் பல்வேறு பகுதிகளிலிருந்தும், திருவரங்கம் பகுதியிலிருந்தும் கழகத்தினர் ஏராளமாக வந்திருந்தனர். உணவு அருந்தி விட்டு இரவு ஒரு மணி அளவில் மழையினூடே மதுரை நோக்கிப் பயணமானோம். விடியற்காலை நான்கு மணிக்கே, மதுரையில் தூங்கத் தொடங்கிட முடிந்தது. காலை ஏழு மணிக்குள்ளாகவே எழுந்து அங்கிருந்து சாத்தூர் நோக்கிக் கிளம்பினோம்.

மதுரையில் உருக்கமும், உணர்ச்சியும் ஒன்றையொன்று முந்திக் கொள்ளும் நிலையில் உடன்பிறப்புக்கள், மிக்க அமைதியுடன் எங்களைச் சந்தித்தார்கள். சரியாகப் பத்து மணிக்கெல்லாம் சாத்தூருக்குள் நுழைந்துவிட்டோம். கண்களில்

நீர், தாரைதாரையாக வழிந்தோட கழகக் கண்மணிகள் அந்த வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்தார்கள். எந்த வீட்டு வாசல் என்று கூற வேண்டுமா, என்ன? தியாகத் திருவிளக்கு-தாளமுத்து நடராசன் வழி நடந்த கொள்கைக் குலவிளக்கு-அண்ணாவின் அருமைத் தம்பியாம் அடக்கமான அகல்விளக்கு-நம் உடன்பிறப்பு பாலகிருஷ்ணனின் வீட்டு வாசலைத்தான் குறிப்பிடுகிறேன். அந்த வீட்டுவாசலைக் கடந்து இரண்டு மாதங்களுக்கு முன்பு சென்றவர், இப்போது அந்த வீட்டு வாசலைக் கடைசித் தடவையாகக் கடப்பதற்குக் கால் நீட்டிக் கண்முடிப் படுத்திருந்தார்.

உடன்பிறப்பே, அவரை நான் எத்தனையோ முறை சந்தித் திருக்கிறேன். அழுத்தமான கதராடைதான் உடுத்தியிருப்பார். ஆடையையும் ஆளையும், யார் பார்த்தாலும் சுமாரான வசதி படைத்த ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்தான் என்று எண்ணிடத் தோன்றும். ஆனால் அவர் வீடோ-மிக மிகச் சாதாரணமான குடில் என்று சொல்லத்தக்க ஒன்று! துக்கம் விசாரிக்க வந்த நெருங்கிய உறவின் முறையார்கூட தெருவீதியிலேதான் உட்கார வேண்டியிருந்தது. கோவெனக் கதறியழுத குடும்பத்தாரைத் தேற்றிட முடியாமல் தவித்தேன். எனக்கே ஆறுதல் சொல்ல ஆட்கள் தேவைப்பட்டது அங்கே! அந்த நிலையில் நான் எப்படி ஆறுதல் கூறமுடியும் அவர்களுக்கு! செண்பகம்-ஆம்! பதினேழு வயதுள்ள மகனின் பெயர். அந்தப் பையன் பள்ளி இறுதி வகுப்புத் தேர்வு எழுதிக் கொண்டிருக்கிறான். மதுரையில் தந்தை மாரடைப்பால் மாண்டார் என்ற செய்திக்குப் பிறகு, தேர்வு எங்கே எழுதுவது அவன்? அவனையும், மற்ற பிள்ளைகளையும் பார்த்ததும் உடைப்பெடுத்த வெள்ளமாயிற்று என் விழிகளில் நீர்! உள்ளம் பிளந்துவிடுமோ என்பது போன்ற ஒரு உணர்ச்சி. நெஞ்சை அழுத்திப் பிடித்துக் கொண்டேன்.

பிறகு அந்த தியாகச் செம்மலின் இறுதி ஊர்வலம் புறப்பட்டது. நாங்கள் நடந்தோம்.

அந்தப் புனிதமான மரியாதையைத்தானே அந்த வைர நெஞ்சனுக்கு நாங்கள் காணிக்கையாக்க முடியும்.

கொளுத்துகிற வெயிலில் பல்லாயிரவர் அந்த இறுதி ஊர்வலத்தில் மௌனமாக அணிவகுத்தனர். கடைத் தெருவில், ஏராளமான மாலைகள் அந்தக் கடமை வீரனுக்கு அணிவிக்கப்

பட்டன. நான்கைந்து மாதங்களுக்கு முன்புதான் சாத்தூரில் மாபெரும் பொதுக்கூட்டமொன்றில் என்னைப் பேசுமாறு ஏற்பாடு செய்திருந்தான் அந்த செயல்வீரன். மாலை நான்கு மணி அளவில் நடைபெற்ற அந்த மகத்தான பொதுக்கூட்டத்தில் கழகத் தேர்தல் நிதியாக பெருந்தொகையொன்றும் வழங்கப் பெற்றது பாலகிருஷ்ணனின் பெருமுயற்சியால்! அதற்குள் இப்படி ஒரு முடிவு ஏற்பட்டு விட்டது.

உயிர் பிரியும்போது என்ன சொல்ல நினைத்தானோ; அந்த மாவீரன்!

அவன் சொல்லுவதைக் கேட்க உற்றார் உறவினரோ நண்பர்களோ, குடும்பத்தினரோ அருகில் இல்லாத சூழ்நிலையில் எதிர்பாராத முடிவு அவனை ஆட்கொண்டு விட்டது. எரியூட்டப் பெற்ற இடத்தில் அழகுத் தேவர் தலைமையில் இரண்டொரு வார்த்தைகளைப் பேசி அஞ்சலி செலுத்தினேன். அவ்வளவுதான் என்னால் பேச முடிந்தது.

அதற்குப் பிறகு அங்கிருந்து புறப்பட்டு திருச்சிவரும் வழியில் மதுரையில் பிற்பகல் இரண்டு மணிக்கு தென்னரசுவின் இல்லத்தினர் உணவு வழங்கினர். மனம் இருந்த நிலையில் பிற்பகல் உணவருந்துவதை ஒரு கடமையாக மட்டும் செய்துவிட்டு, உடனடியாகப் புறப்பட்டு இரவு 12 மணி அளவில் சென்னை வந்து சேர்ந்தோம். வழிநெடுக எங்கள் காரை நிறுத்துமாறு அன்புக் கட்டளை பிறப்பித்த கழக உடன்பிறப்புக்கள், மாணவர்கள், விவசாயப் பெருங்குடி மக்கள்-அனைவரையும் சந்தித்து ஓரிரு நிமிடங்கள் உரையாற்றியதில் மனச் சோர்வும், கப்பியிருந்த சோகமும் சிறிது குறையலாயிற்று.

வழியெல்லாம் என்ன கேட்டார்கள்? நலமாக இருக்கிறீர்களா? ஆகா! எவ்வளவு பாசம் பொதிந்த கேள்வி அது. அடுத்து அவர்களின் உறுதிமொழி! நாங்கள் தைரியமாக இருக்கிறோம். கட்டுப்பாடாக இருக்கிறோம் என்பது தான்! பரபரப்புக்காக வெளியிடப்படுகிற பத்திரிகைகளின் பொய்ச் செய்திகள், கழகத்தை ஒழிக்கத் துணைபோகும் சில துரோகிகளின் அறிக்கைகள், இவைகளைப் பற்றி யாரும் கவலைப்பட்டுக் கொண்டதாகத் தெரியவில்லை. ஒரு சிலர் தான் கோபமாகக் கேட்டார்கள். ஏன் இப்படியெல்லாம் செய்திகள் வருகின்றன, என்று!

"நீங்கள் அமைதியாக இருங்கள். நானும் நாவலரும் பேராசிரியரும் மற்றவர்களும் நாள்தோறும் கலந்து பேசிக் கொண்டுதானிருக்கிறோம், தலைமையைப் பற்றிப் பரப்பப் படுகிற எந்த வதந்திகளையும் நம்பாதீர்கள்!" என்று நான் விளக்கியபோது அவர்கள் என் கையைக் குலுக்கி ஆனந்தக் கண்ணீர் பொழிந்த காட்சியை எப்படி வர்ணிக்க முடியும்.

ஒரு சோகக் காட்சியைக் காணச் சென்றேன். அந்தோ, பாலகிருஷ்ணன் போய்விட்டாரே-என்ற வேதனையுடன் திரும்பினேன். வழிநெடுக என்னை சந்தித்தவர்கள் நாங்கள் ஒவ்வொருவரும் பாலகிருஷ்ணன்கள்தான்-கடமையாற்றுவதில் என்பதைச் சொல்லாமற் சொன்னதாகவே நான் கருதிக் கொண்டேன்.

எந்த ஒரு இயக்கத்திலும் கடும் துன்பங்களை ஏற்றிட இயலாத சிலர் இருப்பர்-அவர்கள் வெறுக்கப்பட வேண்டியவர்கள் அல்லர்.

ஆனால் போகிற போக்கில் கழகத்தின் மீது மண்ணை வாரி இறைத்துவிட்டுப் போகிறார்களே; அவர்களைத்தான்! அந்தக் கோழைகளைத்தான்-அந்தத் துரோகச் சிந்தை படைத்தவர்களைத்தான் எனக்கு என்றைக்குமே பிடிக்காது!

அவர்களுக்கிடையே சாத்தூர் பாலகிருஷ்ணன் போன்ற தியாக சரித்திரம் படைக்கிறவர்களும் இருக்கிறார்கள் என்ற நம்பிக்கையைத்தான் இந்த பயணம் உறுதிப்படுத்துகிறது.

அன்புள்ள,

மு. க.

04-04-1976

# 193. கழகம் இருக்கும்!
# காலம் - கேட்கும் நியாயத்தை!!

**உடன்பிறப்பே,**

இருபது ஆண்டுகளுக்கு முன்பு அண்ணா அவர்கள் தம்பிக்கு எழுதிய கடிதமொன்று, இன்று மீண்டும் படிக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. 1956 மார்ச் திங்கள் மூன்றாம் நாள் எழுதிய கடிதம் அது:

"குழலும் யாழும் குழந்தையின் மழலை இனிமைக்கு ஈடாகா என்று கூறினவர் வள்ளுவர். அடா! அடா! காது குடைகிறது, ஏன்தான் இதுகள் கழுதைபோலக் கத்துகின்றன, கோட்டான் போலக் கூவுகின்றன என்று- குழந்தைகளைப் பேணி வளர்ப்பதில் பொறுமையும் திறமையும் அறியாதவர்கள் அலறக் கேட்கிறோம். கவலையா கொள்கிறோம்-இல்லை. இல்லை. கைகொட்டிச் சிரிக்கிறோம்.

முரசொலி, வீரர்களுக்கு மகிழ்ச்சி அளிக்கிறது. வீணில் உண்டு கொழுத்து இருப்போருக்கோ! ஐயோ! முரசு அறைகிறார்களே, போரல்லவா மூளும் போலிருக்கிறது என்று திகில் பிறக்கிறது. எனவே, அவர்கள் முரசு முழங்கும் போது அதிலே ஓசை நயம் காண்பதில்லை"

கழகத்தினர் தமிழை அழகாக எழுதுகின்றனர், அழகாகப் பேசுகின்றனர், என்பதே பிடிக்காமல் எதிரிகள் எரிச்சல் எரிமலைகளாகக் காட்சியளித்த போதுதான் அண்ணா அவர்கள் தம்பிக்கு எழுதிய மடலில் ஓசை நயம் பற்றி மேலே கண்டவாறு பல எடுத்துக்காட்டுக்களை வழங்கி, முரசொலி, யாருக்கு மகிழ்ச்சி தரும்? யாருக்கு அச்சமூட்டும்? என்பதனைச் சுட்டிக் காட்டினார்.

"ஐயோ! முரசறைகிறார்களே என்று திகில் பிறக்கிறதாம், வீணர்களுக்கு!" ஏன் தெரியுமா?

போரல்லவா மூளும் போலிருக்கிறது என்று அச்சம் ஏற்படுகிறதாம் அதனால்!

முரசொலி

பாசறை

பாடிவீடு

அணிவகுப்பு

படை வரிசை

வீரர்கள்

களம்

போராட்டம்

இப்படிப்பட்ட சொற்கள், பயன்படுத்தப்படும் காலம், நேரம், சூழல், உணர்த்துகின்ற கருத்து இவைகளைக் கொண்டுதான் பொருள் தருமேயல்லாமல், இந்தச் சொற்களை வைத்துக்கொண்டு "ஆகா! வன்முறை! பலாத்காரம்!" என்றெல்லாம் கற்பனை செய்து கொள்ளக் கூடாது.

அறிஞர் அண்ணா அவர்களை, திராவிடர் கழகத்தில் இருந்தபோது "தளபதி அண்ணா" என்றுதான் அழைத்தோம். அதற்காக அவரைப் பார்த்துக் கையில் ஆயுதம் எங்கே? தலையில் இரும்பு மகுடம் எங்கே? மார்பில் கவசம் எங்கே? இராணுவ உடைதான் எங்கே? இதெல்லாம் இல்லாமல் நீங்கள் எப்படித் தளபதியாக முடியும் என்று யாராவது கேட்டால், கேட்டவருக்குப் பைத்தியக்காரப் பட்டம்தானே மிச்சமாகும்.

கல்லக்குடிப் போராட்டம் என்றால்; அந்தப் புகை வண்டி நிலையத்தில் இருபுறத்து சேனைகளும் அணிவகுத்து நின்று ஒரு புறத்தார் அக்னியாஸ்திரம் வீச, உடனே எதிர்ப்புறத்தார் வர்ணாஸ்திரம் வீசி அதனை அழித்தார் என்று பொருள் கொள்ள முடியாதல்லவா?

விலைவாசி ஏற்றத்தைக் கண்டித்து அறிஞர் அண்ணாவும் மற்றவர்களும் களம் புகுந்தனர் என்றால், ரத கஜ துரகபதாதிகள் எனும் நால்வகைப் படையுடன் குருக்ஷேத்திரம் போன்ற ஒரு இடத்தில் எதிரிகளைச் சந்திக்கப் புகுந்தனர் என்று பொருள்

அல்ல! கலெக்டர் அலுவலகத்துக்கு முன்னால் மறியல் செய்யக் கிளம்பினர் என்பதுதான் "களம் புகுந்தனர்" என்பதற்குச் சரியான விளக்கமாகும்.

காந்தியடிகள் "சத்தியாக்கிரகம்" என்று உருவாக்கிய அமைதி வழிக்குத்தான் "அறப்போர்" என்று நாம் பெயர் தந்தோம். தன்னைத்தானே அர்ப்பணித்துக் கொள்கிறமுறை-தியாக உணர்வு-இதுதான் அரசியல் கருத்துக்களையோ, சமுதாயக் கருத்துக்களையோ வலியுறுத்தப் பயன்படுத்த வேண்டுமேயல்லாமல் 'கிளர்ச்சி' என்னும் பெயரால் வன்முறைகள் தலைதூக்கிடவும்-இருபுறமும் தாக்குதல் நடந்திடவுமான, அறவழிக்கு அப்பாற்பட்ட எந்த முறையையும் நமது கழகம் விரும்பியதுமில்லை; மேற்கொண்டதுமில்லை; அப்படி மேற்கொண்ட எவரையும் ஆதரித்ததுமில்லை.

இந்த அடிப்படையில் நோக்கினால், முரசொலி கேட்டு-போர் மூண்டு விடுமோ? என்று யாரும் அஞ்சிடத் தேவையில்லை. வன்முறைக் கிளர்ச்சியைத் தொடக்கத்திலேயே தலையில் அடித்து வீழ்த்தி, அந்த எண்ணம் யாருக்கும் எள்ளளவும் ஏற்படலாகாது என அறிவுறுத்தி வருவதுதான் தி. மு. கழகத்தின் வரலாறு! "போர்" "களம்" "பாசறை" "முரசு" "வீரம்" இவைகளுக்கு நாம் கொண்டிருக்கிற பொருள் எவை என்று தெளிவாகத் தெரிந்த பிறகும் இந்தச் சொற்களை வைத்துக் கொண்டு, தேவையற்ற கற்பனைகளைச் செய்து கொண்டே போவது வேண்டுமென்றே செய்கிற பிரச்சாரமே தவிர வேறல்ல.

> வீரத்திற்கும், களத்திற்கும், போருக்கும், கழகம் கொண்டுள்ள அறவழி முறைப்பெயர்களைப் பொறுத்தாவது அதன் முன்னணியினர் அல்லது தொண்டர்கள், தங்களை அர்ப்பணித்துக் கொள்ளத் தயாராக இருக்கிறார்களா? என்ற ஒரு கேள்வியை ஒரு சில எதிர்க்கட்சி நண்பர்கள் கிளப்பி, கட்சியை விட்டு விலகிய சிலரைக் கேலி செய்து-கட்சியே காலியாகிவிட்ட கூடாரமாகிவிட்டது என்று முடிவு கட்டிப் பேசி வருகிறார்கள்.

காலிக் கூடாரத்தைப் பற்றி காலையும் மாலையும் இத்தனை அறிக்கைக் கணைகள் ஏன்? இத்தனை கண்டன அம்புகள் எதற்காக? உடன்பிறப்பே, இதிலிருந்தே புரிந்துகொள்ளலாம்,

கழகம் அழியவில்லை; அப்படியே இருக்கிறது! கட்டுக் கோப்பாக இருக்கிறது என்பதனை, கழகத்தை விட்டு விலகுகிறார்கள்-நான் இல்லையென்று கூறவில்லை-எத்தனை லட்சம் தொண்டர்களில் எத்தனை நூறு பேர் விலகினார்கள்? அந்தக் கணக்கு நமக்கு தெரியாததல்லவே!

எனவேதான்; விலகுகிறவர் விலாசத்தோடு விளம்பரம் கொடுக்கிறபோது நான் அதற்காகத் துடிதுடித்துப்போவதில்லை. எந்த ஒரு இயக்கத்திலும் பலஹீனமானவர்கள், கடும் சோதனைகளைத் தாங்க முடியாதவர்கள், எல்லாவித தியாகங்களையும் ஏற்றுக் கொள்ள முடியாதவர்கள் இருக்கத்தான் செய்வார்கள். அவர்கள், விலகி நிற்பதும் ஒதுங்கிக்கொள்வதும் இயல்புதான். அவர்களால் இதுவரை கட்சிக்குக் கிடைத்த பயன் கருதி, அவர்களது தற்போதைய செயலை அலட்சியப்படுத்தி விடலாம்; அவர்கள் வெறுக்கத் தக்கவர்கள் அல்லர். இதனை நான் பலமுறையும் உனக்கு எழுதிய மடல்களில் கோடிட்டுக் காட்டியுள்ளேன்.

"வீரர்கள் தொடரட்டும்-கோழைகள் விலகட்டும்!" என்று எழுதினாயே, எனக் கேட்பாய் நீ! ஆமாம்! உண்மைதான்! எழுதினேன்.

"சந்திரமோகன்" நாடகத்தில் அண்ணா எழுதிய வாசகம்தான் அது என்பதையும் குறிப்பிட்டிருக்கிறேன். வேறென்ன எழுதுவது? "வீரர்கள் விலகட்டும்! கோழைகள் தொடரட்டும்!" என்று எழுதுவதா? வேடிக்கையாக அல்லவா இருக்கும் அந்த அழைப்பு! இயலாத காரணத்தால் விலகிவிட்டவர்களை சினந்து எதுவும் கூறாமல் இருக்கலாம். தனித்தனியாக அவர்களைப் பார்த்து "நீ விலகிவிட்டாயா? அப்படியானால் நீ ஒரு கோழை!" என்று கூறாமல் இருக்கலாம். பண்புமல்ல, அப்படிக் கூறுவது.

அதற்காகப் பொதுவாகக் கூட ஒரு கட்சியின் தொண்டர்களைப் பார்த்துக் கட்சியின் தலைவன்,

வீரத்தோடு இருங்கள்.

அமைதியாக இருங்கள்.

உறுதியாக இருங்கள்.

என்று சொல்லாமல் வேறென்ன சொல்வது?

பதினாறு ஆண்டுகளுக்கு முன்பு கட்சியைவிட்டுப்போன நண்பர் இப்போது அறிக்கை விடுக்கிறார், "போனால் என்ன சொல்வாரோ கருணாநிதி!" என்று சிலபேர் பயந்து கொண்டு கட்சியில் இருப்பதாக!

எந்தக் கட்சியின் பொறுப்புள்ள தலைவனும், போய் விட்டவர்களை வேண்டுமானால் பிறகு மன்னிக்கக் கூடியவனாக இருக்கமுடியுமே தவிர, "நீ போய்விடு, கட்சியை விட்டு! அதுதான் வீரம்!" என்று அறிவுரை கூறுபவனாக இருக்கமுடியாது.

உடன்பிறப்பே, தொடர்ந்து நான் எழுதுகிற கடிதங்களை நீ படித்துக்கொண்டுதான் வருகிறாய். அவை உன் உள்ளத்துக்கு உற்சாகமூட்டுவதாகவும் கருதுகிறாய். சோர்வுற்ற உன் உள்ளம் ஊக்கம் பெறவேண்டும் என்று நான் நினைத்து எழுதுகிறேனே யல்லாமல், வெறி உணர்ச்சியைத் தூண்டவேண்டுமென்ற எண்ணம் கிஞ்சிற்றும் இல்லை எனக்கு!

நானறிவேன்-நீயும் அறிவாய்!

வேகப் பேச்சு! வெறியூட்டும் பேச்சு! வெடி முழக்கப் பேச்சு! இவைகள் எல்லாம் மேடையோடு சிலருக்கு முடிந்துவிட்ட கதைகள் என்பதை நாடும் நன்கு அறியும்.

இயலாதோர் இயக்கத்தை விட்டுப் போகும்பொழுது, இயலாமையை வெளிப்படுத்திச் செல்கின்றனர். அல்லது எதுவும் சொல்லாமலே ஒதுங்கிவிடுகின்றனர்.

சோதனைகளைச் சந்திக்கும் ஒரு கட்டத்தில் மக்கள் இயக்கங்கள் இந்த வேதனைக்கும் ஆளாகித்தான் தீரவேண்டும். இதனை ஏளனம் செய்கிறாரே; எனது பழைய நண்பர்-அவரால் தேர்தல் சோதனையையே தாங்கிக் கொள்ள முடியவில்லை.

தான் தொடங்கிய கட்சியைத் தானே அழித்துக் கொண்டு வேறு கட்சியுடன் இணைந்தார்.

பிறகு அந்தக் கட்சியும் தேர்தலில் தோற்றுவிடவே அங்கிருந்து முகாம் மாற்றிவிட்டார். தேர்தல் சோதனைக்கே இத்தனை இடம் மாறிமாறிப் பாய்ந்தவர், நமது கழகத்திற்கு வந்துள்ள கடும் சோதனையைத் தாங்கமுடியாத சிலர் வெளியேறும்போது, என்னையும் கழகத்தையும் நையாண்டி செய்வதற்கு எந்தத் தகுதியை எங்கிருந்து கடனாகப் பெற்றாரோ, தெரியவில்லை.

முடியவில்லை போகிறோம்.

வெயில் தாங்கவில்லை.

நிழலை நாடுகிறோம்.

அத்துடன் போய்விட்டால்,

உடன்பிறப்பே! அவர்களை நாம் தனித்தனியாகச் சந்தித்து சீற்றத்தைக் காட்டத் தேவையில்லை. அவர்கள் பொறுத்துக் கொள்ளப்பட வேண்டியவர்கள். பொதுப்படையாகக்கூட அவர்கள் மீது கசப்பைக் கொட்டிடவும் வேண்டியதில்லை.

ஆனால், தாங்கள் என்னவோ எதற்கும் அஞ்சாத வீரர்களைப்போலத் தொடையைத் தட்டி, மீசையை முறுக்கி, "ஆகா! இந்தத் தலைமை மோசம்! இந்தக் கழகம் மோசம்!" என்று ஒன்பதாண்டு காலம் பதவிகளில் ஒட்டிக்கிடந்தவர்கள் "அதனால்தான் நான் வெளியேறுகிறேன்" என்று கூறிடும்போதுதான் "சுக்ரீவன்" நம் கண்முன்னால் நிற்கிறான். "எட்டப்பன்" எதிரே நின்று கெக்கலி கொட்டுகிறான். அதைக் கூட உணர்ச்சியோடு சுட்டிக்காட்ட முடியாத மரக்கட்டையல்லவே நான்!

தன்மானத் தந்தை பெரியார் பள்ளியில், தமிழ்வீரம் போதித்த அறிஞர் அண்ணா கல்லூரியில் பயின்ற எனக்கு, அந்த உணர்வும் மழுங்கிவிடுமேயானால், நடைப்பிணம் நிகர்த்தவனாகத்தானே ஆகிவிடுவேன்.

வெயில் தாங்கவில்லை, நிழலுக்குப் போகிறேன் என்கிறார்கள், போகட்டும். அதுவரையில் மப்பும் மந்தாரமுமாக இருந்த காலநிலையில் ஏறிவந்த குதிரையை-ஈட்டியால் ஒரு குத்துக் குத்திவிட்டல்லவா சிலபேர் நிழலை நோக்கிக் குதித்தோடுகிறார்கள்.

குத்தட்டும் நன்றாக. குதிரையின் உடலில் குருதி வழியட்டும். அவர்களைத் தூக்கிச் சுமந்தோமே, என்று அந்தக் குதிரை வேதனைப்படுவதுகூட தவறு என்கிறார்களே, என்ன நியாயம் அது?

அவர்களிடம் நியாயம் கேட்கும் நேரமா இது? தாங்கள் தப்பித்துக்கொள்ள என் தலையிலோ, அல்லது கழகத்தின்

தலையிலோ கல்லைப்போட, மனச்சாட்சிக்கு விரோதமாக முடிவுகட்டிவிட்ட அந்த மகானுபாவர்களிடம் நியாயம் கேட்கும் நேரமா இது?

அல்ல உடன்பிறப்பே; அல்ல! இதுவல்ல நேரம். காலம் கேட்கும் அந்த நியாயத்தை! அப்போது நான் இருக்கிறேனோ இல்லையோ-இந்த உலகத்தில்!

அதைப் பற்றி நான் என்றைக்கும் கவலைப்பட்டுக் கொண்டது கிடையாது.

கழகம் இருக்கும், நிச்சயமாக இருக்கும்.

கழகம் இருக்கும்.

அப்போது, காலம், கேட்கும் நியாயத்தை!

அன்புள்ள,

**மு. க.**

25-04-1976

குறிப்பு:- அமைச்சராக இருந்த ஒருவர் ஆட்சி கலைக்கப்பட்டதும் தென் மாவட்டங்களுக்குச் சென்று "முரசொலி படிக்காதே! படித்தால் அரசின் அடக்குமுறை வரும்!" என்று கழகத்தினரை அச்சுறுத்தினார். அந்தச் செய்தி கேட்டபோது எழுதிய கடிதம்

# 194. கும்பாபிஷேகங்கள்! சில குறிப்புக்கள்!!

**உடன்பிறப்பே,**

தொடர்ந்து இரண்டொரு நாட்களில் தமிழ்நாட்டில் மூன்று பெரிய கும்பாபிஷேகங்கள் நடைபெற்றிருக்கின்றன. திருவண்ணாமலையில் ஐம்பது லட்ச ரூபாய் செலவில் ஆலயத் திருப்பணி. கும்பாபிஷேகத் தன்று மட்டும் ஆறு லட்சம் ரூபாய் மொத்தச் செலவு என்று ஏடுகள் மகிழ்ச்சியுடன் செய்திகளை வெளியிட்டிருக்கின்றன. அடுத்து மதுரை கூடலழகர் கோயில் திருப்பணி முடிவுற்று அந்தக் கும்பாபிஷேகமும் சிறப்பாக நடைபெற்றிருக்கிறது. "கூடலழகர் கோயிலின் வரலாறு தெரிந்த காலத்திலிருந்து அக்கோயிலுக்கு மகா கும்பாபிஷேகம் நடைபெறுவது இதுவே முதல் தடவையாகும்" என்று 'தினமணி' ஏடு, சிறப்புக் குறிப்பே எழுதியுள்ளது. ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கப் பெற்ற திருப்பணி வேலை இப்போது முடிவுற்றுக் கும்பாபிஷேகம் நடைபெற்றிருக்கிறது. காஞ்சீபுரத்தில் காமாட்சி அம்மன் ஆலயத்துக் கும்பாபிஷேகமும் கோலாகலமாக நிறைவேறியிருக்கிறது.

கோயில் கர்ப்பக்கிரக விமானத்துக்கு ஒரு கோடிரூபாய் செலவில் தங்கத்தகடு வேயப்படும் என்றும் அறிவிப்புக்கள் வந்துள்ளன.

இலட்சக்கணக்கான பக்தர்கள் இந்த விழாக்களுக்கு வந்து திரும்பியிருக்கின்றனர்.

இவைகளை நான் சுட்டிக் காட்டுவதற்குக் காரணம்; "இதெல்லாம் தேவைதானா? நாடுள்ள நிலைமையில் இலட்சோப லட்சம் ரூபாய்களைச் செலவிட்டு இந்த ஆலயங்கள் புதுப்பிக்கப்படவேண்டுமா? ஒரு கோடி ரூபாய்ச் செலவில் தங்க விமானம் அவசியந்தானா?" என்றெல்லாம் கேட்பதற்காக அல்ல!

இந்த விஷயங்களில் நமக்கென்று சில கொள்கைகள் உண்டு. அந்தக் கொள்கைகளை எவர் மனமும் புண்படத் தக்க விதத்தில் வலிந்து செயல்படுத்துவது கூடாது என்பது தான் நமது கருத்தாகும். அதே சமயம், இதுபோன்ற காரியங்களில் நம்பிக்கை வைப்பவர்களின் விருப்பங்களுக்கு இடையூறாக இல்லாமலும் இருந்து வந்திருக்கிறோம்.

இன்னும் சொல்லவேண்டுமானால் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருந்தபோது இப்படிப்பட்ட காரியங்கள் தங்கு தடையின்றி நிறைவேறவும் எல்லா வகையான ஒத்துழைப்பும் வழங்கப்பட்டது.

நாம் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு "இவர்கள் வந்தால் இடித்துவிடுவர் கோயில்களை" என்று கூச்சல் போட்டனர். இப்போது ஆட்சியைவிட்டு இறங்கியதும் "இவர்கள் காலத்தில் ஆண்டவன் காரியங்களே எதுவும் நடக்கவில்லை" என்று கூப்பாடு போடுகின்றனர். இந்த இடைக்காலத்தில், ஒன்பது ஆண்டுகளில் எத்தனை கும்பாபிஷேகங்கள் நடைபெற்றிருக்கின்றன! ஓடாத தேர்கள் எத்தனை திருவாரூர், திருவில்லிபுத்தூர் போன்ற ஊர்களில் ஓடியிருக்கின்றன! இவைகளை யெல்லாம் மறைத்திடும் மனப்போக்கும், வதந்திகளைப் பரப்பிடும் சாதனங்களும் நிரம்பப் பெற்றிருக்கின்றனர். அதனால் ஒரு வழிப்பாதையில் தங்கள் பிரச்சாரத்தை நடத்திக் கொண்டிருக்கின்றனர்:

அண்ணா முதலமைச்சராக வீற்றிருந்தபோது நான் பொதுப்பணி அமைச்சர், அப்போது கும்பகோணத்தில் மகாமக விழா! ஆம். பன்னிரண்டு ஆண்டுகட்கு ஒரு முறை வருகின்ற மகத்தான திருவிழா! சிறிய நகரம்! பெருங்கூட்டம் வரும். அதனால் தொத்துநோய் பரவுவது வாடிக்கை! திருட்டுக்களும் அந்த நாளில் ஏராளம் நடக்கும். இந்தத் தொல்லைகளை அந்த ஆண்டு தவிர்ப்பதற்காகச் சிறப்பு ஏற்பாடுகள் பலவற்றை அரசின் வாயிலாகச் செய்ய ஆணை பிறப்பிக்கப்பட்டது. குடந்தை நகரைச் சுற்றி புதிய சாலை வசதிகள் உருவாக்கப்பட்டன. அதன் காரணமாக வந்த கூட்டம் குடந்தையைக் குலுக்காமல், தொத்து நோயைப் பற்றிக் கொள்ளாமல், எதையும் பறிகொடுக்காமல் உடனுக்குடன் தங்கள் ஊர்களுக்குத் திரும்ப முடிந்தது. குடந்தை சட்டமன்ற உறுப்பினர் - காங்கிரஸ் நண்பர் தான் - அவர் சட்டப்பேரவையிலேயே அரசின் ஏற்பாடுகளைப் பாராட்டிப் பேசினார். மனச்சாட்சியுள்ள மனிதர்.

இவர்கள் வந்தால் கோயில்கள் தூளாகும் என்றல்லவா முழங்கினர். அதற்கு மாறாக ஆங்காங்கு உள்ள மக்கள் மனம் மகிழத்தக்க அளவுக்கு-ஆத்தீகர் போற்றிடத்தக்க அளவுக்கு ஆலயங்கள் சீர்பெற்றன.

ஒன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன். பெரியவர் பக்தவத்சலம் அவர்கள் முதல்வராக இருந்தபோது நான் அவரைக் கேட்டேன். "பல விஷயங்களைப்பற்றி சபையில் விவாதிக்க மானியக் கோரிக்கைத் தலைப்புக்கள் தனியாக இருக்கின்றன. கால்நடை மானியங்கூட இருக்கிறது. கடவுளர் விஷயங்களுக்கான அறநிலையத்துறை பற்றிய மானியக் கோரிக்கைக்கு இடமே கிடையாதே! அதுபற்றி எந்தத் தலைப்பில் விவாதிப்பது?" என்று!

முதல்வர் பக்தவத்சலனார் சொன்னார்-"மிசலேனியஸ்!" அதாவது "பல்பொருள்"-புரியும்படி சொன்னால் "சில்லறை விஷயங்கள்" என்ற தலைப்பைப் பயன்படுத்திப் பேசலாம் என்பதாக!

அறநிலையத்துறைக்கு அப்போது அந்த இடம்தான்! முதல்வர் பொறுப்பை நான் ஏற்றுக்கொண்டதும் அறநிலையத்துறையை விரிவுபடுத்தி அதற்கோர் தனி அமைச்சரும் நியமிக்கப்பட்டார். தனியாக அந்தத் துறை பற்றிய மானியக் கோரிக்கை விவாதங்களும் சபையில் நடைபெறக் கூடிய வாய்ப்பும் கிட்டியது.

திருவண்ணாமலை, காஞ்சி, மதுரை கூடலழகர் கோயில் திருப்பணிகள் போனவாரம் தொடங்கி, இந்த வாரம் முடிந்து விட்டவைகள் அல்லவே,

கழக ஆட்சிக்காலத்தில் திருப்பணிகள் தொடங்கப் பெற்ற ஆலயங்கள் பலவற்றின் வரிசையில் இடம்பெற்றவைகள்தான் திருவண்ணாமலையும், காஞ்சியும், மதுரையும்!

1967 - ஆம் ஆண்டு வரையில் அறநிலையத்துறையின் கீழ் சுமார் ஒன்பதாயிரம் கோயில்கள்தான் இருந்தன. மற்றும் ஆயிரக்கணக்கான கோயில்கள், அறநிறுவனங்கள் தனிப்பட்ட வர்களின் வேட்டைக் காடுகளாக விளங்கிக் கொண்டிருந்தன. ஆலய பூஜைகள், திருவிழாக்கள் எதுவும் நடக்காமல் அந்தச் சொத்துக்களைத் தனிப்பட்ட "பக்த சிகாமணிகள்" சுரண்டிக் கொழுத்துக் கொண்டிருந்தனர். அவர்களிடமிருந்து அந்த ஆலயங்களையும் நிறுவனங்களையும் சொத்துக்களையும்

காப்பாற்ற ஒரு ஆய்வு நடத்துமாறு 1970-ஆம் ஆண்டு கழக அரசு, ஆணை பிறப்பித்தது: அதன் விளைவாக சுமார் நாற்பதாயிரம் ஆலய, அறநிலைய நிறுவனங்கள் கண்டுபிடிக்கப்பட்டு அவைகளுக்குச் சொந்தமான இரண்டு லட்ச ஏக்கரா தனியார்களிடம் இருப்பதாகவும் தகவல் கிடைத்தது. அதையொட்டி அறநிலையத்துறை எடுத்த நடவடிக்கையின் காரணமாக இதுவரை இருபத்தையாயிரத்துக்கு மேற்பட்ட கோயில்களும், அறுபத்தையாயிரம் ஏக்கர் நிலங்களும் அறநிலையத்துறையின் கீழ்க் கொண்டு வரப்பட்டுள்ளன.

ஆலயத்தை நம்பி வாழ்ந்துகொண்டிருக்கும் பல்லாயிரக் கணக்கான ஊழியர்களுக்கு கழக அரசு, ஊதியத்தை உயர்த்திக் கொடுத்து அவர்களின் இதய வாழ்த்துக்களைப் பெற்றது.

ஆலய ஊழியர் பணிக்காலத்தில் இறந்துவிட்டால்-குடும்ப நிதியளிக்கிற குடும்பப் பாதுகாப்புத் திட்டமும் அவர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டது.

சமுதாய மேன்மை-சமூக நலன் - ஊனமுற்றோர் உதவி - ஆதரவற்றோர்க்கு வாழ்வு-கண்ணொளித் திட்டம்-கருணை இல்லம்-போன்ற நற்காரியங்களுக்கும் ஆலயங்கள் பயன்படுத்தப்பட்டன; அவை ஆண்டவனுக்கும் விருப்பமான செயல்கள் என்பதால்!

ஆண்டவன் முன்னே அனைவரும் சமம் என்பது உதட்டுப் பேச்சாக இருந்தால் போதாது என்பதற்காகத்தான், அறங்காவலர் குழுவில் ஒரு அரிஜனப் பிரதிநிதி கட்டாயம் இருந்தாக வேண்டுமென்று கழக அரசு, விதி செய்தது.

இவ்வளவுக்கும் பிறகு "ஆகா! தேவாலயங்களை-தீர்த்தக் குளங்களை-இவர்கள் கெடுத்துவிட்டனர்!" என்று குரல் வலிக்கப் பொய் முழங்குகிறார்களே; கடவுள் என்று ஒருவர் இருந்தால் அவர் இவர்களைத் தண்டிக்காமல் விட்டு விடுவாரா?

மூன்று நகர் கும்பாபிஷேகங்களின் செய்தியைப் படித்ததும், இந்தக் குறிப்புகளை உன் நினைவுக்குக் கொண்டு வர விரும்பினேன். அவ்வளவுதான்.

அன்புள்ள,

மு. க.

06-04-1976

# 195. நினைக்கிறேன் - நெஞ்சு இனிக்கிறது!

**உடன்பிறப்பே!**

பழங்காலத் தமிழர்கள், தங்கள் ஊர்களுக்குச் சூட்டிய பெயர்கள், "இருவேல்பட்டு" "எப்போதும் வென்றான்" என வீரத்தை விளக்கிடும் வண்ணமும் அமைந்தன.

பழமுதிர் சோலை, முதுகுன்றம், பூவிருந்தவல்லி என வளத்தைக் குறிப்பிடும் வண்ணமும் திகழ்ந்தன.

மங்கலம், நல்விளக்கு, என்ற பெயர்களையும் தமிழ்ர்கள் பெற்றிருந்தன.

அந்த நல்விளக்கில் பிறந்தவர்தான் நல்விளக்கனார் என்னும் புலவர். நற்றிணையில் குறிஞ்சித்திணை-எண்பத்து ஐந்தாம் பாடலை இயற்றியவர்.

ஆய்மலர் மழைக் கண் படைத்த பாவையொருத்தித் தன் காதலன் வரவுக்காக ஏங்கித் தவிக்கிறாள். காதலன் எப்படிப்பட்டவனாம்? அவன் எங்கிருந்து வருகிறானாம்?

மலைச் சாரலிலே கானவன் எய்து கொணர்ந்த முட்பன்றியின் தசைத் துண்டத்தை, தேன் மணங்கமழும் கூந்தலையுடையவள்-சிறு குடியிலுள்ளோர் பலருக்கும் பகுத்துக் கொடுக்கின்ற உயர்ந்த மலைநாட்டையுடையவனாம் அவளுடைய காதலன்.

அவன் வருகைக்காகத்தான், தன் விழிகளை அந்த மலைப் பரப்பு முழுதும் துரத்துகிறாள்; தனக்கு முன் ஓடி, அவன் வருகிறானா என்று பாருங்கள் எனக் கெஞ்சிக் கேட்டு! அவன் வந்தபாடில்லை.

மூங்கிலையொத்த அவள் தோளில் அணிந்த கலன்களை வெற்றி கொள்ளத்தக்க அவளது கைவளை நெகிழ்ந்து விழுகிற

தாம். காதலனைக் காணாத ஏக்கத்தால் அவ்வளவு இளைத்து விடுகிறாளாம் அந்த ஏந்திழையாள்.

இந்த நிகழ்ச்சியையே விவரித்துக்கொண்டு போக விரும்பவில்லை நான். புலவர் அதுபற்றித் தீட்டியுள்ள "விரகதாப" வரிகளை எழுத்துக்கு எழுத்து நான் மெருகேற்றித் தர முயன்றால், உனக்கு என் மீது சீற்றம்தான் பிறக்கும். நேரம் தெரியாதவனாக இருக்கிறானே நிலைமைத் தெரியாதவனாக இருக்கிறானே-என்று என்னை மனத்துக்குள் நிந்திக்கவும் தொடங்குவாய். அதனால் நிறுத்திவிடுகிறேன் இத்துடன்!

பாடலில் என்னைக் கவர்ந்தது இந்தப் பகுதியல்ல! பாவையின் வேதனையும், அவளைப் பார்க்கத் துடித்து நிற்கும் காளையின் மனோநிலையும், இருள் அடர்ந்துள்ள நேரத்தில் அவன் அஞ்சாமல் வரலாகாது என்று மற்றவர் தடுப்பதும் என் நெஞ்சைக் கவர்ந்த வரிகள் அல்ல!

எப்படிப்பட்ட இருள்? எத்தகைய காடு? அதைக் கூறும் போதுதானே புலவர் பெருமான் என் உள்ளத்தில் எத்தனையோ சிந்தனைகளைக் கிளறுகிறார்.

அடர்ந்த காடு எனலாம். இருள் மண்டிய வனம் எனக் கூறலாம்.

மரக்கிளைகளில் மலைப்பாம்புகள் விழுதுகள்போல் தொங்கிடும் - மந்திகள் கொஞ்சிடும் - வேங்கைகள் வாய் பிளந்து நின்றிடும் - கோட்டான் சப்தம்-கொடிய ஓநாய்களின் கூக்குரல்-நரிகளின் ஊளை-என்றெல்லாம் காடு பற்றி ஏடு கொள்ளாமல் எழுதலாம். ஆனால் புலவர், அந்தக் காட்சிகளில் கருத்தைச் செலுத்திடவில்லை.

பெண் யானை யொன்று தன் குட்டியுடன் நடந்து வருவதை அவர் காண்கிறார். தாய் நடக்கும் அளவுக்கு வேகமாகக் குட்டி யானையினால் நடக்க முடியவில்லை. அதனைப் புலவர் காணுகிறாரோ இல்லையோ, அவருக்கு முன்பாக அந்தத் தாய் யானை உணர்ந்து கொள்கிறது. அது உணர்ந்து கொண்டதைப் புலவரும் புரிந்துகொள்கிறார்.

கரிய இருள்! அடர்ந்த காடு! கரடுமுரடான பாதை! காட்டில் கண்ணாடித் தரையா போடப்பட்டிருக்கும்! சர விளக்குகளா இருமருங்கிலும் தொங்கிக் கொண்டு இருக்கும்!

தாய், வேகமாகச் செல்ல எண்ணுகிறது. ஆனால் தயங்கித் தயங்கி மெதுவாக நடக்கும் குட்டியானையின் சிரமத்தை அது தெளிவாக உணர்ந்து கொள்கிறது.

தாய், வேகமாக நடக்கவேண்டுமென்பதற்கு என்ன காரணம்? புலிகள் வரக்கூடும்-அவைகளின் கண்ணில் படாமல் பாதுகாப்பாகப் போக வேண்டுமென்றுதான் தாய் வேழம், வேக நடைபோட எண்ணுகிறது. அதற்காகத் தன் குட்டியை விட்டுவிட்டுத் தான்மட்டும் போய்விட முடியுமா?

அதோ! அது எதிர்பார்த்தவாறு புலி உறுமிக்கொண்டு வருகிற ஒலியும் கேட்கிறது.

வேகமாகச் சென்றால், தான் தப்பிவிடமுடியும்; ஆனால் அந்தக் குட்டி? ஆம்! அதன் அருமைக் "கன்றுயானை"யின் கதி என்னாவது?

தன் பெரிய உடலால் மறைத்துக்கொண்டு நின்றால், குட்டியானையைக் காப்பாற்றிவிடலாம் அல்லவா? தன் உருவம் மட்டும் புலிக்குத் தெரிந்தால் பரவாயில்லை! தான் மட்டும் புலிக்கு இரையாகி, தன் குட்டியைப் பாதுகாத்து விடலாம் என்று கூட அது கருதியிருக்கும் போலும்!

புலி, அருகே வருவதுபோன்ற ஒலி. ஆம், மேகங்கள் மெதுவாக உராய்ந்து முழங்குகிற இடிச் சப்தம் போன்ற உறுமல்!

தாய் யானைக்கு வேறு வழியில்லை! தன் நடையை நிறுத்திக் கொண்டது. தன் குட்டியானையைப் பாதுகாத்தவாறு ஒரு மறைவில் நின்று கொண்டது.

அந்தப் பெரும் உருவம் தெரிந்துவிட்டால் புலிக்கு வேட்டைதான். எனினும், அது பாதுகாக்க விரும்புவது தன் ஆசைக் கன்றை அல்லவா? அதைத்தான் அழகுறத் தீட்டுகிறார் புலவர்!

*"குறிவரி இரும்புலி அஞ்சிக் குறுநடைக்*
*கன்றுடை வேழம் நின்று காத்து அல்கும்"*

குறுகிய வரிகளையுடைய கரிய புலிக்கு இரையாகாமல் தப்பவேண்டுமென்ற அச்சத்தால்-விரைவாகச் செல்ல

முடியாத தனது கன்றுயானையை அங்கேயே நின்று காத்துக் கொண்டிருக்கும் - என்பதுதான் இந்தப் பாடல் வரியின் கருத்து.

நல்விளக்கு என்னும் ஊரில் பிறந்த நல்விளக்கனார் எத்துணை நல் விளக்கத்தை இந்த நற்றிணைப் பாடலின் மூலம் நானும் நீயும் உணருமாறு வழங்கியிருக்கிறார் என்பதை நினைக்கிறேன்.

நெஞ்சமெல்லாம் இனிக்கிறது.

அன்புள்ள,

**மு. க.**

07-04-1976

# 196. நாட்டுக்கும் நல்லோர்க்கும் அறிவிக்கிறேன்!

**உடன்பிறப்பே!**

“இரண்டு மாதங்களுக்கு முன்பு தி. மு. க. மந்திரி சபை ‘டிஸ்மிஸ்’ செய்யப்பட்ட பிறகு தி. மு. கழகம் நிலைகுலைந்து போய்விட்டது என்றாலும் ரகசிய நடவடிக்கைகளில், தி. மு. க. ஈடுபட்டுவருவதாகத் தமக்குத் தகவல் கிடைத்திருப்பதாகப் பக்தவத்சலம் கூறினார்.”

பெரியவர் பக்தவத்சலனார் அவர்களின் டெல்லிப் பயணம் குறித்து செய்தி வெளியிட்டுள்ள ஏடுகளில் அவர் அளித்துள்ள இந்தப் பேட்டியும் இடம் பெற்றுள்ளது.

ஆட்சி மாற்றம் ஏற்பட்டது! அமைதியாக இருக்குமாறு மக்களுக்குத் தலைமைக் கழகம் வேண்டுகோள் விடுத்தது. தொடர்ந்து அமைதி நிலவிட வேண்டுமென்பதை நாள்தோறும் வலியுறுத்தி வருகிறோம்.

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு எனும் அண்ணாவின் அறிவுரையை நினைவுபடுத்தாத நேரமே இல்லை.

ஜனவரி 31-ஆம் நாள் மாலையில் குடியரசுத் தலைவர் ஆட்சி பிரகடனம் செய்யப்படுகிறது.

அடுத்த மூன்றாம் நாள் - ஆம்! பிப்ரவரி மூன்றாம் நாள் நமது ஒப்பற்ற தலைவர் - உயிர், மூச்சு, சிந்தை, அணு ஒவ்வொன்றிலும் குடியிருக்கும் குடும்பத்து மூத்தவர். பேரறிஞர் அண்ணாவின் நினைவு நாள்!

வழக்கமாக மௌன ஊர்வலமாகச் சென்றுதான் கடற்கரையில் அண்ணா சதுக்கத்தில் வணக்கம் செலுத்துவது- எனினும் இந்த ஆண்டு காவல்துறையினருக்குக் கடுகளவு தொல்லையும் தரக்கூடாது என்று அண்ணா நினைவு நாள்

ஊர்வலங்கள், சென்னையிலும் மற்ற ஊர்களிலும் கைவிடப்பட்டு, தனித்தனியாகச் சென்று வணக்கம் செலுத்தினோம்.

ஏற்கனவே ஒப்புதல் அளிக்கப்பட்டிருந்த திருமண விழாக்கள் வெளியூர்களில் ஏராளமிருந்தன. வெளியூர்ப் பயணங்களும் உடனடியாகத் தேவையில்லை யென்று முடிவு செய்யப்பட்டது.

உடன்பிறப்பே! உன்னையும் உன் குடும்பத்தாரையும் ஒவ்வொரு ஊருக்கும் வந்து சந்திப்பதாக நாள் குறிப்பிட்டு இருந்தேன். அந்தச் சுற்றுப் பயணத்தால்கூட சிறிதளவு தொல்லை யாருக்கேனும் ஏற்படக்கூடும் என்று கருதியும், சட்டம், ஒழுங்கு, அமைதியைக் காப்பாற்றுகிற காவல் துறையினருக்குச் சங்கடம் எதுவும் ஏற்படக்கூடாது என்று எண்ணியும், அந்தத் திட்டங்கூட அப்போது கைவிடப்பட்டது.

இரண்டு மாதங்களுக்குப் பிறகு, சாத்தூர் சிங்கம் தியாகச் செம்மல் பாலகிருஷ்ணன் மரணச் செய்தி பேரிடி போல விழுந்த காரணத்தால் அங்குச் சென்றிட நேரிட்டது. அங்கு நடைபெற்ற பாலகிருஷ்ணனின் இறுதி ஊர்வலம் எத்துணை அமைதியோடு நடைபெற்றது என்பதும் நாட்டு மக்களுக்கு நன்கு தெரியும்.

இந்த அளவுக்கு அமைதி காத்திடும் நம்மைப் பார்த்துதான் பழி கூறுகிறார் பக்தவத்சலனார்!

அமைதியாக இருக்கிறோம்; அது பிடிக்கிறது அவருக்கு! "நிலைகுலைந்து போய்விட்டது கழகம்" என்று கூறிக் களிப்படைகிறார். அது வாயளவில் கூறப்படும் வாசகமே தவிர, கழகம் உண்மையில் நிலைகுலையவில்லை என்பது அவருக்குத் தெரிகிறது.

பருவம் நாடிவந்த பறவைகள் சில நம்மைப் பழித்தவாறு பறந்து போயிருக்கலாம், பயந்தோர் சிலர் ஒதுங்கியிருக்கலாம், கழகத்தின் மொத்தக் கட்டுக்கோப்பும் குலைந்து போகவில்லை.

நிலைகுலைந்ததற்காகவோ; அல்லது நெருக்கடி ஏற்படும் போது நிலைகுலைந்து நிற்பதுதான் நல்லது என்று இலக்கணம் வகுத்துக்கொண்டோ இந்த இயக்கம் தோன்றிடவில்லை.

"விளைந்த காட்டுக் குருவிகள்" என்று அண்ணா அடிக்கடி தன்னுடைய பேச்சிலும் எழுத்திலும் குறிப்பிடுவாரே, அவர்களை நம்பி இந்தக் கழகம் பிறந்திடவில்லை, இயங்கிடவும் இல்லை.

இதனைத் தனது அரசியல் அனுபவத்தின் வாயிலாகப் பெரியவர் உணர்ந்திருக்கிற காரணத்தால்தான் "நிலைகுலைந்து விட்டது" என்று கூறி மகிழ்ச்சி அடைந்து, தனது ஆசைக்கு ஒரு முற்றுப் புள்ளி வைக்காமல் "என்றாலுங் கூட, தி. மு. க. ரகசிய வேலைகளில் ஈடுபடுவதாகத் தனக்குத் தகவல்" என்று ஒரு வெடிகுண்டை வீசுகிறார்.

ரகசிய வேலைகள்

வன்முறைகள்

சதித் திட்டங்கள்

அமளிகள்

கலவரங்கள்

இவைகளில் என்றைக்குமே நம்பிக்கை இல்லாதது தி. மு. கழகம்! அறவழிக்கு எதிரான எந்த முறையையும் கழகம் என்றுமே நாடியதுமில்லை.

ஆயிரம் முறை கூறியிருக்கிறோம், கழகத்தின் கொள்கைகள், செயல்கள், திட்டங்கள் அனைத்தும் திறந்த புத்தகங்கள் என்பதை எண்ணற்ற சான்றுகளோடு!

திடீர் அறிவிப்பு!

படீர் போராட்டம்!

இவைகளைத் தி. மு. க. மனத்தாலும் தீண்டியது கிடையாது.

கழக வரலாற்றில் எத்தனையோ அறப்போராட்டங்களை நடத்தியிருக்கிறோம்; ஆயிரக்கணக்கில் சிறை சென்றும் இருக்கிறோம்.

எந்தச் சமயத்திலும்; 'இன்னார் தலைமையில், இத்தனை தொண்டர்கள், இந்த ஊரில், இந்த இடத்தில், இத்தனை மணிக்கு, அறப்போரில் ஈடுபடுவர்' என்று முன்கூட்டி வெளிப்படையாக அறிவிக்கப்பட்டிருக்குமே தவிர, "நட்டு" கழற்றுதல்-நாட்டு வெடி தயாரித்தல்-போன்ற நாச காரியங்களின் பக்கம் திரும்பிக்கூடப் பார்த்ததில்லை.

அந்த நாச காரியங்களை யார் ஊக்கப்படுத்தினாலும், அவர்களை அருகே நாடவிட்டதுமில்லை.

அந்த நச்சு நினைப்பாளருக்கு இந்தியாவில் எந்த ஒரு மூலையிலும் இடமிருக்கக்கூடாது என்பதுதான் கழகத்தின் கருத்து.

கழக ஆட்சிக் காலத்தில் அப்படிப்பட்ட பலாத்காரவாதிகளின் மீது தொடர்ந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதற்கான பட்டியலை, பக்தவத்சலனார் போன்றவர்கள் முயன்றால் தெரிந்து கொள்ள முடியும்.

எனவே, கழகம் ரகசிய வேலைகளில் ஈடுபடுவதாகத் தகவல் தருவோரிடம் பக்தவத்சலம் போன்ற பெரியவர்கள் எச்சரிக்கையாக இருந்திடவேண்டும்.

தங்களால் ஒரு பணியை ஒழுங்காகச் செய்ய முடியாதவர்கள் கூடத் தகவல் தரும் பணியைச் செய்வதில் வல்லவர்களாக இருப்பார்கள். ஆனால் தகவல்தான் சரியாக இருக்காது.

உறுப்பினர் சேர்த்தல்;

கிளை முதலிய அமைப்புக்களை ஒழுங்குபடுத்தல்;

கடமையாற்றுதல்;

கழகப் பணிகளைத் தொடர்ந்து செய்தல்.

இவைகளைச் சுட்டிக்காட்டி "அமைதியுடன் செயல் படுக!" என நானும், கழகப் பொதுச் செயலாளர் டாக்டர் நாவலர் அவர்களும் அடிக்கடி விடுகின்ற அறிக்கைகள் வெளிப்படையானவைதான்!

முன்பெல்லாம் ஏன், இரண்டு மாதங்களுக்கு முன்பு கூடக் கூட்டங்களில் நமது நாவலர், நம் கழகத்துக்கு வன்முறையில் நம்பிக்கை கிடையாது என்பதை விளக்கிட தனது பேச்சில் கால்பகுதி நேரத்தைச் செலவிடுவாரே! மறந்தா போய்விட்டது!

காரிருள்!

இரவு 12 மணி!

கடப்பாறை!

கத்தி!

ரகசியக் கூட்டம்!

இவைகள் எல்லாம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் முறைகளாக மாட்டா! கத்தியைத் தீட்டாதே! புத்தியைத் தீட்டு! என்ற அறிஞர் அண்ணாவின் வழி நடப்பவர்கள்தான் நாம்!

இதனை அவர் நயம்பட, நீட்டிக் குறுக்கி ஏற்றி, இறக்கி எத்தனை தடவை எடுத்துச் சொல்லியும்கூட, ஒரே வார்த்தையில் பெரியவர் "ரகசிய வேலை" என்று குற்றம் சுமத்திட முயலுகிறாரே - பார்த்தனையா!

26-2-1956 - ஆம் ஆண்டு அறிஞர் அண்ணா, தம்பிக்கு எழுதிய மடலில் நமது கழகத்தவர் மீது எப்படிப்பட்ட பழிகள் எல்லாம் சுமத்தப்படுகின்றன என்பதை எவ்வளவு வேதனையோடு குறிப்பிடுகிறார்; கொஞ்சம் படித்துப்பார்!

"தம்பீ! தோழர் கோவிந்தசாமி எம்.எல்.ஏ. கடலூரில் கைதானார். குற்றம் என்ன தெரியுமா தம்பீ, கொள்ளை அடித்தார் என்பது! நம்ம கோவிந்தசாமியேதான். வாக்குறுதி காப்பாற்றப்பட வேண்டும், மக்களுக்குத் துரோகம் செய்யக் கூடாது. பதவி அல்ல முக்கியம், பண்புதான் என்று உணர்ந்து, உழைப்பாளர் கட்சியை உருவின்றிப் போகச் செய்ததைக் கண்டித்துவிட்டு தி. மு. கழகத்துடன் தோழமை கொண்டு பணியாற்றி வருகிறாரே, புன்னகை மாறாத முகமும், புன்மொழி பேசிடா வாயும், எவரிடமும் இன்மொழியே பேசிப் பழக்கமும் பெற்றுள்ள பண்பாளர் இருக்கிறாரே அவர், "என்னை மீறி நடக்கிறானே பார்! பார்!! ஒழித்துக் கட்டிவிட்டு மறுவேலை பார்க்கிறேன்" என்று மிரட்டியபோதும் மனம் தளராமல் மக்கள் தொண்டனாகி மகத்தான செயலாற்றிக்கொண்டு வரும் அந்த கோவிந்தசாமிதான், தம்பி கொள்ளைக் காரனாக்கப்படுகிறார். வழக்கு இருக்கிறது. அதனால் அதற்குமேல் கூறுவதற்கில்லை"

56-ஆம் ஆண்டு கோவிந்தசாமி அவர்கள் மீது சுமத்தப்பட்ட பழி பற்றி அண்ணா பட்ட வேதனைதான் இந்த எழுத்துக்கள்.

இருபது ஆண்டுகளுக்குப் பிறகும் அதுபோலப் பழி சுமத்தும் படலம் தொடருகிறது என்பதற்கு எடுத்துக்காட்டாகத்தானே, பெரியவர் பக்தவத்சலம் "ரகசிய வேலை" என்று பீடிகை போடுகிறார்!

உடன்பிறப்பே, நாம் அவரைப் போன்ற பெரியவர்களைப் பார்த்து வேண்டுவது இதுதான்! தேவைப்பட்டால் எங்கள்

குருதியை - வேண்டுமளவுக்கு எடுத்துக் கொள்ளுங்கள் - இப்படியெல்லாம் புழுதியை வாரித் தூற்றாதீர்கள்!

கழகம், காந்திய வழியில் கனிவும்-

பெரியார் வழியில் துணிவும்-

அண்ணா வழியில் தெளிவும்-

கொண்டு கடந்த காலத்தில் செயலாற்றியதற்கும், நிகழ் காலத்தில் செயலாற்றுவதற்கும் சான்றுகள் உண்டு.

எதிர்காலத்திலும் அவ்வாறே அவர்களின் அறவழியில், அன்பு வழியில், அமைதி வழியில் கழகம் தளரா நடைபோடும் என்ற உறுதியினை உன் வாயிலாகப் பெற்று நாட்டுக்கு அறிவிக்கிறேன். நல்லோர்க்கு அறிவிக்கிறேன்.

அன்புள்ள,

**மு. க.**

08-04-1976

# 197. வடிவேலருக்கு வந்த வாழ்வு!

**உடன்பிறப்பே!**

நீண்ட நாட்கள் ஆகின்றன நாடகம் எழுதி! இன்று ஒரு சிறிய நாடகம்! பெயர், "வடிவேலருக்கு வந்த வாழ்வு!"

முதல் மணி அடிக்கிறது! இரண்டாவது மணியும் ஒலிக்கிறது! மூன்றாவது மணியைத் தொடர்ந்து "கோரஸ்" பாடப்படுகிறது.

*"வாழ்த்துவோம்! வாழ்த்துவோம்!*
*பதவி கொடுத்தவரை வாழ்த்துவோம்!*
*தாழ்த்துவோம்! தாழ்த்துவோம்!*
*பதவி போன பின்னர் அவரைத் தாழ்த்துவோம்!*
*பாடுவோம்! பாடுவோம்! பதவி நீடிப்பு தந்தவரைப்*
*பாடுவோம்! சாடுவோம்! அவரைச்*
*சாடுவோம்! சாடுவோம்! சாகும்வரைப்*
*பதவி கொடுக்காததால் சாடுவோம்!*
*கூடுவோம்! கூடுவோம்! கூட்டம் கண்ட இடம்*
*கூடுவோம்!*
*ஆடுவோம்! ஆடுவோம்! சமயம்போல ஆடுவோம்!*
*சந்தர்ப்பவாதம் வெல்க என்று ஆடுவோம்!*
*ஓடுவோம்! ஓடுவோம்! கண்டஇடம் ஓடுவோம்;*
*பதவி எனும்*
*கரும்புத்துண்டு கண்ட இடம் ஓடுவோம்."*

கோரஸ் முடிகிறது, திரை விலகுகிறது.

**காட்சி 1**

தன்மானத் தாத்தாவின் வீடு-தாத்தா ஒரு சாய்வு நாற்காலியில் உட்கார்ந்து பத்திரிகைப் பிழை திருத்திக் கொண்டிருக்கிறார். தாத்தாவின் சீடர் வீரவேல் வந்து கொண்டே,

"அய்யா! வடிவேலர் வருகிறார்" என்றுரைக்கிறார்.

வடிவேலர் வந்துகொண்டே, "வணக்கம்! வணக்கம்! வணக்கம்! வாழ்க நமது ஆட்சி! வாழ்க! வாழ்க!" என்று தொடர்ந்து முழங்குகிறார்.

தாத்தா:- போதுங்க நிறுத்துங்கய்யா! நல்லா இருக்கீங்களா? என்னா வரும்போதே நம்ப ஆட்சி வாழ்க வாழ் கன்னு சின்னப்பசங்க மாதிரி கத்திகிட்டு வாரீங்க!

வடிவேலர்:- நடக்கிறது நம்ப ஆட்சி தானுங்களே!

தாத்தா:- நானா ஆளுறேன்? எனக்குத்தான் சட்ட சபைன்னாலே பிடிக்காதே!

வடிவேலர்:- இந்த ஆட்சியே உங்களுக்குக் காணிக்கைன்னு மறைந்த "அறிவுச்சுடர்" சொன்னதை மறக்க முடியுமா?

தாத்தா:- இப்பதான் என்ன? அவருக்குப் பிறகு வந்திருக்கிற "அருட்செல்வர்", "தலையாலங்கானத்தார்", "அன்புக்கரசு" எல்லோருமே நம்பகிட்ட ரொம்ப மரியாதையாகத்தான் பழகுறாங்க! நம்ப அளவுக்கு வேகமாப் போக அவுங்க விரும்பலைன்னாலுங்கூட, நமக்கும் அவுங்களுக்கும் சில விஷயங்களிலே முரண்பாடு இருந்தாலுங்கூட, நம்ப உழைப்பை, தொண்டை, மதிக்கிறாங்க! நல்லா மதிக்கிறாங்க!

வடிவேலர்:- அந்த விஷயம் தெரிஞ்சுதானே நான் அய்யாவைப் பாக்க ஓடோடி வந்தேன், அய்யா நினைச்சா எல்லாம் நடக்கும்.

தாத்தா:- என்னா இது ரொம்ப பெரிய "ஐஸ்" கட்டியா தூக்கி என் தலையிலே வைக்கிறீக? சும்மா காரியத்தைச் சொல்லுங்க! ஏதாச்சும் வேலையில்லாம வர மாட்டீங்கன்னு எனக்கு நல்லாத் தெரியும்.

வடிவேலர்:- அய்யா அப்படியெல்லாம் தப்பா நினைக்கக் கூடாது நான் பகுத்தறிவு பற்றி விவாதிக்கலாம்னுதான் வந்தேன். வந்த இடத்திலே ஞாபகம் வந்தது! அய்யா நினைச்சா உடனே முடியும்.

தாத்தா:- என்னா, வளவளன்னு இழுத்துகிட்டுப் போறீங்க வெங்காயம்! விஷயத்தைச் சொல்லுங்க!

வடிவேலர்:- மன்னிக்கணுமய்யா! கலைக் கழகத்திலே ஒரு பெரிய பதவி காலியாகுது, அதிலே அடியேனை.....

தாத்தா:- நான்கூட நினைச்சேன். உங்களைப் பத்திகூட அவுங்ககிட்டே பேசினேன். கொடுக்கிறதிலே ஒண்ணுமில்லே! ஆனா நீங்க ஒரு சந்தர்ப்பவாதின்னு ஒரு கெட்ட பெயர் இருக்கு! முடவனுக்கு இறக்கிவிட்ட இடத்திலே கோபம் வருமே, அது மாதிரி உங்க சுபாவம்!

வடிவேலர்:- அய்யா அப்படிச் சொல்லக்கூடாது. நான் இனிமே அப்படியிருக்கவே மாட்டேன்.

தாத்தா:- இதுவரையிலே இருந்ததை ஒத்துக்கிட்டீங்க! அது போதும். திருந்தி நடங்க! நம்ப ஆளுகளுக்கு உள்ள குறையே, கையிலே ஈரம் காய்றதுக்குள்ளே நன்றியை மறந்துடறான். போங்க, போய் வாங்க, ஏதாவது கிடைச்சுதுன்னா விசுவாசத்தோட இருங்க.....

வடிவேலர்:- வணக்கமய்யா! வணக்கம்!.....

வாழ்க நமது ஆட்சி!

திரை விழுகிறது

**காட்சி 2**

செயலக அறையில் அருட்செல்வர், தலையாலங்கானத்தார், அன்புக்கரசு வீற்றிருக்கின்றனர். வடிவேலர் வணங்கிய வடிவுடன் வருகிறார். பழம் நழுவிப் பாலில் விழுவது போலப் பேசுகிறார்.

வடிவேலர்:- ஏதோ வேலையாக இருக்கிறீர்கள். குறுக்கே வந்தமைக்கு மன்னிக்கவும்.

அருட்:- பரவாயில்லை, உட்காருங்கள். வந்த காரியத்தைச் சொல்லுங்கள்.

வடிவேலர்:- ஒரு முறைக்கு இருமுறை கொடுத்தீர்கள். இரண்டாவது முறை கொடுப்பதற்குத் தயங்கிய

போது தன்மானத் தாத்தாவின் தயவால் மீண்டும் அந்த வாய்ப்பைப் பெற்றேன். அறிவுச்சுடர் என்னிடம் அன்பு செலுத்தியது உங்களுக்குத் தெரியும். "தியாகச்சுடர்", அவர் "பக்தரின்" பேச்சைக் கேட்டு என்னை உயரத்தூக்கி வைக்காமல் விட்டு விட்டார். இருந்தாலும் "தியாகச்சுடர்", "அறிவுச்சுடர்" வழியைப் பின்பற்றி நம்மவன் என்ற முறையில் மூன்றாவது முறையும் நானே அந்தப் பதவியில் அமர்வதற்கு... நீங்கள் முடிவுசெய்ய வேண்டும்... நான் சாகும் வரையில் நன்றியுள்ளவனாக இருப்பேன்.

தலையாலங்கானத்தார், அருட்செல்வரின் முகத்தைப் பார்க்கிறார். அருட்செல்வர் இந்த மாதிரி விஷங்களில் இரக்கம் காட்டி, ஏமாந்து விடக்கூடியவர். தலையாலங்கானத்தாரின் முகக்குறிப்பை உணர்ந்து அருட்செல்வர் சமாளித்துக் கொள்கிறார்.

அருட்:- பார்க்கலாங்க! யோசிக்கலாங்க!

வடிவேலர்:- நேற்று மாலையில் கூட "கூன்பிறை" கல்லூரித் திறப்பு விழாவில் இதுபோன்ற ஆட்சி இதுவரை இருந்ததுமில்லை, இனி இதுபோல ஒரு ஆட்சி வரவும் முடியாது என்று சொற்பொழிவாற்றினேன். எல்லா ஏடுகளிலும் வந்திருக்கிறது.

மூவரும் புன்னகை புரிந்தவாறு "பார்த்தோம்! பார்த்தோம்!!" என்கிறார்கள்.

வடிவேலர்:- கவனமிருக்கட்டும் மூன்றாவது கடைசிமுறை! வாழ்க உங்கள் கொற்றம்! வாழ்க நமது ஆட்சி! வணக்கம்! வணக்கம்!

திரும்பாமல், பின்னோக்கியவாறு நகருகிறார்

- திரை விழுகிறது.

**காட்சி 3**

வடிவேலர் வீடு-அவரது நண்பர் அய்யங்கார் சுவாமிகள் வருகிறார். இருவரும் கட்டித் தழுவிக் கொள்கிறார்கள்.

சுவாமிகள்:- என்ன வடிவேலரே உமக்கு மூன்றாவது முறை நீட்டிப்புத்தரவில்லை! அவனுங்களுக்கு ஒரு முறை நீட்டிப்புகூடக் கிடைக்கவில்லை பார்த்தீரா?

வடிவேலர்:- அவுனுங்க கேட்கவில்லை. கிடைக்கவில்லை! நான் கேட்டும் கிடைக்கவில்லையே!

சுவாமிகள்:- என்னசெய்றது! உம்ம அதிர்ஷ்டம்; தன்மானத் தாத்தா அதற்குள்ளே காலமாயிட்டார்.

வடிவேலர்:- கிழவன், செத்து தொலைந்தவரு என் பதவி நீடிப்பு பிரச்சினைக்குப் பிறகு செத்துத் தொலைஞ்சிருக்கக் கூடாதா?

சுவாமிகள்:- சரி! சரி! போனது போகட்டும்-இப்ப என்ன செய்யிறதா உத்தேசம்?

வடிவேலர்:- அய்யங்கார் சுவாமிதான் ஒரு "ஐடியா" கொடுக்கணும்.

சுவாமிகள்:- பேஷா கொடுக்கிறேன்! வாரும் மேடையைப் போடுவோம்! புத்தகங்களை வெளியிடுவோம்! கறைபடாத கை உள்ளவர்களாப் பாத்து முதல் பிரதியை வாங்கச் சொல்வோம். அந்த மேடையிலேயே அருட்செல்வன், தலையாலங்கானத்தான் எல்லோரையும் தாக்கு தாக்குன்னு தாக்குவோம்!

வடிவேலர்:- சரியான யோசனை! நம்ப புத்தகத்தை-முதல் பிரதியை வாங்க "கறை படாத கை" ஒன்று வேண்டும்னு சொன்னீங்களே-அந்தக் கையை எங்க தேடுறது?

சுவாமிகள்:- நாசமாப் போச்சு! நம்ப ராமச்சந்திர மூர்த்தி சர்டிபிகேட் கொடுத்த 'கை' ஒண்ணு இருக்கு! எங்க "வைரமணி" இருக்காரே, அவரும் எங்க தலைவர் "மணவழகர்" அவர்களும் கையெழுத்துப் போட்டே நற்சான்று வழங்கிய கைஒன்று இருக்கு! அந்தக் கையிலே முதல் பிரதியை கொடுத்தா போச்சு!

வடிவேலர்:- அது யார் கை? யார் கை?

சுவாமிகள்:- சத்தியமா சொல்றேன்; அது கறைபடாத கை! நம்ப "வாணிமுத்து"வின் கை! அவுங்களை அழைக்கலாம் நம்ப நிகழ்ச்சிக்கு!

வடிவேலர்:- அருமையான யோசனை!...பிரமாதம்! அய்யங்கார் சுவாமிகளுக்கு ஜே! ஜே!!

சுவாமிகள்:- பயப்படாதீர்! இனிமேல் வடிவேலர் வாழ்வில் புதிய திருப்பம்! வடிவேலரே! உமக்கு மட்டுமல்ல; நன்றி, விசுவாசம், நாணயம், கொள்கை இந்த முட்டாள் தனமான தத்துவங்களுக்கெல்லாம் இனி உலகத்தில் வேலை இல்லை! சந்தர்ப்பவாதம்! அதுவும் கடைந்தெடுத்த சந்தர்ப்பவாதம்! அதற்குத்தான் இனிமேல் வாழ்வு! அதுவே இப்போது இந்த வடிவேலருக்கு வந்த வாழ்வு!

சுவாமிகள், உணர்ச்சிமயமாகப் பேசிக்கொண்டே யிருக்கிறார். வடிவேலர் மகிழ்ச்சி பொங்க நிற்கிறார்.

- திரை விழுகிறது.

மீண்டும் பழைய "கோரஸ்" பாட்டுடன் நாடகம் முடிகிறது.

அன்புள்ள,

**மு. க.**

09-04-1976

# 198. மின்னல் கீற்று! மின்மினிப் பூச்சி!!

**உடன்பிறப்பே,**

இந்திய கம்யூனிஸ்டுகளும் அவர்களின் சார்புடைய ஏடுகளும், "தி. மு. கழகத்தை அமெரிக்காவின் ஏஜெண்டு" என்று வர்ணிப்பதில் மிகத் தீவிரமாக ஈடுபட்டு உள்ளதை நீயும் நானும் பார்த்துக் கொண்டுதான் வருகிறோம். பிளவுபடுத்தி வீழ்த்திவிடலாம் கழகத்தை என்று நினைத்தார்கள். துரோக சக்திகளைத் தூண்டிவிட்டுத் தூளாக்கிவிடலாம் என்று முயன்றார்கள். பொய்ப்பிரச்சாரத்தால் புதைகுழிக்கு அனுப்பிவிடலாம் என்று திட்டமிட்டார்கள். களங்கங்களைச் சுமத்தி மக்களைக் குழப்பி, முன்னணியினரை இழிவுபடுத்தி, கழகத்தை மூலையில் கிடத்திவிடலாம் என்று வியூகங்களை வகுத்துக்கொண்டு பணியாற்றுகிறார்கள். என்னதான் வலுவான ஆயுளாக இருந்தாலும் இப்போதுள்ள கழகத் தலைவர்கள், நூறாண்டு வாழ்ந்து விடப் போவதில்லை. விபத்துக்கள், நோய் நொடிகள், இயற்கை மரணம், அகால மரணம்-இப்படி ஏதாவது ஒன்று எந்த நேரத்திலும் நிகழலாம்.

"இன்னும் நாற்பது ஆண்டுகள் வாழவேண்டும், வாழுவார்!" என்று ஆசையுடன் எதிர்பார்த்த நமது கழகம் கண்ட பேரறிவாளர் அண்ணாவே மணி விழாக்கூடக் காணாமல் மறைந்துதான் போய்விட்டார்.

அவ்வளவு பெரிய ஈடு செய்ய முடியாத இழப்புக்குப் பிறகு, கழகம் அழிந்துவிடவில்லை. மகத்தான வெற்றிகளை ஈட்டியது. அதைப்போல, நானோ, அல்லது இன்றுள்ள மற்ற தலைமை முன்னணியினரோ அழிந்தாலோ, அல்லது அழிக்கப்பட்டாலோ கழகத்தின் "உயிர்ச்சக்தி" ஒடுங்கிவிடும் என்று யார் எதிர்பார்த்தாலும் அது வீண் கனவேயாகும்.

ஒரு இயக்கத்தின் தலைவர்களும், மனிதர்கள்தான்! அவர்களைக் கல்லால் செய்து நடமாடவில்லை. கல்லே தேய்ந்திடும்போது, மனித தேகம் மட்டும் என்ன நிலையானதா?

எனவே தனி மனிதர்களையும், அவர்களது புகழ், செல்வாக்கு, திறமை இவைகளையும் மட்டுமே நம்பிக்கொண்டு ஒரு இயக்கம், தன்னுடைய இலட்சியப் பயணத்தை நடத்திட முடியாது. அந்தத் தனி மனிதர்களின் வரலாற்றுடன் ஒரு இயக்கம் தன்னைப் பிணைத்துக் கொண்டிருக்கலாம். ஆனால் அந்தத் தனி மனிதர்களின் வரலாற்றுடன் இயக்க வரலாறுகள் முடிந்து விடுவதில்லை, சில இயக்கங்கள், வெறும் எலும்புக் கூடுகளாகத் தோன்றி அவ்வாறே சிதைந்துவிடவும் கூடும். நமது கழகம் அதுவல்ல; இது எஃகுக் கோட்டை!

நமது கழகத்தைப் பொறுத்தவரையில் பல்லாண்டு காலமாகப் பள்ளத்தில் வீழ்ந்து கிடந்தோரைக் கைதூக்கி விடுவதைத் தன் பெரும் பணியாகக் கொண்டு பாடுபட்டு வந்திருக்கிறது. பாட்டாளி வர்க்கத்தின் பாதுகாவலனாகவும், ஏழை நடுத்தர மக்களுக்குத் துணையாகவும் திகழ்கிற கழகத்தின் வலுவையும், வளர்ச்சியையும் குன்றிடச் செய்தால்தான், தன் கட்சியை வளர்த்துக்கொள்ள முடியும் என்ற தீர்மானமான முடிவுக்கு இந்திய கம்யூனிஸ்டுகள் வந்துவிட்டார்கள். அவர்களுக்கு இங்குள்ள பூர்ஷ்வாக்கள் மீது கோபமில்லை. ஆலை அதிபர்கள் மீது ஆத்திரமில்லை. நிலத்திமிங்கிலங்கள் பலர் அவர்களின் தோழர்களாகக்கூட இருக்கின்றனர். ஆனால் தி. மு. கழகத்தின் மீதுதான் சீறி விழுகிறார்கள்.

என்ன காரணம் தெரியுமா?

ஆலயத்துக்கு அருகாமையில் பூக்கடை வைத்திருப்பவனுக்கு தேங்காய்க் கடைக்காரன் மீது பொறாமை எழாது! புதிதாக ஒரு பூக்கடை, அருகாமையிலே வந்து பூக்களும் மலிவான விலைக்குத் தரப்படுபவைகளாக இருந்து; ஆலயத்துக்கு வரும் பக்தர்கள் அனைவரும் அங்கேயே பூ வாங்குகிற நிலைமையும் உருவாகிவிட்டால், அந்தக் கடையின்மீது பொறாமையும் புகைச்சலும் பழைய கடைக்காரனுக்கு ஏற்படத்தான் செய்யும். அதுவும் இவன் ரோஜாவுக்கு இடையே சிகப்பு அரளியையும் சேர்த்துக் கட்டி எல்லாமே ரோஜா எனக்கூறி கொள்ளையடித்துக்

கொண்டிருந்தவன். அதனால் புதிய பூக்கடை மீது காய்ந்துவிழத்தான் செய்வான். கல்லையும் மண்ணையும் வாரி இறைக்கத்தான் செய்வான். அந்த மலர்களில் 'பூ நாகம்' ஒளிந்திருக்கிறது என்று கூச்சல் போடத்தான் செய்வான். "சவத்துக்குப் போடும் மலர் அது! சாமிக்குப் போடலாமா?" என்று ஓலமிடத்தான் செய்வான். அந்தப் பழைய பூக்கடைக்காரன் நிலைமையிலேதான் இன்றைய இந்திய கம்யூனிஸ்டுகள் வயிற்றில் அடித்துக் கொள்கிறார்கள். புதிய பூக்கடையை எப்படியும் ஒழிக்கலாம் என்று முயன்று, முடியாத காரணத்தால் "பூ நாகம் இருக்கிறது" என்று பயமுறுத்துவதுபோல, பாட்டாளிச் சமூகத்திற்காகவும், ஏழை நடுத்தர மக்களுக்காகவும் பாடுபடுகிற கழகத்தினரைப் பார்த்து "ஆகா! இவர்கள் அமெரிக்க ஏஜெண்டுகள்!" என்று ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள்.

தி. மு. கழகம், தன் மீது "கம்யூனிஸ்டு" என்ற லேபிளை, நிரந்தரமாக ஒட்டிக்கொள்ளாவிட்டாலும்-சமதர்ம, சமத்துவ சமுதாயம் காண உழைத்து வருகிறது. பொதுவுடமைக் கருத்துக்களைத் தொடர்ந்து பரப்பி வருகிறது. சிற்றூரும் வரப்பெடுத்த வயலும் ஆறு தேக்கிய நல்வாய்க்காலும் நெற்சேர உழுதுஉழுது பயன் விளைக்கும் நிறையுழைப்புத் தோள்கள் எல்லாம் எவரின் தோள்கள்? என்று கேள்விக்குறி எழுப்பி வருகிறது.

தான் ஆற்றவேண்டிய பணியைக் கழகம் தன்னம்பிக்கையுடன் ஆற்றுவதாலும், ஆர்வத்துடன் ஆற்றுவதாலும், இந்திய கம்யூனிஸ்டுகளுக்கு வளர்ச்சிக்கும், வலுவுக்கும் வழியில்லாமற் போய்விட்டது! யாருடனாவது துணை சேர வேண்டியது, பெறவேண்டியதைப் பெற்றுக் கொண்டு பிறகு அவர்களை வசைபாட வேண்டியது. இதுவே தமிழ்நாட்டில் அவர்களின் வரலாறு! அந்த வசைபாடும் காண்டத்தின் ஒரு கட்டமே கழகத்தை அமெரிக்காவின் ஏஜெண்டு நிறுவனம் என்று கூறுவதாகும்.

இந்தியப் பேரரசின் வெளிநாட்டுக் கொள்கைகளுக்கு ஏற்பவே கழகம் தனது செயல்முறைத் திட்டங்களை வகுத்துக்கொண்டிருக்கிறது. இந்திய அரசு, எந்த ஒரு வெளிநாட்டுக்கும் ஏஜெண்டு நிறுவனங்களாக இங்குள்ள கட்சிகளை அனுமதிக்காது; அனுமதிக்கவும் கூடாது. அமெரிக்காவுக்கு ஏஜெண்டு என்றாலும்; ரஷ்யாவுக்கு ஏஜெண்டு என்றாலும் பண்டித நேரு காலத்தில்-"சீனாவுக்கு ஏஜெண்டு"

என்ற நிலையில் சிலபோ் இருந்தார்களே; அதுபோல எதுவாயினும் ஒரே ரகம்தான்!

வெளிநாடுகளுடன் நட்புறவு தேவை! நிலைமைகளுக்கேற்ப, இந்திய அரசு தனது வெளிநாட்டுக் கொள்கையை வகுத்து, உரிய நாடுகளுடன் நட்புறவு கொள்கிறது. இந்திய அரசு, வெளிநாட்டுக் கொள்கை பற்றி எடுத்த முடிவை, கழகம் என்றைக்குமே எதிர்த்தது கிடையாது. அமெரிக்க நாட்டு உதவியை இந்தியா பெற்றதும் உண்டு; பிறகு ஒதுக்கியதும் உண்டு. ரஷ்ய நாட்டு உதவிகளை இந்தியா பெருமளவு பெற்று நல்ல நட்புறவுடன் திகழ்கிறது என்றால், அதிலே நமக்கு இருவித கருத்துக்களுக்கே இடமில்லை.

எந்த உறவும், மற்றவர்களுக்கு நம்மைக் கட்டுப்படுத்தி விடக் கூடாது என்பதிலே மத்திய அரசு, கவனமாகத்தானிருக்கிறது. கவனமாகத் தானிருக்க வேண்டும்.

'பங்களாதேஷ்' போரின்போது அமெரிக்கக் கப்பற்படை இந்துமாக் கடல் நோக்கி வருகிறது என்ற செய்தி வந்தவுடன், தமிழகத்தில் தி. மு. க. உட்பட எல்லாக் கட்சிகளும் அமெரிக்காவை நோக்கி எதிர்ப்புக்குரல் கொடுத்ததை, இந்திய கம்யூனிஸ்டுகள் மறந்திருக்கலாம். மக்கள் மறந்துவிடவில்லை. தி. மு. க. மற்றும் எல்லாக் கட்சி சட்டமன்ற உறுப்பினர்களும் அமெரிக்கத் தூதரகத்துக்கு ஊர்வலமாகச் சென்று தங்கள் கண்டனத்தைத் தெரிவித்திருக்கின்றனர்.

நேற்றுக்கூட நாடாளுமன்றத்தில் உரையாற்றிய மத்திய அமைச்சர் சவான் அவர்கள், "சோவியத் யூனியனுடன் இந்திய உறவு நன்றாக இருக்கிறது. அமெரிக்காவுடன் இந்திய உறவை அபிவிருத்தி செய்ய தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது."

என்றுதான் குறிப்பிட்டிருக்கிறார். வெளிநாட்டு உறவுகள் எப்படி அமைந்திடல் நன்று என்பதை சிந்தித்து முடிவு எடுக்கும் பொறுப்புமிக்க இடத்திலே இருக்கும் திரு. சவானைப் போன்றவர்களின் கருத்தைக் கழகம், என்றைக்குமே புறக்கணித்ததில்லை. பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களோ, மத்திய அரசில் உள்ளவர்களோ, வெளிநாட்டு உறவு நிலைமைகளைப் பற்றிச் சிந்தித்துச் செயல்படுகிற பொறுப்புக்களில் இருக்கிறபோது, இங்குள்ள இந்திய கம்யூனிஸ்டுகள், "இதோ! அமெரிக்க ஏஜெண்டு! அதோ! அமெரிக்க ஏஜெண்டு!!" என்று

தேவையற்ற பொய்க் கூப்பாடுகளைப் போட்டு, குழப்பங்களை ஏற்படுத்துகிற போக்கு; அவர்களது கட்சியின் அரசியல் லாபம் கருதியே அல்லாமல் வேறல்ல!

எந்த ஒரு நாடும், அது அமெரிக்காவானாலும், அல்லது சோவியத் ரஷியாவானாலும், இந்தியாவுடன் நல்லெண்ண அடிப்படையில் உறவும் நட்பும் கொண்டிருந்தால்தான் அந்த நாடு பற்றி நமக்கு அன்பு ஏற்படுமேயல்லாமல், இந்தியாவுடன் உறவை முறித்துக் கொள்ள விரும்புகிற எந்த நாட்டுடனும், அல்லது இந்தியாவின் நட்பைத் தனக்கு மட்டும் சாதகமாக்கிக் கொள்ளத் திட்டமிடுகிற எந்த நாட்டுடனும் கடுகளவு அனுதாபங் காட்டவும், நமது கழகத்தினர் என்றைக்குமே எண்ணியதில்லை.

வீண்பழி சுமத்துவதின் மூலம், கழகத்தை வேரோடு சாய்த்துவிடலாம் என்று இந்திய கம்யூனிஸ்டுகள் வகுத்துள்ள திட்டம், கருவிலேயே சிதைந்துவிடும்! வஞ்சகம் வாழ்ந்ததாக வரலாறு இல்லை.

அது ஏதோ பேரொளி போலத் தெரியும்! கண்ணைக் கூடப் பறிக்கும் வண்ணம் ஜொலிக்கும்! அது மின்னல் கீற்று! மின்மினிப் பூச்சி!

கழகத் கதிர் முன்னே இந்தக் கம்யூனிஸ்டுகளின் தந்திரம் பொசுங்கிவிடும்.

அன்புள்ள,

**மு. க.**

10-04-1976

# 199. காரிருளால் சூரியன்தான் மறைவதுண்டோ?

**உடன்பிறப்பே,**

*“காரிருளால் சூரியன்தான் மறைவதுண்டோ?*
*கறைச்சேற்றால் தாமரையின் வாசம் போமோ?*
*பேரெதிர்ப்பால் உண்மைதான் இன்மையாமோ?”*

இது புரட்சிக் கவிஞரின் பொருள் பொதிந்த கேள்வி! இந்தக் கேள்விக்குச் சரியான விடையாக நம் முன்னால் நிற்கின்ற கடந்த கால நிகழ்ச்சி பற்றிய சில குறிப்புக்களை உனக்குச் சுட்டிக்காட்ட விழைகின்றேன்.

கலைமாமணிகள் அவர்கள்! தமிழ்நாட்டு மக்களின் பேரன்புக்குப் பாத்திரமானவர்கள். திரையுலகிலும், நாடக அரங்கிலும் வைரமணிகளென ஒளிவிட்டவர்கள். அவர்களைக் காண்பதற்குப் பல்லாயிரக் கணக்கான மக்கள் நாள் முழுதும் காத்துக் கிடப்பார்கள். அவர்தம் நிகழ்ச்சிகளைக் கண்டும் கேட்டும் இதயத்தைப் பறிகொடுப்பார்கள். அவர்கள் பங்கு பெருகிற படமானாலும், கலந்துகொள்கிற இசை அல்லது நாடக நிகழ்ச்சியானாலும் வெற்றி! வெற்றி! என்றே முழங்கிக் கொண்டிருந்தன.

ஒருவர் தியாகராஜ பாகவதர்! ஏழிசை மன்னர். எழிலிசைத் திலகம், என்றெல்லாம் இசையரங்குகள், அவரைச் சிறப்பித்துப் பாராட்டின. குழலோ, யாழோ? குளிர்தென்றலின் இனிமையையும் வெற்றி கொள்ளும் இந்தச் சங்கீத இன்பத்தை எப்படித்தான் போற்றிப் புகழ்வதோ-இசை ஞானமிக்கவர்கள் வியந்து களித்தனர். பாமர மக்களின் உள்ளங்களையும் வசீகரிக்கக்கூடிய வசந்தமாக இருந்தது அவரது இசை! குற்றாலத்து அருவியாக, கொடைக்கானல் தரும் சுகமாக, கேட்கக் கேட்கத் தெவிட்டாத தேனமுதமாக எம். கே. டி. பாகவதரின் பாடல்கள் விளங்கின.

சிவகவி, திருநீலகண்டர், அரிதாஸ், அசோக்குமார், சிந்தாமணி, என ஆண்டுக் கணக்கில் இடைவிடாது ஓடிக்கொண்டிருந்தன அவர் நடித்த திரைச் சித்திரங்கள்.

இன்னொருவர் கலைவாணர் கிருஷ்ணன். ஆம்! காணக் கிடைக்காத தங்கம். கலையுலகப் புகழ் மலையின் உச்சியிலே கொடிபோட்டவர். அறிவியக்கக் கருத்துக்களை, தான் ஏற்றுக்கொண்ட ஒவ்வொரு பாத்திரத்தின் வாயிலாகவும் மக்கள் மனத்திலே பதிய வைத்தவர்.

கொள்கை வைரம் பாய்ந்த நெஞ்சம்.

கொடை வழங்கும் கை.

ஏழை எளிய மக்களின் இன்னல் கண்டு ஏங்குகின்ற இயல்பு.

பெரியாரின் பேரன்புக்குப் பாத்திரமானவர்.

அண்ணாவின் உயிருக்குயிரானவர். அவர்கள் கூறும் கருத்துக்களைத் தனக்கேயுரிய நகைச்சுவையுடன் இணைத்து தேனில் குழைத்த மருந்துபோல் மக்களுக்கு வழங்கும் ஆற்றல் படைத்தவர். நந்தனாரைக் கிந்தனாராக்கி, இன்னும் தாழ்த்தப்பட்ட சமுதாயத்துக்குப் போடப்படும் தடைகளைத் தகர்த்திட புதிய கதாகாலட்சேபமே தயாரித்தவர். வில்லுப்பாட்டின் மூலம், காந்திமகான் கதையும், கழகத்தின் புகழும் கூறியவர். அனைத்துக் கட்சித் தலைவர்களிடத்திலும் அன்பும் மரியாதையும் கொண்டவர்.

பாகவதரின் பாடல்கள் பாபநாசம் சிவன் அவர்களின் கைவண்ணமெனில்; கலைவாணரின் பாடல்கள் உடுமலைக் கவியின் கருத்து வண்ணங்களாக அமைந்தன.

கலையுலகில் ஈடு இணையற்ற புகழ் மாமணிகளாக அவர்கள் ஜொலித்துக்கொண்டிருந்தபோதுதான், அவர்களின் தங்கு தடையற்ற முன்னேற்றம் கண்டு சிலர் வயிற்றிலும் வாயிலும் அடித்துக் கொண்டனர். அவர்களது கீர்த்தியைச் சிதைக்கத் திட்ட மிட்டனர். தமிழன்னையின் அன்புப் புதல்வர்களான அவர்கள் மீது புழுதி வாரித் தூற்றும் பணி ஆரம்பமாயிற்று! பொறுத்துக்கொள்ள முடியுமா பொறாமைக்காரர்களால்! அடுத்த வீட்டில் அடுப்பு எரியப் பொறுக்காத பரந்த நோக்கம் படைத்தவர்களாயிற்றே அந்தப் பொறாமை மனிதர்கள்!

எங்கேயோ குமரி மாவட்டத்து ஒழுகினசேரியில் பிறந்த சாதாரண கிருஷ்ணன், இன்று சபை நடுவே சரியாசனம் போட்டு உட்காருகிறான். மக்கள் அவனைச் சுற்றித் தேன்குடத்தை மொய்க்கும் ஈக்கள் போல மொய்க்கிறார்கள். இவனை இப்படியே விட்டுக்கொண்டு போனால்-சே! சே! கூடாது! கூடாது! இவ்வாறு எழுந்தது முணு முணுப்பு! மூலைக்கு மூலை!

சாமான்யக் குடும்பம்! செய்ய வேண்டிய குலத் தொழிலோ வேறு! அதையெல்லாம் விட்டுவிட்டு, இவன் 'பாகவதர்' என்ற பட்டமுடன், எண்ணிறந்த விருதுகளுடன், ஏராள ஆதரவுடன்-மளமளவென்று கலையுலக சாம்ராஜ்யத்தில் தனிக்கொடி நாட்டிவிட்டானே-அந்தக் கொடி முறிந்திட, இவன் கொட்டம் அடங்கிட வழிகண்டே ஆகவேண்டுமென வஞ்சகத்தின் வாய் ஓலமிடத் தொடங்கியது.

அதன் விளைவாக, இருவரையும் இழித்தும் பழித்தும் தரக்குறைவாக எழுதுகிற ஏடுகளுக்கு அந்த நெஞ்சு எரிச்சல்காரர்கள் ஆக்கமும் ஊக்கமும் தந்தனர்.

கலைவாணர், பாகவதர் இருவரின் பெருமையும் இந்த இழிதகைத் தாக்குதலால் குலைந்துவிடும் என்று எண்ணியவர்கள் ஏமாற்றமடையும் விதத்தில் அவர்கள் மேலும் மேலும் சுடர்விட்டுப் பிரகாசிக்கத் தொடங்கினர்.

வஞ்சகர்க்குக் கிடைத்த எதிர்பாராத வாய்ப்பாக, ஒரு கொலைக் குற்றத்தில் பாகவதர்-கிருஷ்ணன், சிக்க வைக்கப்பட்டனர். அப்போது தமிழகமே அலறியது. "அய்யோ! கிருஷ்ணா! உனக்கா இந்த கதி!" என்று பெரியார், தன் கைப்படக் 'குடியரசு' இதழில் கண்ணீரைக் கொட்டித் தலையங்கம் எழுதினார். பாகவதர், கலைவாணர் இருவரையும் விடுதலை செய்யவேண்டுமென்று தமிழக மக்களின் சார்பில் கோரிக்கைகளைப் பெற்று அறிஞர் அண்ணா, அன்றைய மேலிடத்துக்கு அனுப்பி வைத்தார். அவர்களை விடுதலை செய்யக் கோரும் கூட்டங்கள் நாடெங்கும் நடைபெற்றன. செஷன்ஸ் நீதி மன்றமும், உயர்நீதி மன்றமும் பாகவதரையும், கலைவாணரையும் குற்றவாளிகள் எனக் கூறி, அதற்கு ஏராள சாட்சியங்கள் இருப்பதாகச் சுட்டிக்காட்டி, ஆயுள் தண்டனை வழங்கப்பட்டது. இரண்டாண்டு காலத்துக்கு மேலாக சிறையிலிருந்தவாறே அவர்கள் "பிரிட்டிஷ் பிரிவி கவுன்சில்" நீதிமன்றத்துக்கு அப்பீல் செய்து கொண்டனர். புகழ்பெற்ற

வழக்கறிஞர் எத்திராஜ் அவர்கள் வாதாடினார். இறுதியில், தமிழ் மக்களின் இதயங்கவர்ந்த தங்கங்கள் விடுதலையானார்கள்.

அவர்கள் இன்று நம்மிடையே இல்லையானாலும், அவர்களின் பெயர், புகழ், அவர்கள் வளர்த்த கலை, பெற்றிருந்த பெருமை- இவை பற்றிய வரலாறு அப்படியே இருக்கிறது.

அவர்களது செல்வாக்கைச் சீர்குலைக்க, எதுபோன்ற சந்தர்ப்பம் உருவாயிற்று என்பதையும், இறுதியில் நீதி, சற்றுக் காலங் கடந்தாயினும் வென்றது என்பதையும் எண்ணிப் பார்க்கிறேன்.

இடையில் பாய்ந்த எதிர்பாராத வேதனை கண்டு பாகவதர் பதைத்துப் போனார் என்றும்-கலைவாணர் அப்போதும் கலங்காமல்தான் இருந்தார் என்றும்-அருகில் இருந்தவர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன்.

பதைத்தாலும், பதைப்படையாமல் இருந்தாலும் பலன் ஒன்றுதான் என்கிறபோது, பதைப்படையாமலேயே இருந்துவிடு வோமே என்பது நெஞ்சுறுதி கொண்ட கலைவாணரின் கொள்கை!

உருவத்தால் அவர்கள் இருவரும் நம்மிடம் இல்லை. ஆனால் இன்றைக்கும் அவர்களது இசையை, இனிய கருத்துரையை, இசைத்தட்டுக்களில், வானொலியில் கேட்டு இன்புறுகிறோம். அவர்களது புகழைப் பெருமையைப் பேசுகிறோம்.

*“காரிருளால் சூரியன்தான் மறைவதுண்டோ?*
*கறைச்சேற்றால் தாமரையின் வாசம் போமோ?*
*பேரெதிர்ப்பால் உண்மைதான் இன்மை யாமோ?”*

என்ற பாரதிதாசனின் பாடல், பாகவதர்-கலைவாணர் வாழ்வுக்கும், அவர்கள் வாழ்வில் வந்த சோதனை நீங்கியதற்கும் எத்துணைப் பொருத்தமுடையதாக அமைந்துள்ளது பார்த்தாயா?

அன்புள்ள,

**மு. க.**

11-04-1976

# 200. சமுதாய மறுமலர்ச்சிக் கானா...!

**உடன்பிறப்பே,**

அதிசயச் செய்திகள், அற்புதங்களைப் பற்றிய கட்டுரைகள், மீண்டும் பத்திரிகைகளில் வெளிவரத் தொடங்கியுள்ளன.

ஆறுமாதத்திற்கு ஒரு முறையாவது இப்படிப்பட்ட மூட நம்பிக்கைக் கதைகளை ஏடுகளின் வாயிலாகப் பரப்பிடாவிட்டால் இங்குள்ள சனாதனிகளுக்குத் தூக்கமே வருவதில்லை.

அவரவர்களுக்குரிய கடவுள் நம்பிக்கை, மத நம்பிக்கை இவைகளைப் பற்றி அவர்தம் மனம் புண்படும் படியாக விமர்சிக்கக்கூடாது என்பதுதான் நமது கருத்து எனினும், அந்தக் கடவுளின் பெயரால் ஆயிரக் கணக்கான கதைகளையும், மதத்தின் பெயரால் மக்களை அடிமைப்படுகிற செய்திகளையும் பரப்புவது ஏற்றுக் கொள்ளத்தக்கது அல்ல!

அவர்கள் ஏற்றுக் கொண்டுள்ள கடவுள் தன்மை-மதத்தின் மாண்பு இவைகளுக்கே கூட இழிவு கற்பிக்கும் வகையில் ஏற்கனவே எழுதப்பட்டுள்ள நம்பமுடியாத கதைகள் ஏராளம் இருக்கும்போது இன்னும் ஏன், அந்த முயற்சியில் ஈடுபட்டு, புதிய புதிய அவதார புருடர்களை அறிமுகப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்று புரியவில்லை.

சமுதாயத்தில் ஒழுங்கும், கட்டுப்பாடும் நிலைத்திட கடவுளைக் கூறி, அவருக்குப் பயந்து நடக்கவேண்டும் என்று அச்சுறுத்தி, அதனையொட்டிய விதிமுறைகளை வரையறுத் திருப்பதே கடவுள், மதம் பற்றிய நம்பிக்கையை வலியுறுத்துவதின் நோக்கம் என ஆத்தீகர் வாதிடுவர்.

அப்படிப் பயமுறுத்தி மக்களை, கடவுள் மதக்கொள்கை களுக்குக் கீழ்ப்படிய வைக்காமலே சிறந்த அறிவுரைகளின்

மூலமும், சமுதாய ஒழுங்கையும், கட்டுப்பாட்டையும் நிலைநாட்ட முடியும் என்பது நாத்திகர்களின் வாதமாகும்.

இரண்டுக்கும் நடுநிலையாக நின்று ஒன்றே குலம், ஒன்றே தெய்வம் எனும் கொள்கை வகுத்துக் கொண்டு-மதப்போட்டி, கடவுள் போட்டி, புராணக் கதைப் போட்டி ஆகியவற்றைத் தவிர்த்துக் கொண்டு-அதே நேரத்தில் சமுதாயம் தனக்காக வகுத்துக் கொள்கிற ஒழுங்கு, கட்டுப்பாடு போற்றி வாழ்ந்திட வேண்டும் என்ற கருத்தும் வலியுறுத்தப் பெற்று வருகிறது.

கடவுள் உண்டா? இல்லையா? என்ற சர்ச்சையில் இறங்கி, பட்டிமன்றம் நிகழ்த்திடும் எண்ணம் எனக்கில்லை. நமது கழகத்துக்கும் இல்லை. கடவுளை நாம் ஏற்றுக் கொள்கிறோமா என்பது பிரச்சினை அல்ல! கடவுள் என ஒருவர் இருந்தால் அவர் நம்மை ஏற்றுக் கொள்கிற அளவுக்கு நாம் நடந்து கொள்கிறோமா? என்பதுதான் பிரச்சினை என்று பலமுறையும் நான் விளக்கியிருக்கிறேன். ஏழையின் சிரிப்பில் இறைவன் இருக்கின்றான் என்பதே நமது அண்ணா அடிக்கடி எடுத்துக்கூறிய வாசகமாகும்.

பல உருவங்கள் இருப்பினும் ஆண்டவன் ஒருவன்தான் என்று ஆத்தீகரும் ஒப்புகின்றனர். அதற்கான விளக்கங்கள், உவமைகள் இவைகளை வழங்குகிறார்கள். அத்துடன் நிறுத்தாமல் ஒரு நாளைக்கு ஒரு அவதார புருடரை ஊருக்குக் காட்டுகிறார்களே, ஏன்?

மெய்வழிச் சாலையின் மாய்மாலங்கள் அம்பலமாகிக் கொண்டிருக்கின்றன. கொட்டை எழுத்துக்களில் ஏடுகளில் செய்திகள் வருகின்றன. தோண்டி எடுக்கப்படும் தங்கம்-தோண்டப்படும் பணிகள், அனைத்தும் புகைப் படங்களாக வெளியிடப்படுகின்றன. இதே ஏடுகள்தான் முப்பதாண்டுக் காலத்துக்கு மேலாக இந்த மெய்வழிச்சாலை பற்றிய அற்புதங்களைப் பக்கம் பக்கமாக வெளியிட்டு, மக்களை மடமையில் ஆழ்த்தின.

ஒன்றோ? இரண்டா? ஜலபாபா! சாயிபாபா! எத்தனை கதைகள்! அற்புத சித்து வேலைகள்!

பரங்கிப் பூ பாம்புத்தலைபோல் பூத்திருக்கும்! அதற்குப் பெரிய விளம்பரம்!

ஆதிசேடனே அருள்புரிய வந்திருக்கிறான், வாரீர்! வாரீர்! என்று அழைப்பு, உண்டியல் உதயம்.

பத்து நாட்களில் பரபரப்பு அடங்கும்.

இடைக் காலத்தில் பத்திரிகை விற்பனை இரட்டிப்பாகும்.

'திடீர்ப் பிள்ளையார்' திடுமெனக் கிளம்பும்!

சிலுவைக் குழந்தை "சீசன்" சில நாட்கள்!

கர்நாடகத்தில் ஒரு குழந்தையின் காதில் தேன் வடிகிறது- அந்தச் செய்தியும் பத்திரிகை விற்பனைக்காகவே!

இன்றைக்குச் சில ஏடுகளைப் புரட்டினேன். முற்பிறவியை அறிய முயற்சி என்று கட்டுரையொன்று.

இன்னொரு இதழில் ஒரு பரபரப்பான செய்தி!

பெங்களூரில் ஐந்து வயது சிறுமியாம்! உயர் குடும்பத்தில் பிறந்த பெண்ணாம்! போன ஜென்மத்தில் நகர சுத்தித் தொழிலாளியாக இருந்ததாகக் கூறுகிறதாம் அந்தப் பெண் குழந்தை!

இப்படி இந்தியா முழுவதும் தங்கள் முன் ஜென்மத்தைப் பற்றிக் கூறுகிறவர்கள் சுமார் பதினாறு பேர் இருக்கிறார்களாம். அவர்களில் ஒருத்தி 19-ஆம் நூற்றாண்டில் பேசப்பட்ட வங்காள மொழியைப் பேசுகிறாளாம். அவளுக்கு வயது நாற்பதாகிறதாம்! இவ்வாறு செய்திகள்!

தகப்பனைப்போல், தாயைப்போல், பாட்டனைப்போல், பாட்டியைப்போல் இருக்கிறது குழந்தை என்கிறோம். இரத்தத் தொடர்பினையொட்டி இவ்வாறு கூறுகிறோம். முகமும், அங்க அசைவுகளும், தங்கள் குடும்பத்துப் பரம்பரையை உணர்த்துவதாகக் குழந்தைகளுக்கு அமைவது உண்டு.

முன்ஜென்மம் - அடுத்த ஜென்மம்-முற்பிறவி, மறுபிறவி இவைகள் எல்லாம் நரகம், சொர்க்கம் என்பதைப் போல மனிதனைப் பயமுறுத்திக் கட்டுப்படுத்துவதற்காகச் செய்யப்பட்டுள்ள கற்பனைகளே தவிர வேறல்ல.

"அய்யோ! பாவம் செய்கிறோமே; நரகத்துக்குப் போக வேண்டுமே?" என்றோ, அல்லது அடுத்த பிறவியில் நாய், நரி,

கழுதைகளாகப் பிறக்கவேண்டுமென்று பயந்தோ ஒரு மனிதன் பாவம் செய்யாமல் இருந்துவிடுகிறானா இல்லை! இல்லவே இல்லை!

பாபத்தையும் செய்துவிட்டு, பாவ விமோசனத்துக்காகப் பல ஏற்பாடுகளையும் செய்து வைத்துக் கொள்கிறான்.

அதைவிடச் சுருக்கமாகச் சொன்னால், பாவம் செய்வதற் காகவே பாவந்தீர்க்கும் முறைகளையும் முன்கூட்டியே தயார்படுத்தி வைத்துக்கொண்டிருக்கிறான்.

இறந்து போகிற மனிதன் அடுத்த பிறவி எடுத்துவிடுகிறான் என்றால், ஆண்டுதோறும் அவனுக்கு "திதி-திவசம்" என்று கொண்டாடிப் புரோகிதருக்குத் தான தருமங்கள் செய்வானேன்?

இங்கே கொடுக்கிற தட்சணை, மேலேயிருக்கிற "பிதுர்"க்களுக்குப் போவது உண்மையானால், மறுபிறவி என்பது எப்படி உண்மையாக இருக்க முடியும்.

பேச, பார்க்க, சுவாசிக்க, சிந்திக்க, நடக்க, இப்படி எல்லா சக்திகளும் பொருந்திய 'ஆவிமனிதன்' ஒருவன் இருப்பதைப் போலவும், அவன், தனக்கிடப்பட்ட ஆணையின்படி-குறிப்பிட்ட உயிரினங்களாக உருவமெடுக்கிறான் என்பதைப் போலவும் - இந்த விஞ்ஞான யுகத்திலும் விளம்பரம் செய்து கொண்டிருப்பது மனித சமுதாயத்துக்கு நல்லதல்ல!

ஆவியோடு பேசலாம் என்று ஏமாற்றுவது-முற்பிறவியைச் சொல்லுகிறாள் என்று கதைகட்டுவது-அற்புத ஜாலங்கள் - சித்து வேலைகள் - அவதார மகிமைகள் - மந்திர மாயங்கள் - இப்படி எத்திப் பிழைப்பது, இவைகளுக்கெல்லாம் முடிவுகட்ட கடுமையான சட்டங்கள் பிறப்பிக்கப்படாவிட்டால், மேலும் பல மெய்வழிச் சாலைகள் ஏற்படுவதைத் தடுத்து நிறுத்த இயலாது.

*"கறந்தபால் முலைப்புகா கடைந்த வெண்ணெய்*
*மோர்புகா*
*துடைந்துபோன சங்கின் ஓசை உயிர்களும் உடற்புகா*
*விரிந்த பூ உதிர்ந்த காயும் மீண்டும் போய் மரம்புகா*
*இறந்தவர் பிறப்பதில்லை இல்லை இல்லை இல்லையே!"*

என்று அந்தக் காலத்திலேயே சிவவாக்கியர் அழுத்தம் திருத்தமாகப் பாடியுள்ளதை, உடன்பிறப்பே நீ மட்டும் நினைவில் வைத்துக்கொண்டால் போதாது மற்றவர்களுக்கும் நினைவு படுத்திட வேண்டும்.

சமுதாயக் கட்டுப்பாட்டையும், ஒழுங்கையும், நேர்மையையும், நெறியையும் மூட நம்பிக்கைகளால் நிலை நிறுத்த முடியாது. அறிவுத் தெளிவின் வாயிலாகவும், அரசின் முறையான சட்டங்களின் மூலமாகவும்தான் சமுதாய மறுமலர்ச்சியைத் தோற்றுவிக்க முடியும்.

அன்புள்ள,

**மு. க.**

12-04-1976

# 201. கோட்டம் திறக்கப்படுகிறது குறளோவியம் தீட்டப்படுகிறது!

**உடன்பிறப்பே,**

இன்று எழுதுவது பெரிய கடிதம்! இடையிடையே தலை நீட்டும் சில குறிப்புக்கள், "சுயபுராணம்" அல்லது "சுய விளம்பரம்" போல் தோன்றக்கூடும். இப்போது அந்தக் குறிப்புக்கள் தேவையோ இல்லையோ, எதிர்காலத்துக்கு நிச்சயம் தேவைப்படும். எனவே இந்த மடலில் என்னைப் பற்றி ஏதாவது சொல்லிக்கொண்டிருந் தால்-நான் நாட்குறிப்பு எழுதும் வழக்கமில்லை-அப்படி நான் ஒரு "நாட்குறிப்பில்" தொகுத்திருந்ததை உனக்கு நினைவூட்டியதாகக் கருதிக்கொண்டு பொறுத்தருளவேண்டுகிறேன்.

இன்று, சென்னையில் ஒரு விழா!

திருவிழா!

திருமிகுவிழா!

திருவள்ளுவருக்கு எடுக்கும் விழா!

கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளுங்களிப்பாய்-காணார்க்கும் கண்டவர்க்கும் கண்ணளிக்கும் கண்ணாய்-வல்லார்க்கும் மாட்டார்க்கும் வரமளிக்கும் வரமாய்-மதியார்க்கும் மதிப்பவர்க்கும் மதி கொடுக்கும் மதியாய்-நல்லார்க்கும் பொல்லார்க்கும் நடுநின்ற நடுவாய்-எல்லார்க்கும் பொதுவில் நடமிடுகின்ற ஏற்றமிகு குறளுக்கு ஓவியம் தீட்டப்படுகிறது. அந்தக் குறளோவியக் கோட்டம் திறக்கப்படுகிறது.

மாசறு பொன்னாக, வலம்புரி முத்தாக, காசறுவிரையாக, கரும்பாகத் தேனாகத் திகழ்கின்ற திருக்குறளுக்கு விழா என்றால், உலகப்பந்தின் மீது எந்தமூலையில் இருக்கிற தமிழனும் நெஞ்சு புடைத்து நிற்பான் - மகிழ்வான் - தகதகவெனக் குதிப்பான்-

தண்மதிகண்ட ஆம்பலாகும் அவன் உள்ளம்-தாமரை? கதிர்கண்டது போன்ற துள்ளல் எழும்-என்பதில் ஐயமுண்டோ?

ஊன் கலந்து உயிர் கலந்து உவட்டாமல் இனிக்கின்ற உலகத் தமிழ் மறைக்கன்றோ பெருமைசேர் விழா, தாயகத்து மண்ணில் நிகழ்கின்றது.

இந்த விழா நாள் என்று வரும்? இன்றே வராதா? என்று எத்தனை நாள் காத்திருந்தோம் நாம்! அந்த நாள் தானே இந்த நாள்!

"கடுகைத் துளைத்து ஏழ் கடலைப் புகட்டிக் குறுகத் தரித்த குறள்" என்று இடைக்காடர் கூற, அல்ல! அல்ல! "அணுவைத் துளைத்து ஏழ் கடலைப் புகட்டிக் குறுகத் தரித்த குறள்" என்று ஔவையார் திருத்தம் கூறியதாகப் புகழப்படும் பொய்யாமொழிக் கல்லவா இன்று விழா! புத்தொளி பாய்ச்சிய புலவனுக்கல்லவா விழா!

கோட்டம் திறக்கப்படுகிறது! குறளோவியம் தீட்டப்படுகிறது!

"தமிழ் மரபு, தமிழ் இலக்கியம், தமிழ் வரலாறு, தமிழ் மொழி ஆகியவை பாதுகாக்கப்படவேண்டும், தரணியெங்கும் பரவிட வேண்டும், மங்காமல் மறையாமல் போற்றிப் புகழப்படவேண்டும். அந்த மறுமலர்ச்சி, தமிழுக்கு ஏற்படத்தான், தி. மு. கழகம் ஆட்சிபீடம் ஏறிட விரும்புகிறது" என 1967 விருகம்பாக்கம் மாநாட்டில் அறிஞர் அண்ணா முழங்கியதை அவர் மறைவுக்குப் பிறகும் மறந்தோமில்லை என்பதற்குச் சான்று பகரும் வகையிலே தான் தில்லையாடியில் வள்ளியம்மை நகர் உருவாக்கினோம்.

புதிய பூம்புகார், வாழ்ந்த தமிழகத்தின் வரலாற்றுச் சின்னமாக எழுந்து நிற்கிறது.

அன்னியரை எதிர்த்த அடலேறு கட்டபொம்மனுக்கு நினைவுக்கோட்டை கம்பீரமாகக் காட்சி தருகிறது.

காரைக்குடியில் தமிழ்த் தாய்க்கு ஓர் ஆலயம்.

கலனாகிக்கிடந்த மயிலை வள்ளுவர் கோயிலுக்குப் புதிய திருப்பணி. நுங்கம்பாக்கத்தில் உலகோர் கவனத்தைத் திருப்பும் வண்ணம் ஒப்பற்ற வள்ளுவர் கோட்டம்.

உடன்பிறப்பே, இவைகளையெல்லாம் நினைக்கிறேன் நெஞ்சு இனிக்கிறது. திரும்பிப் பார்க்கிறேன்; தேன் பாய்கிறது, இதயமெனும் கழனியிலே! உயிர், தமிழுக்கு எனும் உறுதிப் பயிர் விளைகிறது! களைகளுக்கு இங்கு இடமில்லை என்ற திறமும், தெம்பும் பிறக்கிறது!

ஆகா! அதோ! அதோ! வள்ளுவர் கோட்டத்துத் தேரின் உச்சியிலே நானும் நாவலரும் இணைந்து கலசத்தை ஏற்றிவைக்கும் உணர்ச்சிமிகு காட்சி! மனத்திரையில் நிலைத்து நிற்கிறது.

கோட்டம் திறந்திட வருகிறவர் குடியரசுத் தலைவர்! நமது அன்புக்குரியவர்! மேன்மை தங்கிய பக்ருதீன் அலி அகமது அவர்கள். வள்ளுவர் கோட்டத்தை அவரது திருக்கரங்களால் திறக்கிறார் என்பதில் எனக்குப் பெருமகிழ்ச்சி.

குடியரசுத் தலைவர் தேர்தலில் அவர் வேட்பாளராக நின்றபோது என்னைச் சந்திக்கக் கோபாலபுரம் இல்லத்துக்கு வந்திருந்தார். அந்தப் பெருமகனாரின் பாதம்பட்ட என் வீட்டுப் படிக்கட்டுகள், மிக்க பாக்கியம் செய்தவை என்று அன்றைக்கு நான் மகிழ்ந்தேன். அந்த மகிழ்ச்சியை விடக் கோடானுகோடி பங்கு அதிக மகிழ்ச்சியை இன்று நான் அடைகிறேன்; அவர் கோட்டம் திறக்க வருவது கண்டு!

திறப்புவிழா நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்குகிறவர், தமிழ் மக்களிடத்தில் ஐந்தாண்டுக் காலம் இரண்டறக் கலந்து பழகிடும் வாய்ப்பினைப் பெற்ற தமிழக ஆளுநர் திரு. கே. கே. ஷா அவர்களாவார்கள்.

ஆளுநர் அவர்கள் மனந்திறந்து பேசக் கூடிய பண்பாளர் ஆவார். தன்னுடைய பெயருக்கு முன்னால் உள்ள எழுத்துக்களான "கே. கே." என்பதைக்கூட "கலைஞர் கருணாநிதி ஷா" என்று இன்பம் பொங்கிடக் குறிப்பிட்டுத் தனது பாச உணர்வை என்மீது பல நேரங்களில் மழையாகப் பொழிந்தவர்.

*"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து*
*அதனை அவன்கண் விடல்"*

என்ற குறள்நெறிக்கொப்ப, ஆளுநர் அவர்கள் தலைமை ஏற்பதும்; மேன்மைமிகு குடியரசுத் தலைவர் அவர்கள் திறப்புவிழா நடத்துவதும் சாலப் பொருத்தமுடையதாகும்.

என் இனிய உடன்பிறப்பே, "இன்றைய செய்தி நாளைய வரலாறு" என்பது வெறும் சொல்லழகுக் கோவையல்ல! செய்திகள்தான் வரலாற்று வரிகளாக மாறுகின்றன என்றாலும், எல்லாச் செய்திகளும் வரலாறாக ஆகிவிடுவதில்லை.

இன்றைய குழந்தைகள் நாளைய தலைவர்கள் என்பதால்; எல்லாக் குழந்தைகளுமே தலைவர்கள் ஆகிவிடுவதில்லை. ஆனால் ஒன்று, குழந்தைகள்தான் தலைவர்களாகிறார்கள்.

நாட்டு விடுதலைக்காக வனப்புமிகு வாலிபத்தைப் பல ஆண்டுக்காலம் சிறைக்கோட்டங்களில் தியாகத் தீயில் கருக்கிக் கொண்ட மாவீரர் பண்டித நேரு அவர்கள், மண் மீட்கும் போரிலே களத்தில் நின்றபோது-மகாத்மாவின் மடியில் தவழ்ந்த இளங்குழந்தை இந்திராதான் இன்றைய இந்தியத் திருநாட்டின் தலைமை அமைச்சர்!

நமது ஆளுநர் அவர்கள் கல்விக்கூட விழாக்களில் உரையாற்றும்போது உற்சாகம் மேலிடக் குறிப்பிட்டது எனக்கும் உனக்கும்கூட நன்றாக நினைவிருக்கிறது; "சிறுமிகளே! நீங்கள் எல்லாம் இந்திரா காந்திபோல எதிர்காலத்தில் ஆகவேண்டும். சிறுவர்களே! நீங்கள் எல்லாம் கருணாநிதிபோல, காமராஜர்போல ஆகவேண்டும்!" என்று பலத்த கையொலிக்கிடையே கூறுவார்.

என்னைத் தலைவர்கள் வரிசையில் சேர்த்தார் என்பதற்காக இதைக் குறிப்பிடவில்லை. நான் கிடக்கிறேன், சாதாரணமானவன்! என்னை விட்டுவிடு! இந்திய நாட்டுப் புகழ்மிக்க பிரதமர் இந்திராகாந்தி போலவும், தியாகச் சுடர் காமராஜர் போலவும் எதிர்காலத்தில் குழந்தைகள் ஒளிவிட்டுத் திகழ வேண்டும் என்பது போலத்தான், இன்றைய செய்திகளும் நாளைய வரலாறுகளாக மாறிட வேண்டுமென்று நாம் விரும்புகிறோம்.

செய்திகள், குழந்தைகளைப்போல!

வரலாறுகள், தலைவர்களைப்போல!

பல செய்திகள் தோன்றும் போதே, வரலாறாக வளர முடியாத நிலைபெற்றுக் கருவிலேயே சிதைந்தும் விடுகின்றன! சில

செய்திகளோ, பிறக்கும்போதே வரலாற்றுக்குரியவைகளாகப் பிறந்து விடுகின்றன. அந்தச் சில செய்திகளும் களிப்பூட்டும் தன்மை கொண்டவைகளாகவும் இருந்திடலாம்; கவலையூட்டும் வண்ணமும் அமைந்திடலாம்.

ஒருசாராருக்குக் களிபேருவகை வழங்கும் செய்தி, மற்றொரு சாராருக்கு மாறாத மனநோயைத் தரவல்லதாகவும் விளங்கிடக் கூடும்.

இன்று 1976-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 15ஆம் நாள் வியாழக்கிழமை! இந்த நாளில் சென்னை மாநகரில் வள்ளுவர் கோட்டம் திறக்கப்படுகிறது. இது செய்தியா? வரலாறா? என்று கேட்டால் அதற்குத் தெளிவாகக் கிடைக்கக்கூடிய பதில் "வரலாற்றுச் செய்தி" என்பது தான்!

இந்தக் கோட்டம் அமைக்க வேண்டுமென்று திட்டமிட்டு அதற்கான தொடக்கவிழா எப்போது நடைபெற்றது என்பது உனக்கு நினைவிருக்கிறதா? அதுவும் வெறும் செய்தியல்ல; வரலாற்றுச் செய்திதான் என்பதால் உன் குறிப்புக்காகவும், எதிர்கால வரலாற்றுக் குறிப்புக்காகவும் இப்போது அதை நினைவுபடுத்துகிறேன்.

அறிஞர் அண்ணா பிறந்த செப்டம்பர் திங்கள் 15-ஆம் நாளையொட்டிய அண்ணா பிறந்த நாள் வாரத்தில், அதாவது 1974-ஆம் ஆண்டு செப்டம்பர் 18ஆம் நாள் சென்னை நுங்கம்பாக்கத்தில் மொழிநூல் அறிஞர் தேவ நேயப்பாவாணரும், முத்தமிழ்க் காவலர் விசுவநாதமும் வீற்றிருந்தவிழா மேடையில் பொதுப்பணி அமைச்சர் ப.உ. சண்முகம் வரவேற்புரையாற்றிட, கல்வி அமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் தலைமையில், மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் பேராசிரியர் அன்பழகன் அவர்கள் முன்னிலையில், அன்று தமிழக முதலமைச்சர் பொறுப்பில் இருந்த நான், வள்ளுவர் கோட்டத்துக்கான பணிகளைத் தொடங்கி அடிக்கல் நாட்டு விழாவை நிறைவேற்றி வைத்தேன்.

நயமான தமிழ் எடுத்து நாவலரும்; பேரருவியின் பெருக்கெனத் தமிழ் முழக்கிப் பேராசிரியரும்; தமிழ் நிலத்தில் ஆழ உழுது அரும் பொருட் கருவூலங்களை வழங்குகின்ற பாவாணரும்; சிந்துபாடும் சிற்றாறு என முத்தமிழ்க் காவலரும்; அவர்களோடு இணைந்த காரணத்தால் நானும் அன்று ஆற்றிய உரைகள்! நடைபெற்ற தொடக்கவிழா நிகழ்ச்சி! கல்லில் உளிகொண்டு செதுக்கிச் சிற்ப

வேலையைத் தொடங்கிய காட்சி! அதே சமயம் நூற்றுக்கணக்கான சிற்றுளிகள் கற்களில் பரதமாடி எழுப்பிய சதங்கை நிகர்த்த சங்கீத ஒலி!

அடடா! கரும்புத் தூண் நட்டு, கற்கண்டுக் கூரை வேய்ந்து, கனிச்சாறு கொண்டு தரைமெழுகி, சர்க்கரையால் கோலமிட்டாற் போன்றிருந்தது அந்த விழா!

உடன்பிறப்பே! அன்று தொடங்கிய முயற்சிக்குத் தொய்வு நேராமல் பணிகள் நடைபெற்றன!

இப்படி ஒரு கோட்டம் அமைத்திடும் எண்ணம் எவ்வாறு எழுந்தது தெரியுமா?

பூம்புகார் உருவாக்கியதும், பாஞ்சாலங்குறிச்சி கண்டதும், புதிய எழுச்சி தமிழுக்குக் கிடைப்பதும் உணர்ந்த நல்லோர் சிலர், மயிலாப்பூர் திருவள்ளுவர் ஆலயத்தைப் புதுப்பிக்க வேண்டுமென்ற முறையீடு ஒன்றைத் தந்தனர் என்னிடம்!

மறுநாளே நானும் அறநிலைய அமைச்சர் கண்ணப்பனும் மயிலைக்குச் சென்றோம். கோயிலைப் புதுப்பிக்கத் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டது. அதற்கென கருத்துரை வழங்கிடக் குழு ஒன்றும் உருவாக்கப்பட்டது. இதற்கு இடையே அந்தக் கோயிலையன்னியில் நகரின் நடுப் பகுதியில் கோட்டம் ஒன்று அமைத்தால் என்ன என்ற ஆசையும் தோன்றியது. அதுபற்றி விவாதித்தோம். பெரிய அளவில் வரலாற்றுப் புகழ் வாய்ந்ததாக அந்தக் கோட்டம் அமைய வேண்டுமென விரும்பினோம்.

பூம்புகார்க் கலைக்கூடப் பணிகளை முன்னின்று நடத்திய சிற்பி, கணபதி ஸ்தபதியாரிடம் கோட்டம் பற்றிய விவாத அரங்குகளைத் தொடர்ந்து நடத்தினோம்.

கோட்டம் எப்படி அமைந்திட வேண்டும்; வள்ளுவர் சிலை இருக்குமிடம் எப்படி அமைந்திட வேண்டும் என்பதற்கான "கோணல்மாணல்", கோட்டுச் சித்திரங்களை நானே வரைந்து காட்டினேன்.

திருவாரூர் தேர்போல ஒருபகுதி அமைய வேண்டும். கலையரங்கம் ஒன்று இலக்கிய விழாக்கள் நடத்திட மிகப்பெரும் அளவில் உருவாக்க வேண்டும். திருக்குறள் முதலிய தமிழ்ப் பனுவல்களை ஆய்ந்திடும் ஆராய்ச்சி மன்றமொன்றும் அங்கே

இடம்பெற வேண்டும். குறளுக்கெனவே தங்கள் வாழ்வை அர்ப்பணித்துக்கொண்டிருக்கிற ஐந்தாறு பெரும் புலவர்கள் கிறித்துவ ஆலயத்து பாதிரிமார்களைப்போல வள்ளுவர் கோட்டத்திலேயே இருந்து குறள் பரப்பும் தூய்மைப்பணி ஆற்றிட வேண்டும். உலகில் எந்த நாட்டில் இருந்து வருகின்றவ ராயினும் இந்தக் கோட்டத்திற்கு வந்து பயன் பெற்றுத் திரும்பிட வேண்டும். குறள் பரவிடும் எளிமையான வழிகளைக் கற்றுத் தந்திட வேண்டும். எல்லாக் குறட்பாக்களும் கல்லில் செதுக்கிப் பதிப்பிக்கப்பட வேண்டும். தேரில் வள்ளுவர் சிலை விளங்கிட வேண்டும். கலையரங்கில் தொல்காப்பியரும்; அதங்கோட்டாசானும் சிலை வடிவில் அமைக்கப்பட வேண்டும். இத்தனை கருத்துக்களையும் எடுத்துரைத்தோம்.

நான் வரைந்து காட்டிய வள்ளுவர் கோட்ட அமைப்புச் சித்திரம் "கோணல் மாணல்" கோடுகளாக இருந்தாலும், அடிப்படை எண்ணத்தைப் புரிந்துகொண்டு அதனைத் திருத்தியமைத்து சிற்பிகளும், அரசு அதிகாரிகளும் வேலைகளைத் தொடங்கினர். இடையில் பணிகள் விரைவில் முடிவுறவேண்டி ஸ்தபதியார் எஸ். கே. ஆச்சார் அவர்களும் இணைத்துக்கொள்ளப்பட்டார்! அவர் தான் குமரிமுனையில் விவேகானந்தர் மண்டபத்தை வியக்கத்தக்க வண்ணம் வடித்துத் தந்தவர்.

குமரி முனையில் கோயில் எழுப்பிய சிற்பியும், காவிரி கடலோடு கலக்குமிடத்தில் பூம்புகார் எழுப்பிய சிற்பியும் சேர்ந்து வழங்கும் சிறப்புமிகு கோட்டம் தான் சீர்சால் வள்ளுவர் கோட்டம்!

சிற்பக் கலைக்கு உயிரூட்டும் கழக அரசை அந்த இரு சிற்பிகளுமே பெரிதும் பாராட்டியுள்ளனர்.

"எத்தனையோ அற்புத சிற்பங்கள் இருக்கலாம்! ஆனால் ஒரு பெரிய கதையையே தொடர்ச்சியாக சிற்பங்களில் பூம்புகாரில் வடிக்கச் செய்த அரசு, இந்த அரசுதான்!" என்று கழக அரசைக் கணபதி ஸ்தபதி பாராட்டினார்; "பூம்புகார்ப் பெருந்தச்சன்" என்ற விருதினை மாமல்லபுரத்தில் எனக்கு சிற்பிகள் வழங்கிய விழாவில்!

"பழைய காலத்தில் எத்தனையோ மன்னர்கள் கலையைப் பேணி வந்திருக்கிறார்கள். கோயில்களையும் மண்டபங்களையும் கட்டும்படி சிற்பிகளை அவர்கள் தூண்டியிருக்கிறார்களே தவிர,

யாரும் தனது வாழ்நாளில் இப்படி ஒரு கல் தேரை பிரம்மாண்டமாக உருவாக்கும்படி கூறியதில்லை”

- என்று ஸ்தபதி எஸ். கே. ஆச்சார், ஒரு பத்திரிகைப் பேட்டியில் கருத்து வெளியிட்டார்.

நூற்றுக்கணக்கான சிற்பிகளுக்கும் ஏறத்தாழ ஆயிரம் தொழிலாளிகளுக்கும் வேலை வாய்ப்பு அளித்த திட்டங்கள் தான் இவைகள்! அதே நேரத்தில் தமிழ் மொழியின் மேன்மையை- கலாச்சார மாண்பை நிலை நிறுத்தும் பணியுமாகும்!

இந்தியா ஒரே நாடு! ஒருமைப்பாட்டு உணர்வை வளர்ப்போம்! என்று கூறுகிற அதே நேரத்தில் கலாச்சாரங்களைப் போட்டுக் குழப்பவேண்டும் என்று யாரும் வாதிட இயலாது!

கலாச்சார உறவுகள் தேவை! வளர்க்கப்பட வேண்டியவை! அதற்காக எல்லாவற்றையும் சேர்த்து “அவியல் கலாச்சாரம்” ஒன்றைச் சமைத்திடக் கூடாது! முடியாததுங்கூட!

இரண்டு நாட்களுக்கு முன்பு தமிழ் ஆண்டுப் பிறப்பு கொண்டாடினோம்! அதற்குப் பதினைந்து நாட்களுகு முன்பு, தெலுங்கு வருடப் பிறப்பு கொண்டாடப்பட்டது!

தமிழ் நாட்டில் உள்ள தெலுங்கரும், ஆந்திரத்தில் உள்ள தமிழரும், தங்கள் தங்களுக்குரிய புத்தாண்டுகளைத்தான் கொண்டாடியிருக்கிறார்கள்.

எனவே, இந்தியா ஒரே நாடு என்பது ஒற்றுமைக்கு-ஒருமைப் பாட்டுக்கு-பாதுகாப்புக்கு-இப்படிப் பல நன்மைகளுக்காக நாம் ஏற்றுக் கொண்டுள்ள கொள்கை! அதற்காக அந்தந்தப் பகுதி மக்களுக்குரிய கலை, இலக்கியம் மொழி, பண்பாடு, கலாச்சாரம் இவைகளையெல்லாம் விட்டுவிட வேண்டுமென்று கருதி விடக்கூடாது.

தொன்மை வாய்ந்த மொழி, தமிழ்மொழி! அதங் கோட்டா சானிடம் மாணவராக இருந்தவர் தொல்காப்பியர் அவர் காலத்திலே இலக்கணம் எழுதப்பட்டது என்றாலும் அதற்கு முன்பு ஒரு ஐயாயிரம் ஆண்டுகளாவது தமிழ் மொழி மெல்லமெல்ல பண்படுத்தப்பட்டிருந்தால்தான், அதற்குத் தொல்காப்பியர் இலக்கணம் கண்டிருக்க முடியும்.

தொல்காப்பியர் காலமே மூவாயிரம் ஆண்டுகட்கு முற்பட்டது என்கிறார்கள். அதற்கு முன்பு ஐயாயிரம் ஆண்டு வளர்ச்சி, தமிழுக்கு! ஆக எண்ணாயிரம் ஆண்டுக்கால வரலாறு படைத்த பழம் பெரும் மொழி தமிழ் மொழி.

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தமிழுக்குக் கிடைத்த கருவூலம், திருக்குறள்!

நூல்களின் தன்மைப்பற்றிக் கூறவந்த ஆங்கில அறிஞன் ஜான்சன், "வாழ்க்கை அறிவு புகட்டாத நூல்கள் பயன் அற்றவை! வாழும் கலையைத் தவிர வேறு எதைக் கற்பிக்க நூல்கள் இருக்கின்றன?" என்று கேட்கிறான்.

அந்த அடிப்படையில் நோக்கினால், எந்த வகையில் வாழ்ந்தால் வாழ்வு இனியதாக, எழிலுடையதாக, பண்புடையதாக பயனுடையதாக இருக்குமென்பதை வலியுறுத்திக் கூறும் உயர் தனிப் பெருநூல் திருக்குறளாகும்.

நோபிள் பரிசுபெற்ற அறிஞர் ஆல்பர்ட் சுவைட்சர், "இந்தியக் கருத்தும் அதன் வளர்ச்சியும்" என்று எழுதியுள்ள ஆராய்ச்சி நூலில்,

**"திருக்குறள், உயர்ந்த - தலைசிறந்த அறங்கள்**
**அடங்கிய ஒப்பற்ற உலக இலக்கியம்"**

என்று குறிப்பிட்டிருக்கிறார். அதனால்தானே "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து, வான்புகழ் கொண்ட தமிழ்நாடு" எனக் கவிச்சக்ரவர்த்தி சுப்பிரமணிய பாரதியார் எக்காளமிடுகிறார்!

*"தெள்ளு தமிழ் நடை*
*சின்னஞ் சிறிய இரண்டடிகள்*
*அள்ளு தொறுஞ் சுவை*
*உள்ளுந்தொறும் உணர்வாகும் வண்ணம்*
*கொள்ளும் அறம், பொருள்*
*இன்பம் அனைத்தும் கொடுத்த திரு*
*வள்ளுவனைப் பெற்ற*
*தாற் பெற்றதே புகழ் வையகமே!"*

என்று புரட்சிக்கவிஞர் பாரதிதாசனார் பாடுகிறார். வள்ளுவனைப் பெற்றதால் வையகமே புகழ்பெற்றது என அந்தப் பாவேந்தர்

பெருமைப்படுகிறார். குறளுக்குப் பெருமை சேர்ப்பதும், குறள்நெறி மங்கியதை உணர்ந்து அதனை மீண்டும் தமிழ் மக்களின் உள்ளத்தில் பதிய வைக்கும் முயற்சியினை மேற்கொள்வதும் நமது கழகத்தினரால் இன்று நேற்று தொடங்கப்பட்ட தொண்டல்ல! சுமார் இருபத்தி எட்டு ஆண்டுகட்கு முன்பு பெரியார் அவர்களும் பேரறிஞர் அண்ணா அவர்களும் முன்னின்று சென்னை நகரத்தில் "குறள் மாநாடு" ஒன்றையே மிகச் சிறப்புற நடத்தியிருக்கிறார்கள்.

*"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்*
*மெய்ப்பொருள் காண்ப தறிவு"*

இந்தக் குறள் வழி நின்றுதான் பகுத்தறிவு இயக்கமே மலர்ந்தது. அந்த இயக்கத்தின் கொள்கை பரப்பும் பணிக்குக் குறள் ஒரு பெருந்துணை எனில் அது மிகையாகாது.

தமிழன் பெருமையை ஏட்டில், இலக்கியத்தில் மட்டும் வாழ வைக்காமல் புதியதோர் எழுச்சியுடன் வருங்கால முழுமைக்கும் வாழவைக்கப் பூம்புகாரின் பதிப்பெடுத்தோம். கடலில் ஆழ்ந்து போன பூம்புகார் நிலத்தில் விளைந்தது.

பாரதியின் பாட்டாக, பாரதிதாசனின் கவிதையாக, பல்வேறு அறிஞர் பெருமக்களின் உரையாக மொழி பெயர்ப்புக்களாக வடிவு கொண்டிருந்த வள்ளுவருக்கு இதோ, கோட்டம் அமைத்துவிட்டோம். வான்புகழ் கொண்ட தமிழ்நாட்டுக்கு வரலாற்றுப் புகழ்கொண்ட வள்ளுவர் கோட்டம்!

இந்தப் பணி நடைபெறும்போது எத்தனை விமர்சனங்கள்! எத்தனை கண்டனங்கள்! அரசுத்துறை வாயிலாக நிகழ்த்தப்பட்ட இந்தப் பணியை ஒப்பந்தக்காரர்களிடம் விட்டு ஊழல் நடந்ததாக ஒரே கூப்பாடு! இறுதி வரையில் இந்தப் பணி அரசுத்துறை வாயிலாகத்தான் நடைபெற்றிருக்கிறது. எந்த நல்ல காரியம் நடந்தாலும், அதற்கு ஒரு ஊனம் உண்டாக்க முயலுகிற எரிச்சல்காரர்களைப்பற்றிக் கவலைப்படாமலே,

*"ஏதிலார் குற்றம்போல் தன்குற்றங் காண்கிற்பின்*
*தீதுண்டோ மன்னும் உயிர்க்கு."*

-என்ற குறளை அவர்களுக்கு நினைவுபடுத்தியவாறு வள்ளுவர் கோட்டப் பணிகளைக் கழக அரசு கவனித்தது.

நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்த எழில்மிகு கோட்டத்தை நானும் நாவலரும் அமைச்சர்கள் சிலரும் சென்று பார்த்து வந்தோம். கோட்டத்தில் அமைக்கப்பட்ட ஒவ்வொரு கல்லும் எங்கள் கவனத்திலிருந்து தப்பியதில்லை.

இப்போதும் சிலர் என்ன கூறினார்கள்? ஆட்சி மாறி விட்டது-வள்ளுவர் கோட்டம் அவ்வளவுதான்! அதை இனி யாரும் திறந்து வைக்கமாட்டார்கள்! என்று தான் பிரச்சாரம் செய்தார்கள். ஆனால் அதற்குமாறாக, நமக்கோர் நற்செய்தியாக மேன்மைமிகு குடியரசுத் தலைவர் அவர்களே அந்த அற்புதக் கோட்டத்தைத் திறந்துவைக்க இசைந்து வருகை தருகிறார்கள்.

"வள்ளுவர் கோட்டம் போன்ற முயற்சிகள், விளம்பரத் திற்காக" இப்படியும் எழுதினர்! பேசினர்! இன்றுங்கூட சிலர் அப்படித்தான் எழுதுகின்றனர், பேசுகின்றனர், உடன்பிறப்பே, இன்றைக்குத் தெரியாது-அவர்களுக்கு!

காலம், யாருடைய காலடியிலும் அடிமைப்பட்டுக் கிடப்பதில்லை. அது ஒரு காற்று! பல திசைகளிலும் வீசும் ஆற்றல் பெற்றது! அப்போது புரியும் அவர்களுக்கு சரித்திரத்தின் வல்லமை!

மீண்டும் நமது ஆளுநர் அவர்களின் சொற்பொழிவுக் குறிப்பு ஒன்றையே நான் நினைவு கூர்ந்திட விரும்புகிறேன்.

> "கருணாநிதி அவர்களே; தாங்கள் ஒரு உண்மையை உலகிற்கு நிரூபித்துக் காட்டியிருக்கிறீர்கள். கீழ்த் தளத்திலிருந்து ஒரு மனிதன், மிக உன்னத நிலைக்கு வரமுடியுமென்று காட்டியதற்காக, எனது பாராட்டுக்களும் வாழ்த்துக்களும்.
>
> அரசியல்வாதிகள் இடையில் மறைந்து விடலாம். ஆனால் எழுத்தாளராக - மனிதத் தன்மை உள்ளவராக இருக்கும் கருணாநிதி; என்ன நேர்ந்தாலும் சரித்திரத்தி லிருந்து மறைய மாட்டார்."

ஜூலை 31ஆம் நாள் 1971ஆம் ஆண்டு நமது தமிழக ஆளுநர் ஆற்றிய உரைதான் இது! அவர், "கருணாநிதி" என்று என் பெயரைக் குறிப்பிட்டிருந்தாலுங்கூட, நான் ஆற்றிய பணி, ஆற்றுகிற பணி எல்லாமே கழகச் சார்பில், கழக அரசின் சார்பில், அண்ணாவின் வழியைப் பின்பற்றி என்கிறபோது, தனிப்பட்ட

எனக்கல்ல; நானும் நீயும் மற்றவர்களும் இணைந்துள்ள இந்தக் கழகத்துக்கு; கழக அரசின் நற்சாதனைகளுக்கு; தமிழ்ப்பணிக்கு என்றே பொருள் கொண்டிட வேண்டும்.

நமது அடிச்சுவடே தெரியாமல் அழித்துவிடக் கூடிய முயற்சிகள் செய்யப்பட்டாலுங்கூட அறுபது ஆண்டுக் காலமாக வளர்க்கப்பட்டுள்ள உணர்ச்சிகளின் இழையோட்டத்தை யாரும் அறுத்துவிட இயலாது.

ஆறு, நீரின்றி வறண்டு கிடப்பது போல் தோன்றும். "ஆற்றுப் பெருக்கற்று அடிசுடும் அந்நாளில் ஊற்றுப் பெருக்கால் உல கூட்டும்" என்ற பாடலை கவனி! வறண்டுபோன ஆற்றுக்கு அடியிலேயும் குளிர் நீர் ஊற்று இருப்பது போல-நமது அடையாளங்களே இல்லாமற் போய்விட்டாலும் நிலத்தடியில் இருக்கின்ற நீர்ஊற்றுபோல, நமது கொள்கை-நமது உழைப்பு-நமது தியாகம் - நமது சாதனை-அனைத்தும் உணர்வு பூர்வமாக இருந்தே தீரும்.

எனவே சரித்திரத்தில் நமக்குக்கிடைக்கிற இடம், சலுகையால் பெறக்கூடியது அல்ல! எது நேர்ந்தாலும், என்ன நேர்ந்தாலும் மறைக்க முடியாத இடம்! அந்த நம்பிக்கையுடன்தான் இன்று நடக்கும் வள்ளுவர் கோட்டத் திறப்பு விழாவை அகக் கண்ணால் காணுகிறேன்.

உயிர்வளர் மாதம் ஒன்பதும் ஒன்றும் நிறைந்து பிறந்த குழந்தையைச் சுமந்ததையும் இன்பமாகக் கருதி, பேற்றுக் கால வேதனையையும் இனிய வேதனையாகக் கொண்டு; பாலூட்டிச் சீராட்டிப் பழமுத்தம் சுளை சுளையாய்த் தந்து, பள்ளிக்கனுப்பி, பின்னழகும் முன்னழகும் பார்த்துக் களித்து, பருவமடைந்த பின்னர் வாழ்க்கைத் துணையொன்றை தேர்ந்தெடுத்து அந்த ஆசைக் கிள்ளைக்கு இனிய திருமண விழா நடைபெறும்போது, தாலி கட்டும் காட்சியினைக் காணமுடியாமல் மணப்பந்தலுக்கு வெளியே நிற்கின்ற தாயின் மனதில் ஒருவிதத் தவிப்பு இருந்தாலும், தன் அன்புச் செல்வத்துக்கு நடைபெறும் மணவிழா குறித்த மகிழ்ச்சி பொங்கிடத்தானே செய்யும்!

என் தங்க உடன்பிறப்பே! அந்தத் தாயின் மகிழ்ச்சியைத் தான், நான் பெறுகிறேன் இன்று!

**ஆம்-என் வாழ்நாளின் குறிக்கோள்களில் ஒன்றான வள்ளுவர் கோட்டத் திறப்பு விழாவை அகக் கண்ணால் காணுகிறேன், ஆனந்தப் பள்ளு பாடுகிறேன்.**

*"நெடுநாள் ஆசை நிறைவேற்றம்*
*நெஞ்சில் இன்பக் கொடியேற்றம்"*

**நீயும் சேர்ந்து பாடுக! இந்த மகிழ்ச்சிப் பாடலை! வாழ்க வள்ளுவர்! வெல்க குறள்நெறி!**

அன்புள்ள,

**மு. க.**

15-04-1976

குறிப்பு:- 'எமர்ஜென்சி' தணிக்கைக்கு நீதிமன்றத்தில் இடைக்காலத் தடைபெற்று சில நாட்கள் முரசொலியில் கலைஞர் எழுதிய கடிதங்களில் ஒன்று இது.

# 202. அமைதி காத்துப் பணிபுரிவோம்!
# அமைப்பு ரீதியாக இயங்குவோம்!

**உடன்பிறப்பே,**

கழகத்திற்குப் புதிய உறுப்பினர்களை சேர்க்கவும், ஏற்கனவே உறுப்பினர்களாக இருப்பவர்களின் உறுப்பினர் உரிமையைப் புதுப்பித்திடவுமான பணிகளைக் கழக அமைப்புக்கள் ஆங்காங்கு தொடங்கிட வேண்டுமென நமது பொதுச் செயலாளர் டாக்டர் நாவலர் அவர்கள் தலைமைக் கழகச் சார்பில் விடுத்துள்ள வேண்டுகோள் அறிக்கையினை, நீ மிகுந்த உற்சாகத்துடன் வரவேற்றிருப்பாய் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். நானும் பொதுச் செயலாளர் நாவலரும், பொருளாளர் பேராசிரியரும், மற்றும் கழகப் பொறுப்பாளர்களும், காப்பாளர்களுமான செயற்குழு உறுப்பினர்கள் இயன்ற அளவு கூடி, அன்பகத்தில் கலந்து பேசி, அதன் தொடர்பாக இந்த வேண்டுகோள் வெளியிடப்பட்டுள்ளது.

வரும் மே திங்கள் முதல் நாளில் இருந்து அந்தப் பணியினைத் தொடங்க, நாள் குறிப்பிடப்பட்டுள்ளது. அஷ்டமியா, நவமியா, ஆகும் நாளா, ஆகா நாளா என்று பஞ்சாங்கம் பார்த்து அறிவிக்கப் பட்ட நாள் அல்ல அந்த நாள்!

உலகப் பாட்டாளி மக்கள் கொண்டாடும் உழைப்பின் மேன்மைக்கோர் திருநாளாம் மே திருநாளில் பாட்டாளிகளின் பாசறையாம் திராவிட முன்னேற்றக் கழகம், வழக்கம்போல் தனது ஆக்கப் பணியைத் தொடங்குகிறது.

அருமைத் தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் இந்தக் கழகத்தைத் தொடங்கிய நாளில் இருந்து ஜனநாயக நெறியி லிருந்து கடுகளவும் விலகாமல் கழகச் செயல் முறைகள் வகுக்கப் பெற்று இன்றுவரையில் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

1949-ஆம் ஆண்டு கழகம், தொடங்கப்பெற்றவுடனேயே கழகத்திற்கான சட்ட திட்டங்களை வகுக்கின்ற குழு அமைக்கப்

பட்டு, அந்தக் குழுவினர் பலமுறையும் கூடி, கலந்துபேசி விவாதித்து, சட்ட திட்டங்களுக்கான இறுதி வடிவம், மதுரை மாநகரில் 1951-ஆம் ஆண்டு கூடிய பொதுக் குழுவில் நீண்ட நேர விவாதத்திற்குப் பிறகு முழுமை பெற்றது.

1951-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் இறுதியில் சென்னையில் கழகத்தின் பொதுச் செயலாளர் பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் மாநிலப் பொது மாநாடு நடைபெற்றது. முதல் பொதுத் தேர்தலில் கழகம் ஈடுபடுவது இல்லையென்றும் நேசக் கரம் நீட்டுகின்ற கட்சிகளுக்கு, நிபந்தனைக்குட்பட்ட ஆதரவைத் தருவதென்றும் அந்த மாநாட்டில்தான் முடிவு எடுக்கப்பட்டது. தமிழகத்தில் உண்மையான கம்யூனிஸ்டுக் கட்சி தி. மு. கழகம்தான் என்று அண்ணா அவர்கள் பிரகடனம் செய்த மாநாடும் அந்த மாநாடுதான்.

பொதுத் தேர்தல் முடிந்த பிறகு, கழகத்தின் ஆதரவு பெற்று வெற்றி பெற்ற தோழமைக் கட்சிகள் தங்களைத் தாங்களே கலைத்துக்கொண்டும், அல்லது சிதைத்துக் கொண்டும் அமைச்சரவையில் இடம் தேடிப் பிடித்துக் கொண்டன. விக்ரவாண்டி தொகுதியில் நமது ஆதரவுடன் வெற்றி பெற்ற வீரர் கோவிந்தசாமி போன்ற சிலர் தான், கடைசி வரையில் கழகத்துக்கு நன்றியுடையர்களாக இருந்தார்கள் என்செய்வது. கழகத்தின் ஆரம்ப 'ஜாதகமே' அப்படித்தான் அமைந்தது.

ஜனநாயகக் கோட்பாடுகளையும், ஏற்றுக்கொண்ட இலட்சியங்களையும் அறநெறியில், அமைதி வழியில் நிறைவேற்றுவதற்கு உறுதி ஏற்றுக்கொண்ட கழகம், தனக்கென அமைத்துக் கொண்ட சட்ட திட்டங்களின்படி உறுப்பினர்களைச் சேர்த்தும், ஏற்கனவே இருந்த உறுப்பினர்களின் உரிமையைப் புதுப்பித்தும் 1955-ஆம் ஆண்டு கழக அமைப்புக்களுக்கான தேர்தலை நடத்தி; இறுதியாகத் தலைமைக் கழகத் தேர்தலையும் நடத்தி, நமது நாவலர் அவர்களைப் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுத்தது.

புதிய பொதுச் செயலாளர் தலைமையில் 1956-ஆம் ஆண்டு திருச்சியில் கழகத்தின் இரண்டாவது மாநிலப் பொது மாநாடு நடைபெற்றது. "தம்பீ! வா தலைமை ஏற்க வா? உன் ஆணைக்குக் கட்டுப்பட்டு நடக்கிறோம், வா" என்று நாவலரை, அண்ணா வழிமொழுந்து அழைத்த மாநாடும், நாடாளுமன்ற சட்டமன்றங்

களுக்கான பொதுத் தேர்தலில் 1957-ஆம் ஆண்டு ஈடுபடுவது என்று தீர்மானம் நிறைவேற்றிய மாநாடும் அந்த மாநாடுதான்!

உடன்பிறப்பே, இதில் ஒன்றை நினைவுபடுத்தாமல் இருக்க முடியவில்லை எனக்கு! "இந்திய அரசியல் கட்சிகளின் கொள்கைக் குழப்பம்" என்று நமது "பழைய நண்பர்" ஒருவர் சிறப்புத் தலைப்பில் பேசியதும் இந்தத் திருச்சி மாநாட்டில்தான்?

பொதுத் தேர்தலில் நாடாளுமன்றத்துக்கு இரண்டு இடங் களிலும், சட்டமன்றத்துக்கு அண்ணா தலைமையில் பதினைந்து இடங்களிலும் கழகம் வென்றது.

மீண்டும் கழக சட்ட திட்டங்களின்படி உறுப்பினர் சேர்க்கும் பணி தொடங்கப்பட்டு, 1960-ஆம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற பொதுக் குழுவில் தலைமைக் கழகத்தின் தேர்தலில் அறிஞர் அண்ணா பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அதற்குப் பிறகு கட்சிக்குள்ளே உட்பூசலை எழுப்பி, அறிஞர் அண்ணாவின் அன்புக்குப் பாத்திரமாயிருந்தவர்களே அவரை இழித்தும் பழித்தும் பேசி புதிய கட்சி தொடங்கினர். தொடங்கிய வேகத்தில் தேர்தலிலும் நின்று தோல்வியைத் தழுவினர். தழுவிய வேகத்தில் தங்கள் கட்சியைக் கலைத்துவிட்டுக் காங்கிரசோடு போய் இணைந்து கொண்டனர். இப்போது அவர்கள், எங்கெங்கே இருக்கிறார்கள் - எப்படி இருக்கிறார்கள் - காமராஜர் அவர்கள் உயிரோடு இருந்தபோது என்னென்ன பேசினார்கள் என்பதை யெல்லாம் சுலபமாகவே தெரிந்து கொள்ள முடியும். நான் விளக்கத் தேவையில்லை.

அந்த உட்பூசல் காரணமாகவும், தொடர்ந்து 1962-ஆம் ஆண்டு பொதுத்தேர்தலைச் சந்திக்க நேர்ந்ததின் காரணமாகவும் கழகத்தின் அமைப்புத்தேர்தல்கள் தள்ளிப்போடவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டதெனினும், 1961-ஆம் ஆண்டு மதுரை திருப்பரங் குன்றத்தில் கழகத்தின் மாநிலப் பொது மாநாடு அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இது மூன்றாவது மாநிலப் பொது மாநாடு ஆகும்!

1966-ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் சென்னை விருகம் பாக்கத்தில் கழகப் பொதுச் செயலாளரான அறிஞர் அண்ணா தலைமையில் நடைபெற்ற வரலாற்றுப் புகழ் மிக்க மாநாடுதான் கழகத்தின் நான்காவது பொது மாநாடு ஆகும். மூதறிஞர்

இராஜாஜி, காய்தே மில்லத், சிலம்புச் செல்வர் ஆகியோர் கலந்து கொண்ட மாநாடு அது! அந்த மாநாட்டில்தான் கழகப் பொருளாளர் பொறுப்பிலே இருந்த நான், கழகச் சார்பில் வழங்கிய பதினொரு லட்ச ரூபாய் தேர்தல் நிதியைப் பெற்றுக்கொண்ட அண்ணா அவர்கள்,

"நான் கேட்டது பத்து லட்சம்! நீ
கொடுத்தது பதினொரு லட்சம்!
தமிழ் மொழியில் உள்ள சொற்கள்
பொருள் உள்ளவை என்பதில் நான்
அசையாத நம்பிக்கை உடையவன்.
தம்பீ, உன் தாயார் உனக்கு "நிதி" என்று
பெயரிட்டதே உன்னை நாட்டு மக்கள்
நன்கு பயன்படுத்திக் கொள்ளட்டும்
என்று தான்"

என்று கொஞ்சு தமிழில் பேசியதை இன்னும் என் நெஞ்சம் மறக்கவில்லை.

1967-இல் ஆட்சிப் பொறுப்பு! அதன் பிறகு அண்ணாவின் உடல் நலிவு! 1969-பிப்ரவரி மூன்றாம் நாள் நமக்கு ஏற்பட்ட மாறாத சோகம்!

இதற்குப் பிறகும், கழகம் தனது கட்டுக் கோப்பைப் பாதுகாத்துக்கொண்டு, ஜனநாயகமுறையில் கட்சி அமைப்புக்களின் தேர்தலை நடத்தி 1969-ஆம் ஆண்டு திருத்தப்பட்ட சட்ட திட்டங்களின்படி அதே ஆண்டில் கழகத் தலைவர், பொதுச் செயலாளர், பொருளாளர், தேர்தல்களும், தலைமைக்கழக ஏனைய அமைப்புக்களின் தேர்தல்களும் நிறைவேறின.

அதன் பிறகும், கழகத்துக்குப் புதிய உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டு கழக அமைப்புக்களின் தேர்தல்கள் நடைபெற்று, 1974-ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் தலைமைக் கழகத் தேர்தல்களும் நடந்து முடிவுற்றன.

இடையிலே தவிர்க்க முடியாத நிலைமைகளால் 1960-க்கும் 1969-க்கும் இடையே, குறிப்பிட்ட கால கட்டத்தில் அமைப்புக் களின் தேர்தல்கள் நடைபெற இயலாமற் போயின.

1969-க்குப் பிறகு 1974- இல் கட்சித் தேர்தல் நடைபெற்று முடிந்தது என்றாலும், இன்னும் முன்கூட்டி நடைபெற

முடியாதவாறு 1972-இல் கழகத்தின் கட்டுப்பாடு காத்திடாத சிலர்மீது எடுத்த நடவடிக்கைகளின் காரணமாக ஏற்பட்ட பிரச்சினைகள் குறுக்கே நின்றதை யாரும் மறந்திருக்க முடியாது.

இப்போது நாம் தொடர்ந்து கடைப்பிடித்து வருகிற ஜனநாயக முறைப்படி கழக உறுப்பினர் சேர்த்தல் - புதுப்பித்தல் - அமைப்புக்கள் தேர்தல் - தலைமைக்கழகத் தேர்தல் - என்பதற்கு ஓராண்டுக் கால நேரம் தந்து நமது பொதுச் செயலாளர் டாக்டர் நாவலர் அவர்கள் அறிக்கை தந்துள்ளார்கள்.

எத்தனை இடர்பாடுகள் வரினும், நமது அமைப்புக்கள் கட்டுப் பாட்டுடன் திகழ்வதும் - ஜனநாயக முறையில் செயல்படுவதும் - அண்ணா வழியில் அமைதி காத்து ஆக்கப்பணிகளை ஆற்றுவதும் நமது கழகம் கொண்டுள்ள அரசியல் தெளிவுமிக்கப் பண்பாடாகும்.

கோவையில் நடைபெற்ற ஐந்தாவது மாநிலப் பொது மாநாட்டுக்குப் பிறகு, நமது கழகம் எத்தனையோ சூழ்நிலைகளைச் சந்திக்க வேண்டியிருந்தது-சந்தித்துக் கொண்டிருக்கிறது என்றாலும், கடமைகளை மறவாமல் கழகப் பணிகளை ஆற்றிக்கொண்டிருக்கும் - ஆற்றிட வேண்டும் - என்பதைச் சுட்டிக்காட்டுவதுதான் பொதுச்செயலாளரின் வேண்டுகோள் அறிக்கையாகும்.

“மனிதர்கள் வருவார்கள்
மனிதர்கள் போவார்கள்
நான் நிலையாக இருப்பேன்”

என்று “சிற்றருவி” கூறுவதாக பெருங் கவிஞர் டென்னிசன் எழுதியது போல்,

கழகம் நிலையாக இருக்கும்-
அமைப்பு ரீதியாக இயங்கும்-
அமைதிகாத்துப் பணிபுரியும்-

என்ற உறுதி வாய்ந்த உள்ளத்தோடு, உடன்பிறப்பே, நீ செயல்பட வேண்டுகிறேன்.

அன்புள்ள,

**மு. க.**

17-04-1976

# 203. வினாக்கள் குடைகின்றன, விடைதான் கிடைக்கவில்லை!

**உடன்பிறப்பே,**

- ☐ தி. மு. கழகத்தினரை இருபது அடி நீளக் குச்சியால் கூடத் தொடுவதற்கு மக்கள் கூச்சப்படுவார்கள்.
- ☐ தி. மு. க. வினர் ஜனநாயக முறைகளை அசிங்கப்படுத்தி விட்டனர்.
- ☐ தி. மு. க. ஒரு அரசியல் எதிரி மட்டுமல்ல. அது ஒரு ஊழல் புழு.
- ☐ தி. மு. க. புரையோடிக் கிடக்கும் புற்று நோயைப் போன்றது.
- ☐ தி. மு. க. அரசியலில் இருந்தே அடியோடு ஒழிக்கப்பட வேண்டும்.

தரம் வாய்ந்த தஞ்சைமண்ணில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி கூடியபோது தரம் வாய்ந்த கருப்பையா மூப்பனார் அவர்களின் தலைமையில் அகில இந்திய காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. டி. கே. பரூவா அவர்கள் பேசிய பேச்சில் சிந்திய மணிவாசகங்கள்தான் மேலே காணப்படுபவை.

திரு. பரூவா அவர்களுக்கு ஏன் இவ்வளவு கோபம் என்று எனக்குப் புரியவில்லை.

தமிழ்நாட்டில் தி. மு. க. அரசை மாற்றிக் குடியரசுத் தலைவர் ஆட்சி நடைபெறத் தொடங்கி இரண்டரை மாதங்களுக்கு மேலாகிவிட்டது. பரூவா அவர்களின் கணக்குப்படி, அல்லது அவருக்குத் தரப்பட்டுள்ள புள்ளி விவரப்படி தி. மு. க. அடியோடு ஒழிந்துவிட்டது. அதாவது இரண்டு காங்கிரஸ் இணைப்புக்கு இடையூறாக இருக்கிறது என்று குற்றம் சாட்டப்பட்ட தி. மு. க. ஆட்சியும், தி. மு. கழகமும் வேரோடும், வேரடி மண்ணோடும்

வீழ்த்தப்பட்டு, இனிமேல் தலை தூக்க முடியாமல் தரைமட்டமாக ஆக்கப்பட்டுவிட்டது. இணைப்புக்குக் குறுக்கே நின்றதாகக் கருதப்பட்டு குற்றவாளிக் கூண்டில் ஏற்றப்பட்ட தி. மு. கழகம், தண்டிக்கப்பட்ட பிறகு இரு காங்கிரசும் இரண்டறக் கலந்து திரு. பி. ராமச்சந்திரன் தலைமையில் உள்ள நிறுவனக் காங்கிரஸ் கட்சியில் ஆளே இல்லாமல் போய், எல்லோருமே புதுக் காங்கிரசில் இரு கடல் இணைந்ததுபோல் இணைந்து விட்டனர்.

இப்படிப்பட்ட மகத்தான வெற்றியும், செல்லுமிடமெங்கும் சிறப்பான வரவேற்பும், விமான நிலையங்கள், ரயிலடிகள் எங்கணுமே மக்களின் வெள்ளமும் நிரம்பி வழிகிற அளவுக்கு மாபெரும் ஆதரவும் பரூவா அவர்களின் தலைமையில் உள்ள தமிழ்நாடு காங்கிரஸ் கட்சிக்குத் தன்னாலேயே உருவாகியிருக்கிறபோது, அவரது கருத்துப்படி அழிந்து போய்விட்ட கழகத்தின் மீது அவருக்கு இவ்வளவு கோபம் பொங்குவானேன்?

பரூவாவை நான் அறிவேன். நானும் நண்பர் மாதவன் அவர் களும் டெல்லிக்குப் போகும் போதெல்லாம் மத்திய அமைச்சராக இருந்த திரு. பரூவா அவர்களை சந்திக்கத் தவறியதே இல்லை. நீண்ட நேரம் எங்களுடன் இன்முகத்துடன் உரையாடுவார். சில சமயம் எங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட அடுத்த நிகழ்ச்சிக்குக் கூட காலதாமதம் ஆகிவிடும், அவ்வளவு சுவையாகப் பேசிக் கொண்டேயிருப்பார். நேரம் போவதுகூடத் தெரியாமல்! தமிழ் நாட்டுத் தேவைகளை அவரிடம் நாங்கள் அரசின் சார்பில் எடுத்துச் சொல்லும்போது அனுதாபத்துடன் கேட்டு ஆவன செய்திட முயற்சிப்பதாக உறுதி அளிப்பார். பழகுதற்கினிய அந்தப் பண்பாளருக்கு இப்படி ஒரு "பதைப்பு" ஏன் ஏற்பட்டது என்பதுதான் எனக்குப் புரியவில்லை.

எந்த ஒரு அரசியல் கட்சியிலும் சிலபேர் காரசாரமாகவும், "எடுத்தேன் கவிழ்த்தேன்" என்றும்; எதிர்க்கட்சிகளைப் பற்றிச் சுடுசொல் வீசக்கூடியவர்களாகவும் இருப்பார்கள். ஆனால் அந்தக் கட்சியின் பொறுப்புக்கு வந்த பிறகு, அல்லது அனுபவத்தின் காரணமாகப் பண்பட்ட பிறகு கட்சியின் முக்கிய இடங்களிலே வீற்றிருப்பவர்கள்.

*"அவையறிந்து ஆராய்ந்து சொல்லுக சொல்லின்*
*தொகையறிந்த தூய்மை யவர்"*

என்ற குறளுக்கொப்பவே நடந்துகொள்ள முனைவார்கள். கோபத்திலோ, வேகத்திலோ, வார்த்தை தவறி வருதல் Slip of the Tongue அல்லது ஆவேசமாகவே ஒரு வார்த்தையைத் தவிர்க்க முடியாத சூழ்நிலையில் கூறிவிடுதல், அல்லது சீற்றத்தை வேண்டுமென்றே ஒரு வார்த்தையின் வாயிலாக வெளிக்காட்டுதல், இவைகூட அரசியல்வாதிகள் பேச்சில் ஏற்பட்டு விடக்கூடிய நிலைமைகளாகும். 1967-இல் கழகம் வெற்றி பெற்று அண்ணா தலைமையில் ஆளும் பொறுப்பேற்கும் வாய்ப்பு ஏற்பட்டபோது பெரியவர் பக்தவத்சலம் கூட "விஷக்கிருமிகள்" என்ற சொல்லைப் பயன்படுத்தியதாகச் செய்திகள் வெளிவந்து, அதற்குப் பிறகு அதனை மறுத்து ஒரு தன்னிலை விளக்கம் வழங்கியதின் மூலம் தனது அரசியல் பண்பாட்டை வெளிப்படுத்தினார்.

ஆனால் தஞ்சை நகர்க் கூட்டத்தில் அகில இந்திய காங்கிரஸ் தலைவர் பரூவா அவர்கள் போர்க்களத்தில் நிராயுதபாணியாக நிற்பவனை நோக்கி அக்கினியாஸ்திரம், வாயு வாஸ்திரம், பிரம்மாஸ்திரம், நாகாஸ்திரம் போன்றவைகளைத் தொடுக்கும் சீற்றமிகு தளபதியாக ஏன் தன்னை மாற்றிக்கொண்டார் என்பதுதான் எனக்கு வியப்புக்கு மேல் வியப்பை அளிக்கிறது.

உடன்பிறப்பே, இருபது அடிக்குச்சியால் கூட நம்மைத் தொடுவதற்கு மக்கள் கூச்சப்படுவார்கள் என்று அவர் பேசியிருக்கிறார். பார்ப்பதற்கே கூச்சப்பட்டு புறக்கணிக்கப்பட்ட தொழுநோய்ப் பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வு அளிக்கப் பரனூர் முதலிய பத்து இடங்களில் மறுவாழ்வு இல்லங்களை அமைத்த நமக்கு மேன்மைமிகு பரூவா அவர்கள் வழங்கும் பரிசு இது!

டெல்லி சென்றபோதெல்லாம் என் கையை அவர் குலுக்கியிருக்கிறார்.

நானும் அவர் கரம் பற்றி விடைபெற்றுக் கொண்டிருக்கிறேன். இப்போதோ தொடவே கூச்சமாயிருக்கிறது என்கிறார்.

அவர் சாதாரணமானவர் அல்ல! மத்திய அரசில் அமைச்சர் பொறுப்பேற்பதற்கு முன்பே அஸ்ஸாம் மாநிலத்தில் அமைச்சராக இருந்து பெரும் புகழ்பெற்றவர், திடீரென பொறுப்பான இடத்துக்கு வந்தவரல்ல! அவரா இவ்வளவு இழிவாக ஒரு அரசியல் கட்சியைப் பற்றி பேசினார் என்று படித்திடும்போது நம் விழிகளையே நம்மால் நம்ப முடியவில்லையே!

"ஜனநாயக முறைகளை தி. மு. கழகம் அசிங்கப்படுத்தி விட்டது" என்று அவர் கூறியிருப்பதைக் காணும்போது அழுவதா, சிரிப்பதா என்றே எனக்குத் தெரியவில்லை. சட்டமன்ற மேலவையில் அண்மைக் காலம் வரையில் ஜனநாயக இலக் கணத்தைப் பற்றி விரிவாகப் பேசிய தஞ்சை நண்பர் சாமிநாதனைப் போன்றவர்களின் பேச்சு, நடவடிக்கைக் குறிப்புக்களிலே தானிருக்கிறது. இரண்டொரு நாட்களுக்கு முன்புகூடப் படித்துப் பார்த்தேன் அந்தக் குறிப்புக்களை!

தி. மு. க. அரசியல் எதிரி மட்டுமல்ல;

அது ஒரு ஊழல் புழு!

புரையோடிக் கிடக்கும் புற்றுநோய்!

அரசியலில் இருந்தே அடியோடு ஒழிக்கப்பட வேண்டும்!

இந்த வாசகங்களுக்குச் சொந்தக்காரர், திரு. பரூவா அவர்கள்தானா? என்று பத்திரிகைகளை மீண்டும் மீண்டும் கவனமாகப் பார்த்தேன். ஆம், அவரேதான் பேசியிருக்கிறார்.

உடன்பிறப்பே, எனக்கு ஒரு ஐயப்பாடு! வாதத்திற்காகக் கேட்கிறேன்-ஒரு கட்சியில் சிலர் மீது ஊழல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு விடுவதாலேயே அந்தக் கட்சியே ஊழல் புழுவாக ஆகிவிடுமா? புற்று நோயாகப் போய்விடுமா? புரையோடும் புண்ணாக மாறிவிடுமா? பஞ்சாப்பின் பழைய முதல்வர் பிரதாப்சிங் கெய்ரான்மீது குற்றம் நிரூபிக்கப்பட்டதாக நீதிபதி அறிவித்தார். அதற்காக அவர் இணைந்திருந்த காங்கிரஸ் கட்சியின் புனிதமே கெட்டுவிட்டது. புற்று நோயாக அந்தக் கட்சியே ஆகிவிட்டது என்று சொல்ல முடியுமா?

ஒரு சிலர் தவறே செய்ததாக நியாயமாக நிரூபிக்கப்பட்டா லுங்கூட அந்தச் சிலர்தான் ஒரு கட்சியல்லவே-இலட்சோப இலட்சம் உறுப்பினர்களையும், தொண்டர்களையும், அமைப்புக் களையும், அவைகளின் தலைவர்களையும் கொண்டு இயங்குகிற ஒரு கட்சியையே புழுவென்றும், புரையோடிய புண் என்றும், புற்றுநோய் என்றும் சாடுகிற அளவுக்கு பரூவா அவர்களுக்குப் பதட்டம் ஏன் ஏற்பட்டது?

இந்தியாவின் மிகப் பெரிய கட்சியின் தலைவர், அனைத்துலக அரசியல்வாதிகளின் கவனத்தைக் கவரத்தக்க இடத்தில்

அமர்ந்திருப்பவர், அவருடைய நாவினாலா இதுபோன்ற "நாமாவளி" பாடப்படுவது? நம்மை 'அழுக்குப் பொருள்' என்கிறாரே என்பதற்காக நான் வருந்தவில்லை, இந்தப் பேச்சின் காரணமாகப் புகழ் வாய்ந்த அவருக்கு ஒரு 'இழுக்கு' ஏற்பட்டுவிடக் கூடாதே என்பது தான் என் கவலை!

"இருபது அம்சத் திட்டத்தைப் பயன்படுத்தி, தி. மு. க.வை சமாளிக்க வேண்டும்" என்றும் கூறியிருக்கிறார்! இருபது அம்சத் திட்டத்துக்கு தி. மு. க. விரோதியல்ல! அந்தத் திட்டம் அறிவிக்கப்பட்டபோதே அதனை இதயமார வரவேற்ற கட்சிதான் தி. மு. கழகம்.

தி. மு. க.வை சமாளிக்கவேண்டும் என்கிற சாதாரண காரியத்துக்காக இந்தியப் பிரதமர் அவர்கள் இவ்வளவு பெரிய திட்டத்தைக் கொண்டு வரவில்லை. நாட்டு மக்களின் துயர் துடைக்க, கட்டுப்பாடு வளர, ஏழைகளின் இன்னல் விலக, அறிவிக்கப்பட்ட பொருளாதார திட்டம் அது! அந்தத் திட்டத்துடன் ஒத்துழைக்க என்றுமே தி. மு. க. தயாராகத் தானிருக்கிறது அரசுப் பொறுப்பில் இருந்த கழகம். அந்தத் திட்டங்களைத் தன்னால் இயன்ற வரையில் நடைமுறைப்படுத்தி, அதற்கான புள்ளிவிவரங்களையும் அப்போதே வழங்கியிருக்கிறது.

அந்தத் திட்டத்தை வைத்துக்கொண்டு தி. மு. க. வை சமாளிக்க வேண்டும் என்பது அந்தத் திட்டத்தின் நோக்கத்தையே திசை திருப்புவதாக ஆகிவிடுமோ என நான் அஞ்சுகிறேன்! பிரதமரின் எண்ணம், நிச்சயமாக அதுவல்ல!

ஒரு எதிர்க்கட்சி என்ற முறையில் மற்ற கட்சிகளை விமர்சிப்பது போல தி. மு. கழகத்தையும் அதன் கொள்கைகளையும் கடுமையாகக்கூட விமர்சிக்கலாம். அதற்காக ஒரு கட்சியையே அடியோடு அழித்துவிட வேண்டும், பூண்டற்றுப் போகச் செய்துவிட வேண்டும் என்று சபதம் செய்து கொண்டு புறப்பட்டால்,

முதலில் தி. மு. க.

சரி, முடிந்தது கதை!

அடுத்தது எது?

அதற்குப் பிறகு எது?

என்ற அளவுக்கு "ருசி" ஏற்பட்டு விடக்கூடும். அதனால் எதிர்க் கட்சிகளே இல்லாமற் போய்விடக்கூடும். அப்படி ஒரே கட்சி என்ற நிலையை பிரதமர் அவர்கள் விரும்பவே இல்லை. பிரதமர் அவர்கள், கட்சிகள் சிலவற்றின்மீது தனக்குள்ள கருத்து வேறுபாடுகளைத் தெரிவிக்கிறார்களே தவிர, திரு. பரூவா அவர்களைப்போல் ஒரு அரசியல் கட்சி அறவே ஒழிக்கப்பட வேண்டுமென்று எள்ளளவு எண்ணமும் கொண்டிருப்பதாகத் தெரியவில்லை.

நிதானப் போக்கும், அவசரமின்றி எதையும் சிந்தித்துச் செயல்படும் இயல்பும், இன்னாத கூறுவதை விடுத்து இனியவை களையே கூறுகிற பண்பும் படைத்த பரூவா அவர்கள், இவ்வளவு படபடப்பாகப் பேசியதற்கு எதுதான் காரணமாக இருக்க முடியும்?

நினைத்து நினைத்துப் பார்க்கிறேன்; எனக்கு விளங்கவே இல்லை!

தி. மு. க. இன்னும் பலமாக இருக்கிறது என்று யாராவது "தவறான தகவலை" அவரிடத்தில் சொல்லியிருப்பார்களா?

நிறுவனக் காங்கிரசார் இன்னும் சிலர் இணைவதற்குத் தடை யாக, தி. மு. க. தான் நிற்கிறது என்று அவர் இன்னமும் நம்புகிறாரா?

வினாக்கள் என்னைக் குடைகின்றன! விடைதான் கிடைக்க வில்லை.

நான் அன்போடும், அண்ணா கற்றுத்தந்த கனிவோடும், திரு. பரூவா அவர்களைக் கேட்டுக்கொள்வேன், அடுத்த முறை தமிழகம் வரும்போதாவது கோபமில்லாமல் வரவேண்டுமென்று!

தி. மு. க. வன்முறை இயக்கமல்ல! பிரிவினை இயக்கமல்ல! ஒருமைப்பாட்டுக்கு விரோதமான கட்சியல்ல! அமைதி நாடும் இயக்கம்! அண்ணா வழியில் நடைபோடும் இயக்கம்!

கடைசியாகச் சொல்லுகிறேன்.

கழகம் கருத்து மோதல்களை வரவேற்கும்.

கண்டனக் கணைகளைப் பொறுத்துக்கொள்ளும்.

அன்புள்ள,

**மு. க.**

18-04-1976

# 204. வாய்ப்பந்தல் நிலைக்காது!

**உடன்பிறப்பே,**

தமிழ் நாட்டிலேயுள்ள இந்தியக் கம்யூனிஸ்டுகளுக்கு, யார்மீது கோபம் வந்தாலும் உடனே அவர்களை "அமெரிக்க ஏஜெண்டு" சி. ஐ. ஏவுக்கு தொடர்புடையவர்கள் என்று குற்றம் சாட்டுவதிலே ஒரு தனியான சுவை!

அவர்களுடைய பேச்சுக்களானாலும், அல்லது அவர் தம் கட்சிப் பத்திரிகைகளானாலும் இடைவிடாமல் இந்தப் பிரச்சாரத்தையே என்மீதும், நமது கழகத்தின் மீதும் செய்து கொண்டிருப்பதை நீ கவனித்துக் கொண்டு தானிருக்கிறாய்.

"வடிவேலருக்கு வந்த வாழ்வு" என்று நான் எழுதிய சிறிய நாடகத்தைப் படித்துவிட்டு அதற்குப் பதில் அளிக்கும் வகையில் எந்த வாதத்தையும் எடுத்து வைக்காமல், வாதங்களை எடுத்துவைக்கும் "வக்கோ, வகையோ" இல்லாமல், "ஆகா! கருணாநிதி ஒரு அமெரிக்க ஏஜெண்டு!" என்று அலறியிருக்கிறார்கள்.

ஒரு காலத்தில் கம்யூனிஸ்டுகள் வாதம் செய்வதில் வல்லவர்களாக இருந்தார்கள். வாதத்திறமைமிக்க அந்த வல்லவர்கள், இப்போதும் வாழ்ந்துகொண்டுதானிருக்கிறார்கள் என்றாலும், வாதத்திற்கான 'சரக்கு' அவர்களிடத்திலே இல்லாத காரணத்தால் வெறும் மண்ணை வாரித் தூற்றும் காரியத்திலே ஈடுபட்டிருக்கிறார்கள்.

இந்திய கம்யூனிஸ்டு கட்சியில் திறமைசாலிகளுக்குப் பஞ்சமில்லை. நல்ல வழக்கறிஞர்கள் இருக்கிறார்கள். திட்டங்கள் தீட்டக்கூடிய ஆற்றலாளர்கள் அங்கே உண்டு. தொய்வின்றித் தொடர்புகெடாமல் விஷயங்களை விளக்கக் கூடிய எழுத்தாளர்களும், பேச்சாளர்களும் அந்தக் கட்சியில் இருக்கிறார்கள்.

அவர்களையெல்லாம் நான் மிக நெருங்கிப் பழகிக்கூட அனுபவ ரீதியாக அறிந்து கொண்டவன். ஆனால் அவர்கள் எப்படியும் தி. மு. கழகத்தை அழித்துவிட வேண்டும் என்ற ஆத்திரத்தில் 'சுருதி'யைவிட்டுச் சங்கீதம் பாடிக் கொண்டிருக்கிறார்கள்.

வாதங்களை அடுக்குவதற்குப் பதில் அபவாதங்களை நம்மீது அள்ளி வீசுகிறார்கள்.

கொள்கைகளை விளக்குவதற்குப் பதில் கோணல் வழியில் குறுக்கு வழியில் தாக்குதல்களை நடத்துகிறார்கள்.

தி. மு. கழகத் தலைவர்களோ, அல்லது கழகத்தினரோ அமெரிக்க ஏஜெண்டாக இருக்கவும் விரும்பவில்லை. ரஷ்யாவின் ஏஜெண்டாகவும் இருக்க விரும்பவில்லை.

எந்த ஒரு வெளிநாட்டுக்கும் ஏஜண்டாக இருந்து கொண்டு அந்த நாட்டு ஆதிக்கம் மறைமுகமாகவும், மெல்ல மெல்லவும், இந்தியாவில் பரவுவதற்கு யார் வழி வகுத்தாலும், யார் துணை போனாலும், அந்தக் கூட்டத்தைத் துரோகக் கூட்டம் என்று தி. மு. கழகம், திட்டவட்டமாகக் கருதுகிறது.

தி. மு. கழகத்தின் வெளிநாட்டுக் கொள்கை மிகத் தெளிவானது. இந்தியப் பேரரசு வகுக்கின்ற வெளிநாட்டுக் கொள்கைகளுக்கு முழு ஆதரவைத் தொடர்ந்து வழங்கி வந்திருப்பதுதான் தி. மு. கழகத்தின் வரலாற்றில் காணக் கிடைக்கும் உண்மையாகும்.

அந்த உண்மையை மறைப்பதற்காக இந்திய கம்யூனிஸ்டுகள் மிகப்பலமான முயற்சிகளைச் செய்து வருகிறார்கள்.

சீன நாட்டுக்கும்-இந்திய நாட்டுக்கும் 1962ஆம் ஆண்டு போர் மூண்டபோது தி. மு. க. எடுத்தநிலை என்ன?
அதுவும் எப்படிப்பட்ட சூழ்நிலையில்?

இருபதாயிரத்து மேற்பட்ட கழகத் தோழர்கள், அண்ணா முதலிய கழகத் தலைவர்கள் சிறையில் இருந்த போது!

நமது கழகக் கண்மணிகளாம் கோ. சு. மணியும், பொற் செழியனும் சிறைச்சாலையில் மறைந்தபோது!

சீனா இந்தியாமீது நடத்திய ஆக்ரமிப்பை எதிர்த்து பிரதமர் பண்டித நேருவின் கழகத்தைப் பலப்படுத்துவோம் என்று முழக்க மிட்டோம்.

சிறையில் அனுபவிக்க வேண்டிய தண்டனை காலம் முடிந்து வெளியே வந்தவுடன், போர் நிதி திரட்டுகிற பணியில் கழகம் தீவிரமாக ஈடுபட்டு-திரட்டிய தொகையையும் அண்ணா பேசிய கூட்டத்தில் வழங்கப்பட்ட தங்க நகைகளையும், நானும் நாவலரும் அன்றைய முதலமைச்சர் காமராஜர் அவர்கள் இல்லம்சென்று அவரிடத்திலேயே ஒப்படைத்துவிட்டு வந்தோம்.

எதிர்க்கட்சியாக இருந்து கொண்டே தி. மு. கழகம் வழங்கிய ஒத்துழைப்புக்கு எடுத்துக்காட்டு அது!

14 ஆண்டுகளுக்குப் பிறகு இப்போது நமது இந்திய அரசும், சீன அரசும் தங்கள் தங்கள் நாடுகளுக்குத் தூதர்களை ஏற்றுக்கொள்ளும் என்று அறிவிக்கப்பட்டுள்ள முடிவும் நம்மை மகிழ்ச்சியில் ஆழ்த்துவது மட்டுமல்ல; இந்திய அரசு வெளிநாட்டுக் கொள்கையில் கடைப்பிடிக்கும் போற்றத்தகுந்த திறமைக்கு எடுத்துக்காட்டாகவும் விளங்குகிறது.

இதிலிருந்து, இந்திய அரசு வெளிநாட்டு விவகாரத்தில் எடுக்கும் முடிவுகளை நமது கழகம் என்றைக்குமே ஆதரித்து வந்திருக்கிறது என்பது தெளிவாகும்.

பாகிஸ்தான் போரின் போதும், அதற்குப் பிறகு ஏற்பட்ட 'பங்களாதேஷ்' போரின் போதும் கழகம், எந்த அளவுக்குத் தன் பங்கினைச் செலுத்தியிருக்கிறது என்பதை நாடறியும்; நடுநிலையோடு சிந்திப்போர் அறிவர்.

உடன்பிறப்பே, நான் மறந்துவிட்டேன் என்று கருதிக் கொண்டிருக்கிறார்கள், இந்தியக் கம்யூனிஸ்டுகள்!

1962ஆம் ஆண்டு சீன ஆக்ரமிப்பின்போது தமிழக சட்டப் பேரவையில் பெரியவர் பக்தவத்சலம் கொண்டு வந்த தீர்மானத்தை ஆதரித்துக் கழகச் சார்பில் நான் உரையாற்றினேன்.

தீர்மானத்தை ஆதரிப்பதாகக் கூறிக்கொண்டு இன்றைய இந்தியக் கம்யூனிஸ்டுத் தலைவர் அன்றைக்கு, சபையில் என்ன பேசினார் என்பதும்; அவர் பேச்சின் போக்கை விரும்பாமல் அவையில் ஏன் குறுக்கீடுகள் ஏற்பட்டன என்பதும் எனக்கு நன்றாக நினைவிருக்கிறது...

வேளைக்கு வேளை தங்கள் கட்சியின் இஷ்டத்துக்கு வெளிநாட்டுக் கொள்கையை மாற்றிக் கொள்கிறவர்கள் அவர்கள்!

எந்த நேரத்திலும் வெளிநாட்டு விவகாரத்தில் இந்திய அரசின் பக்கமிருப்பவர்கள் நாம்!

நம்மை, சி. ஐ. ஏ. நண்பர்கள் என்பதற்கும், அமெரிக்க ஏஜெண்டுகள் என்பதற்கும் அவர்கள் கூறும் காரணங்கள் என்ன தெரியுமா?

- ☐ நான் முதலமைச்சராக இருக்கும்போது அமெரிக்க தூதர்கள் கால்பிரெய்த்தும், மொய்னிகனும் என்னை வந்து சந்தித்தார்களாம்!
- ☐ நான் அமெரிக்காவுக்குப் போய்விட்டு வந்தேனாம்!
- ☐ அமெரிக்காவை நாம் கண்டித்ததே யில்லையாம்!
- ☐ இந்திய சோவியத் நட்புறவுக் கழகத்தில் அண்ணா கலந்துகொண்டாராம்.
- ☐ நான் சோவியத் யூனியனைப் புகழ்ந்து பேசியதே இல்லையாம்!
- ☐ சோவியத் யூனியன் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டதே யில்லையாம்!

அதனால் அண்ணா, சோவியத்துக்கு நண்பராம். நான் பகைவனாம்! அமெரிக்காவுக்கு நான் நண்பனாம்!

எப்படிப்பட்ட சொத்தையான வாதங்கள் பார்த்தாயா.

சொத்தையானவை மட்டுமல்ல; உண்மைக்கு மாறான வையுங்கூட!

அமெரிக்க தூதர்கள் என்னை வந்து சந்தித்தது குற்ற மென்றால், அறிஞர் அண்ணா முதல்வராக இருந்தபோதும் அவர்கள் அவரைச் சந்தித்திருக்கிறார்களே!

அண்ணா, 'யேல்' பல்கலைக் கழக அழைப்பின் பேரிலும் அமெரிக்க அரசின் அழைப்பின் பேரிலும் அங்குச் சென்று வந்திருக்கிறாரே!

நான் முதல்வராக இருந்தபோது அமெரிக்க நாட்டுக்காரர்கள் மட்டுமல்ல; சோவியத் யூனியன் போன்ற கம்யூனிச நாட்டுக் காரர்களும் என்னை வந்து சந்தித்திருக்கிறார்கள்!

சோவியத் சம்பந்தப்பட்ட எந்த நிகழ்ச்சியிலும் நான் கலந்து கொண்டதில்லையாம்!

இதோ, பார் படங்களை!

நான் முதல்வராக இருந்தபோது 1970ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 28ஆம் நாள் சென்னை கோகலே மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியின் படங்கள்!

சோவியத்தின் வானவெளி வீரர்கள்-வாலிநோவ், குர்நோவ் ஆகிய இருவருக்கும் நடைபெற்ற பாராட்டு விழா!

"செம்பட்டுப் பதாகை" யொன்றை நான் பரிசாக அளிக்கும் விழா!

சிலம்புச் செல்வர், கவிஞர் கண்ணதாசன், எம். கல்யாணசுந்தரம், ஏ. எஸ். கே. அய்யங்கார் ஆகியோர் கலந்துகொண்ட கூட்டம்.

நான் பரிசுகளை வழங்கிப் பாராட்டுரை நிகழ்த்தினேன்.

நண்பர்கள் கல்யாணசுந்தரமும், ஏ. எஸ். கே. அய்யங்காரும் முன்நின்று நடத்திய விழா!

ஆம்; 1970 நவம்பர் 28ஆம் நாள்! அதாவது 1971ஆம் ஆண்டுத் தேர்தலுக்கு இரண்டொரு மாதங்களுக்கு முன்பு!

உடன்பிறப்பே! சோவியத் யூனியனுக்குச் சென்று திரும்பிய பெரியார் அவர்கள் தமிழகத்தில் பொதுவுடைமைத் தத்துவங்களைப் பரப்பத் தொடங்கிய காலந்தொட்டு, பேரறிஞர் அண்ணா அவர்கள் சமதர்மக் கொள்கைகளை எழுத்திலும், பேச்சிலும், செயலிலும் காட்டுவதற்கு நம்மைத் தயாரித்து இயங்க விட்டுள்ள இந்தக் காலம் வரையில், நமக்கு மார்க்ஸ், லெனின் கொள்கைகளிலே குறையாத ஈடுபாடு உண்டு!

அந்த இலட்சியங்களை ஜனநாயக முறையில்தான் நிறை வேற்ற வேண்டும் என்ற தெளிவும் உண்டு.

திசை திருப்புவதற்காக இந்தியக் கம்யூனிஸ்டுகள் நடத்தும் பொய்ப் பிரச்சாரம், மக்கள் மத்தியில் நிச்சயம் மதிப்பைப் பெற முடியாது.

"நான் அமெரிக்க எதிர்ப்பாளர் அல்ல! என் தந்தை பண்டித நேருவும் அமெரிக்க எதிர்ப்பாளர் அல்ல!"

என்று இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள், "சான்பிரான்சிஸ்கோ எக்ஸாமினர்" என்ற பத்திரிகை நிருபருக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டிருப்பதாக நேற்று முன்தினம் ஏடுகளில் செய்தி வெளிவந்துள்ளது.

சீன நாட்டுக்கு இந்திய தூதர் அனுப்பப்படுகிறார், அதுபோல சீனத் தூதர் இந்தியாவுக்கு வர இருக்கிறார்.

சோவியத் யூனியனுடன் இந்தியா நட்புறவு கொண்டுள்ளது.

இதுபோன்ற வெளிநாட்டுக் கொள்கைப் பிரச்சினையில் இந்திய அரசு அவ்வப்போது பொருத்தமான, தேவையான முடிவுகளை எடுக்கும்போது, கழகம் இந்திய அரசின் பக்கம்தான் இருந்து வந்திருக்கிறது! இனியும் இருக்கும்!-இடையில் இந்தியக் கம்யூனிஸ்டுகள் போடும் வாய்ப் பந்தல் நிற்காது! நிலைக்காது!!

அன்புள்ள,

**மு. க.**

21-04-1976

# 205. உண்மை உறங்கிவிடுவதில்லை!

**உடன்பிறப்பே,**

"BUSINESS STANDARD" பிசினஸ் ஸ்டாண்டர்டு என்று ஒரு ஆங்கில நாளேடு கல்கத்தாவிலிருந்து வெளி வருகிறது. இந்தியாவில் இருபது அம்சத்திட்டம் அறிவிக்கப்பட்ட பிறகு பல்வேறு மாநிலங்களில் எத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதனை ஆய்ந்து புள்ளி விபரங்களோடு அறிவிக்கும் பணியினை அது செய்து வருகிறது. "எமர்ஜென்சி"யை நாம் ஏற்காவிடினும் இருபது அம்சத் திட்டம் என்பது வரவேற்கத் தக்க ஒன்று என்று அந்தத் திட்டத்தை இந்தியப் பிரதமர் அவர்கள், வானொலியில் அறிவித்தபோதே நாம் குறிப்பிட்டிருக்கிறோம்! அவைகளில் பெரும்பான்மையானவற்றை இயன்றவரையில் கழக அரசு, நிறைவேற்றத் தொடங்கியிருக்கிறது என்றும் மகிழ்ச்சியுடன் அறிவித்தோம். இருபது அம்சத் திட்டத்தில் மைய இழையாக ஓடிக்கொண்டிருக்கிற ஒன்று வேலைவாய்ப்பு என்பதை யாரும் மறுக்க முடியாது. அந்த வேலைவாய்ப்பு அளிக்கும் பணியில் கழக அரசு, தன் கடமையைத் தொடர்ந்து-தன்னால் முடிந்த அளவு செய்தது என்பது மட்டுமல்ல, 1975-ஆம் ஆண்டு, இருபது அம்சத் திட்ட அறிவிப்புக்குப் பிறகு வேலைவாய்ப்புக்களை வழங்குவதில் தமிழகம் முதல் வரிசையில் நிற்கக்கூடிய தகுதியையும் உருவாக்கிக் காட்டியிருக்கிறது. இதனை நாம் சொன்னால், இங்கேயிருப்பவர்கள் ஒத்துக்கொள்ள மாட்டார்கள். கழக அரசு, இருபது அம்சத்திட்டத்தை செயல்படுத்தவேயில்லை என்று கண்டனம்செய்து கொண்டிருந்தன இங்குள்ள சில கட்சிகள்!

அந்தக் கண்டனம் தவறானது என்பதைச் சுட்டிக் காட்டவும், வேண்டுமென்றே கழக அரசின் மீது இங்குள்ளவர்கள் செய்த பிரச்சாரம் என்பதை விளக்கிடவும் ஏற்றவகையில் இதோ, கல்கத்தா ஏட்டில் வந்துள்ள ஒரு புள்ளி விபரத்தை உன் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

1976 ஏப்ரல் 19-ஆம் நாள் அந்த இதழில் வெளிவந்துள்ள புள்ளி விபரக் குறிப்புகள்தான் இவைகள்.

முதல் படம் 1975-ஜூலை முதல் தேதியிலிருந்து டிசம்பர் 31-ஆம் தேதி வரையில் ஆறுமாத காலத்தில் இந்தியாவில் வேலைவாய்ப்பு அளிக்கப்பட்ட விபரங்களை வெளிப்படுத்துவதாகும்.

இருபது அம்சத் திட்டம் பிரகடனப்படுத்தப்பட்ட பிறகு-நெருக்கடி காலத்தில் ஆறு மாதங்களில் தமிழ்நாட்டில் வேலை வாய்ப்புப் பெற்றோர் 21,680 பேர்! தமிழ்நாட்டின் மக்கள் தொகை சுமார் 4 கோடி! உத்திரபிரதேச மக்கள் தொகை சுமார் எட்டு கோடியைத் தாண்டுகிறது. அங்கே அந்த ஆறு மாதங்களில் வேலைவாய்ப்பு பெற்றோர் தமிழ்நாட்டை விடக் குறைவு - 21549 பேர்! ஆந்திரத்தில் 19436 பேர்! மராட்டியம் 17498 பேர்! மத்தியப்பிரதேசம் 17732 பேர்! பஞ்சாப் 14445 பேர்! முழுமையான விபரம் படத்திலேயே இருப்பதால் நீயே மற்ற மாநிலங்களை பற்றித் தெரிந்து கொள்ளலாம்.

1976 ஏப்ரல் 18-ஆம் நாளன்று அந்தக் கல்கத்தா ஏடு மற்றொரு படத்தை வெளியிட்டுள்ளது. 1976-ஆம் ஆண்டு ஜனவரி 31-ஆம் நாளன்று இந்தியா முழுமையும் மின் வசதி செய்யப்பட்ட கிராமங்களைப் பற்றிய தகவல் தரும் புள்ளி விபரப் படம் அது!

இந்த வரிசையில் அரியானா மாநிலம் முதல் இடத்தைப் பெற்றுள்ளது! இரண்டாவது இடத்தைத் தமிழ்நாடு பெற்றுள்ளது! உனக்கு, முன்பே நான் நினைவூட்டியிருக்கிறேன், அரியானாவின் மக்கள் தொகை சுமார் ஒரு கோடி! தமிழ்நாட்டின் மக்கள் தொகை அரியானாவைவிட நான்கு பங்கு அதிகம்! அரியானாவில் சட்டமன்ற தொகுதிகள் 81 தான்! தமிழ் நாட்டில் 234 தொகுதிகள்!

இந்தக் கணக்கின்படிப் பார்த்தால் இந்திய மாநிலங்களிலேயே கிராமங்களுக்கு மின்வசதி செய்து கொடுத்ததில் தமிழ்நாடுதான் முதலிடம் வகிப்பதாகச் சொல்ல வேண்டும். அரியானா 100 சதவிகிதம்! தமிழ்நாடு 98 சதவிகிதம்! கேரளா 94 சதவிகிதம்! மற்ற மாநிலங்கள் பற்றிய சதவிகிதக் குறிப்புக்களை, இத்துடன் நான் இணைத்துள்ள படம், செம்மையாக விளக்கிடும். அகில இந்திய சராசரி 30 சதவிகிதம் என்பதையும் குறைவாக எத்தனை

மாநிலங்கள் இருக்கின்றன என்பதையும் உன்னிப்பாகக் கவனி!

1970-ஆம் ஆண்டில், தமிழ்நாடு முழுவதும் எல்லா கிராமங்களுக்கும் மின்வசதி செய்து தருவது என்ற தீவிரத் திட்டத்தின் வாயிலாகத்தான் கழக அரசு, இந்த மகத்தான சாதனையைச் செய்ய முடிந்திருக்கிறது;

இந்த இரண்டு படங்களின் மூலம் கல்கத்தா ஏடு வரிசைப் படுத்தியுள்ள மாநிலங்களின் புள்ளி விபரங்களை நீ பார்த்தால் மட்டும் போதாது.

எனக்குக் கிடைத்துள்ள மாநிலங்களின் மக்கள் தொகைக் கணக்கையும் மறந்துவிடக் கூடாது. நான் சேகரித்த அளவில் சில மாநிலங்களைப் பற்றிய மக்கள் தொகையை மட்டும் தருகிறேன்.

- ☐ தமிழ்நாடு-41199168 பேர்!
- ☐ ஆந்திரா-43 62708 பேர்!
- ☐ அரியானா-9971165 பேர்
- ☐ கர்நாடகம்-29299014 பேர்
- ☐ கேரளா-21343375 பேர்
- ☐ உத்திரபிரதேசம்-88341144 பேர்

மக்கள் தொகையையும் மனத்தில் வைத்துக் கொண்டு புள்ளி விபரப் படங்களையும் ஒப்பிட்டுப் பார்த்தால் தமிழ்நாடு-கழக ஆட்சியின் பின் தங்கிவிடவில்லை என்பது மட்டுமல்ல; முதல் வரிசையில் நிற்கும் தகுதியையும் பெற்றிருக்கிறது என்பது விளங்கும்.

இருபது அம்சத் திட்டத்துக்கு ஏற்ப தொழில் பயிற்சியாளர் திட்டத்தில் நமது மாநிலம் நூறு சதவிகிதத்தைத் தாண்டி விட்டது என்று கடந்த நவம்பர் மாதமே அறிவிக்கப்பட்டது.

நிலச் சீர்திருத்தம், உபரி நிலங்களை நிலமற்றோருக்கு வழங்குதல் ஆகிய திட்டத்திலும் நமது மாநிலம் முன்னணியில் நிற்பதாக அகில இந்திய காங்கிரஸ் கட்சி நியமித்த ஆய்வுக் குழு, கடந்த நவம்பர் மாத வாக்கில் அறிவித்ததையும் அதற்குள்ளாக நாடு மறந்துவிடவில்லை.

காங்கிரஸ் ஆட்சியில் முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலிருந்து

1967-வரையில் பாசன வசதி பெற்ற பரப்பு 6 லட்சம் ஏக்கர் தான்!

பசுமைப் புரட்சி திட்டத்தில் நமது தீவிரப் பணிகளுக்கு அடையாளமாகக் கழக அரசின் காலத்தில் புதிய நீர்ப்பாசனத் திட்டங்களால் பயன் பெற்ற பரப்பு 16 லட்சம் ஏக்கர்.

குடும்பக் கட்டுப்பாடுத் திட்டத்திலும் இந்தியாவின் தமிழ்நாடு இரண்டாவது இடத்தைப் பெற்றுத் திகழ்கிறது.

கழக உடன்பிறப்பே! கல்கத்தா ஏட்டினைக் கண்டேன்; அதனை உன் பார்வைக்கு அனுப்ப வேண்டுமென்று விரும்பினேன். அதன் விளைவுதான் இந்தக் கடிதம்.

உண்மை உறங்கிவிடுவதில்லை என்பதற்கு இவை உதாரணங்கள்!

அன்புள்ள,

**மு. க.**

22-04-1976

# 206. கோட்டமும் கூடமும் எதற்காக?

**உடன்பிறப்பே,**

படித்தாயா செய்தியை! பதினோரு லட்ச ரூபாய் செலவில் இருநூறு வீடுகள் இலவசமாகக் கட்டி வழங்கப்பட்டிருக்கிறது! எங்கே தெரியுமா? பாஞ்சாலங் குறிச்சியில்! யாருக்குத் தெரியுமா? வீரபாண்டியக் கட்டபொம்மனின் சந்ததியினருக்கு! ஆளுநரின் ஆலோசகர் அந்தத் திறப்பு விழாவை நடத்தியிருக்கிறார். கட்டபொம்மனுக்கு நினைவுக்கோட்டை எதற்காக என்று கேட்டவர்கள் இருக்கிறார்கள்! அந்த நினைவுக்கோட்டைக்குச் செலவான தொகை ஆறு லட்ச ரூபாய் அளவிலேதான் இருக்கும். ஆனால் அதற்கருகே கட்டபொம்மனின் சந்ததியினருக்கு இலவசமாக வழங்கப்பட்ட வீடுகளுக்குக் கழக அரசு செலவிடுவதற்காக ஒதுக்கிய தொகை பதினோரு லட்ச ரூபாய்!

பல ஆண்டுக்காலமாக வறுமையோடு போராடியவர்கள், வசதி வாய்ப்பற்றுக் கிடந்தவர்கள், அவர்களது கண்ணீர் கவனிப்பாரற்றுப் போயிற்று! அவர்களது கோரிக்கைகள், குப்பைக் கூடைகளை அலங்கரித்துக் கொண்டு இருந்தன.

வெள்ளையர் ஆதிக்கத்தை எதிர்த்து வீரப் போர் புரிந்து தூக்குக் கயிற்றினை முத்தமிட்ட அந்த மாவீரனின் சந்ததியினர் எங்கோ ஒரு மூலையில் புறக்கணிக்கப்பட்டுக் கிடந்தனர்.

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் நண்பர் சுப்பு அவர்கள் எடுத்துக்கொண்ட இடைவிடாத முயற்சிகளின் காரணமாக பாஞ்சைப் பகுதிக்குச் செல்லும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. பாழடைந்து கிடந்த கோட்டைப் பெருவெளியையும் கண்டேன். பரிதவிப்புக்கு ஆளாகியிருந்த கம்பளத்து நாயக்கப் பெரு மக்களையும் கண்டேன். அந்தத் துன்ப நிலையிலும் அந்த மக்கள், தங்கள் குலதெய்வமான ஜக்கம்மா தேவியின் கோயிலுக்கு விழா எடுப்பதை நிறுத்தவில்லை. அந்த விழாவினையொட்டி

நடைபெற்ற நிகழ்ச்சியிலேதான் கட்டபொம்மன் கோட்டையைச் சீர் செய்யவும்; அதனருகே மாதிரிக் கோட்டையொன்றை உருவாக்கவும், அவன் சந்ததியினர் வாழ்வில் ஒளியேற்றவும் முடிவுகள் மலர்ந்தன. அந்த மலர்ச்சியின் வீரங்கமழும் நறுமணம் தான் இன்றைக்குப் பாஞ்சைப் பகுதியிலே வீசிக்கொண்டு இருக்கிறது.

ஏதோ அழகுக்கும், ஆரவாரத்துக்கும், வீண் விளம்பரங் களுக்கும் இத்தகைய காரியங்களைச் செய்து அரசின் பணத்தைக் கரியாக்குகிறார்கள் என்று கழக அரசின் மீது காழ்ப்பினைக் கொட்டியவர்கள், இன்று அந்தக் கோட்டைக்கு அருகாமையில் குதூகலமாக இருநூறு குடும்பத்தினர் தங்களுக்குக் கிடைத்துள்ள ஐயாயிர ரூபாய்க்கு மேல் மதிப்புள்ள வீடுகளில் குடியேறு கிறார்களே; அவர்களின் உதடுகள் வாழ்த்துத் துடிப்புக்களை வெளிக்காட்ட முடியாவிட்டாலும், அவர்களின் இதயச் சுவர்களில் எழுதப்பட்டிருக்குமே, "தி. மு. க. வாழ்க!" என்று,-அதனை யார் தான் அழித்து எழுதிவிட முடியும்?

காவிரிப்பூம்பட்டினத்தில் கரிகால் பெருவளத்தானின் பழங்காலத் தலைநகரம் கடலின் வயிற்றுக்குள் போய்விட்ட காரணத்தால் புதிய பூம்புகாரை உருவாக்கினோம்!

கலைமாடங்கள், கூடங்கள் அந்த அலைபாடும் பூமியிலே முகில் தழுவி நிற்கின்ற காட்சி, கண்கொள்ளாக் காட்சி. எனினும், அதையும் காணச் சகிக்காதவர்கள் நம் மீது தொடுத்த கண்டனக் கணைகள் கொஞ்சமா? கலைக்கூடத்துக்குச் செலவிட்ட தொகையை விட அதிகத்தொகை செலவிட்டுப் பூம்புகாரில் மீனவர்களுக்காக ஆயிரம் வீடுகள் கட்டி இலவசமாக வழங்கியிருக்கிறோம்!

கோட்டையும், கூடமும் கட்டியது தமிழர்களின் வரலாற்றை விளக்குவதற்காக! அதே சமயம், குந்தக் குடிலின்றி வாழ்கின்ற மக்களின் குமுறலை அடக்க மீனவர்க்கு, அரிஜனங்களுக்கு, குடிசைவாழ் மக்களுக்கு ஆயிரக்கணக்கான வீடுகளைக் கட்டியிருக்கிறோம்!

மாடகூடங்கள் அமைத்தது-சரித்திரம்!

மண்ணில் நெளிந்தோர்க்கு,

வீடுகள் அமைத்து வழங்கியது-சாதனை!

எனவே சாதனையும் புரிந்தோம்! சரித்திரமும் படைத்தோம்!

நமது சாதனைச் சரித்திரத்தை அல்லது சரித்திர சாதனையைக் கண்டு மனம் புழுங்கியோர் மனுக்களை நம்பினர்! நம்மை அழிக்க மழுக்களை ஏந்தினர்!

சென்ற பிப்ரவரி திங்களிலே மட்டும் கழக அரசு திட்டமிட்டிருந்த நிகழ்ச்சிகள் எத்தனை!

பிப்ரவரி 3-ஆம் நாள் சுமார் 100 கோடி ரூபாய் செலவில் அமைந்த எண்ணூர் மின்நிலைய ஐந்தாவது யூனிட் திறப்பு விழா!

பிப்ரவரி 8ஆம் நாள் மாமல்லபுரத்தில் சுற்றுலா வாரியத்தின் சார்பில் கட்டப்பட்ட பயணிகள் மாளிகையின் திறப்பு விழா!

அதைத் தொடர்ந்து அரிஜனங்களுக்கு கட்டப்பட்ட முப்பத்தையாயிரம் இலவச வீடுகள் கட்டி முடிக்கப்பெற்ற முழுமை விழா!

பூம்புகார் வானகிரியில் மீனவர்க்கான இலவச வீடுகள் திறப்பு விழா!

பாஞ்சாலங்குறிச்சியில் கட்டபொம்மன் சந்ததியினர்க்கான இலவச வீடுகள் திறப்பு விழா!

மதுரையில் ஒரு கோடி ரூபாய் செலவில் உருவான பால் பவுடர் தொழிற்சாலைத் திறப்புவிழா!

அம்பத்தூரில் இரண்டு கோடி ரூபாய் செலவில் அமைந்த இரண்டாவது பால்பண்ணை திறப்புவிழா!

வள்ளுவர் கோட்டத்தின் வரலாற்றுச் சிறப்புமிகு திறப்பு விழா!

இவ்வளவும் கழக அரசால் ஏற்பாடாகியிருந்த நிகழ்ச்சிகள்!

ஏதோ, கோட்டமும் கூடமும் கட்டித் திறக்கிறோம் என்று கதைக்கிறார்களே, அவர்களுக்கு நினைவூட்டத்தான் கூறுகிறேன், ஏழை எளியோர்க்கு வீடுகள் வழங்குதல், மின்சார உற்பத்திக்கான தீவிரப் பணிகள்; அறிவார்ந்த கல்விக்கு அயர்விலாத் திட்டங்கள்; சிற்றூரையும் நாடிச் செல்லும் வண்ணம் மக்கள் நல்வாழ்வுத்துறையின் பணிகள், குக்கிராமங்களை இணைக்கும் சாலைகள், பாலங்கள், பட்டிக்காட்டுக்குப் பயணம் செய்யவும் பேருந்து வசதிகள், தொழில் துறை முன்னேற்றம், தொழிலாளர் நல்வாழ்வு, உணவு நெருக்கடியைச் சமாளித்த திறன்; கூட்டுறவுத்

துறையில் விவசாயிகளுக்கு நலன் பெருக்கும் திட்டங்கள், தாழ்த்தப்பட்டோர்; பிற்படுத்தப்பட்டோர்க்கு எண்ணற்ற வசதி வாய்ப்புக்கள், பட்டிதொட்டியெங்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் பணிகள். இத்தனையும் நிறைவேற்றிக் கொண்டுதான் தமிழகத்தின், கலை இலக்கிய வரலாற்றுப் புகழ் பரப்பும் பணியினையும் நாம் மேற்கொண்டோம்!

தமிழகத்தில் தமிழக அரசு நடத்தியுள்ள ஆக்கப் பணிகளை எத்தனை பெரியவர்கள் எல்லாம் பாராட்டியிருக்கிறார்கள் என்ற பட்டியலை மீண்டும் ஒருமுறை நினைவுபடுத்திக்கொண்டால், நம் நெஞ்சுக்கு எவ்வளவோ நிறைவாக இருக்கிறது!

□ “தொழு நோய்க்கு நிரந்தரமான பரிகாரம் காணும் விதத்தில் தொழு நோய் பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் தமிழக அரசின் தலைசிறந்த திட்டம் பாராட்டுக்குரியது”.

**பிரதமர் இந்திரா காந்தி அம்மையார்**
10-9-74 பரனூரில்

□ “காந்தியடிகளுடைய எண்ணம் உண்மையாகத் தக்கவகையில், தமிழக முதல்வர், ஊனமுற்ற வர்க்கும் உதவி செய்து, கிராமத்தில் இருக்கக்கூடிய அழுத்தப்பட்ட மக்கள், அதிர்ஷ்டக் குறைவான மக்கள் முன்னேற, வசதிகளைப் பெற தமிழக அரசு திட்டங்களைத் தீட்டிச் செயல்படுகிறது.”

**உமாசங்கர் தீட்சித்**
3-10-74 காந்தி மண்டபம்

□ “அண்ணா அவர்களின் வாழ்வு முழுவதும் ஏழை எளிய மக்களுக்கு அர்ப்பணம் செய்யப்பட்ட வரலாறாகும். சமூகநலப் பணிகளுக்கு வித்திட்டவர் அண்ணா! அவற்றை வெற்றிகரமாக நிறைவேற்றி வருபவர் முதல்வர் கருணாநிதி! மதுக்குடியை ஒழித்ததும், குதிரைப் பந்தயத்தை நிறுத்தியதும் அவர் எடுத்த துணிகர முடிவுகள்; காந்தீய லட்சியங்களை நிறைவேற்றும் பணிகளுமாகும்.”

**வி. வி. கிரி**
16-9-74 மயிலை

□ "தமிழ்நாட்டில் மீண்டும் மது விலக்கை அமலுக்குக் கொண்டுவந்த தி. மு. க. அரசையும், முதல்வர் கருணாநிதியையும் பாராட்டுகிறேன். பிற மாநிலங் களும் தமிழ்நாட்டைப் பின்பற்ற வேண்டும்."

**வினோபா பாவே**

3-10-74 வார்தா

□ "தமிழ்நாட்டில் துவக்கப்பட்ட பயனுள்ள பல்வேறு கல்விப் பரிசோதனைகள், இந்தியாவின் பல பாகங்களில் பரவியிருக்கின்றன. கல்வித் துறையில் தமிழ்நாடு முன்னேறியிருப்பது கண்டு தமிழக அரசைப் பாராட்டுகிறேன்."

**ஜட்டி-குடியரசுத் துணைத் தலைவர்**

9-10-75 மதுரை

□ "தமிழக அரசின் உள்ளத்தில் - குறிப்பாக முதலமைச்சர் கருணாநிதியின் உள்ளத்தில் ஏழை எளியவர்கட்கு நன்மை செய்யும் எண்ணம் மிகவும் நிறைந்துள்ளது. அரிஜனங்களிடமும் பிற்படுத்தப்பட்ட மக்களிடமும் தனி அக்கறை காட்டுவதற்காக நான் நன்றி கூறிக்கொள்கிறேன்."

**போலோ பஸ்வன் சாஸ்திரி**

9-6-74 சென்னை

உடன்பிறப்பே! நீண்டதோர் பட்டியலில் ஒன்றிரண்டைத் தான் உனக்குச் சுட்டிக் காட்டியிருக்கிறேன். மக்களின் வாழ்வுப் பிரச்சினையில் ஆர்வம் காட்டாமல் கோட்டமும், கூடமும் நிர்மாணிப்பதாகக் கூச்சல் போடுகிறார்களே; அவர்களுக்குத் தெளிவு ஏற்படுத்தவே இவ்வளவு விபரங்களை வழங்கியிருக்கிறேன். ஆனால் ஒன்று-உண்மையிலேயே உறங்குபவனைத்தான் எழுப்பிட இயலும், அதுவும், எனக்குத் தெரியாமல் இல்லை!

உணவு, உடை, உறையுள் இவை மூன்றும் மக்களின் அடிப்படைப் பிரச்சினை எனினும், அவைகளுடன் "உணர்வு" என்ற அடித்தளத்துப் பிரச்சினைக்கும் உரிய இடம் தந்தாக வேண்டும்!

அன்புள்ள,

**மு. க.**

24-04-1976



# 1924 - 2018


நூல் கிடைக்குமிடம் :

**கௌரா புத்தக மையம்**
9, செ. ஜான் சர்ச் வணிக வளாகம்,
ராக்கின்ஸ் சாலை, திருச்சி - 1.
gowraputhagamaiyam@gmail.com

**கௌரா ஏஜென்ஸீஸ்**
1, சாமி தெரு, திருவல்லிக்கேணி,
சென்னை - 5. gowra09@gmail.com.
www.facebook.com/gowrabookcentre

கௌரா
பதிப்பகக் குழுமம்

அட்டை : ஜே.ஜே டிசைன்ஸ்

GO 2300
ரூ.300

டிசம்பர் 2022